ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி)

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவினரால் மீண்டும் A தர நிலை பெற்றது. ISO 9001:2008 சான்றிதழ் பெற்றது.)

நெ. 7 நெல்சன் ரோடு, திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி - 620005

தமிழாய்வுத்துறை

வழங்கும்

தமிழ்இலக்கியங்களில்

சொல்லும் பொருளும்

தேசியக் கருத்தரங்கம்

SRIMAD ANDAVAN ARTS & SCIENCE COLLEGE, SRIRANGAM

विद्यया विन्दते अमृतम्

பயின்று பாதுகை பணிவோம்

நாள் : 11 . 03 . 2016 கிழமை : வெள்ளி

இடம் : குளிர்மை அரங்கம்

அனைவரும் வருக !

சொல் பொருள் பருகுக !!

துவக்கவிழா

இடம் : குளிர்மை அரங்கம் நேரம் : காலை 10.00 மணி
Main Block

இறைவணக்கம் : தமிழ்த்தாய்வாழ்த்து

வரவேற்புரை : முனைவர் **க. சுந்தரமூர்த்தி** அவர்கள், தலைவர், தமிழாய்வுத்துறை

தலைமையுரை : ஸ்ரீ அம்மங்கி **வி . பாலாஜி** அவர்கள், செயலர் & தாளாளர்,

முன்னிலை : முனைவர் **ஜெ . ராதிகா** அவர்கள், முதல்வர்

வாழ்த்துரை : முனைவர் **எம் . பிச்சைமணி** அவர்கள், துணைமுதல்வர்,
புல முதன்மையர் – வணிகவியல் &வணிகமேலாண்மைத்துறை,
முனைவர் **ஜி . ஜோதி** அவர்கள் துணைமுதல்வர்,
புல முதன்மையர் – உயிர் அறிவியல் துறை.

சொற் பொருட்கோவைக் குறுந்தகடு வெளியீடு

ஆய்வுப் பேருரை : முனைவர் **B.அலிபாவா** அவர்கள்
பேராசிரியர்,தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24

ஆய்வுப்பேருரை : முனைவர் **ஆ .மணி** அவர்கள், துணைப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி – 605 003.

நன்றியுரை : முனைவர் **ப . சண்முகம்** அவர்கள், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை

கருத்தரங்க அமர்வுகள்

நிறைவுவிழா

இடம் : குளிர்மை அரங்கம் நேரம் : மாலை 2.00 மணி
Main Block

வரவேற்புரை : முனைவர் **சீ .சுஜாதா** அவர்கள், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை

தலைமை & சான்றிதழ் வழங்கல் : ஸ்ரீ அம்மங்கி **வி . பாலாஜி** அவர்கள், செயலர் & தாளாளர்,

சிறப்புரை : கவிஞர் திரு. **நந்தலாலா** அவர்கள்

நன்றியுரை : முனைவர் **சு . பாஸ்கர்** அவர்கள் உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

வாழ்த்துரை

“இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்

விருந்த மிழ்தம் என்றாலும் வேண்டேன்”

தமிழ் ஆசிரியராய் தம் பணியைத் தொடங்கி ஒழுக்கத்துடன் கூடிய உயர் கல்வியை ஏழை எளிய கிராமப்புற மாணவர்களும் பெற்று பயன்பெறும் வகையில் கலை அறிவியல் கல்லூரியை நிறுவிய ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனின் அருளோடும் ஆசியோடும் நடைபெற்ற ‘சொல்லும் பொருளும்’ஹஷ-தேசியக் கருத்தரங்கின் அடையாளமாகத் திகழும் விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்கிறேன். தன்னிலிருந்து மலர்ந்து வரும் ஒலி என்பதைக் குறிப்பிடும் தம் இழ் என்ற சொல்லே தமிழ் என ஆயிற்று என்றும் தகுதியான பேச்சு முறை என்பதைக் குறிக்கும் தம் மிழ் என்ற சொல்லே தமிழ் என ஆயிற்று எனவும் செக் நாட்டு அறிஞர் கமில் சுவலபில் கூறியுள்ளார்.

ஏறத்தாழ மூவாயிரம் உலக மொழிகளில் இயல்பாகத் தோன்றிய இயன் மொழியான நம் தமிழ் மொழியின் சிறப்புகளை அனைவரும் அறியும் வகையில் நமது கல்லூரித் தமிழாய்வுத்துறையின் ஆண்டாள் தமிழிலக்கியப் பேரவை, கபிலர் கவிச்சோலை ஆகிய அமைப்பின் மூலம் பட்டிமன்றம், கவியரங்கம், பாவைவிழா, பாரதியார் விழா, பயிலரங்கம், கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இணையத்தில் அடியெடுத்து வைத்த முதல் இந்திய மொழி தமிழ் என்ற பெருமையோடு, இருபத்தோராம் நூற்றாண்டில் பொருளை மட்டுமே தேடி அலைந்து இணைய உலகத்தில் இயந்திரமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் மனித மனங்களையும் அறிந்து புரிந்து பேசிப்பழக வேண்டும் என்பதை உணரவேண்டிய இத்தருணத்தில் ‘சொல்லும் பொருளும்’ என்ற காலத்திற்குத் தேவையான பொருத்தமான தலைப்பில் கருத்தரங்கத்தினை ஏற்பாடு செய்துள்ள தமிழாய்வுத்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்

பொருளும் அதனினூஉங்கு இல்”

என்ற உலகப் பொதுமறையின் பொருளுக்கேற்ப இக்கருத்தரங்கத்தில் கலந்துகொண்டு சொல், பொருள் பருகிய தமிழ் ஆர்வலர்களுக்கும், கட்டுரை வழங்கிய தமிழ் அறிஞர்களுக்கும் சான்றோர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

“வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே!”

முனைவர் ஜெ.ராதிகா

முதல்வர்

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பதிவு

துவக்கவிழா

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

நிறைவுவிழா

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பொருளடக்கம்

வ.எண்	பெயர்	தலைப்பு	பக்கம்
1	ரா.ராஜேஸ்வரி	வாஸந்தி நாவல்களில் சொல்லும் பொருளும்	1-4
2	செ.ஜான்சி	இன்னா நாற்பதில் அறம்	5-7
3	வி.ஏ.ஜெபஜோதி	திருக்குறள் - விவிலியம் கூறும் தனிமனித அறம்	8-11
4	தி.ஜெயசித்ரா	ஆழ்வார் பாசுரங்களில் அன்பு	12-15
5	முனைவர் தி.மல்லிகா	உருவக இயற்பெயர்கள்	16-18
6	முனைவர் இரா.மணிமேகலை	அவ்வையார் பாடலில் சொல்லும் பொருளும்	19-24
7	சு.முத்துலட்சுமி	சொல்லும் பொருளும்	25-27
8	ந.பிரியா	புறநூனூற்றில் அறிவு	28-30
9	ந.ரேவதி	இடைச்சொற்கள்	31-35
10	முனைவர் சா.பெரியநாயகி	இராமானுஜரின் முற்போக்குச் சிந்தனைகள்	36-41
11	த.பிரியா	இகும் என்னும் இடைச்சொல்	42-44
12	த. ராஜசுலோச்சனா	ஜோதியும் சுடரும்	45-47
13	மு.ராஜகுமார்	தமிழ்த்தாய் சுமந்திருக்கும் அன்பு	48-54
14	செ.ரேவதி	மொழி முதல் எழுத்துக்கள்	55-57
15	ம.சின்னதுரை	இராமானுச நூற்றந்தாதியில் ஆழ்வார்களின் பெயர்கள்	58-61
16	ந.சீதாதேவி	உரிச்சொல்லியல்	62-65
17	ச.சுகாசினி	உரிச்சொற்களும் அவற்றின் பொருட்களும்	66-71
18	ஜ.சுதா	தமிழ் இலக்கியங்களில் உரிச்சொற்கள்	72-75
19	த.சுதாகர்	பரிபாடலில் மலரும் பொருளும்	76-79
20	முனைவர் க.சுந்தரமூர்த்தி	தொல்காப்பியரின் இடைச்சொற்களும் பொருள்களும்	80-83

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

வ.எண்	பெயர்	தலைப்பு	பக்கம்
21	ந.சுபஸ்ரீ	ஆழ்வார்கள் வழி அன்பு	84-8
22	முனைவர் சீ.சுஜாதா	கல்லாடத்தில் மலர்கள்	87-90
23	சு.செல்வராஜ்	குறுந்தொகையில் வரலாறு	91-94
24	மு.செல்வராஜ்	ஷவை'யே கூர்மை	95-98
25	அ.அறிவுக்கொடி	சிலப்பதிகாரத்தில் ஒருசொல் பல பொருள்	99-104
26	ஆஸ்பி வியாகுலின்	அன்பு	105-107
27	அ.சதிஸ்குமார்	முத்தொள்ளாயிரத்தில் சோழன் என்னும் சொல்லாட்சி	108-111
28	ரா.பாமா	முப்பொருள் பாகுபாடு	112-116
29	ப.பிரபு	நன்னூல் வழி சொல்லும் பொருளும்	117-121
30	சு.திருக்குமார்	கடி என்னும் சொல்லாட்சியும் அதன் பொருளும்	122-126
31	அ.துளசிமணி	தமிழ் திரையிசைப் பாடல்களில் அடுக்குத்தொடர்	127-132
32	வீ.நதியா	ஐங்குறுநூறு மருதம்,பாலை திணையில் முதல் கரு உரிப்பொருள்கள்	133-138
33	ச.நந்தினி	ஆகர முதல எழுத்தெல்லாம்	139-141
34	முனைவர்.பெ.பகவத்கீதா	சீன வானனொலியின் தமிழுணர்வும் சொல்லாக்கங்களும்	142-144
35	ப.பத்மபிரியா	கம்பனில் காலம் பற்றிய சொல்லாட்சி	145-148
36	முனைவர் சு.பாஸ்கர்	புறநானூற்றில் உவம உருபுச் சொற்கள்	149-153
37	து.பிரபாகரன்	காளமேகப் புலவர் பாடல்களில் பொருள்கொள் முறை	154-157
38	ரெ.ஸ்ரீவித்யா	இலக்கியங்களில் மதி	158-162
39	முனைவர் பெ.விஜயகுமார்	இலக்கியங்களில் உணவு	163-166
40	வெ.விமலா	திருக்குறளின் அன்பும் அறிவும்	167-172
41	முனைவர் அ.கோபிநாத்	ஆண்டாள் பாசுரங்களில் விளித்தொடர்	173-176

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

வ.எண்	பெயர்	தலைப்பு	பக்கம்
43	சி.சிந்தியா	திருக்குறள் - கீதை உணர்த்தும் அன்பு	182-185
44	கா. வெண்ணிலா	பாடற்சொல்லும் அறிவியல் பொருளும்	186-188
45	எம். சுரேஸ்	பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்	189-192
46	மாஉலகநாதன்.	தமிழிலக்கியங்களில் சொல்லும் பொருளும்	193-196
47	நா.சத்யா	முல்லை நில மக்கள் வாழ்வியல்	197-201
48	முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா	பெரியாழ்வார் பாசுரங்களில் இன்தமிழ்ச் சொற்கள்	202-207
49	பா.கமலினி	பெரியபுராணச் சொற்கள்	208-210
50	முனைவர் ப.சண்முகம்	எண்கள்	211-213
51	பெ.சிவ்ராஜ	நாட்டுப்புறவியலில் நம்பிக்கையும் குணமும்	214-217
52	ர்.பூமதி	திருமுறைச்சொல்லும் பொருளும்	218-220
53	.சதீஷ்	தாடகையீச்சரம்சு‘	221-222
54	முனைவர். சிவ. நடராஜன்	பித்தன் - இருவகை விளக்கம்	223-226
55	தி. சாவித்திரி	வாழ்வியல் பயன்பாட்டுப் பொருட்கள்	227-228
56	வே.கோமதி	கலையும் கலைஞரும்	229-230
57	வி. ரங்கநாதன்	ஆறம்	231-233
58	ந.சித்ரா	கலித்தொகையில் உளவியல் சார்ந்த பெண்ணியம்	234-236
59	எஸ்.கனிமொழ எஸ்.சிவக்குமார	திருக்குறளில் மேலாண்மை	237-239
60	கி.சியாமளா	மருதத்திணையில் ஊடல் - சொற்பொருள்	240-245
61	ஆ.அருண்பிரகாஷ்	பாரதியார் பாடல்களில் சமூகவியல்	246-248
62	அ.அருன் சகாய அனிட்டா	நிர்மலா சுரேஷின் தைலச் சிமிழும் தச்சன் மகனும் என்னும் புதுக்கவிதையின் சொல்லும் பொருளும்	249-252
63	பேரா. உபேந்திரன் பேரா. சங்கர	பெரியாழ்வார் திருமொழியில் சொல்லும் பொருளும்	253-256
64	பி.ரொபின்	இடையியல்	257-260

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

வ.எண்	பெயர்	தலைப்பு	பக்கம்
66	சு.வித்யா	திருக்குறளில் உம்மைச் சொற்களும் பொருண்மைச்செறிவும்	265-268
67	கே. சரவணன்	ஐயவி	272-273
68	முனைவர் செ.அகிலாண்டேஸ்வரி	எச்சப் பொருண்மை மற்றும் குறிப்பு மொழி	274-282
69	செ.அடைக்கலமேரி	மு.வ.நாவல்களில் சொல்லும் பொருளும்	283-288
70	ஆ.அனிதா	அருணா ஹரியின் நாவல்களில் அன்பு	289-293
71	ப.கணேஷ் வடிவேல்	இலக்கியங்களில் நீதி	294-298
72	த.உமா	பாவாணர் பார்வையில் தொல்காப்பியம்	299-301
73	செ.ஓவியம்	புறநானூற்றில் அறம்	302-306
74	முனைவர் தே.இந்திரகுமாரி	திருக்குறள் மற்றும் நாலடியாரில் “எல்லாம்“ எனும் சொல்	307-310
75	ச.இந்திரா	தமிழ் இலக்கியங்களில் பல பொருள் ஒரு சொல்	311-315
76	மு.சின்னதுரை	தமிழ் இலக்கியங்களில் சொல்லும் பொருளும்	316-318
77	முனைவர் ப.பென்னரசி	தொல்காப்பியரின் ‘சொல்’	319-324

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

வாஸந்தி நாவல்களில் சொல்லும் பொருளும்

ரா.ராஜேஸ்வரி

முனைவர் பட்ட ஆய்வாளர் , தமிழாய்வுத்துறை , ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

முன்னுரை

நமது எண்ணங்களையும் கருத்துக்களையும் மொழியின் வாயிலாக வெளிப்படுத்துகிறோம். ஒவ்வொரு தனி மனிதனும் தன் திறனுக்கு ஏற்ற வகையில் மொழியைப் பயன்படுத்துகிறான். இதனால் மொழி பயன்பாட்டில் பல வேறுபாடுகள் தோன்றுகின்றன. இவ்வேறுபாடே மொழிச்சார்ந்த மொழிசாராத என்ற இரு வகைகளில் அமையலாம். அவரவர் ஆளுமைத் திறனுக்கேற்பவும் மொழிப் பயன்பாடு சமூக மற்றும் மொழித் திறனுக்கேற்பவும் வேறுபடுகின்றது. எல்லோரும் ஒரே மொழியைப் பேசுவோராக இருந்தாலும் தமது எண்ணத்தை வெளியிடும் போது பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவதுண்டு.

வாஸந்தியின் நடையில் விளக்கம்

நடை என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் தரப்பட்டுள்ளன. இதுதான் நடையின் விளக்கம் என்று கூறுவது சற்று கடினம். "சொற்களைத் தொகுக்கும் முறையே நடை" என்கிறார் பொன்னுதுரை (1966:7) நடை என்பது எழுத்தாளர்களின் பல்வேறு வகையான படைப்புகளைப் படிக்கும் நிலையில் படிப்போரைக் கவரும் தன்வயப்படுத்தும் கருவியாகும்" என்பார் கிப்பன் எட்வர்ட்.(1971:416)

சில அகராதிகளும் நடையினைப் பற்றி விளக்கங்கள் தந்துள்ளன. தனக்கேயுரிய ஒரு தனித்தன்மை வாய்ந்த முறையினால் தனது கருத்துக்களை ஓர் ஆசிரியன் வெளிப்படுத்தும் முறையே நடையாகும் என்று சேம்பர்ஸ் அகராதி விளக்கம் தருகிறது(1970:461). நடை என்பது பேசுகின்ற எழுதுகின்ற முறை என்றும் ஏதாவதொரு செயலை ஒருவர் செய்கின்ற வகையைக் குறிக்க சொல் என்றும் குறிப்பாக இச்சொல் ஒரு கலைஞனுடைய சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டுமாறு அமையும் போது அச்சொல் வகையைக் குறிக்கப் பயன்படும் என்றும் விளக்குகிறது. ஆங்கில வாசகர் அகராதி(1973:53) இவ்வாறு நடை என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் பல விதமாக விளக்கங்களைக் கூறியுள்ளனர். வாழ்வியல் நெறிமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் பண்பாடு, அரசியல், பொருளியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது.

அறிவு

"ஒரு சங்கமத்தைத் தேடி" என்பதில் சங்கமம் என்பதன் பொருள் இரண்டற கலப்பது என்பதாகும். பொதுவாக இரு நதிகள் ஒன்று சேரும் இடத்தை சங்கமம் என்று கூறுகிறோம். இங்கே இரண்டற கலப்பதற்காக தேடி செல்பவன் கார்த்திக், அப்படியென்றால் அதுவரை அவன் மனைவியோடு முழுமையாக, இணையாமல் தனியாக தன் வாழ்க்கைப் பாதையில் பயணித்து இருக்கிறான் என்பது ஊகிக்க முடிகிறது. பொதுவாக சிறு நதிகளே பெரு நதிகளோடு சங்கமிக்கின்றன. பெரு நதிகள் தன் போக்கில் போய் கொண்டிருக்கும்.

சிறுநதிகள் அவற்றுடன் சங்கமிக்கின்றன. எனவே கார்த்திக் தன் சிறுமையை ஒப்புக் கொள்கிறான் என்றும், பொருளாகிறது ஏனெனில் அவன் தேடிச் செல்லும் சங்கமம், அவனால் முழுமையாக ஒப்புக் கொள்ள முடியாத நடத்தை உள்ளவள் என கருதப்பட்டவள்.

ஒரு சங்கமத்தைத் தேடி என்ற இந்த நாவல் மத்திய தர குடும்பத்தைச் சேர்ந்த முன்னேற துடிக்கும் இளைஞன் ஒருவனும், உயர் மட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள், ஆனால் அதன் பழக்க வழக்கங்களை வெறுத்து அதனின்று விடுபட விரும்பும் ஒரு பெண்ணும் காதலித்து மணந்து இருவருமே தன் விருப்பம் நிறைவேறாமல் தோல்வியுறும் அவலத்தை சித்தரிப்பதை கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

கல்வி

கார்த்திக் பொறியியற் கல்லூரியில் சேர்ந்து படிக்க அத்தை தான் தந்தையிடம் கூறி சம்மந்தம் பெற்றாள், அவனுக்கு அத்தை மட்டும் இல்லாமல் இருந்தால் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்கமாட்டான்

கார்த்திக் ஒரு பெரிய நிலையில் வளர்ச்சி அடைய உறுதுணையாக இருந்து அவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறாள். தேர்வு நேரங்களில் இவளும் விழித்திருந்து அவனுக்கு ஊக்கமளித்து வருகிறாள். விசாலம் மட்டும் இல்லை என்றால் கார்த்திக் இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்திருக்க முடியாது.

பெண்ணடிமை

நாச்சாமி பெண்களைக் கிண்டல் செய்வது அவனுக்கு வழக்கமாகப் போய்விடுகிறது. அதே போல் நாச்சாமியின் தந்தை சுந்தரமூர்த்தி வழியில் போகும் வரும் பெண்களைக் கிண்டல் செய்வதுமாக இருப்பார். விசாலம் விதவையாகித் தன் மாமியார் வீடு கிராமத்தில் இருக்கும் போது அவன் தொல்லை தாங்க முடியாமல் தான் தன் அண்ணாவிடமே வந்துவிடுகிறார். விசாலத்தின் பேரில் வீடும் நிலமும் இருப்பதாள்தான் அவள் கிராமத்துக்கு வருகிறாள்.

"கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்"

என்ற நிலையில் குட்டரோகியைத் தலையில் தூக்கிச் சுமந்த குணவதி வாழ்ந்த நாட்டில் பத்தினிப்பெண் பெய் என்றால் மழை பொழிந்த நாட்டில் இப்படி குணக்கேடான பாத்திரங்களை

படைத்திருப்பது எழுத்தாளர் வாஸந்தியின் பெருமைக்கு ஒரு கேடு என்றே துணிந்து கூறும் நிலையில் கதைப் போக்கு அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

அன்பு

விசாலம் சுப்புவின் ஒரே தங்கை இவளுக்கு பதின்மூன்று வயதிலே திருமணமானவள். திருமணமான சில காலங்களிலே அவரது கணவருக்கு டையாய்டு வந்தது. போதிய மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் அவர் காலமானார். அவர் இறக்கும் போது விசாலத்திற்கு பதினாறு வயதுதான் இருக்கும். அவள் கணவன் இறந்த பிறகும் அவள் முப்பது வயது வரை திருநாகேஸ்வரத்தில் வாழ்ந்து வந்தாள். பிறகு தன் அண்ணன் வீட்டோடு அவள் வந்துவிட்டாள் இவளுக்கு எத்தகைய துன்பம் வந்தாலும் அதை அவள் பொருட்படுத்தமாட்டாள். சிறு வயதில் இருந்தே கார்த்திக்கை இவள் தான் வளர்த்து வந்தாள். கார்த்திக்கும் தன் தாயைவிட அத்தையிடம் தான் அதிகம் பாசம் வைத்திருப்பான். அவனுடைய அனைத்துத் தேவைகளும் ஒரு பெற்ற தாயைப் போல் நிறைவேற்றி வந்தாள். கார்த்திக்கு ஏதாவது தந்தையிடம் கேட்க வேண்டும் என்றால் அவன் நேரடியாக தந்தையிடம் கேட்க பயந்து தனது அத்தையிடம் கூறி தந்தையிடம் கேட்கச் சொல்வான்.

விசாலம் கார்த்திக்கிடம் மட்டும் அதிகமாகப் பேசுவாள். தான் சொந்த மகனிடம் பழகுவது போல் அன்பாக பழகி வருபவள். தன் சொந்த ஊரில் வாழ்வதைவிட டில்லியில் இருப்பதுதான் அவளுக்குப் பிடித்திருக்கிறது.

சமுதாயம்

மக்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதையே சமுதாயம் என்பர். இத்தகைய சமுதாய வளர்ச்சியில் புதினத்திற்குத் தனி இடம் உண்டு. புதினம், சிறுகதை போன்ற படைப்புகள் வாழ்க்கையை ஒட்டியவையாகும்.

“இலக்கியம், மனிதர்கள் வாழ்க்கையில் கண்ட ஆழந்த அனுபவத்தையும் பொருண்மைகளையும் வெளியிடுவதாகும். வாழ்ந்து காட்டும் வாழ்க்கையைச் சொற்களால் கூறுவது இது. ஓர் இலக்கியத்தின் வித்து மனித வாழ்க்கையிலிருந்து தான் கிடைக்கிறது”

சமுதாய வெளிப்பாடுகள்

“ஒரு சங்கமத்தைத் தேடி” நாவலின் இரண்டு முக்கியக் கதாபத்திரங்கள் கார்த்திக், தாரா இருவரும் கணவன், மனைவி ஆனாலும் வெவ்வேறு குணச் சிறப்புக்களைக் கொண்டவர்கள்.

தாரா மேல்மட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவள். அதன் போக்கு பிடிக்காமல் எளிமையான நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த கார்த்திக்கை விரும்புகிறாள். கார்த்திக் ஒரு ஏழை பிராமணக் குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய பரம்பரைத் தொழில் குருக்கள் தொழிலாகும். ஆனால் கார்த்திக் மட்டும் அவன் மனதில் நன்றாகப் படித்து சமுதாயத்தில் உயர்ந்த மனிதனாக வர வேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்கிறான் அதே போல் அவன் நன்றாகப் படித்து ஒரு நிறுவனத்தில் அவனுக்கு வேலையும் கிடைக்கின்றது.

தாரா கார்த்திக்கை மணப்பதே, தன் மேல்மட்ட சமுதாயத்தின் அர்த்தமற்ற அயல்நாட்டு பழக்கவழக்கங்களை விடுபடத்தானோ என்று தோன்றுகிறது.

கார்த்திக்கும் ஒரு வகையில் தன் கட்டுப்பாடான சமுதாய மட்டத்திலிருந்து விடுபட்டு மேல் மட்டத்துக்குப் போக விரும்புகிறான். இதற்குத் தன் கல்வித் திறமையைக் கருவியாகப் பயன்படுத்தி தன் கட்டுபாடான குடும்பச் சூழ்நிலையில் இருந்து விடுபட முயற்சி செய்கிறான். ஆனால் இருவருமே தோற்றப் போகிறார்கள் என்பதுதான் உண்மை.

தாரா சூழ்நிலையில் இருந்து விடுபட விரும்பினாளோ அதையே கார்த்திக் தன் அலுவலக வேலை காரணமாக ஏற்றுக் கொள்ள நேரிடுகிறது. மேல்மட்ட நாகரிகத்திற்கு ஏற்ப தன் மனைவியையே பறி கொடுக்க நேரிடுகிறது. அந்த வகையில் கார்த்திக் தோல்வியடைகிறான்.

தாராவுக்கும் தன் முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை எதை விரும்பினாளோ அதை அவள் அடைய முடியாமல் வாழ்க்கையில் ஒரு குடும்பப் பெண்ணுக்குரிய மரியாதையையும் மானத்தையும் இழந்து தோல்விக்கும் பழிக்கும் இலக்காகிறாள்.

முடிவுரை

இந்த நாவலில் பொதிந்துள்ள உள்ளார்ந்த உண்மைகளை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற தாக்கத்தினால் ஒரு சங்கமத்தைத் தேடி இலக்கியக் கர்த்தாக்கள் படைத்தனுப்பிய சில பாத்திரங்களை நேரில் காண வேண்டும்மென்று துடிக்கின்றோம். அவர்களுடைய நெஞ்கத் துணிவானது சோதனையிலும் சாதனை படைக்கும் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் விளங்குகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இன்னா நாற்பதில் அறம்

செ.ஜான்சி,

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர்-7.

"இனிமையும் நீர்மையும் தமிழால் ஆகும்" என்பதற்கேற்ப இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழிலே 11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், அவற்றில் மிகுதியாக அறம் பற்றிப் பேசப்படுகிறது. இன்னாநாற்பதில் குறிப்பிடப்படும் அறச்செய்தி குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.

அறம்

'அறம்' என்பது நால்வகை நூற்பயன்களுள் ஒன்று என்பது பொதுவாக அனைவரும் அறிந்த ஒரு கருத்தாகும். கையறம், தருமம், நீர்மை, பெரியோரியல்பினொன்று புண்ணியம், தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைகவி, யமன், புனிதம், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை என்று பல பொருட்களை உள்ளடக்கியதே அறம் எனக் குறிப்பிடப்பெறுகிறது.

"அறம் என்றால் குடும்ப வாழ்வும் பொது வாழ்வும் சீராக இயங்க ஒருவர் கடைப்பிடிக்கும் சமயச்சார்பான (அ) ஒழுக்கக்கண்ணோட்டத்துடன் கூடிய நெறிமுறைகள் (அ) கடமைகள் என்னும் கூற்று. அறம் என்பது ஒழுக்க நெறிமுறை என விளக்குகிறது. அறம் உறுதிப்பொருளைக் குறிப்பிடுகிறது என வரையறை செய்யலாம். அதாவது செய்ய வேண்டியவை தவிர்க்க வேண்டியவை எனப் பட்டியலிட்டுத் தமிழ்ப்பெரு மூதாதைகள் கூறியவற்றை எடுத்துரைப்பதாகும். "தமிழ்ச்சொல்லாகிய அறம்" "அறூஅம்" என அறு என்ற வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டது. என்றும் மாறாத இயல்புடையது. எல்லோருக்கும் பொதுவானது. குலத்துக்கொரு நீதிகூறும் குறைபாடு உடையதன்று. அறம் என்பது உள்ளத்தூய்மை, சட்டம், அமைப்பு, விதி, கடமை என்றெல்லாம் பொருள்படும்.

நீதிநூல்களுள் ஒன்றான திருக்குறளில் வள்ளுவர் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தை இயற்றி அதில் அறம் என்றால் என்ன, அதன் சிறப்பு, அதன் பயன், கேடு எனப் பத்துக் குறுள்களில் விளக்கம் தருகிறார்.

அறத்தான் வருவதே இன்பம், மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்ற திறம். **(அ.4, கு.35)**

பொறாமை, ஆசை, கோபம், தீயசொற்கள் இவை நான்கினையும் நீக்கிச் செயல்படுவதே அறம் என்கிறார்.

அறத்தின் வகை

அறத்தினை வகைப்படுத்தி அறிஞர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர். அவை தனிமனித அறம், இல்லறம், ஈதலற்பண்பு, அரசியல் அறம், போர் அறம், துறவறம், சமூகஅறம், காதல் அறம், பண்பாட்டு அறம் போன்றவையாகும். இவற்றுள் ஒருசில வகைகளுக்கு மட்டும் நாட்டுப்புறக் கதைகளை எடுத்துக்காட்டாகக் கூறி ஒப்பிடப்பெறுகிறது.

இன்னாநாற்பதில் அறம்

மக்களுக்கு துன்பந்தருவன இவை என்று கூறும் நாற்பது வெண்பாக்கள் இந்நூலில் உண்டு. இதனாலேயே இதற்கு இன்னா நாற்பது என்று பெயர் வைத்தனர். இந்நூல் வெண்பாக்கள் ஒவ்வொன்றிலும் இன்னா என்னும் சொல் திரும்பத் திரும்ப வருகின்றது. இன்னா – துன்பம்.

இன்று இந்நூலில் காணப்படும் செய்யுட்கள் 41. ஒரு செய்யுள் கடவுள் வாழ்த்து, அது சிவன், பலராமன், திருமால், முருகன் நால்வரையும் வணங்காதவர் துன்பம் அடைவர் என்று கூறுகின்றது. இக்கடவுள் வாழ்த்துப் பாட்டு நூலாசிரியரால் பாடியிருக்க முடியாது. இவ்வாழ்த்தும் நூலோடு பிறந்ததாயிருந்ததால் “இன்னா நாற்பது” என்ற பெயர் வைத்திருக்க மாட்டார்கள்.

இந்நூலாசிரியர் ஒரு கபிலர். இப்பெயர் படைத்த புலவர்கள் பலர். அவர்களுள் இந்நூலாசிரியர் எக்கபிலர் என்று துணிந்து கூறமுடியவில்லை.

சங்கப் பாடல்களிலே கபிலரது பாட்டு என்றால் அதற்கொரு தனிச்சிறப்பு. பாட்டின் சிறப்புக்கு உதாரணமாகக் கபிலரது பாட்டை எடுத்துக் கூறுவது பழந்தமிழ்ப் புலவர்கள் வழக்கம். பத்துப்பாட்டிலே குறிஞ்சிப் பாட்டைப் பாடியவர் கபிலர். ஐங்குறுநூற்றிலே மூன்றாம் நூறு கபிலர் பாடியது. பதிற்றுப்பத்திலே 7ஆவது பத்து கபிலர் இயற்றியது. கலித்தொகையில் குறிஞ்சி கலி கபிலர் செய்தது. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய நூல்களிலும் இவருடைய பாடல்கள் பல உண்டு.

இக்கபிலர் அந்தணர், பாரியின் நண்பர், மாமிச உணவு உண்டவர். புறநானூற்றில் 14 ஆவது பாடல் இவர் பாடியது. அதில் இவர் மாமிச உணவு உண்பவர் என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் அரசனைக் காணச் சென்றார் கபிலர். அவன் கபிலர்க்குக் கைகொடுத்து வரவேற்றான். கபிலர் கை பூப்போல் மென்மையாக, வழவழவென்றிருந்ததை உணர்ந்தான். ஆதன், “என் கை மட்டும் கடினமாக இருக்கிறது. உம் கை மென்மையுடன் இருப்பது ஏன், என்றான் ஆதன். “உன் கை குதிரையின் கடிவாளத்தைப் பிடிக்கும் கை; கணையை எடுத்து வில்லிலே தொடுத்து விடும் கை; இரவலர்க்கு நல்ல அணிகலன்களை அள்ளி வழங்கும் கை; ஆகையால் காய்ச்சிப் போய்க் கரடு முரடாக இருக்கின்றது. என் கை நன்றாகச் சமைத்த ஊனையும், துவையலையும், கறியையும், சோற்றையும் அள்ளி அள்ளி உண்ணுகின்ற கை; உண்ட சோறு செரிமானம் ஆகவில்லையே என்று, வருந்தி வயிற்றைத் தடவிக் கொண்டிருக்கும் கை, ஆகையால் உன்

கை கடினம்; என் கை மென்மை" என்று கூறினார். இதனால் சங்ககாலக் கபிலர் புலால் உணவை வெறுத்தவர் அல்லர் என்று காணலாம்.

இன்னாநாற்பதில் புலால் உணவு வெறுக்கப்படுகின்றது.

புலைஉள்ளி வாழ்தல் உயிர்க்கு இன்னா (பா.13)

புலால் உணவை விரும்பி வாழ்வது மக்கள் உயிர்க்குத் துன்பம் தருவதாகும்.

ஊனைத்தின்று ஊனைப்பெருக்குதல் முன்இன்னா (பா.23)

மற்றொரு உயிரின் ஊனைத் தின்று, தன் உடம்பை வளர்த்தல் துன்பமாகும்.

இவை புலால் உணவைக் கடிந்து கூறும் பகுதிகள். ஆதலால் இவர் பாரியின் நண்பராக வாழ்ந்த அந்தக் கபிலராக இருக்க முடியாது.

கபிலர் அகவல் என்னும் நூல் ஒன்று உண்டு. அது சாதி வேற்றுமையை வன்மையாகக் கண்டிப்பது. சங்க நூல்களின் கருத்துகளுக்கு மாறாக, ஆரியர்களே, நால்வகைச் சாதிப் பிரிவினையை இந்நாட்டிலே புகுத்தியவர்கள் என்று கூறுகின்றது. அது பிற்காலத்திலே எழுந்த நூல், கபிலர் அகவல் பாடிய கபிலர், சாதி வேற்றுமையை ஒத்துக் கொள்ளாதவர் இன்னா நாற்பது பாடிய கபிலர் சாதி என்று சொல்லாவிட்டாலும் குடிப்பிறப்பில் உயர்வு தாழ்வு உண்டு என்று ஒத்துக் கொள்ளுகிறார்.

குலத்தில் பிறந்தவன் கல்லாமை இன்னா

உயர்ந்த குலத்திலே பிறந்தவன் கல்வி கற்காமல் இருப்பது அவனுக்குத் துன்பமாகும்.

குலம் இல்வழிக் கலத்தல் இன்னா

நல்ல குலம் இல்லாத குடியிலே மணம் செய்து கொள்ளுதல் துன்பம் தரும்.

இவை இன்னா நாற்பதில் உள்ளவை. இவை பிறப்பிலே உயர்வு தாழ்வு உண்டு என்பதை ஒத்துக் கொள்ளுகின்றன.

ஆதலால் இக்கபிலர் சங்ககாலக் கபிலரும் அல்லர். கபிலர் அகவல் பாடிய கபிலரும் அல்லர். வேறு யாரோ ஒரு கபிலர். இவர் வரலாறு தெரியவில்லை.

செய்யத்தகாதவை

இன்னா நாற்பதில் கூறப்படும் நீதிகள் மிகவும் சிறந்தவை. இக்காலத்திற்குப் பொருந்தாதவை சில காணப்படலாம். பெரும்பாலான கருத்துக்கள் மக்களுக்கு அறிவையும் அறத்தையும் போதிப்பவை. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டு உரைத்தல் இன்னா

இருள் கூர் சிறுநெறி தாம்தனிப் போக்கு இன்னா

அருள் இலார் தம்கண் செலவு இன்னா, இன்னா

பொருள் இலார் வண்மை புரிவு.

பாட்டின் பொருளை அறிந்து சுவைக்கும் அறிவுள்ளவர் இல்லாத இடத்தில் செய்யுளைக் கூறுதல் துன்பம். இருள் நிறைந்த சிறிய வழியிலே தனியே செல்லுதல் துன்பம். இரக்கமில்லாதவரிடம் சென்று ஒன்றைக் கேட்பது துன்பந்தரும். செல்வம் இல்லாதவர் பிறருக்குப் பொருள் கொடுக்க விரும்புதல் துன்பந்தரும்.

பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னா
அரியவை செய்தும் என உரைத்தல் இன்னா
பரியார்க்குத் தாம்உற்ற கூற்றுஇன்னா, இன்னா
பெரியார்க்கு தீய செயல்.

பெரியாரோடு கொண்ட நட்பை விடுவது துன்பம். தம்மால் செய்ய முடியாத காரியங்களைச் செய்து முடிப்போம் என்று கூறுவது துன்பமாகும். தம்மிடம் அன்பில்லாதவர் பலர் தாம் அடைந்த துன்பத்தை உரைப்பது துன்பமாகும். பெருமையுள்ளவர்களுக்குத் தீமை செய்யத் தொடங்குதல் துன்பமாகும்.

இந்த இரண்டு பாடல்களில் உள்ள அறங்கள் சிறந்தவை; என்றும் மக்களால் பின்பற்றக் கூடியவை.

பழக்கவழக்கங்கள்

பண்டைத் தமிழகத்தில் இருந்த பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் இந்நூலிலே காணலாம். பண்டைத் தமிழ்மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைள் சிலவற்றையும் காணலாம்.

பார்ப்பார் இல் கோழியும் நாயும் புகல்இன்னா

பார்ப்பார் வீட்டிலே கோழியும் நாயும் நுழைவது துன்பம் தரும் (பா.3). பார்ப்பார்கள் கோழியையும் நாயையும் அருவெறுத்தனர். இரண்டும் மலந்தின்பவை; ஆதலால் அவை வீட்டில் நுழைந்தால் ஆசாரத்திற்குக் குறைவு என்று கருதினர்.

இன்னா ஓத்துஇலாப் பார்ப்பான் உரை,

வேதத்தை ஓதாத பார்ப்பான் அறிவில்லாதவன். ஆதலால் அவன் கூறுவதை நம்பினால் துன்பந்தான்.

முடிவுரை

இவ்வாறு பல நீதிகளை இந்நூலிலே காணலாம். ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு நான்கு நீதிகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்நீதிகளில் பல நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டியவை. மனிதர்களால் கடைபிடிக்கப்பட வேண்டியவை ஆகும்1111111111111111111111111111111

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருக்குறள் விவிலியம் கூறும் தனிமனித அறம்

வி.ஏ.ஜெப ஜோதி,
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், குந்தவைநாச்சியார் அரசினர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

முன்னுரை

மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவன். இறைவனின் சாயலாகவும், அவர் ரூபத்தின்படியும் மண்ணலிருந்து எடுத்து உருவாக்கப்பட்டவன். இறைவனின் ஆவியைத் தன்னில் ஜீவாத்துமாவாகப் பெற்றிருக்கிறவன். மற்ற உயிர்களிடம் இல்லாத ஆவி, ஆத்மா, சரீரம் என்ற தனிச்சிறப்பியல்புகள் மூன்றையும் பெற்றுள்ளவன் மனிதனே.

மனிதப்பிறவி என்பது அரியது எவ்வுயிர்களுக்கும் இல்லாத தனியியல்புகள் பெற்று, இறைத்தன்மையையும் அடையும் ஓர் ஒப்புயர்வற்ற சிறப்பு மனிதனுக்குள் உள்ளது. **"வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்** என்னும் குறட்பாவின் அடிப்படையில் இறைவனுடன் சேர்ந்து வாழ்வதற்குரிய சிறப்பு மனிதனுக்கு மட்டுமே உள்ளது.

அரிது அரிது மானிடராய் பிறத்தலரிது எனும் கூற்றிற்கேற்ப அரிய பிறவியான மானிடப் பிறவியைச் சிறப்பான முறையிலமாற்றிக் கொண்டு வாழ்தலே சிறந்தது. எனவே, தனிமனித அறமதிப்புகள் திருக்குறளிலும், விவிலியத்திலும் கண்டெடுக்கப்பட்டு ஆராயப்படுகிறது.

அடக்கமுடைமை

அடக்கமுடைமையே மனிதனை இறைநிலைக்கு உயர்த்துவதாகும். அமரர், தேவர், சான்றோர் போன்றோரின் வியத்தகு பண்புகளில் அடக்கம் முதன்மையானது. தன் நிலையிலிருந்து இறைவன் நிலைக்கு உயர்ந்து வளர இவ்வடக்கமுடைமை பெரிதும் துணை நிற்கின்றது.

அடக்கம் அமைதியினைத் தரவல்லது. மேன்மைக்கு எடுத்துச் செல்வது. பேரின்பம் பெற வழிநடத்துவது. விவலியமும் மனித உணர்வுகளுக்கு இசைந்து வாழாமல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, அடங்கி வாழ வேண்டிய நெறிகளைப் பெரிதும் வலியுறுத்துகின்றது. எனவே, தனிமனித அறமதிப்புகளில் அடக்கமுடைமை மிக இன்றியமையாதது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்."

என அடக்கத்தைக் குறித்தும், அடக்கத்தின் பயனையும் அடக்கமின்மையினால் வரும் துன்பத்தையும் வள்ளுவம் விவரித்துக் கூறுகிறது.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்" என்று தொடங்கும் குறளில் வள்ளுவர் இவ்வடக்கத்தை மிகத் தெளிவாக விளக்குவர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றை ஐம்புலன்கள் என்றழைக்கிறோம். இவற்றுள் மெய் என்பது உடலைக் குறிக்கும். இவ்வுடல் சரீரம் இரத்தத்தாலும் மாமிசத்தாலும் அமையப் பெற்றது. பிறந்தபின் பழக்க வழக்கங்களாலும் உடல் இச்சைக்குள்ளாகிறது. இவ்வாறு பிறவி வழி, பழக்கவழக்கங்கள் வழி மானிட உடல் இச்சையால் நிறைந்த உடலாக அமைந்திருக்கின்றது. இந்நிலையைச் **"சரீர இச்சை"** என்று விவிலியம் கூறுகிறது. வள்ளுவமும் இவ்விச்சையை ஓரிரு குறள்கள் வழி தெளிவாக விளக்குகிறது.

மேலும் **"ஊனுடம்பு ஆலயம்"** என்னும் உண்மையை விவிலியமும் மிகத் தெளிவாக விளக்குகின்றது. எனவே, இச்சைகளிலிருந்து தன்னைக் காத்து கொள்வது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாக இந்நூல்கள் கருதுகின்றன.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"

சரீரத்தை அதன் ஆசை, இச்சைகளுக்கு இடமளித்துக் கெடுத்துப் போடாமல், சரீரத்தையும், அதன் செய்கைகளையும் தடுத்து ஒடுக்குவதாலேயே சரீரத்தை இறைவனின் ஆலயமாக மாற்றமுடியும் என விவிலியம் எடுத்துரைக்கிறது. சரீரத்தைப் பேணி காக்க வேண்டும் என்று கூறுகின்ற விவிலியம், சரீரத்தை அடக்கி ஒடுக்குதலைக் குறித்தும் குறிப்பிடுகிறது. இதையே பவுலடியார்,

"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே
ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை
ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்"

என்று மெய்யடக்கத்தில் தன் நிலையைப் பற்றி கூறுகிறார்.

தூய்மை

தனிமனித அறமதிப்புகளில் தூய்மை மிக இன்றியமையாத ஒன்றாகும். மனம் என்பது மனிதனை ஆளுகின்ற மையமாகும். இந்த மனம் அனைத்து உறுப்புகளையும் ஆளுகை செய்கிறது. மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஆணையைப் பிறப்பிப்பது இம்மனமே. இம்மனதைப் பொறுத்துதான் ஒருவரை நல்லவர் அல்லது தீயவர் என்று மதிப்பிடுகின்றோம்.

மனத்தூய்மை

மனமே ஒரு மனிதனை இயக்குகிறது, செயல்படச் செய்கிறது. புலன்கள் வழி வெளிப்படுகிறது. மனநலமே உடல் நலத்தைத் தருகிறது. **'மனம் கெடில் உடல் கெடும்'** உடல் வளர்ச்சிக்கு உற்றுழியாவது மனமகிழ்ச்சியே. எனவே, மனம் தூய்மையாக இருக்கும்போது மனத்தின் வழிபுலன்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் தூய்மையாகக் காணப்படும். மனத்தூய்மையால் பார்க்கிற பார்வை, பேசுகின்ற சொல், சிந்திக்கின்ற நினைவுகள், மேற்கொள்கின்ற செயல்கள் எல்லாம் தூய்மை பெறும்.

"மனத்தது மாசாக மாண்டார்" எனத் தொடங்கும் குறளை விளக்கும் முகத்தான் பரிமேலழகர், காம, வெகுளி, மயக்கங்கள் என்பவற்றை மனத்தின் மாசுகளாகக் குறிப்பிடுவர். எனவே, மனத்தை இம்மனமாசுகளறக் களைந்து தூய்மைபடுத்துதல் மிக இன்றியமையாதது ஆகும்.

இத்தனிமனித அறத்தை,

"மனத்துக் கண் மாசில னாதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

என்ற குறளிலும் வலியுறுத்துவதைக் காணலாம்.

"மனத் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்"

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்"

"மனநலத்தின் ஆகும் மறுமை"

என வள்ளுவம் இம்மைக்கு மட்டும் அல்லாமல், மறுமைக்கும் மிக இன்றியமையாததாக மனத் தூய்மையை வலியுறுத்துவதைக் காண முடிகின்றது.

மனம் தூய்மையாக இருக்கும்போது சொல் தூய்மை அடைகிறது. செய்யும் செயலும் தூய்மையடைகிறது.

"நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம்

யாநலத்து உள்ளதூஉம் அன்று"

என மனம் மாசில்லாத போது, சொல் தூய்மையுடன் காணப்படுவதைத் திருக்குறள் விளக்குகிறது.

இறைவனோடுறையும் அனுபவத்தைப் பெறவும். இறைவனைக் காணவும் தூய மனம் வேண்டும் என்னும் கருத்தை விவிலியம் தெளிவாகப் பல இடங்களில் விளக்குகிறது.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"

என்ற பொன்மொழி மூலம் மனத்தூய்மையே இறைவனைக் காணுகின்ற அனுபவத்தை அளிக்கும் என்பதை விவிலியம் விளக்குகின்றது. **'இறைவனைக் காண்பதே'** ஒரு மனிதனின் மிக உயரிய நோக்கம். அதை அடைய கடைபிடிக்க வேண்டிய அறமதிப்பு மனத்தூய்மை என விவிலியம் கூறுகிறது.

"கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில்

மாசில்லாதவனுமாய் இருந்து"

என்று மனத்தூய்மையுடன் காணப்படும்போதே இறைவனோடு உறையும் அனுபவம் அனுபவம் பெற முடியும் எனக்குறிப்பிடுகின்றது.

மேலும், மனம் தூய்மையாகவும், நேர்மையாகவும் நல்ல நிலையிலும் இருக்கும்போது ஏற்படும் பல நன்மைகளை விவிலியம் எடுத்தியம்புகிறது. **"சொஸ்த மனம் உடலுக்கு ஜீவன்", "மனரம்மியமோ நித்திய விருந்து", "மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்"** என மனத்தூய்மையால் ஏற்படும் நன்மைகளை விவிலியம் கூறுகிறது.

முடிவுரை

மனித வாழ்வை தீமை, பாவம், துன்பமின்றி ஒழுக்கம், தூய்மை, அன்பு என்பன போன்ற ஒழுக்கங்களுடன் இன்பமுள்ளதாக மாற்றிக் கொண்டு வாழ்வெல்லாம் மகிழ்வுடன் வாழ்பவனே தலை சிறந்த மனிதன். எனவே, அவன் பல அரிய குணங்களைப் பெற்றுத் திகழ வேண்டும். அப்போதுதான் சமுதாயமும் ஒரு மனிதனைச் சிறந்தவனாக மதிக்கும்.

"உன்னைத் திருத்தினால் உலகம் திருந்தும்" என்ற பொன்மொழிக்கேற்ப, தனிமனிதன் திருந்தினால் குடும்பம் திருந்தும். குடும்பம் திருந்தினால் சமுதாயம் திருந்தும். சமுதாயம் திருந்தினால் நாடு திருந்தும். எனவே, தனிமனித அறம் மிக இன்றியமையாததாகும்.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட தனிமனித அறமதிப்புகள், திருக்குறளிலும் விவிலியத்திலும் ஒத்தக் கருத்துடையவைகளாக அமைகின்றன.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

ஆழ்வார் பாசுரங்களில் - அன்பு

தி.ஜெய சித்ரா

முனைவர் பட்ட ஆய்வாளர், தூய வளனார் கல்லூரி, திருச்சி.

உலகம் இன்றளவும் நின்று நிலைத்திருப்பதற்கு உயிர்களிடத்துப் பரவியிருக்கும் அன்புதான் காரணமாகின்றது. அன்புடைய நெஞ்சில் எவ்வித மாசுகளும் இருக்க முடியாது. அன்புடையார் எவ்விதத் தீங்குகளையும் பிறருக்குச் செய்ய எண்ணமாட்டார்கள்.

"அன்பின் வழியது உயிர்நிலை"

(திருக்குறள்-80)

என்பார் வள்ளுவர். அனைத்துயிர்களையும் அன்புகொண்டு நேசிக்கும் மனம் வாய்க்கப்பெறுமானால் அதுவே இறைநிலையாகும். அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே என்கிறார் வள்ளலார்.

"அன்பே சிவம்" (திருமந்திரம்-270)

என்கிறது திருமந்திரம். பரம்பொருளை அன்பே! அன்பே என்று அரற்றினால் அடையாளம் என்று குறிப்பிடுகிறார் திருமூலர். அன்பினால் பெருமானை வணங்கியவர்கள் ஆழ்வார்கள். அவர்களின் நெஞ்சத் தோட்டத்தில் பூத்த மலர்கள் தான் - நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும். அன்பு என்பது பக்தி, கருணை, அருள் என பல்வேறு படிநிலைகளில் வெளிப்படுகிறது.

அன்பு

இறைவன் அன்புருவானவன் என்பதை அனைத்து மதங்களும், சமயங்களும் வழிமொழிகின்றன. அன்பே வடிவாய் நின்ற இறைவனைப் போற்றிப் பாடியவர்கள் ஆழ்வார்கள்.

"அன்பு ஆவாய் ஆர் அமுதம் ஆவாய், அடியோனுக்கு
இன்பு ஆவாய், எல்லாமும் நீ ஆவாய்" (நான்முகன் திருவந்தாதி-2440)

என்று திருமழிசையாழ்வார் இறைவனை அன்பின் வடிவமாகக் காண்கிறார்.

மேலும்,

"அன்பிலன்றி யாழியானை
யாவர்காண வல்லரே" (நா.தி.பி-827)

என்று பாடுகிறார்.

"உன்னிடத்தில் அடியேன் வைத்திருக்கிற அன்பானது எண்ணளவில் அடங்கி நிற்பதன்று" (நா.தி.பி-2281) என்று மனமுருகுகிறார் பூதத்தாழ்வார்.

"என்பெலா முருகி யுக்கிட்
டென்னுடை நெஞ்ச மென்னும்
அன்பினால் ஞான நீர்கொண்
டாட்டுவ னடிய னேனே" (திருமங்கை – திருக்குறு - 2046)

திருமாலிடத்து அன்பை ஆதாரமாகக் கொண்டு வழிபடும் பாங்கை, திருமங்கையாழ்வார் பாசுரத்தில் காணமுடிகிறது.

"அறியாக் காலத்துள்ளே
யடியமைக்க ணன்பு செய்வித்து
அறியா மாமாயத்
தடியேனை வைத்தாயால்" (நம்மாழ்வார் - திருவாய் -2809)

என்னும் பாசுரத்தைப் பற்றிக் கூறுகையில்,

" 'அன்பு செய்வித்து' எனும் சொற்கள் குறிப்பிடத்தகுந்தவை. பக்தன் கடவுளிடத்தில் கொள்ளும் அன்பைத் தனக்குள் வளர்த்துக் கொள்ளவும் இறைவனின் கருணை, இறையருள் வேண்டும்" (இந்திராபார்த்தசாரதி – தமிழ் இலக்கியங்களில் வைணவம் ப–177) என்று குறிப்பிடுகிறார் எழுத்தாளர் இந்திரபார்த்தசாரதி.

திருமாலின் அடையாளம் எங்கும் உள்ளதாகப் பாடி, தனது அன்பை வெளிப்படுத்துகிறார் பொய்கையாழ்வார்.

"தழும்பு இருந்த – சார்ங்க நாண் தோய்ந்தவாம் அங்கை
தழும்பு இருந்த – தாள், சகடம் சாடி; - தழும்பு இருந்த
பூங்கோதையாள் வெருவப் பொன் பெயரோன் மார்பு இடந்த
வீங்கு ஓத வண்ணர் விரல்" (நா.தி.பி-2104)

மேற்கண்ட பாடல்களின் வழி அன்பு எனும் பண்புநலம் சிறந்து விளங்குகிறது.

பக்தி

இறைவனை அடைய பக்திமார்க்கம் சிறந்த வழியாகிறது. பேரன்பின் முதிர்ச்சியே பக்தி எனப்படும். பக்திநெறி என்பதற்கு பக்தியால் நற்கதியடையும் முறை என்று பொருள் தருகிறது தமிழ்ச்சொற்களஞ்சியம். பக்தியினை மேற்கொண்டோர் பக்தர். ஆழ்வார்களின் பக்திநெறி செயல்களால் செய்யும் பக்தியாகவும், மனமுருகிச் செய்யும் பக்தியாகவும் விரிகிறது.

செயல்களால் செய்யும் பக்தி

ஆழ்வார் என்னும் சொல்லுக்கு பக்தியில் ஆழ்ந்தவர்கள் என்று பொருள். பெயருக்கேற்ற பொருள் விளக்கத்தை செயல்களின் மூலமாகவும் நிகழ்த்திக் காட்டியவர்கள் ஆழ்வார்கள்.

நாடுதல், பாடுதல், சூடுதல் போன்ற செயல்களால் பொய்கையாழ்வார் ஆண்டவனிடம் பக்தியை செலுத்துகிறார்.

"நாடிலும் நின் அடியே நாடுவன்; நாள்தோறும்
பாடிலும் நின் புகழே பாடுவன்; சூடிலும்

பொன் ஆழி ஏந்தினான் பொன் அடியே சூடுவேற்கு
என் ஆகில் என்னே எனக்கு" (நா.தி.பி-2169)

என்று நாடோறும் செய்யும் செயலைக் குறிப்பிடுகிறார் பொய்கையாழ்வார்.

"நாக்கொண்டு மானிடம் பாடேன் நலமாகத்
தீக் கொண்ட செஞ்சுடையான் சென்று, என்றும் பூக்கொண்டு
வல்லவா றேத்த மகிழாத, வைகுந்தச்
செல்வனார் சேவடிமேல் பாட்டு" (நா.தி.பி-2456)

என தன் நாவின் செயலைக் குறிப்பிடுகிறார் திருமழிசையாழ்வார்.

மனமுருகிச் செய்யும் பக்தி

மனமுருகிச் செய்யும் வழிபாடே கூடுதல் பலனைப் பெற்றுத் தரும்.

பேயாழ்வார், நெஞ்சத்துப் பேராது நிற்கும் பெருமான் திருமாலே என்று மனமுருகிப் பாடுகிறார்.

"உணரில் உணர்வு – அரியன்; உள்ளம் புகுந்து
புணரிலும் காண்பு – அரியன் உண்மை - இனர் அணையக்
கொங்கு அணைந்து; வண்டு அறையும் தன்துழாய்க் கோமானை
எங்கு அணைந்து காண்டும் இனி" (நா.தி.பி-2363)

பெருமானைத் துதிப்பதற்கு தகுதி உடையவராய் இருந்தும், தகுதியற்றவனாக தன்னை எளியவனாகக் கருதி பெருமானிடம் மனமுருகுகிறார் பொய்கையாழ்வார்.

"செவி, வாய், கண், மூக்கு, உடல் என்று ஐம்புலனும்; செந்நீ
புவி கால் நீர் விண் பூதம் ஐந்தும் - அவியாத
ஞானமும், வேள்வியும், நல் அறமும் என்பரே
ஏனமாய் நின்றாற்கு இயல்வு!" (நா.தி.பி-2093)

கருணை

நாராயணனே! பரம்பொருள்.

நாரம் (தண்ணீர்) – நீர்மை நிறைந்தவன். அதாவது இளகிய மனம் கொண்டவன். பெருமானின் திருநாமமே அவனின் கருணைப்பண்பை உணர்த்துகிறது. கருணைப் பண்பினனான பெருமானின் பெருமையை புகழ்ந்து போற்றியுள்ளனர்.

"முன்னொரு காலத்தில் சிறு குழந்தை வடிவம் உடையவனாகிய ஆலந்தளிரிலே உலகங்களை எல்லாம் அமுது செய்து கிடந்தவனே! மந்தர மலையைக் கொண்டு, கடலைக் கடைந்து, உயர்ந்த இனிய அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்தாய்" (நா.தி.பி-2314)

என்று பெருமாள் உலக உயிர்களிடத்துக் கொண்டிருக்கும் கருணைப் பண்பைப் போற்றுகிறார் பேயாழ்வார்.

அருள்

பெருமானிடத்து கொள்ளும் உண்மையான அன்பின் மூலம், அவனது அருளைப் பெறமுடியும். அத்தகு அருளைப் பெற்றுத் திகழ்ந்தவர்கள் ஆழ்வார்கள்.

நம்மாழ்வார் பெருமானிடம் தாம் பெற்ற இறையருளை,

"இருந்தும், வியந்து என்னைத் தன்பொன் அடிக்கீழ் என்று
அருந்தித்து எனைத்து ஓர் பலநாள் அழைத்தேற்கு"
பொருத்த உடைவாமனன் தான்புகுந்து என்தன்
கருத்தை உற, வீற்றிருந்தான் - கண்டுகொண்டே" (திருவாய் - 3737)

என்று போற்றி மகிழ்கிறார்.

"அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை; இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்" (திருக்குறள்-243)

என்கிறார் வள்ளுவர்.

"பொருளால் அமர் உலகம் புக்கு இயலல் ஆகாது" (நா.தி.பி-2222)

என்கிறார் பூதத்தாழ்வார். சுவர்க்க உலகை அடைவதற்கு இறையருள் இன்றியமையாதது, என்பதை ஆழ்வார்கள் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

முடிவுரை

- நம்பிக்கை அன்பின் நிலை. விசுவாசம் பக்தியின் நிலை. இறைவனிடம் நாம் கொள்ளும் உண்மை அன்பினால் கருணைப் பண்பு வெளிப்படுகிறது. அன்பின் முதிர்ந்த நிலையே அருளாகிறது. இதற்கு ஆழ்வார்களின் பாடல்கள் சிறந்த சான்றுகளாகின்றன.

- பொய்யான உலக வாழ்வினில், மெய்யான அன்பு கொண்டு இறைவனை வழிபட்டு இறையுணர்வைப் பெற்றவர்கள் ஆழ்வார்கள் என்பதை அவர்களின் பாசுரங்களின் வழி அறியமுடிகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

உருவக இயற்பெயர்கள்

முனைவர் தி.மல்லிகா

தமிழ்த்துறைத் தலைவர் , மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி , மதுரை.

முன்னுரை

பண்டை இலக்கியம் பழமைச் சிறப்புடைய பழந்தமிழர் ஆவணம். பண்டைத் தமிழரின் வாழ்வியல் களஞ்சியம். செவ்வியல் மொழிகளுள் உயர்ந்தோங்கி நிற்கும் மலை விளக்கு, பழந்தமிழரின் பண்பாடு, நாகரிகம், இசை, கலை ஆகியவற்றை அறிய உதவும் காலப் பெட்டகம். ஐவகை நிலப் பிரிவுகளின் மக்கள் பிரிவில் படிப்படியான மாற்றங்களையும் கண்ணாடிபோல் காட்டும் கைவிளக்கு, உயர்ந்த ஒழுக்க நெறிகளைப் புகட்டும் ஒழுக்க நூல். அற உணர்வுகளைத் தாங்கி நிற்கும் அற இலக்கியம் நம் செவ்வியல் நூல்கள். இந்நூல்களில் கருத்தையம் உணர்ச்சியையும் மிகச் சுருங்கிய வடிவில் வெளியிட்டுப் புலவர்களுக்கு இயற்பெயர்களாக அமைந்த உருவகங்களைப் பற்றி நோக்குவோம்.

கங்குல் வெள்ளத்தார்

இவர் குநற்தொகை 287-ஆம் பாடலின் ஆசிரியர். இப்பாடலில் வரும் ஒரு சொற்றொடர் ‘கங்குல் வெள்ளம்’ என்பது, ‘கங்குல் வெள்ளத்தார்’ என்பதற்குக் ‘கங்குல் வெள்ளத்தை உடையவர்’ அதாவது, ‘கங்குல் வெள்ளம்’ என்ற இச்சொற்றொடரின் பொருட்சிறப்பால் இதன் ஆசிரியர் அப்பெயர் பெற்றார் என்பது பொருள். கங்குல் வெள்ளம் என்னும் சொற்றொடரோடு அத்துச்சாரியையும், உயர்வு குறிக்கும் உயர்திணைப் பன்மை ‘ஆர்’ விகுதியும் சேர்ந்து “கங்குல் வெள்ளத்தார்” என்ற பெயர் அமைந்தது.

“எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலையும்”
இரவரம் பாக நீந்தின மாயியின்

எவன்கொல் வாழி தோழி

கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே”

பிரிவின் கொடுந்துன்பத்தையும், நீங்காது தொடர்ந்து நிற்கும் தனிமையையும் தலைவி உணர்ந்து வருந்துகிறாள். நாட்கள் வெறிச்சென்று இருக்கின்றன. பகலவனின் ஒளி உள்ளத்தை தொலைத்து அதைப் பொறுக்க முடியாதபடி செய்கிறது. அது நெடுங்காலமாக திட்டம் இட்டுத் தந்த தண்டனை. இத்தகைய கொடிய பகற்காலமும் முடிந்து மாலை நேரம் வரும்போது, முல்லை மலர்கள் கட்டவிழ்ந்து விரிகின்றன. செங்கதிரோன் தன் சினம் தணிந்து நிற்கிறான். வாழ்க்கையின் கரையை அடையும் பொருட்டு நாம் பரந்து விரிந்த பகற்காலமாங் கடலை வெற்றியோடு நீந்திவிட்டோம். நம் உயிர் கரையில் கிடக்கிறது. ஆனால் யாது பயன், மாலைப்பொழுது நம் துன்பத்தை மிகுதியாக்குகிறது.

வரப்போகும் கங்குலாகிய வெள்ளமோ (இரவுப்பொழுது) அந்தோ! கடலைவிடப் பெரிதாயிற்றே! பாடலில் தோன்றும் உணர்ச்சி கங்குல் வெள்ளம் - இரவாகிய வெள்ளம் என்ற உருவகத்தில் உச்ச நிலையடைகிறது. இவ்வுருவகத்தை நினைந்து பாராட்டினால் பிரிவு துன்பத்தால் வருந்தும் தலைவியினுடைய உள்ளத்தின் நுட்ப உணர்வுகளை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்". இதனால் தான் நம் ஆசிரியர் "கங்குல் வெள்ளத்தார்" என்னும் பெயரால் வாழ்பவரானார்.

பதடி வைகலார்

உருவகத்தாற் பெயர் பெற்ற அடுத்த புலவர் பதடி வைகலார் என்பவர். 'பதடி வைகல்' உருவகச் சொற்றொடரோடு "ஆர்' என்ற உயர்வுப் பன்மை விகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வுருவகத்தை ஆசிரியர் தமது குறுந்தொகை 249-ஆம் பாடலில் கையாளுகிறார். 'பதடி வைகலையுடையார்' என்பது இப்பெயரின் பொருள் பதடி வைகல், அதாவது 'உள்ளீடில்லாத கருக்காயான நாட்கள்' என்னும் உருவகத்தைப் பாவில் அமைத்துப் பாடியவர் என்பதாகும். காதலியைப் பிரிந்த தலைவனின் தனிமை துன்பத்தை இப்பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது. அவளைப் பிரிந்து வாழும் வாழ்க்கையில் ஒவ்வோர் அனுபவமும் அவனுக்கு உள்ளீடு சிறிதும் இல்லாத கருக்காயாகவே தோற்றமளிக்கிறது. அங்கே உயிர் தோன்றவில்லை. அவனும் நிழல்போலத்தான் நடமாடுகிறான். அவனுடைய செயல்களின் தூண்டுகோல் அங்கில்லை. அவள் அவன் அண்மையிலிருக்கையில், அவன் செய்யும் செயல்கள் பொருளும் மதிப்பும் அடைகின்றன. அவனுக்கு உயிரளிப்பவள் அவளே. அவளால் அவனுடைய ஒவ்வோர் அனுபவமும் உயிரின் ஒத்திசையாகவும் இயற்கையின் இசையாகவும் இலங்குகின்றது. உமி நீங்கிய பதடி என்பது வெறும் பதரே. உண்மை உயிராகிய உள்ளீடு அங்கே இல்லை. ஆனால் தானியம் போலே அது தோற்றமளிக்கிறது. அவள் இல்லாத வைகலும் -நாட்களும் அத்தகையனவே. அவைகளெல்லாம் பதடிகளே: உள்ளீடாகிய மணிகள் இல்லாத நாட்களே. இத்தகைய பொருளாழம் பொருந்திய உருவகம், இப்புலவர் காலத்தில் வாழ்ந்த மற்றவர் கருத்தை ஈர்த்தபடியால், அவர்களால் நம் புலவர் 'பதடி வைகலார்' என்ற சிறப்புப் பெயர் சூட்டப் பெற்றார்.

"எல்லாம் எவனோ.̇. பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய எழாலின்
வானத்து அஞ்சுவர நல் இசை வீழ"

கூகைக் கோழியார்

புறநானூற்றின் 364-ஆம் பாடலை இயற்றிய புலவரின் பெயர் கூகைக் கோழியார் என்பது. 'கூகைக்கோழி' என்னும் சொற்றொடர் இடுகாட்டைப் புனைந்து பாடும் இப்பாடலில் வருகின்றது. உலகத்தின் நிலையாமையைப் பற்றி இப்பாடல் உணர்த்துகின்றது. வீரப்போர் பல புரிந்த வீரன் ஒருவனை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டதாகிய இதன் பொருள் வருமாறு:

வீரப்போர் புரியும் ஆற்றல் படைத்தவனே, வருக! வாடா மலர் மாலையாம் பொன்னரி மாலையைப் பாடினி அணிந்து கொள்ளவும், பொற்றாமரை மலரைப் பாணன் சூடிக்கொள்ளவும் அருள் செய்து, ஆட்டிறைச்சியைத் தீயிற் சுட்டு உண்டு, நறவு மாந்தி மகிழ்ந்து, இரப்போர்க்கு வாரி வழங்கிக் களித்து

வாழ்வோம். விரைவில் வருக!. ஏனெனில் நிலம் பிளக்குமாறு வேரோடிய முது மரத்தின் பொந்தில் வாழும் கூகைக் கோழி. காலம் சிறிது சிறிதாக ஊர்ந்து செல்வதைக் கணக்கிட்டுச் செத்தோர்க்கு அறிவிப்பதுபோல் எப்பொழுதும் கூவிக்கொண்டிருப்பதற்கு இடனாகிப் பிணங்களை கவிக்கும் தாழிகள் நிறைந்த இடுகாட்டை நாம் அடையுங்கால், இவ்வின்பமெல்லாம் நாம் அடைய முடியாதபடி அரியனவாய்விடும்.

ஈகையும் செல்வ வளமும் உள்ள வாழ்க்கைக்கும் படைப்புக்காலந் தொடங்கி இருந்து வரும் பழமையான இடுகாட்டுக்கும் உள்ள வேறுபாட்டை, இப்பாடலில் புலவர் காட்டுகிறார். இடுகாடு காலத்தால் முதிர்ந்து துன்பமான தோற்றத்தோடிருக்கிறது. அக்காட்டில்! அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பயனற்ற சில மரங்கள் வளர்ந்திருத்தலைப் பொறுமை மிகுந்த நிலத்தால் கூடப் பொறுக்க முடியவில்லை. யாரும் இல்லாத இந்த பரந்த வெளியில் ஓரே ஓர் ஒலி கேட்கிறதெனின், அது காலத்தின் ஓட்டத்தை அறிவிப்பதுபோல் விட்டுவிட்டுக் கூவும் கூகையின் ஒலிதான். இவ்வொலிதான் இவ்விடுகாட்டின் துன்பமான தனிமையை ஓரளவு நீக்குகிறது. கூகை தன்னந்தனியே மிகவும் அலுத்துப்போய்க் கூவும் கோழியின் குரலை நமக்கு நினைப்பூட்டுகிறது.

கூகையின் குரலால் அறிவிக்கப்படும் காலத்தின் ஓட்டம், முடிவில்லாது பரந்த தனது தனிமையையும், அதன்மூலம் இடுகாட்டின் பயங்கரமான தனிமையில் உறையும் துன்பக் காட்சியையும் வலியுறுத்துகிறது. கூகையைக் கோழியாக உருவகித்த இவ்வுருவகம் இவ்வாறு ஆழமான கருத்துடையதாக இருத்தலின், இதனைத் தம் கவிதையில் அமைத்த புலவர் “கூகைக் கோழியார்” என்று பெயர் பெற்றார்.

“நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே”

நிறைவுரை

இங்ஙனம் பழந்தமிழ்ப் புலவர்களின் பெயர்களைப் நோக்கும்போது ‘கங்குல் வெள்ளத்தார்’, ‘பதடி வைகலார்’, ‘கூகைக் கோழியார்’ போன்றோரின் சிறப்புக் கருதி அவர்களது பாடல்களின் உருவகங்களே அவர்களது அடைமொழிப் பெயர்களாகிப் பின்பு கால மாற்றத்தால் அவையே இயற்பெயர்களாக அமைந்து அதாவது உருவகங்களே இயற்பெயர்களாக மாறிய தன்மையை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

அவ்வையார் பாடலில் சொல்லும் பொருளும்

முனைவர் இரா. மணிமேகலை
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை , மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை-4

முன்னுரை

தமிழ் வழங்குமிடமெங்கும் பிறந்த குழந்தைகள் ஐந்து ஆறு வயதில் முதன் முதல் அறிமுகம் பெறும் இலக்கியம் அவ்வையார் நூல்கள்: ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், அவ்வைப்பாட்டியாருடைய வரலாற்று கதைகளும், அவர் செய்த பாடல்களும், பலரால் தனித்தனியே சொல்லப்பட்டிருப்பினும், அவற்றைச் செவ்வையாக ஆராய்ந்தவர் அனவரத விநாயகம் பிள்ளையவர்கள், எல்லாக் கதைகளையும் எடுத்துக்கூறி ஆங்காங்கு தடைகளையும் நிகழ்த்தினார், முடிவு சொல்லவில்லை. (அவ்வையார் என்ற அவரது நூல் 1919) ஆராய்ச்சிகளின் முடிவான கருத்துக்களை நன்கு ஆய்ந்து, அவற்றுட் கொள்ளத் தக்கனவற்றையும் புதிய கருத்துக்களையும் பின்வருமாறு இங்கு தொகுத்துக் கூறலாம்.

அவ்வை என்ற சொல்

வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு சூழ்நிலையில் வாழ்ந்து வெவ்வேறு வள்ளல்களாலும் போற்றி ஆதரிக்கப்பெற்று, சிறப்பான நூல்கள் செய்த அல்லது பாடல்கள் பாடிய மூதாட்டியர் பலர் அவ்வையார் என்ற பெயரால் வப்பெற்று வந்திருக்கிறார்கள். தமிழ் நெடுங்கணக்கில் 'ஔ' என்று எழுத்தைத் தொடக்கமாக உள்ள சொல்லொன்று வேண்டும் என்பதற்காக இப்பெயரை ஔவை என்ற வடிவத்தில் எழுதி வருகிறார்கள் இப்பெயரின் வடிவம் அவ்வை என்பதாகும். அவ்வை என்றால் அம்மை என்று பொருள். "அவ்வைக்கு மூத்த மாமன்" என்பது சிந்தாமணி 1046. சூடாமணி நிகண்டு "அவ்வையும் கந்தியும் நோற்பவள் பெயர்" என்று கூறுவதும் இங்கு கருதத்தக்கது. (சூடாமணி செய்தார் சைனராகலின், கத்தி என்ற சைன சமயத்துத் துறவுபூண்ட பெண்ணேடொப்ப அவ்வையைச் சேர்த்துக் கூறினார்). அவ்வை-அன்னை (திருக்கோவையார் உரை 214, பேராசிரியர்). அன்னோன் அவ்வை அத்தன்மையனான பீமன் மாதாவாகிய குந்திதேவி (ஞானாமிர்தம், 32:8)

பொதுவாக இன்று அவ்வை என்ற சொல் கிழவி என்ற பொருளோடு வழங்கி வருகிறது. சந்திரனில் காணப்படும் களங்கம் போன்ற நிழல் வடிவத்தை அவ்வைக்கிழவி நூல் நூற்கும் தோற்றம் என்று நம் மக்கள் இன்றும் சொல்லக் காண்கிறோம். அவ்வை என்ற சொல்லின் மற்றொரு வடிவம் அல்லது திரிபு என்று இதைக் கருதவேண்டும்.

துறவு பூண்ட பெண்கள் என்ற பொருளில் சிந்தாமணி (2637) அவ்வை என்ற சொல்லை வழங்குகிறது:

அணியிருங் கூந்தலை அவ்வை மார்கள் தாம்

பணிவிலர் பிறத்தனர் பரமன் சொன்ன நூல்
துணி பொருள் சிந்தியாத் துறத்தல் மேயினார்.

அன்றியும், இரக்கச் சொல்லாக, அம்மா, அம்மாவோ என்று உலக வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் கூறுவது போல, "அங்குறை அரவு தீண்டி, அவ்வையோ என்று போக" என்பது சிந்தாமணி 1271, இங்கு அவ்வை-அம்மை சிந்தாமணி ஆசிரியரும் சைனர் என்பது இங்கு கருதத்தக்கது. இன்றும் சில சாதியாரிடையே அவ்வை என்பது அம்மை என்ற பொருளில் ஆட்சியில் உள்ளது.

மணம் செய்து கொள்ளாதிருந்து பருவத்தால் முதிர்ச்சி பெற்றுத் தவக்கோலம் தாங்கி, கல்வி கேள்விகளில் மேம்பட்டு விளங்கிய பெண்டிரை இயற்பெயர் சுட்டாது, அவ்வை என்று வழங்கினர் போலும். இத்தகைய பெண்டிர் பலர் இலக்கியம் வல்லவர்களாய்க் காலந்தோறும் இருந்திருக்கிறார்கள்.

அவ்வை பெயரால் அவ்வை நோன்பு இன்றும் கூடத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் பெண்கள் அனுட்டிக்கிகறார்கள். இது செவ்வாய்ப் பிள்ளையார் கும்பிடுதல் என்ற பெயரிலேயும் வழங்குகிறது. நள்ளிரவிற்கு மேல் ஓர் ஊரில் உள்ள ஒரு சமூகத்தின் பெண்டிர் பலரும் கூடிப் பிள்ளையார் பிடித்து வைத்து அவ்வை என்று சொல்லி, கொழுக்கட்டை நைவேத்தியம் செய்து வணங்கி, இரவே உண்டு முடித்து விடுகிறார்கள். இதில் செய்கிற பூசை மிக்க இரகசியமாகவும் ஆண் காற்றே வீசாத படியும் பாதுகாக்கப்படுகிறது.

யாப்பருங்கல விருத்தியுரை (சூத்திரம் 61) ஔகாரக் குறுக்கும் நேரசை என்பதற்கு உதாரணமாக,

ஔவை என்று வேறெடுத் துரைக்கும்
தௌவை என்றன் ஓலை.

என்ற ஒரு பாடலை எடுத்துக் தருகிறது.

அவ்வை பாடல்

இவர்கள் பாடலைத் தொகுத்து, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் திரட்டப்பட்ட தமிழ் நாவலர் சரிதை என்ற நூலானது, கிடைத்த வரலாறுகளையும் ஒன்று சேர்த்து, அவ்வை பாடலாக அமைந்திருக்கிறது. இனி, 19 ஆம் நூற்றாண்டின் இடையில் விநோதரச மஞ்சரி எழுதிய வீராசாமிச் செட்டியாரும், தனிப் பாடல் திரட்டுத் தொகுத்த தில்லையம்பூர்- சந்திரசேகர கவிராச பண்டிதரும், தாம் கேட்டறிந்தவற்றை ஒரு சேரத் தொகுத்துத் தந்தார்கள். புலவர் புராணம் செய்த தண்டபாணி சுவாமிகள் தொகுத்துத் தந்தார்கள். அவர் தாம் கேட்டறிந்தவற்றைச் சேர்த்து அவ்வை புராணமாகப் பாடிவைத்தார். பொதுவாக, தமிழ் இலக்கிய வராலற்றில் கால உணர்வு என்பது மிகவும் புதியது. முந்தையோர், கிடைத்த பாடல்களையும் செய்திகளையும் புராதனமாய்க் கருதினார்களேயன்றி, எந்தக் காலம் என்று அவர்கள் ஒருபொழுதும் ஆராய்ந்ததில்லை. அவர்களுக்கு அவ்வையார் பலர் இருந்தனர் என்ற நினைவும் ஏற்படவில்லை. பாடல்களை அவர்கள் தொகுத்துத் தந்தது அவர்கள் நமக்குச் செய்த பேருபகாரம்.

ஆனால் நாம் காலக்கண் கொண்டு பார்க்கிறோம். பார்க்கவே, அவ்வையார் பலர் பல்வேறு காலத்தில் வாழ்ந்தார்கள் என்பது மிகவும் திட்டமாய்த் தெரிகிறது. இவ்வாறு ஒரே பெயர் தரித்த பல்வேறு புலவர்களை ஒருவராகவே கருதிய நிலை, கபிலர், கல்லாடர், நக்கீரர், பட்டினத்தார், கம்பர், பெருந்தேவனார் பேராசிரியர் முதலான புலவர் பலர் சார்பிலும் உள்ளது.

இப்போது கிடைக்கும் அவ்வையார் கதைகளையெல்லாம் தொகுத்துப் பார்த்தோமானால், குறைந்தது அவ்வையார் நால்வர் பற்றிய வரலாறுகளை தனிப்படுத்த முடியும். முதலாமவர் சங்ககாலத்து அவ்வையார். இரண்டாமவர் பாரி மகளிர்- பெண்ணை நதி என்ற கதைகளோடு சம்பந்தப்பட்ட

அவ்வையார். மூன்றாமவர் சோழர் காலத்து அவ்வையார். நான்காமவர் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று திட்டமாய்க் குறிப்பிடலாம். பின்னும் பலரும் இருந்தார்கள் என்பது உறுதி, அல்லாமலும், இவ்வரலாறுகளிலும் கூட, பின்னால் எழுந்த போலிக்கதைகள் சேர்க்கப்பட்டிருத்தலும் கூடும். இவையெல்லாம் காலக்கிராமத்தில்தான் ஆராய்ந்து தெளிவாக்கித் தனிப்படுத்த முடியும்.

ஆத்திசூடி

அவ்வையார் நூல்களைக் குறிப்பிடும்போது, இந்த நூலை முதலாக வைத்துக் கணக்கிடுவதே மரபாக இருக்கிறது. ஆகவே இதையே முதலாவதாக நாமும் குறிப்பிடுகிறோம். ஆத்திசூடி என்பது முதற்குறிப்பாற் பெற்ற பெயர். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் தேசியக் கவிஞர் பாரதியார் இப்பெயரை வைத்தே, தமது புரட்சிக் கருத்துக்கிசையப் புதிய ஆத்திசூடி எனப் பாடியிருப்பதும் இங்கு சிநதிக்கத்தக்கது. இன்றுள்ள இதன் காப்புச்செய்யுள் இத்தொடரோடு தொடங்குகிறது:

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

இந்நூல் 109 வரிகளை உடையது. ஒவ்வொருன்றும் ஒரு நூற்பா போன்றது. உயிர் எழுத்து, உயிர்மெய் எழுத்துக்கள் ஆகியவற்றை நிரலே முதலெழுத்தாக வைத்து தொடங்கும் அடிகளாக அமைக்கப்பட்டுள்ளன. உயிர் (∴ உள்பட) 13, அகரமேறிய மெய் 18, ககரவருக்கம் 12, சகரம் 11, தகரம் 11, நகரம் 11, பகரம் 11, மகரம் 11, வகரம் 11 ஆக 109. மெய் 18 இல், தமிழிலக்கணப்படி மொழிக்கு முதலில் என்பவற்றின் முன் இகரம் அல்லது அகரம் அமைத்த சொல்லாக வரிகள் செய்யப்பட்டுள்ளன:

இடம்பட வீடு எடேல்
அனந்த லாடேல்

என்பன காண்க. இவ்வாறே வகர வருக்கத்தில் வு, வூ, வொ, வோ – மொழிக்கு முதலாக வாரா ஆகையால், இவை உ, ஊ, ஒ, ஓ என்றே கொள்ளப்பட்டுள்ளன:

உத்தமனாயிரு (வு)
ஓரம் சொல்லேல் (வோ)

என்பது காண்க. எனினும் மொழிக்கு முதலில் வரத்தக்க ஞகர, யகர வருக்கங்கள் இங்கு விலக்கப்பட்டுள்ளன. காரணம் விளங்கவில்லை.

அப்பர் சுவாமிகள் தாம் பாடிய திருக்குறுந்தொகை (ஐந்தாந் திருமுறை) இறுதியில் பொதுக் குநற்தொகை – சித்தத் தொகை என்ற பதிகத்தை, இரண்டாம் பாடலிலிருந்து முப்பதாம் பாடல் வரை, முதலெழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கு உயிரெழுத்துக்களும் அகரமேறிய மெய்யுமாக அமைத்திருப்பது கருதத்தக்கது. அ, ஔ, ∴- வரை 13 பாடல்கள், க – ன 17 பாடல்கள். இங்கு வ, ற வுக்குரிய பாடல்கள் இல்லை. தமக்கு வழக்கமாயுள்ள முறைப்படி ல என்ற எழுத்து வருகிற இலங்கை என்ற சொல்லை முதலாக உடைய பாடலை 30ஆம் பாடலாக, ன வுக்குப் பின் இறுதியில் வைத்திருக்கிறார். முதலில் இகரத்தையும், ரவுக்கு அகரத்தையும், னகரத்துக்குப் பதிலாக ன் என்ற எழுத்தைத் தன் என்ற தொடக்கமாகவும் அமைந்திருக்கிறார்.

15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவராயர் தமது பாடு துறையுள்,99 சொரூபானந்த சுவாமிகள் வீட்டு நெறி என்ற பிரபந்தத்தை 114 அடிகள் கொண்ட ஓர் அகவலாக அமைந்திருக்கிறார். எதுகை பெற்ற

தனி வாக்கியம். முதல் எழுத்துக்கள் அவில் தொடங்கி வையில் முடிகின்றன. பிற்காலத்தில், ஆசிரியர் பெயர் அறியப்படாத நூலாகிய வேழமுகம் என்பதன் வரிகள் எல்லாம் அகரவரிசையில் அமைந்துள்ளது. இந்நூல் வரிகள் பற்றிச் சில சொற்கள் கூறலாம். ஙப் போல்வளை என்று இவர் ஙகர வர்க்கத்திற்காகப் பரிந்து பேசும்கூற்று, தமிழ் உலகில் சுற்றம் தழுவுதலுக்கு ஒரு சூத்திரம் ஆகிவிட்டது. கல்வியை அதிகமான வரிகளால் சொல்லுகின்றார். என்ணெழுத்து இகழேல், ஓதுவது ஒழியேல், இளமையிற் கல், வேள்வி முயல், நூல்பல கல், வித்தை விரும்பு. தெய்வ வழிபாடு- திருமாலுக்கு அடிமைசெய், தெய்வம் இகழேல், உடல் நலம்- நோய்க்கு இடங்கொடேல், மீ தூண் விரும்பேல். பாம்பு – அரவமாட்டேல், பாம்பொடு பழகேல். உழவு – பருவத்தே பயிர் செய், நெற்பயிற் விளை, பூமி திருத்தி உண். மை விழியார் மனையகல் என்றது சரியே, ஆனால் இவரே பெண்பாலாயிருந்தும், 'தையல் சொற் கேளேல்' என்று சொல்லி இருப்பது விசித்திரமாயுள்ளது.

இணக்கமறிந்து இணங்கு, சேரிடமறிந்து சேர் என்று ஒரே கருத்தைத் தெரிவிப்பது போன்ற இரு வரிகள் காணப்படுகின்றன. இரண்டுக்கும் பொருள் வெவ்வேறாகக் கொள்ளுதல் தகும். சேர்க்கை என்பதற்கு, மெய்யினால் மட்டும் (செயலால்) பெறும் நட்பு என்றும், இணக்கம் என்பதற்கு மனம் மொழிமெய் என்ற முக்காரணங்களாலும் கொள்ளும் நட்பு என்றும் பொருள் செய்வது பொருந்தும் என்று தோன்றுகிறது.

மிகச் சுருங்கிய சொற்களால் உலகத்துக்குப் பொதுவான நீதிகளை இவ்வளவு அதிகமாகச் சொன்ன நூல் வேறு இல்லை. திருக்குறளின் சாரமான கருத்துக்கள் பலவற்றை இரண்டே சொற்களால் சொல்லுகின்றார். ஏற்பது இகழ்ச்சி, ஐயம் இட்டு உண் என்று தொடர்ந்த இரு வரிகளையும் காண்க. குறளை ஒப்பிடுக.

ஆத்திசூடி அமர்ந்த தேவன்- ஆத்தி சூடுகின்ற சிவ பெருமான் விரும்பிய தேவனாகிய விநாயகன் என்றும், ஆத்தியைச் சூடிய சிவபெருமான் என்றும் பொருள் சொல்லுவர். இந்நூலானது பாமரமக்கள் நாவிலும், சாமானியப் பழமொழி போல் இன்றும் வழங்கி வருகிறது. அறிவுடையார் நாவில் இவை சிறந்த மேற்கோள் வாக்கியங்களாக வழங்குகின்றன. திருக்குறள் போன்றவை, சிறிதேனும் கல்வியறிவுடையவர்க்கே பொருள் விளங்கும் தன்மையுடையவை. ஆனால் ஆத்திசூடி வாக்கியங்களுக்குப் பொருள் தானே விளங்கும். இவை தோன்றிய காலந்தொட்டு தமிழ்மக்களுக்கு நல்லொழுக்கம் போதிக்கும் சட்டநூல் போலமைந்துள்ளன. அகர வரிசையானது சிறு பிள்ளைகள் தொடர்பாய் நினைவில் கொள்ளுவதற்கு உதவுவது.

இந்நூலுக்குப் புதிய உரைகள் பல. பழமையான உரைகள் இரண்டு. ஒன்று இராமானுச கவிராயர் உரை. சென்ற நூற்றாண்டு. இது பின்னும் பழையதோர் உரையைப் பின்பற்றி எழுதியதாகும். கவிராயர் ஆத்திசூடி வரிதோறும் ஒவ்வொரு குறளை மேற்கோள் காட்டிச் செல்கிறார். இதற்கென்றே வரியையும் மாற்றிக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. விரிவஞ்சி இவருடைய மாற்றங்களைச் சொல்லவில்லை. பல இடங்களில் பொருளும் வேறாகச் சொல்கிறார். உரை மிகவும் கடினமானது.

கவிராயர் வு, வூ, வொ, வோ என்ற நான்கெழுத்தும் முதலில் வரவேண்டிய இடங்களில் அம்ம என்ற ஒரு சொல்லை முதலிற் பெய்து, அம்ம வுத்தமனாயிரு, அம்ம வோரஞ் சொல்லேல் என்றமைத்திருப்பது கருதற்பாலது.

மற்றது , இதற்கு காலத்தால் முந்தியதான பழையவுரை; செய்தார் பெயர் தெரியவில்லை; இதுவே கவிராயர் உரைக்கு ஆதாரம். இதனுள் ஏற்ற விடங்களில் மட்டுமே குறள் மேற்கோள் தரப்பட்டுள்ளது. புறநானூறு, நாலடி, கம்பராமாயணம், பகவத்கீதை, மனையலங்காரம் ஆகிய மேற்கோள் கூறுகிறார்.

இவ்வுரை எழுதிய ஏட்டில் ஆத்திசூடிக்கும் 'கொன்றைவேந்தன்' என்றே பெயர் காணப்படுகிறது; ஆத்திசூடி, என்ற காப்புச் செய்யுள் இதில் காணப்படுகிறது. அன்றியும், இவ்வுரை இறுதியில்,

கொன்றைவேய்ந் தோனுரையைக் கொன்றைவேய்ந்தோனருளால்,
இயன்றமிழார் வேந்தர் இருங்குழுவே – ஒன்றும்
அறியா துரைத்தேன, அவையார் உரையாற்
பிறியாத நார்ப்பூப் பிணை

என்ற வெண்பாவும் காணப்படுகின்றது. இதனால் கொனனை வேந்தன் - ஆத்திசூடி என்று தொடங்கும் கடவுள் வணக்கப் பாடல்கள் புதிதாக எடுத்துச் சேர்க்கப்பட்டன, அவைகொண்டு, நூல்களுக்குப் பெயரும் புதிதாக வழங்கப்பட்டன என்று திட்டமாய்த் தெரிகிறது.

சாமிநாத ஐயர் என்பவர் ஆத்திசூடி விருத்தியுரை என்ற விரிவான உரை நூல் எழுதி 1898இல் அச்சிட்டு வெளியிட்டார்.

ஆத்திசூடியைச் சிறப்பிக்கும் நூல்கள் பல எழுந்துள்ளன. தொண்டை நாட்டில் பாகை என்ற ஊரில் கணபதி என்பவர் புதல்வரான புன்னை வனநாதன் என்ற வள்ளலைப் போற்றி, வெண்பா யாப்பில், பாடல் இறுதியில் ஒவ்வோர் ஆத்திசூடி வரியை அமைத்து, பாடலின் முற்பகுதியில் அவ்வரியை விளக்கும் கதையை அமைத்து, இராம பாரதியார் என்பவர் ஆத்திசூடி வெண்பா என்ற ஒரு நூல் செய்தார் ; வெண்பா 109. பின் வரும் பாடல் ஓர் எடுத்துக் காட்டு:

நித்தயத்தைக் கேட்கப்போய் நித்திரை என் றேகுளறிப்
புத்தியற்ற கும்பகர்ணன் பொன்றினன்பார் ; - மத்தமத
குன்றம்போற் புன்னைவனக் கொற்றவா, வாகை மன்னா,
என்றும் - சொற் சோர்வு படேல்.

இந்நூலானது திருக்குறளுக்கு இம்மாதிரி வெண்பா நூல்கள் பல செய்யப் பெற்றிருக்கும் மரபையொத்து எழுந்ததாகும்.

குரு முனி (குறுமுனி?) செய்ததாக அச்சிடப்பட்டு வழங்குகிற ஆத்திசூடி திறவுகோல் என்பது மற்றொரு நூல். இதன் கண் அ தொடங்கி ∴ வரையில் உள்ள 13 வரிகளுக்கான பாடல்களே காணப்படுகின்றன. எண்சீர் ஆசிரிய விருத்தம். பாடல் ஆத்தி சூடியில் உட்பொருளைக் கூறுவதாகச் சொல்கிறது. நடைமிகவும் தாழ்ந்த நடை. பின்வரும் பாடல் எழுத்துக்காட்டு:

அரனென்ற பொருளல்லால் உலகின் கண்ணே
அண்டருக்குத் தான்முனிவர் காணார் சூக்மம் ;
சரமென்றும் பெயர்பெற்று உலகில் தானும்
தன்குள்ளே தானாகி அண்ட மாகிப்
பரமென்ற கீர்த்தியுள்ள சித்தர் யோகி
பரிவாக உச்சரித்தும் நமனை வெல்வார் ;
குருவென்றும் சீடனென்றும் கற்ப மென்றும்
குவலயத்தில் அறஞ்செய்ய விரும்பு மாச்சே

இவையன்றி ஆத்திசூடி புராணம் என்ற வேறொரு நூலும் உள்ளது. ஆத்திசூடியில் கருத்துக்களை அமைத்து ராஜரத்தின முதலியார் எனபவர் ஆத்திசூடி சிந்து என்ற ஒரு நூல் எழுதினார். அது 1878 இல் வெளியாயிற்று.

தமிழ் நெடுங்கணக்கில் மொழிக்கு முதலாய் வரத்தக்க எழுத்துக்களை வைத்துப் பாடல்களை முறையே தொடங்குவது ஒரு பிரபந்த மரபு வருக்கமாலை, வருக்கக்கோவை காண்க. முன்வந்த கலம்பகங்களில், இத்தகைய அமைப்பு ஒரே பாடலில் காணப்படுவதும் உண்டு. பன்னிருஅடி ஆசிரியப் பாடலாய், அடிதோறும் உயிரெழுத்துக்களை முறையாகப் பெய்து பாடுவது இத்தகைய பாட்டு. ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் அப்பாட்டின் அமைப்பைக் கொண்டு இயன்றிருக்கின்றன. ஆத்திசூடி அகர வரிசை பாடல்களின் முதல் எழுத்தை அகர வரிசையில் அமைப்பதே சிறப்பாகும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

சொல்லும் பொருளும்

சு. முத்துலட்சுமி,

ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை,விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு,

முன்னுரை

துமிழ்ச் சொல்லாய்வு தொல்காப்பியம் தொட்டு நிகழ்ந்து வருகிறது. இக்கட்டுரை அது குறித்து விளக்குகிறது.

சொல் - சொற்பொருள் விளக்கம்

ஓர் எழுத்தோ , பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள்தரின் அவை ‘‘சொல்’’ எனப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர், ‘‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பார்’’ – ஒரு சொல் குறிப்பிட்ட ஒரு பொருளை உணர்த்துவது காரணம் பற்றி அமைந்தால் அதனைக் காரணப் பெயர் என்றும், காரணம் புலப்படாத நிலையில் அமைந்திருப்பின் இடுகுறிப்பெயர் என்றும் அழைப்பர்.

ஒரு பொருளுக்கு அமைந்த பெயர் ஒருகாரணம் பற்றியதாக இருக்க, அதனை வேறு ஒரு காரணம் பற்றி அமைந்ததாகக் கருதி ஆய்வோரும் உளர். அவ்வாறான ஆய்வுகள் தவறானவை எனச்சுட்டித் தகுதியான காரணத்தை எடுத்துரைத்துச் சான்றுகாட்டி நிறுவும் தன்மை தமிழறிஞர்களிடம் காணப்படுகின்றது. சொற்கள் எக்காலத்திலும் ஓரே அமைப்பாக இராமல் காலந்தோறும் திரிந்தும் சிதைந்தும், உருமாறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இப்படிப்பட்ட சொற்களைக் கண்டு ஆராய்ந்து அவற்றின் உண்மை நிலையைக் கூறியுள்ளனர் தமிழறிஞர்கள்.

களிப்பு

“களிப்பு” என்று சொல்லுக்கு மகிழ்ச்சி என்றும் சந்தோசம் என்றும் பொருள் உண்டு. இவை பிற்காலத்தில் ஏற்பட்டதாகும். முற்காலத்தில் இழிந்த பொருளில் வழங்கப்பட்டது. **“கள்” அருந்திக் களித்தல் “மது” உண்டு மயங்குதல்** என்னும் பொருளில் **களிப்பு** என்னும் சொல் வழங்கப்பட்டது, களிப்பு என்னும் சொல் ‘‘கள்’’ என்னும் சொல்லிலிருந்து உண்டானது. தான் களித்தான் என்றால் கல்

அருந்தி மயங்கினான் என்பது அந்தக் காலத்துப் பொருள். இக்காலத்தில் களித்தான் என்றால் கள்ளுண்ணாமலே மகிழ்ந்திருந்தான் என்பது பொருள்.

"களித்தானைக் காரணங்காட்டேல் கீழ்நீர்க்
குளித்தானைக் தீத்துரீகு யற்று"

என்னும் குறளில் வந்துள்ள களித்தான் என்னும் சொல் கள்ளுண்டு மயங்குதல் என்ற பொருளில் வந்துள்ளது. பெருங்கதை என்னும் நூலில் கட்குடியன் ஒருவன் செயலைக் காணலாம். அச்செயலைத்

"துறக்கம் கூடினும் துநற்திவன் நீங்கும்
பிறப்போ வேண்டேன் யானெனக் கூறி
ஆர்த்த வாயன் ஊர்க்களி மூர்க்கன்
சேல்வழிக்கீதம் சிதைப்பாடி.....
.....சொல்லா யாயிறி புல்லுவென் யானெனக்
ஐகயலைத் தொகமோர் களிமகன் காண்மின்"

எனச் சுட்டுகிறது, இதில் களி என்னும் சொல் கள்ளுண்டு மகிழ்ந்தவனைக் குறிக்கிறது. இழிந்த பொருள் கொள்ள வேண்டிய இடத்தில் உயர்ந்த பொருள் கொள்வது முறையன்று. அது பண்டைய நூலாசிரியரின் கருத்துக்கு முரண்பட்டதாக முடியும், ஆகவே இச்சொல்லுக்கு இடம் அறிந்து பொருள் கொள்ள வேண்டும், என்று மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கூறியுள்ளமை சாலவும் பொருந்தும்.

எண்ணெய்

எண்ணெய் என்னும் சொல்லை ஊன்றி ஆராய்ந்தால் எள் ு நெய் ஸ்ரீ எண்ணெய் , எள்ளிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட நெய் என்ற பொருள் விளங்குகிறது. அதேபோன்று கடலை எண்ணெய், மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய சொற்றொடர்களை ஆராய்ந்தால் பொருள் தெளிவில்லை.

கடலை எண்ணெய் என்ற சொற்றொடரில் கடலை, எள், நெய் என்று அமைந்துள்ளதைக் காண முடியும். வேர்க்கடலை (அ) நிலக்கடலையிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட நெய்யைக் கடலை நெய் என்று சொல்ல வெண்டும். ஆனால் மக்கள் அவ்வாறு சொல்லாது கடலை எண்ணெய் என்று சொல்லி வருகின்றார்கள் கடலை எண்ணெய் என்ற சொற்றொடரில் கடலையிலிருந்தும் எள்ளிலிருந்தும் பிழிந்தெடுக்கப்பட்ட நெய்யைச் குறிக்கிறது, அதாவது கடலைநெய்யும் எள்நெய்யும் கலந்த நெய் என்று பொருள் குழம்பிடப் பேசுகின்றார்கள், அவ்வாறே தெள்கு (அ) தெங்கம் நெய்யைத் தேங்காய் எண்ணெய் என்றும் மண்நெய்யை மண் எண்ணெய் என்றும் குழப்பிட மக்கள் பேசி வருவதைக் காண்கிறோம். மக்கள் சொல்லையும் அதன் பொருளையும் உணராது பேசி வரும் நிலையைக் கண்ட தமிழறிஞர் (கவிஞர்) தெசிணி என்பவர் தமிழை வளப்படுத்தக் கருதி எண்ணெய் என்ற சொல்லின் பொருள் உணர்த்தி, தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவற்றின் பொருளை மீட்டுருவாக்கம் செய்கிற பொழுது.

“எள்ளி இருந்தே எடுக்கும் நெய்தான்

எண்ணெய் ஆகும் ஆனால், இன்றோ.....

தேங்கி லிருந்து திரட்ன நெய்யைத்

தெங்குநெய் என்று செப்புதல் விடுத்தே

தேங்காயை எள்ளுடன் தவறாய் இணைத்தேய

தேங்காய் எண்ணெய், என்றே நாள்தோறும்

சொல்லி வாங்குகிறோம், பொருள் புரிந்ததா எனில்

இல்லை இல்லை, இந்நிலை நன்றா?

என்ற பாடல் வழி வினாக்கேட்டுள்ளதை அறிய முடிகிறது. எனவே மக்கள் பேசிவரும் சொற்களில் காணலாகும் பிழைகளை ஆய்வறிஞர் சுட்டிக்காட்டி தமிழ் மொழியில் படிந்துள்ள மாசினை நீக்கி புத்தொளி பெறச் செய்ய ஒவ்வொரு தமிழறிஞர்களும் பாடுபடவேண்டும் என்பது இதன்வழி பெறப்படுகிறது.

முடிவுரை

- சொல்லெனில் பொருளுடையது
- ‘‘களிப்பு என்பது ‘‘கள்’’ குடித்தலால் உண்டாகும் மயக்கம் என்னும் சிறப்புப் பொருளிலிருந்து மகிழ்ச்சி என்னும் பொதுப் பொருளுக்கு மாறிவிட்டது. சங்க காலத்தில் இழிவு பொருள் உணர்த்திய இச்சொல், பிற்காலத்தில் உயர்பொருள் உணர்த்தலானது.
- எண்ணெய் என்பது எள்நெய்யைக் குறித்தது, இது ஒரு சிறப்புப் பெயர், பொதுப்பெயரன்று பிற்காலத்தில் இச்சிறப்புப்பெயர் பொதுப் பெயரானது போலும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

புறநூனூற்றில் அறிவு

பிரியா

இளங்கலை கல்வியியல், பூண்டி புதுமை மாதா கல்வியியல் கல்லூரி, சமயபுரம்.

முன்னுரை

அறிவு பெறும் வழிகள் துறைகள் ஏற்பவும் அத்துறைக் கருப்பொருளின் ஆழ அகலத்திற்கு ஏற்பவும் வேறுபடுகின்றன. அதேபோல் பெற்ற அறிவு ஏற்புடையதா இல்லையா, சரியானதா, தவறானதா என்று தீர்மானிக்க பல வழிகள் உள்ளன. அறிவின் வகைக்கு ஏற்ப இவ்வழிகளும் வேறு வேறு எனவே அறிவுத் தொகுதியைப் பொதுவாகக் கருதாமல் சில சிறப்பியல்புகளை அளவுகோலாகக் கொண்டு பகுத்து பார்க்க வேண்டும். இனி, இக்கட்டுரையின் புறநானூறு வழியில் அறிவுத்திறனை ஆய்ந்து அறிந்து செல்லலாம்.

வழங்கும் முறை

பொருளாதாரத்தில் உயரிய நிலையில் உள்ளோர் தம் பெருமைக்கு ஏற்பவும் பெறுவோர் தகுதிக்கு ஏற்பவும் பொருள்களை வழங்கி வந்தனர். இது இயல்பான முறை ஆகும் ஆயினும் தமது கடமைகளை அளவு அறிந்து காத்து செய்தலும் இன்றியமையாததாக இருந்தது இச்செயல் வழங்குவோர்க்கும் அந்நாட்டுக்கும் வழி வழியாக நலம் பயக்கும் என்பதால் இதன்படி சங்ககால அரசாட்சியில் பெரிய செல்வந்தர்கள் பொருள்களை வழங்கி வந்தனர்.

அவ்வாறே நாஞ்சில் வள்ளுவன் என்னும் அரசனை ஔவையாரும் விறலியரும் சென்று பார்க்கின்றனர். அப்பெண்மணி கீரையைப் பறித்துவிட்டாள் அதற்கு உணவு சமைக்க அரிசி வேண்டும் இதை அரசனிடம் கேட்க ஒரு மலையைப் போன்ற பெரிய யானையைப் பரிசாக அளித்தான்.

அன்புடன் வழங்குதலை மறுத்தல் முறையன்று என்பதால் அந்த யானையை ஔவையார் பெற்றுக் கொண்டார். பின்பு திரும்பிய ஔவையார் தம்மை எதிர்ப்பட்டு வந்த புலவர் மக்களை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றார்.

புலவர்களே, நாஞ்சில் மலை அரசன் இருக்கின்றானே அவன் மிகவும் மடமை உடையவன் நாங்கள் கீரையின் மேல் தூவும் பொடிக்காக சிறிது அரிசியை விரும்பினோம். பரிசில் பெற வேண்டிய எங்கள் தகுதிகளை அறியாமல் புரியாமல் பெரிய யானையைக் கொடுத்து விட்டான் கொடைகளிலே, பொருள்கள்

வழங்குவதிலேயே அளவறிந்து முறையறிந்து கொடுக்காமல் அளவுக்கதிகமாகக் கொடுப்பதை உணர்ந்து கூறுகிறார். இதிலிருந்து அரசன் தம் மக்களுக்கு வழங்கி வந்த பொருள்களின் வாயிலாக அறிவுக் கூர்மை தெரிய வருகிறது.

வரிசையறிதல் (தகுதி)

தகுதி வேறுபாடறிந்து செயல் செய்தல் உயர் அறிவின் வளர்ச்சிக்கு உரியது ஆகும். அவ்வறிவு வளர்ச்சிக்கு உயர்ந்த நோக்கங்களை எழுப்பும் பொது நோக்கால் செய்தல் அவ்வளவு பெரிதன்று. வரிசையறிந்து, தகுதியறிந்து, தேவையறிந்து செய்யும் உதவியே மேம்பாடுடையது.

“ஒருதிசை ஒருவனை உள்ளி, நால்திசைப்

பலரும் வருவர், பரிசில் மாக்கள்

வரிசை அறிதலோ அரிதே! பெரிதும்.

ஈதல் எளிதே! மாவண் தோன்றல்!

அது நற்கு அறிந்தனை ஆயின்,

பொது நோக்கு ஒழி மதி புலவர் பாட்டே **(பு.நா 121)**

திருமுடிக்காரிக்கு- கபிலர் பாடியப்பாடல்

“ஈதல் எளிது: வரிசையறிந்து ஈதல் அரிது” எனக் குறிப்பிடுகிறார்.

போருக்குக் காரணம்

நாட்டின் அறிவு விளக்கம் உண்டாகும்படி ஆட்சி செய்யாமை நாட்டில் போர் எழக் காரணமாக அமையும்.

“மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி,

நிலவரை இழிதரும் பல்யாறு..

மாற்று இருவேந்தர் மண் நோக்கினையே **(பு.நா-42)**

மலையிலிருந்து வீழ்கின்ற நீரானது நில எல்லையை கடந்து ஆறுகள் நோக்கி செல்கின்றன. அதேபோல் புலவர்களெல்லாம் உன்னை விரும்பி உன்னை நோக்கி வருகின்றனர். நீயோ அவர்களுக்குத் தகுந்த பரிசில் நல்கும் பொருட்டு உனக்கு மாற்றாராகிய சேர, பாண்டிய அரசர்களின் போர் எதிர்த்து அவர்கள் நிலத்தை நோக்கிச் செல்கின்றாய் என்று கோவூர்க்கிழார் கிள்ளி வளவனை குறிப்பிடுகிறார்.

கல்வியும் செல்வமும்

ஒருவரிடம் இரண்டும் சேர்ந்திருப்பதில்லை. ஆனால் சங்ககால அரசர் வரலாற்றுப் படிமங்களை நோக்கும் போது முரண்பாடாகத் தெரிகிறது. அறிவு நிலை ஓங்கியிருந்ததை கீழ்க்காணும் செய்யுளில் ஆசிரியரே சிறப்புடன் விளக்குகிறார்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும்,

அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்

அறி அறிவு ஆகாச் செறிவினை ஆகி,

களிறு கவுள் அடுத்த

இடைப் புலப் பெருவழிச் சொரியும்,

கடற் பல் தாரத்த நாடு இழவோவே" **(பு.நா. 30)**

இப்பாடல் நலங்கிள்ளி பற்றியது.

சங்ககாலத் தமிழகத்தில் பல துறைகளிலும் அதிகம் பயின்ற கல்வியுடையார் பலர் விளங்கியிருந்தனர். ஞாயிறு செல்லும் வான் வழியையும் அதன் இயக்கத்தையும், அவ்வியக்கம் சூழ்ந்த உலகத்தையும் காற்று இயங்கும் திசையையும் ஓர் அடிப்படையும் இன்றி நிலை பெற்றிருக்கும் ஆகாயத்தையும் அதனதனின் எல்லை அளவும் சென்று நேரில் அளந்து அறிந்தவர்களை போல இவை ஒவ்வொரு நாளும் இவ்வளவு அளவுடையன என்று ஆராய்ந்து திட்டமாகச் சொல்லும் ஆழ்ந்து அகன்ற கலை அறிவு படைத்தோரும் இருந்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை

மேற்கண்ட கட்டுரையின் வாயிலாக பண்டைய தமிழர்களின் அறிவுத்திறன் அதன் மேம்மாடு, அவர்களின் செழிப்பு, ஆய்ந்தறிய முடிந்தது. இதன் மூலமாக சங்க கால மக்களின் வாழ்வியல் குறித்த செய்திகள் ஏராளமாக புறநானூற்றில் பொதிந்து உள்ளன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இடைச் சொற்கள்

ந.ரேவதி

ஆய்வியல் நிறைஞர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),திருச்செங்கோடு.

முன்னுரை

ஒரு தொடரில் பெயருடனும் வினையுடனும் இணைந்து பொருள் மாற்றத்திற்கென வருவது இடைச்சொற்களாகும். தொல்காப்பியர் காலத்திலிருந்து நன்னூலார், காலத்திலும் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கத்தார் காலத்திலும் இடைச்சொற்கள் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளன என்பதனை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

இடைச்சொல் நிற்குமிடம்

இடைச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் இடையிலும் வரும், முன்னும் வரும், பின்னும் வரும். தம்முடைய ஈறு திரிந்தும் வரும். ஒன்றற்குரிய இடத்தில் பிறிது ஒன்று வரும். இவ்வாறு தொல்காப்பியர் சுட்டுகிறார்.

"முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்ஈறு திரிதலும் பிறிது அவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரியவை என்ப" - (தொல். இடை.3)

நன்னூலாரும் இக்கருத்தையே கூறுகிறார்,

"பெயரினும் வினையினும் முன்னும் பின்னும்
ஒன்றும் பலவும் ஒன்றுவ திடைச்சொல்" - (நன்.இடை.1)

இலக்கண விளக்க ஆசிரியரும் இக்கருத்தையே எடுத்துரைக்கிறார்.

"..... தனித்து இயல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும் ஒன்றுவது இடைச்சொல்"

ஒரு தொடரில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைச்சொற்களும் வந்து சேரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இடைச்சொற்களின் வகை

தொல்காப்பியர் இடைச்சொற்களுக்குத் தனி இயல் அமைத்துக் கூறியுள்ளார். நன்னூலாரும் இலக்கண விளக்க ஆசிரியரும் அவ்வாறே தனி இயல் அமைத்துள்ளனர். இடைச்சொற்களைத் தொல்காப்பியர் ஏழு வகையாகக் குறிப்பிட்டுள்ளார்.

"புணரியல் நிலையிடைப்பொருள் நிலைக்குநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக்கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பில் பொருள் செய்குநவும்
ஒப்பில் வழியால் பொருள் செய்குநவும் என்று
அப்பண்பினவே நுவலுங்காலை" - (தொல்.இடை.2)

நன்னூலார் தொல்காப்பியரின் இடைச்சொல் வகையையே கூறி "தத்தம் குறிப்பில் பொருள் செய்குநவும்" என்ற இடைச்சொல்லைத் தத்தம் பொருள், குறிப்பு என இரண்டாகப் பகுத்து எட்டு வகையாகப் பிரிக்கிறார்.

"வேற்றுமை வினைசாரியை ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பு என என்பகுதியின்" - (நன்.இடை.1)

இலக்கண விளக்க ஆசிரியரும் இடைச்சொற்களை ஏழு வகையாகத் தொல்காப்பியர் கூறியது போலவே கூறுகின்றார்.

வேற்றுமை வினைசாரியை ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
இத்திறம் ஏழில் தனித்துஇயல் இன்றிப் - (இல. விள. இடை. 1)

இடையியலில் கூறப்பட்டுள்ள இடைச்சொற்கள்

தொல்காப்பியர் இவ்விடைச் சொற்கள் ஏழினையும் இடையியலில் கூறாமல் தத்தம் குறிப்பில் பொருள் செய்குவன, இசைநிறை, அசைநிலை என்ற மூன்றை மட்டுமே இவ்வியலில் கூறியுள்ளார். நன்னூலாரும், இலக்கண விளக்க ஆசிரியரும் அவ்வாறே கூறியுள்ளனர்.

இடைச்சொற்களின் பொருள்

இடைச்சொற்கள் இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருள் ஏற்கும். இடைச்சொற்களின் பொருளாக வருவனற்றைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறவில்லை. ஆனால் நன்னூலாரும் இலக்கண விளக்க ஆசிரியரும் இடைச்சொல்லுக்கு அமையும் பொருளாக பதினான்கைக் கூறியுள்ளார்.

"தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு

எதிர்மறை எச்சம் வினா விழைவு ஒழியிசை

பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள்" - (நன்.இடை.2)

தத்தம் குறிப்பால் பொருள் செய்குவன

தொல்காப்பியர் தத்தம் குறிப்பால் பொருள் செய்குவனவாகப் பதினேழைக் கூறுகின்றார். அவை மன், தில், கொன், உம், ஏ, ஓ, என, என்று, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஆர் என்பனவாகும். நன்னூலார் பன்னிரண்டாகக் கூறுகின்றனார். கொன், எற்று, மன்ற, தஞ்சம், எல், ஆர் ஆகியவை தொல்காப்பியர் கூறி நன்னூலார் கூறாது விடுத்தது இடைச்சொற்களாகும். இலக்கண விளக்க ஆசிரியர் பதினாறாகக் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் கூறிய இடைச்சொற்களில் இந்நூலார் ஆர், எல், ஆகிய இரண்டைக் கூறவில்லை. மற்றவற்றை அப்படியே கூறியுள்ளார்.

ஆசைநிலைச் சொற்கள்

தொல்காப்பியர் அசைநிலைச் சொற்களை 1) வியங்கோள் அசை, 2) முன்னிலை அசை, 3) உரையசை, 4) பிரினிலையசை, 5) தனியசை, 6) பிற அசைகள் என ஆறு வகையாகப் பகுத்து இருபத்தி மூன்று அசைச் சொற்களைக் கூறியுள்ளார். நன்னூலார், 1) உரையசை, 3) வியங்கோள் அசை, 4) முன்னிலை அசை, 4) எல்லாவிடத்தும் வரும் அசை, 5) பிற அசை என ஐந்தாகப் பகுத்துள்ளார். இலக்கண விளக்கத்தாரும் அவ்வாறே பகுத்துக் கூறியுள்ளார். தொல்காப்பியர் 23 அசைச் சொற்களைக் கூறியுள்ளார். நன்னூலார் 38-ஆகக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் அசைச் சொற்கள்

மா, மியா, இக, மோ, மதி, இகும், சின், அம்ம, ஆங்க, போலும், ஆக, அகல், யா, கா, பிற, பிறக்கு, அரே, போ, மாது, அந்தில், ஆர், குரை, ஏ, என்பனவாகும்.

இசைநிறை

தொல்காப்பியர் ஔ, ஏஎ, ஓஒ ஆகியவற்றை இசைநிறையாகக் கூறியுள்ளார். நன்னூலார் ஒடு, தெய்ய, ஏ ஆகிய மூன்றைக் கூறியுள்ளார். இலக்கண விளக்கத்தார் ஏ, ஓ, ஒடு, தெய்ய என்னும் நான்கைக் கூறியுள்ளார்.

பொருள் வளர்ச்சி பெற்ற இடைச்சொற்கள்

தொல்காப்பிய இடைச்சொல்லினின்று பின் வந்த நன்னூலிலும் இலக்கண விளக்கத்திலும் பொருள் வளர்ச்சிபெற்ற இடைச்சொற்கள் சில உள்ளன.

வ. எண்	இடைச்சொல்	தொல்காப்பியம்	நன்னூல்	இலக்கண விளக்கம்
1	மன்	கழிவு, ஆக்கம், ஒழியிசை	அசைநிலை, ஒழியிசை, கழிவு, மிகுதி, நிலைபேறு	கழிவு, ஆக்கம், ஒழியிசை, அசைநிலை
2	ஏ	தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை	பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை	தேற்றம், வினா, எண், பிரிநிலை, எதிர்மறை, ஈற்றசை
3	ஓ	பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு	ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு	ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிப்பு, அசைநிலை
4	கொல்	ஐயம்	ஐயம், அசைநிலை	ஐயம், அசைநிலை
5	அந்தில், ஆங்கு	அசைநிலை	அசைநிலை, இடம்	அசைநிலை, இடம்
6	அம்ம	உரையசை	உரையசை, ஏவற்பொருள்	உரையசை, கேண்மின்
7	முன்னிலை, அசைச்சொல்	மியா, இக, மோ, மதி, இகும், சின்	மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ	மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ
8	பிற அசைநிலை	யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது	யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று	யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான் என, ஆன், என்ப

என என்று, உம், தில், மற்று, மற்றை ஆகியவை பொருள் மாற்றம் பெறாமல் வந்த இடைச்சொற்கள். இன்றளவும் என, என்று, உம் முதலிய இடைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

"கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்

கிளந்துவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே" - (தொல்.சொல்.296)

என்று புதிய இடைச்சொற்கள் தோன்றினாலும் அவற்றையும், ஏற்றுக் கொள்ளலாம் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

முடிவுரை

தொல்காப்பியர் கூறிய இடைச்சொற்களைக் கூட்டியும், குறைத்தும், விடுத்தும் நன்னூலாரும், இலக்கண விளக்க ஆசிரியரும் கூறியுள்ளனர். பல்வேறு இயல்களிலும் தொல்காப்பியர் தந்துள்ள இடைச்சொல் இலக்கணம் அனைத்தையும் ஒருவழித் தொகுத்தால் அ.ஃது ஏனைய சொல்லிலக்கணங்கட்குச் சிறிதும் குறையுடையதாகாது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இராமானுஜரின் முற்போக்குச் சிந்தனைகள்

முனைவர் சா. பெரியநாயகி

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர்.

தான் பிழைக்க வேண்டும், தன் ஆற்றலைப் பெருக்க வேண்டும், தான் நலம் பெற்றால் போதும் என்ற மனப்பான்மையோடு தான் வேதகாலம் நிலவி வந்தது. இதிலிருந்து முற்றிலும் நேர்மாறானவர் இராமனுஜர் திருக் கோட்டியூர் நிகழ்ச்சி அதற்குத்தலை சிறந்த எடுத்துக்காட்டு. மந்திரத்தின் உட்பொருளை வேறு எவருக்கும் தெரிவிக்காமல் பரம ரகசியமாய் வைத்திருக்க வேண்டும். என்ற குருவின் ஆணையை மீறினால், தனக்குக் கொடிய நரகம் கிட்டும் என்பதை அறிந்திருந்தும், குருஉபதேசித்த மகாமந்திரத்தை, நெஞ்சின் ஆழத்திலிருந்து, தன்னுடைய உயர்வினைப் பறைசாற்றும் விதமாக, மக்களுக்கு உபதேசித்தார். மக்கள் அனைவரும் பரமபதம் அடைவார்கள் என்பதை உணர்ந்து ஜாதி, பேதமின்றி ஆசையுடையோர் அனைவருக்கும் அதைப்பறைசாற்றி, இராமானுஜர் ஒரு சமுதாயப் புரட்சியே செய்தார். உலக மக்கள் அனைவரின் நம்மைக்காகத் தன் நலனைத் தியாகம் செய்த பாங்கினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருக்கோட்டியூர் நிகழ்ச்சி

இராமானுஜர் தமது சீடர்களான முதலியாண்டானையும், கூரத்தாழ்வாரையும் அழைத்துக் கொண்டு திருக்கோட்டியூர் சென்றார். நம்பியின் திருமாளிகை இருக்குமிடம் விசாரித்து அறிந்து அங்கே போய் நம்பிகளைக் கண்டு அடியேனுக்குத் திரு எட்டெழுத்து மற்திரத்தையும் அதில் பொதிந்திருக்கும் அர்த்த விசேடங்களையும் உபதேசத்து அருளுமாறு வேண்டுகிறேன். எனது குருநாதர் பெரியநம்பி என்னை இங்கே அனுப்பினார் என்று கூறினார். திருக்கோட்டியூர் நம்பி இராமானுஜரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஒரு நாள் காத்திருந்துவிட்டு, தம் சீடர்களுடன் இராமானுஜர் திருவரங்கம் திரும்பினார். இதேபோல் பதினெட்டுத்தடவைகள் இராமானுஜர் திருவரங்கத்திற்கும் திருக்கோட்டியூருக்குமிடையே அலைந்தார். எனினும், அவருக்கு உள்ளம் தளரவில்லை. ஊக்கம் குறையவில்லை உற்சாகம் மழுங்கவில்லை. திருக்கோட்டியூர் நம்பியைக் குறை கூறும் எண்ணமே எழவில்லை.

ஒரு மாதம் உண்ணாவிரதம் இருந்துவிட்டு, உபதேசம் பெற வரலாம் என்று நம்பி செய்தி அனுப்பினார். அதன்படி தமது இரு சீடர்களையும் அழைத்துக்கொண்டு இராமானுஜர் திருக்கோட்டியூர் சென்று

அங்குள்ள சௌம்ய நாராயணப்பொருமாள் சந்நிதியில் அமர்ந்து உண்ணா நோன்பை மேற்கொண்டார். அப்படியே தண்ணீர் குடிக்காமல் பதினாறு நாட்கள் கழிந்தன. இராமானுஜரின் உடல்நிலை மோசமாகி மூர்ச்சித்து விழுந்தார். அதன்பின் தண்ணீர் குடிக்க அனுமதி கிடைத்தது. ஒரு மாத உண்ணா நோண்பு முடிவடைந்தது. இனி அவர் தமது தண்டு, பவித்திரத்துடன் தனியாக வந்து உபதேசம் பெறலாம் என்று நம்பி சொல்லி அனுப்பினார்.

இதைக்கேட்ட இராமானுஜர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். தம் சீடர்களுடன் மெல்ல மெல்ல நடந்து சென்று நம்பிகளின் திருவடிகளில் இறைஞ்சி நின்றார். மூவரையும் கண்டநம்பி தண்டு பவித்திரத்துடன் தனியாகத் தானே உம்மை வரச்சொன்னேன், என்று கோபித்தார். தண்டு, பவித்திரத்துடன் தான் வந்துள்ளேன். இவர் முதலியாண்டான், என்னுடைய திரிதண்டம், மற்றவர், கூத்தாழ்வார், இதைக்கேட்ட நம்பி வியப்புற்றார். எனினும் அதை வெளிக்காட்டமல், சரி உங்கள் மூவருக்கும் உபதேசிக்கிறேன் ஆனால், இதை வேறு எவருக்கும் அறிவிக்ககூடாது என்று கண்டிப்புடன் கூறினார். பிறகு திருமங்கை யாழ்வார் அருளிச்செய்த இப்பாசுரத்தை நினைவுபடுத்தி உபதேசிக்கத் தொடங்கினார்.

குலம்தரும், செல்வம்தந்திடும், அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரும் செய்யும் நீள்விசும்பு அருளும்,
அருளொடு பெருநிலம் அளிக்கும்,
வலம்தரும், மற்றும் தந்தடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்,
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

உயர்ந்த மேன்மையைத் தரும். சிறந்த செல்வத்தைக் கொடுக்கும் - துயர்களை எல்லாம் தரைமட்டமாக்கும் திருவீடுதரும். பகவானின் அருளைப்பெற்றுத்தரும். அவனுக்குச் செய்யும் கடமைகளைத் தரும் அவனை நுகர்தற்குரிய வலிமையைக் கொடுக்கும். பெற்ற தாயார் செய்யும் நன்மைகளைக் காட்டிலும் பல நன்மைகளையும் தரும். பலவகை அரிய நன்மைகளைக் கொடுக்கும் நாராயண திருமந்திரத்தை அடியேன் கிடைக்கப் பெற்றேன் என்று ஆழ்வார் கண்ட நாராயணத் திருமந்திரத்தையும், அதில் பொதிந்திருக்கும் உள் அர்த்தங்களையும் விளக்கிக் கூறினார். மனத்தை ஒருமைப்படுத்தி தூய உள்ளத்துடன் இந்த மகா மந்திரத்தை உச்சரிப்பவர்களுக்குப் பரமபதம் சித்திக்கும் என்றார்.

ஒரு குறுகிய வட்டத்திற்குள் முடங்கிக் கிடக்கும் விசிட்டாத்துவைதத் தத்துவ நெறியை, உலகெல்லாம் பரப்ப வேண்டுமென்று ஆளவந்தார் ஆசைப்பட்டார், ஆனால் அவருடைய காலத்தில் அதை அவரால் நிறைவேற்ற முடியவில்லை அவருடைய நிறைவேறாத ஆசைகளில் இதுவும் ஒன்று .இந்த ஆசையை நிறைவேற்றி வைப்பேன் என்று பாகவதர்களின் ஆசைகளை நிறைவேற்றி, ஆளவந்தாரின் ஆசையைப் பூர்த்தி செய்வேன் என்று உறுதி பூண்டார்.

மறுநாள் பெருமாள் கோவிலில் ஏதோ ஒரு திருவிழாவுக்காக மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. பெரும் கூட்டத்தைக் கண்டதும் இராமாஜனுர் ஆனந்தம் கொண்டார். ஆர்வமுடையோர் அனைவருக்கும். ஓம் நமோ நாராயணாய என்ற மாக மந்திரத்தையும் அதன் ரகசிய அர்த்தங்களையும் உபதேசிப்பது என்று முடிவு செய்தார். அதன்படியே, கோவில் கோபுரத்தில் ஏறி அனைத்து மக்களையும் கூவி அழைத்து நாராயண மகா மந்திரத்தை உபதேசம் செய்தார். நீர் உண்டு, சூல் கொண்ட மரங்களும், உயிர்க்குலமும் உய்யும் பொருட்டு, தியாக நோக்குடன், மழையைப் பொழிந்து தம்மை அழித்துக் கொள்வதைப் போலவே குருவின் ஆணையை மீறினால் தான் நரகத்தில் இடர்ப்பட நேரும் என்பதை அறிந்தும், அனைத்து மக்களின் நம்மைக்காக, கருணையும், அன்பும் பொழியச் சித்தமாகிவிட்டார்.

இராமானுஜரின் தியாகச் செயலை கருணைப் பொழிவை, வைணவ ஆசாரியர் பரம்பரையில் இறுதியாக வந்த மணவாள மாமுனிகள் தமது உபதேச ரத்தினமாலையில்,

ஒராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராசர் இன்னருளால் பாருலகில்
ஆசை உடையோர்க் கெல்லாம் ஆரியர்கள் கூறுமென்று
பேசி வரம்பு அறுத்தார் பின்

என்று சிலருக்கே உரியது என்ற வரம்பை அறுத்து, ஆசையுடையோர்க்கு எல்லாம் நாராயண மந்திரம் உரித்தானது என்று பொதுவாக்கி, மக்கள் அனைவரும் உய்யும் வகை செய்தார் இராமானுஜர். அவருடைய கருணைச் செயல் திக்கெட்டும் பரவட்டும்.

தம்முடைய ஆணையை ஒதுக்கிவிட்டுத் தமக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை மீறி, திருமந்திரப் பொருளைச் சகலருக்கும் பறைசாற்றிய இராமானுஜர் மீது கடுங்கோபம் கொண்டார் திருக்கோட்டியூர் நம்பி. அவரை உடனே அழைத்து வரும்படி கட்டளையிட்டார். இராமானுஜர் ஆசானிடம சென்று பணிந்து நின்றார்.

பாரினில் ஒருவர்க்கும் இந்த
உண்மையைப் பகரேன் என்ன
நீர் எனை ஆணையிட்டு நீங்கனீ
அதனைப் பாராது
ஊரவர்க்கு எல்லாம் கூறி
உமக்கு என் பெற்றீர்

என்று குருநாதர் நம்பி கொதிக்கும் கோபத்துடன் வினவினார். ஒருவருக்கும் சொல்லக் கூடாதென்று நியமித்துத் தானே மகாமந்திரத்தை உமக்கு உபதேசித்தோம் அப்படியிருக்க ஒரான் வழியாக வந்த ரகசியத்தை உடைத்து விட்டீரே.. எவருக்கும் கூறுவதில்லை என்று என்னிடம் செய்த சத்தியத்தை மீறி, ஊரவர்க்கெல்லாம் அம்பலப்படுத்தியதால் நீங்கள் என்ன பெற்றீர் என்று கூவினார்.

குருதேவரின் ஆணையை மீறிய நான் பெற்றது நரகம் பொன்றலில் நரகம் பெற்றேன், புனிதனே என்று பதிலளித்தார் இராமானுஜர். அதைக்கேட்ட நம்பி நரகம் கிடைக்கும் என்று அறிந்தும் அப்பிழை ஏன் செய்தீர்? என்று வியந்தார்.

சுவாமி, தங்கள் ஆணையை மீறியதால் அடியேன் ஒருவன்தான் நரகம் அடைவேன். ஆனால் தங்களுடைய மகாந்திரத்தில் பொதிந்துள்ள ரகசிய அர்த்தங்களை, தங்கள் உபதேசத்தை, ஆர்வமுடன் கேட்ட அனைவரும், அந்த மகா மந்திரத்தை நெஞ்சின் ஆழத்திலிருந்து இறைவனை நினைத்த எல்லாரும் பரமபதம் அடைவார்கள் என்று தான் அடியேன் எண்ணம் வேறொன்றுமில்லை என்றார் இராமானுஜர்.

நான் ஒருவனே அன்றோ
நசிப்பது? இத்திரள்கள் எல்லாம்
ஆனவான் பேரின்பத்தை
அருந்துமே அந்தோ
பின் ஒரு நினைவுமில்லை
பேதையேன் நினைந்தது

என்று தன்னுடைய குருவுக்குத் தெளிவுபடுத்தினார். இந்த மறுமொழியைத் கேட்ட திருக்கோட்டியூர் நம்பி அப்படியே பிரமித்து நின்றார். மௌனத்தில் ஆழ்ந்தார். தன்னுடைய குறுகிய நோக்கையும், இராமானுஜரின் பரந்த தியாக உள்ளத்தையும் எண்ணி, பரமசந்தோசத்துடன் அவரைக் கட்டித் தழுவினார். நெஞ்சாரப் புகழ்ந்தார் போற்றினார். உம்மைச் சீடனாகப் பெற நான் என்ன பாக்கியம் செய்தேனோ? என்று உவகையால் உள்ளம் புரித்தார். நன்று நன்று அன்ப! உன்னை நானிலத்து எவரே ஒப்பார்? என்று பாராட்டினர்.

தன்னுயிர் தன்னைக் கொண்டு
தான் பிழைத்திடுவது அன்றி
மன்னுயிர்க்கு இரங்கித் தன்னை
மைந்தனே மாயம் புக்கார்
இந்நிலத்து இல்லை, இல்லை
ஏழு உலகத்தும் இல்லை

என்று சொல்லிச்செல்லி பெருமை கொண்டார். தான் பிழைக்க வேண்டும் தன் ஆத்மா நலம் பெற்றால் போதும் அதற்காக உலகத்தையும தியாகம் செய்து விடலாம் என்பது தான் வேதகாலம் தொட்டு நிலவி வந்துள்ள பெருங்கொள்கையாகும். சாதி, குலம் என்று எத்தகைய வேறுபாடு மின்றித் திருமந்திரம் அனைவருக்கும் பொதுவானது என்று பிரகடனம் செய்த இராமானுஜர் ஒரு சமுதாயப் புரட்சியே ஆகும்.

இராமானுஜர் வழக்கமாக ஏழு வீடுகளில் பிட்சை கொள்வாராம். ஆலய அர்ச்சகர் ஒருவர் வீட்டில் அவர் பிட்சை வாங்கி வந்தார். பிட்சை அன்னம் இடுகையில் அதில் நஞ்சு கலந்து விடும்படி பிரதான அர்ச்சகர்

இந்த அர்ச்சகருக்கு ஆணையிட்டார். அவர் உடனே அதற்கு சம்மதம் தெரிவித்தார். மறுநாள் இவரே அன்னத்தில் நஞ்சு கலந்து, இராமானுஜர் பிட்சைக்குப் போடும்படி தன் மனைவிக்கு ஆணையிட்டார். அர்ச்சகரின் மனைவி அதை ஒப்புக் கொள்ளவில்லை. இந்த மகா பாவத்தை நான் செய்ய மாட்டேன் என்று உறுதியாக மறுத்தாள். அர்ச்சகருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. இந்த நஞ்சு கலந்த அன்னத்தை நான் இராமானுஜரின் பாத்திரத்தில் சாப்பிட்டு மரிப்பேன் உன் மாங்கல்யம் அறுந்து போகும் என்று மிரட்டினான் மனைவிக்கு வேறு வழியில்லை.

இராமானுஜர் பிட்சைக்கு வந்தார். அர்ச்சகர் மனைவி கண்ணீர் சிந்திய வண்ணம் அந்த விச அன்னத்தை இராமானுஜரின் பாத்திரத்தில் போட்டுவிட்டு, கண்ணைக் கசக்கிக் கொண்டே அவருக்குத் தெண்டனிட்டுச் சோகமாய்த் தலைகுனிந்த வண்ணம் வீட்டுக்குள் சென்றாள். அந்தப் பென்மணி அளித்த அன்னத்தில் ஏதோ, சூது இருக்கிறது என்று இராமானுஜர் ஊகித்தார் - எனவே ஆற்றங்கரைக்குச் சென்று, எல்லாச் சாதத்தையும் வீசி ஏறிந்தார். அன்னம் தண்ணீரில் விழுந்த அதே சமயம் தரையிலும் கொஞ்சம் சிந்தியது அந்த சாதத்தைக் கொத்திச் சாப்பிட்ட ஒரு காகம் உடனே செத்து விழுந்தது அவ்வளவு கொடிய விசம்!

இராமானுஜர் மடத்திற்குச் சென்றார் உணவு அருந்தவில்லை தன்னைக் கொல்ல முயன்ற பகைவனை மன்னித்தார். அவன் மனத்தை நல்வழிப்படுத்தும் நோக்குடன் உண்ணாவிரதம் மேற்கொண்டார். பகைவனின் உள்ளத்தை மாற்றும் பொருட்டு இருந்ததை நாம் அறிவோம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இராமானுஜர் பகைவனுக்கு அருள்வாய் என்ற இந்த அறவழியைத் துவக்கிவிட்டார் எனலாம்.

இராமானுஜரைக் கொல்ல நடந்த முயற்சி பற்றிய், செய்தி ஊரெல்லாம் பரவியது. எண்ணற்ற மக்கள் அவரைத்தரிசிக்க வந்து குவிந்தார்கள் தகவல் அறிந்து திருக்கோட்டியூர் நம்பியும் திருவரங்கத்திற்கு விரைந்தார். அவரை வரவேற்க இராமானுஜரும் சீடர்களும் காவேரிக்கரையை அடைந்தார்கள் திருக்கோட்டியூர் நம்பி வந்ததும், வெயில் தீக்கங்கு போல தகிக்கும் மணல் அதில் இராமானுஜர் படுத்துக்கிடக்கிறார் அவரை எடுத்து ஆரத்தழுவிக் கொள்ளாமல் நம்பி இராமானுஜரைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அருகில் நின்றிருந்த முக்கிய சீடர்களில் ஒருவரான கிடாம்பி ஆச்சான், இதுதான் குரு சிச்ய ஒழுங்கு போலும்! என்று கடுகடுத்துக் கொண்டே இராமானுஜரை எடுத்துத்தாங்கிக் கொண்டார்.

உம்மைப் போன்ற ஒருவருக்காகத்தான் நான் காத்திருந்தேன் - இனிமேல் நீர்தான் இராமானுஜரின் மெய் காப்பாளர் இனிமேல் எம்பெருமானார் பிட்சைக்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை நீரே மடத்தில் சமையல் செய்து இராமானுஜருக்குப் பிட்சையாக அன்னம் அளிக்க வேண்டும் என்று திருக்கோட்டியூர் நம்பி நியமனம் செய்தார். தகாத சொற்களைப் பயன்படுத்தியதற்காகத்தன்னை மன்னிக்கும்படி கிடாம்பி ஆச்சான் நம்பியின் திருவடிகளைப் பற்றிக்கொண்டார். நம்பியும் அவரை வாரி எடுத்துத் தழுவிப் புன்னகைப் புரிந்தார்.

தீண்டத்தகாதவர் என்று கருதப்பட்ட பஞ்சமர்களை மகாத்மா காந்தி ஹரிஜன் (வி'ணுவுக்குப்பிரியமானவர்கள்) என்று அழைத்தார். ஆனால் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இராமானுஜர் அவர்களை திருக்குலத்தார் எனக் குறிப்பிட்டார் என்பது கவனிக்கத்தக்கதாகும் எந்த

சாதியைச் சேர்ந்தவர்களுக்கும், எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் வைணவத்தின் கதவுகள் திறந்தே உள்ளன. தமது பண்டைக் குலத்தைச் சேர்ந்தவர்களை, அவர்களுடைய பண்டைக் குலத்தைக் குறிப்பிட்டுப் பேசுவது மகாபாவமாகும் என்றார் இராமானுஜர். இவ்விதம் பழிப்பவர்களுக்கு அடுத்த ஜன்மத்திலோ அல்லது மரணத்திற்குப் பின்னரோ தண்டனை கிடைக்கும் என்பதில்லை.

இந்த ஜன்மத்திலேயே பழித்துக் கூறிய அதே இடத்தில் தண்டனை உடனே கிடைக்கும். எப்படிப்பட்ட தண்டனை என்றால் வைணவ பாகவதரைப் புலையர் என்று பழித்துக் கூறுபவர் அந்தக் கணத்திலேயே புலையராகி விடுகிறார் என இராமானுஜர் உறுதியாக எடுத்துரைத்தார்.

நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோர் அளவில் ஆய்கே அவர்கள் தாம் புலையர் போலும் என்று தொண்டரடிப் பொடி ஆழ்வார் கூறிய வாக்கை அவர் நினைவு படுத்தினார்.

சமயத்தொண்டிலும் இராமானுஜர் ஆர்வம் காட்டினார். சமயப்புரட்சி செய்த இராமானுஜர் ஒப்பற்ற சமூக சீர்திருத்தவாதி. சமய சித்தாந்தங்களை மக்களுக்கு மிக நெருக்கமாகக் கொணர்ந்து அனைவரும் அவற்றை எளிதாகக் கடைப்பிடிக்கப் பாடுப்பட்டவர். ஆண்டவனின் சன்னிதானத்திலும் கர்ப்ப கிரகத்திலும் வடமொழியுடன் சேர்ந்து தமிழ் வேதமாகிய திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும் ஓதுவதற்கு ஏற்பாடு செய்தார். பெண்களுக்கு ஆண்களுக்குச் சரி நிகரான அந்தஸ்து அளித்து, அவர்களையும் சீடர்களாக ஏற்றுக் கொண்ட முதல் சமயத் தலைவர் இராமானுஜரேயாவர்ா. இவ்வாறு பல வகைகளில் புரட்சிகளைச் செய்த மகான் இராமானுஜர் ஒருவரே என்றால் மிகையாகாது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இகும் என்னும் இடைச்சொல்

த. பிரியா

ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.

முன்னுரை

தொல்காப்பியர் இடையியலில் முன்னிலை அசைச் சொற்களைத் தொகுத்துக் கூறுமிடத்து "இகும்" என்பதையும் சேர்த்துக் கூறியுள்ளார்.

"மியாயிக மோமதி இகும் சின் என்னும்

ஆவியன் ஆறு முன்னிலை வனச்சொல்" (தொல் - சொல் 269)

மேலும் தொல்காப்பியர் "இகும்" என்னும் இவ்விடைச் சொல் தன்மை, படர்க்கை ஆகிய இரு இடங்களிலும் வரும் என்று கூறியுள்ளார்.

"அவற்றுள் "இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்

தகுநிலை உடைய என்மனார் புலவர்" (தொல் - சொல் 270)

இக்கட்டுரை பழந்தமிழில் "இகும" வரும் வடிவங்களை ஆராய்ந்து அதன் அமைப்பை விளக்கும் வகையில் அமைகின்றது.

பழந்தமிழில் சுமார் இருபத்து நான்கு இடங்களில் "இகும்" கொண்டு முடியும் வினை முற்றுக்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியரின் கருத்துப்படி இம்முடிவுடைய வினை முற்றுக்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் அமைந்து வரலாம், பழந்தமிழில் தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

தன்மை

தன்மையில் இம்முடிவுடைய வினை முற்றுக்கள் பன்மையில் மட்டுமே அமைந்து இறந்தகாலம், எதிர்காலம் இரண்டையும் காட்டுகின்றன..

இறந்தகாலம்

கண்டிகும் 'கண்டேம்' (நற் 20 .19)

கேட்டிகும் 'கேட்டேம்' (பதிற்று. 52 .12)

பெற்றிகும் 'அடைந்தோம்' (புறம் . 378 .22)

எதிர்காலம்

கண்டிரும் யாமே "காண்போம் யாம்" (ஐங் . 198 .4)

தன்மையில் "இகும்" கொண்டு முடியும் கண்டிரும், பெற்றிகும், கேட்டிகும் என்ற வினை முற்றுக்களை கண்டி – க் - உம், பெற்றி – க் - உம், கேட்டி – க் - உம் எனப் பாகுபாடு செய்யலாம் கண்டி, பெற்று, கேடடி எனபவை முறையே கான் - பெறு – கேள் - என்னும் வினைகயடிகளிலிருந்து தோன்றிய முன்னிலை ஒருமை (ஏவல்) வினைகளாகும் வினையடிகள் முன்னிலையாகச் செயல்பட்டு கால இடைநிலை, பால் - எண் - இடம் காட்டும் விகுதிகளை ஏற்பது போல் மேற்கண்ட முன்னிலை வினைகளும் (கண்டி – பெற்றி – கேட்டி) வினையடிகளாகச் செயல்பட்டு கால இடைநிலை போன்றவற்றை ஷஎற்கின்றன. மேற்காடடிய முன்னிலை வினைகளேயன்றி இன்னும் சில முன்னிலை கால இடைநிலை, பால் - எண் - இடம் காட்டும் விகுதிகள் போன்றவற்றை ஏற்பதைப் பழந்தமிழில் காணலாம்.

காண்டை "காண்" (கலி. 144) காண்டைப்பாய் "பார்ப்பாய்" (கலி. 87 .15)

சேன்றீ "சொல்" (அகம். 46 .16)சென்றீக(நீ) "செல்வாயாக" (அகம். 124 .3)

கேட்டை "கேள்" (கலி. .92 .23) கேட்டைக்க (நீ) "கேட்பாயாக" (கிலப்.18 .49)

வுந்தி "வருவாய் (கலி. 85 .20) வந்தீக (நீ) "வருக" (நற் 241 .12)

வுந்தீ (நீ) வருக (பரி. 20 .70)

முறந்தை மறந்தைக்க "(அவர் மறப்பாராக" (கலித். 27 .10

-க் - இறந்த காலம் காட்டும் போது அதை நக்கனன் (அகம். 22.19), புக்கனர் (நற். 67 .9) போன்ற சான்றுகளில் இறந்த காலம் காட்டும் - க்- என்னும் இடைநிலையுடன் தொடர்பு படுத்தலாம், - க் - எதிர்காலம் காட்டும்போது என்கம் (ஐங். 235 .4) காண்கம் (அகம். 261 .7) போன்ற சான்றுகளில் எதிர்காலம் காட்டும் -க் - என'னும் கால இடைநிலையுடன் தொடர்பு படுத்தலாம்.

தொல்காப்பியர் தன்மைப் பன்மை விகுதிகளைத் தொகுக்கும் போது – கும், -டும், -தும், - நும் என்ற நான்கையும் சேர்த்துக் குறிக்கின்றார்.

அவைதாம்,

"அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்

உம்மொடு வருஉம் கடதற என்னும்

அந்நாற் கிளவியொ டாயென் கிளவியும்ஷ

பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே” (தொல். சொல் . 204)

நச்சினார்க்கினியர் (தொல் - சொல் - 204) மேற்காட்டிய – கும், டும், - தும், -நும் என்றும் விகுதிகள் எதிர்கால அடைநிலைகளும் தன்மைப் பன்மை விகுதியும் சேர்ந்த கூட்டு வடிவங்கள் எனக் கொள்கின்றார்,அவருடைய கருத்துப்படி இவற்றை – க் - உம், - ட், - உம், - த், - உம், - ற், - உம், - என்று பாகுபாடு செய்ய வேண்டும் (- க் - , த், ட் - ற்) எதிர்கால இடை நிலைகளாகும் - உம் - தன்மைப் பன்மை விகுதிகளாகும். எனவே கண்டி – க் - உம், பெற்றி – க் - உம் , கேட்டி – க் - உம் என்னும் தன்மைப் பன்மை வினை முற்றக்களின் இறுதீயிலுள்ள – உம்மையும் மேற்காட்டிய – கும் விகுதியிலுள்ள –உம் மையும் தொடர்பு படுத்தலாம்.

முன்னிலை

“கண்டிரும்” என்னும் வினைச் சொல் மட்டும் ஐங்குறு நூற்றில் முன்னிலை ஒருமையில் எதிர்காலம் காட்டுகின்றது.

“கண்டிரும் .....நீ நோக்கு தி நீ” (ஐங். 264 .3 – 4)

இவ் ஏவல் ஒருமை வினையை கண்டி – க் - உம் எனப்பாகுபாடு செய்து தன்மைப் பன்மையில் வரும் வினைமுற்றுக்களுக்குக் கூறியது போன்றே கண்டி என்ற முன்னிலை ஒருமை வினைச் சொல் மீண்டும் வினையடியாகச் செயல்படுகின்றது எனக் கொள்ளலாம். இவ்வினைச் சொல் எதிர்காலம் மட்டும் உணர்த்துவதால் - க் - எதிர்கால இடைநிலை என்றே கொள்ள வேண்டும்

பழந்தமிழில் - உம் - ம் என்ற இரண்டு விகுதிகளும் பெரும்பாலும் முன்னிலை உணர்வு ஒருமையிலும் உண்ம் (புறம். 178 .5) கொண்ம் (புறம். 152 .29) அருகிய வழக்கில் முன்னிலைப் பன்மையிலும் வரும் (பரி. 14 .9) காணப்படுகின்றன. கண்டி – க் - உம் முன்னிலையின் வரும்போது – உம் மை மேற்காட்டிய விகுதிகள்) உம், - ம்) உடன் ஒப்பிடலாம். எனவே “- உம்” மை முன்னிலை உயர்வு ஒருமை (பழந்தமிழுக்கு முந்திய காலத்தில் - உம் முன்னிலைப் பன்மை விகுதியாகும்) விகுதி கொள்ள வேண்டும்.

முடிவுரை

மேற்காட்டிய விளக்கங்களிலிருந்து கீழிக்கானும் முடிவுகளைத் தொகுக்கலாம். “ இரும்” என்னும் இடைச்சொல்” மூவிட வினைகளிலும் அமைந்து வரும் ஓர் அசைச்சொல் என்று கொள்வதை விடப் பொருள் நிறைந்த மூன்று கூறுகளின் கட்டு வடிவம் எனக் கொள்ளலாம். தொல்காப்பியர் முன்னிலை ஒருமை விகுதிகளாகக் கீழ்க் காண்பனவற்றைத் தொகுத்துக் கூறுகின்றார்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

ஜோதியும் சுடரும்

ப. ராஜசுலோச்சனா

உதவிப் பேராசிரியர் தமிழ் உயராய்வுத்துறை சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி

முன்னுரை

மனிதனுடைய கண்ணுக்குப் புலப்படுகின்ற ஒளி வீசுகின்ற பொருட்கள் எல்லாவற்றிலும் பெரியதாக விளங்குவது சூரியன். இரவிலே தண்ணொளி வீசி அகிலத்தின் இருளைப்போக்கிக் கொண்டிருக்கிறது சந்திரன். அதே போன்று எண்ணிகையில்லா விண்மீன்கள் வானத்தில் மின்னிமின்னி ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன.

இவ்விண்மீன்கள் இரவிலே முழுமையாக இருளைப் போக்காவிட்டாலும் ஓரளவு வழியைக் காட்டும் விளக்கங்களாக மிளிர்ந்தன. இவ்வாறு தாம் கண்ட ஒளியான பொருட்கள் எல்லாவற்றிலும் பெரிய ஒளியாக, பேரொளியாகச் சூரியன் மிளிர்ந்ததைக் கண்ட மனிதன் அதனை உயர்ந்த பெரும்பொருளாகக் கொண்டான். அப்படிப்பட்ட ஒளிபொருந்திய இயற்கையை இறைவனோடு இணைத்து இக்கட்டுரையில் இனி காண்போம்.

ஒளியாய் இறைவன்

இயற்கையாகவே சந்திரனில் ஒளியில்லை என்பதனையும் சூரியனிடமிருந்தே ஒளியைப் பெற்று அதனைத் தண்ணொளியாகச் சந்திரன் வழங்குவதையும் கண்டறிந்தான். சூரியனது வெப்பத்தினாலேயே நீர் ஆவியாகி பின்னர் மழைமுகிலாத் தோன்றியதெனவும் இம்முகிலினாலேயே மழை கிடைக்கின்றது என்பதனையும் தெரிந்து கொண்டான். சூரியனுடைய வெப்பத்தினாலேயே புவனம் அசைந்து காற்று உண்டாவதை உணர்ந்தான். பயிர்கள், மரஞ்செடி, கொடிகள் முளைப்பதற்கும், வளர்வதற்கும் சூரியனது வெளிச்சம் தேவையென்ற அறிவும் அவனிடம் தோன்றியது. இரவு, பகல், மாரி, கோடை, வசந்தம், இலையுதிர் ஆகிய மாற்றங்களுக்கும் சூரியனே காரணம் என்பதனையும் அறிந்து கொண்டான்.

ஆகவே, சூரியனை தாம் கண்கண்ட தெய்வம் என எண்ணினான், ஏற்றினான், போற்றினான். இவ்வாறு சூரியனைத் தமது வழிபாட்டுத் தெய்வமாகக் கொண்ட மனிதக்குழுவினர் 'சௌரம்' என்றும் மதப்பிரிவினராயினர். எல் என்றால் பகல், வெளிச்சம் என்னும் பொருளுடையது. மா என்றால் பெரியது. மா+எல், மாஎல்-மால் என வந்தது. இது பேரொளி என்னும் அர்த்தங் கொண்டது. இந்த மால் வணக்கம் பின்னர் விஷ்ணுவுடன் இணைக்கப்பட்டு, திருமால், விஷ்ணு, ஸ்ரீமத்நாராயணர் ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

ஒரே பரம்பொருளான ஸ்ரீமந்நாராயண மூர்த்தியேயென்று வைஷ்ணவர்களால் கொள்ளப்பட்டது. நாராயணமூர்த்தியின் ஒரு அம்சமே சூரியன் எனவும் கொண்டு சூரிய நாராயணன் என்னும் பெயரும் சூரியனோடு இணைக்கப்பட்டு வழிபடுகின்ற மரபுங் காணப்பட்டது.

சூரியனை சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவத்துடன் தொடர்புபடுத்தியும், சிவனுடைய வலது கண்ணாகவும், இடது கண்ணாக சந்திரனும் நெற்றியிலே பொருந்தியிருக்கும் ஞானக் கண்ணாக அக்கினியும் விளங்குவதாகக் கொண்டு முச்சுடரும் சிவபெருமானது மூன்று கண்களாகக் கொள்ளப்படுகின்ற மரபும் சைவ சமயத்தில் உள்ளது.

மெய்கண்ட தேவர் அவதரித்த திருவெண்காட்டிலேயுள்ள சிவஸ்தலத்தின் வலது பக்கத்திலே சூரிய தீர்த்தமும் இடப்பக்கத்திலே சந்திர தீர்த்தமும் தென்கிழக்கிலே அக்கினி தீர்த்தமுமாக மூன்று தீர்த்தக்கேணிகள் அமைந்துள்ளன. சமயகுரவர் நால்வருமே சிவனைப் பேரொளியெனப் போற்றியுள்ளனர். நான்காம் திருமுறையிலே,

"பேரொளி உருவினானைப் பிரமனும் மாலுங்காணா"

என அப்பர் அடிகள் பாடி மகிழ்வார். இம்மரபின் மூலம் ஒளியையே இறைவனாகக் கொண்டு வழிபட்டு வந்தமையை உணர்கின்றோம்.

பஞ்ச பூதங்களில் ஜோதியானவன்

அதிகமாக உள்ள ஒரு பொருளை சிறிது சிறிதாக எடுக்கின்ற போது குறைவடைந்து சென்று ஈற்றில் ஒன்றுமேயில்லாத நிலைக்கு வந்துவிடுதல் கண்கூடு. ஆனால் இந்தப் பரம்பொருள் கற்பனை கடந்த ஜோதி இருக்கின்றதே அது அள்ள அள்ளக் குறையாதது. அள்ளத் தொடங்குதல் - எடுக்கத் தொடங்கும் முன் எவ்வாறு இருந்ததோ எடுக்கும் போதும் அவ்வாறே இருக்கும். எடுத்தப் பின்பும் அந்த பரம்பொருளில் எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கும். அதுதான் பரமாத்மாவின் இயல்பு. இதனை வேதாந்தமெனக் கருதப்படும் உபநிடதம்,

"G+Hzkj> G+Hzkpjk; G+Hzhj; G+HzKjr;aNj!
பூர்ணஸ்ய பூர்ணமாதாய, பூர்ணமேவா வசிஷ்யதே!"

எனக் கூறுகின்றது. இதன் கருத்து,

இறைவன் முழுமையானவர். இந்த உலகம் முழுமையானது, முழுமையான இறைவனிலிருந்து முழுமையான உலகம் தோன்றியுள்ளது. முழுமையிலிருந்து முழுமையை எடுத்த பின்பும் முழுமையே எஞ்சியுள்ளது என்பதாகும்.

ஆகவே பூரண ஒளிமயமாக விளங்கும் ஜோதிப் பிளம்பிலிருந்தே அதன் சுடர்களான பிரபஞ்சங்களும் எண்ணிறைந்த ஆன்மாக்களும் தோன்றி மிளிர்கின்ற எண்ணிலடங்கா ஆன்மாக்களும் பிரபஞ்சங்களும் பரமாத்மா எனும் ஜோதியிலிருந்து எடுக்கப்பட்ட பின்னரும் ஜோதியிலே எந்தவித குறைபாடும் இல்லாமல் பூரணமாகவே அது தோற்றமளிக்கிறது.

புனிதமான ஜோதி வடிவமான இறைவனிலிருந்து தோன்றியவைகளாதலால் ஆன்மாக்கள் அனைத்தும் தெய்வீகமானவைகள். எனவே மனிதனும் தெய்வீகமானவன். சிவசம்பந்த முடையவன். ஆனால் சிலர் வாழ்விலே பெரும்பகுதியும் தீமைகள் புரிபவர்களாகவே இருக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும்.

இருளை மறைக்கும் ஒளி

கடந்த பிறவிகளிலே செய்த நல்வினை, தீவினைக்கேற்றவாறு பிறவி அமைந்து விடுகிறது. வினைக்கேற்ப பயன் அனுபவிக்க வேண்டும். இப்பிறவியில் செய்யும் வினைகளுக்கு இப்பிறவியிலும் அடுத்து வரும் பிறவிகளிலும் அதற்குரிய பயன்களை அனுபவித்தே ஆக வேண்டும்.

இன்னொன்று எமது கர்மவினை காரணமாக மலபந்தப் பட்டிருப்பதால் ஆன்மா தனது உண்மை விழாவை உணராதிருப்பது. தூசியால் மறைக்கப்பட்ட கண்ணாடியின் முன்நின்று முகம் பார்க்க முடியாது. கண்ணாடி காட்ட மறுக்கவில்லை. தூசிப்படலம் கண்ணாடியை மறைத்து விடுகிறது. அவ்வாறே ஆன்மா தனது சுயவடிவினைக் காட்டத் தயங்கவில்லை. ஆனால் மலமெனும் தூசிபடிந்து காட்சியை மறைக்கிறது. எனவே தூசி துடைக்கப்பட வேண்டியுள்ளது.

அவ்வாறு தூசி துடைக்கப்பட்டால் - களிம்பு அகற்றப்பட்டால் - ஆன்மதரிசனம் கிடைக்கும். ஆண்டவன் திருவடிகிட்டும். அந்தத் திருவடியை அடைவதற்கு பயணிக்கும் யாத்திரிகர்கள் நாம் என்ற உண்மை விளங்கும் அப்பொழுது நாம் தெய்வீகமானவர்கள் என்ற உண்மை விளங்கும். 108 உபநிடதங்களுள் பழைமைவாய்ந்தனவும் மிகவும் முக்கியமானவையெனவும் கருதப்படுகின்ற 14 உபநிடதங்களுள் முண்டக உபநிடதமும் ஒன்று. இது அதர்வண வேதத்தைச் சார்ந்த உபநிடதமாகும். இந்த உபநிடதத்திலே மேற்குறிப்பிட்ட கருத்து தெளிவாக விளக்கப்படுகிறது.

“ததேதத் ஸத்யம் - யதாஸீதீப்தாத் பாவகாத்
விஸ்.ஃபுலிங்கா : ஸஹஸ்ரச : ப்ரபவந்தே ஸரூபா !
ததாக்ஷராத் விவிதா : ஸோம்ய பாவ :
ப்ரஜாயந்தே தத்ர சைவாபி யந்தி!

என்று கூறுகின்றது.

முடிவுரை

இங்ஙனம் கொழுந்துவிட்டு எரிகின்ற நெருப்பிலிருந்து அதே இயல்புடைய ஆயிரக் கணக்கான நெருப்புப் பொறிகள் எவ்வாறு உண்டாகின்றனவோ, அவ்வாறே அழிவற்ற இறைவனிலிருந்து பலவிதமான உயிரினங்கள் உண்டாகின்றன. இங்ஙனம் பலவித உயிரினங்களை உண்டாக்கக் கூடிய இறைவனே ஒளியாய் விளங்குபவன்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தமிழ்த்தாய் சுமந்திருக்கும் அன்பு

முனைவர். மு ராஜகுமார்

உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை , சிவகாமியம்மாள் கலை மற்றும் அறிவியல் சல்லூரி, கிருட்டிணகிரி.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாறு கடற்போன்ற பரப்பை உடையது. காலத்தால் முந்தையதும், கருத்தினில் வளமையையும், கொண்ட தமிழ்த்தாயானவள் சிவபெருமானிடத்து இருந்து தோன்றியளவளாகக் கருதப்படுகிறாள். பழங்காலத்தில் தோன்றிய நம் தாயானவள் எண்ணிலடங்கா பல பொருண்மைகளைக் கருவாகக் கொண்டு நாள்தோறும் புதிய புதிய குழந்தைகளை (சொல்லாடல்களை) ஈன்றெடுத்தாலும், ஆதிகாலத்தில் இருந்தே தன் சீரிய இளமையைத் தன்னகத்தே கொண்டு தனித்துவமிக்கவளாகக் காட்சியளிக்கிறாள். மற்ற மொழிகளில் இல்லாத 'ழ'கரம், அம்மா, அப்பா போன்ற உறவுமுறை குறித்த சொற்களும் நம் தமிழ்த்தாயின் புகழுக்கு மேலும் மெருகூட்டுவனவாக அமைகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் தெய்வ வடிவில் ஒரு தாய் நடமாடுவதை போல, காலந்தோறும் இலக்கிய வடிவம் மாறினாலும் அம்மாற்றத்திற்கு ஏற்ப நம் தமிழ்த்தாயும் தம் வடிவத்தை மாற்றி அக்காலங்களின் பெயரைத் தாங்கியே வலம் வருகிறாள்.

அன்பு – விளக்கம்

தமிழில் உள்ள ஒவ்வொரு சொற்களுமே ஒரு பொருளை குறித்து நிற்கும். பொருளை குறிக்காத சொற்கள் என்று எதனையும் கூற இயலாது. அவ்வாறு பொருளைக் குறிக்காத சொற்கள் சொல்லுக்கான தகுதியையும், மதிப்பையும் பெறுவதில்லை. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"[1] என்ற தொல்காப்பியர் கருத்துப்படி அன்பு என்ற சொல்லுக்கு "தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று, சிவம்"2 என்ற பொருட்களைக் கழகத்தமிழ் அகராதி தருகிறது. அதன்படி சம்மந்தப் பட்டவர்களின் உள்ளத்தில் தோன்றி அவர்களின் உள்ளங்களை ஈர்த்து இணைக்கும் உறவே அன்பு எனலாம்.

தெய்வத்திடம் பக்தன் காட்டும் அன்பு, மொழியின் மீது மொழிப்பற்றாளன் செலுத்தும் அன்பு, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் கொண்ட அன்பு, தோழன் தன் மற்ற தோழர்களிடம் பகிரும்

அன்பு, காதலன் தன் காதலியின் மீது வெளிப்படுத்தும் அன்பு, கணவன் தன் மனைவியிடம் காட்டும் அன்பு, மனிதன் உயர்திணையைத் தவிர்த்து அ∴றிணையிடத்துத் கொள்ளும் அன்பு, அ∴றிணை உயிர்கள் உயர்திணையிடம் வெளிப்படுத்தும் அன்பு, அ∴றிணை அ∴றிணையிடம் செலுத்தும் அன்பு என அன்பு பல்வேறு நிலைகளில் வெளிப்படுகிறது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையீர்

என்றும் உரியர் பிறர்க்கு"3

என்ற அய்யனின் வாய்மொழிக்கேற்ப அன்புடையவர் எந்த ஒரு பொருளையும் தனக்காக கருதாமல் தாம் நேசிப்பவர்க்கே கொடுத்து மகிழ்வர். எத்தகைய சூழலிலும் தன்னலம் கருதாமல் தன்னுடன் பழகுபவரின் நலம் ஒன்றையே கருத்தில் கொண்டு செயல்படும் மனநலம் கொண்டவர். இத்தகைய அன்பு நம் தமிழ்த்தாயிடத்தும் மறைந்திருப்பது நிதர்சனமான மெய்ம்மையாகும்.

சங்கத் தாயிடம் சங்கமித்திருக்கும் அன்பு

தமிழ்த்தாய்க்கு உயிர்மூச்சாகவும், இதயத் துடிப்பாகவும் இருப்பது சங்க இலக்கியங்கள். அவ்விலக்கியங்களில் கூறப்படாத செய்திகளும் இல்லை, குறிப்பிடப்படாத உவமைகளும் இல்லை. இவ்விலக்கியம் மனித நேயம், வீரம், அன்பு, ஆற்றல், கடமை போன்ற எண்ணற்ற பொருண்மைகளைச் சுமந்துள்ளது. அவற்றில் அன்பை அறியும் பொருட்டு 'அகப்பாடல் பிரிவினையும்", குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளை 'அன்பின் ஐந்திணை' என்றும், 'செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே' என்ற வரிகளையும் சான்றுகளாகக் கொள்ளலாம்.

பழந்தமிழர் தங்களது வாழ்க்கையில் அன்பு கொண்டிருந்ததை அதிகமாகவே அக இலக்கியங்களில் காணலாம். தலைவி தலைவனிடத்து வைத்திருந்த பற்றை "நிலத்தை விடப் பரந்தது, கடல் நீரின் ஆழத்தை விட ஆழமானது, வானத்தை விட உயர்ந்தது"4 என வெளிக்காட்டுகிறாள். அக இலக்கியங்களைத் தவிர்த்து புற இலக்கியங்களிலும் வெளிப்படுகின்றன. தகடூரை ஆட்சி செய்த "குறுநில மன்னன் அதியமான். மிக்க போராற்றல் உடையவன், கடையெழு வள்ளல்களில் ஒருவராகவும் போற்றப்படுகிறான். அவனுக்குப் புலவராகத் திகழ்ந்தவர் ஔவையார். நீண்ட நாள் வாழக்கூடியதும், உடல் எளிதில் மூப்பை அடையாமல் காக்கக் கூடியதுமாகிய அரிய வகை கரு நெல்லிக்கனி அவனுக்குக் கிடைத்தது. அதனைத் தான் மட்டும் உண்ணாது ஔவைக்கும் கொடுத்துக் காத்தான்"5.

நெல்லிக்கனியின் பயன் முழுவதையும் தானே அனுபவிக்காமல் ஔவைக்கும் கொடுத்தது, ஔவையின் மீது அவன் கொண்டிருந்த பற்றேயாகும். அதோடு தம்மை வாழ்த்திப் பாடுவதற்குக் காரணமான தமிழன்னையின் மீதும் அவன் கொண்டிருந்த அன்பும், ஔவையார் நீண்ட நாள் வாழ்ந்தால் தாம் நேசிக்கும் தமிழன்னையும் நெடுங்காலம் வளமுடன் வாழுவாள் என்ற பொறுப்புமிக்க அன்புமே காரணமாகிறது எனலாம்.

மனிதன் மனிதர்களிடம் மட்டுமல்லாது, மற்ற உயிர்களிடமும் அன்பு கொண்டு வாழ்ந்திருக்கிறான். எயினன் என்ற மன்னன் வள்ளல் தன்மை உடையவனாகவும், மக்களைக் காக்கும் அரசனாகவும், வீரம்

பொருந்தியவனாகவும் திகழ்ந்தான். ‘‘அவன் பறவையினங்களையும் நேசிக்கும் மனம் பெற்றிருந்தான். தன் ஏழிற்குன்றத்தில் தான் நேசிக்கும் பறவைகளை வளர்த்து, அதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து வந்தான். ஒருநாள் தன் எதிரியான மிஞிலியோடு பாழிப்பறந்தலை என்னுமிடத்தில் போரிடுகையில் எயினன் வாளால் தாக்கப்பட்டு நிலத்தில் வீழ்ந்து விட்டான். அவன் உடலை வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட பறவைகள் வெயிலில் இருந்து காக்கும் பொருட்டு அனைத்துப் பறவைகளும் ஒன்று சேர்ந்து மேலே சுற்றியபடி வட்டமிட்டுக் குடையாக இருந்து காத்தன’’[6].

எயினன் பறவைகளுக்காகத் தனியாக இடம் அமைத்து, பராமரித்து வந்தது அவன் பறவைகளிடம் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துவதாக அமைகிறது. பறவைகள் எயினனின் உடலை வெயில் படாமல் காத்தது எயினனுக்குச் செலுத்திய நன்றிக்கடனாக எண்ணினாலும், எயினனிடம் பறவைகள் வைத்திருந்த ஒப்பற்ற அன்பும் ஒரு காரணமாக அமைவதை நோக்கலாம். சங்ககால மக்கள் மனிதனிடத்தும், மற்ற உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி வாழ்ந்தமை இன்றைய விஞ்ஞான உலகில் வாழும் மனிதனுக்கு வாழ்க்கைப் பாடம் புகட்டும் படியாக அமைந்துள்ளது.

நீதித்தாயின் நிலையான அன்பு

சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவை சங்கமருவிய கால நூல்கள். இவற்றில் நீதி நூல்களும் அடங்குகின்றன. மனித வாழ்க்கைக்கு வேண்டிய அறநெறிகளைக் கூறும் இந்நூல்கள் அவர்களை ஒழுக்கம் நிறைந்தவர்களாக மாற்றி, பண்புடையவர்களாக வாழ வழிவகுக்கின்றன. தருமம், கல்வி, கடமை முதலியவற்றைக் கூறினாலும் உயிர்களுக்கு அன்பின் அவசியத்தையும் எடுத்துரைக்கிறது. தம் உயிருக்கு நிகராக நேசிக்கும் தலைவிக்கு தன்னிடத்தில் ஒரு இடம் வேண்டும் என்பதற்காக ‘‘கண்களில் உள்ள கருமணிகளே நீ போய் விடு, என் தலைவியை அவ்விடத்தில் குடிபுகுத்த வேண்டும்’’7 என தலைவன் கூறுகிறான். மனிதனுக்கு கண் அவசியமான உறுப்பாகும். அக்கண்களில் உள்ள கருமணிகள் வசிக்கும் இடத்தில் தலைவியை வைக்க எண்ணுவது, அவள்மீது கொண்ட எல்லையற்ற அன்பினால் அக்கருமணியைப் போல் பாதுகாக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது.

ஒத்த அன்பினில் மூழ்கிய தலைவனும் தலைவியும் கொண்டிருந்த அன்பு மெச்சும்படியாக அமைகிறது. தலைவன் தலைவியை நோக்கி ‘‘இப்பிறப்பில் பிரியமாட்டோம் என்று கூற, தலைவியானவள் இனிவரும் பிறப்பில் பிரியப் போவதாக நினைத்து அழுகின்றாள்’’8. மேலும் அவளிடத்து ‘‘நினைத்தேன் என்று கூறினேன், நினைப்புக்கு முன் மறப்பு உண்டு அன்றோ? ஏன் மறந்தீர் என கேட்டு என்னிடம் ஊடல் கொண்டாள்.’’9 என்றும் கூறுகின்றாள்.

இப்பிறப்பில் தலைவன் பிரிய மாட்டோம் எனும்போது, அடுத்து வரக்கூடிய பிறவிகளிலும் நாம் பிரியாதிருத்தல் வேண்டும் என்று தலைவி தமது விருப்பத்தைத் தெரிவிப்பது, தலைவனை விட தலைவியானவள் பரந்து விரிந்த, அழியாத அன்பு கொண்டிருக்கும் நிலையை உணரலாம்.

தலைவன் தலைவியை நோக்கி உன்னை நினைத்தேன் என்று கூற, தலைவியோ அப்படியென்றால் அதற்கு முன் மறந்திருந்தாயோ? என்று வினவுகையில் தம் தலைவரானவர் தம்மை இடைவிடாது மனதில் நினைத்து இன்புற வேண்டும் என்ற மிகுதியான எதிர்பார்ப்பு புலப்படுகிறது. ஈண்டு தலைவனை

விட தலைவி சற்று உயர்ந்த அளவில் நேசிப்பதையும், தலைவியின் தனித்துவமிக்க பற்றும் விளங்குகிறது. எத்தனை பிறவியெடுத்தாலும் அவனுடனே வாழ வேண்டும் என தீராத வேட்கை கொண்டவளாக தலைவி காணப்படுகிறாள். அவளின் அன்புக்கு முற்றுப் புள்ளியே விழக்கூடாது என்று எண்ணுவது நினையத் தக்கது.

காப்பியத்தாயின் கண்ணியமான அன்பு

காலந்தோறும் மாறுபட்ட விதத்தில் தமிழ்த் தாயானவள் தோன்றினாலும் அன்பை சுமப்பதில் மாற்றத்தை ஏற்படுத்த வில்லை. அன்பை சுமக்க மறந்ததும் கிடையாது. அ.ஃறிணை உயிர்கள் அ.ஃறிணையிடத்தே காட்டும் நேசமானது மனிதப் பிறவியே விஞ்சும் அளவிற்கும், மனிதனே பொறாமைப் படும் அளவிற்கு உள்ளது.

வேடனின் வலையில் சிக்கிக் கொண்ட ஒரு பெண் மான் தன் உயிரைப் பற்றி கவலை கொள்ளாது, ‘‘தன்னுடைய ஆண் மான் என்னானதோ? தன்னைப் பிரிந்த துயரத்தில் புல் ஏதும் சாப்பிடாலும், தண்ணீர் அருந்தாமலும், தன் பிரிவை ஈடுசெய்ய முடியாமலும் தவிக்கும் நிலையை எண்ணியே வருந்தியது. அதோடு மட்டுமல்லாமல் பிறந்து சில நாட்களே ஆன தன் குழந்தையான குட்டிமானும் புல் மேயத் தெரியாமலும், தண்ணீர் அருந்தத் தெரியாமலும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருக்கும் என வருந்தியது. தன் ஆண்மானையும், குட்டி மானையும் பார்த்து விட்டு, நிலைமையை தெரிவித்து விட்டு வந்து விடுவேன் என நபிகளிடம் கூறி தனக்காகப் பிணை நிற்கும்படி வேண்டியதோடு, மீண்டும் இதே இடத்திற்கு வந்து உங்களை விடுவிப்பேன’’10 என உறுதியளித்தது.

தன் உயிர்போகக் கூடிய தருவாயில் இருந்தாலும், தன் ஆண்மான் தன் பிரிவைத் தாங்காது வருந்தியும், தன் குட்டிமான் என்ன ஆனதோ? என்று கூறுவதெல்லாம் அந்த ஆண்மானிடத்தும், குட்டிமானிடத்தும் கொண்ட இணையற்ற அன்பையே பறைசாற்றுகிறது. அவர்களைப் பார்த்து விட்டு வந்து விடுவேன் என்று உறுதி கூறுவது நபிகளின் மேல் வைத்துள்ள மரியாதையையும், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும், இறக்கும் தருணத்தில் ஒரே ஒருமுறைப் பார்த்துப் பேசி விட்டு வருவேன் என அப்பெண்மான் கூறும்போது நம் உள்ளம் புல்லரிக்கும் படியான நேசத்தையும் வெளிக்காட்டுகிறது எனலாம்.

பக்தித்தாயிடமுள்ள பரவசமான அன்பு

பக்தியோடு தமிழும், தமிழோடு பக்தியும் பின்னிப் பிணைந்து வளர்ந்த கால கட்டத்தில் பல பக்தி இலக்கியங்கள் தோன்றின. மனதில் இறைவனை நினைத்து, உருகி வழிபட்ட அடியார்களின் பக்கிப் பெருக்கைக் கண்டு இறைவனே இறங்கி வந்து அருள் புரிந்த செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. ‘உமையம்மையே வந்து ஞானப்பாலூட்டிய ஞானசம்பந்தர்,’ ‘திருமாலும் நான்முகனும் தேடியும் அறிய முடியாத சிவபெருபெருமான் திருவடியை அப்பருக்குக் காட்டியதும்’, ‘முதலையுண்ட பிள்ளையை மூன்று வருடம் கழித்து உயிர் பிழைக்க வைத்த சுந்தரரின் ஆழமான பக்தி’, ‘மாணிக்கவாசகர் பாட

இறைவனே எழுதி கையெழுத்திட்ட திருக்கோவையார்' போன்ற பல வியக்கும்படியான செய்திகள் இறைவன் மீது கொண்ட இடைவிடாத பற்றினால் நிகழ்ந்தவையே என பக்தி இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது.

முருகப் பெருமானை வணங்கும் வள்ளலார் அவரிடம் கொண்ட பக்தியினால் "வள்ளலாகிய உன்னை நினைத்து வழிபடுபவர்களை தவிர்த்து, தேவர்களே ஆனாலும் அவர்களைக் கனவிலும் மறந்தும் மதிக்க மாட்டேன். நின்னுடைய திருவடியை அன்றி, வேறு தெய்வங்களின பாதத்தை வணங்கப் பிறர் வற்புறுத்தினாலும் அதனை நஞ்செனக் கருதி விலக்குவேன். இவ்வாறு சொல்லுவது அவர்களை இகழ்வதற்கு அல்ல. வெறும் வாய்மொழி மட்டுமன்று, உள்ளத்தில் தோன்றும் உண்மையுணர்வு."**11**என மனமுருகப் பாடுகிறார்.

முருகப் பெருமான் மீது பற்று கொண்டிருந்த வள்ளலார், அவரை மட்டுமல்லாது, அவரை வணங்கும் நல்லோர்களையும் வணங்க நினைப்பது, அப்பக்தர்களையெல்லாம் முருகன் வடிவிலே காட்சியளிக்குமளவிற்கு அவர் மனமுழுக்க அக்கடவுளையே நினைத்து வரழ்ந்திருப்பதைப் பறைசாற்றுகிறது. மேலும் மற்ற தெய்வங்களையும், தேவர்களையும் அவர் விரும்பாது, அவர்களை இகழும் காரணமன்றி எனச் சுட்டும்போது வள்ளலார் பக்தியை கண்டு வியந்த முருகப் பெருமான் தமது அருளால் அவர் உள்ளம் உருகும்படி ஆசி வழங்கியதனால் தாம் பெற்ற உள்ளப் பூரிப்பையும் மனம் திறந்து வெளிக்காட்டுகிறார். முருகப் பெருமான் மீது வள்ளலார் கொண்டிருந்த ஆழமான, உண்மையான, தூய்மையான அன்பு ஒன்றே, அப்பெருமானை விடுத்து வேறு தெய்வத்தை வணங்க மனம் நாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிற்றிலக்கியத் தாயின் சீரிய அன்பு

பரணி, தூது, உலா, அந்தாதி என தொண்ணூற்றாறு வகைகளாக சிற்றிலக்கியங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் பரணிக்கென்று அழியாத தனிச்சிறப்பு எக்காலத்திலும் உண்டு. பரணி இலக்கியம் போர், வீரம் பற்றியே அதிகமாகப் பேசப்பட்டாலும் "கல்லுக்குள்ளும் ஈரமுண்டு" என்பது போல அதிலும் அன்பு ஒளிந்திருக்கிறது.

தன் மனைவியோடு கூடி வாழும் கணவன், போர் நடைபெறும் செய்தியறிந்து, போருக்குச் செல்ல அனுமதியோடு போருக்குப் புறப்பட்டான். அவனை வழியனுப்பி தன் கணவன் எளிதில் வெற்றி பெற்று வீடு திரும்புவான் என்று ஆவலோடு காத்திருந்தாள். நீண்ட நேரமாகியும் தன் கணவன் வீடு வரவில்லை. "போர்க்களத்திலே அம்புகளால் தாக்கப்பட்டு நிலத்தில் வீழாமல் நிற்கும் செய்தியை கேட்டு மனைவி போர்க்களம் நோக்கிச் சென்றாள். தன் கணவனின் உடல் நிலத்தில் வீழ்ந்து நிலமகள் தாங்கும் முன்னமே, தன் மார்பிலே தாங்கி உயிர்விடக் கருதி அவ்வாறே செய்து உயிர்விட்டாள்"**12.**

தன் கணவன் உடலைத் தன் உடலைத் தவிர மண்கூட தீண்டக் கூடாது, தன் கணவன் இல்லாத இவ்வுலகில் வாழவும் கூடாது என எண்ணுவது,தன் அன்புக்குரிய கணவன் இல்லாத இவ்வுலகில் தன் வாழ்க்கையைப் பெயரளவிற்குக் கூட எண்ணிப்பார்க்க முடியவில்லை என்பதைக் காட்டுகிறது. தன் கணவனோடு போர்க்களத்திலே வீரமரணம் அடையும் பெண்ணின் கற்பு நெறியும், அவன் மீது

வைத்துள்ள பேரன்பும் அக்கலிங்கத்துப் பரணியைப் போல என்றும் எண்ணிப் பார்த்து பிரமிக்கும்படி நிலையானதாகும்.

இக்காலத் தாயின் இணையற்ற அன்பு

காலங்கள் பல உருண்டோடினாலும் தனக்குள்ள கடமையை மனதில் கொண்டு, அக்கடமையைப் பொறுப்புணர்வோடு சுமந்திருக்கும் தமிழ்த்தாயின் அன்பானது எண்ணியெண்ணி வியக்கத்தக்கது. இக்கால இலக்கியங்களில் கவிதைக்கென தனியிடமும், தனிச்சிறப்புமுண்டு. இனிய சொல்லாட்சிகளில் அரிய வகையானப் பொருட்களைத் தாங்கியிருக்கும் கவியின்பமாவது ருசித்து ரசிக்கக் கூடியது. கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தோன்றிய புதுக்கவிதை போற்றற்குரியது.

ஒரு மகனானவன் தன் தாயிடத்து வைத்துள்ள அன்பை வெளிக்காட்டும் பொருட்டு,

“ எனக்கொன்னு ஆனதுன்னா
உனக்குவேற பிள்ளையுண்டு
உனக்கு ஒன்னு ஆனதுன்னா
எனக்குவேற தாயிருக்கா? ”13

என்று நெஞ்சுருகப் பாடுகிறார் வைரமுத்து. ஒரு தாய்க்கு பல பிள்ளைகள் இருக்கலாம். ஆனால் அத்துனை குழந்தைகளுக்கும் தாயென்பவள் ஒருவள் மட்டுமே. இத்தகைய நிலையில் தான் நேசிக்கும் தாய்க்கு எந்த சூழலிலும், எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு இடரும் நேர்ந்து விடக்கூடாது என்பதையும், அவளுக்கு ஏதேனும் ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டால் தனக்கு தாய் என்ற உறவு இருக்காது என வருந்துவதையும் அறியலாம். எங்கே தன் தாயானவள் தன்னை விட்டுப் பிரிந்து விடுவாளோ என்ற அச்சமும், புலம்பலையும் நோக்குகையில் தன் தாயிடத்துக் கொண்டுள்ள அன்பானது நெஞ்சத்தை உருக்கும் வண்ணம் அமைவதைக் காணலாம்.

முடிவுரை

அன்பு என்னும் கருவியானது அகிலத்தையே தன் கட்டுக்குள் வைத்துக் கொள்ளும் அளவிற்குச் சக்தி வாய்ந்தது. அன்பால் சாதிக்க இயலாதது என்று எதுவுமில்லை. அத்தகைய அன்பு மனிதனுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இன்றைய நாகரிக, இயந்திர மயமான காலச் சூழலில் மனிதனும் இயந்திரம் போல பரபரப்பாகவே காணப்படுகிறான். அவனுக்கு அன்பின் அவசியத்தையும், அதன் வலிமையையும் உணர்த்துவது தமது கடமையெனக் கருதி தமிழ்த்தாய் அக்கறையுடன் நடைபோடுகிறாள். தமிழ்த் தாயானவள் கடலின் பரப்பிற்கேற்ப இலக்கிய, இலக்கணங்களைப் பெற்றிருப்பது போலவே, கடலளவு அன்பையும் சுமந்து விளங்குகிறாள். கடலளவில் கடுகளவை மட்டும் தன்னடக்கத்துடன் வெளிக்காட்டி, நாணம் பொங்க அவ்வன்பையும் தமிழ்த்தாயே தன் வாய்மொழி வழியாக எடுத்துரைக்கின்றாள்.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், (சொல்) நூ –155

2. கழகத்தமிழ் அகராதி, ப – 67
3. திருக்குறள், கு.எ –72
4. குறுந்தொகை, பா –3
5. புறநானூறு, பா – 91
6. புறநானூறு, பா- 254
7. திருக்குறள் கு.எ –1123
8. திருக்குறள், கு.எ –1315
9. திருக்குறள், கு.எ –1316
10. சீறாப்புராணம், (மானுக்குப் பினை நின்ற படலம்)பா- 2084,2085,2086,2090
11. திருவருட்பா, தெய்வமணிமாலை, பா -4
12. கலிங்கத்துப் பரணி, (களம் பாடியது) பா -484
13. வைரமுத்து, கொஞ்சம் தேனீர் நிறைய வானம், ப -9

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

மொழி முதல் எழுத்துக்கள்

ச. ரேவதி

ஆய்வியல் நிறைஞர்,தமிழ்த்துறை,விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), நாமக்கல் 637 205.

முன்னுரை

தனித்தியங்கும் செம்மொழிகளில் ஒன்றான நம் தமிழ்மொழி தன்னேரிலாச் சொல்வளமும், பொருள்வளமும் கொண்டு அறிஞர் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறு என்றென்றும் புகழ்மணம் பரப்பி வரும் நம் மொழியின் கண் அமைந்து தொல்காப்பியம் உலகோரைப் பெரும் வியப்பிலாழ்த்திப் போற்றச் செய்யும் நல்லமைப்புக் கொண்டது.

உயிரெழுத்துக்கள் மொழிமுதலாகும்

"பன்னீருயிரும் மொழிமுதலாகும்" (தொல் எழுத் : 59)

பன்னிரண்டு உயிர்களும் மொழிக்கு முதலாக வரும் தன்மைக்கொண்டது

(எ.கா)

அன்பு, ஆக்கம், இ.ஃது, ஈர்ப்பு, உலகு, ஊக்கம், எ.ஃகம், ஏகி, ஐந்து, ஒக்கல், ஓங்கல், ஔவை

"உயிர்மெய் அல்லன மொழிமுதலாகா" (தொல். எழுத் - 60)

தனிமெய் முதலில் வருதலில்லை வேற்று மொழிகளில் வடமொழிக் கலப்பால் தனிமெய் மொழி முதலாதல் காண்க ஆயின் தமிழில் அங்ஙனம் வருதல் மரபன்று

(எ.கா).

'அட்டி என்பது வடமொழியில் சொல்லுங்காலத்து 'ச் ஸ சட்டி ஸ்ரீ சட்டி என்றாயிற்று என்பர்.

பன்னீருயிருடன் மொழிமுதலாகும் மெய்கள்

"கதந பம எனும் அவ்வைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே" (தொல் எழுத் . 61)
"பன் னீருயிருங் கசதந பமவய
ஞங ஈரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்"

(நன் . 102)

நன்னுலார் கூற்றுப்படி கசதந பம வய ஞங என்ற பத்து மெய்களும் உயிரெழுத்துக்களோடு சிவணி மொழி முதலாகும் அவற்றின் 'ங, ஞ' என்ற இடையின மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் சேர்ந்து மொழிமுதலாய் வருவதில்லை.

சகரமெய்

தொல்காப்பியம் அ,ஐ,ஔ எனும் மூன்று உயிரொடும் கூடி மொழி முதலாகா என்று கூறுகிறது.

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
ஆ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே"

(எ.கா)

சாக்காடு, சிறிய, சீரிய, சுட்டி, துட்டு , செல், சேல், சொல், சோறு.

இனி மொழியில் அறிஞர்களின் ஆய்வுப்படி நோக்கின் தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்கண் சென்று வழங்கிய சில் சொற்கள் மீண்டும் தமிழ் மொழிக்கண் வந்து வழங்கும் போது மொழிமுதலில் உருமாறி வந்தன.

(எ.கா)

அமணர்	சமணர்
அவை	சபை
அமர்	சமர்

இவைகள் உருமாறி வந்த தமிழ் சொற்கள்.

வகர மெய்

உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கு உயிரொடும் கூடி மொழிமுதலாகாது என்று நன்னூலார் கூறுகிறார்.

யகர மெய்

தொல்காப்பியம் 'ஆகார உயிரொடு கூடி மட்டுமே மொழி முதலாகும்.

'ஆ வோடல்லது 'ய' கரம் முதலாது' (தொல் - 65)
'அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ யம்முதல்' (நன் - 104)

ஆயினும் தொல்காப்பியர் வடசொற்களை ஏற்கும் முறைக்குத் 'தற்பவம், தற்சமம் என்ற இலக்கணம் கூறியமை எண்ணற்குரியது தற்காலத்தில் யோசனை, யோகம், யுக்தி, யமன், மௌவனம் போன்ற சொற்கள் வழக்கிலுள்ளன.

'ஞ' கரமெய் தொல்காப்பியம் ஆ, ஏ, ஓ ஆகிய மூன்று உயிரொடும் கூடி மொழிமுதலாகும்.

ஏனை மெய்கள்

ட, ற, ண, ன, வ, ர, ழ. ள ஆகிய மெய் எழுத்துக்கள் தம் பெயர் சுட்டுகின்ற பொழுது மட்டும் மொழிமுதலாகும்

(எ.கா).

‘ட’ காரம், ‘ற’ கரம், ‘ங’ வ.வும், ல.ஃ.கான்

ட, ற, ண, ன, ர, ல, ழ, ள என்ற எட்டு மெய்களும் உயிரோடு சேர்ந்து மொழி முதலாய் தமிழ்மொழி வழக்கில் ஒரு போதும் வருவதற்கில்லை என்பர்.

தலையிற் பிறக்கும் மூர்த்தாட்சரங்களான ட, ண, ள முதலியன பழைய இந்திய ஐரோப்பிய மொழிகளிலில்லாது பிற்காலத்திலேயே தோன்றினவையாம்.

ரகர மெய்

சங்க இலக்கியத்தில் ‘ர’கர மெய் மொழி முதலாதல் இல்லை 13 ஆம் நூற்றாண்டில் ‘ர்கரம் உயிர்களோடுனைந்து மொழி முதலாக வரப்பெறுகின்றது. இவை வடமொழிச் சொற்களாகவே அமைகின்றன.

(எ.கா)

ரகு - கம்ப : 1.708 - 3

ரத்தம் - கம்ப 6.921 - 3

லகர மெய்

வேற்றுமொழிச் சொற்கள் தமிழில் வழங்கும் போதே ‘ல’கரம் மொழி முதலாக வரப்பெறுகின்றது இதன் முன் ‘இ’ கரத்தினை ஒலித்து – எழுதி மரபு காப்போரும் உண்டு.

(எ.கா). லக்கம், லட்சுமணன், லாடம், லொடு.

ள, ழ இவ்வொலியன்களுக்குப் பதிலாக ‘ல’ கரமே அவ்வேற்று மொழிச் சொற்களில் புகுத்தப்படுதலிலும் சில வேற்று மொழிகளில் இச்சிறப்பு இடையெழுத்துக்கள் இல்லாததாலும் இவை மொழி முதலாக்கப்படவில்லை.

ணகரம் மொழி முதலில் வருதலில்லை உயிர்களிடையே வரும்போது தட்டையாலி என்றாகிறது.

னகரம் இதுவும் மொழிமுதலாகாது ‘ந’கரம் மாற்றொலி ஆனதால் அதுவே வரப்பெறுதல் உண்டு.

‘ற’கர மெய் சிலவிடங்களில் மொழிமுதலாக்கப்படுகிறது.

(எ.கா). றூட் , றீடர்

சார்பெழுத்து

சார்பெழுத்தான ஆய்தமும் மொழி முதலாக்கப்படுகின்றது **“புருே கஜபுர்வு”** என்பதனை ‘என் ஃபைட் என்று எழுதுகின்றனர்.

முடிவுரை

நமது தொண்மை இலக்கண நூற்கள் தமிழ்ச்சொற்கள் இல்லை என்று நீக்கிய சொற்களும், தற்காலத்தில் வழங்கும் வேற்று மொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களல்ல என்பது தெளிவு தொல்காப்பியம் சுட்டிச்சென்ற ‘தற்பவம்’, தற்சமம் என்ற விதியை மேற்கொள்வது மொழியின் அமைதியைப் பாதுகாக்கும் என்றே கூறலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இராமானுச நூற்றந்தாதியில் ஆழ்வார்களின் பெயர்கள்

ம. சின்னதுரை

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி திருச்சி -5.

முன்னுரை

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலைப் போற்றி ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்விய பிரபந்தம். இதில் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் மொத்தம் 3892. இதை முன்னோர் நாலாயிரம் என்றே வழங்கி வந்தனர். பின் இராமானுசர் காலத்தில் திருவரங்கத்தமுதனார் இராமானுசரைக் குறித்து நூற்றெட்டுப் பாடல்களை அந்தாதியாகப் பாடினார். இதையும் திவ்விய பிரபந்தத்தில் சேர்த்து வழக்காக மட்டும் அல்லாது எண்ணிக்கையிலும் நாலாயிரம் எனக் கணக்கிட்டனர் முன்னோர். எனவே இராமானுச நூற்றந்தாதியும், திவ்விய பிரபந்தத்தில் சேர்ந்தது. இதில் இராமானுசன் என்ற பெயர் 108 பாடல்களிலும் அமையுமாறு திருவரங்கத்தமுதனார் இயற்றியிருப்பது சிறப்புக்குரியதாகும். இப்பாடல்களில் ஆழ்வார்கள் பெயர்களும் இடம்பெற்றிருப்பது மற்றொரு சிறப்பு. இவ்வந்தாதியில் ஆழ்வார்களின் பெயர்கள் அமைவதைப் பற்றியும் அவை எவ்வகையில் அமைகின்றது என்பதையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூல் வரலாறு

திருவரங்கத்தமுதனார் திருவரங்கம் பெரிய கோயிலின் நிர்வாகத்தை மேற்கொண்டு பெரிய கோயில் நம்பி என்ற பெயரோடு விளங்கியவர். இராமானுசர் இவரை கூரத்தாழ்வார் மூலம் நல்வழிப்படுத்தி கூரத்தாழ்வாரின் சீடராக மாற்றினார். எனவே தன் குருவிற்கும் குருவான இராமானுசர் பற்றி பெரிய கோயில் நம்பி நூல் செய்ய விருப்பங்கொண்டார். இருமுறை நூல் செய்து அதை இராமானுசர் திருமுன்பு வைக்க அதை அவர் புறக்கணித்தார். மேலும் "நீர் எம்மைப்பாட நினைத்தால் உம் ஆசிரியரான கூரத்தாழ்வான், எம் ஆசிரியரான ஆளவந்தார், ஆழ்வார்கள், எம்பெருமான் உகந்து அருளிய திருப்பதிகள் ஆகியவற்றைப் பாடவேண்டும்" எனக் கூறினார். பின்னர் அவ்வாறே பெரியகோயில் நம்பியும் நூல் செய்து அதற்கு இராமானுச நூற்றந்தாதி என்று பெயர் சூட்டினார். இதன் சிறப்பை உடையவர் பாராட்டி நூலில் பெரியகோயில் நம்பியின் சொற்கள் அமுதமாக இருந்தது பற்றி அவருக்கு திருவரங்கத்து அமுதனார் என்று திருநாமம் சாற்றியருளினார். இந்நூல் பிரபந்ந காயத்திரி என்றும் வழங்கப்படுகிறது.

நூலில் ஆழ்வார்கள் இடம் பெறுதல்

இராமானுசர் ஆழ்வார்களின் புகழைக் கூற வேண்டும் என்று கூறியதற்கேற்ப அமுதனார் ஆழ்வார்களைப் போற்றியும் அவ்வாழ்வார்களையும் அவர்கள் பாடிய பாடல்களையும் தன் உள்ளத்தே பதித்திருப்பவர் இராமானுசர் என்ற பொருள் தோன்ற நூலைச் செய்துள்ளார்.இவ்வந்தாதி நூலில் ஆழ்வார்கள் சிலரின் பெயர்கள் வெளிப்படையாகவும் அடைமொழிகளாகவும் அவர்கள் செய்த தொண்டுகள், செயல்கள் மூலமாகவும் இடம்பெற்றுள்ளன.

பெயர் வெளிப்படையாகத் தோன்றுதல்

பொய்கை ஆழ்வாரின் பெயர் அவர் பாடிய பாசுரத்தின் விளக்கத்தை குறிப்பாக புலப்படுத்தி வந்துள்ளது. பொய்கை ஆழ்வார் வையத்தை அகலாகவும், கடலை நெய்யாகவும் கதிரவனை விளக்காகவும் உருவகித்துப் பாடியுள்ளார். இதனை,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக [1]

என்ற அவரின் பாடல் உணர்த்துகிறது. இவ்வாறு அவர் புற இருளை நீக்கப்பாடியதையும் அவர் பெயர் இடம் பெறுவதையும்

வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் [2]

என்ற அடியால் அறியலாம்.

அதே போல் பூதத்தாழ்வார் பெயரும் இடம் பெறுகிறது. பூதத்தாழ்வார் அன்பை அகலாக்கி ஆர்வத்தை நெய்யாக்கி சிந்தையை திரியாக்கி ஞானத்தால் விளக்கேற்றியவர். இதனை,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா- நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்த நான் [3]

என்ற பாடலால் தெளியலாம். இவ்வாறு ஆழ்வார் அக இருளை நீக்கப்பாடியதும் அதோடு அவர் பெயரும் இடம் பெறுவதை,

இறைவனைக் காணும் இதயத்திருள் கெட ஞானமென்னும்
நிறைவிளக் கேற்றிய பூதத்திருவடித்தாள்கள் [4]

என்ற அடிகளால் அறிய முடிகிறது. மேலும் நூற்றந்தாதியில் திருப்பாணாழ்வார் பெயர் இடம் பெறுவதை

சீரியநான்மறைச் செம்பொருள் செந்தமிழா லளித்த
பாரியலும் புகழ்ப்பாண் பெருமாள் [5]

என்ற அடிகளாலும், திருமழிசை ஆழ்வார் பெயர் இடம் பெறுவதை,

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக் இறைவன் [6]

என்ற அடியாலும் அறியமுடிகிறது.

திருமங்கையாழ்வாரின் இயற்பெயர் நீலன் என்பதாகும். இப்பெயர் நூற்றந்தாதியில் அப்படியே வந்துள்ளது. இதனை,

தனியானையைத் தண்தமிழ் செய்தநீலன் தனக்கு [7]

என்ற அடி உணர்த்துகிறது.

அடைமொழிகளால் ஆழ்வார்கள் பெயர் குறிக்கப்படுதல்

ஆழ்வார்களில் மூன்று ஆழ்வார்களின் பெயர்கள் அடைமொழியால் குறிப்பிடப்பட்டுள்ளன. பேயாழ்வாரின் பெயர் தமிழ்த்தலைவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொய்கையார் பூதத்தார் ஆகிய இருவரும் ஏற்றிய தீபத்தின் ஒளியில் திருமாலைக் கண்ட பேயாழ்வாரை

மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள்
தன்னொடு மாயனைக் கண்டமைக் காட்டும் தமிழ்த்தலைவன் [8]

என்ற அடிகளால் நூற்றந்தாதி கூறியிருப்பது அறியற்பாலது. நம்மாழ்வாரின் பெயர் மாறன் என்ற அடைமொழியால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறனடி பணிந்துய்ந்தவன் [9]

என்ற அடிகள் மெய்ப்பிக்கின்றன. மேலும் இவரின் பெயர் பலமுறை நூலில் பயின்று வந்துள்ளது.

மேலும் குலசேகர ஆழ்வார் பெயர் கொல்லிகாவலன் என்ற அடைமொழி மூலம் இடம் பெற்றுள்ளது. இதனை,

கொதிக்கத் தவஞ்செயுங் கொள்கையற்றேன் கொல்லிகாவலன் சொல் [10]

என்ற அடியால் அறியலாம்.

குலசேகர ஆழ்வாரே தம் பதிகங்களில் கொல்லிகாவலன் எனத்தம்மை குறித்திருப்பதை,

கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன் [11]

என்ற அடி உணர்த்துகிறது.

ஆழ்வார்களின் செயலாலும் தொண்டாலும் பெயர் இடம் பெறுதல் நந்தவனம் அமைத்தும், திருத்துழாய் மாலைதொடுத்தும் பாமாலைகளாலும் இறைவனுக்குத் தொண்டு செய்த தொண்டரடிப் பொடியாழ்வாரின் பெயர் அவர் செய்த அருட்தொண்டை புலப்படுத்தி குறிப்பாக அந்தாதியில் இடம் பெறுகிறது. இதனை,

செய்யும் பசுந்துளவத் தொழில்மாலையும் செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ் மாலையும் பேராத சீரரங்கத்து
ஐயன் கழற்கணியும் பரன் [12]

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருமாலைப் பாசுரங்களின் இறுதியில் தம்மைக் குறிப்பிடும்போது,

துளவத் தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் [13]

என்று குறிப்பிடுவது இங்குக் கருதற் பாலது.

பெரியாழ்வார் பற்றிக் கூறும் நூற்றந்தாதி அவர் இறைவனுக்கே திருப்பல்லாண்டு பாடி காப்பிட்டதைக் கூறுகிறது. எனவே அவர் பாடிய செயலால் அவர் பெயரைக் குறிப்பாக உணரமுடிகிறது. இதனை,

பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள் [14]

என்ற அடியால் அறியலாம்.

ஆண்டாள் தான் சூடிய மாலையை இறைவனுக்குச் சூட்டியவர். எனவே அவர் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று அழைக்கப்படுகிறார். இச்செயலைக் குறித்து ஆண்டாள் பெயர் அந்தாதியில் இடம்பெற்றுள்ளது. இதனை,

சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் [15]

என்ற அடி உணர்த்துகிறது.

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரையே தெய்வமாக கருதிப் போற்றியவர். அவர் இவ்வாறு போற்றியதை,

எய்தற்கரிய மறைகளை ஆயிரமின் தமிழாற்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை சிந்தையுள்ளே
பெய்தற் கிசையும் பெரியவர் [16]

என்ற அடிகள் மூலம் அறியலாம். மேலும் மதுரகவியாழ்வாரின்

அன்னையா யத்தனாய் என்னை யாண்டிடும்
தன்மையான் சடகோபனென் நம்பியே [17]

என்ற வாக்கும் இதனை மெய்பிக்கிறது.

முடிவுரை

இவ்வாறு பன்னிரு ஆழ்வார்களின் பெயர்கள் வெளிப்படையாகவும் அடைமொழியாகவும் ஆழ்வார்தம் தொண்டுகளின் மூலமாகவும் இராமானுச நூற்றந்தாதியில் இடம்பெறுகிறது. இத்தகைய ஆழ்வார்களை மனதில் இருத்தும் இராமானுசன் என உடையவர் பெயரும் இடம் பெற்றுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. பொய்கையாழ்வார், முதல்திருவந்தாதி, பா – 1
2. இராமானுச நூற்றந்தாதி பா – 8
3. பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி பா – 1
4. இராமானுச நூற்றந்தாதி, பா – 9
5. மேலது, பா – 11
6. மேலது, பா – 12

7. மேலது, பா – 17
8. மேலது, பா – 10
9. மேலது, பா – 1
10. மேலது, பா – 14
11. குலசேகர ஆழ்வார், பெருமாள் திருமொழி, 2ஆந்திருமொழி, பா – 10
12. இராமானுச நூற்றந்தாதி, பா – 13
13. தொண்டரடிப் பொடியாழ்வார், திருமாலை, பா – 45
14. இராமானுச நூற்றந்தாதி, பா – 15
15. மேலது, பா – 16
16. மேலது, பா – 18
17. மதுரகவியாழ்வார், கண்ணிநுண் சிறுத்தாம்பு, பா – 4

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

உரிச்சொல்லியல்

ந. சீதாதேவி,

ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை,

விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.

முன்னுரை

இலக்கண நோக்கில் அமைந்த நால் வகைச் சொற்களுள் ஒன்று உரிச்சொல். இது பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும். இதன் பொதுவிலக்கணம் தன்மை வகை உள்ளிட்டவவைகளைப் பேசுவது உரியியல் தமிழில் இவ்வியலிலிருந்துதான் நிகண்டு வளர்ச்சி பெற்றது எனலாம். தொல்காப்பியம் முதல் நேமிநாதம் வரையிலான சொல்லிலக்கண நூல்களில் உரிச்சொற்குரிய இடம் பற்றியும் அதன் ஏற்ற இறக்கம் பற்றியும் அதற்கான காரணத்தை ஆராயவும் முயற்சி செய்கிறது.

உரிச்சொல்

தனக்கெனத் தனிப்பொருளைக்கொண்டு பெயரோடும் வினையோடும் வந்து, ஒருசொற் பல பொருளையும் பல சொல் ஒரு பொருளையும் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்டு உரிச்சொற்கள் வரும்.

உரியியலின் வகைப்பாடு

உரிச்சொல்லைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் அவை.

- குறிப்பு பற்றி வருவன : ஒரு சொல் ஒரு பொருட்குரியது, ஒரு சொல் பல பொருட்குரியது, பல சொல் பல பொருட்குரியது.
- பண்பு பற்றி வருவன.
- இசை பற்றி வருவன.

உரிச்சொற்பொருள்

குறிப்பு, பண்பு, இசை பற்றி வருவன உரிச்சொல் என்று தொல்காப்பிய வழிவந்தவர்களும், செய்யுளுக்கு உரியது உரிச்சொல் என்று வேரு ஒரு சாராரும், உரிச்சொல்லின் பொருள் குறித்து இடர்ப்பாடு அடைய வழிகோலுகின்றனர். ஆனாலும் தொல்காப்பிய மரபின்படி உரிச்சொல்லுக்குப் பொருள் கொள்ள முடிகிறது.

தொல்காப்பியத்தில் உரிச்சொற்கள்

தொல்காப்பிய உரியியலில் 120 உரிச்சொற்களையும் அவற்றின் பொருட்களையும் பட்டியலிடப்பட்டுள்ளன.இவ் உரிச்சொல் மரபு தொல்காப்பியருக்கு முன்பிருந்தே இருந்துள்ளது. தொல்காப்பிய உரியியலிருந்து உதாரணத்துக்குச் சில உரிச்சொற்களை நோக்குவோம்.

குறிப்பு – குறிப்பால் உணரக்குடிய உரிச்சொல் குறிப்பு உரிச்சொல் ஆகும்.

அ) ஒரு சொல் ஒரு பொருளுக்குரியது பயின்று வந்த சொல்லானது தனக்குரிய ஒரே பொருளைத்தான் எங்கும் கொண்டிருக்கும்

(எ.கா) புரை – உயர்வு, மல்லல் - வளன், மாதர் - காதல் தெவ்வு – பகை, இரங்கல் - கழிவு, உசா – சூழ்ச்சி.

ஆ) ஒரு சொல் பல பொருட்குரியது : பயின்று வந்த சொல் பல்வேறிடங்களில் பயிலும் போது பயிலும் இடங்களிளெல்லாம் வெவ்வேறு பொருளைத்தரும், அவ்வகை உரிச்சொற்களில் சில

ஏற்றம் - துணிவு, நினைவு, தா – வலி, வருத்தம். மத – மடன், வலி, மிகுதி, வனப்பு. கடி - 1. வரைவு, 2. கூர்மை, 3. காப்பு, 4. புதுமை, 5. விரைவு, 6. விளக்கம், 7. மிகுதி, 8. சிறப்பு, 9. அச்சம், 10 ஐயம், 11. முன்தேற்று.

பலசொல் ஒரு பொருட்குரிய

பலவிடங்களில் பயிலும் பல சொற்கள் ஒரே பொருளைத் தருவது ஆகும்.

(எ.கா)

உறு, தவ, நனி – மிகுதி: செல்லல், இன்னல், இன்னாமை, கெடவலர், பன்னை – விளையாட்டு, நம்பு, மேவு – நசை,

பண்பு

ஐம்பொறிகளால் உணரப்படுவது பண்பு ஆகும். இதிலும் முப்பிரிவில் உரிச்சொற்களைப் பாகுபடுத்தி அமைக்கலாம் ஒரு சொல் ஒரு பொருட்குரியது. பகுப்பு – நிறம், சாயல் - மென்மை, வெம்மை ஃ வேண்டல், வாள் - ஒளி, கடி – கரிப்பு,

ஒரு சொல் பல பொருட்குரியது :- தட – பெருமை, கோட்டம், கய – பெருமை, மேன்மை, செழுமை – வளன் , கொழுப்பு,

பலசொல் ஒரு பொருட்குரியன :- குரு, கெழு – நிறம் , தட, கய, நுனி – பெருமை, கருப்பு, சிவப்பு – நிறம்,

இசை

இசை பற்றி வரும் உரிச்சொற்கள்

ஒரு சொல் ஒரு பொருட்குரியன :- இசைப்பு - இசை.

ஒரு சொல் பல பொருட்குரியதைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை

பல சொல் ஒரு பொருட்குரியது :-

1. கம்பலை, சும்மை, கலி, அழுங்கல், அரவம்,

2. துவைத்தல், சிதைத்தல், இயம்பல், இராகங்கள் - இசைத்தல்.

நன்னூலின் உரிச்சொற்கள்

நன்னூல் உரியியலின் மொத்தம் 45 உரிச்சொற்கள் பொருள்களின் எண்ணிக்கை மொத்தம் 116, ஆனால் நன்னூலில் நான்கு – மிகுதி, கடி, சொல், ஒளி, பொருட்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. கடி எனும் ஒரு சொல்லின் எண்ணிக்கையில் பல பொருள் வேறுபாடுகள் உண்டு தொல்காப்பியம் கடி எனும் உரிச்சொல்லிற்கு 12 பொருள்கள் உறு, தவ, நனி என்பன மிகுதிப் பொருளன என்று தொல்காப்பியம் கூற அவற்றோடு நன்னூல் சால, கூர், கழி ஆகியவற்றைச் சேர்த்துக் கூறுகிறது பொருளுக்கான சொற்களில் சால, கூர், கழி, ஆகியவற்றைச் சேர்த்துக் கூறுகிறது. மேலும் நன்னூலில் சொல், ஓசை பற்றிய பொருள்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

நேமிநாதத்தில் உரிச்சொற்கள்

கி.பி 12 – ஆம் நூற்றாண்டில் குணவீர பாண்டியரால் இயற்றப்பட்ட நேமிநாதத்துள் கூறப்பட்டுள்ள மொத்த உரிச்சொற்கள் 29 ஆகும். தொல்காப்பியத்தைப் பின்பற்றியவை 23 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டவை 6 ஆகும். நேமிநாதத்தில் கூறப்பட்டுள்ள புதிய உரிச்சொற்கள்

ஆர்ப்பு – அரவம், பொன்மை – நிறம், நொடை – விலை, கொம்மை, இளமை, குரை – ஒலி, எல் - விளக்கம்.

நேமிநாதமும் நன்னூலும்

ஒரே நூற்றாண்டைச் சேர்ந்த இவ்விரு நூல்களிலும் கடி என்னும் பொருளுக்குள்ள உரிச்சொற்களின் எண்ணிக்கையில் வேறுபாடு உண்டு.

இலக்கண விளக்கம்

கி.பி 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்ட ஐந்திலக்கண நூல் இலக்கண விளக்கம் . இதில் கூறப்பட்டுள்ள 49 உரிச்சொற்களும் தொல்காப்பியரைப் பின்பற்றிக் கூறியவை, புதியன கூறவில்லை.

முத்து வீரியம்

இந்நூல் முத்துவீர உபாத்தியாரால் கி. பி 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதில் கூறப்பட்டுள்ள உரிச்சொற்கள் மொத்தம் 52 புதியவை 10 உரிச்சொற்கள் ஏனைய 42 உரிச்சொற்களும் தொல்காப்பியருடையது, சொல் என்னும் பொருளுக்கும் 10 உரிச்சொற்கள் நன்னூலார் கூறியுள்ளவற்றிலிருந்து எடுத்தாளப்பட்டவை அவை 1. இயம்பல், 2. நுவற்றி, 3. இசை, 4. கூத்து, 5. விளம்பு, 6.அறை, 7. பாட்டு, 8. கரை, 9. நொடி, 10. புகர்ச்சி

உரிச்சொல்லியல் குறித்து அட்டவணை

இலக்கண நூல்	நூற்றாண்டு	மொத்த உரிச்சொற்கள்	தொல்காப்பிய உரிச்சொற்கள்	புதியவை
தொல்காப்பியம்	கி.மு 3 ஆம் நூற்றாண்டு	120	120	-

நேமிநாதம்	கி.பி 12 ஆம் நூற்றாண்டு	29	23	6
நன்னூல்	கி.பி 12 ஆம் நூற்றாண்டு	45	9	36
இலக்கண விளக்கம்	கி.பி 17 ஆம் நூற்றாண்டு	69	69	-
முத்துவீரியம்	கி.பி 19 ஆம் நூற்றாண்டு	52	42	10

முடிவுரை

வீரசோழியம், தொன்னூல் விளக்கம், நேமிநாதம் போன்ற ஐந்திலக்கண நூல்களில் உரிச்சொற்கள் குறிப்பிடப்படவில்லை. தொல்காப்பியர் 120 உரிச்சொற்களைக் கூறியுள்ளார் ஆனால் நன்னூல், நேமிநாதம் தொல்காப்பியர் 120 உரிச்சொற்களைக் கூறியுள்ளார் ஆனால் நன்னூல், நேமிநாதம உள்ளிட்ட இலக்கணங்களில் இவற்றினும் குறைந்த சொற்களே காணப்படுகின்றன, இதற்குக் காரணம் கி.பி 8 ஆம் நூற்றாண்டு முதல் எழுந்த திவாகரம் முதலிய நிகண்டுகளின் வளர்ச்சியே ஆகும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

உரிச்சொற்களும், அவற்றின் பொருட்களும்

ச.சுகாசினி,

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருச்சி-5.

மொழி என்பது மனிதனுக்கு பயன்படும் கருவி மட்டுமின்றி, நாளுக்கு நாள் மாறி வரும் ஒன்றாகும், மொழி தனக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றமே அது வளர்வதற்கு, தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் முறையாகும். இனி மொழியினுள்ள சொற்களும், அவற்றின் பொருள் பயன்பாட்டினையும் காண்போம்.

தொல்காப்பியர் குறிப்பிடும் சொல்லும், பொருளும்

தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் இடையியல், உரியியல், மரபியல் ஆகிய இயல்களில் சொற்களுக்கான பொருள்கள் கூறப்பட்டுள்ளன என்றாலும், உரியியலில் நூற்று இருபது சொற்களுக்குத் தொல்காப்பியர் பொருள் கூறியுள்ளார்.

ஈண்டு செய்யுளுக்கு மட்டும் உரித்தான சொற்கள் உரிச்சொற்கள் ஆகும். இடைச் சொற்களும், உரிச்சொற்களும் முன்னைய பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும், தழுவி நின்று அவற்றின் பொருளை உணர்த்தி நிற்கிறது.

இங்கு, **எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே** (தொல்.சொல்.பெ.1)

எனும் தொல்காப்பியர் நோக்கு ஒப்பு நோக்கத் தக்கது.

உரிச்சொற்களின் தோற்றம்

தொல்காப்பியர் உரிச்சொற்களைக் குறைசொல்கிளவி எனும் வகைமைபாட்டால் குறிக்கிறார். மேலும், உரிச்சொல் இன்னதென்பதை,

உரிச்சொற் கிளவி விரிக்கும் காலை

இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றி

(தொல்.உரியியல்-292)

என்கிறார். இங்கு இசையினும், குறிப்பினும், பண்பினும் உரிச்செற்கள் தோன்றும் என்பது வெளிப்பட்டு நிற்கிறது. உரியியலில் கூறப்பட்டுள்ள நூற்று இருபது சொற்களையும் இசை சார்ந்தவை, குறிப்பு சார்ந்தவை, பண்பு சார்ந்தவை எனப் பாகுபடுத்தலாம்.

இசை பொருளின் உரிச்சொற்கள்

தொல்காப்பிய உரியியலில் உள்ள உரு, பேம், நாம், உரும் ஆகிய நான்கு உரிச்சொற்களும் இசை சார்ந்த பொருளில் வருவன.

குறிப்பு பொருளின் உரிச்சொற்கள்

பண்ணை, பினை, கலி, செல்லல், இன்னல், சாயல், ஏற்றம், இலம்பாடு, நம்பு, சாஅய், துவன்று, பேண், படர், கழுமு, கவவு, சேர், உசா, துணங்கு, பழிச்சு, போகல், ஒழுகல், முரஞ்சல், அழுங்கல், இயம்பல், வார்தல், தீர்தல், தீர்த்தல் ஒய்தல், ஆய்தல், நிழத்தல், துவைத்தல், சிலைத்தல், ஞெமிர்தல், பாய்தல், அமர்தல், உகப்பு, உவப்பு, பயப்பு, இயைபு, இசைப்பு, கடர்ப்பு, விதிர்ப்பு, விறப்பு, உறப்பு, வெறுப்பு, கறுப்பு, சிவப்பு, கழிவு, கதழ்வு, துனைவு, மதில், மேவு, கவர்வு, துயவு நொசிவு, நுழைவு, பரவு, முனைவு, உறு, தவ, நனி ஆகிய எழுபத்து மூன்று சொற்களையும் குறிப்பு பொருள் தரும் சொற்களாக காணலாம்.

பண்பு பெருளின் உரிச்சொற்கள்

புரை, மணல், வம்பு, மாதர், பையுள், தா, தெவ்வு, கருவி, கமம், வாள், வயா, புன்று, யாணர், யானா, மல்லல், சீர்த்தி, பொற்பு, வழுமம், கம்பலை, சும்மை, ஒற்கம், நனவு, வெம்மை, சிறுமை, செழுமை, பழுது, முழுது, வறிது, நன்று, புலம்பு, பணை, உயர், கடி, வை, தெவு, அலமரல், தெருமரல், கெடவரல், தா, எய்யாது, வய, கரு, கெழு ஏ, மழ, குழ, தட, கய, நளி, அரி, வியல், மத, எறும் ஆகிய ஐம்பத்து மூன்று சொற்களும் பண்பு பொருளின் உரிச்சொற்கள்.

ஒரு சொல் பலபொருள்

தொல்காப்பியர் உரியியலில் ஒரு சொல் தரும் பல பொருட்களைக் குறிப்பிடும் பொழுது

ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்

- (தொல்.உரியியல்-292)

என்று குறிப்பிடுகிறார். ஒரு சொல்லானது, பல பொருட்களைக் குறிப்பிடும் போது அது பொருட்பன்மை எனப்படும். இந்த பொருட்பன்மை இரண்டு வகைப்படும்.

1. பல்பொருள்கிளவி (ழிடலளநஅல)
2. ஒப்புருச்சொல் (ர்ழஅழலெஅல)

பல்பொருள்கிளவி என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருட்களைக் கொண்டது. ஆனால் ஒப்புருச்சொல் என்பது பொருள் ஒத்திராத வெவ்வேறு சொற்களின் உருது ஒப்புமையைக் குறித்து நிற்கும்.

பலபொருட்கிளவி

தொல்காப்பியர் பலபொருட்கிளவிகளைப் பின்வரும் பொருட்களில் குறிக்கிறார்.

அழுங்கல் கிளவி	-	இரக்கம், கேடு பொருள்களிலும்
ஏற்றம் கிளவி	-	நினைவு, துணிவு பொருள்களிலும்
பணை கிளவி	-	பிழைத்தல், பொருப்பு பொருள்களிலும்
படர் கிளவி	-	உள்ளல், செலவு பொருள்களிலும்
தா கிளவி	-	வலி, வருத்தம் பொருள்களிலும்
விறப்பு கிளவி	-	செறிவு, வெரூஉ பொருள்களிலும்
செழுமை கிளவி	-	வலன், கொழுப்பு பொருள்களிலும்
விழுமம் கிளவி	-	சீர்மை, சிறப்பு பொருள்களிலும்
நனவு கிளவி	-	களன், அகலம் பொருள்களிலும்
மக கிளவி	-	மடன், வலி, மிகுதி, வனப்பு
கடி எனும் கிளவி	-	கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்னேற்ற பொருட்களிலும்
இரங்கல் கிளவி	-	இசை, கழிவு, பொருட்களிலும் வரும்.

ஒருபொருட் பலசொல்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒரே பொருளைக் கொண்டிருப்பின் அவற்றை ஒருபொருட் பல சொல் என அழைப்பர். ஒரு தொடரில் வரும் சொற்களில் ஒரு சொல்லை மாற்றம் செய்தாலும் அத்தொடர் தரும் பொருளில் மாற்றம் தோன்றாவிடின் அதனை ஒருபொருட் பலசொல் என மாதையன் குறிப்பிடுகிறார். - மாதையன் (அகராதியியல்)

அவை பின்வருமாறு,

உறு, தவ, நனி ஆகிய சொற்கள்	-	மிகுதி பொருளிலும்
குரு, கெழு ஆகிய சொற்கள்	-	நிறன் பொருளிலும்
செல்லல், இன்னல் ஆகிய சொற்கள்	-	இன்னாமை பொருளிலும்
அலமரல், தெருமரல் ஆகிய சொற்கள்	-	சுழற்சி பொருளிலும்
கூர்ப்பு, கழிவு ஆகிய சொற்கள்	-	சிறத்தல் பொருளிலும்
மழ, குழ ஆகிய சொற்கள்	-	இளமை பொருளிலும்
கதழ்வு, துனைவு ஆகிய சொற்கள்	-	விரைவு பொருளிலும்

அதிர்வு, விதிர்ப்பு ஆகிய சொற்கள்	-	நடுக்கம் பொருளிலும்
தீர்தல், தீர்த்தல் ஆகிய சொற்கள்	-	விடுதல் பொருளிலும்
கெடவரல், பண்ணை ஆகிய சொற்கள்	-	விளையாட்டு பொருளிலும்
நம்பு, மேவு ஆகிய சொற்கள்	-	நசை பொருளிலும்
ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாய் ஆகிய சொற்கள்	-	நுணுக்கம் பொருளிலும்
பிணை, பேண் ஆகிய சொற்கள்	-	பெட்பு பொருளிலும்
பையுள் சிறுமை ஆகிய சொற்கள்	-	நோய் பொருளிலும்
விறப்பு, உறப்பு, வெறிப்பு ஆகிய சொற்கள்	-	செறிவு பொருளிலும்
கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் ஆகிய சொற்கள்	-	அரவம் பொருளிலும்
இலம்பாடு ஒறகம் ஆகிய சொற்கள்	-	வறுமை பொருளிலும்

தோன்றியுள்ளதாக ஒருபொருளைக் குறிக்கும், பல சொற்களைத் தொல்காப்பியர் வகைமைப்படுத்துகிறார்.

உரிச்சொற்கள் வழங்கும் மரபுப்பொருட்கள்

தொல்காப்பியத்தில் மரபுப் பொருட்கள் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் பொருள் கூறும் அடிப்படையில் அமைந்த இடையியல், உரியியல், மரபியல் முதலிய இயல்களில் வரும் என்மனார் என்ப மொழிப சொல்லினர் புலவர் போன்ற சொற்களெல்லாம் தொல்காப்பியர் மரபியலுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. உரிச்சொற்கள் வழங்கும் மரபினைத் தொல்காப்பியர்,

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திக்
தந்த மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்

(தொல்.உரியியல்-253)

என்றும்,

மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும், பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்த மரபின் தோன்றுமன் பொருளே

(தொல்.சொல்-383)

என்று குறிப்பிட்டுள்ளார். உரிச்சொற்களின் பயன்பாட்டு நிலையினை, அவற்றைப் பொருள் கொள்ளும் தகைமையினைத் தத்தம் மரபின் எனக் குறிப்பிட்டுள்ளார் என்பது வெளிப்படுகிறது.

இலக்கியத்தில் பயன்படுத்தக்கூடிய சொற்களின் மரபினை மரபியலில் கூறியுள்ளார். மரபினை விளக்குவதாகவே மரபியல் அமைந்துள்ளமையை,

மரபு நிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபு வழிப்பட்ட சொல்லினான

- (தொல்.மரபியல்-701)

என்றும்,

மரபுநிலை திரியின் பிறிது பிறிது ஆகும்

- தொல் (பொருள்)

எனும்படியாக இலக்கியத்திற்குரிய சொற்களின் மரபாக இளமைப் பெயர்கள், ஆண்பாற்பெயர்கள், பெண்பாற்பெயர்கள் போன்றவற்றை விளக்குவதோடு, உயிர்பாகுபாட்டையும் வகைப்படுத்தித் தந்துள்ளார்.

கடினச் சொற்களின் பெருட்களை உணர்த்துதல்

கடினச் சொற்களுக்கும், எளிதில் பொருள் விளங்காத சொற்களுக்கும் எளிய சொற்களால் பொருள் உணர்த்தியுள்ளார்,

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்படா வாரா உரிச்சொல் மேன

(தொல்.சொல்.உரியியல்-267)

என்கிறார். அகராதியில், பொருளை விளக்கப் பயன்படும் சொற்களின் பொருட்கள் அனைவருக்கும தெரிந்த சொற்களாகவே இருக்க வேண்டும். உரிச்சொற்களிலும் தெரியாத சொற்களைக் கொண்டு, தெரிந்த சொற்களை விளக்குவதாக உரியியலை அமைத்துள்ளார் காப்பியனார்.

உரிச்சொற்கள், ஒரு சொல்லுக்குப் பல பொருளையும், பல சொற்களுக்கு ஒரு பொருளையும் பொருள் குழப்பம் ஏற்படாதவாறு விளக்குகிறது. ‘ கடி’ என்று சொல்லுக்கும் பன்னிரண்டு பொருளைக் கூறி கடினமான சொற்களை, அனைவருக்கும் தெரிந்த பொருட்களில் விளக்குகிறார்.

உரிச்சொற்களின் பொருள் உணரும் தன்மை

உரிச்சொற்களின் பொருட்களை உணரும் போது வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ ஒரு சொல்லுக்குரிய பொருளை விளக்கும் போது, விளக்கிய சொல்லுக்கும் பொருள் கேட்டால் அது வரம்பில்லாமல் போகும் என்பதை,

பொருட்குப் பொருள் தெரியான் அதுவரம்பின்றே

- (தொல்.சொல்-385)

என்கிறார். சிறப்பாக, ஆற்றலுடன் பொருளை விளக்கும் போது எவ்வித குழப்பமும் ஏற்படாது என்பதையும்,

பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின

(தொல்.சொல்-386)

என விளக்குகிறார். இந்தச் சொல்லுக்கு இந்த பொருளே உரியது என்பதைத் தெரிந்து உரிச்சொற்களின் பொருட்களை உணர வேண்டும் என்பதை,

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா

- (தொல்.சொல்.388)

எனும் நூற்பா வழி அறியலாம்.

உரியியலில் கூறப்பட்ட உரிச்சொற்கள் மட்டுமில்லாது வழக்காற்றில் பல உரிச்சொற்கள் புழக்கத்தில் இருந்து வருகின்றன. முன்னர் கூறியமுகத்தான் மொழியின் சொற்களில் ஏற்படும் மாற்றங்களை, அந்தந்த காலச் சூழலை மனதில் கொண்டு உணர வேண்டும். சொல்லப்பட்ட சொற்களைக் கொண்டு, சொல்லப்படாத பொருட்களை உணர வேண்டும்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளிலிருந்து உரிச்சொற்களின் பொருள் மாற்றத்தை அறியற்பாலது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தமிழ் இலக்கியங்களில் உரிச்சொற்கள்

ஐ. சுதா

ஆய்வியல் நிறைஞர் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம் திருச்செங்கோடு

முன்னுரை

தொல்காப்பியர் பாட்டு முதலான ஏழனையும் செய்யுள் என்று கூறினாலும் அவர் நூலுள் " புலன் நன்கு உணர்ந்த புலமையோர்." என்றும் "குறி அறிந்தோர்" என்றும்இ "யாப்புறி புலவர்" என்றும் "புலவர் ஆறு" என்றும் " உயர்மொழிப் புலவர்" என்றும் "தொன்மொழிப் புலவர்" என்றும் "நுணங்கு மொழிப் புலவர்" என்றும் "நூல் நவில் புலவர்" என்றும் பல இடத்தில் கூறும் இப்பல தொடர் மொழிகளைத் தொகுத்து நோக்கினால்இ புலன் குறி வாய்மொழி இயாப்புஇ புலவர் ஆறுஇ நூல்இ உயர்மொழி தொன்மொழி நுணங்கு மொழி என்பனவெல்லாம் இலக்கியத்தைக் குறிப்பதாகக் கருத வேணடியுள்ளது.
உரிச்சொல் இலக்கணம் மிக விரிவாகத் தொல்காப்பித்தில் கூறப்படுகிறது.

'உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற்கிளவியும்' (482)

என எழுத்ததிகாரத்திலேயேஇ உரிச்சொல்லின் இலக்கணம் சுட்டிக்காட்டப்படுகிறது. 'சான்றோன்' என்ற சொல்இ சால் என்பதன் அடியாகப் பிறந்தது. சால்இசால எனும் அடிச்சொற்கள் உரிச்சொல் எனப்பட்டன. இன்று நாம் அடிச்சொல் என்பதையே தொல்காப்பிர் 'குறைச்சொற் கிளவி' என்றார். பெயராகவும் வினையாகவும் இவை வடிவமையக் கூடினர். இவை பெயருக்கும் வினைக்கும் அடைமொழிகளாகவும் வருவன.

உரியியலின் முதற்சூத்திரம் 'உரிச்சொல்லை' நன்கு விளக்குகிறது. உரிச்சொற்களின் அடிப்படை இசை குறிப்பு பண்பு என்பன. இசை- சொல்லால் பொருள்தருதல். படர்-படர்வது பரவுவது என்பதால் நினைப்ப உள்ளத்தில் ஓடுவதையும் பிரித்து செல்வதையும் சுட்டுமென்றார் தொல்காப்பியர். படர்- பிரிவுத்

துன்பத்தைக் குறித்ததும் பொதுவாகத் துன்பத்தைக் குறித்ததும் அதன் நிழற் பொருள்களாய் நீண்டவை.

இதனையே 'இசையில் தோன்றுதல்' என்றார். இசைத்தல்-சொல்லுதல்இகறுப்புஇ சிவப்பு என்பன வெகுளிப் பொருளாயினும்இநிறத்துரு உணர்த்துவது குறிப்புப் பொருளேயாகும். 'சிவந்து நோக்கும்வாய்' என்றால்இ சினந்து பார்க்கும் போது எனப் பொருள்கொள்வதும் குறிப்பினால் பெறப்படுவதாகும். தவச்சிறிதுஇ தடஞ்செவிஇ நளியிரு முந்நீர் எனப் பண்புணர்த்தும் அடைமொழிகளாயும் வரும்.

இவை ஒரு சொல்லாய் நின்று பல பொருள் தந்தும் பல சொற்கள் ஒரே பொருளைத்தந்தும் இவ்வாறு அருஞ்சொற்களாய்இ செய்யுள் வழக்கில் பெரிதும் காணப்பட்டனவாதலின்இ இவற்றைப் பட்டியலிட்டு நூற்றிருபது சொற்களுக்குப் பொருள்தந்துள்ளார்.

பசுமை வெண்மை என்பன உலகிடைப் பயில வழங்கும் உரிச்சொற்கள் இங்ஙனம் பெருவழக்காய்இஅனைவரும் அறிந்தவற்றைவிடுத்துஇ அரியவற்றையே தாம் எடுத்தோதுவதாகத் தொல்லாசான் குறிப்பிடுகிறார். இன்று 'பசுமைப் புரட்சி' என்னும் போது 'பசுமை' குறிப்புப் பொருள் தருதலின் உரிச்சொல்லாகிறது என்பதை உணர்தல் வேண்டும்.

இசை குறிப்பு பண்பு எனும் பொருட்குறியவதாலின் உரிச்சொல் ஆயிற்றென்று செய்யுட்கே பொரும்பான்மையும் உரியவாதலின் உரிச்சொல்லாயிற்றென்றும் பெயரையும் வினையையும் சாந்து பொருட்குணத்தை விளக்கலின் உரிச்சொல்லாயிற்றென்றும் இவ்வாறு வரும் உரைவிளக்கங்கள் பலவாகும்.

பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிடையே பொருந்தி வழங்கலின் இடைச்சொற்களாய் நின்றது என்றது போலஇபெயர் வினையாய் விரிதற்குரிய அடிச்சொற்களாய் அப்பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் உரிமைபூண்டு அடைமொழிகளாய் நிற்றலின் உரிச்சொல்லாயின என்பதே தொல்காப்பியர் கருத்துக்கு இசைந்த விளக்கமாகும். இதனை

'பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்'

எனவரும் உரிச்சொல் விளக்கத் தொல்காப்பிய நூற்பாவாலும் தெரியலாம்.

உரிச்சொல் இலக்கணம்

உரிச்சொல்லினது இயல்பை விரித்துரைக்குமிடத்துஇ அது இசை குறிப்பு பண்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் தோன்றும். பெயர் வினை என்ற அவ்விரு சொல்லாதற்கும் உரியதாய்த் தன் வடிவுஇபல விதமாய் மாறி அமையும். ஒரு சொல் பல பொருட்குரியவாயும் பலசொல் ஒரு பொருட்குரியவாயும் வழங்கும். அவற்றுள் பயில வழங்காதவற்றைஇ பெருவழக்காக வழங்குவனவற்றுடன் சார்த்திப் பொருள் காணவேண்டும். தத்தமக்கு இசைந்த பெயர்இ வினை ஆகிய நிலைக்களன்களால்இஒவ்வொறு சொல்லுக்குமுரிய வெவ்வேறு பொருள்களை அறிநது கூறவேண்டும்.

உரிச்சொல் வகை

அது வெளிப்படு சொல்இ வெளிப்பட வராத சொல் என இருவகைப்படும். பொருள் வெளிப்படையாகப் பொருள் அறியப்பட்டுப் பயில வழங்கும் சொற்களை எடுத்துக்கூற வேண்டா. இவ்வியலில் வெளிப்படையாகப் பொருளறியப் படாத அருஞ்சொற்களாம் உரிச்சொற்கள் பற்றியதாகும்.
உரிச்சொற்களும் அவை உணர்த்தும் பொருள்களும்

உரிச்சொற்கள்		**பொருள்**
1. உறு தவ நனி(3)	-	மிகுதி
2. உரு	-	உட்கு அச்சம்
3. குரு	-	நிறம்
4. உகப்பு	-	உயர்வு மேன்மேல் உயர்தல்
5. உவப்பு	-	உவகை மகிழ்ச்சி
6. பயப்பு	-	பயம்இ பயன்
7. பசப்பு	-	நிறம்
8. இயைபு	-	புணர்ச்சி
9. இசைப்பு	-	இசைத்தல்
10. அலமரம்	-	சுழற்சி
11. கூர்ப்பு	-	உள்ளது சிறத்தல்
12. கதழ்வுஇ துனைவு	-	விரைவு
13. அதிர்வுஇ விதிர்ப்பு	-	நடுக்கம்
14. தீர்தல்இ தீர்த்தல்	-	விடதல் நீங்குதல் நீக்குதல்
15. கெடவரல்இ பண்ணை	-	இன்ப விளையாட்டு
16. தடஇ கய இநளி	-	பெருமை பெரிது
17. பழுது	-	பயமின்று
18. சாயல்	-	மென்மை
19. வம்பு	-	நிலையாமை
20. மாதர்	-	காதல்

உரிச்சொற் பொருளை அறியும் முறைகள்

வழக்கிடை உளவாய் இதுகாறும் விரித்துரைக்கப்பட்ட உரிச்சொல் எல்லாம் முன்னும் பின்னும் வருகின்ற சொற்களைக் கொண்டு சிந்தித்தும் அவற்றிற்குப் பொருந்திய சொற்களைச் சார்த்தி உணர்த்தியும் தத்தமது மரபுக்கேற்ற பொருளறியப்பட வேண்டும்.

உரிச்சொல்லின் பொது இலக்கணம்

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்

தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல். (782)

உரிச்சொல்லாகிய சொல்லினதியல்பை விரித்து விளக்குமிடத்து அ.ஃது இசையின்கண்ணும் குறிப்புப் பொருளின் கண்ணும் பண்பின்கண்ணும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்பதேயன்றிஇ ஒருசொல் பலபொருளுக்குரிமையுனையதாயும் பலசொல் ஒருபொருட்குரிமையுடையனவும் வரும்.

உரிச்சொற்களுக்குப் புறனடை

போற்றிச் சொன்னவை கொண்டு சொல்லாதவற்றைப் பாங்குற உணர்க எனல்.

அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூம்உம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையின் கிளந்தவற்று இயலான்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர். (879)

இதுகாறும் உரிச்சொல் இலக்கணங்களுள் உரிச்சொற்கள். இவை இவற்றின் பொருள்கள் இவை எனவும் எடுத்துரைக்கப்பட்டன.

முடிவுரை

தொல்காப்பியத்தில் உரிச்சொல் இலக்கணம் மிக விரிவாகக் கூறப்பட்டுஇ உரிச்சொல் வகைகள் உணர்த்தும் பொருள்களும் புறநடை போன்ற உரிச்சொற்களை நூற்பா மூலம் கூறியுள்ளார்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பரிபாடலில் மலரும் பொருளும்

த.சுதாகர்,

விரிவுரையாளர் தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி, திருவானைக்கோவில்.

முன்னுரை

இறைவன் படைப்புக்களில் அனைவரும் ரசித்துப் பார்க்கக் கூடிய ஒன்று இயற்கை. சங்ககாலந்தொட்டே இயற்கையைப் பற்றி புனைந்துரைக்காதப் புலவர்களே இல்லை எனலாம். இயற்கையைப் புகழாதவர்களை எழுத்தாளனாகவோ, கவிஞனாகவோ, தமிழ்ப்பெருமக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. **இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்** என்று இயற்கையைத் **தொல்காப்பியம்** இயம்புகின்றது. ஆயினும் ஒரு பக்கம் இயற்கையும், இயற்கை நிகழ்வும், ஒரு பக்கம் மனிதனும் மனித இயக்கமும், ஒன்றோடுடொன்று ஒற்றுமையோடு வாழ்கின்றன. அத்தகைய பெருமைக்குரிய இயற்கைப் படைப்பில் ஒன்றான மலர்களைப் பற்றி சங்க காலக் கவிஞர்கள் கூறுவதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சண்பகம்

சண்பக மலர்கள் மலர்ந்த போது போர்ச்சேவலின் காலில் உள்ள நகங்களை போன்றிருக்கும் என்று வடிவத்தையும் மஞ்சள் பாவிய செம்மை நிறத்தையும் பெற்றிருக்கும். வண்டுறை மலர்களின் பட்டியலில் இப்பூவும் இடம்பெற்றுள்ளது. இதனை

“வண்டறை இய சண்பகம” (பரி 11:18)

என்று பாடியுள்ளார். தற்காலத்தில் அப்பெயர் செண்பகத் தோட்டம், செண்பக அருவி, செண்பகவள்ளி, செண்பக அரசி, என்ற பெயர்களில் அந்தந்த வட்டார வழக்குகளில் வழங்குகின்றது.

அல்லி

"அல்லி கழுநீர் அரவிந்தம் ஆம்பல்" (பரி 12:78)

என்ற அடிக்கு அல்லியை உடைய கழுநீர், அரவிந்தம், ஆம்பல், என பொருள் கொள்ளுதல் வேண்டும். அல்லி மலர் வேறு, ஆம்பல் மலர் வேறு, என மயங்க நேரிடும். இருப்பினும் கழுநீர் முதலாகிய மூன்று மலர்களுக்கும் சாம்பல் நிறமான அல்லி எனும் புறவிதழ் உண்டு. அன்றியும் ஆம்பற் காய்க்கும் அல்லி என்ற பெயர் உண்டு. ஆம்பற்பூவின் காயாகிய அல்லியில் வெண் சிறுகடுகு போன்ற விதைகள் உண்டாகும். இதனை **அல்லியரிசி** என்று கூறுவர். ஆம்பல் அல்லியும் உணங்கும் என்புழி ஆம்பல் அல்லி இருபெயரொட்டு எனவும் அல்லி என்பதற்கு **அல்லியரிசி** எனவும் உரையாசிரியர் சீனிவாசன் கூறுவார். இந்த ஆம்பல் அரிசியைக் கணவனை இழந்த கழிகல மகளிர் உண்ணும் வழக்கமும் உண்டு என்பதை உரையாசியர் வழி அறிந்து கொள்ளமுடிகிறது.

குவளை செங்கழுநீர்

இலக்கியத்தில் இடம்பெறக் கூடிய இதனுடைய வேறுபெயர் நீலம், செங்குவளை, காவி, என அழைக்கப்படுகிறது. பெண்கள் குவளை மலருடன் நெய்தல் பூ, கல்லகாரப்பூ, (குளிரிப்பூ) மல்லிகைப்பூ, முதலியவற்றை ஒன்றாக சேர்ந்த பூக்களை கதம்ப மாலையாக தொடுத்து, பெண்கள் தை நீராடலின்போது தலையில் பூச்சூடி தன்னுடைய தோழிகளுடன் மகிழ்ச்சியாக இருப்பதை,

"பவள வளை செறித்தாட் கண்டு அணிந்தாள் பச்சைக்

குவளைப் பசுங்கண்டு கொண்டு

கல்லகாரப் பூவால் கண்ணி தொடுத்தாளை

நில்லிகா எனபால்போல் நெய்தல் தொடுத்தாளே

மல்லிகா மாலை வளாய்" (பரி:11:101-105)

என்ற பாடல்வழி அறியலாகிறது. இவை தற்காலத்தில் தேர்திருவிழாக்களின் போது பெண்கள் பல நிறமான பூக்களை மாலையாகத் தொடுத்து, பல்வேறு விதமான காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். இருப்பினும் பல தெய்வ வழிபாடுகளுக்கு பரிபாடலில் இடம்பெறுமகின்ற தைநீராடலின் போது மலர்கள் இடம்பெற்ற சிறப்பினை. மேற்கண்ட சான்றுகளின் வழி அறிய முடிகிறது.

நெய்தல் - கருங்குவளை

நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம், என்னும் மலர்களின் பெயர்வழி பேரெண்களைக் பரிபாடல் கூறுகின்றது. நெய்தல் நூறாகவும், குவளை ஆயிரமாகவும், ஆம்பல்

பதினாயிரமாகவும், சங்கம் இலட்சமாகவும், கமலம் பத்துலட்சமாகவும், வெள்ளம் ஒரு கோடியாகவும், போன்ற எண்களுக்கு குறியீடாக மலர்கள் பயன்படுத்தப்பட்டு இருப்பதை பரிபாடலில் அறியமுடிகிறது. இதனை

"அவற்றிற்கும்

உள்ளீடாகிய இரு நிலத்து ஊழியும்

நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்

மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய

செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை" (பரி.2:12-15)

என்று புலவர் கீரந்தையார் பாடியுள்ளார். "**பேரெண்களைக் குறிக்கும் பெயர்களை பரிபாடலில் கூறியவண்ணம் ஒழுங்குப்படுத்தித் தமது யாழ் நூலில் ஈழந்தந்த முனிவர் விபுலாநந்த அடிகள்"** மேற்கண்ட வண்ணம் விளக்கியுள்ளார்.

திருமாலின் கைகளின் பெருமையை அதன் எண்ணிக்கைப் பெருக்கில் காட்ட முனையும் **கடுவன் இளவெயினனார் "பல அடுக்கல் ஆம்பல்"** என்பதை

"நூறாயிரம் கை ஆறறி கடவுள்

அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்

இணைத்துள என எண்வரம்பு அறியா யாக்கையை" (பரி:3:43-45)

என்று பாடியுள்ளார். **செல்வகடுங்கோ வாழியாதனைப் புலன் அழுக்கற்ற அந்தணாளனாகிய கபிலர். 'ஆயிரம் ஆம்பல் ஊழி வாழ்க'** என்று வாழ்த்துவாராயினர்.

தாமரை

தாமரைப் பூவின் நடுவே நீண்டு உருண்ட 'பொகுட்டு' இருக்கும் இதனைச்சுற்றி மகரந்தத் தாள்கள் மலிந்திருக்கும். இவற்றில் தாதுக்கள் உண்டாகும். இவற்றை உண்ணுதற்கு வண்டுகள் மொய்க்கும். உண்மைகளைத் தொகுத்து மதுரை மாநகரின் அமைப்பாக பாடுகின்றார். என்பதை

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்

பூவொடு புரையும் சீர்ஊர் பூவின்

இதழகத் தன்ன தெருவம் இதழகத்து

அரும் பொருட் டனைத்தே அண்ணல் கோயில்

தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்

தாதுண்பறவை அனையர் பரிசில் வாழ்நர்" (பரி.திரட்டு.8)

என்று கூறியுள்ளார். தாமரைக்கு கமலம் என்றதொரு சங்கத் தமிழ்பெயரும் உண்டு.

"மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய" (பரி.2:14)

கமலம் என்ற இச்சொல் ஈண்டு பேரெண்ணைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

முடிவுரை

"**கைபுனைந்து இயற்றா கவின் பெறு வனப்பு"** (திருமுருகு.17) என்ற **நக்கீரரின்** கூற்றுக்கு இணங்க இயற்கை கொடையாக வழங்கிய பல மலர்களின் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. அதனை பரிபாடலின் வாயிலாக சண்பகம், அல்லி, ஆம்பல், குவளை, குளிரிப்பூ, நெய்தல், தாமரை, முதலிய பூக்களின் பெயர்களையும் சிறப்பினையும் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் இப்பூக்களை பெண்கள் மாலையாகத் தொடுத்து இறைவனை வழிபட்ட முறையினையும் அவர்களின் மன மகிழ்ச்சியையும் உணர முடிகின்றது. பூக்களை வைத்து பேரெண்களை குறிக்க குறியீடாக புலவர்கள் பயன்படுத்தியதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

துணைநூற் பட்டியல்

1. பரிபாடல் - ஆசிரியர்குழு
2. தொல்காப்பியம் - இளம்பூரனர்
3. தமிழ்அகராதி - கழகவெளியீடு
4. திருமுருகாற்றுப்படை - நக்கீரர்
5. சங்க இலக்கிய தாவரங்கள் - கு.சீனிவாசன்
6. யாழ்நூல் - விபுலாந்தஅடிகள்

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தொல்காப்பியரின் இடைச் சொற்களும் பொருள்களும்

முனைவர். க.சுந்தரமூர்த்தி

தமிழாய்வுத்துறைத் தலைவர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருச்சி -5

ஆதி மனிதனின் நாகரிகத்திற்கு உட்பட்டது மொழி. மனிதன் முதலில் சமிக்ஞையாலும் குறியீடுகளாலும் தனது கருத்தை மற்றொருவனுக்கு வெளிப்படுத்தும் கருவியாகக் கொண்டு வாழ்ந்தான். காலப்போக்கில் நாகரிக வளர்ச்சியாலும் அறிவாற்றலாலும் தனது கருத்தை வெளிப்படுத்த மொழியைப் பயன்படுத்தினான். பேசக் கற்றுக் கொண்ட மனித இனம் தனது மொழியால் வெளியுலகுக்கு தெரியலானாது. அவ்வாறு வெளியுலகுக்கு அறிய காரணியாக இருந்தது மொழியே. அம்மொழியை நாம் சொல்' என அழைக்கின்றோம் அத்தகைய சொல் எங்ஙனம் கையாளப்பட்டு எவ்வாறு பொருளைத் தருகிறது என்பதும் நாம் அறிந்ததே.

தொல்காப்பியர்

எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல்.சொல்.பெ-1)

இதனை தொல்காப்பியர் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் மனிதன் இயம்புகின்ற எல்லாச் சொற்களும் பொருளை உணர்த்தக்கூடிய தன்மைக் கொண்டதாகவே அமையும் என்று கூறுகிறார். அத்தகைய வழியில் தொல்காப்பியர் இடைச்சொற்களை எங்ஙனம் கையாண்டு அதனை வழிநடத்துகிறார் என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

இடைச்சொற்கள்

இடைச்சொல்லானது தனித்து இயங்கும் தன்மையற்றது. இச்சொல்லானது பெயரோடும் வினையோடும் சேர்ந்து இடையில் இணைந்து வரும் தன்மை கொண்டதால் இதனை இடைச் சொல் என்று அழைப்பர்.

"இடை எனப் படுப பெயரோடும் வினையோடும்

நடைபெற்று இயலும் தமக்கு இயல்பு இலவே" (தொல்.சொல்.இடை.1)

என்று தொல்காப்பியர் இடைச்சொல்லின் இயல்பினையும் தன்மையினையும் எடுத்துரைக்கிறார்.

இடைச்சொல் வகை

அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதனவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருனவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுனவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருனவும்
இசைநிறைக் கிளவி
தத்தம் குறிப்பிற் பொருள் செய்குனவும்
ஒப்பில் வழியால் பொருள் செய்குனவும் என்று
அப்பண்பினவே நுவலுங் காலை (தொல்.சொல்.இடை3)

இடைச்சொல் 7 வகைப்படும் என்பதை

1. புணர்ச்சியில் சாரியைகளாக வந்து பொருள் தரும்
   (எ.கா.) கரும்பின் சாறு
2. வினைச் சொற்களில் காலங்காட்டும் உறுப்புகளாய் வரும்.
   (எ.கா) கண் ட் ஆன்
3. வேற்றுமைப் பொருளைத் தரும் உறுப்புகளாக வரும்
   (எ.கா) அவனை
4. அசைநிலைச் சொற்களாக வரும்
   (எ.கா) கிழவோனே
5. இசைநிறைச் சொற்களாக வரும்
   (எ.கா) ஐ என்றால் ஆயர் மகள்
6. தம் குறிப்பால் தருவன
   (எ.கா) யானோ அரசன். யானே கள்வன்,
7. ஒப்புமைபடுத்த வரும் உவம உருபுகளாக வரும்

(எ.கா) தன்மதி அன்ன தமனிய நெடுங்குடை, போன்று மேற்கண்ட பொருள்களின் அடிப்டையில் இடைச்சொற்கள் இணைந்து வரும் தன்மை கொண்டவைகளாக அமைந்துள்ளன.

சொற்களோடு சொற்களாக இடையில் நின்று புணர்ந்தும் வினைச் சொற்களில் காலங்காட்டுகின்ற இறந்த கால இடைநிலைகளாகவும், நிகழ்கால இடைநிலைகளாகவும், எதிர் கால இடைநிலைகளாகவும், வேற்றுமை உருபாகவும், அசைநிலை இடைநிறை சொற்களாகவும், தம் குறிப்பு உணர்த்தும் சொல்லாகவும் மற்றும் உவம உருபாகவும் இடையில் வந்து பொருளை உணர்த்துகின்றன என்பதை நாம் அறிய முடிகின்றது.

சொற்களின் இடையில் மட்டும் வந்து நின்று பொருளை உணர்த்துவதுதான் இடைச்சொல் என்று ஆகாது. இச்சொல்லான இடைச்சொல் சொற்களில் முன்னும் பின்னும் நின்று பொருளைத் தரும் தன்மையுடையது அவ்வாறு முன்னும் பின்னும் வந்து நின்று (ஈறு திரிந்து) ஈற்றெழுத்து திரிந்து நின்று பொருள் பெரும் என்பதை தம் நூற்பாவில்,

“அவைதாம்

முன்னும் பின்னும் மொழி அடுத்து வருதலும்
தம் ஈறு திரிதலும் பிறிது அவன் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப” (தொல்.சொல்.இடை3)

என்று தொல்காப்பியர் விளம்பியதை அறிய முடிகின்றது. அவ்வகையில் சொற்களில் முன்னும் பின்னும் மேற்கண்ட நிலைகளில் சொல்லப்பட்ட ஏழு வகைகளிலும் நின்று பொருள் தருகின்ற இடைச்சொற்களில் சிலவற்றைப் பற்றி நாம் இனி காண்போம்.

மன்’ என்ற இடைச்சொல்

“கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று
அம்மூன்று என்ப மன்னைச் சொல்லே” (தொல்.சொல்.இடை4)

மன் என்ற இடைச்சொல்லானது கழிந்தது என்றும் ஒழிந்தது என்ற பொருளிலும் ஆக்கப் பொருளிலும் என்று மூன்று பொருள்களைத் தரும் தன்மையில் இடம் பெறும் என்று தொல்காப்பியர் உணர்த்துகிறார்.

1. கழிந்தது – சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே
2. ஆக்கம் - அது மன் எம் பரிசில்
3. ஒழிந்தது – பண்டு காடு மன்

கொன்’ என்ற இடைச் சொல்

கொன்’ என்ற இடைச்சொல்லானது அச்சம், பயனின்மை, காலம், பெருமை என்ற நான்கு பொருளையும் கொண்டு விளங்கும் என்பதை தொல்காப்பியர்,

“அச்சம் பயமிலி காலம் பெருமை என்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே” (தொல்.சொல்.இடை 6)

“எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று
அப்பால் எட்டே உம்மை சொல்லே (தொல்.சொல்.இடை7)

1. எச்சம் - எஞ்சியதையும் கூறுவது. நாட்டியமும் நடந்தது
2. சிறப்பு - யானைக்கும் அடி சறுக்கும்
3. ஐயம் - அவனும் செய்வான்
4. எதிர்மறை - திட்டுவதும் உண்டு
5. முற்றே - முத்தமிழும் முழங்கின
6. எண் - பாலும் பழமும்
7. தெரிநிலை - தேங்காயாகவும் இருக்கலாம்
8. ஆக்கம் - பார்த்தாலும் பசி தீரும்

இத்தகைய நிலைகளில் இடைச் சொற்கள் நின்று புணர்ந்து நிறைவான பொருள்களை உணர்த்தும் வகையில் இடம் பெற்று வருகின்றன என்பதைக் காண்போம்.

சில இடைச்சொற்கள் தொகை பெற்றே நின்று பொருளைத் தரும். அச்சொற்கள் எண்ணிடைச் சொற்கள் என்பர். எனா, என்றா என்ற எண்ணிடைச் சொற்கள் தொகை பெற்றே முடியும். (எ.கா) மரம் எனா, செடி எனா, கொடி எனா, என்று பொருளைத் தந்தமைகிறது. இதனை,

"அவற்றின் வருஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குரி மரபின் செவ்வெண்
ஏயினாகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினும் தொகையின் றியலா" (தொல்.சொல்.இடை.42)

என்று கூறுவதை நாம் அறிய முடிகின்றது. அது மட்டுமின்றி இடைச்சொற்கள் வினையோடும், பெயரோடும் வந்து பொருள் காண்பது மட்டுமல்லாமல் திரிந்து வேறுபட்டு வந்தாலும், அதைத் தெரிந்தவர்கள் கொள்ளுதல் வேண்டும் என்றும் கூறுகிறார். இதன் மூலம் தொல்காப்பியர் இடைச்சொற்கள் பெயரொடும், வினையொடும் பொருந்தி இவ்வுலக இலக்கண வழக்கிற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் மென்மேலும் செம்மையாகத் துணைப் புரிகின்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை எனலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

ஆழ்வார்கள் வழி அன்பு

என். சுபஸ்ரீ

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,

ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருவானைக்காவல்,திருச்சிராப்பள்ளி.

முன்னுரை

அன்பு என்பது அக்காலம் முதல் இக்காலம் வரை தொன்றுதொட்டு நிலவி வருகிறது. அன்பிற்கு இனம், மொழி, மதம் என்ற பேதம் கிடையாது. அவ்வழியில் இக்கட்டுரையில் அன்பை வெளிபடுத்திய ஆழ்வார், ஆச்சாரியர்கள் பக்தியின் வெளிபாட்டை அன்பின் வாயிலாக கூறியதை இக்கட்டுரை குறிப்பிடுகின்றது.

அன்பு வெள்ளம்

அன்புதான் உலகிலேயே மிக உயர்ந்தது.

அன்பு என்பது குன்றையும் குன்று சார்ந்த இடத்தினையும் எப்படி மலர்கள் அழகு செய்கின்றனவோ அப்படித்தான் மனிதர்களின் நெஞ்சத்தினையும் அழகு செய்கிறது.

பாறைகள் நிறைந்த மலைப் பகுதியினைச் சுற்றி மலர்ச்செடி கொடிகள் வளர்கின்றன, கணிமண் பகுதியினையும் பாழ்பட்ட பகுதியினையும் கூட இயற்கை நிலத்துக்கு நல்கும் சிறப்பு உரிமையும் மாட்சியுமாக இணைந்து விளங்கும் ஆடை அணிகலன்களாக விளங்கி வனப்புமிக்கதாக்குகிறது. அதுபோலவே அன்பும் பண்பும் அற்ற பண்படாத மனிதரின் நெஞ்சங்களைக் கூடப் பண்பட்டதாக மாற்றி அமைத்து அணி செய்கிறது அன்பு.

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு(குறள் 75)

என்பதை வள்வர் உணர்த்துகிறார்.

ஆழ்வார் ஆசார்யர்கள் வழி அன்பு

திருமாலை வழிபடும் வைணவ சமயப் பெரியோர் ஆழ்வார் ஆசார்யர் என இரு வகைப்படுவார். அவர்களின் ஆழ்வார்கள் பன்னிருவர் அவர்களுக்குப் பின் தோன்றி ஆழ்வார் வழி நடப்பவர்கள் ஆசார்யர்கள். ஆழ்வார்கள் பக்திப் பூங்கோயிலை எழுப்பினார்கள் என்றும், ஆசார்யர்கள் அப்பூங்கோயிலுக்கு ஞானக் கோட்டை கட்டினவர்கள் என்றும் சிறப்புண்டு.

ஆழ்வார்கள்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார் ஆண்டாள்.

ஆசார்யர்கள்

நாதமுனி, உய்யக்கெண்டார், ஆளவந்தார், மணக்கால் நம்பி, இராமானுஜர் பெரிய நம்பிகள், கூரத்தாழ்வார், வேதாந்த தேசிகன் போன்றோர்

அன்பு கவிதை இனிக்குமே!

வளமெழுந்தவள மாட மதுரை மா நகரந்தன்னுள்
கவனமால் யானைகொன்ற கண்ணனை அரங்க மாலைத்
துளவத் தொண்டாய தொல்சீர்த் கொண்டரடிப் பொடி சொல்
இளையபுன் கவிதை யேலு மெம்பிராற் கிளியே வாறே.

இந்த பிரபந்தத்தின் பொருளாக எம்பெருமானின் வாத்ஸல்யம் (தாயன்பு) அவனின் அருளுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிறது.

பசு ஈன்ற அன்று தன் கன்றுக் குட்டியின் மீது படிந்துள்ள கர்ப்ப அழுக்கு களைத்தன் நாக்கினால் நக்கி சுவைத்து சுத்தம் செய்து மகிழ்வது போல திருமாமகள் கேள்வனான எம்பெருமான் தன்னிடம் சரணாகதி செய்யும் அடியார்களின் குற்றங்களைக் கண்டு வெறுத்து ஒதுக்காமல் அவற்றை குணமாகக் கொண்டு காக்கின்றான்.

அன்பு காட்டிப் பிரிந்தவன்

அலமும் ஆழிப் படையும் உடையார் நமக்கு அன்பராய்
சலமதாகித்தக வொன்றிலர் நாம் தொழுதும் எழு
உலவுகால் நற்கழியோங்கு தன்பைம் பொழிலூடு இசை
புலவு கானல் கணிவண்டினம் பாடு புல்லாணியே.

கலப்பையும், சுதர்சன சக்கரமும் ஆயுதங்களாகக் கொண்டு பெருமாள் நமக்கு அன்பராய் இருப்பது போல் பாவனை காட்டி கபடராய்ச் சற்றும் கருணையில்லாமல் இருக்கிறார் என்கிறாள் தலைவி, தன் கலப்பையால் பகை அரசர்களை அழித்து நல்லோர்களை காப்பாற்றியவர் பலராமர்,

அதுபோல சுதர்சன சக்கரத்தை ஏந்திய ஸ்ரீ கிருஷ்ணன் கொடிய அசுரர்களை அச்சக்கரத்தால் அழித்து நல்லோர், முனிவர்களை காத்தவர், அப்படிபட்ட கருணையுள்ள பகவான் என் விஷயத்தில் அன்பு இருப்பதுபோல் பாவனை காட்டி பிரிந்து விட்டார் என்று தலைவி சொல்வது பகவான் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு என்றே கொள்ள வேண்டும்.

உலகளலந்தவன் கட்டுண்டான்

திருமாலின் பெயரை உச்சரிக்காது, தன் பெயரையே எல்லோரும் கூற வேண்டும் என்று தேவர்களை கொடுமைப்படுத்திய இரண்யகசிபுவை தூணிலே தோன்றிய பகவான் அவன் மார்பைக் கிழித்தார். அத்தகைய வல்லமை கொண்ட திருமால் வெண்ணெய் திருடிக் கோபிகைகளால் கட்டப்பட்டு இருக்கிறார்.

ஆணவத்தை வல்லமையால் வேரறுத்த என் பெருமாள் அன்புக்கும் கட்டுப்பட்டார். அன்பு என்னும் மிகப்பெரிய அஸ்திரத்தைப் பயன்படுத்தி திருமாலின் அருளைப் பெறலாம் என்கிறார் ஆழ்வார்.

சக்கரமும் சார்ங்கமும்

அர்ச்சுனன் செய்த சபதப்படி சிந்து தேசத்து மன்னன் ஜயத்ரதனை அழிப்பதற்காக தன் சக்கரத்தை விட்டுச் சூரியனை மறைக்கும் படி செய்தார் பகவான், அப்பொழுது அவர் கொண்ட வடிவம் பார்த்தசாரதி, வில்லினை வளைத்துப் பகைவர்களை அழித்தது இராம வடிவம், யசோதையின் மகனாக வெண்ணெய் திருடியது பாலகிருஷ்ணன் வடிவம், இப்படி பல வடிவங்களைக் கொண்ட திருமாலை வணங்குவதா? கூடி குலாவுவதா என்று தன் தாயைப் பார்த்துக் கேட்பது போல் கூறுகிறார் ஆழ்வார், அதே போல் பகவானின் வடிவங்களையோ அவருடைய உண்மையான சொரூபத்தையோ நம்மால் அறிய முடியாது, ஆனால் அன்பு ஒன்றுக்குத் தான் திருமால் கட்டுப்பட்டவர். அத்தகைய தூய அன்பைச் செலுத்துவதாலேயே அவனை அடையவும் அறியவும் முடியும் என்கிறார் ஆழ்வார்

முடிவுரை

அன்பு என்பது ஆழ்வார்கள் வழியிலும் ஆசார்யர்கள் வழியிலும் பக்தியாக இன்றளவும் பின்பற்றி வரப்படுகின்றன. இக்கட்டுரையின் வாயிலாக அன்பு என்ற ஓர் வார்த்தையானது அனைவரையும் தன்பால் ஈர்க்கும் சக்தியுடையது என்பதை இக்கட்டுரை பறை சாற்றுகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

கல்லாடத்தில் மலர்கள்

முனைவர்.சீ.சுஜாதா

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருச்சி-5.

முன்னுரை

பேச கற்றுக் கொண்ட மனிதன் தனது கருத்துக்களை வெளிப்படுத்த மொழியைப் பயன்படுத்தினான். அம்மொழியால் தன் படைப்புகளைப் படைத்து தன் இலக்கிய வளமையைப் பாருக்குள் பறைசாற்றினான். அவ்வகையில் தோன்றிய இலக்கியங்கள் இன்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது என்றால், அதற்குக் காரணியாக விளங்குவது அவர்கள் கையாளும் சொல்திறன் எனலாம். அத்தகைய சொல்வளம் நிறைந்து காணப்படுகின்ற மொழி தமிழ்மொழி ஆகும். ˙காலம் கடந்தும் கடல் கடந்தும் தன் இளமையும் இலக்கயவளமும் நீங்காத இனிமைத் தமிழ்மொழி பழந்தமிழர் வாழ்வோடு இரண்டறகலந்த நிலையில் உருவானதே இலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறையை சமூகக் கட்டுப்பாட்டை தனிமனிதனின் கடப்பாடுகளை காலந்தோறும் உணர்த்திக் கொண்டிருக்கத் தவறியதில்லை. மனித வாழ்வை இயற்கையோடு சேர்த்தே புலவர்கள் பாடியுள்ளனர். நிலம் நீர் காற்று தீ ஆகாயம் என்ற ஐம்பூதங்களின் சேர்க்கையே மனிதன் என்பதையும் இவையில்லாது போனால் உலகம் வறண்டு போகும் என்பதையும் எடுத்துரைக்கும் முகமாக இலக்கியங்கள் அமைந்துள்ளன. நிலங்களைப் பாகுபடுத்திய தொல்காப்பியர் அந்நிலத்தோடு தொடர்புடைய மனித வாழ்வை வகைப்படுத்தியது மட்டுமல்லாமல் அந்நிலத்து செடி கொடி பூ ஆகியவற்றிற்கும் சமபங்கு அளித்துள்ளார். முதற்பொருளில் நிலத்தையும் பொழுதையும் கூறி கருப்பொருளில் மலர்களை வைத்து அச்சூழலுக்கு ஏற்றார்போல் உரிப்பொருளையும் அமைத்து வகைப்படுத்தியிருக்கிறார். இவ்வடிப்படையில் ஒரு பெண்ணையோ அல்லது ஒரு இடத்தையோ வருணிக்கும்போது மலர்களை முதன்மைப்படுத்தியிருப்பது அவர்களின் இயற்கை ஈடுபாட்டிற்குச் சான்றாகும். அவ்வகையில் 11ஆம் நூற்றாண்டில் கல்லாடர் என்பவரால் இயற்றப்பட்ட கல்லாடத்தில் மலர்களின் ஆட்சி எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

சங்க இலக்கியத்தில் எண்ணற்ற மலர்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. குறிப்பாக பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 வகை மலர்களை பட்டியலிட்டிருக்கிறார். அவற்றுள் பல மலர்கள் இன்று இல்லாமலும் வேறுபல மாற்றுப்பெயர் கொண்டும் இன்னும் பிற தற்காலத்தவர்களால் அறியமுடியாச் சூழலிலும் உள்ளன.

கொன்றை மலர்

இது சரக்கொன்றை என்றும் அழைக்கப்படும். பொன்னிற மலர்களை உடையது. சிவபெருமானுக்கு உகந்தது என்றும் அவன் விரும்பி சூடும் மலர் என்றும் கார்காலத்தின் வருகையைத் தெரிவிக்கும் மலராகவும் இது இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கல்லாடத்தில் கடவுளைப் புகழாதாருடைய உள்ளம் பாவம் நிறைந்த இருள்போன்ற கூந்தலாகவும் அதனால் கொன்றை மரத்தின் நெற்றுக்களை முல்லைநிலத்திற்கு விரட்டினர். அதனால் இருள் நிலையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கொன்றை பொன்னிறம் உடையது ஆகையால் இருளை ஓடச்செய்யும் விடியல் போல காட்சியளிக்கும் தன்மையது. அதனால் அதனை முல்லை நிலத்திற்கு விரட்டினார் என்பதை

"கடவுள் கூறார் உலம் என குழலும்

கொன்றை புறவு அகற்றி நின்ற இருள் காட்டின"

என்கிறார் ஆசிரியர்.

கொன்றை மலர் சூடிய சிவபெருமானே தன் மாலையையும் மாற்றி காப்பாக அணிந்து ஐந்து தலை நாகத்தையும் நீக்கி விரிந்த சடையையும் மறைத்து விடைக்கொடியையும் விட்டு வேப்பமாலை சூடிய பாண்டியன் ஆனார் என்பதை

"கருக்கை மலர் மாற்றி வேப்பஅலர் சூடி" என்று கொன்றைமலர் கருக்கைமலர் என்று குறிப்பிடப்பெறுகிறது.

கழுநீர் மலர்

தலைவியின் களவொழுக்கத்தால் ஏற்பட்ட உடல் மாற்றத்தினைக் கண்ட சுற்றத்தார் அவளை இல்லிலே காவல் வைப்பர். அதனால் விரைவில் அவளை நீ திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தலைவனுக்கு அறிவுறுத்தும் பொருட்டு தோழி கூறுகிறாள். தலைவியின் கண்கள் செங்கழுநீர் மலர்போல்வன என்று குறிப்பிடுகிறாள். செங்கழுநீர் என்றும் குவளைமலர் என்றும் குறிப்பிடப்பெறும் மலர்கள் பெரும்பாலும் தலைவியின் கண்களுக்கு உவமையாகின்றன. மலரும் நீரில் மலரும். கண்களும் பிரிவினால் நீரை உகுத்துக்கொண்டிருக்கும் என்பது கூட காரணமாக இருக்கலாம். அதுவும் இங்கு குறிப்பிடப்படும் தலைவியின் கண்கள் வண்டுகள் படிந்து தேனுண்ட கழுநீர் மலர் போல கறுத்துச் சிவந்தன என்பதில் தலைவியின் களவு வெளிப்படுகின்றது.

தாமரை மலர்

பெண்ணுடைய கண்களுக்கு உவமையாக மலரும்படி விரிந்த தாமரை மலரில் தங்கும் கயலைப்போல பரந்து களிப்பினையுடைய கண்கள் என்று தாமரை மலரில் உள்ள கயல்மீன்களாக வருணிக்கிறார். மேலும் திருமாலின் திருவடியைக் குறிப்பிடும் போது

"விரிந்த தாமரை குவிந்த தாளோன்"

என்று விரிந்த தாமரையை குவிந்த திருவடிகளுக்கு உவமையாக முரண் சொற்கள் அமைத்து ஒப்புமைப்படுத்துகிறார். தலைவன் தலைவியின் உடன்போக்கில் அவர்களுடைய சுவடைக்கண்டு இரங்கும்போது சிவந்த இதழையுடைய தாமரையையும் கரிய இதழையுடைய நீலோற்பலத்தையும் மகிழ்ச்சியுடன் ஓரிடத்திற்கண்ட காட்சிபோலவும் என்றும் மீண்டும் முரண் சொற்களை அமைக்கிறார். மேலும் கல்லவடத்திரள் என்னும் இசைக்கருவியைப் பற்றிக்குறிப்பிடும் போது தாமரைமலர் வடிவமாக

எழுதிய இருபத்தைந்து வரையில் இரண்டிரண்டு விரலாக அணைத்து என்று அதன் வடிவம் குறிப்பிடப்படுகிறது.

சுவடுகண்டு இரங்குமிடத்து குரவமலரினைத் தரித்த குழலை விரித்திருந்து பாதிரி மலரை அணிந்த இடமும் இக்கற்பாறையே என்று முன் நடந்ததை நினைத்துப்பார்க்கும் முகமாக பாடியுள்ளார். முண்டகம் என்பதும் தாமரைமலரைக் குறிக்கும் சொல். பரத்தையரின் அலங்காரங்களைக் குறிப்பிடும் போது

"முண்டக முகையின் முலைமுகம் தருமின்" என்றும் குறிப்பிடுகிறார். தாமரை மலரில் திருமகள் வாழ்வாள் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது.

மேலும் இந்திரனின் ஆயிரம் கண்களும் விழித்திருந்த செய்தியைக் குறிப்பிடும்போது

"வானவர்க்கு இறைவன் நிலம் கிடை கொண்டு
திருவுடல் நறைவழி ஆயிரத் திரளும்
இமையாது விழித்த தோற்றம் போல
கஞ்சக் கொள்ளை இடையற மலர்ந்து"

என்று தாமரை மலர்கள் இடைவெளி இல்லாமல் மலர்ந்திருந்தன என்பதைக் குறிப்பிடுகிறார்.

குவளை

பெரும்பாலும் பெண்களின் கண்களுக்கு மட்டுமே உவமையாக கூறப்பட்டு வந்த குவளைமலர் இங்கு சிவபெருமானின் நீலக்கழுத்திற்கு உவமையாக

"மதுரையம் பதிநிறைமைம்மலர்க் களத்தினன்"

என்பதில் மைம்மலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குரவமலர்

பெண்ணின் கருங்கூந்தலுக்கு இருளை உவமையாக்கி அதில் மலர்ந்த மலராக

"குரவம் மலர்ந்த கவை இருள் குழலீ!"

என்று உவமிக்கிறார்.

தலைவன் தலைவியின் களவு அலரை ஏற்படுத்துவதையும்

"களவு அலர் தூற்ற தளவுகொடி நடுங்க
வேயுளம் பட்டுப் பூவை கறுக்க

என்றும் அவ்வலர் தூற்றலை வளை குலுங்குவது போல

"திருமலர் எடுத்துக் கொன்றை காட்ட
இறைவளை நில்லாது என்பன நிலைக்க
கோடல் வளைந்த வள்ளலர் உகுப்ப
கண்துளி துளிக்கும் சாயாப் பையுளை"

என்றும்

கருவிளை மலர்நீர் அருகு நின்றுகுப்ப

என்றும் கருவிளை மலர்கள் அருகே நின்ற கண்ணீர் உருக்க என்று செங்காந்தள் கொன்றை கருவிளை மலர்கள் ஆகியவற்றையும் தொடர்புபடுத்தி பாடியுள்ளார்.

தாழை

தாழை மலர்கள் மகரந்தம் நிறைந்தது. அதைப்போல பல தலைகளை உடைய அரக்கர் படை வகுப்புச் செய்த பெரிய வரிசையைப் போல என்பதை

"சோறு நறைகான்ற கைதைய மலரும்"

என்ற வரி குறிப்பிடுகின்றது. தாழை என்பதற்கு கைதை என்ற மற்றொரு பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல மலர்கள்

தேர் வரவு கூறல் என்றும் துறையில் "படலம் பூவைப் பரப்பிக் காயாம்பூவைச் சிதறி முல்லை நிலமாகி திருமகள்" என்று பூக்களை வரிசைப்படுத்தியுள்ளார். தலைவனும் தலைவியும் ஆராய்ந்த மலரைத் தேர்ந்தெடுத்து இறைவனை பூசித்து அருள் பெற்றவர்கள் என்ற செய்தியும் காணப்படுகிறது. மணமுரசு ஒலிகேட்ட தோழி மகிழ்ந்து தலைவியை நினைத்து "அம்மியினிடத்து வெள்ளைப்பூவைப் பரப்பி இலவம் பூவை நிறத்தால் வருத்திய சிவந்த காலைப்பிடித்து" என்று அம்மி மிதித்து கால் பிடிக்கும் திருமண முறையைச் சுட்டுகிறார்.

இதுபோலவே நீலமலர் வெட்சிப்பூ மன்மதன் தாமரை அம்பினை எய்துபவன் செவ்வல்லி மலர்கள் முல்லை மல்லிகை புன்னை மலர்கள் குமுதமலர் குமிழி மலர் தும்பை மலர் போன்ற பலவகைப்பட்ட மலர்கள் வினை பயன் மெய் உரு என்ற நான்கினுக்கும் ஏற்றார்போல் உவமைப்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கிய மலர்கள் சிலவற்றை அப்படியேயும் மாற்றியும் உவமைகளாக பயன்படுத்தியுள்ளார் கல்லாடர்

முடிவுரை

இன்பம் அடைவதற்கு மட்டுமல்லாமல் இலக்கியங்களை செம்மைப்படுத்தவும் இயற்கை உதவி வருகின்றது என்பதும் மலர்கள் மனித வாழ்வில் பெரும் இடத்தையும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது. மேலும் பழந்தமிழரின் நம்பிக்கையும் அவர்களின் ரசனை உள்ளத்தையும் வெளிக்காட்டுவனவாய் இலக்கியங்கள் அமைந்துள்ளன என்பது வெள்ளிடைமலையாகும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

குறுந்தொகையில் வரலாறு

சு.செல்வராஜ்

முனைவர்பட்ட ஆய்வாளர்.

முன்னுரை

அகப்பொருள் இலக்கிய செய்யுள் நூலாகிய குறுந்தொகை வரலாற்றுச் சிறப்புடைய செய்திகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதைப் பற்றி பல சான்றுகளுடன் இக்கட்டுரையில் காண்போம்.

கடவுள்

இந்நூலில் சுட்டுப்படும் கடவுள் முருகன் ஆவான். அம்முருகன் அவுணர்களைக் கொன்று, இரத்தத்தால் சிவந்த அம்பையும, சிவந்த கொம்பினையுடைய யானையையும் உடையவன். குறிஞ்சி மலையே அம்முருகனின் இருப்பிடம் என்பதை,

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழறொழச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"(குறுந்-1)

இப்பாடலால் முருகனின் ஊர்திகளுள் யானை ஒன்றென்பதும், அதன் பெயர் பிணிமுகம் என்பதும், அருள் செய்வதற்கும் போர் செய்வதற்கும் போர் செய்வதற்கும் எழுந்தருள்கையில் அதனை அவர் ஊர்ந்து செல்வார் என்பதையும் அறியலாம்.

இக்குறுந்தொகைப் பாடலுக்குச் சான்றாக "வேழமேல் கொண்டு" (முருகு-82), "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (முருகு-247) என்ற திருமுருகாற்றுப்படையும், "கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு" (பதிற். 11-6), சேயியர் பிணிமுகம் ஊர்ந்தம ருழக்கி" (பரி 5.2) என்ற பதிற்றுப்பத்தும், பரிபாடலும் விளங்குவதை அறியலாம்.

வரலாற்றுச் செய்திகள்

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
குாமம் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந்- 2:1-2)

இப்பாடலை, பாண்டியனால் சங்க மண்டபத்தின் முன் கட்டப்பட்ட பொற்கிழியைத் தருமி என்னும் பிரம்மசாரி ஒருவன் பெறும் பொருட்டு ஸ்ரீசோமசுந்தரக் கடவுள் இயற்றியதாக வரலாறு தெரிவிக்கிறது. மேலும் இப்பாடலை "தமிழ்நாவலர் சரிதை" சிந்தாசமுத்தி அகவல் என்று போற்றுகிறது.

ஆரியநாட்டிலுள்ள கூத்தர்கள், கழையை நட்டுக் கயிறு கட்டி, அக்கயிற்றின் மேல் ஆடுவர் என்பதை,

"வில்லோன் காலன கழலே தொடியோள் மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறொடு பறையிற் கால்பொரக் கலங்கி வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே" (குறுந்.7)

இப்பாடல் தெரிவிப்பதை அறியலாம். மேலும் உடன்போக்கின்போது நேரும் இடையூறுகளை நீக்குதல் பொருட்டு வில்லுடையனாதலின் தலைவனை வில்லோனென்றனர். ஊதயணன் வாசவதத்தையைக் கொண்டு செல்லுகையில் வராகன் என்பவனது கையில் இருந்த வில் முதலியவற்றைப் பெற்றுச் சென்றானென்றும், பின்பு தன்னை வளைத்த சவரர் புளிஞரை அவற்றால் வென்றான் என்றும் பெருங்கதையில் காணப்படும் செய்தியை அறியலாம்.

குறுநில மன்னர்கள்

"குட்டுவன் மரந்தை யன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே" (குறுந்-34:6-7)

குட்டுவன் என்பவன் குட்ட நாட்டை உடையவன் என்றும், அந்நாடு மலை நாட்டின் ஒரு பகுதி என்றும் இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது, மேலும் இதன்மூலம் குட்டுவன் என்னும் பெயர் சேரர்களுக்குரியது என்பது தெளிபாகிறது.

கொங்கு நாட்டுக்கருகில் மலைநாட்டில் இருந்தவன் நன்னன். அவனது காவல் மரம் மா ஆகும். சங்ககாலத்தில் பகையரசர்களோடு போரிடும் முன் காவல்மரத்தை வெட்டுவது மரபு. இதனை,

"வடிநவில் நவியம் பாய்தலின் ஊர்தொறும்
கடிமரம் துளங்கிய காவும்" (புறம்.23:8-9)

இப்புறநானூற்றுப் பாடல் நமக்கு தெரிவிப்பதை அறியலாம்.

"மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல" (குறுந். 73:1-4)

இப்பாடலில் கோசர் என்னும் ஒருவகை வீரர் சூழ்ச்சி செய்யும் தந்திரத்தை உடையவர் என்பதை அறியலாம்.

அதியமான் அஞ்சி. தன் நாட்டுப் பசுக்களைப் பகைவர் கொண்டு சென்றபோது எதிர்த்துப் போரிட்டு அப்பசுக்களைக் காத்தான். இச்செய்தியை.

"நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி

முனையான் பெருநிரை போலக்" (குறுந். 80:5-6)

இப்பாடலில் காணமுடிகிறது.

பொதிகைமலை ஆய் என்னும் வள்ளலுக்கு உரியது என்பதற்கு,

"கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்" (குறுந். 84:3)

என்ற குறுந்தொகை அடி சான்றாக இருப்பதை அறியலாம்.

நன்னன் என்னும் சிற்றரசன் ஆற்றங்கரை அருகில் இருந்த தன் தோட்டத்தில் மாமரத்தின் காய் ஒன்று நீரில் மிதந்து வந்தது. அப்போது ஆற்றில் குளிக்கச் சென்ற பெண் ஒருத்தி அக்காயை எடுத்துத் தின்றாள். இச்செயலுக்காக, அப்பெண்ணிற்கு நன்னன் கொலை தண்டனை அளித்தான். இதனை அறிந்த அவள் தந்தை அவளது நிறைக்கேற்ற பொன்னால் செய்த பாவையையும் என்பத்தொரு களிற்றையும் தண்டமாக இறுப்பாதாக் கூற அதற்கு நன்னன் உடம்படாமல் கொலை செய்தான். இச்செய்தியை,

"மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை

புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்

கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை

பொன்செய் பாவை கொடப்பவுங் கொள்ளான்

பெண்கொலை புரிந்த நன்னன்" (குறுந். 292:1-5)

இப்பாடலின் மூலம் அறியமுடிகிறது.

மடலேறுதல்

காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரைப் போன்ற உருவம் அமைத்து, அதன் கழுத்தில் மணி, மாலை முதலிவற்றைப் பூட்டித் தன் உருவத்தையும் தலைவியின் உருவத்தையும் ஒரு படத்தில் வைத்து கையில் ஏந்தி அதன்மேல் யாவரும் அறிய ஊர்ந்து வருதலை மடலேறுதல் என்பர்: அங்ஙனம் அவன் வருவதைக் கண்ட ஊரினர், இருவருக்கும் திருமணம் செய்து வைப்பர்.

"மாவென மடலு மூர்ப பூவெனக்

குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப

மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே” (குறுந்.17)

இப்பாடலால், மடலேறும் தலைவன் நீறு, எருக்கமாலை, ஆவிரம்பூமாலை முதலியவற்றை அணிந்து வருதல் வழக்கம் என்பதை அறியலாம்.

முடிவுரை

அகச்செய்திகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் குறுந்தொகையில் காணப்படும் இறையனார் தருமிக்கு அளித்த பாடல், முருகக் கடவுளின் சிறப்பு, குறுநிலமன்னர்களின் செயல்பாடுகள், மடலேறும் தலைவனின் செயல்கள் ஆகிய வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றிருப்பது தனிச்சிறப்பாகும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

‘வை’யே கூர்மை

மு.செல்வராஜ்

முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழாய்வுத் துறை பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி-620 023.

தமிழ் இலக்கண உலகில் தனிசிறப்பையும் முதன்மை இடத்தையும் பெற்றிருக்கும் தொல்காப்பியரின் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் முப்பொருண்மை உடையது.

அதன் சொல்லதிகாரம் பெயர், வினை, இடை, உரி எனும் நால்வகைச் சொற்களை விளக்குகின்றது. அச்சொற்களுள் ஒன்றான உரிச்சொல்லுக்குத் தொல்காப்பியர் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஏனெனில் உரிச்சொற்கள் தான் சொல்லின் வேர்ச்சொல்லாகவும், அடிச்சொல்லாகவும் அமைந்து பல சொற்களை உருவாக்குகின்றன. செய்யுளுக்கு உரிய சொற்களாகவும் விளங்குகின்றன. உரியியலில் பல உரிச்சொற்களும் அவை உணர்த்தும் பொருள்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றான வை எனும் உரிச்சொல் கூர்மை என்ற பொருளைக் குறிக்கும் என தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அவ்வுரிச்சொல் சங்க இலக்கியங்களில் எவ்விதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.

வை-பொருளும் விளக்கமும்

வையே கூர்மை (நூற்பா எண்.387)

என்கிறார் தொல்காப்பியர். வை எனும் உரிச்சொல் கூர்மை என்று பொருள்படும். இந்நூற்பாவிற்கு விளக்கம் தரும் இளம்பூரணர்

வையிலை நெடுவேல் எனும் பாடல் வரிகொண்டு

கூர்மையான இலை போன்ற வேல் என உரையெழுதியுள்ளார் சேனாவரையர்.

வைநுனைப் பகழி எனும் பாடல் வழி (பகழி-அம்பு) கூர்மையான அம்பு என்று பொருளுரைத்துள்ளார்.

கு.சுந்தரமூர்த்தி,

வைநுனைப் பகழி (தொல்.சொல். நூற்பா எண்.387)

என்ற பாடல் வழி சேனாவரையரின் கருத்து வழிமொழிந்துள்ளார். இவ்வாறு தொல்காப்பியர் வழியாக பல்வேறு உரையாசிரியர்கள் வை என்பதற்கு கூர்மை என்று பொருள்படும் என்பதை தங்களது உரைகளில் பதிவு செய்துள்ளனர்.

சங்க இலக்கியத்தில் 'வை'

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தோன்றிய காலத்தை சங்க காலம் என்றும் அதனை சங்க இலக்கியம் என்றும் கூறுவர். பத்துப்பாட்டில் முதன்மை நூலான நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் வை என்பதனை கூறுகையில்,

வைந்துதி பொருத வடுவாழ் வரிநுதல்

வாடா மாலை ஓடையொடு துயல்வரப் (திருமுருகாற்றுப்படை-78)

கூர்மை பொருந்திய தோட்டி வெட்டிய தழும்பு அழுந்திப்போன நெற்றியில், மாலை அசைய, இரு பக்கமும் மணிகள் மாறி மாறி ஒலிக்க, வேகமாக நடக்கும்போது இயமனை போன்ற வலிமை உடைய ஆண் யானை என்று திருச்செந்தூர் முருகன் எழுந்தருளும் யானையுடைய சிறப்பினை கொண்டுள்ள இப்பாடலில் வை என்ற சொல் கூர்மை எனும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

வேற்றலை யன்ன **வை**ந்நுதி நெடுந்தகர்
ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை (பெரும்பாணாற்றுப்படை-87)

எயிற்றியர் குடிசை தோற்றப் பகுதியில் வேல் போன்ற நுனியினை உடைய ஈச்ச இலையினால் வேயப்பட்டிருக்கும் உயரமான முகட்டினையுடைய எய்ப்பன்றியின் முதுகு போன்ற தோற்றத்தையும் உடையது என்றும், பெரும்பாணாற்றுப்படை வரிகளில் கூர்மை எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும்,

" **வை**ந்நுதி மழுங்கிய புலவுவாய் எ.ஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்

சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனகர்" (பெரும்பாணாற்றுப்படை 119)

எனும் வரிகளில் பகை கொண்ட பகைவர்கள் அச்சம் கொள்ளும்படி குத்திய கூர்மையான முனை மழுங்கி மாமிச நாற்றம் வீசும் வாயினை உடைய வேல்கள் என்று கூர்மை என்ற பொருளில் அமைந்திருப்பதை காணமுடிகின்றது.

பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில் (பெரும்பாணாற்றுப்படை-225)

பழைய சோற்றை வெறுத்தால் வளம் மிக்கதும் வயல் பரப்பில் புதிய வைக்கோல் கொண்டு வேயப்பட்டதுமான குவிவான குடிசையின் முற்றத்தில் அவல் இடிப்பர்.

வையுந் துரும்பும் நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபாற் (பெரும்பாணாற்றுப்படை-239)

என்று மருதநிலத்தின் வளத்தினை கூறும் வகையில் குப்பைகளை எல்லாம் நீக்கிவிட்டு நெல் நன்றாகக் காய்ந்த பின்பு வெப்பக் காற்றில் தூவி நெல்குவியல்கள் வடதிசையில் உள்ள மேருமலையினைவிடச் சிறப்பாகத் தோன்றும் மருத நில வயல்களின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார். நப்பூதனார் இயற்றிய முல்லைப்பாட்டில் மன்னனின் நிலையினை எடுத்துரைக்கும் விதமாக,

வைந்நுணைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்

துண்ணா துயங்கு மாசிந் தித்தும் (முல்லைப்பாட்டு-73)

காவலாகப் போடப்பட்ட தோல் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு கூர்மையான அம்புகள் புகுந்ததனால் புல் உண்ணாமல் செவிகளை ஒரு புறமாகச் சாய்த்து நிற்கும் குதிரைகளை நினைத்தும் அமைகின்ற தன்மை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சியில், **வை**யெயிற்று

வார்ந்த வாயர் வணங்கிறைப் பணைத்தோட் (மதுரைக்காஞ்சி-413)

கூர்மையும் வரிசையுமாக அமைந்த பற்களை உடையவர்களும், அழகான வளைந்த மூங்கிலைப் போன்ற தோளினையும் கையில் இருந்து நழுவும் வளையல்களை அணிந்தவர்களாக பெண்களின் நிலையினை மாங்குடி மருதனார் வருணிக்கும்போது கூர்மையான பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உண்டாயின் பதம் கொடுத்து,

இல்லாயின் உடன் உண்ணும்

இல்லோர் ஒக்கல் தலைவன்,

அண்ணல்எம் கோமான், **வை**ந்நுதி வேலே (புறநானூறு-95:9)

என்னும் புறநானூற்றுப்பாடல் உண்டானால் உணவளித்தும், இல்லையானால் உள்ளதைப் பகிர்ந்தளித்தும் மகிழும் வறியோர் தலைவனாகிய எம் வேந்தன் அஞ்சியின் வேல்களோ, பகைவரைக் குத்துதலால் நுனி முறிந்தனவாகக் கொல்லன் உலைக்களத்திலே அன்றோ சிதைவுற்றுக் கிடக்கின்றன என்கிறது. இதில் கூர்மையான வேல் என்னும் பொருண்மை விளக்குகின்றது.

அதியமானின் புகழை எடுத்துரைக்கும் விதமாக ஔவையார், பாடாண் திணையில் பாடிய

வையகம் புலம்ப வளைஇய பாம்பின்

வைஎயிற்று உய்ந்த மதியின், மறவர்

எனும் பாடல் வரிகள் சிற்றாற்றின் கரையிலே, பகைவரது அம்புகளால் துளைபட்டுக் குறியிலக்கம்போல அங்கேயே வீழ்ந்தது. இங்கு வை எயிற்று என்பது பகைவரின் கூர்மையான அம்பினைக் குறிக்கிறது.

மண்கொள வரிந்த **வை**ந்நுதி மறுப்பின் (புறநானூறு 288:1)

எனும் வரி போரிடச் சென்ற வீரனின் மரணத்தை அறிந்த மனைவி, அவன் மார்பை தழுவ நினைத்தபோதும், பருந்துகள் அப்புண்ணை மொய்க்கும் தன்மையினைக் கூறுகின்றது. கூர்மையான நெடுவேலினை கொண்டு போரிடும் தன்மையினையும் அறியமுடிகிறது.

வெட்சி திணையில் அமைந்த **வை**ந்நுதி

நெடுவேல் பாய்ந்த மார்பின்,

மடல்வன் போந்தையின், நிற்கு மோர்க்கே! (புறநானூறு-297:8)

எனும் புறநானூற்றுப்பாடல்,

மார்பிலே நெடுவேல் பாய்ந்தும் அசையாது பண மரம்போல நிற்கும் மறவனுடைய நிலையை கூறுகின்றது.

மதுரை மருதனிளநாகனார், காஞ்சி திணையில், **வை** என்ற சொல்லை பயன்படுத்துகையில்,

வைஎயிற்று

அரிமதர் மழைக்கண், அம்மா அரிவை (புறநானூறு-349:4)

என்கிறார். இதில் கூரிய பற்களும், அரிபரந்து மதர்த்து குளிர்ந்த கண்களும், மாமை நிறமும் உடைய இவள், இவ்வூர்க்குக் கேடுதரப் பிறந்தவளேயாவாள் என்று பெண்ணின் தன்மையினை கையாண்டுள்ளார்.

முடிவுரை

மேற்சுட்டிய சான்றுகளின் வழி **வை** எனும் உரிச்சொல் தொல்காப்பியர் சுட்டிய பொருண்மையிலேயே சங்க இலக்கியப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை இக்கட்டுரை விளக்கியுள்ளது. சங்க இலக்கியங்கள் காலத்தால் பிந்தியவையாக இருந்தபோதும் தொல்காப்பிய உரிச்சொல்லின் பொருள் மாறாத் தன்மையை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

சிலப்பதிகாரத்தில் ஒருசொல் பலபொருள

அ. அறிவுக்கொடி

முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழாய்வுத் துறை

ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல், கல்லூரி (தன்னாட்சி),திருச்சிராப்பள்ளி – 5

முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் காப்பியங்களில் மிகுந்த அழகும் இனிமையும் நிரம்பி இருப்பதை அனைவரும் அறிந்ததே. நீண்ட கதை சொல்லும் செய்யுள் வடிவமே காவியம். காவியமானது கவிஞன் தன் உணர்ச்சியையோ (அ) பெற்ற அனுபவத்தையோ தன்னுடைய இனிமையான சொற்களாலும், பொருளாலும் எடுத்துக்காட்டுகின்றான். நாம் அதை கண்டு, உணர்ந்து அனுபவிக்கும் படி முழுமையாக வெளிப்படுத்தும் கற்பனைத் திறனே காவியம் எனப்படுகிறது.

இதனடிப்படையில் சிலப்பதிகாரத்தில் ஒருசொல் பலபொருள் எனும் தலைப்பில் இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

சிலப்பதிகாரம் - காவியச் சிறப்பு

காப்பியத்தின் இலக்கணப்படி நான்கு உறுதிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை இரட்டைக் காப்பியங்கள். ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையாய் விளங்குவதே சிலப்பதிகாரம். நாட்டின் சாதாரண குடிமக்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட நூலாதலின் இதனை குடிமக்கள் காப்பியமாக அழைப்பதே சிறப்பானதாகும். சிலப்பதிகாரம் எழுந்ததன் நோக்கத்தை மூன்று கூற்றுகளால் அறிந்துகொள்ளமுடிகின்றது.

பொருளுரை

தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக சிலப்பதிகாரத்தில் ஒருசொல் பலபொருள், எனும் தலைப்பினை மையமாகக் கொண்டு இக்கட்டுரையை தொடரலாம்.

ஒரு சொல் பல பொருள்

ஒரே சொல்லானது பல இடங்களில் வந்து பல பொருளைத் தருவதே ஒரு சொல் பலபொருள் என்படும். இதனை மையாகக் கொண்டு சிலப்பதிகாரத்தில்

அரி, இறை , கோ , பூ, மா போன்ற சொற்களை ஆய்விற்கு எடுத்துள்ளேன்.

அரி, அறி என்னும் சொல்லின் பொருள்

அரி ⟶ நெற்கதிர், வண்டு, கோடு, திருமால், சிங்கம், பகைவன், பாம்பு, அழகு, மரவயிரம் சந்திரன், தேர், மூங்கில், பறை, குரங்கு, பரல் போன்ற பல பொருள்களை உடையது.

அறி ⟶ உணர்வு, அறிவு, அறிந்துகொள்ளுதல்,

சிலப்பதிகாரத்தில் அரி, அறி என்னும் சொற்களின் பொருள்

சிலப்பதிகார புகார்க் காண்டத்தில் அரி, அறி என்னும் சில சொற்கள் இடம் பெற்றுள்ளன.

கடலாடு காதை

அரியகம் காலுக் கமைவுற அணிந்து (வரி 85)

அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து (வரி. 94)

இங்கு அரியகம் என்னும் சொல் பாதசாலம் என்னும் சிலம்பினைக் குறித்தது.

அரிமயிர் - அழகிய மெல்லிய மயிரை உடைய முன்கை என்னும் பொருளில் வந்துள்ளது.

நாடுகாண் காதை

அரிந்து கால் குவித்தோர் அரி கடாவுறுத்த (வரி. 136)

அரி ⟶ நெற்கதிர், அறுத்தப் போட்ட நெற்சூட்டினையும் குறிக்கிறது.

அறி – அறிவன் அறவோன் அறிவு வரம் பிகந்தோன் (வ.176)

அறிவன் ⟶ எல்லாவற்றையும் அறியும் அறிவுடையவன்

அறிவோன் ⟶ அறம் செய்பவன்

அறி ⟶ அறிவு மேற்கூறிய அரி, அறி என்னும் சொல்லானது முறையே சிங்கம், பரல், பெண், அறிவு, உணர்வு, அறம் என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

இறை, இரை

இரை - உணவு, ஒலி

இறை - கடவுள், அரசன், வரி, முதன்மை, சந்து, வீட்டின் கூரை, தங்குதல், மூட்டுதல், விடை, விரல், முன்கை, தலைவன், கூன், பறவை இறகு, அற்பம், எனப்பல பொருள்களில் வரும்.

புகார்க் காண்டம்

கோண் இறை கொடுத்த கொற்றப் பந்தரும் - வரி.100

இறை – திறை, (வரி)

கனாத்திறமுரைத்த காதை

துறைபோயவர் முடிந்த, பின்னர் இறையோனும் - வரி.30

இறை – சாத்தான் (கடவுள்)

மதுரைக்காண்டம்

புறஞ்சேரியிறுத்தகாதை

அரவுஞ்சூரும் இரைதேர் முதலை – வரி.7

இரை – உணவு

ஊர்காண் காதை

புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடல் - (வரி 8)

இறை - புகுதல்

வழக்குரை காதை

இறைமுறை பிழைத்தான் வாயிலோயே – 26

இறை – அரசன், கடவுள் என்னும் பொருளாகி உள்ளது.

வஞ்சிக்காண்டம்

காட்சிக்காதை

இறை மகன் செவ்வி யாங்கணும் பெறாது – 35

இறைமகன் - அரசன் மகன்

கால்கோட் காதை

இரைதேர் வேட்டத்தெழுந்த அரிமாக் - வரி -188

இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி - 57

இறைஞ்சி – வணங்குதல்

இரை – உணவு

இரை, இறை என்னும் ஒருசொல் மேற்கூறிய பல பொருட்களில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளது.

கோ

கோ – ஓர் எழுத்து அரசன் தந்தை, தலைவன், குயவன், மலை, பெருமை, எருது, சுவர்க்கம், பூமி, கண், நீர் ஆகிய பொருள்களால் சுட்டப்பெறுகின்றது.

சிலப்பதிகாரத்தில் கோ என்னும் சொல்லானது பல இடங்களில் பல பொருளில் வந்துள்ளது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

புகார்க் காண்டம்

மனையறம் படுத்த காதை

தேவர் கோமான் தெய்வக் காவற் - வரி. 47

கோ – அரசன் கோமான் - இந்திரன் தேவர்களின் தலைவன் எனவும் இடம்பெற்றுள்ளது.

இந்திரவிழா எடுத்த காதை

விண்ணவர் கோமான் விழவு நாளகத்தென் (வ.240)

கோ – அரசன், கோமான் இந்திரனைக் குறித்தது.

மதுரைக் காண்டம்

புறஞ்சேரியிறுத்த காதை

கோசிய மாணி கூறக் கேட்டே – வ.53

கோசியமாணி – கௌசிகன்

வழக்குரைக் காதை

கோப்பெருந்தேவி சென்று தன் - வ.21

கோயில் மன்னனைக் குறுகினள் - வ. 47

கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி – 79

கோப்பெருந்தேவி – பாண்டிய மன்னனின் மனைவி பெருந்தேவி

கோயில் - அரசனின் அரண்மனை

கோ என்னும் சொல்லானது, மன்னன், தலைவன், அரசன் வாழும் இடம், நகரம், எனப் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருகிறது.

பூ

பூ என்னும் சொல்லானது மலர், அழகு, நிறம், பூமி, சேவலின் தலைச்சூடு, தாமரை, பிறப்பு, கூர்மை. தமிழ்க் காப்பியம் எனப்படும் சிலப்பதிகாரத்தில் பூ என்னும் சொல் ஒரு சில இடங்களில் வந்துள்ளது.

புகார்க் காண்டம்

மங்கல வாழ்த்துப் பாடலில்

பூம்புகர் போற்றதும் பூம்புகார் போற்றதும் - வரி. 10

பூம்புகார் -அழகிய, பொலிவுடைய என்னும் பொருளில் வந்துள்ளது.

வயற்பூ வாசம் அளைஇ அயற்பூ - வரி.16

சுரும்புணக்கிடந்த நறும்பூஞ் சேக்கை – வரி. 28

வயற்பூ - நீர்ப்பூக்கள், அயற்பூ - கோட்டுப்பூ

நறும்பூ - மணம் மிகுந்த மலர்

பூ - பூ என்னும் சொல்லானது மலரையே குறிக்கிறது.

இந்திரவிழா எடுத்தகாதை

பூவும் புகையும் பொங்கலும் - வரி. 69

பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் - வரி. 195

பூமலி கானத்துப் புதுமணம் புக்குப் - வரி .197

இங்கு பூ எனும் சொல்லானது முறையே மலர், அழகு, பூ விற்குமிடம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

மதுரைக் காண்டம்

ஊர் காண் காதை

பூம்புணை தமீஇப் புனலாட் - வி.75

பூம்புணை – பூமாலை

புகையவும் சாந்தவும் பூவிற் - 177

பூவிற்புணையவும் - பூ மாலை

பூ என்னும் ஒரு சொல்லானது மலர், அழகு, பூமி, பொலிவு, மென்மை என்னும் பல பொருளை தருவதை அறிந்தோம்.

மா

மா : இலக்குமி, பெரிய, சிறந்த, விலங்கு, மான், மாமரம், வண்டு, மாவு, செல்வம், மாற்று, ஒருநிறை, இருபதில் ஒருபங்கு, வலிய, கருமைநிறம், ஓர் அசைச்சொல்

தமிழின் முதன்மைக் காப்பியமாகிய சிலம்பில் மா, மாநகர், என்னும் சொல்லானது மிகப் பெரும்பாலன இடங்களில் வந்துள்ளதைக் காண்போம்.

புகார்க் காண்டம்

மங்கல வாழ்த்துப் பாடலில்

மாமழை போற்றதும் மாமழை – வரி. 7

மாநகர்க் கீந்தார் மணம் - வரி. 44

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் - வரி.52

பெரிய, பெரியநகர், வயதில் மூத்த பிதாமகன் என்னும் பொருளைத் தருகிறது.

மதுரைக்காண்டம்

காடுகாண் காதை

மாமுது மறையோன் - வரி. 32

மாமறை முதல்வன் மது – வரி. 58

மா – சிறந்த, மிகுந்த புகழ் உடைய என ஆகிய வந்துள்ளது.

மாவும் பலாவும் சூழடுத் (வரி-84)

மா – மா மரத்தினைக் குறித்தது

மாமறையோன் வாய்வாழித் - வரி.150

மா – பெருமையுடைய

மதுரை மூதூர் **மா**நகர் - வரி. 188

மா- பெரிய நகரம்

வஞ்சிக் காண்டம் - காட்சிக்காதை

மாநீர் வேலிக் கடம் பெறிந்து – வரி. 1

மா – கடல்

நீர் படைக்காதை

மாபெருந்தானை மன்னகுமரர் - வரி. 180

மா – மிகப்பெரிய படை

நடுகற்காதை

மாந்தளிர் மேனி மடவோர் தம்மால் - வரி. 25

மா – மாந்தளிர் (மரம்) மென்மையான இவை மட்டுமல்லாது இன்னும் பல இடங்களில் பெரிய, சிறப்பு, புகழ், மாமரம், விலங்கு, மென்மை, கடல், அழகு எனப் பல பொருளில் வருவது சிறப்பாகும்.

முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் ஒருசொல் மட்டுமல்ல ஓர் எழுத்தும் கூட பொருள்தரும் சிறப்பினை உடையது. சிலம்பில் கூறப்பட்டுள்ள ஒருசொல் பலபொருள் சொற்களான அறி, அரி, இறை, இரை, கோ, பூ, மா ஆகிய சொற்களின் பொருளை இக்கட்டுரையின் மூலம் ஆராய்ந்து அறிந்துகொண்டோம்.

தமிழ் இலக்கியங்களில் ஓரெழுத்து கூட உயிர்பெற்று தமிழை நிலையாய் வாழவைக்கும் அரிய சிறப்பினை உடையது.

இச்சீர்மிகு சிறப்பால் என்றென்றும் தமிழும்,**தமிழ் இலக்கியங்களும்** வாழ்ந்து கொண்டே இருக்கும். அதில் **சொல்லும் பொருளும்** சேர்ந்து சுவையூட்டிக் கொண்டே இருக்கும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

அன்பு

ஆஸ்பி வியாகுலின்,

இளங்கலை கல்வியியல்,பூண்டி புதுமை மாதா கல்வியியல் கல்லூரி, சமயபுரம்.

முன்னுரை

தனிமனிதனின் சிக்கல்களுக்கு, குழப்பங்களுக்கு தீர்வு காணும் பொருட்டு உலகில் பல்வேறு நாட்டு அறிஞர்கள் பல அரிய கருத்துக்களை வழங்கியுள்ளனர். அவ்வகையில் வள்ளுவரின் அறம்-பொருள் பால் பகுதியிலுள்ள குறட்பாக்கள் முழுவதும் அன்பைப் பற்றியும், அறிவுரையும் பற்றியும், தேவையான பண்புகளை கூறியுள்ளது. இவை தவிர நாம் வாழும் இத்தாய் திருநாட்டில் அன்பு என்பது காலந்தோறும் வளர்ந்து கொண்டேயிருப்பது.

அன்புநிலை

அன்பே அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் கருவாகும். ஆண்டவனைக் கூட நம்பணி செய்ய "அன்பே" உறுதுணை புரிவது. அன்பினால் ஆகாதது எதுவுமில்லை. அதே வேளையில் அன்பில்லா உயிர் வாழ்க்கை கொடிய வனத்தில் வாழ்வதை விடக் கொடுமையானது. அன்று தொட்டு இன்று வரையுள்ள அனைத்து சமயங்களும் உரைப்பது உயிர்களிடத்து அன்பும் இரக்கமும் கொள்க என்பவையே. இறைவனே அன்பாக இருப்பவர் இதனை திருமூலர்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்,

அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்,

அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்"

அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே!"

எனும் பாடலால் தெரிவிப்பர். இப்படிப்பட்ட அன்புள்ளம் கொண்டவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இருக்கின்றது.

ஒவ்வொரு மனிதனிடமும் அன்பு என்னும் உணர்ச்சி இருக்கிறது. இவ்வுணர்ச்சியே மனிதநேயப் பண்பின் விதையாகும். இவ்விதையை வள்ளுவர் மனிதனிடம் செழுத்திலுங்க வேண்டும் என்கிறார். இவற்றை நடை முறையில் பேணுதல் வேண்டும் எப்படி எனில்,

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு"

இக்குறள் சமூக செயற்பாங்கில் ஈடுபடுவர் தன்னுடைய உடலைக்கூட பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர். இது ஆரோக்கியமான தன்முனைப்பு ஆகும்.

இனிமையான சொற்கள் பகைமையை அழித்து மனித மாண்புகளை வளர்க்கும். சமூகச் செயலில் ஈடுபடும் பொழுது

"இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (கு.100)

வார்த்தைகளில் இனிய சொற்றொடர்களை பயன்படுத்துவதன் வாயிலாக நல்ல "அன்பு" என்பதை வளர்க்கலாம் என்று கூறுகிறார்.

சமூக அமைப்பில் ஒரு மனிதன் தனித்து இயங்கிட முடிவதில்லை. பல உறவுகள் சேர்ந்து ஒரு குடும்பமாகவும், பலகுடும்பங்கள் சேர்ந்து சமுதாயமாகவும் உருவாகி தன்னுடைய வாழ்வை நெறிபடுத்திக் கொண்டு களிப்புடன் வாழ வழி சொல்வது அன்பு மட்டுமே. அன்பினால் மட்டுமே அவனுடைய உடல் இயங்குகிறது. அன்பு இல்லாத மனிதர்களை வெறும் எலும்புக் கூடுகள் என்றே மொழிகிறார் வள்ளுவர்.

"அன்பின் வழியது உயிர்நிலை அ.ஃது இலார்க்கு

என்பு தோல் போர்த்த உடம்பு (குறள் 80)

அன்புடையவரே தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென அர்ப்பணிக்கும் மனப்பக்குவம் உடையவர்கள் அன்பிலாதவர் எல்லாம் அனைத்தும் தனக்கு மட்டும் உரியது என்ற சுயநல சிந்தனை கொண்டவர். எனவே, மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் மற்ற உயிர்களிடத்தில் அன்போடும், பண்போடும், பாசத்தோடும், இரக்கத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கிறார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துபவர்களால் மட்டும் சொர்க்கத்தை எய்த முடியும் என்கிறார்.

அன்பு

உதயகுமரன் இறப்பினால் சிறையில் அடைக்கப்பட்டு உதயகுமரனின் தாய் இராசமாதேவியால் பலவித இன்னல்களுக்கு ஆளாகிறாள். மணிமேகலை, இருப்பினும் மனம் திருந்தி தன்னிடம் பொறுத்தருளுமாறு வேண்டி நிற்கும் இராசமாதேவியிடம் அன்பு கொண்டு.

" உடற்கழு தனையோ உயிர்கழு தனையோ

உடற்கழு தனையேல் உன்மகன் றன்னை

எடுத்துப் புறங்காட்டிட்டனர் யாரே?

உயிர்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்

செய்ப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது

அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி"

எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும் என்ற அருளறத்தை மேற்கொள்ளச் செய்கிறாள் இதன்கண் மணிமேகலையின் தெளிந்த நுண்ணறிவுத் திறன் புலனாகின்றது.

மணிமேகலை உதயகுமரன் தந்தை மூலமாகத் தண்டிக்கப்பட்டு சிறைச்சாலையில் பசியால் வாடிய மக்களுக்கு உணவளித்து, அவர்களுக்கு அறக் கருத்துக்களைக் கூறி சிறைச்சாலையை அறச்சாலையாகத் தன் அன்புத் தொண்டினால் சீர்திருத்தம் செய்தாள்.

அன்புடைமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர்

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும் (71)

அன்புக்கு அடைத்து வைக்கும் தாழ் ஏதேனும் உண்டோ? அன்புடையாரின் சிறிதளவு கண்ணீரே அவர் அன்பைப் பற்றி பலர் அறிய வெளிப்படுத்தி விடும்.

"அன்பினால் எதையும் சாதிக்க இயலும்

"அன்பு" என்ற வார்த்தை நம் சங்ககாலம் தொட்டே வருகிறது.

முடிவுரை

"அன்பு" என்ற ஒன்றே நம் அனைவரிடத்தில் நீங்காத நிலைப்பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

முத்தொள்ளாயிரத்தில் சோழன் என்னும் சொல்லாட்சி

அ.சதிஸ்குமார்

விரிவுரையாளர்,தமிழாய்வுத்துறை,ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி,திருச்சி – 05.

தமிழ் மொழிக்குச் செம்மொழி என்ற பெருமை தேடித்தந்த பனுவல்களுள் ஒன்று முத்தொள்ளாயிரம் ஆகும். இந்நூல் பண்டைத் தமிழகத்தை ஆட்சி செய்த சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர்களைப் பற்றியும் அவர்களின் நாட்டு வளம், நகர் வளம், படைப்பெருமை, வீரம், வெற்றி போன்றவற்றைப் பற்றியும் எடுத்து இயம்பும் வரலாற்றுக் கருவூலமாக விளங்குகிறது. இந்நூலில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் தனிப்பெயர் இடம் பெறாமல் பொதுப் பெயரே அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. அவ்வாறு அமைந்த பெயர்கள் குலப் பெயராகவும், காரணப் பெயராகவும், இடப்பெயராகவுமென பல்வேறு நிலைகளில் அமைந்துள்ளது. இச்சோழ மன்னர்களின் பெயர்களை ஆய்வுப் பொருண்மையாகக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

காவிரியால் பெற்ற பெயர்

“தண்புனல் பரந்த பூசல் மண் மறுத்து
மீனின் செறுக்கும் யாணர்ப்
பயன் திகழ் வைப்பின, பிறர் அகன்றலை நாடே” (புறம் 8:11-13)

என்ற கருங்குழலாதனார் அவர்களின் அடிகளுக்கு ஏற்ப, வளம் நிறைந்த காவிரியாறு பாய்ந்து வளம் செய்யும் நாடு சோழ நாடு ஆகும். அந்நாட்டை ஆட்சி செய்தவர்கள் சோழர்கள் ஆவர். காவிரியாறு சோழர்களின் புகழுக்குச் சிறப்பு சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. எனவே சோழ அரசர்களின் பெயர்களில் காவிரி நீங்கா இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

“வான்பொய்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி” (பட்டினப் பாலை 5-6)

என்ற பட்டினப்பாலை வரிகளுக்கு ஏற்ப நீர் வளம் நிரம்பிக் காணப்படும் காவிரியால் சோழ நாடு வளம் பெற்றுத் திகழ்வதைக் கூற விரும்பிய புலவர்கள் அதன் சிறப்பை அரசனின் பெயரோடு இணைத்து வழங்கியுள்ளனர். இதனை நீர் நாடன்(30,41), புனல்நாடர் (26),பொன்னி வளநாடன்(40),

பூங்காவிரி நாடன்(42), புனல் நாடன்(51),காவிரி நீர் நாடன்(58),நீர்நாட்டு காளை(61), வண்புனல் நீர்நாடன்(63) போன்ற பெயர்கள் மூலம் அறியலாம். மேலும் புதிய நீரைக் கொண்டுவரும் காவிரி ஆற்றினைக் கொண்டவன் என்றும் காவிரிக்கு தலைவன் என்றும் காவிரியால் வளம் பெற்ற வயல்களைக் கொண்டவன் என்றும் பூக்கள் மிதந்து வரும் அழகிய காவிரி பாயும் நாட்டை உடையவன் என்றும் காவிரியால் சோழ மன்னர்கள் புகழப்பட்டனர். இவ்வாறு காவிரியால் சோழ மன்னர்களும் சோழ மன்னர்களால் காவிரியும் புகழ் பெற முடிந்தது எனலாம்.

நகரால் பெற்ற பெயர்கள்

"மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மருவியதோர் தன்மைத்தால் காலையே
விற்பயில் வானகம் போலுமே வெவ்வளவன்
பொற்பார் உறந்தை யகம்"(முத்தொள்ளாயிரம் 28)

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப வளமும் அழகும் நிறைந்த உறையூரையும், புகாரையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் சோழ மன்னர்கள் ஆவர். ஒரு நாட்டின் சிறப்பை அந்நாட்டின் தலைநகரைக் கொண்டு அளவிடும் வழக்கம் அக்காலப் புலவர்களிடம் இருந்து வந்துள்ளது. ஆகையால் தான் அந்நாட்டின் நகர் வளத்தை அம்மன்னனின் பெயர்களோடு சேர்த்துச் சிறப்பு செய்துள்ளனர்.

சோழர்களின் நகர் சார்ந்து 'கோழியர்கோக் கிள்ளி' (35), 'தென் உறந்தையார் தம் பெருமான்' (43), 'உறந்தையர் கோன்' (47), 'உறையூர் வளவன்' (50), 'புகாஅர்ப் பெருமானார்' (52), 'கோழிக் கோமான்' (59), 'கோழி உடையான் மகன்' (68), போன்ற பெயர்கள் குறிக்கின்றன. உறையூரின் தலைவன் என்றும் புகார் நகரின் தலைவன் என்றும் அதன் மற்றொரு பெயரான கோழியூர்க்கு அரசன் என்றும் அந்நகரின் காவலன் என்றும் உறையூரின் புதல்வன் என்றும் பொருள் கொள்ளும் விதமாக இப்பெயர்கள் அமைந்துள்ளன.

வீரத்தால் ஏற்ற பெயர்கள்

"அறிவுஅறி வாகச் செறிவினை யாகிக்
களிறுகவுள் அடுத்த எறிகல் போல
ஒளித்த துப்பினை ஆதலின்" (புறம் 30:8-10)

என்ற உறையூர் முதுகண்ணன் சாத்தனார் அவர்களின் வரிகளுக்கு ஏற்ப வீரம் என்பது சோழ மன்னர்களின் தலைமை குணம் ஆகும். அத்தகைய வீரம் இல்லாத மன்னர்கள் எவ்வளவு பொருள் கொடுப்பினும் புலவர்கள் பாடாது ஒழிந்தனர். வீரமிக்க வேந்தர்களையே புலவர்களும் தேடி பாடல் இயற்றினர். இத்தகைய பண்பை முன்னிலைப் படுத்திய அக்காலப் புலவர்கள், சோழ மன்னர்களின் சிறப்புப் பெயர்களிலும் அதனை இடம்பெறச் செய்துள்ளனர்.

சோழனின் வீரம் சார்ந்து மண்படுதோட் கிள்ளி(31), கல்லார் தோள் கிள்ளி(34,69), காமரு தோள் கிள்ளி(62), போன்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இப்பெயர்கள் மண்ணுலகைத் தாங்கி ஆட்சி நடத்துகின்ற பெரிய தோள்களை உடையவன் என்றும் மலையை ஒத்து விளங்கும் வலிமையான தோள்களை உடையவன் என்றும் கல் போன்ற வலிமையான தோள்களை உடையவன் என்றும் பொருள் கொண்டு அமைந்துள்ளது.

படை பலத்தால் பெற்ற பெயர்கள்

ஒரு நாட்டின் சிறப்பையும் செல்வ வளத்தையும் காக்க வேண்டுமென்றால் தகுந்த படை பலம் இன்றியமையாதது ஆகும். அக்கால சோழ மன்னர்கள் அத்தகைய படை பலத்தையும் ஆயுதக் கருவிகளையும் சிறப்பாகக் கையாண்டுள்ளனர். இதனாலேயே அப்படைப் பெருமையை மையமாகக் கொண்டு அவர்களின் பெயர்களையும் புலவர்கள் வகுத்துள்ளனர். இப்பெயர்கள் அம்மன்னர்களின் படைபெருமையைக் காட்டுவதாக அமைகின்றது. இதனை கொற்றப்போர் கிள்ளி(24,37), வெல்வளவன்(28), காய்சினவேல் கிள்ளி(33), இளங்கிலைவேல் கிள்ளி(36,44), கடுமான் தேர்க் கிள்ளி(64), நெடுவேல் நலங்கிள்ளி(65) போன்ற பெயர்கள் மூலம் அறியலாம்.

இப்பெயர்கள், வெற்றி தரும் போரைச் செய்யக்கூடிய அரசன் என்றும் கோபம் கொண்ட வேல் படையினையும், யானை படையினையும் உடையவன் என்றும் இலை வடிவத்துடன் ஒளியோடு விளங்குகின்ற வேலினை உடையவன் என்றும் செருக்கு மிக்க மதயானையினையும் விரைந்து செல்லும் குதிரையினையும் உடையவன் என்றும் அச்சம் தரக்கூடிய நீண்ட வேலினை உடையவன் என்றும் பொருள் அமைகின்றது. இதனை நோக்கும் போது அன்றைய சோழ மன்னர்கள் வேல் படை, யானைப் படை, குதிரைப் படை போன்றவற்றில் வலிமை மிகுந்தவர்களாக இருந்துள்ளனர் என்பது புலனாகிறது. எனவேதான் புலவர்கள் அதிக அளவில் அப்படை வலிமையை மன்னர்களின் பெயர்களுக்கு உவமையாக்கியுள்ளனர்.

குலப்பெயர்கள்

பண்டைய மன்னர்கள் தங்களின் பெருமையை வெளிப்படுத்தும் விதத்தில் தனது பெயர்களுடன் குலப்பெயரையும் இணைத்து வழங்கும் வழக்கம் இருந்துள்ளது. இதில் சோழ மன்னர்களின் குலப்பெயராக கிள்ளி, சென்னி, வளவன், செம்பியன், போன்ற பெயர்களை முத்தொள்ளாயிரத்தில் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பாக கிள்ளி என்ற பெயரே அதிக இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் கிள்ளி என்ற பெயர் மட்டும் 16 பாடல்களிலும் வளவன் என்ற பெயர் 6 பாடல்களிலும் செம்பியன் என்ற பெயர் 3 பாடல்களிலும் சென்னி என்ற பெயர் 2 பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. இவற்றை நோக்கும் போது முற்கால சோழர்களில் கிள்ளி குலம் சார்ந்த மன்னர்களே அதிக அளவில் சோழ நாட்டை ஆட்சி செய்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

மாலையால் பெற்ற பெயர்கள்

சோழனின் சிறப்பைக் கூற விரும்பிய முத்தொள்ளாயிரப் புலவர்கள் நாடு, நகர், படை, வீரம் மட்டுமல்லாது அவன் மாலை அணிந்திருக்கும் சிறப்பையும் அவனது பெயரோடு இணைத்து வழங்குகின்றனர். நீணிலத் தார் வளவன்(48), தண் தார்க் கிள்ளி(53), அலங்குதார்க் கிள்ளி(55), அலங்குதார்ச் செம்பியன்(60) போன்ற பெயர்கள் சோழன் ஆத்தி மாலை சூடியவன் என்றும் நீலநிற மலர்கள் சூடியவன் என்றும் குளிர்ந்த மாலை சூடியவன் என்றும் பொருள்பட அமைகின்றன.

முடிவுரை

இனிமையும், எளிமையும், இலக்கிய வளமும் ஒருங்கே கொண்டது முத்தொள்ளாயிரம். இதில் சோழர்களின் குலம், தலைநகர், காவிரி நதி, அவர்களின் வீரம், படைத்திறம், அவர்கள் அணியும் மாலை போன்ற கூறுகளை மையமாக வைத்து எண்ணற்ற பெயர்களைப் புலவர்கள் கையாண்டுள்ளனர். அவ்வாறு எடுத்தாளப்பட்ட அனைத்து பெயர்களும் வேறுவேறு பொருளைக் குறித்தாலும் சோழன் என்ற ஒற்றைச் சொல்லாட்சியைச் சார்ந்து பயணிக்கிறது என்பதைக் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

முப்பொருள் பாகுபாடு

ரா.பாமா

ஆய்வியல் நிறைஞர்- விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி)

எளையாம்பாளையம் திருச்செங்கோடு

முன்னுரை:

தொல்காப்பியர் உலகிலுள்ள பொருள்களை முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்று கூறியுள்ளார். இனி பாகுபாடு செய்யப்பெற்றிருப்பதன் அடிப்படைக் கருத்தை பற்றி ஆய்வோம்.

இடமும் காலமும்:

ஒரு செயல் செவ்வனே நடைபெறுவதற்கு இடமும் காலமும் இன்றியமையாதன. இவ்வுண்மையை வள்ளுவப் பெருந்தகை.

ஞாலம் கருதினும் கைக்கூடும் காலம்

கருதி இடத்தாற் செயின்’

என்று கூறியுள்ளார். இடமும் காலமும் இன்றியமையாமை கருதி அவை முதற்பொருள் என்று தொல்காப்பியரால் வழங்கப் பெற்றுள்ளன. நிலம் இல்லாத இடத்து மக்கள் எவ்வாறு வாழ முடியும்? அவர்ளுக்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் நிலத்திலிருந்துதானே அடைய வேண்டிருக்கிறது? மக்களின் பிறப்பையும் இறப்பையும் பிற செயல்களையும் வரையறை செய்யக் கருவியாக இருப்பது காலந்தானே.

தவிர காலமாறு பாட்டால்தானே இவ்வுலகமே செவ்வனே இயங்குகின்றது? இயற்கை அன்னை விளைபொருள்களை விளைத்து உயிர்களைக் காப்பாற்றுவதற்கும்இ பொருளாதார உலகம் சரியாக இயங்குவதற்கும் முறையே காலமாறுபாடும் காலக்கடப்பும் பெருந்துணை புரிகின்றன அன்றோ?

நிலப்பாகுபாடு:

முதற்பொருளின் ஒரு பகுதியாகிய நிலத்தினை நான்கு பகுதியாகப் பிரித்துக் கூறுகிறார் தொல்காப்பியர். அந்த நான்கு பகுதிகளும் முல்லைஇ குறிஞ்சிஇ மருதம்இ நெய்தல் என்று முறையில் கூறப்பெற்றள்ளன. 'நானிலம்' என்று கூறும் மரபும் இவ்விடத்தில் கருதற்பாலது.

மாரி பொய்க்கும் போது வளங்குன்றி முல்லை நிலமும் விளைவின்றி வெறுந் தரைப் பரப்பாகக் காட்சியளிக்கும் அவற்றைப் பாலை என்று பெயரிட்டனர் என்பதைக் காணலாம். தொல்காப்பியரும் நான்கு நிலத்தைப் பற்றி கூறுகின்றார்.

மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே''

என்பது தொல்காப்பியர் நூற்பா.

நச்சினார்க்கினியர் கருத்து:

நானிலத்தை முல்லைஇ குறிஞ்சிஇ மருதம்இ நெய்தல் என்ற முறையில் தொல்காப்பியர் குறித்ததற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறும் காரணம் அமைதியுடையது என்று கருதலாம். ஐந்திணை ஒழுக்கமெல்லாம் இல்லறம்பற்றி நிகழ்வது.

கணவன் சொற்படி நடந்து கற்போடு பொருந்தி வீட்டிலிருந்து கொண்டு இல்லறமாகிய நல்லறத்தில் ஒழுகுவது மகளிரின் இயல்பாதலால் முல்லை முதலில் கூறப்பட்டது.

முல்லை என்ற சொல்லுக்கே இருத்தல் என்பது பொருளாகவும் வந்துவிட்டது. குறிஞ்சி நில ஒழுக்கமாகிய புணர்தலன்றி இல்லறம் நிகழாது என்பது யாவரும் அறிந்த செய்தி.

எனவே முல்லைக்குப் பின் குறிஞ்சியைக் கூறினார் ஆசிரியர். புணர்ச்சிக்குப் பின்னர் ஊடல் நிகழ்தல் இயற்கையாதலால் அவ்வொழுக்கத்திற்குரிய மருதத்திணையை அடுத்து வைத்தார். மருதம் என்ற சொல்லே ஊடியும் கூடியம் போகம் நுகர்தலைக் குறிக்கும்.

'மருதம் சான்ற மருதம் தண்பனை' என்ற சிறுபாணாற்றுப்படையடிக்கு நச்சினார்க்கினியர் இப்பொருளை வழங்கியிருக்கின்றார். பரத்தையிற்பிரிவு போலப் பிரிவு ஒப்புமை நோக்கி நெய்தலைக்

கடைசியில் வைத்துள்ளார். நெய்தற்பறை இரங்கற்பறையாதலின் நெய்தல் இரக்கத்தைக் குறிக்கின்றது.

காலப் பாகுபாடு:

முதற்பொருளில் இரண்டாவது பகுதி காலம். காலத்தைக் கூறும் போது பெரும்பொழுதை ஆறாகவும் சிறுபொழுதை ஆறாகவும் பிரித்துக் கூறுகின்றார் ஆசிரியர் என்பதை முன்னர்க் கண்டோம். சிறுபொழுதைக் குறித்துக் கருத்து வேறுபாடும் உண்டு.

நச்சினார்க்கினியர்இ இளம்பூரணர் ஆகியோர் மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் எற்பாடு என்று ஆறாக கொண்டிருக்கின்றனர். அவர்கள் கருத்துப்படி ஒவ்வொரு பகுதியும் பத்து நாழிகை கொண்டவை ஆகும்.

கருப்பொருள்:

இடத்திலும் காலத்திலும் தோன்றும் பொருள் கருப்பொருள். அது தெய்வம்இ உணவு விலங்குகள்இ பறவைகள்இ பறைஇ தொழில்இ பண்இ பூஇ நீர் போன்றது.

இப்பொருள்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமாக இருக்கும். மலை நாட்டில் இருக்கும் பொருள்கள் வேறு

சமவெளிகளில் காணும் பொருள்கள் வேறு. மலைப்பிரதேசங்களில் காணும் விலங்குகளையும் பறவைகளையும் சாதரணமாகக் கடலையொட்டிய பகுதிகளில் காண்பது அரிது. நாகரிகம் அடைந்த மக்களிடம் இம்மாறுபாடுகள் அதிகம் காணப்பெறாவிடினும் சாதாரண மக்களிடையே இன்றும் இவ்வேற்றுமையை நன்கு காணலாம்.

உரிப்பொருள் பாகுபாடு:

பண்டையோர் மக்கட்கு உரிய பொருளை உரிப்பொருள் என்று குறிப்பிட்டிருக்கின்றனர். ஐந்து திணைக்கும் தனித்தனியாக ஐந்து வகை ஒழுக்கத்தை வரையறை செய்திருக்கின்றனர். இதனை தொல்காப்பியர்இ

புணர்தல் பிரிதல் இரத்தல் இரங்கல்

ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை

தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே

என்ற நூற்பாவால் குறிப்பிடுகின்றார். இருத்தல் என்பது பிரிவுற்ற தலைமகன் வருந்துணையும் தலைவிஇ ‘தலைவன் வந்து விடுவான் என்று ஆற்றியிருத்தல் அதாவது நம்பிக்கையோடு பொறுத்திருத்தல். இரங்கல் என்பது ஆற்றாமை. ஊடல் என்பது தலைவன் தலைவியரிடையே நேரிடும் சிறு பிணக்கு.

உரிப்பொருள் இன்றியமையாதது:

ஒரு நாடகத்தைப் பற்றிப் பேசும் பொழுது இன்ன இடம் என்றும் இன்ன காலம் என்றும் இன்ன பாத்திரங்கள் என்றும் ஒவ்வொரு காட்சிக்கும் குறிப்பிடுவர் அறிஞர்கள்.

அவ்வாறே அகப்பொருள் நிகழ்ச்சிகளுக்கு இந்த முதற்பொருள்இ கருப்பொருளஇ உரிப்பொருள் உறுப்புக்களாக அமைகின்றன. உரிப்பொருளாகிய காதல் நிகழ்ச்சியை இன்ன நிலத்தில் இன்ன பொழுதில் இன்ன பொருள்களைச் சூழ்நிலையாக அமைத்துக் கவிஞர்கள் கூறுகின்றனர்.

இலக்கிய மரபுகள்:

குறிஞ்சியாகிய நிலத்தில் குறிஞ்சித்திணையின் உரிப்பொருளாகிய புணர்ச்சி நிகழ்வாதகச் சொல்லுவது இலக்கிய மரபு இப்படியே ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய ஒழுக்கங்களை இணைத்துக் கவிதைகளை இயற்றுபவர்கள் கவிஞர்கள்.

உலக வழக்கில் மலைநாட்டில் மட்டும் காதலர்கள் ஒன்றுபடுவர் என்ற வரையறையைப் பார்க்க முடியாது. வேறு இடங்களிலும் இவர்கள் சந்தித்து ஒன்றபடுவது உண்டு. இதையொட்டி இலக்கிய ஆசிரியர்கள் பிற நிலங்களிலும் பிற ஒழுக்கங்கள் நிகழ்ந்ததாகச் சிறுபான்மை கவிதை புனைவர். இலக்கியத்தின் சுவையை மிகுதிப்படுத்த இலக்கிய ஆசிரியர்கள் தம் கற்பனையால் பல யுக்திகளைக் கையாளுவது வழக்கம். அந்த முறையில் புணர்தல் என்ற நிகழ்ச்சிக்கு இயற்கை வளமும் தனிமையும் மிக்க மலை நிலம் ஏற்றது.

நாடக வழக்கு:

இவ்வாறு முதற்பொருள்இ கருப்பொருள்இ உரிப்பொருள் ஆகிய மூன்றும் இணைந்து திறனுடன் ஆக்கப்பெற்ற பாடல்கள் சிறந்தவை. இவ்வாறு சுவைபட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுவதை ‘நாடக வழக்கு’ என்று தொல்காப்பியர் குறிக்கின்றார்.

கடவுள் நம்பிக்கை:

இறைவன் ஒருவன் உண்டு என்ற உண்மை தமிழர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இதனால் தொல்காப்பியர் முதற்பொருளாகிய நிலத்தைக் கூறவந்த இடத்திலேயே தமிழர்கள் இன்றியமையாததாகக் கருதிய கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் குறிப்பிட்டுனர். மேற்கூறிய ‘மாயோன்மேய’ என்ற நூற்பாவால் இதனை அறியலாம்.

முடிவுரை:

இவ்வாறு தொல்காப்பியர் முப்பொருள்கள் கொண்டு ஐந்திணை ஒழுக்கங்களையும்இ இலக்கிய மரபுகளில் அதன் நிலத்திற்கு உரிய ஒழுக்கங்கள் கருப்பொருளில் இடத்தையும் காலத்தையும் இணைத்து அமைந்துள்ளார்.

இதில் முப்பொருளின் உள்ள இடங்களின் பெயர்களையும்இ அவர்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்பவர்கள் என்றும்இ அவர்களின் கடவுள் மாறுப்பட்டிருப்பதையும் உரிப்பொருள் பாகுபாட்டில் மக்கள் வாழும் வாழ்க்கை நெறியே ஒழுக்கமே என்றும்இ அதனை ஐந்து திணைகளையும் பிரித்து அழகாக கூறியுள்ளார் ஆசிரியர்.

இலக்கிய மரபுகளில் குறிஞ்சி நிலத்தினை பற்றி கூறியுள்ளார். அதில் மலை நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைப் பற்றியும் உலக வழக்கில் மலை நாட்டில் காதலர்கள் எவ்வாறு ஒன்றுபடுவது பற்றி சிறுபாண்மை கவிதைகளாக இயற்றினார் கவிஞர்.

இறைவன் ஒருவன் இருப்பது உண்மை என்று அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருந்தனர் என்பதை மேற்கூறிய நூற்பா மூலம் அறியலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

நன்னூல் வழி- சொல்லும் பொருளும்

ப.பிரபு,
விரிவுரையாளர்,தமிழாய்வுத்துறை,ஸ்ரீமத் ஆண்டவன் கலை& அறிவியல் கல்லூரி,(தன்னாட்சி), திருச்சி-5.

முகப்பு

தமிழர்களின் வாழ்க்கையை உலகிற்குக் காட்டிய மிகவும் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இந்நூலை அடிப்படையாக வைத்துப் பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று தான் பவணந்தி முனிவரின் நன்னூல் என்பதாகும். இவற்றில் பலபொருள் ஒருசொல், ஒரு சொல் பல பொருள் எனும் பொருண்மையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்லும் பொருளும்

இலக்கியத்திலும், இலக்கணத்திலும் பல்வேறு சொல்களுக்கு பல பொருள்கள் கொள்ளுதலுண்டு. இலக்கியத்தை மிகச்சரியாக சீர்படுத்தும் வகையாக இலக்கணம் உருவானது. இலக்கியமும், இலக்கணமும் பற்றி அகத்திய நூற்பா ஒன்று நமக்கு தெளிவுபடுத்துகின்றது,

“இலக்கிய மின்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்று எடுபடும் இலக்கணம்”

எனும் கூற்று நமக்கு உணர்த்துகின்றது. எல்லா வகையானச் சொற்களும் ஒவ்வொரு பொருளைத் தருகின்றது. இதனை தொல்காப்பியர் பெயரியலில்

“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”

என்ற நூற்பா நமக்கு தெளிவைத் தருகின்றது. இவ்வாறு தொல்காப்பியத்திற்கு பிறகு தோன்றிய நன்னூலின் சொல்லதிகாரம் வழியாகப் பல பொருள் ஒரு சொல், ஒரு பொருள் பல சொல் குறித்து பொருளுணர்வோம்.

நன்னூலின் சிறப்பு

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர். இவரின் காலம் கி.பி.12 நூற்றாண்டு முடிவு, 13ம் நூற்றாண்டின் தொடக்கமாகும். சைன மதத்தினர். தொண்டை நாட்டிலுள்ள சனகாபுரம், அமரா பரணன் என்னும் சீயகங்க மன்னனின் வேண்டுதலால் இந்நூலை இயற்றினார். கால வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு சில மாற்றங்களை நன்னூலில் காண முடிகின்றது. நன்னூல் பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், என்ற மூன்று பகுப்பையும் 11 இயல்களையும் 462 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. இரண்டு அதிகாரங்களைக் கொண்டமையால் நன்னூலைச் சிற்றதிகாரம் எனவும் போற்றுவர்.

பலபொருள் ஒரு சொல்

ஒரு சொல் ஒரு பொருளைக் குறித்தே வழங்கப்பெறும். ஒரு சில சொற்கள் பல பொருள்களை விளக்குவனவாக அமைந்துள்ளன. இவற்றைப் பல பொருள் ஒரு சொல் என்று கூறுவர். ஒரு சொல்லின் முன் வரும் சொல்லை வைத்து அல்லது அந்த சொல்லின் பின்னர் வரும் சொல்லை வைத்து அதன் பொருள் மாறுபடுகின்றது. இவற்றை நன்னூலில், ஒத்த அச்சொல் முறையில் பொருள்படும் என்பதை,

“வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப்

பல பொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே”

எனும் நூற்பாவில் வினை, சார்பு, இனம், இடம், ஆகிய சொற்களுள் ஒன்றைப் பொருத்தி ஒரு குறிப்பிட்ட பொருளை விளக்குவது பல பொருள் ஒரு சொல் ஆகும். அவ்வாறு பொருள் மயக்கம் ஏற்படும் போது அதோடு சிறப்புச் சொல்லைக் கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும் என்பர் புலவர்கள்.

‘மா’ என்னும் சொல்

ஒரு சொல்லானது பல பொருளைக் குறிக்கும் பட்டசத்தில், அதனுடன் வருகின்ற வினையையோ, அடைமொழியையோ சேர்த்து பொருள் கொள்ள வேண்டும் என்பது இலக்கணமரபாக உள்ளது. சான்றாக,

‘மா’ என்றசொல் 1.மாமரம். 2.வண்டு, 3.குதிரை, 4.திருமகள், 5.தாய், 6.விலங்கு, 7.ஓர் அளவு 8.வலி, 9.பெருமை, 10.கருமை, 11.மாமை நிறம், 12.மாவு, 13.இலக்குமி, 14.செல்வம், 15.மாற்று, 16.நிலம், 17.வயல், 18.மான் இது போல பல பொருள்கள் ‘மா’ என்ற சொல்லுக்கு உண்டு. அவற்றுள் 1.மாமரம், 2.வண்டு, 3.குதிரை, 4.திருமகள் போன்றவற்றின் பொருளைக் காண்போம்.

1.மாபூத்தது - பூத்தது என்னும் வினையால் மரத்தைக் குறித்தது.

2.மாவீழ் மலர் - மலர் என்னும் சார்பால் வண்டைக் குறித்தது.

3.யானை தேர் மா - யானை படை முதலிய இனத்தால் குதிரையைக் குறித்தது.

4.மாவீழ் மார்பன் - மார்பு என்னும் இடத்தால் திருமகனைக் குறித்தது

இவ்வாறு வினையின் முடிவினால் மா என்றசொல் பல பொருள் தந்து அமைவதை அறிகிறோம்.

சிறப்புச்சொல்லில் பொருள் உணர்தல்

சிறப்புச் சொல்லை (அடைமொழி) கூட்டிப் பொருள் விளங்க வைப்பது மற்றொரு வகை. சான்றாக, மா ஏறினன் என்று கூறும் போது மாமரத்தில் ஏறினானா? குதிரையில் ஏறினானா? என்ற ஐயம் ஏற்படுகிறது. இவ்வகையான ஐயத்தைப் போக்கும் வகையில் பாய்மா ஏறினான் மாமரம் ஏறினான் எனச் சிறப்புச் சொல்லை (அடை) முன்னோ, பின்னோ சேர்த்துக் கூறி ஐயத்தைப் போக்க வேண்டும், என்பது இலக்கண மரபாக இருப்பது நன்னூல் வழி அறிய முடிகிறது.

பொதுவினையைக் கொண்டு முடிவன

ஒரு சொல் பல பொருளைக் குறிக்கும் நிலையில் வெவ்வேறு வினையைக் கொண்டு முடிவதும், பொது வினையைக் கொண்டு முடிவதும் உண்டு. சான்றாக

"அடிசில்" என்பது பொதுவாக உணவைக் குறிக்கும் சொல். இதில் - **உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன** என்பனவற்றிக்கு பொது வினைச் சொல்லாக, அடிசில்- அயின்றார், மிசைந்தார் என்று வழங்கி இருப்பதை நன்னூலில் காணமுடிகிறது.

ஒரு பொருள் பல பெயர்

ஒரு பொருளை மட்டும் குறிக்கும் சொல் பல பெயர்களைப் பெற்று, வருவதுண்டு. ஒருவரின் சிறப்பு, கல்வி, ஊர் என பல்வேறு தன்மையில் ஒருவரைப்பற்றிக் குறிக்கும் சொல் பல பொருளில் அமைகிறுது. சான்றாக,

"ஒரு பொருள் மேல்பல பெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி"

இவ்வாறு ஒரு பொருளைக் குறித்துப் பல பெயர்கள் வருமாயின் பொருள் ஒன்றே என்பது விளங்க இறுதிக்கண் ஒருவினை கொடுத்துக் கூறுவர். சில இடங்களில் பொருள் ஒன்றே என்பது விளங்குகின்ற நிலையில் பெயர்தோறும் தனித்தனியே ஒரு முடிக்கும் சொல்லைக் கொடுத்தும் கூறுவார்கள். சான்றாக,

"ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் வந்தான்." இளங்கண்ணன் என்று ஒருவனுக்கு பல பெயர்கள் வந்தால் இறுதியில் வந்தான் என ஒரு வினையைக் கொண்டு முடிந்தது எனக் கொள்க.

முடிபு

ஒரு சொல் பல்வேறு இடங்களுக்கு ஏற்பப் பல பொருள்களைக் கொண்டு முடிகிறது. அவற்றைப் போல பல்வேறு பொருள்கள் உணர்த்த ஒரு சொல்லினதாக பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதை பவணந்தி முனிவரின் நன்னூல் வழி தெளிவாக அறிய முடிகிறது. தற்கால இலக்கிய, இலக்கண வழக்கிலும், ஒரு சொல்லானது பல பொருளையும், பல பொருளைத் தருகின்ற ஒரு சொல்லும் வழங்கி வருவதைக் காணமுடிகிறது. நன்னூலாரின்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே".

என்ற நூற்பாவிற்கு ஏற்ப இலக்கணங்களில் அதன் வழிப்பட்ட சொற்களின் பொருளில் மாற்றம் ஏற்படுவதும் புதிய பொருள் தோன்றுவதும் அந்தந்த காலத் தேவைக்கு ஏற்ப அமையும்.

பார்வை நூல்கள்

1. நன்னூல் சொல்லதிகாரம் - உரை-ச. திருசம்பந்தம் கதிர்பதிப்பகம் திருவையாறு -04. முதற்பதிப்பு 2006.
2. நன்னூல் தெளிவுரை - உரை - சண்முக செல்வகணபதி கற்பதிப்பகம் தஞ்சவூர்-001 முதற் பதிப்பு 2005.
3. தொல்லக்காப்பியம் - உரை - ச.வே. சுப்பிரமணியன் மணிவசகம் மதிப்பகம் சென்னை -08. 11 பதிப்பு 2010.
4. தமிழ் இலக்கிய வரலாறு - தமிழாய்வுத்துறை தேசியக் கல்லூரி, (தன்னாட்சி) திருச்சி – 01.
5. கைஅகராதி - கழக வெளியீடு.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

கடி என்னும் சொல்லாட்சியும் அதன் பொருளும்

சு.திருக்குமார்

பகுதிநேர விரிவுரையாளர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி, திருச்சி-5.

முன்னுரை

சொல் என்பது மனித சமூகம் தனது கருத்தினைப் பிறருக்கு உணர்த்தக்கூடிய கருவியாக விளங்கக் கூடியது. அத்தகைய சொல் மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு அப்பாற்பட்டு படைப்பாளனை வெளியுலகுக்குக் காட்டக்கூடியது. சொல்லினை எங்கு எப்படி எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென இலக்கண ஆசிரியர்களாகிய தொல்காப்பியர், நன்னூலார் ஆகியோர் தனக்கே உரிய வழியில் இவ்வுலகுக்குப் பறைசாற்றியுள்ளார்கள் என்பது நாம் அறிந்ததே.

உரிச்சொல் விளக்கம்

உரிச்சொல் என்பதை உரி+சொல் என்று பிரித்துப் பார்க்க வேண்டும். உரி என்ற சொல்லுக்கு உரிமை என்பது பொருளாகும். உரிச்சொல் செய்யுளுக்கு உரியது ஆகும். உரிச்சொற்களை யாரும் பேச்சு வழக்கில் பயன்படுத்துவது கிடையாது. உரிச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் உரிய சொற்களாகும். பெயருக்கும், வினைக்கும் அடைமொழியாக வருவதோடு அவற்றின் பண்பையும் விளக்கி வருவது உரிச்சொற்களின் சிறப்பாகும். உரிச்சொற்களைப் பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல், ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அத்தகைய உரிச்சொற்களில் பல சொற்கள் சிறப்பாகச் செய்யுள்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் 'கடி' என்ற உரிச்சொல்லை மட்டுமே ஆய்வுப் பொருண்மையாகக் கொண்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியர் கடி என்ற உரிச்சொல்லுக்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்ச முன்தேற் றாயி ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே. (தொல்.சொல்.377)

கடி என்னும் சொல் வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தேற்றம் எனும் பத்துப் பொருண்மைகளில் வருவதாகக் குறிப்பிடுகிறார்.

மேலும்

ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே. (தொல்.சொல்.378)

ஐயம், கரிப்பு (காரம்) என்ற இரண்டு பொருளையும் ஏற்று வருவதாகக் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியரை அடியொற்றியே நன்னூலாரும் கடி எனும் உரிச்சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும் (நன்னூல்-457)

காப்பு

காப்பு என்ற சொல்லானது காவல் என்ற பொருளைத் தரும்.

பெருஞ்சித்திரனார் வெளிமானிடம் பரிசில் கேட்டுச் சென்றார். ஆனால் அவனோ தன் தம்பியான இளவெளிமானைக் காட்டிக் கொடுத்தால் பரிசில் தருவதாகக் கூறினான். இது தனக்கு இழுக்கு என்று கருதிய புலவர் குமணனிடம் சென்று புகழ்ந்துபாடி யானையைப் பரிசாகப்பெற்று, வெளிமானின் ஊர்க்காவல் மரம் வருந்தும்படி யானையை அதில் கட்டி வைத்து என்னுடையப் பரிசாக இதனை வைத்துக்கொள் என்று கூறினார். ஊர்க்காவல் மரத்தை அழிக்கக்கூடிய அளவிற்கு வலிமை வாய்ந்த யானையைப் பரிசாகப் பெற்று வந்தார் என்பதே இதன் சிறப்பாகும்.

“ கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்” (புறம்-162)

இப்பாடலில் கடி என்ற சொல் காவல் என்ற சொல்லில் பயின்று வந்துள்ளது.

கூர்மை

ஒரு பொருளின் தன்மையை அல்லது அதன் சிறப்பை விளக்கக் கூடியதாக இந்தச்சொல் பயின்று வருகிறது.

“கடிநுனைப் பகழி” (நன்னூல்.நூ.எண்-456. மயிலைநாதர் உரை)

கூர்மையான முனையைக் கொண்ட அம்பு என்பது பொருளாகும். இவ்விடத்தில் கடி என்ற சொல்லைத்தவிர வேறு எந்த சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும் சிறப்பாக இருந்திருக்காது. ஏனெனில் அம்பு எய்யும்பொழுது நாம் குறி வைக்கும் பொருளைத் துளைக்கும் அளவிற்குக் கூர்மையாக இருக்க வேண்டும் என்பதே இதன் சிறப்பாகும்.

விரை

விரை என்ற சொல்லுக்கு மணம் என்று பொருள். இலக்கியங்களில் கடி என்ற உரிச்சொல்லை மணம் என்ற பொருளில் அதிக இடங்களில் பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

“கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல்அங் கண்ணாம்”
(மாணிக்கவாசகர் திருப்பள்ளியெழுச்சி-2)

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் வீற்றிருக்கக்கூடிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடும்பொழுது கருணையின் வடிவாகிய சூரியன் உதயமாகியதால் நல்ல மணத்தைப் பரப்பக்கூடிய மலர்களும் மலர்ந்துவிட்டன. அம்மணத்தினால் ஈர்க்கப்பட்ட வண்டுகள் பூவினைத்தேடி வருகின்றன. இவற்றை உணர இறைவா நீ உன் உறக்கத்தில் இருந்து எழுவாயாக என்று கூறுகிறார்.

விளக்கம்

ஒரு பொருளின் தன்மையை உணர்த்துவதே விளக்கம் ஆகும். ஒளி, பிரகாசம் போன்றவை விளக்கத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

"கண்ணாடி யன்ன கடிமார்பன் சிவந்து நீண்ட
கண்ணாடி வென்று களங்கண்டு நியம முற்றி"(சீவகசிந்தாமணி-2327)

கண்ணாடியானது தன்னைச் சேர்ந்தவர்க்காகவே இருப்பதுபோல சீவகனின் மார்பானது அவனைச் சேர்ந்த மகளிர்க்காகவே இருப்பதனால் திருத்தக்கதேவர் இவ்விடத்தில் 'கண்ணாடி யன்ன கடிமார்பன்' என்று பயன்படுத்தியிருக்கிறார். கடிமார்பன் என்றால் ஒளி பொருந்திய பிரகாசமான மார்பை உடையவன் என்று பொருள்.

அச்சம்

மனிதர்களின் மனதில் தோன்றுகின்ற மன நடுக்கமே அச்சம் என்று கூறலாம். அச்சம் என்றால் பயம் என்று பொருள்.

" உருமிடைக் கடியிடி கரையும்" (நற்றிணை-65)

யானையின் தந்தத்தை விரும்பிய அன்பற்ற வேடனானவன் விட்ட அம்பானது யானையைத் துளைக்க அதனால் வலி தாங்காத யானை பிளிற அந்த ஓசையானது இடியின் முழக்கத்தைப் போன்று அச்சத்தை உண்டாக்குவதாக இருந்தது.

கடியிடி என்றால் அச்சத்தை உண்டாக்கக் கூடிய இடி என்று பொருளாகும். ஆகையால் கபிலர் கடி என்ற சொல்லின் பொருளை உணர்ந்து இவ்விடத்தில் பயன்படுத்தியுள்ளார்.

சிறப்பு

ஒருவரின் அல்லது ஒரு பொருளின் தனித்தன்மையை மற்றவற்றிலிருந்து பிரித்துக்காட்டுவதே சிறப்பு என்பதால்,

"நுதிமுகம் மழுங்க மண்டி ஒன்னார்
கடிமதில் பாயும் நின் களிறு அடங் கலவே" (புறம்.31)

சோழ மன்னனின் யானையானது தன்னுடைய கோட்டுமுகம் மழுங்க வடவேந்தர்களின் வலிமையான கோட்டைச் சுவர்களைத் தாக்கும் வீரம் உடையது என யானையின் சிறப்பையும், சோழ மன்னனின் படைச் சிறப்பையும் கோவூர் கிழார் புகழ்ந்து பாடுகிறார்.

கடிமதில் என்றால் வலிமையான மதில் என்று பொருள். இதில் வலிமை என்பது சிறப்பு என்ற பொருளில் வருகிறது.

விரைவு

விரைவு என்ற சொல்லுக்கு வேகம் என்று பொருள். ஒரு செயலை ஒருவர் எவ்வளவு விரைவாக முடிக்கிறார் என்பதே அவரின் சிறப்பு ஆகும்.

"கடுமான் தேர்ஒலி கேட்பின்

நாடுநாட் கூட்டம் ஆகலும் உண்டே" (அகம் 134)

ஒத்த அன்பினை உடைய புணரும் நிலையிலுள்ள திரண்ட கால்களை உடைய பிணைமான்கள் விரைந்து செல்லக் கூடிய குதிரை பூட்டிய தேரின் ஒலியைக் கேட்பின் அதனால் ஏற்பட்ட மருட்சியினால் புணர்தலை விடுத்து வேகமாகக் காட்டிற்குள் சென்றுவிடும். கடி என்ற சொல்லின் ஈறு திரிந்து இகரம் உகரமாகி கடுமான் என வந்து நின்றது.

மிகுதி

அளவிற்கு அதிகமான பொருட்களோ அல்லது வேறு ஏதேனும் சேர்ந்தால் அதனை மிகுதி என்று கூறுவர்.

"கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்துப்

பசும்பிசி ரொள்ளழ லாடிய மருங்கின்"

(பதிற்றுப்பத்து- 3-ம் பத்து- 5வது பாடல்)

மிகுதியான காற்று அடித்ததால் சுவாலையானது கோபித்துப் பசிய பிசிரை உடைய ஒள்ளிய நெருப்பு வழங்கிய இடங்களையும், ஆண்டலை எனும் புள் வழங்குகின்ற காடுகளையும் அழித்தது எனக் கூறுகிறார்.

ஈறு திரிதல் எனும் விதியின்படி கடி என்னும் சொல்லில் உள்ள இகரம் உகரமாகத் திரிந்து கடு என மாறியது. கடுங்கா என்றால் மிகுதியான காற்று என்று பொருளாகும்.

புதுமை

புதியதாக உருவாகக் கூடியது புதுமை என்று அழைக்கப்படும். எற்கனவே பயன்படுத்தியப் பொருளாக இருந்தாலும், இதுவரை பயன்படுத்தாத ஒருவனுக்கு அப்பொருள் புதுமை ஆகும்.

"கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்

அறியாது உண்ட மஞ்ஞை" (குறுந்தொகை- 105)

குறிஞ்சி நிலத்தில் குறவர்கள் தான் விளைவித்த பொன்போலத் தோன்றும் சிறு திணைகளை இறைவனுக்குப் படைத்தனர். அதனை அறியாத மயிலானது அத்திணையைத் தின்றது என்று நக்கீரர் தன் பாடலில் கூறுகிறார்.

தன் விளைவின் முதற்பயனை தெய்வத்திற்குப் படைப்பது இயல்பு. அதனால் புதியதை உண்ணக்கூடிய கடவுள் என்று அழைக்கப்படுகிறார். கடி என்ற சொல்லுக்கு இங்குப் புதிது என்பது பொருளாகும்.

ஆர்த்தல்

ஆர்த்தல் என்ற சொல்லுக்கு ஒலி என்று பொருள். சங்க காலத்தில் போர் மற்றும் திருமண அறிவிப்புச் செய்திகளுக்கு முரசு அறிவித்துத் தெரிவித்தார்கள்.

"வளங்கொண் மாலைகள் சூடிமுத் தணிந்துவன் முரசங் களங்கொள் வேழத்தி னேற்றினர் கடிமுரசறைவான்" (சீ.சிந்த:2388)

இங்கு கடி என்ற சொல்லுக்கு ஒலி என்று பொருள். முரசின் மூலம் ஒலியை எழுப்பி மணச்செய்தியை அறிவித்தனர் என்று திருத்தக்க தேவர் கூறுகிறார்.

வரைவு

வரைவு என்ற சொல்லுக்கு நீக்கல் என்று பொருள். நமக்குத் தேவையில்லாதது, தீங்கு விளைவிப்பது ஆகியவற்றை வேண்டாம் என்று ஒதுக்குவதற்கு நீக்கல் என்று பொருளாகும். திருவள்ளுவர் திருக்குறளில் மிக அழகாக கடி என்ற உரிச்சொல்லைப் பயன்படுத்திக் கையாண்டுள்ளார்.

"கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பிழை தரும்" (திருக்குறள்-658)

கற்றறிந்த சான்றோர்கள் ஒதுக்கிய வினைகளைத் தானும் ஒதுக்காமல் அதை மேற்கொண்டாலும் முடிவில் அது துன்பத்தையே தரும் என்கிறார்.

கடிந்த என்றால் ஒதுக்கிய அல்லது நீக்கிய என்பது பொருளாகும். அடுத்தடுத்த சொற்களில் கடி என்ற சொல்லைக் கையாண்டிருப்பது வள்ளுவரின் ஆழங்காற்பட்டப் புலமையைக் குறிக்கிறது.

மன்றல்

மன்றல் எனும் சொல் திருமணத்தைக் குறிக்கிறது. இலக்கியத்தில் பெரும்பான்மையான இடங்களில் கடி என்றும் மன்றல் என்றும் பயன்படுத்தியுள்ளனர்.

"ரெரிபொன் மேகலை யிலக்கணை கடிவினை நொடிவாம்" (சீவ.சி-2385)

கடிவினை என்றால் மணத்தொழில் என்று பொருள் இலக்கணையின் மனவினையைப் பேசும்போது அவளின் உடல் அழகையும் உருவத் தோற்றத்தையும் அழகுபடக் கூறியிருப்பது சிறப்பு மிக்கதாகும்.

கரிப்பு

கரிப்பு என்ற சொல்லுக்கு காரம் என்பது பொருளாகும்.

"கடிமிளகு தின்ற கல்லா மந்தி" (நன்.மயிலை.உரை 456.)

கடிமிளகு என்றால் காரமான மிளகு என்பது பொருளாகும். மயிலைநாதர் நன்னூலில் கடி எனும் உரிச்சொல்லிற்கு விளக்கம் தரும்போது காரமான மிளகைத் தின்ற அறிவில்லாத குரங்கு எனக் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

முடிவுரை

ஒரு சொல்லை ஒரு பொருண்மையிளல் மட்டும் கையாளாமல் ஒரே ஒரு சொல்லை பல பொருண்மையில் கையாண்டிருப்பதை இக்கட்டுரையில் கண்டோம். இவை தமிழ்ப் புலவர்களின் சொல் ஆளுமையைப் புலப்படுத்துகிறது. உரிச்சொற்களில் பல சொற்கள் இருப்பினும் அவற்றில் 'கடி' என்னும் சொல் பல பொருண்மைகளில் கையாளப்பட்டு வந்துள்ளது சிறப்பிற்குரியதாகும். இக்கட்டுரையில் தொல்காப்பியரும், நன்னூலாரும் 'கடி' என்னும் சொல்லைப் பயன்படுத்திய எண்ணணிக்கையும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நன்னூலாரின் கடிச்சொற் விளக்கம் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தமிழ்த் திரையிசைப்பாடல்களில் அடுக்குத்தொடர்

அ.துளசிமணி

முனைவர் பட்ட ஆய்வாளா, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)

திருவானைக்கோவில், திருச்சி-05.

அறிமுகம்

முத்தமிழில் இசைத் தமிழ் என்பது முத்துத்தமிழ் போன்றது.'இசைக்கேட்டால் புவி அசைந்தாடும்', 'இசையும் அதைக்கேட்டுப் பல தலைகள் அசையும்' என்பதே உண்மை. கவிஞர்கள் இனிமையான பாடல்களைத் திரைக்கதைக்குப் பொருத்தமாகக் கொடுத்தாலும், சமுதாயத்திற்கு நல்ல கருத்துக்களும் கொடுக்கிறார்கள். இலக்கியத் தாக்கமும் இலக்கண முறைகளைக் கையாளுதலையும் கவிஞர்கள் மறக்கவில்லை. சிலேடைச் சொற்கள், அந்தாதி சொற்கள், போன்ற வகையில் அடுக்குத் தொடர்களையும் கவிஞர்கள் திறமையாக பாடல்களிடையே அமைத்துள்ளனர். இதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அடுக்குத் தொடர் விளக்கம்

ஒரு கருத்தைச் சிறப்பாக வலியுறுத்த இத்தொடர் கையாளப்படுகிறது. வாழ்தல், வேண்டல், வைதல், விதித்தல் ஆகிய பொருள்களில் ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் என்கிறோம். சொற்களைப் பிரித்தால் பொருள் தரும். சங்க காலம் முதல் இக்காலம் வரை அகக் கருத்துகளும் புறக்கருத்துகளும் மனதில் வைத்து இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் குறிப்பாக எட்டுத்தொகையில் அகநூல்களே மிகுதியாக அமைந்துள்ளன. திரையிசைப் பாடல்களில் அகப்பாடல்களில் தான் அடுக்குத்தொடர் மிகுதியாக கையாளப்பட்டுள்ளது.

தலைவியின் வருகை:

தலைவி வருவதை கையில் உள்ள வளையல்களின் ஓசைகளும், சிலம்பின் புலம்பலும் வெளிப்படுத்துவதை கவிஞர் வாலி

"கைவளை ஆடலும்

காலடி ஓசையும்

வருகையை முழங்கட்டுமே ! பாவை

வருகையை முழங்கட்டுமே!" **(வா.பா.50)**

என்கிறார். இதில் அடுக்குத்தொடராக அமைந்திருப்பதை காணலாம்.

தலைவியை வருணித்தல்

தலைவி நடந்து வரும் போது அவள் கூந்தல் அசைந்து ஆடுவதும் கண்கள் மீன்போல் துள்ளுவதும் கழுத்தில் அணிந்திருக்கும் நகைகள் ஆடுவதும் தலைவிக்கு அழகாக தோன்றுகிறது. மேலும் முதிராத நெல் ஆடுவது போலவும் முளைக்காத சொல் ஆடுவது போலவும் மலர் ஆடுவது போலவும் சான்றோர்கள் நாவில் தமிழ் விளையாடுவது போலவும் அவளின் நடையழகு காட்சியளிக்கிறது. இக்கருத்தை,

"கட்டோட குழலாட ஆட....ஆட...

கண்ணென்ற மீனாட ஆட....ஆட...

கொத்தோடு நகையாட ஆட.....ஆட

கொண்டாடும் மயிலே நீ ஆடு

முதிராத நெல்லாட ஆட....ஆட...

முளைக்காத சொல்லாட ஆட.....ஆட....

உதிராத மலராட ஆட.....ஆட.....

சதிராடும் தமிழே நீ ஆடு" **(க.தொ-1 பா.61)**

என்கிறார் கண்ணதாசன் ஒவ்வொரு அடியின் இறுதியில் அடுக்குத்தொடர் முழுமையாக இடம் பெறுகிறது. அன்பின் அழகை உறுதி செய்ய பயன்படுகிறது.

அன்பின் தோற்றம்

தலைவன் தலைவி இருவரும் கண்டு அன்பு கொண்டு மகிழ்கின்றனர். இந்த மகிழ்ச்சியை,

"பார்த்துக் கொண்டது கண்ணுக்குக் கண்ணு

பழகிக் கொண்டது நெஞ்சுக்கு நெஞ்சு" **(க.தொ-1.பா.235)**

என்கிறார், மேலும்

"கண்ணென்ன கண்ணென்ன கலங்குது

பொண்ணென்ன பொண்ணென்ன மயங்குது

என்னென்ன என்னென்ன நிலைக்குது

எண்ணங்கள் எங்கெங்கே பறக்குது" **(க.தொ-1.பா-420)**

என்கிறார். அன்பை வெளிபடுத்தும் பாடல்களில் அடுக்குத்தொடர் அமைத்து கவிஞர் பாடியிருக்கிறார்.

அன்பின் ஆசை

தலைவனைக் கண்ட தலைவிக்கு அன்பு, ஆசையாக மாற்றம் கொள்கிறது. அன்பு பெருக்கெடுத்து ஓடுகிறது. கல்லும் முள்ளும் கூட பூவாக மாறுகிறது. இதைக் கண்ணதாசன்,

"கண்ணன் என்னும் மன்னன் பேரைச்
சொல்ல..... சொல்ல.....
கல்லும் முள்ளும் பூவாய் மாறும்
மெல்ல.....மெல்ல
எண்ணம் என்னும் ஆசைப் படகு
செல்ல..... செல்ல.....
வெள்ளம் பெருகும் பெண்மை உள்ளம்
துள்ள.....துள்ள....." (க.தொ-2.பா.119)

என்று பாடுகிறார். இந்தப் பாடலின் இறுதியில் முழுக்க முழுக்க அடுக்குத் தொடர் அமைகின்றன.

தேடும் அன்பு

தலைவன், தலைவியைச் சந்திக்க வருகின்றான் இதைக் கவனிக்காமல் தலைவி இருப்பதைக் கண்ட தலைவன்,

"சின்னச் சின்னக் கண்ணிலே
வண்ண வண்ண ஓவியம்
அங்குமிங்கும் யார்வரவைத் தேடுது – துணை
இங்கிருக்க யாரை எண்ணிப் பாடுது" (க.தொ-2:பா182)

என்று கேட்கிறார். கண்ணதாசன் இப்பாடலிலும் அடுக்குத்தொடரைப் பின்பற்றுகிறார்.

அன்பின் வெளிப்பாடு

அன்பை வெளிப்படுத்தும் தலைவன் தலைவியர் செயல்பாடுகளைக் கூறும் போது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதும் சொற்களில் வர்ணனைகளைத் தருவதும் வழக்கமாக அமையும். இதனை,

"கொஞ்சி கொஞ்சி எண்ணங்களை விளக்கும் - சொல்லைக்
கொட்டிக் கொட்டி வர்ணனைகள் அளக்கும்
அஞ்சி அஞ்சி கன்னி உடல் நடக்கும் - இடை
கெஞ்சிக் கெஞ்சி கையிரண்டில் தவிக்கும்" (க.தொ.2-பா.218)

என்கிறார் கண்ணதாசன். இதில் அடுக்குத் தொடரை முதலிலேயே அமைத்துக் காட்டுகிறார்.

அன்பின் ஏக்கம்

இயல்பாக ஒருவரை ஒருவர் கண்டு அன்பை வெளிப்படுத்தினாலும் தலைவன் தலைவியின் எண்ணங்களும் ஏக்கங்களும் நிறைவேறுமா? என்றும் அன்பு நீடிக்குமா? என்றும் கவலை கொள்கிறாள் தலைவி. இக்கருத்தை,

"என்ன என்ன வார்த்தைகளோ
சின்ன விழிப் பார்வையிலே
சொல்லிச் சொல்லி முடித்து விட்டேன்
சொன்ன கதைப் புரியவில்லை" (க.தொ.2: பா-121)

என்றும்,

"உன்னைத்தான் கண்டு சிரித்தேன் - நெஞ்சில்
ஏதோ ஏதோ நினைத்தேன்
எண்ணித்தான் எண்ணித் துடித்தேன் - எண்ணம்
ஏனோ ஏனோ வளர்த்தேன்
பெண்மை பூவாகுமா? இல்லை நாளாகுமா? - இது
தேனோடு பாலாகுமா?" (க.தொ.2: பா121)

என்றும் நினைக்கின்றாள். இப்பாடல்களில் சொற்களை பொருளோடு உறுதி செய்ய கண்ணதாசன் அடுக்குத் தொடரை அமைத்திருக்கின்றார் என்பது தெளிவாக விளங்குகிறது.

நினைவுத் துன்பம்

இயற்கைக் காட்சிகளைக் காணும் போது தலைவிக்கு நினைவுத் துன்பம் வாட்டுகிறது. தலைவனைப் பற்றிய நினைவு அவளை வருத்துகிறது. இதைத் திரையிசைப் பாடலில் கண்ணதாசன்,

"தென்றல் இன்று பாடும் பாடல் என்ன என்ன!
சின்னக் கிளிகள் சொல்லும் கதைகள் என்ன என்ன!
கண்ணும் நெஞ்சும் ஒன்றுக்கொன்று பின்ன பின்ன!
என்னைத் துன்பம் செய்யும் எண்ணம் என்ன என்ன! (க.தொ.2: பா–119)

என்று வெளிப்படுத்துகிறார். இப்பாடலில் இறுதியில் அடுக்குத்தொடர் அமைந்து, சொல்லின் பொருளை வலிமையூட்டுகிறது.

அன்பின் உறுதி

தலைவன், தலைவியரின் அன்பு உறுதியாக இருந்தால் சொற்களும் உறுதியாக வெளிவரும் செயல்களும் உறுதியை நோக்கியே செல்லும் அவ்வகையில் தலைவன் உறுதியை,

"சிரிப்பேன் சிரிப்பேன்
சிரித்துக் கொண்டிருப்பேன்
பேச்சும் மூச்சும் உள்ளவரை
நினைப்பேன் நினைப்பேன்
நினைத்துக் கொண்டிருப்பேன்
நெஞ்சில் நினைவு நீங்கும் வரை" (வாலி தி. பா.83)

என்ற வாலியின் பாடலில் காணமுடிகிறது. இப்பாடலில் அடுக்குத் தொடரை உறுதிக்கருத்தாக கவிஞர் பயன்படுத்துகிறார்.

அன்பை அழைத்தல்

தலைவன், தன் தலைவியைக் காணுகிறான். மறைவாக அவள் காட்டும் அன்பை உணர்ந்து கொள்கிறான். அருகில் வந்து பேசும்படி அன்போடு தலைவன் அழைக்கிறான். இதை,

"நிலவிலே நிலவிலே சேதி வந்ததா?
உறவிலே உறவிலே ஆசை வந்ததா?
மறைவிலே மறைவிலே ஆடலாகுமா?
அருகிலே அருகிலே வந்து பேசம்மா!" (க.தொ-2-பா-75)

என்று கண்ணதாசன் பாடலில் காண முடிகிறது. இப்பாடலில் அடுக்குத்தொடரை அமைத்து, பாடலின் பொருளுக்குக் கவிஞர் உரமூட்டுகிறார்.

தமிழரின் பண்பாடு

தமிழர்கள் பண்பாட்டோடு வாழ்பவர்கள். வீரத்தோடும் மானத்தோடும் வாழும் பண்புள்ளம் கொண்டவர்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையோடு வாழ்பவர்கள். இவ்வகையில் பெண்ணின் பெருமையை விளக்க வரும் கண்ணதாசன்,

"ஆயிரம் பெண்மை மலரட்டுமே.....
ஆயிரம் கண்கள் ரசிக்கட்டுமே.....
ஒருத்தியின் நெஞ்சம் ஒருவனுக்கென்றே
சொல்..... சொல்..... சொல்.....தோழி

சொல்.....சொல்..... சொல்..... “ (க.தொ-2-பா-97)

என்கிறார் மேலும், தவறு செய்யும் ஆண்களை தடுத்து நிறுத்தும் பெண்களைக் காட்டும் கவிஞர்,

“மானும் பெண்ணும் ஒரு ஜாதி

மானம் எங்கள் தனி நீதி

தவறு செய்யாதே அருகில் வராதே

நில்.....நில்.....நில்.....மன்னா

நில்....நில்.....நில்....” (க.தொ-2: பா-97)

என்று கூறுகின்றார். பாடலின் இறுதியில் அடுக்குத் தொடரைப் பயன்படுத்தி சொல்லின் பொருளுக்கு வலிமை ஊட்டுகிறார்.

கணவனைத் தவிர வேறு ஆடவரை நினைக்காத பெண்ணின் மன உறுதியையும் தமிழரின் பண்பாட்டையும் அன்பின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தும் கண்ணதாசன்,

“சொன்னது நீதானா? சொல்...சொல்....சொல்... என்னுயிரே

சம்மதம் தானா ஏன்...ஏன்... ஏன்....என்னுயிரே....

இன்னொரு கைகளிலே யார்... யார்...யார் நானா?

எனை மறந்தாயோ ஏன்...ஏன்...ஏன்....என்னுயிரே!” (க.தொ-2-பா-374)

என்று கூறுகின்றார். இதில் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பை அடுக்குத் தொடரால் பெருமைப்படுத்துகிறார்.

நிறைவு

சொல்லின் பொருளை உறுதி செய்ய வருவது அடுக்குத் தொடர் எனலாம். அகப்பாடல்களில் அன்பின் வெளிப்பாடாக அடுக்குத்தொடர் அதிகமாக இடம்பெறுகின்றன. அதிலும் கண்ணதாசன், வாலி பாடல்களில் ஒப்பிடும் போது, கண்ணதாசன் பாடல்களில் தான் அடுக்குத்தொடர் பெரும்பான்மையாக பயன்படுத்தப்படுகின்றன. கவிஞர்கள் தங்கள் பாடல்களில் கருத்துக்கு வலிமை சேர்த்தாலும் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சிறந்த சொல்லாட்சிகளையும் நினைவோடு பயன்படுத்தியிருப்பதை அறியலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

ஐங்குறுநூறு மருதம், பாலைத் திணையில் முதல் கரு உரிப்பொருள்கள்

வீ,நதியா,

முனைவர் பட்ட ஆய்வாளர், பிசப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

முன்னுரை

எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு ஐந்திணைகளைக் கொண்ட பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு திணையையும் ஒவ்வொரு புலவர்கள் பாடியுள்ளனர். சங்க இலக்கியத்தில் மருதத்திணையை முதலாகக் கொண்டது ஐங்குறுநூறு ஆகும். இந்நூலில் மருதத்திணையை ஓரம்போகியாரும், பாலைத்திணையை ஓதலாந்தையாரும் பாடியுள்ளனர். இவ்விருத்திணையின் முதல், கரு, உரிப்பொருள்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை" (தொல்- 3)

என்னும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பாவானது கூறுகிறது.

முதற்பொருள் நிலமும், பொழுதும் ஆகும். கருப்பொருள் தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், பண், பூ, நீர், ஊர் போன்ற பிறவும் கருப் பொருள்களாகக் கருதப்படுகின்றன. அந்தந்த நிலத்திற்குரிய ஒழுக்கம் உரிப்பொருள் ஆகும். மருதத்திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்-இனிய நீர் வளம் சார்ந்த வயலும், வயல் சார்ந்த இடமும் மருதத்திணை ஆகும். பெரும் பொழுது- கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பருவங்களும், சிறு பொழுதுகளாக வைகறை, விடியலும் கூறப்படுகின்றன. இதை தொல்காப்பிய அகத்திணையியல், வைகறை விடியல் மருதம் என்று கூறப்படுகிறது.

கருப்பொருள்களாக- இந்திரன், உழவர், உழத்தியர், மகிழ்நன் என்போறும் உணவாக-நெல்லும், விலங்காக- எருமையும், நீர் நாயும், மரமாக-மருதமும், காஞ்சியும், பறவையாக-அன்னமும், அன்றிலும், தொழிலாக- உழவும், பண்ணாக-மருதப்பண்ணும், பூ-தாமரைப்பூவும், நீராகப்- பொய்மைநீரும், ஆற்றுநீரும் அமைந்துள்ளன.

முதற்பொருள்:

வயலும் வயல் சார்ந்த இடங்களும் மருதத்திணையில் விரவி வந்துள்ளன. செறு, கழனி, மருதத்துறை போன்றவை நிலத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. இதனை,

"கரந்தையஞ் செறுவில்" **(ஐங்-21)**

"செந் நெலஞ் செறுவில்" **(ஐங்-27)**

"கழனியூரன்" **(ஐங்-29)**

"கழனி யெருமை கதிரொடு மயக்கும்" **(ஐங்-99)**

"கழனியூரன் மகளிவள்" **(ஐங்-09)**

"கழனி மருதின் சென்னி" **(ஐங்-70)**

"மருதத்துப் பெருந்துறை" **(ஐங்-31)**

என்ற பாடல் அடிகளில் காணலாம்.

வேனிற் காலம்:

பெரும் பொழுதான வேனிற்காலத்தைக் குறிப்பிடும் பொழுது,

"திண்டேர்த் தென்னவ னன்னாட் டுள்ளதை

வேனிலாயினுந் தண்புன லொழுகும்" **(ஐங்-54)**

என்ற அடிகள் மூலம் அறியமுடிகிறது.

விடியல்:

மருதத்திணையின் சிறு பொழுதான விடியலைக் குறிப்பிடும் பொழுது,

"கன்னி விடியற் கணைக்கா லாம்பல" **(ஐங்- 68)**

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

கருப் பொருள்கள்:

1,நெல்:

மருத நிலத்து மக்களின் உணவு நெல் ஆகும். இதனை,

"வித்திய உழவர் நெல்லோடு பெயரும" **(ஐங்-3)**

"பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்" **(ஐங்-4)**

"செந்நெல் அம் செறுவில் கதிர் கொண்டு" **(ஐங்-27)**

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

2.நாரை:

கயல் மீனை உண்ட நாரை நெற்போரில் தூங்கும் எனப்தை,

"கயலார் நாரை போர்வின் சேக்கும" **(ஐங்- 9)** என்ற அடி வெளிப்படுத்துகின்றது.

3,மீன்:

முதலை தன்னோடு ஒத்து வாழும் இயல்புடைய மீனைக் கொன்று தின்னும் என்பதை,

"முதலைப் போத்து முழுமீனாகும்" **(ஐங்-5)**

என்ற வரி உணர்த்துகின்றது.

4,முதலை:

தான் ஈன்ற பார்ப்பினையே தின்னும் பண்புடைய முதலையை,

"பிள்ளை தின்னும் முதலைத்து ஆவனூர்" (ஐங்-24)

என்ற அடி மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது

5,தாமரை:

அகன்ற பொய்கையில் தாமரை பூத்திருப்பதை,

"மலர்ந்த பொய்கை முகைந்த தாமரை" (ஐங்-6)

என்ற வரி சுட்டுகின்றது.

6,தேனூர்:

ஆம்பல் நிறைந்த வயல்களை உடைய தேனூர், இதனை

"ஆம்பலஞ் செறுவிற் தேனூர்" (ஐங்-57)

என்ற வரி வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

7,ஆமூர்:

பகல் போன்ற ஒளியைக் கொண்ட விளக்குகள் உடைய ஆமுரைக் குறிப்பிடும் பொழுது,

"வெல் போர்ச் சோழர் ஆமூர்" (ஐங்-56)

என்றும் ஊரைப் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன.

உரிப்பொருள்:

ஊடலும் ஊடல் நிமித்தமும் உரிப் பொருளாகும். தலைவன் பரத்தையர் உறவால் ஊடல் ஏற்படுகிறது. தலைவி, தலைவனுடன் ஊடல் கொள்ளுதல், வாயில் மறுத்தல் போன்றவை பரத்தை தொடர்பால் ஏற்படுகிறது. நீண்ட பூவினை உடைய வேழப்பூ தீண்டுதலால் வடுக்களைக் கொண்ட மாவின் தளிர் நுடங்கும் என்பது பரத்தையுடன் தலைவன் கொண்ட தொடர்பால் தலைவி மெலிவுற்றதைக் கூறுகிறது.

பாலைக்குறிய முதற்பொருள்:

பாலையைத் தவிர பிற திணைகளுக்கு இவ்வுலகில் நிலம் உண்டு என்பதை,

"நடுவண் ஐந்திணை நடுவ ணதொழியப்
படுதிரை வையம் பாத்தியப்பண்பே" (அக-2)

என்று தொல்காப்பிய நூற்பா விளம்புகிறது.

முல்லையும், குறிஞ்சியும் தன் இயல்பிலிருந்து திரிந்த பகுதி பாலையாகும் என்ற கருத்தை

"முல்லையும் குறுஞ்சியும் முறைமையில் திரிந்து
நுல்லியல்பு இழந்து நடுங்கு துயருறுத்துப்
பாலை என்பதோர் படிவங்கொள்ளும்" (மது-64)

என்று சிலப்பதிகார வரிகள் விளக்குகின்றன. இளவேனில், முதுவேனில், பின்பனி என்ற பெரும்பொழுதுகளும், நண்பகல் என்ற சிறு பொழுதும் வந்துள்ளன.

பொழுது:

நடுவு நிலைத் திணையே நண்பகல் வேனிலோடு

"முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே (அக-11)

பின்பனிதானும் உரித்தென மொழிப"

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியலாம்.

சிறுபொழுது:

நண்பகல்:

"நெருப்பு அவிர்கனலி உருப்புச் சினம் தணிய"

என்ற வரிகளில் மூலம் அறியலாம்.

கருப்பொருள்:

``தெய்வம் உணாவே மாமரம் புள் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகை ,

அவ்வகை பிறவும் கருவென மொழிப".

தெய்வம் - இல்லை

மக்கள் - எயினர், எயிற்றியர் (363,364,365)

உண - சூறையாடலால் வரும் பொருள் (365)

வில் - யானை (304,305,314,327,352,355,356,367,377,379)

புல - (307,316,385,386)

மான் -(326,373,394,398)

செந்நாய் - (354,323,397)

பன்றி - (323,397

முள்ளம் பன்ற - (364)

குதிரை - (304,360)

குரங்கு - (374)

பூ - (301,320,338,368)

புன்கு - (367,368)

எறுழம் - (308)

வேங்கை - (311,324,367)

கோங்கு - (343,366,367,370)

மரவம் - (331,348,357,383)

குரவம் - (344,357)

நுணா - (342)

அதிரல் - (354)

பாதிரி - (346,361)

வேப்பம் - (350)

மரம் - இலவம் - (301,320,338,368)

ஆலம் - (303)

எறுழம் - (308)

ஓமை - (316,321)

அரசமரம் - (325)

நெல்லி - (334,381)

வேம்பு - (339,350

கோங்கு - (343,366,367,370)

புன்கு - (347,368)

மராம் - (348,383)

மாமரம் - (348,383)

பலா - (351)

சாலை - (363)

யாமை - (388)

பறவை - பருந்து - (321)

ஊர் - சீறூர் **``எல்லிடை அசைந்த நல்லென் சீறூர்”**.

நீர் - காட்டாறு (361)

வற்றிய ஆற்று நீர் (341)

பறை - இல்லை

யாழ் -இல்லை

பண் - பஞ்சுரப்பண் (311)

தொழில் - வேட்டையாடுதல் (363,365)

பொழில் காட்சி:

``வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழில்”. (369)

என்ற அடி விளக்குகின்றது.

நுணா மலர்தல்:

நுணா மலர்கள் மலர்ந்து நறுமணம் பரப்புகின்றமையை

``கருங்கால் நுணவம் கமழும் பொழுதே”. (342)

என்ற அடி உணர்த்துகிறது.

கோங்கும், வேங்கையும்:

பொரிந்த அடிப்பகுதியைக் கொண்ட உறுதி வாய்ந்த கோங்கு, வளப்பம் மிகுந்த மொட்டுக்களையும், பொன் போன்று பொலிவும் பூக்களையும் கொண்டு இளவேனிலை அழகுபடுத்துகின்றது. இக்கோங்கு ஓரிடத்தில் வேங்கையொடு விரவியும் காணப்படுகின்றது. இதனை

``திணி நிலை கோங்கும் பயந்த
அணிமிகு கொழுமுகை உடையும்”. (343)

வேனில்:

"வெப்பம் தாங்காது மூங்கில் முறிதலை,

நெடுங்கழை முளிய வேனில் நீடி" (ஐங்,322)

என்ற அடி வெளிப்படுத்துகின்றது.

யானை:

ஆநிரைகள் உண்பதற்காகத் தோண்டிய பள்ளத்தில் உள்ள நீரை யானைகள் கவர்ந்து உண்ணுகின்றன. நீர் கிடைக்காத நிலையில் யானை பிளிறுகின்றது, இதனை

``ஆன் நீர்ப்பத்தல் யானை வெளவும்"

என்ற அடிகள் பாலை நிலத்தில் நீரற்ற வறட்சி நிலை காணப்படுவதனை அறிய முடிகிறது.

உரிப்பொருள்:

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைக்குரிய உரிப்பொருளாகும். தலைவன் தலைவியின் அன்புக்குரியவன். இருப்பினும் தலைவியை பிரிந்து சென்று நெடுங்காலம் தலைவன் தங்கி விடுவானோ என நினைத்த தலைவியின் நெஞ்சம் கவலையுறுகின்றது. இதனை,

"நீடுவர் கொல் என நினையும் என் நெஞ்சே" (ஐங்-311)

என்னும் அடிகளில் தலைவியின் பிரிவாற்றாமையை வெளிப்படுத்துகின்றது.

நிறைவு:

ஐங்குநுறூற்றில் உள்ள முதல், கரு, உரிப்பொருள்கள் என அந்தந்த திணைகளைப் பற்றி விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மேலும் ஐங்குறுநூறுக்கு உரிய நிலம், பொழுது, கருப்பொருள்கள், உரிப்பொருள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இவைமட்டுமல்லாது அந்நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், தொழில், மலர், உணவு, புள், பறை போன்றவையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அந்தந்த நிலத்திற்குரிய உரிப்பொருள் பிற நிலத்தில் மயங்கி வருவதில்லை. ஆனால் உரிப்பொருளில்லாத முதற்பொருளும், கருப்பொருளும் மயங்கி வருவதை இக்கட்டுரை வாயிலாக உய்த்துணரமுடிகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

அகர முதல எழுத்தெல்லாம்

த. நந்தினி,

ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு,நாமக்கல் 637 205.

முன்னுரை

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு"

என்பது திருக்குறளில் முதற் குறள்

தமிழ் எழுத்துக்கள் யாவும் "அ" என்ற எழுத்தை முதன்மையாகக் கொண்டிருப்பது போன்று, இவ்வுலகம் இறைவனை முதன்மையாகக் கொண்டிருக்கிறது என்பது இதன் பொருள்.

எழுத்துக்களை அறியவர்கள் முதலில் அகரத்தை அறிவது போல இவ்வுலகத்தை அறியவர்கள் முதலில் இறைவனை அறிய வேண்டும் என்பது இதன் கருத்து

எழுத்துக்களின் சிறப்பு :-

உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, உயிர்மெய்யெழுத்து 216 க்கும் "அ" எழுத்து தலைமை தாங்குவது போன்று மண், நீர், காற்று, தீ, வெளி ஆகிய ஐம்பெரும் பொருள்களைக் கொண்ட இவ்வுலகுக்கு இறைவன் தலைமை தாங்குகிறான் என்பது இதன் மறைபொருள்.

"அகர முதல எழுத்தெல்லாம்"

என்பது தமிழ் எழுத்துக்களை மட்டும் குறிப்பதல்ல மலையாள எழுத்திலும் முதல் எழுத்து "அ" கன்னடத்திலும் முதல் எழுத்து "அ" தெலுங்கிலும் முதல் எழுத்து "அ"லத்தீன், கிரீக், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மேல்நாட்டு மொழிகளிலும் முதல் எழுத்து "அ" உருதுவிலும் முதல் எழுத்து "அ" சமஸ்கிருதத்திலும் முதல் எழுத்து "அ" நேற்று முளைத்து நடமாட வந்திருக்கும் இந்தியிலும் முதல் எழுத்து "அ" ஆகவே "அகர முதல எழுத்தெல்லாம்" என்பதற்கு தமிழ் எழுத்தெல்லாம் என்று பொருள் கொள்ளாமல் எழுத்து என்று எழுதப் பெறுகிற எழுத்து எல்லாம் என்று பொருள் காண்பதே சிறப்பாகும்.

"அ"கரத்தின் சிறப்பு :-

பல மொழிகளைக் கொண்ட எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அது போல பல்வேறு உயிர்களைக் கொண்ட இவ்வுலகம் இறைவனை முதலாக உடையது என்பது இதன் விளக்கமாகும்.

தோன்றிய, தோன்றுகிற, இனி தோன்றவிருக்கிற எழுத்துக்களெல்லாம் "அ" எழுத்தையே முதலாக உடையன என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே, வள்ளுவர் பெருமான் ஆராய்ந்து கூறியிருப்பது வியப்பிற்குரியதாகும்.

எழுத்துக்கள் மட்டுமின்றிச் சொற்களும் கூட அகரத்தையே முதலாக உடையனவாம். மக்கள் முதன் முதலில் வாயைத் திறந்தபோதே "அ" ஒலித்துவிட்டது பின் திறந்த வாயை மெல்ல மூடித் திறந்தால் "அம்மா" என்றும், அழுத்தாமல் மூடித் திறந்தால் "அப்பா" என்றும் ஒலிக்கிறது. மக்கள் இவ்வுலகில் முதன் முதலில் கண்ட தாய் தந்தையர்க்கு முதன் முதலில் ஒலிக்கிற சொற்களையே பெயராக வைத்திருப்பதும், அதிலும் மெல்லோசையை வன்மையுடைய தந்தைக்கும் வைத்து அழைப்பதும் ஆடு மாடுகளும் கூட அழைக்கும் பொழுது "அம்மா" என்ற சொல்லே வெளிவருவதும் அச்சொல்லே எல்லாச் சொற்களுக்கும் முதன்மையாக அமைந்திருப்பதும் கருதத்தக்கன.

சிவவாக்கியர் கருத்து :-

வடிவு மட்டுமல்ல ஒலியுங்கூட அவ்விதமே, பிரணவத்தின் ஒலி "ஓம்" என்பது இதை ஒலிப்பதனால் "அ" என்று வாயைத் திறந்து "உ" என்று குவிந்து "ம்" என்று மூடியாக வேண்டும் இதிலிருந்து "ஓம்" என்பதை ஒலிக்க அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்களும் அவற்றின் ஒலிகளும் தேவை என்பது தெளிவாகும் இதை அறிந்தே சிவவாக்கியர் என்ற சித்தர்

"அகார காரணத்துளே அடக்கி நின்ற வையம்
ஊகார காரணத்துளே ஒடுங்கி நின்ற வையம்
முகார காரணத்துளே மயங்கி நின்ற வையம்"

என்று கூறியுள்ளார்.

அ, உ, ம் எழுத்துக்களின் சிறப்பு :

"ஓம்" என்பதை ஒலிக்கும் இந்த அ, உ, ம் என்ற எழுத்துக்கள் மூன்றையும் "அ" தன்னுள் அடக்கி நிற்பதைக் காணலாம்.

"அ" எழுத்தைச் சரி பாதியாக வெட்டுங்கள் மேற்பாதி "வ" ஆகவும் கீழ்ப்பாதி "எ" ஆகவும் அதாவது "ம" தலைக்கீழாகவும் காணப்படும் மேல்பாதி வ – வை வலது கோடியில் வெட்டினால் உ, என்றும் 1 என்றும் காணப்படும் இம்மூன்றும் அ, உ, ம் என்றாகி "ஓம்" என்ற ஒலியை ஒலிப்பதைக் காணலாம்.

குறளில் உள்ள "எல்லாம்" என்ற ஒரு சொல் எழுத்தெல்லாம் "என்பதில்" எழுத்துடன் சேர்ந்தும் பிறகு தனித்தும் நின்று சொல்லெல்லாம் வடிவெல்லாம் ஒலியெல்லாம் என்பவற்றையும் தன்னுள் அடக்கி எல்லாம் என்று நிற்பதைக் காணலாம்.

வள்ளுவரின் கருத்து:

ஆதி பகவனையும் அகரம் விட்டுவிடவில்லை, அவனைப் பருப்பொருளாகவும், நுண்பொருளாகவும் காட்டுகிற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். 'அகரத்தின் 1, உ, ம் என்ற மூன்று துண்டுகளும் கடவுள் உயிர் மாயை என்றாகின்றன.

"ம்" மாயையின் முதல் எழுத்து

"உ" உயிரின் முதல் எழுத்து

"I" தனிக்கோடு

இறைவனது அருஉரு இது அகரம் காட்டுகிற ஆதி பகவனின் பருப் பொருளாகும்.

எழுத்துக்கள் எல்லாவற்றிலும் "அ" நுண்ணியதாகக் கலந்தே உள்ளது.

க் + அ = க,

ப் + அ = ப,

ம் + அ + ஆ = மி,

த் + அ + உ = து.

"அ" கலவாத எழுத்தே இல்லை ஒலியும் அப்படியே எதை ஒலிக்க வாயைத் திறந்தாலும் "அ" ஒலிக்கப்பட்டு விடுகிறது. எழுத்திலும் ஒலியிலும் "அ" எவ்வளவு நுண்பொருளாக மறைந்திருக்கிறதோ, அவ்வளவு நுண்பொருள் ஆதிபகவனும் இவ்வுலகில் மறைந்து காணப்படுகிறான் என்பது வள்ளுவர் முடிவு.

"I" தனிக் கோடாகிய இறைவன் தன்னை வந்து அடையட்டும் எனக் கருணை காட்டி உயிர் முன் வந்து நிற்கின்றான்.

"உ" என்ற உயிர் இறைவனையடையத் துடியாய் துடித்து அவன் பக்கம் நீண்டு செல்கிறது.

"ம்" என்ற மாயையானது உயிர் முழுதும் பற்றிக் கொண்டு இறைவனை அடைய முடியாமல் தடுத்து, தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கிறது. உலகில் இறைவனை முதலாக உடையது என்று கூறியதிலிருந்தே உயிரை இரண்டாவதாகவும், மாயையை மூன்றாவதாகவும் உடையது என்பது தானாகவே தோன்றும் இம்மூன்றும் **"முப்பொருள் உண்மை"** எனப்படும். இதனை அகரம் தன்னுள் கொண்டு ஒளி வீசுகிறது. இதையறிந்தே வள்ளுவர் உலகுக்கு உவமையாக அகரத்தைக் கூறினார். இதுவே குறளின் பெருமை!

"அ" முன்னும் "உலகு" பின்னும் உள்ள இக்குறளை இன்னும் ஒரு முறை படியுங்கள் அதன் புதை பொருள்கள் அனைத்தும் நன்கு விளங்கும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

சீனவானொலியின் தமிழுணர்வும் சொல்லாக்கங்களும்

முனைவர். பெ.பகவத்கீதா

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, திருச்சி - 22

முன்னுரை

தமிழ் கூறும் நல்லுலகின் தமிழுணர்வும் தமிழ்ப்பற்றும் காற்றினிலே மறையும் மாயத்திற்கு முன்பாக உண்மையின் மெய்ம்மைத் தன்மைக்கு அடையாமாக சீன வானொலியின் தமிழ்ப்பிரிவு உயிரினிலே தமிழ் மணம் பரப்பி தமிழ் மணக்க வாழுகின்றது. தமிழினையும் வாழச்செய்கின்றது.

வானொலி ஒலிபரப்பு மத்திய அலை, பண்பலை, சிற்றலை என மூவகை ஒலிபரப்பினைக் கொண்டு விளங்குவது. 'பண்பலை' என்பது தற்காலத் தமிழ் முழக்கத்தின் வெளிப்பாட்டு ஊடகமாக விளங்கும் ரேடியோ அதில் 'மெல்லத் தமிழினி சாகும்' என்னும் மகாகவி பாரதியின் வரிகளையே கண் முன்பாக கேட்க முடிகின்றது. 'சிற்றலை' என்னும் அலைவரிசையில் பி.பி.சி, இலங்கை போன்ற வெளிநாட்டு வானொலிகளின் ஒலிபரப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் வெளிநாட்டு வானொலியில் கோலோச்சிய இலங்கை வானொலியையும் அதற்கு அடுத்த படி நிலையில் விளங்கிய பி.பி.சி தமிழ்ச் சேவையை வீழ்த்தி விட்டு நூறு சதவித வெற்றியைப் பெறும் நிலையில் தற்பொழுது சீனாவானொலியின் தமிழ்ப்பிரிவு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சீன வானொலியின் தமிழ்ப்பிரிவின் தமிழுணர்ச்சியும் தமிழ்ப்பற்றும் மேலோங்கி 'மெல்லத் தமிழினி சாகும்' என்றந்த பேதை உரைத்தான்'' என்னும் பாரதியின் கவிதை வரிகள் உயிர் பெற்று நர்த்தனமாடுவதைக் கேட்க முடிகின்றது. தமிழினையும் ஆங்கிலத்தையும் கொலை செய்யும் கசாப்புக் கடைக்காரனாக விளங்கும் பண்பலைக்கு முன் ஆங்கிலச்சொற்களையும் தமிழ்ச்சொற்களாக்கி செவி நுகர் கனிகளாக்கி, தேன் வந்து பாயச் செய்யும் சீன தமிழ் வானொலிக்குப் பாராட்டுக்கள் என்னும் சொல் மட்டுமே போதுமானதன்று.

''சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே
இதைத் தொழுது படித்திடடி பாப்பா''

என்னும் நீடு துயில் நீக்க பாடி வந்த நிலாவான முண்டாசு கவிஞன் பாரதியின் ஆழமான வரிகள் தமிழின் உயர்வை மட்டும் எடுத்துரைப்பது அல்ல தமிழின் நிலைபேற்றினையும் உரைப்பது.

''தமிழ்மொழிக்குச் சொல்வளம் உண்டு ஒரு பொருளைக் குறிக்க அதன் தன்மைக்கேற்ப பல சொற்கள் படைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக 'இலை' என்னும் ஒரு பொருளைக் குறிப்பிட தான் நெற்பயிர் இலைகள், தோகை – கரும்பு செடி இலைகள், ஓலை – தென்னை, பனைமரஇலைகள், மடல்- தாழை இலை என்று வெவ்வெறு சொற்கள் உண்டு'' (கே.கே.பிள்ளை, 2008இ ப.163) என்ற

வகையில் தமிழின் சொல்வளம் ஒரு சொல்லுக்குப் பல பொருள், பலசொல்லக்கு ஒரு பொருள் எனப் பன்முகத் தன்மை கொண்டு விளங்குவது.

காலத்திற்கேற்ப மொழி மாற்றம் பெற்று வருகின்றது. "மாற்றம் என்பதை மொழியலகுகளிலும், அலகுகளின் அமைப்பு, பொருள், பயன்பாடு ஆகியவற்றிலும் காணமுடியும். இரண்டு காலக்கட்டங்களில் ஒரு மொழியில் பயன்படுத்தப்பட்டு வந்த சொற்களின் பொருள், சுட்டல்தன்மை, இலக்கணத்தன்மை போன்றவற்றை ஒப்பிட்டு நோக்கும் பொழுது சொற்பொருள்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை உணரமுடியும். மொழியைப் பயன்படுத்துகின்ற பல்வேறு துறைகளின் கலைச் சொற்களையும் அவற்றின் பொருளையும் உற்று நோக்கும் பொழுது சொற்கள் மாற்றமடைந்திருப்பதை உணரமுடியும். சொற்களின் பொருள்கள் அழிந்தோ ஆக்கம் பெற்றோ மாற்றமடைந்தோ தோன்றுவதை உணரமுடியும்" (தொகுப்பு : பொருண்மையில்) என்னும் கூற்றின் வழி சொற்கள் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களைப் பெற்று தமிழினைப் பாழாக்க பிறமொழிச்சொற்கள் வந்து சேரினும் மாறாது நிலைத்து நிற்பதை மொழிவரவாது உறுதிப்படுத்தும்.

சீன தமிழ் வானொலியின் தமிழுணர்வும் சொல்லாக்கமும்:

தமிழ் தம் வளர்ச்சிப்பாதையில் அறிவியலை விலக்கிவிட்டுச் செல்வது இயலாது. அறிவியல் வளர்ச்சியில் ஆங்கிலச்சொற்களின் பயன்பாடே அதிகாமனினும் அதற்கு ஈடான தமிழ்ச்சொற்கள் பல உருவாக்கப்பெற்று வருகின்றது. அறிவியல் மட்டுமன்றி ஆட்சித்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை மற்றும் அன்றாட வழக்கத்திலுள்ள சொற்கள் பல மாற்றம் கொண்டு புதிய சொல்லாட்சிகளைப் பெற்று சில பயன்பாட்டிற்கும் பல மறைந்து ஒழிதலுக்குமான நிலையில் இருப்பதை அறிய முடிகின்றது. அன்றாட வழக்கில் தமிழகத்தில் நாம் பயன்பாட்டிற்குச் சொற்களைக் கொண்டுள்ளோமா? என்று சில சொற்களைக் கீழே சான்றாக காணலாம்.

Bakery	அடுமனை
Cement	பைஞ்சுதை
Challan	செலுத்துமுறி
Remote Control	தொலைஇயக்கி
Plastic	நேகிழி
Plastic bag	நெகிழிப்பை
Cool drinks	குளீர்குடிநீர்மங்கள்
Refrigerador	குளிர்பதனி
Car	சிற்றுந்து
Cell Phone	அலைபேசி
Message	குறுந்தகவல்
Printer	மின் அச்சுப்பொறி
Bus	பேருந்து

மேற்கூறிய சொற்களில் நாம் எத்தனைச் சொற்களை வழக்கத்தில் - பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்றோம். ஆனால் தமிழ் மொழி தோன்றிய பிறப்பிட மற்ற சீனநாட்டில், சீனமக்கள் தமிழ் கற்று தமிழ் மொழியில் சீன தமிழ்ப்பிரிவு வானொலியில் பணியாற்றுகின்றார்கள் என்பதும் அந்தச் சிற்றலை வானொலி தம் தமிழ்ப் பணியை மிக செவ்வனே செய்து கொண்டிருப்பதையும் தமிழினைப் பிறப்பிடமாக கொண்ட நாம் உரையாடிக்கொண்டிருக்கும் தமிழே கண்டு வெட்கி தலை குனியும். தமிழகத்தின் செய்தித்தாளும், தொலைக்காட்சியும், வானொலியும் ஆகிய தகவல் தொடர்பு துறை எந்தளவிற்கு தமிழ்மொழியைச் சீரழிக்கும் முயற்சியையும் செய்து கொண்டிருக்கிறது என்பதும் ஒரு சில ஊடகங்கள் தமிழ்ச்சொற்களை முழுமையாக பயன்படுத்தும் முயற்சியில் உள்ளன என்பதும் ஊரறிந்த இரகசியம் சான்றாக ஒரு வாக்கிய அமைப்பு செய்தித்தாளில் இடம் பெறுகின்ற பொழுது அதில் ஆங்கிலச் சொற்கள் இல்லாது இருப்பது அரிது. சான்றாக 'உள்ளூர்' தொலைக்காட்சி கேமராவில் பதிவானது' என்னும் வாக்கிய அமைப்பில் 'கேமரா' என்னும் சொல் ஆங்கிலச்சொல். இதனைத் தமிழ்ப்படுத்தி வெளியிடலாம். நும் தமிழகத்தின் நிலை இவ்வாறெனில் சீன தமிழ்ப்பிரிவு வானொலி ஆங்கிலச் சொற்களை முற்றிலும் தவிர்த்து பயன்படுத்துவது கண்டு பெருமை கொள்ள தான் வேண்டும்.''உலகத்தில் முதலாவது உடல்நலம் பாதுகாப்பு மோதிரம் நவம்பர் 29ஆம் நாள் பெய்ஜிங்கில் வெளியிடப்பள்ளது. மேகக் கணிமை மற்றும் உடல்நலத்துக்கான பெரியதரவு ஆய்வு உடல்நலத் துறையில் முதன்முதலாக நுழைந்துள்ளது என்று இது முன்னெறிவித்துள்ளது.

இதயத்துடிப்பின் வேகம், தூக்கம், உடலின் ஈரப்பதம் முதலியவற்றை இந்த மோதிரம் 24 மணிநேரம் தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் அத்துடன் பயன்படுத்துபவர்களின் இரத்த அழுத்த மாற்றம், மனநிலைமாற்றம, பண்பு முதலியவற்றை இது ஆய்வு செய்து மதிப்பு மிக்க முன்மொழிவுகளை வழங்கி மக்களின் உடல்நலத்தைப் பயன்தரும் முறையில் மேம்படுத்தும் என்று கருதப்படுகிறது. (சீன வானொலியில் நிகழ்வு, அறிவியல் நேரம்) என்னும் பொழிவில் ஒரு சொல் கூட ஆங்கிலச்சொல் அல்ல. மேகக்கணிமை தரவு போன்ற சொல்லாக்கங்கள் தமிழிற்கு வீழ்ச்சி இல்லை என்பதைக் காட்டுகின்றன. சீன தமிழ் வானொலியில் பயன்படுத்தப்பெறும் புதிய சொற்கள்.

மின்னாற்றல், மின்னூட்டக்கருவிகள், வான்தொழில்துறை, விண்வெளிக்குழுமம்,சீற்றத்தடுப்பு, மூலவளப்பொது அளவீடு, காற்றாற்றல், எரியாற்றல், இயந்திரமனிதன், ஏவூர்தி, செயற்கைக்கோள் ஏவு மையம், மென் ஒழுங்கு, ஊடொளி (கதிர்வீச்சு) பொதியில், வரிமக்கருவி, தொலை உணர்வறிச் செயற்கைக்கோள், மின்னூட்ட நிலையச் சேவை எனப்பல புதிய சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. Scanner என்பதற்கு வரிமக்கருவி, Pack Packet என்பதற்கு பொதியில், போன்ற சொற்களின் பயன்பாடு தமிழகத்திலும் வழக்கத்தில் பயன்படுத்த முயற்சி செய்தல் வேண்டும்.

சீன வானொலி தமிழ்ப்பிரிவில் பணியாற்றும் சீனர்களின் பெயர்களும் கூட தமிழிலே கலைமகள், வான்மதி, ஈஸ்வரி, இலக்கியா, மதியழகன், சரஸ்வதி என்று குறிப்பிடப்படுகின்ற பொழுது தமிழர்களாகிய நாம் நம் தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு என்ன செய்தோம் என்னும் கேள்வியை முன் வைத்து 'உலகத்தாய்மொழித் தினம்' என்ற நினைவூட்டப் பெறும் அவல நிலையிருந்து மீண்டுவர இல்லத்திலும், பணிமனையிலும், பொதுஇடங்களிலும் ஆங்கிலச் சொற்களைத் தவிர்த்து தமிழிலேயே முற்றிலுமாக உரையாட, புதிய சொல்லாக்கங்களுக்கும் வழி வகுக்க முயற்சி செய்ய, யாவரும் கேளிராக ஒன்றிணைவோம். தமிழ் மலர்ச்சி காண்போம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

கம்பனில் ‘காலம்’ பற்றிய சொல்லாட்சி

ப.பத்மபிரியா

முனைவர்பட்ட ஆய்வாளர்.

முன்னுரை

இந்தியர்கள் காலத் தத்தவத்தை மிக நன்றாக உணர்ந்தவர்கள் காலத்துக்கு தொடக்கமும் முடிவும் இல்லை. உருண்டையாக இருப்பவை நெடிது தொடர்வன என்று ஞானிகள் கூறுகின்றனர். அதனால் காலம் ஒரு சக்கரமாக உருவகப்படுத்தப்பட்டது என்பர் அறிஞர். கால என்பதிலிருந்து கிளாக் என்ற ஆங்கிலச் சொல் தோன்றியதாகக் கூறுவர். இக்கருத்திற்குச் சான்றாக காலத்தை சக்கரமாக வடிவமைத்த கோயில் கோனார்க்கில் இருப்பதைக் குறிப்பிடலாம்.

இந்த பின்னணிலேயே கம்பனும் மிக நேர்த்தியாக தனது காப்பியத்தில் காலம் குறித்தக் கருத்துகளை பதிவு செய்துள்ளார். அச்சொற்கள் கம்பராமாயணத்தில் கையாளப்பட்டிருக்கும் விதம்பற்றிக் காண்போம்.

சொல்

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பார் தொல்காப்பியர். உலகிலுள்ள அனைத்துச் சொற்களுக்கும் பொருளுண்டு. பொருள் தராத ஒரு சொல் இருக்க இயலாது. ஆனால் அச்சொல்லானது வெளிப்படும் இடத்தினையும். பயன்கொள்ளப்படும் இடத்தினையும் குறித்து மாறுபடும்.

ஒரு சொல் என்பது வைரம் போன்று என்றும் ஒரே மாதிரியாக ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் என்பது சரியன்று. ‘எண்ணங்கள் என்பவற்றின் மேல் போர்த்தப்பட்டுள்ள உயிரோட்டமுள்ள தோல் போன்றது சொல்’ அது தோன்றும் நேரம், இடம் என்பவற்றிற்கேற்ப அதன் பொருளும் இயல்பும் மாற்றம் பெரும்.

காலமும் கணக்கும் நீத்தவன்

தூதுவனாகிய அனுமன் இலங்கை வீதிகளின் வழியாக பிரம்மாத்திரத்தால் கட்டப்பட்டு இந்திரசித்தனால் இழுத்து வரப்படுகிறான். இறுதியாக இராவணின் அரசவையில் சென்று நிறுத்தப்படுகிறான். அவ்வேளையில் இராவனின் முன்பாகத் தலைவனாகிய இராமனின் வலிமையை,

“மூலமும் நடுவம் ஈறும் இல்லது ஓர்
காலமும் கணக்கும் நீத்த காரணன்” (கம்ப. பிணிவீட்டுப்படலம்-80)

என குறிப்பிடுகிறான். இவ்விடத்தில் 'காலம்' என்பது நீத்தவன், நீங்கியவன் எனப் பொருள் தந்தது. இதனைப் போன்றே சிவபெருமானின் சிறப்பினை எடுத்துரைக்கும் இடத்தில்,

"காலங்கள் கணக்கு இற கண் இமையா

ஆலங்கொள் மிடற்றவன்" (கம்ப- அதிகாயன் வதைப்படலம்-60)

எனப் பாடுகிறார். இவ்விடத்தில் 'காலம்' 'கடந்தவன்' எனப் பயன் கொள்ளப்படுகிறது.

சந்தர்ப்பம்

வீடணன் அடைக்கலம் குறித்து இராமன் விவாதிக்கும் பொழுது அனுமன்,

"காலமும் அன்று, இவன் வருகாலம் என்பரேல்" (கம்ப. வீடணன் அடை.படலம்-91)

என்று கூறினான். இந்த இடத்தில் 'காலம்' என்பது சந்தர்ப்பம், தருணம் எனப் பொருள் தந்தது.

விரைவுப் பற்றிய சொற்கள்

அரக்கர் படையோடு அனுமன் பொருத காட்சியைக் கம்பன்,

"காற்றின் செம்மல்

'ஏ' என்னும் அளவில் கொல்லும்

நிருதர்க்கு ஓர் எல்லை இல்லை" (கம்ப- அக்க குமாரன் வ.ப-26)

எனக் குறிப்பிடுகிறார். இங்கு 'ஏ' என்ற ஓரெழுத்தொருமொழி 'விரைந்து' எனும் பொருள்பட வந்தது. இராமனின் அம்பு செல்லும் வேகமானது ஒலியின் வேகத்துக்கு ஈடானது என்பதனை

"சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம்" (கம்ப-தா. வ.ப- 50)

என்று நுட்பமாக குறிப்பிட்டுள்ளார். அரக்கர் சேனையின் விரைவினை உணர்த்துவதற்கு

"ஒல் என உரறிய ஊழிப் பேர்ச்சியுள்

வல்லை வந்து எழுந்தது ஓர் மழையும் போன்றதே (கம்ப – வேள்விப் படலம்-45)

என்கிறார். இப்பாடலில் 'வல்லை' என்பது மிகுந்த விரைவு எனப் பொருள் தந்தது.

மிதிலையின் கொடிகள் மதில்களின் மீது அசைந்தன. அவ்வாறு அசைகின்ற காட்சி இராமனை விரைந்து வருக் என விளிப்பதனைப் போன்று இருந்தது. இந்நிகழ்வு,

"செழுமணிக் கொடிகள்

ஐயனை ஒல்லை வா என்று அழைப்பது போன்றது" (கம்ப-மிகி-கா. பு-1)

ஏன வருணிக்கப்படுகிறது.

தீயானது இராவணன் அரண்மனையின் மீது தாவிப் பரவியது. அப்போது ஏற்பட்ட விரைவினை,

'நினையும் மாத்திரை யாவரும் நீங்கினர்' (கம்ப-இலங்கை எரி. ப-43)

ஏனக் குறிப்பிடுகிறார். இங்கு 'நொடிப்பொழுது' எனப் பொருள்படுகிறது.

இராமன் வில்லிறுத்த நிகழ்வினை,

"மாத்திரை அளவில் தாள் மடுத்து" எனக் காட்சிப் படுத்துகிறார். இவ்விடத்தும் மேற்குகூறிய பொருளே பயின்று வருகிறது.

மேலும் கடிது, தெற்றென, முடுகுதல் என்ற சொற்களும் விரைவுப் பொருளில் கையாளப்பெற்றுள்ளன.

பருவம் குறிப்பிடும் சொற்கள்

பல நாள்களை 'நெடுங்காலம்' எனவும் ஒரு நாளை 'ஒரு பகல்' எனவும் கம்பர் குறிப்பிடுகிறார். கடும்பகல் என்பது நடுப்பகலைக் குறிக்கிறது. இதனை 'இன்று ஒரு கடும் பகலிலே' என்ற அடிகளால் அறியலாம்.

கேகய நாட்டிலிருந்து பரதன் சத்ருக்கனனோடு புறப்பட்ட நிகழ்வு, 'பொழுதும் நாளும் குறித்திலன் போயினான்' (கம்ப – பன். படை. ப-7) என்று குறிப்பிடப் பெறுகிறது. நாள் என்பது பயணத்துக்கு ஏற்ற நாளையும் 'பொழுது' முகூர்த்தத்தையும் உணர்த்தி நின்றன.

காலம் குறித்த சொல்லாட்சி

இலக்குவன் சீதை ஆகியோருடன் இராமன் வனம் புகுந்த போது ஒரு பாலை நிலத்தின் வழியாகச் சென்றான். இராமனின் வரவால் அப்பாலையின் வெப்பம் தணிந்தது. பருவம் இல்லை எனினும் பழங்கள் பழத்தன.

இதனை,

"காலம் இன்றியும் கனிந்தன கனி
மூலம் இன்றியும் முகிழ்த்தன நெடும் கந்தம்"

ஏனக் கம்பன் குறிக்கிறான் - இங்கே காலம் **'பருவம்'** எனும் பொருளில் பயின்றுவந்தது,

"கால மாமாரி நீங்க" என்ற இடத்தில் மழைப்பருவம் என்று பொருள் தந்தது.

'காலம் கொண்டு எழுந்த மேகம்'
காலம் நீந்து காரும் மாரியும் வந்தது

எனும் போது கார்ப்பருவம் என்னும் பொருள் தந்தது.

அரக்கர் படையோடு அனுமன் பொருத காட்சியை

"காற்றின் செம்மல்
'ஏ' என்னும் அளவில் கொல்லும்
நிருதர்க்கு ஓர் எல்லை இல்லை"

என்று குறிப்பிடுகின்றான்.

ஆமைச்சரை அழைத்து வருமாறு இராவணன் கட்டளையிட, அப்போது ஏவலர் ஏ வின் சிலதர் ஓடி, ஏ எனும் துணையில் எங்கும் கூவினர் என்றும் குறிப்பிடப்பெறுகிறது.

இவ்விடங்களில் 'ஏ' எனும் ஒரெழுத்தொருமொழி மிக விரைந்து என்று பொருள் தந்தது. இதனைப் போன்றே இராமன் நொடிப்பொழுதில் வில்லிறுத்த நிகழ்வினை,

'மாத்திரை அளிவல் தாள் மடுத்து' என்று கூறுகிறார். இங்கே 'மாத்திரை' என்பது மிகவும் விரைந்து எனும் பொருள் தந்தது.

மேலும் 'நொய்தின்' என்ற சொல் பலவிடங்களில் பயின்று வந்து விரைந்து, என்ற பொருளைக் கொடுக்கிறது. சான்றாக,

"நொய்தின் எய்தினாள்"

"இலங்கை மாநகர் நொய்தின்

சென்று எய்தினான்"

"நொய்தினின் வென்று பற்றித்

தருகுவென் நொடியில் நுன்பால்"

என்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.

சங்கப் பாடலில் 'புனைவு' எனும் சொல் கற்பனை என்ற பொருளோடு இடம் பெற்றுள்ளது.

கல் - கற்பித்தல் - கற்பனை

ஙனை – புனைதல் புனைந்துரை,

சங்க இலக்கியம் மிகப் பல இடங்களில் இவ் வினையடிச் சொல்லை பயன்கொண்டுள்ளது. (பழந்தமிழ் நூல் சொல்லடைவு – ப – 1066-1067)

நாவிற் புனைந்த நன்கவிதை (பரிபாடல்) 6-8

இனையள் என்று அவள் புனையளவு அறியேன் (கு.கொ) (70-3வரி)

இதற்கு உரையாசிரியர் "புனையப் புனைய மேலும் புனையத் தோன்றுவதன்றி இவ்வளவே என வரையறுத்து நிறுத்தலாகாமையின் புனையளவளியே னென்றான்" எனக் கூறியது சிறப்புடையது.

கற்பனை என்ற சொல்லிற்குத் தமிழ் பேரகராகி, கல்வி, போதனை, சங்கற்பம், கட்டளை, காரிய ஏற்பாடு, இல்லதைக் கட்டிச் சொல்லுதல், வருணனை, கபடம், அத்தியாசம் (மாயை) என ஒன்பது பொருண்மைகளைத் தருகிறது.

காலம் என்பது நேரத்தின் கூறுபாடுகளைக் கொண்டதாக உள்ளது. காலத்தின் சிறப்பு கருதி செயல்பட வேண்டியதன் அவசியம் தற்காலத்தின் தேவையாகிறது. காலத்தினை எவ்வாறு பகுத்துச் செயல்பட வேண்டும் என கம்பர் தான் படைத்த கதாபாத்திரங்கள் வழி உணர்த்தியதை நாமும் கனயிடிந்தால் இனிவரும் காலங்கள் பயனுள்ளதாய் அமையும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

புறநானூற்றில் உவம உருபுச் சொற்*கள்*

முனைவர் சு.பாஸ்கா உதவிப்பேராசிரியர்-தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி) திருவானைக்கோவில், திருச்சி-05.

அறிமுகம்:

சங்க கால மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் இலக்கியம் சங்கஇலக்கியம் ஆகும். பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதியே எட்டுத்தொகை. இதில் புறநூல்கள் புறநானூறும், பதிற்றுப்பத்தும் ஆகும். இந்நூல்கள் அனைத்திலும் சிறந்து விளங்குவது புறநானூறு. பழந்தமிழ் நாட்டின் வரலாற்றை அறிதற்கு இந்நூலே பெரிதும் துணைசெய்கிறது. முடியுடை மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் ஆகியோருடைய வரலாற்றுக் குறிப்புகள் புறநானுற்றில் உள்ளன. புவியாளும் வேந்தரும் புலமைச் செல்வம் வாய்ந்தவராகத் திகழ்ந்தமையை இந்நூலால் அறியலாம்.

தொல்காப்பியத்தில் உவம உருபுகள்:

இதில் ஒரு பொருளை விளக்க மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறுவது இலக்கியத்தில் உவமை எனப்படுகின்றது. இந்த உவமையை விளக்க வரும் உவம உருபுகளை அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப, என்ன, மான, என்றும் ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, என்ற, வியப்ப என்றும் எள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப, கள்ள, கடுப்ப என்றும் காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப என்றும் புல்ல, பொருவ, பொற்ப, போல, வெல்ல, வீழ, என்றும். நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, புரைய, என்றும் முப்பத்தாறு வகையாகத் தொல்காப்பியர் கூறுகிறார்

இவற்றை தொல்காப்பியர் வினையின்(செயல்) காரணமாக வரும் உவம உருபுகள் என்றும், பயனின் காரணமாக வரும் உருபுகள் என்றும், மெய் (வடிவம்) காரணமாக வரும் உவம உருபுகள் என்றும் உரு (வண்ணம்) காரணமாக வரும் உவம உருபுகள் என்றும் பகுத்துக் கூறுகின்றார்

‘போல’ என்னும் உவம உருபு:

புறநானுற்றில் பல உவம உருபுச் சொற்களைப் புலவர்கள் பயன்படுத்தியிருந்தாலும் போல என்ற உவம உருபே பெரிதும் பயன்படுத்தியுள்ளார்கள் அதன் பயன்பாட்டை இனிக் காணலாம்.

வீரம்:

சோழன் இளஞ்சேட் சென்னியைப் பரணர் பாடிய பாடலில் "கரிய கடலில் உயர்ந்து எழுகின்ற ஞாயிற்றின் அழகுடையாய் ஆதலால் உன்னுடன் சினந்தவரின் நாடு தாயில்லாது உண்ணாத குழந்தை போல ஓயாது கூவும் என்கிறார் இக்கருத்தை,

"தாயில் தூவாக் குழவி போல

ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே" (புறம் -4)

என்ற பாடலில் காணமுடிகின்றது. அதாவது தலைவன் இல்லாமல் பகைவன் நாடு வருந்தும் என்கிறார்.

களிற்றின் வலிமை:

சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் யானைகள் பற்றி குறுங்கோழியூரர் என்ற புலவர் பாடும் போது இவனுடைய இளங்களிறுகள் சினப்பார்வையும், பரந்த அடியுடையும் பருத்த கழுத்தும் தேனழிந்த மலை போன்று தேனீக்கள் ஆர்க்கும் மதநீருடன் மண்ணில் நீர் வடியும் பெரிய தலையுடனும் வலிமையானவையாக இருக்கின்றன என்கிறார். இதனை,

"தேன் சிதைந்த வரைபோல

மிஞிறு ஆர்க்கும் கமழ்கடா அத்து

அயறு சோரும் இருஞ்சென்னிய

மைந்து மலிந்த மழ களிறு" (புறம்- 22)

என்ற பாடல் காட்டுகின்றது. இங்கு சேரனின் யானை மலையொடு ஒப்பிடப்படுகின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிக் கிழார் என்ற புலவர் பாடுகையில் அவன் பட்டத்து யானையை,

"நளிகடல் இருங் குட்டத்து

வளிபுடைத்த கலம்போலக்

களிறு சென்று களன் அகற்றவும் (புறம் -26)

என்கிறார். அதாவது, பெருங்கடலின் ஆழத்தில் காற்றால் செலுத்தப்பட்ட மரக்கலம் நீரைப் பிளந்த வண்ணம் ஓடுவதைப்போல ஆண்யானை முன் சென்று போர் செய்யும் இடத்தை அகலமானதாக ஆக்குகின்றது என்கிறார்.

நீர்வளம்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் நாட்டு வளத்தை வெள்ளைக்குடி நாகனார்,

"அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்டத்

தோடுகொள் வேலின் தோற்றம் போல

ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்

நாடு எனப்படுவது நினதே" (புறம் 35)

என்று பாடுகிறார். அழகிய குளிர்ந்த காவிரியாறு பல கால்வாய்களாக ஓடி உணவுகளை விளைவித்துக் கொடுக்கும். தொகுதியாகத் திரண்ட வேலின் தோற்றம் போலக் கரும்புகள் அசையும் நாடு என்று, நீர்வளத்தால் சிறந்த நாட்டை இவ்வுவமை பாராட்டுகின்றது.

பொறுமை:

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் பற்றி முரஞ்சியூர் முடிநாகர் பாடிய பாடலில்,

"ஐம்பெரும்பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும்" (புறம் - 2)

என்கிறார். அதாவது பகைவர் பிழையைச் செய்தால் அதை நிலம் போலப் பொறுத்துக் கொள்ளும் வலிமை உடையவர் என்று பாராட்டுகின்றார்.

கொடைச்சிறப்பு:

கோவூர் கிழார் சோழன் நலங்கிள்ளியின் வெண்குடையின் சிறப்பை,

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒரு குடை" (புறம் - 31)

என்று பாராட்டுவர். சோழனே சிறப்புடைய முறையால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றுகின்ற தோற்றம் போல, சேர, பாண்டியர்களின் இரு குடைகளும் பின்னே இருக்க உயர்ந்து விளங்கியது. உன் வெண்கொற்றக் குடையே என்கிறார். அறத்திற்கு இணையாகச் சோழனின் வெண்குடை போற்றப்பெறுவது சிறப்பிற்குரியது.

வாழ்த்து:

அதியமான் நெடுமான் அஞ்சி தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்தான். அக்கருணை உள்ளத்தை வியந்து ஔவையார்,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும" (புறம் -91)

என்கிறார். பிறை நிலவு தவழும் சென்னியையும் நீலமணி போன்ற மிடற்றையும் உடையவன் சிவபெருமான். இவரைப் போல அதியமானும் நீண்ட நாள் நிலைத்திருக்க வாழ்த்துகிறார்.

புகழ்:

அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசில் பெறச் சென்ற ஔவையார், தாம் அதனைப் பெற அவன் காலம் தாழ்த்தியமையை அறிந்து அதியமானைப் புகழ்கிறார். அவனிடம் சென்றாலே பரிசில் கொடுக்காது அனுப்பமாட்டான். என்பதை,

"அதியமான் பரிசில் பெறூஉங்காலம்
நீட்டினும் நீட்டாதாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்

கையகத்தது அது பொய்யாகாதே" (புறம்-101)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. யானையின் தந்தங்களுக்கு இடையில் வைத்த உணவுத்திரள் எப்படி அதன் வயிற்றுக்குச் சென்று விடுமோ, அதுபோல அவன் அவையை அடைந்தாலே அதியமான் பரிசில் தந்துவிடுவான் என்று ஔவையார் புகழ்கின்றார்.

ழைதின் யானையார் வல்வில் ஓரியின் கொடைப்பண்பைப் பாராட்டும் போது,

"புலவேன் வாழியர் ஓரி விசும்பின்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய்" (புறம்-204)

என்று பாராட்டுகிறார். வானத்தில் மின்னல் முதலிய தொகுதியை உடைய மழைபோல எல்லையின்றிக் கொடுக்கும் வள்ளல் என ஓரி பாராட்டப்படுகின்றான். **அறிவுரை:**

பாண்டியன் அறிவுடை நம்பி தானே புலவனாகப் பாடிய பாடலில் மக்களிடம் வரி பெறும் முறையை விளக்குகிறார். அளவுக்கு மீறி வரி வாங்கினால் நாடு அழிந்துவிடும் என்கிறார். இதனை,

"யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே" (புறம்-184)

என்ற அடிகளில் விளக்குகிறார். அதாவது யானை புகுந்த விளைநிலம் எவ்வாறு அழிந்துவிடுமோ அதுபோல நாடும் அழிந்துவிடும் என்று அறிவுரைக் கூறுகிறார்.

ஊழ்வினை:

கணியன் பூங்குன்றனார் உலகளாவிய ஒற்றுமையைப் பாடியவர். அவர் தம் பாடலில் ஊழின் அடிப்படையில் தான் எல்லாம் செயல்படும் என்கிறார். தண்ணீர் செல்லும் வழியில் படகு செல்வதைப்போல் ஊழ்வினையின் வழியில் உயிர்கள் செல்லும் என்கிறார். இக்கருத்தை,

"நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் (புறம்- 192)

என்ற அடிகளில் காணலாம்.

'அன்ன' என்னும் உவம உருபு:

போல என்னும் உவம உருபைப் போல, 'அன்ன' என்னும் உவம உருபும் பரவலாகச் சங்க இலக்கியத்தில் பயின்றுவந்துள்ளது.

முதுமை

பிறந்த உயிரினங்கள் அனைத்திற்கும் முதுமை உண்டு. மனிதர்களுக்கு முதுமை வரும்போது கயல்மீனின் முள்ளைப் போன்ற நரைமுடி தோன்றும். கன்னங்கள் சுருக்கமடையும் பயனில்லாத நிலை உருவாகும். ஆகையால் இளமையிலேயே நன்மை செய்ய வேண்டும் என்று நரிவெரூஉத்தலையார் கூறுகிறார். இதனை.

"கயல் முள்ளன்ன நரை முதிர் திரைகவுள்
பயனில் மூப்பின்" (புறம்- 195)

என்ற பாடலில் அறியலாம். இப்பாடலில் நரைமுடிக்கு கயல்முள்ளை உவமையாக்க அன்ன என்னும் உருபு பயன்படுகிறது.

துன்பமும் இன்பமும்:

மனித வாழ்க்கையில் ஒருவருக்கு, தீமையானலும் நன்மையானலும் துன்பமானாலும் இன்பமானாலும் அவரரவர் விதிப்படியே நடக்கும் என்பதை கணியன் பூங்குன்றனார்,

"தீதும் நன்றும் பிறர் தரவாரா

நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன" (புறம்-192)

என்ற அடிகளில் கூறுகின்றார். இதுபோல் ஒரு சில இடங்களில் அன்ன என்னும் உவம உருபு பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

நிறைவு:

மன்னர்களின் வீரத்தைக் காட்டும் போதும் பொறுமையை விளக்கும்போதும் கொடைக் குணத்தைப் புகழும் போதும் யானையின் வலிமையை உணர்த்தும் போதும் நாட்டின் நீர்வளத்தையும் ஊழின் திறத்தையும் அறிவுறுத்தும்போதும் அந்தெந்த சூழலுக்கு ஏற்றவாறு உவம உருபுகளை புலவர்கள் கையாண்டுள்ளனர். அவற்றுள் **'போல'** என்னும் உவம உருபே மிகச் சிறப்பாகக் கையாளப் பட்டுள்ளதை இக்கட்டுரை வெளிக்காட்டுகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

காளமேகப் புலவர் பாடல்களில் பொருள்கொள் முறை

து.பிரபாகரன்

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),திருச்சி – 5.

முன்னுரை

"இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்"(நன்.நூற்-141) என்ற நன்னூலின் நூற்பா, இலக்கணத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை வரையறை செய்கிறது. எள்ளிலிருந்து எண்ணெய் எடுபடுவது போல இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுபட்டது. எனவே இலக்கியம் முதன்மையானது. இம்முதன்மையான இலக்கியத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகை இலக்கணங்களும் விரவிக் கிடக்கின்றன. இவ்வைவகை இலக்கணத்தில் 'சொல்லும் பொருளும்' என்ற பரவலான ஆய்வுப் பொருண்மையில் காளமேகப் புலவர் பாடல்களில் பொருள் கொள்ளும் முறையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்லும் பொருளும்

எழுத்துக்கள் பொருண்மை தரும் நோக்கில் கூடி சொல்லாக உருப்பெற்று இன்பம் நல்குகிறது. சொல் என்பது இன்பம் தரும் எழுத்துக்களின் கூட்டு எனலாம். மேற்சொன்னவற்றில் 'இன்பம் தரும்' என்னும் பதங்கள் இலக்கியத்திற்குச் சாலப் பொருந்தும்.

"இலக்கணக் கவிஞர்சொ லின்பம் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்கணா ளர்களே" (தனி.பா.திரட்டு-பக்:14)

என்று ஔவையார் கூறுகிறார். இப்பாடல் இலக்கியத்தில் சொல்லிற்கும் சொல் தரும் இன்பத்திற்கும் புலவர்கள் அளித்த இன்றியமையாமையைப் புலப்படுத்துகிறது.

"ஏட்டைக் கூட்டி யெழுத்தோ டெழுத்துவைத்
திணைத்துக் கட்டி யிசைக்கூட்டி" (தனி.பா.திரட்டு-பக்:284)

என்ற பெயர்தெரியாப் புலவரின் பாடலும் மேற்சொன்ன கருத்தோடு ஒப்புநோக்கத் தக்கது. இப்பாடற் பொருண்மைகள் அக்காலப் புலவர்களுக்குச் சொல் மீதும் சந்தத்தின் மீதும் பொருளின் மீதும் இருந்த நாட்டத்தை எடுத்தியம்புகிறது.

தனிப்பாடற் திரட்டும் காளமேகப் புலவரும்

தமிழிலக்கியத்தில் பதினெண் மேற்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய இருபெரும் முதன்மைத் திரட்டு நூல்களுக்குப் பின் மிகவும் பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட திரட்டு நூலே 'தனிப்பாடற் திரட்டு' என்னும் நூலாகும். இத்திரட்டு நூலின் வாயிலாக கம்பர், ஔவையார், ஒட்டக்கூத்தர் போன்ற புலவர்கள் புகழின் உச்சத்தில் இருந்தாலும் தனக்கென்று தனிச்சிறப்போடும் புகழோடும் விளங்கியவர் கவி காளமேகம் ஆவார்.

"ஆசு கவியா லகிலவுல கெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே – பூசுரா
விண்கொண்ட செந்தணலாய் வேகுதே யையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்" (தனி.பா.திரட்டு-பக்:207)

என்று இரட்டையர்கள் காளமேகப் புலவரின் இழப்பு குறித்து பாடியிருக்கின்றனர்.இப்பாடல் காளமேகப்புலவரின் புகழையும் சிறப்பையும் அறிவுறுத்துகிறது. இக்காளமேகப் புலவரின் பாடல்கள் அமைந்துள்ள முறைமையையும் அப்பாடல்களில் பொருள்கொள்ளும் முறையினையும் அப்பாடல் பொருள் தரும் பொருட்டு எழுத்துக்கள் கூடிச் சொல்லாகும் முறையினையும் இனி காணலாம்.

எழுத்துக்கள் கூடி பொருளாதல்

மொழியின் மிக அடிப்படையான தன்மை எழுத்துக்களாகும். எழுத்தின்றேல் மொழி இல்லை. அவ்வெழுத்துக்களை விரவியது போல் செய்து விரவிய எழுத்துக்களிலிருந்து சொற்களை உருவாக்கி அச்சொற்கள் தகுந்த பொருள் தரும் முறையில் அமைத்துப் பாடலை உருவாக்குவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். ஆனால் அவற்றை மிக எளிமையாகக் காளமேகப் புலவர் கையாண்டிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

"ஓ கா மா வீ தோ வுரைப்பன் டுடுடுடு
நாகர் குடந்தை நகர்க்கதிபர் - வாகாய்
எடுப்பர் நடமிடுவ ரேறுவரன் பர்க்குக்
கொடுப்ப ரணிவர் குழைக்கு" (தனி.பா.திரட்டு-பக்:115)

இப்பாடலில் குடந்தை நகரிலுள்ள சிவபெருமான் நிந்தாஸ்துதியாகப் பாடப்பட்டுள்ளார். இப்பாடலின் முதலடியின் இறுதியில் உள்ள ஐந்து 'டு' வையும் ஓ, கா, மா, வீ, தோ என்ற எழுத்துக்களோடு தனித்தனியே கூட்டின் ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்ற ஐந்து சொற்கள் கிடைக்கும். இவ்வைந்து சொற்களையும் கீழ் அடிகளில் உள்ள சொற்களோடு முறையாகச் சேர்த்துரைத்தால் பாடலிற்கு அழகான பொருள் கிடைக்கிறது.

(திரு)ஓடு - எடுப்பர்
(சுடு)காடு - நடனம் இடுவர்

(காளை)மாடு - ஏறுவர்

வீடு(பேறு) - அன்பருக்குக் கொடுப்பர்

தோடு(பெண்) - அணிவர் குழைக்கு (ஆண்)

இவ்வாறு சொல் விளையாட்டு போல பாடலை அமைத்துப் படிப்பவர்களை இன்பம் நல்க வைக்கிறார். இப்பாடல் கவி காளமேகத்தின் கவியாளுமைக்குச் சிறந்த சான்றாகும்.

"அரையின் முடியி லணிமார்பி னெஞ்சில்
தெரிவையிடத் தமர்ந்தான் சேவை – புரையறவே
மானார் விழியீர் மலரண வொற்றீறாகும்
ஆனாலா நா நீ நூ நே" (தனி.பா.திரட்டு-பக்:118)

என்ற பாடலில் இறுதி அடியிலுள்ள நா, நீ, நூ, நே என்ற ஒவ்வொரு எழுத்தோடும் மூன்றாவது அடியில் உள்ள ம், ல், ர், ண் ஆகிய மெய்யெழுத்துக்களை எதிர்நிரல் நிறையாகச் சேர்த்துச் சொல்லாக்கி அச்சொற்களைக் கொண்டுகூட்டி பொருளாக்கியுள்ளார்.

நேம்(அன்பு) - நெஞ்சில்

நூல் - மார்பில்

நீர் - தலையில்

நாண் - இடையில்

இவ்வாறு சிவபெருமானின் தோற்றப் பொலிவினை விளக்கும் பொருட்டு எழுத்துக்களைக் கூட்டிச் சொல்லாக்கி அதன் பொருண்மையை வெளிப்படுத்துகிறார்.

எழுத்துகளோடு சொற்சேர்ந்து பொருளாதல்

ஒரு எழுத்துடன் மற்றொரு சொல் சேர்ந்து மேலும் ஒரு சொல்லாக உருப்பெற்று அச்சொல் பாடலில் உள்ள மற்ற சொற்களோடு சேர்ந்து பொருளாகும் முறையில் பாடல் அமைத்துள்ள விதம் காளமேகப் புலவரின் இலக்கிய ஆளுமையையும் படைப்பாளுமையையும் புலப்படுத்துகிறது.

"சோ கா மா ஏ வா தா சொல்லின்மனைக் கூட்டியுமை
பாகார்ந்த தில்லைப் பரமேசர் - வாகாய்த்
தரித்தா ரெரித்தார் தறித்தா ருதைத்தார்
உரித்தார் கணை படைத்தா ரூர்க்கு" (தனி.பா.திரட்டு-பக்:124)

சோ, கா, மா, ஏ, வா, தா போன்ற எழுத்துக்களோடு 'மன்' என்னும் இடைச்சொல்லைக் கூட்டின் சோமன், காமன், மாமன், ஏமன், வாமன், தாமன் போன்ற சொற்கள் உருவாகும்.

(சந்திரன்)சோமன் - தரித்தார் (தலையில் அணிந்தார்)

(மன்மதன்)காமன் - எரித்தார் (நெற்றிக் கண்ணால்)

(தக்கன்)மாமன் - தறித்தார் (யாக சாலையில் வெட்டித் தள்ளினார்)

(எமன்)ஏமன் - உதைத்தார் (திருவடியால்)

(யானையை)வாமன் - உரித்தார் (தோலுரித்துப் போர்த்தினார்)

(நாராயணன்)தாமன் -கணை படைத்தார் (திரிபுரமெரிக்க அம்பாய்க் கொண்டார்)

இப்பாடலில் சொற்கள் பொருளாகும் விதம் மிகவும் நுட்பமானது.

நிரல்நிறையில் பொருள்கொள்ளல்

"கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத்……" (தனி.பா.திரட்டு-பக்:183)

மற்றும்,

"பொன்னனைவா ளரக்கனைநூற் றுவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற
நன்மகற்காய்ச் ……..." (தனி.பா.திரட்டு-பக்:184)

போன்ற பாடல்களில் காளமேகப் புலவர் சொற்களை நிரல்படுத்தி பொருள்கொள்ளும் முறை மிகவும் சிறப்பானதாகும்.

முடிவுரை

தனிப்பாடல் திரட்டிலுள்ள காளமேகப் புலவரின் பாடல்கள் அவரின் மிகச் சிறந்த புலமைத் திறத்திற்குச் சான்றாகும். காளமேகப் புலவர் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களை மட்டுமே கொண்ட வருக்கப்பாடல்கள், தொடக்கமும் முடிவும் கொடுத்ததற்குப் பாடிய பாடல்கள், சிலேடைப் பாடல்கள், வசைப்பாடல்கள் என பலதிறத்தில் பாடல் பாடியிருப்பினும் ஒரு பாடலில் பொருள்கொள்ளும் பொருட்டு எழுத்துக்களையும் சொற்களையும் கூட்டுவது அவரின் கவி ஆளுமையின் திறத்தை வெளிப்படுத்துகிறது. ˙. இக்கவித்திறன் காளமேகப் புலவருக்கு மிகவும் இயல்பாய் இருந்தது. எவ்விதத் தயாரிப்புமின்றி கவிதையினைக் கொட்டித் தீர்த்தார். காளமேகப் புலவரே தன்னைப் பற்றி,

"இம்மென்னும் முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம் பாட்டாகாதோ – சும்மா
இருந்தா லிருந்தே னெழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்" (தனி.பா.திரட்டு-பக்:129)

என்று கூறிஇருப்பது, காளமேகப் புலவருக்கு கவி ஆற்றல் தொடர்பாக தன் மீதிருந்த நம்பிக்கை புலனாகிறது. தமிழ்மொழியை அவர் அழகுற கையாண்ட விதம் புலனாகிறது. எவ்விதத்திலும் கையாளுவதற்குரிய தன்மையில் தமிழ்மொழி சிறப்புடன் திகழ்கிறது என்பதும் புலனாகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இலக்கியங்களில் மதி

ரெ. ஸ்ரீவித்யா,

முனைவர் பட்ட ஆய்வாளர் , தமிழாய்வுத்துறை , ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ,திருச்சி

முன்னுரை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்னும் பொன் மொழிக்கு ஏற்ப பழமை வாய்ந்த தொல் மரபைச் சார்ந்தவர்கள் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த அறிவாற்றாலோடும், சிந்தனையாற்றாலோடும் வாழ்ந்து வந்துள்ளனர்.

உலகின் தொன்மை வாய்ந்த மொழிகளுள் தமிழும் ஒன்று என்பதால், உலக நாகரீக பண்பாட்டு வளர்ச்சியை ஆய்வோர்கள் தமிழையும், தமிழ்மக்களின் நாகரீக பண்பாட்டையும் ஆய்வு செய்கிறார்கள். தமிழ்நாட்டில் வாழையடி வாழையென புலவர்களும், தத்துவ அறிஞர்களும் வாழ்ந்து உள்ளனர். தமிழின் தொன்மை நூலான இலக்கண இலக்கிய நூலாம் தொல்காப்பியமும், தமிழ் இலக்கியங்களில் ஈடும் எடுப்புமின்றி ஒளிவீசித் திகழ்வன சங்ககால நூல்களாகும். அச்சங்ககாலங்களில் மக்கள் திங்களை உயிருள்ள பொருளாகக் கண்டனர். சங்க இலக்கியத்தில் மதியை ஆணாகக் கொண்டே பாவித்தனர். கடல் அலையில் ஏற்படும் மாற்றத்திற்கு மதியே காரணம் என்று கூறப்பட்டது.

இவ்வாறு சித்தரிக்கப்பட்ட 'மதி' ஆனது பல்வேறு வடிவங்களில் (விதங்களில்) கையாளப்பட்டுள்ளன. அவற்றை இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க காலப் பாடல்களான (சங்க இலக்கியத்தில்) 'மதியை' பற்றி பல கதைகள் சிறந்து விளங்கின.

அக்காலத்தில் மக்கள் கொடிய விலங்கோ, அரக்கனோ மதியத்தை உண்டு உமிழ்வதாக உண்டு அஞ்சினர். இவ்வாறு மதியைப் பாம்புண்ணும் வழக்கமாகக் கருதப்பட்டன. அது கண்டு சான்றோர் வருந்திய வருத்தத்தில் 'கிரகணம்' பற்றி அச்ச நிலைக்கு மாறாகப் பிறர் துன்புறுத்தலைக் கண்டு வருந்தும் மனித உணர்வையே காண்கிறோம்.

புற நிலையில் சங்ககாலப் புலவர்கள் நன்கு அறிந்திருந்தனர். மேற்கே கதிரவன் மறையக் கிழக்கே எழும் '**மதியத்தின் ஒளி**' பால் போன்றும் பகல் என்று அறிய முடிகிறது.

'பெருகு மதி' என்பதின் வாயிலாக ஆம்பல் போன்ற மலர் மலர்தலையும், நெய்தல் போன்றவை கூம்புதலையும் கண்டனர்.

தன்னிலை, பிறர் நிலை என இரு உட்பொருளையும் பிரிக்கலாம்.

1. ந.(271) பிரிந்த தலைவியை நிலவொளியில் தேடும் தாயிடத்தும்.
2. 4 (7) பாலில்லாது வருந்தும் குழந்தைக்கு நிலவைக் காட்டும் தாயிடத்தும் இவ்வாறு மதியை ஒளியுடன் ஒப்பிட்டுள்ளனர்.

இம்மதியை உவமப் பொருளிலும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

1. இயற்கை நிலையில் **மதி** – தனி நிலைப் பொருள் சூழ்நிலைப் பொருள்
2. இயற்கை இறந்த நிலையில் **மதி** – பாம்புண் மதி தெய்வ நிலை.

என்று உவம பொருளில் கையாளப்பட்டுள்ளது.

மேலும் **மதியை** முகத்திற்கு உவமை ஆக்கியுள்ளனர். "முழு **மதி** பெரும் மகளிர் முகத்திற்கும்" அக. (253)

நற்கணவனைப் பெற்ற பெண்டிர்

பிறையை வணங்கினர் (கு.178) (அ.239)

குழந்தை நெற்றியில் **பொற்பிறை** அணிவித்தனர். (கலித்தொகை 41)

'முல்லை அரும்பும் - ஐங்குறு (454) இவ்வாறு வர்ணிக்கப்பட்ட மதி பின்வருமாறு தொகுப்பில் வித்தியாசமாகக் கையாளப்பட்டுள்ளன.

'கடவுளரின் முருகன் முகத்திற்கும் மாலின் கண்ணிற்கும்' – (மு.ந.கடவுள் - 86 – 8, 96-8)

ஔவையார் நல்வழியில் மதியை (16 பாடல்)

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்கு

இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்

விதியே மதியால் விடும்.

துன்ப அறிவை வெல்வதற்குரிய **சரியான உபாயம் நல்லறிவு மற்றும் நல்ல வழி என்று ஒப்பிடுகிறார்.**

'மதி' என்ற சொல்லை **சேக்கிழார்**

"கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ வில்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ இவ்விடத்தில் மதி என்பதைச் சந்திரனுக்கு ஒப்பிடுகிறார்.

'திவ்யப் பிரபந்தத்திரட்டு' என்ற நூலில் திருப்பாவை – 1 (மார்கழித் திங்கள் மதிநிறைந்த இவ்விடத்தில் **'மதி'** என்பது பௌர்ணமியுடைய மங்கள தினமாகக் குறிக்கப்படுகிறது.

திருப்பள்ளியெழுளுச்சியில் - 'பள்ளி எழுந்தருளாயே'

சுடர் ஒளி பரந்தன சூழ்திசை யெல்லாம்.

படர்ஒளி பசுத்தனன் **பனிமதி** இவனோ

"பனிமதி" – குளிர்ந்த ஒளி என்ற பொருளில் வந்துள்ளது.

திருவிதத்தில்:

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி என்ற தலைப்பில் வரும் பாடலில் - மதி விகற்பால் என்ற இடத்தில் **அறிவின் வேறுபாடு** என்ற பயின்றுள்ளது.

நாச்சியார் திருமொழி – 3ம் பாடலில்

"தடவரையின் மீதே சரற்காலச் சந்திரன் (மதி)

குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ்சங்கே.

இவ்விடத்தில் **மதி என்பது மலையின் பின்பு எழுந்து உயரமான கட்டிடம்** தோன்றியது போல் குறிக்கப்படுகிறது.

37ம் பாடலில்: மெய்யில் வாழ்க்கை மூன்றாம் திருமொழி

"வானாளும் **மாமதி**போல் வெண்குடைக்கீழ் **மன்னவர்** தம்"

'மதி' என்பது வெண்கொற்றக்குடையின் கீழ் ஆட்சியை குறிக்கிறது.

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள!

நின் தன்மையும் சாயலும் திங்களும் உள (பெ.தி.1-9-1)

பல்மதிக்கு இடர் தீர்த்தவன் (பெ.தி.1.8.6)

மதி பற்றிய பழமொழியும் விளக்கமும்

இது ஒரு உடற்கூற்றுக்கு நன்மை பயக்கும் மருத்துவப் பழமொழி இங்கே குறிப்பிடப்பட்டுள்ள **"மதி"** என்பதை **"நிலவு"** அன்றோ **"அறிவு"** என்றோ

பொருள் கொள்ளக் கூடாது. **'மதி'** என்றால் திங்கள் என்று பொருள். **'மதி புதன்'** – என்றால் மாதத்திற்கு ஒருமுறை அதுவும் புதன் கிழமை அன்று முகச்சவரம் செய்து கொள்ளுதல், தலைமுடி வெட்டிக் கொள்ளுதல் போன்றவைகளை செய்தல் நலம் பயக்கும்.

திருவள்ளுவர் - திருக்குறளில் (636)

மதிநுட்பம் என்ற குறளில் **மதி** என்பது: இயல்பான நுண்ணறிவு என்பது கொள்ளப்படுகிறது.

1116 – திருக்குறளில் **சந்திரனுக்கும் மதியும் மடந்தையும் முகத்துக்கும்** வேறுபாடு இல்லாமல் ஒன்றோடோன்று ஒத்து இருப்பதைக் குறிக்கிறது.

நாவுக்கரசர்

மனம் எனும் தோணிபற்றி **மதி** எனும் **'மதி'** என்பது தெளிவான கோலை ஊன்றி அறிவாக கருதப்படுகிறது.

திருவெண்காட்டு அடிகள்

கோயில் நான்மணி மாலையில் ஒரு பாடல்

'அறிவில் ஒழுக்கம் பிறிதுபடு பொய்யும்

மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்

மதி என்பது **சிவன் தலையில் அணியும் ஆபரணமாக உருவகித்துள்ளார்.**

நந்திக் கலம்பகத்தில் இறுதிப்பாடல்

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்.

அரசன் பாடலைப் பாடும். போது பந்தில் எரிந்து அரசன் மாண்டான். **அரசன் இறந்து மேலே (மதி) சென்றான் என்ற பொருளில் வருகிறது.**

பீர் முகம்மது

சூ.ஃபிக் கவிஞர் பாடும் போது.

தந்தையிலி தாரமிலி தானவமும் நீயே

மண்ணிலடி மதியார்க்கிரணம் வழங்குவது நீயே (ஞா.பு 56)

"மதி – ஞானத்திறவுக் கோலாக உள்ளது.

பாரதிதாசன்

நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து

நிலாவென்று காட்டுகிறாய் ஒளி முகத்தை

இவ்விடத்தில் **முகத்திற்கு உருவகப்**படுத்தியுள்ளார்.

கவிமணி

வானக் காட்சியில் படம் பிடித்து பாடுகிறார்

மீனினம் ஓடிப் பறக்குதம்மா – ஊடே

வெல்லும் மதியின் திருமணமோ

“மதியின் அழகை – திருமண நிகழ்ச்சிக்குத் தயாராகும் மணப்பெண்ணை ஒப்பிட்டுள்ளார்.

நம்மாழ்வார் திருவாய்மொழி

உயர்(வு) அறஉயர் நலம் உடையவன் யவன் அவன்

மயர்(வு) அற மதி நலம் அருளினன்

மதி நலம் - பக்தி ரூபமான ஞானத்தை அருளப்பாடு

தெளிமதி: ‘மதி’ என்பது இவ்விடத்தில் தெளிவான ஞானத்தை உடையவர்கள் என்றும் கூறப்படுகிறது.

ஒளி (மதி) சேர்:

ஒளி வீசும் நிலவு மற்றும் குளிர்மை பொருந்திய மனம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் **மதி என்பது பெயர்ச் சொல்லாகவும்** பயின்று வருகிறது.

1. வான்மதி
2. மதியழகன்

} போன்ற பெயர்களில் மதி வந்துள்ளான்.

முடிவுரை

‘மதி’ என்ற சொல் ஆனது அறிவு, அழகு, நிலவு என்ற பொருளிலும், புலவர்களால் கையாளப்பட்டுள்ளது. சிலவிடங்களில் உருவகமாகப் பார்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு **‘மதி’** என்பது பல பொருள்களில் குறிப்பிடப்படுகிறது என்பதை இக்கட்டுரையின் வழியாக அறியலாம்.

எட்டுத்தொகை

பத்துப்பாட்டு

நீதி இலக்கியம் (ஔவையார்)

காப்பியம்

பன்னிரு திருமுறை

திவ்யப்பிரபந்தம்

தற்கால இலக்கியம்

1. பாரதி
2. பாரதிதாசன்
3. கவிமணி பீர்முகமது

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இலக்கியங்களில் உணவு

பெ விஜயகுமார்

யோகா ஆசிரியர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி.

மனித வாழ்வில் இன்றியமையாதது மூன்று அவை, உண்ண உணவு, உடுத்த உடை, உறங்க உறையுள் எனலாம். வாழ்வதற்காக உண்ணும் காலம் இருந்ததுபோய் இன்று உண்ணுவதற்காகவே வாழும் காலமாய் போய்விட்டது. எங்கே போனது .இயற்கை உணவு. உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்று சங்க இலக்கியங்கள் தமிழரின் பண்பாட்டை பாருக்குள் பறைசாற்றின. உணவே மருந்து, மருந்தே உணவு என்று கூறும்நிலையுள்ளது. சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை மனிதனோடு இரண்டற கலந்திருப்பது உணவு ஆகும். உணவும் நீரும் மனிதனை உயிர்வாழச் செய்பவை. மனிதனின் அடிப்படை தேவைகளுள் முதன்மையானவைகளாக விளங்குகின்றன. பல்வேறு காலகட்டங்களில் மனிதனின் உணவுப் பழக்கம் அவனின் பொருளாதார வசதியை மறைமுகமாக பறைசாற்றிக் கொண்டிருப்பதை நாம் அறியமுடிகிறது. உணவே மருந்தாக அக்கால மக்கள் வாழ்ந்தபோது அவர்களின் ஆரோக்கியமும் அறிவும் தெளிவும் அகிலமெல்லாம் போற்றப்பட்டது. நமது கலாச்சாரம், பண்பாட்டை வெளிப்படுத்தும் உணவு முறைகள் காலமாற்றத்தாலும் மேலை நாட்டுக் கலாச்சாரத்தாலும் அந்நிய மோகத்தாலும் மாறத் தொடங்கியபோது பெயர் தெரியாத பலவிதமான நோய்கள் நம்மை சூழ்ந்து கொண்டு அச்சுறத்துகின்றன. ஆவ்வாறு பலவிதமான நோய்களால் தாக்குண்டு பேரிழப்பை அடைந்த மனித சமுகம் இன்று மெல்ல மெல்ல நம் முன்னோர்களின் தடத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. பாரம்பரிய உணவுகள் சிறுதானிய உணவு வகைகள், ஆரோக்யத்தை அள்ளி வழங்கும் இயற்கை உணவுப் பொருட்கள் இன்று சந்தையில் தோற்றம் கொண்டுள்ளது.

எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் உணவின் வகைகளை புலவர்கள் பல பாடல்களில் எடுத்தாண்டுள்ளனர். அன்றைய காலக்கட்டங்களில் அறச்செயல்களில் முதன்மையானது, பசித்தோருக்கு உணவுளிபபது இல்லறத்தானின் கடமையாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு இல்லத்திலும் விருந்தினர்களுக்கு உணவளித்த பிறகே இல்லத்தில் உள்ளவர்கள் உண்ணும் பழக்கத்தைக் கையாண்டனர். அத்தகைய விருந்தோம்பலில் முதன்மையானதாகக் கருதப்படும் உணவின் சிறப்பினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

உணவு என்ற பொருளைத் தரும் சொற்கள் பல சொற்கள் பல இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. ஆட்டில், உணவு, இரை, உண்டி, அடிசில், கூழ், பிண்டம், கவளம், சோறு, துவ்வு எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன. அவற்றை,

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசினேரே (புறம்)

என்று நீரைத் தேக்குதல் சிறந்த அறத்திற்கு வித்திடும். மழை பெய்யாதபோது நெற்பயிரை விதைத்து காத்திருப்பதைவிட மழை நீரை சேகரித்து வைத்து அதன்மூலம் விவசாயம் செய்து மக்களுக்கு உணவளிப்பதே உண்மையான அறச்செயலாகும் என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு புலவியனார் அறிவுரைக் கூறுகிறார்

சோறு

சோறு படுக்குந் தீயோடு

செஞ் ஞாயிற்றுத் தெறல் அல்லது

பிறிது தெறல் அறியார் நின் நிழல்வாழ்வோரே

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் புகழினைப் போற்றிக் குறங்கோழியூர் கிழார் பாடிய பாடலில் நின் நிழலில் வாழக்கூடிய உன் நாட்டு மக்கள் சோறு ஆக்க மூட்டும் நெருப்பின் வெம்மையும் சிவந்து தோன்றும் சூரியனது வெம்மையும் தவிர, வறுமைத் துன்பம் போன்ற வேறு எத்தகைய வெம்மையையும் அறியார்கள்

ஆரோக்யத்திற்கு மிகச் சிறந்த உணவாகவும் மருந்தாகவும் பயன்படுவது நெல்லிக்கனி. அந்தநெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவையாருக்கு அளித்து மகிழ்ந்தான் அதியமான், இதனை

பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட

குறியிலை நெல்லித் தீங்கனி குறியாது

ஆதல் நின்னகத்து அடக்கிச்

சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே

என்று சாதலை நீக்கும் மருந்தாக நெல்லிக்கனியைக் குறிப்பிட்டுள்ளார். இன்றைய நவீன மருத்துவமும் நெல்லிக்கனியை ஆய்வு செய்து அதை பட்டியலிட்டு “ ஏழைகளின் ஆப்பிள்” என்று பெருமையுடன் கூறுகிறது.

புற்கை

புற்கை என்னும் சொல் கஞ்சியைக் குறிக்கும். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் நெடும்பல்லியத்தனார் பாடும் போது

குடுமிக் கோமாற் கண்டு

நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே!

என்று குடுமிக் கோமானைக் கண்டு புகழ்ந்து பாடினால் பழையகஞ்சியில் நீர்விட்டு பெருக்கி உணவாக உண்ட நிலைமாறி நல்ல உணவை உண்போம் என்று பாடுகிறார்

ஊண்

புலவு நாற்றத்த பைந்தடி

பூ நாற்றத்த புகைகொள் ஊன்றுவை

கறி சோறுண்டு வருந்து தொழில்

புலால் மணக்கும் நிணத்தசையை, பூவாசம் வீசும் புகை நெருப்பில் வாட்டிச் செய்த ஊனுணவும் கறியும் துவையலும் உண்டு வாழ்வதைத் தவிர வேறு தொழில் செய்தறியாதவர்கள் நாங்கள் (புறம்-14) என்று பாடியுள்ளார்.

முடிவுரை

காலமரத்தின் சூழலும் மனிதனைப் பல்வேறு மாற்றங்களுக்கு ஆட்படுத்தினாலும் பாரம்பரிய உணவு பழக்கத்தைத் தேடி மீண்டும் மனிதன் மீண்டு வருவது ஆரோக்கியமான சமுதாயத்தை மலரச் செய்யும் உயரிய நோக்கமாகும். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் காலசூழலாலும் கருத்துப்பரிமாற்றத்தாலும் காரணவிதிகளுக்கு அப்பாற்பட்ட நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்நிலை மாறவேண்டும். இனிமேலாவது மனிதன் இயற்கை உணவில் தேறவேண்டும். பழந்தமிழர் உணவு முறையான உணவே மருந்து என்ற உயரிய கோட்பாட்டின்வழி கடைப்பிடித்து நாமும் வாழந்து பிறரையும் வாழச்செய்வோமாக.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருக்குறளில் அன்பும் - அறிவும்

வெ.விமலா

முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் மகளிர் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி), திருச்செங்கோடு.

முன்னுரை

நீதி நூல்களிலெல்லாம் உலகப் புகழ் வாய்ந்த ஒப்பற்ற நூலாகத் திகழ்வது திருக்குறளேயாகும். தமிழகத்தில் இந்நூலைப் போற்றாத புலவரும் இல்லை. நூற்கருத்துகளைக் கையாளாத நுலும் இல்லை. அவ்வாறே திருக்குறளைப் புகழாத திருக்குறள் அறிந்த மேனாட்டு அறிஞரும் இல்லை. மொழிபெயர்க்காத உயர்ந்த மொழியும் இல்லை. திருக்குறள் அறநூல் மட்டுமன்று. வாழ்க்கைக்கு நல்ல விளக்கம் தரும் சிறந்த நூலும் ஆகும். இத்தகைய **“ அன்பும் - அறிவும் பற்றி”** ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இல்லறம்

கணவன் மனைவியாக இருவர் சேர்ந்து வாழும் வாழ்க்கையே இல்வாழ்க்கை எனப்படுகிறது. அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழுகின்றவன் மற்ற வாழ்வு முறைகளில் உள்ளவர்களைவிட மேம்பட்டவன் ஆகிறான். பாவத்திற்கு அஞ்சி நேர்மையாகப் பொருள் சேர்த்து, அவ்வாறு ஈட்டிய பொருளைப் பகுத்து உண்ணுகின்ற வாழ்வியலை மேற்கொண்டால் அவ்வாழ்க்கை எஞ்ஞான்றும் சீர்குலையாமல் நிலைபெறும். அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டதே இல்வாழ்க்கையாகும். அதுவும் மற்றவர் பழிப்புக்கு ஆளாகாமல் இருந்தால் அதன் சிறப்புக் கூடுதலாகும். இவ்வாறெல்லாம் கூறுகின்ற வள்ளுவர்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது.

என்கிறார். இல்லற வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துத் தானும் இன்பம் அனுபவித்துப் பிறர்க்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களை “ இயல்பான இல்வாழ்க்கை வாழ்பவர்கள்” என்று சொல்லுகிறார்கள். அன்பினால் பிறர்க்குதவும் பண்புடையவன்தான் அருள் ஒழுக்கம் பூண்டு ஒழுக

முடியும். தன்னுடைய குடும்பம் மட்டும் வாழ்ந்து வந்தால் அது சிறப்பான வாழ்க்கையே ஆகாது. பிறர் வாழவும் இல்லறந்தான் துணைபுரிய வேண்டும். உதவிட வேண்டும்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை

என்கிறார். இல்வாழ்க்கையை ஏற்று நடத்திடும் ஒருவன், ஆதரவு அற்ற இளைஞர்கள் தம்மைப் போன்று இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுத் துன்பத்தில் உழன்று கொண்டிருப்போர், துறவு வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் ஆகியோருக்குத் தம்மாலியன்ற அளவு உதவிட வேண்டும். அவர்களுக்கு இந்த இல்லறந்தான் நல்ல துணையாக இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும்.

நல்மக்களைப் பெற்று நலமுடன் வாழ்தல்

நாம் பெறக்கூடிய அரிய செல்வங்களில் சிறந்த செல்வமாகப் போற்றப் படுவது மக்கள் செல்வமேயாகும். இந்த மக்களும் அறிவறிந்த மக்களாகச் சிறந்து விளங்கிட வேண்டும். ஒருவன் பெறக்கூடிய அரிய செல்வங்களில் அறிய வேண்டுவனவற்றையெல்லாம் அறிந்து விளங்கும் நன்மக்களைப் பெறுவதைப் போன்ற சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. அறிவறிந்த மக்கள் என்பது உண்மையில் சிறந்த பேறாகும்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த

மக்கட்பேறு அல்ல பிற

நல்ல அறிவும், பண்பும் நிறைந்த பிள்ளைகளைப் பிறர் எந்த வழியிலும் பழித்துக் கூற முடியாது. இத்தகைய சிறந்த பண்பு கொண்ட குழந்தைகளைப் பெற்றிருந்தால், வரும் ஏழு பிறவிகளிலும் துன்பங்கள் அக்குழந்தைகளைப் பெற்றவர்கள் அடையமாட்டார்கள். நல்ல பிள்ளைகளால் பெற்றோர் நல்ல " மணம்" பெறுவார்கள் என்பது உண்மை. நல்ல பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோரின் கடமையாகும்.

ஈன்று புறம் தருதல் என் தலைக்கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒன்றிவாள் அருஞ்சமம் முடுக்கிக்

களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்ற புறநானூற்று வரிகளையும், சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்பதிலிருந்து உயர்ந்த அறிவுடையவர்களாக விளங்குவதற்குக் காரணமாக அமைபவர் தந்தையாகும். தாயாருக்கு உயர்பங்கு உண்டு என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளைச் சான்றோர்களாக ஆக்குவது என்பது

அவ்வளவு எளிய காரியமல்ல. கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், அன்பு செலுத்த வேண்டிய இடத்தில் குறைவற்ற அன்பு செலுத்தியும் அவர்களை வளர்க்க வேண்டும். அப்போது தான் அவர்களைச் சான்றோர்களாக வளர்க்க முடியும் என்று கூறுகிறார் வள்ளுவர் பெருந்தகையான்.

அன்பின் பயன்

அறம் என்பது அன்புடனும், அன்பு கனிந்து மலர்கின்ற அருளுடனும் தோய்ந்து வெளிப்படுவதாகும். அருள் இலாதவன் செய்யும் உதவி அல்லது கொடை அறமாகாது. அன்புதான் அருளாகப் பரிணமிக்கும். அன்பு சுரக்கும் உள்ளத்தில் பொறாமை, கோபம், கடுஞ்சொல் போன்றவை இடம் பெறாது. மாசற்ற தெளிந்த மனம் உள்ளவனிடத்தில் அன்பு சுரக்கும், அருளாக வெளிப்படும் பெறத்தகும் செல்வங்கள் எல்லாவற்றிலும் அருட்செல்வமே சிறப்பானது. ஒப்புரவு அறிந்து – ஒத்தது அறிந்து, தன்னிடம் சேர்ந்துள்ள செல்வத்தைத் தனக்கு மட்டுமே உரிய செல்வமாக்க கருதாமல் ஊர்ப்பொது ஊருணியில் நிறைந்த நீர் போலவும், பொது இடத்தில் உள்ள பயன்மிகு மரம் பழுத்துக் குலுங்குவது போலவும் கருதிக் கொண்டு தக்கவர்களுக்கு உதவுவதற்கே அதனைப் பயன்படுத்துவான். நாளடைவில் தன் தன் உள்ளத்தில் அருள் ஊறக் காண்பான்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை **குறள் - 322**

என்கிறார், காலப்போக்கில் யான் எனது என்னும் செருக்கு தன்னிடமிருந்து விலகக் கண்டு துறவு மனப்பான்மை இயன்றுவரக் காண்பான். அறம் வழிபட்ட வாழ்வின் பயன் இது என்பார் வந்தவர்.

அறிவுடைமை

நாம் சொல்லும் பொருள் உயர்ந்தவையாக இருந்தாலும் கேட்போர் நன்கு அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய முறையில் தெளிவாகக் கூறிப் பிறருடைய சொற்களின் நுட்பங்களையும் அறிவதே நல்ல அறிவுடைமை ஆகும். மனதை அது செல்ல விரும்பும் இடத்திற்கும் செல்ல விடாமல் தடுத்து, தீமைகள் செய்வதினின்றும் விலக்கி நன்மைகளைச் செய்யத் தூண்டுவது அறிவாகும். அறிவின் மூலம் நாம் அடையும் நன்மைகளை வள்ளுவர்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்பொருள் காண்பது அறிவு **(குறள் - 423)**

எந்தப் பொருளாக இருந்தாலும், யார் யாரிடம் நாம் கேட்டு அறிந்தாலும், அந்தப் பொருளின் உண்மையான தன்மையை ஆராய்ந்து அறிவதே அறிவாகும். ஒரு பொருளின் தன்மையை அந்தப் பொருளின் பயனால் அறிந்து கொள்வதே அறிவுடைமையாகும். நல்ல பயனைத் தரும் பொருளை யார் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நண்பர்களாக இருக்கலாம், நல்ல அறிவுரைகளைச் சொல்பவர் பகைவர்களாக கூட இருக்கலாம், பொருளின் பயனை அறிந்து, அப்பொருளை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செயல்படுவதே அறிவுடைமையாகும்.

உலகத்தில் உள்ள சான்றோர், எவ்விதம் தம்முடைய வாழ்க்கையில் பிறருக்குப் பயன்பட்டனரோ அவ்விதமே பொதுமக்களுக்கும் தம்முடைய வாழ்க்கையைப் பயன்படும்படி அமைத்துக் கொள்ள உதவுவதே அறிவின் தலையாய செயலாகும்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு

அவ்வது உறைவது அறிவு **(குறள் - 426)**

சென்ற காலத்தில் பல பெரியோர்கள் தன்னலம் கருதாமல் பிறருக்குப் பல வழிகளிலும் தொண்டாற்றி வந்தார்கள். அதைப்போல இன்றைய இளைஞர்களும் தங்கள் வாழ்க்கையைப் பிறருக்குப் பயன்தரும் வண்ணம் அமைத்துக் கொள்வது அறிவின் செயலாகும் என்று குறிப்பிடுகிறார்.

கல்வி என்னும் பெருஞ்செல்வம்

கற்றறிந்த சான்றோர்களின் மூலம் நாம் கேள்விச் செல்வத்தைப் பெற்றுச் சிறப்படையலாம். எல்லாப் பொருள்களையும் நூல் அறிவினால் மட்டும் கற்றுவிட முடியாது. அனுபவ உணர்ச்சியுடன் கூறும் மொழிகளால் பல பொருட்களைத் தெரிந்து கொள்ள முடியும். அனுபவத்தைச் சொல்லிக் கேட்டுத் தெரிந்து கொள்வது மூலம் நல்ல அறிவைப் பெற்றிடலாம்.

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை **(குறள் - 411)**

செல்வம் என்று இதுவரை பேசப்பட்ட செல்வங்களில் அறிவைத் தரும் கேள்விச் செல்வமும் ஒன்றாகும். இந்தச் செல்வம் ஏனைய பொருட்செல்வம், மக்கள் செல்வம் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது

வயிற்றுக்கும் ஈயப்படும். **(குறள் - 412)**

காதினால் நாம் **அறிவு** என்னும் உணவைப் பெற்றுச் சிறப்பு அடையலாம். அது இல்லாதபோது, உடலுக்கு நன்மை செய்யும் வண்ணம் வயிற்றுக்குச் சிறிதளவு ஈயப்படும். உயிர்க்கு அறிவு வளர்ச்சியே முக்கியமாகும். உடல் வளர்ச்சியென்பது அவ்வளவு முக்கியமல்ல. அறிவு வளர்ச்சி பெறாமல் உடல் வளர்ச்சி மட்டும் பெறுவது முக்கியமல்ல. அறிவு வளர்ச்சி பெறுபவன்தான் நிலைத்த இன்பம் பெறுவான். எனவே, அறிவு வளர்ச்சி பெறவே ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

சிறந்த நூல்களைக் கற்றறிந்து அறிவைப் பெறாமல் போனாலும், நன்கு கற்றறிந்த பெரியோர் சொல்லும் அறிவுரைகளையாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதன் மூலம், வாழ்க்கையில் வழுக்கியக் காலத்தில் துணைபுரியும் ஊன்று கோலாக அமையும்.

நல்ல கேள்வியுடையோர், தாம் பெற்ற கேள்வியினால் நல்ல மனத் தெளிவைப் பெற்றுவிடுகிறார்கள். இவ்விதம் நல்ல தெளிவு பெற்ற காரணத்தால் உண்மையான தெளிவு பெறச் சொல்லும் ஆற்றல்

கிடைக்கிறது. நல்ல மனத்தெளிவு இருந்தால் நல்ல தெளிவான எண்ணங்கள் உண்டாகும். அறியாமை விலகவும், மாறுபட்ட எண்ணங்கள் தீர்ந்து உண்மை வெளிவரவும் நிறைய அளவில் நாம் கேட்டு அறிய வேண்டும். இவ்விதமாகக் கேட்டுணர்ந்தால் பிறரையும் தீய வழியில் செலுத்தாமல் காப்பாற்ற முடியும் என்பதாம். நல்ல பண்பாடுள்ளவர்களாக விளங்குவதற்குச் சிறப்பான நூலறிவுடன் அனுபவ அறிவு பெற்றவர்களின் கூட்டுறவும் தேவை. இவ்விதம் நல்ல பண்பாட்டையும் சிறந்த அறிவையும் பெற்றுத் திகழ்வதால் அறிவின் வளர்ச்சி மேன்மேலும் பெருகும்.

கல்வி நலம் பெறுவோம்

மக்களிடத்தில் இயற்கையான அறிவை கல்வியானது மேலும் மேலும் விளங்கும்படிச் செய்வதாகும். இவ்விதம் நல்ல அறிவு பெறுவதற்கு நல்ல அறிவுள்ள நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டும். தகுந்த நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் குற்றமில்லாத முறையில் கற்க வேண்டும். அவ்விதம் தெளிவு பெறக் கற்றுத் தேர்ந்த பின்னர், தாம் கற்ற கல்வி அறிவுக்குத் தக்கவாறு நல்லொழுக்கத்தில் அவன் நிற்க வேண்டும். கல்வியைப் பற்றி வள்ளுவர் பெருமான் குறிப்பிடும்போது முதல் குறட்பாவிலேயே இவ்விதம் குறிப்பிடுகிறார்.

கற்க கசடுஅறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்கு தக **குறள் - 391**

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் நல்ல அறிவு பெற்றுத் திகழ்ந்திட வேண்டும். இதற்கு எண்ணும், எழுத்தும் மிகவும் இன்றியமையாததாகும். இவை இரண்டும் இரண்டு கண்களாகப் போற்றப்படுகின்றன.

கற்றோரைப் பற்றி வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடும்போது அவர்களைத்தான் கண்ணுடையவர் என்று கூறுகிறார்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர் **குறள் 393**

கல்வியறிவு பெற்றவர்களைத்தான் கண்ணுடையர் என்று கூறுகிறார்கள். கல்வியறிவு இல்லாதவர்கள் முகத்திரண்டு உள்ளவை கண்களல்ல. அவைகளால் எந்தப் பலனும் இல்லாத காரணத்தால் அவை புண்களேயாகும். கண்களைப் பெற்றிருக்கிறோம். நல்ல பார்வையும் பெற்றுள்ளோம். இருந்தாலும் எழுதவோ, படிக்கவோ தெரியாத நிலையில் அந்தப் பார்வையில் எந்தவிதப் பயனுமில்லை. பொருள் உடையார் முன் ஏழை இறங்கி நின்று யாசிப்பது போன்று கற்றறிந்த நல்ல ஆசான் முன்னே மாணவர் வணக்கத்தோடு பணிந்து நின்று படித்து அறிவை வளர்த்துக் கொள்பவர்களே உயர்ந்தவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

என்பார்கள்.

வள்ளுவர் பெருமான் கூறுவது போன்று கற்றோர்க்கு எல்லா நாடுகளுமே தம்முடைய நாடுகளாகும். எல்லா ஊர்களுமே தங்கள் ஊர்களாகும். ஒரு பிறவியிலே ஒருவன் பெறும் கல்வியானது அவனுக்கு ஏழு பிறவிகளிலும் சென்று பாதுகாவலாக அமையும் என்று உரைக்கிறார்.

முடிவுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி நூலாக இருந்தாலும் வாழ்க்கைக்கு தேவையான அறக்கருத்துகளை விளக்கி கூறியுள்ள திருக்குறள் தோன்றிய வரலாற்றையும் அறிய முடிகிறது. வள்ளுவத்தின் தனிச்சிறப்புகளை பற்றிய செய்திகளையும், அன்பு, அறம் பற்றி கருத்துகளையும் இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது .

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

ஆண்டாள் பாசுரங்களில் விளித்தொடர்கள

முனைவர் அ. கோபிநாத்,

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, பிஷப் ஹீபர் கல்லூரி

வேறொன்றிலும் கண் வையாதே திருமாலின் மீது பக்தி கொண்டு வைணவ நெறியில் ஆழங்காற்பட்டமையால் பன்னிரு பெருமக்களும் 'ஆழ்வார்கள்' எனப் போற்றப்பெற்றனர். தித்திக்கும் தெள்ளுதமிழ்ப் பாசுரங்களை அள்ளித் தந்தவர்கள் ஆழ்வார்கள். எதுகை, மோனை சந்தநயம், ஆற்றொழுக்கும் நடை முதலான இலக்கணக் கூறுகளும், நாடகத் தன்மை, இயற்கை வளம், சொல்லோவியம் உள்ளிட்ட இலக்கிய நயங்களும் இப்பாசுரங்களில் மிளிர்கின்றன.

ஆண்டாள் பாசுரங்களில் உள்ள மொழிநடை குறித்து "மக்களை வைணவ நெறியில் ஒன்று திரட்ட அவர்கள் மத்தியில் வழங்கிய நாட்டுப்புறச் சந்தங்களைப் பயன்படுத்திப் பாடல் புனைந்ததாலும் ஆண்டாளின் மொழிநடையில் நெகிழ்ச்சி ஏற்பட்டது" என்கிறார் இரா.கு.நாகு (1997:21).

பாவைப் பாடல்கள்

மார்கழி மாதத்தில், தன் வயதினை ஒத்தப் பாவையரை ஒருங்கிணைத்துப் பாவை நோன்பினை மேற்கொண்டவள் ஆண்டாள். கண்ணனைத் தலைவனாக நினைந்து அகத்துறைப் பாசுரங்களைப் பாடி மகிழ்ந்தாள். திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியன ஆண்டாளின் படைப்புகளாகும். பொதுவாக "வைணவப் பாசுரங்களை இயற்பா, இசைப்பா என இரு வகையாகப் பகுப்பர்" (1986:100).

திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரு தொகுப்புகளிலும் சொல், பொருள் ஆகிய வளங்கள் நிரம்ப இடம் பெற்றுள்ளன. நாட்டுப்புற வழக்காறுகள், விளித்தொடர்கள், விலங்கு, பறவை, மலர் முதலானவற்றின் பெயர்கள் பாசுரங்களில் நாம் பரக்கக் காணலாம்.

விளிச்சொற்கள்

ஆண்டாள் இயற்றியப் பாசுரங்கள் பெரும்பாலும் தோழியை அழைத்துப் பேசும் முறையிலும், குயில், சங்கு முதலான அ.ஃறிணைப் பொருட்களைத் தோழியராக நினைத்து பேசும் முறையிலும் அமைந்துள்ளன. எனவே விளித்தொடர்கள் பெரும்பான்மையும் பயின்று வந்துள்ளன. 'விளித்தல்' எனும் சொல்லிற்கு 'அழைத்தல்' என்பது பொருளாகும். பேச்சு வழக்கில் நாம் இச்சொல்லினை 'கூப்பிடு; கூப்பிடுதல்" எனும் முறையில் அமைத்துக் கொள்கிறோம். மலையாள மொழியில் 'விளி" எனும் சொல் இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது. விளிச் சொற்றொடர்களின் பயன்பாடு ஆண்டாள் பாசுரங்களில் எவ்வாறு உள்ளது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

விளி ஏற்கும் பெயர்கள்

உயர்திணை, அ∴றிணை மற்றும் விரவுப் பெயர்கள் விளி ஏற்கும் முறையினைத் தொல்காப்பியரின் விளிமரபு எனும் இயலில் விரிவாகக் காணலாம். எம்பாவாய், வாழ்வீர்கள், ஆழி மழைக்கண்ணா, பிள்ளாய், தேசம் உடையாய், பாவாய், மாமான் மகளே, மாமீர், புனமயிலே, பொற்கொடியே, நற்செல்வன் தங்காய், நங்காய், எல்லே, இளங்கிளியே, கோயில், வாயில் காப்போனே, உம்பர் கோமானே, கமழும் குழலீ, ஆலின் இலையாய் தோழீ, வெண்சங்கே, குயிலே என பலச் சொற்றொடர்களைச் சான்றாகக் கூறலாம்.

அன்பு அழைப்பு

ஆண்டாள், வில்லிப்புத்தூரில் உள்ள வடவெருங்கோயிலை நந்தகோபன் மாளிகையாகவும், அதனைச் சுற்றியுள்ள இடத்தை ஆயர்பாடியாகவும், தன் தோழியரை கோபிகைகளாகவும் நினைக்கின்றாள். பிறரை அழைக்கின்ற போதே அன்பான முறையில் அழைக்கின்றாள். செல்வ வளம் படைத்த சிறுமியரைப் பாவை நோன்பு நோற்க அழைக்கின்ற போதே,

"சீர்மல்கும் ஆய்பாடிச் செல்வ சிறுமீர்கான்!" திருப்பாவை : 2012:474 என அழைக்கின்றார். 'சிறுமீர்காள்" எனும் சொல்லில் 'சிறுமியர்" என்பது 'சிறுமீர்" எனவும் 'சிறுமீர்கள்" என்பது 'சிறுமிர்காள்" எனவும் விளியேற்றுள்ளது, இதனைத் தொல்காப்பியர்,

"பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே"

தொல். சொல். 625

"எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற இற்றயல் நீட்டம் வேண்டும்"

தொல். சொல். 620

என்கிறார். 'ள'கர ஈற்று முறைப்பெயர்கள் 'ஏ'காரம் ஏற்கும் என்பதனைத் தொல்காப்பியர்,

"முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல"

தொல். சொல். 632

எனக் குறிப்பிடுகின்றார். திருப்பாவை பாசுரங்களில் முறைப்பெயர்ச் சொற்கள் சில இடம் பெற்றுள்ளன.

படுக்கை அறையைச் சுற்றிலும் விளக்குகள் சுடர்விடுகின்றன; தூபம் கமழ்கின்றது. மெல்லிய பஞ்சணையின் மேல் மாமன் மகள் உறங்குகின்றாள். ஆண்டாள் அவளைத் துயில் எழுப்பும் பொழுது ஏகாத ஓசையுடன் விளிக்கின்றாள். பெரியவர்களை அழைக்கின்ற பொழுது, மரியாதைப் பன்மையுடன் அழைக்கின்றாள். அப்பாசுரம் வருமாறு :

"தூமணி மாடச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துபில் - அணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தான் திறவாய்!
மாமீர்! அவளை எழுப்பீரோ!..."

இதே போன்று பாவை, நங்கை, தங்கை போன்ற 'ஐ"கார ஈற்றும் சொற்களும் பாவாய், நங்காய், நற்செல்வன் தங்காம் என மாற்றம் பெறுகின்றன.

அ∴றிணைப் பெயர்கள் விளியேற்றல்

திருமாலின் கையில் தவழும் சங்கினை நோக்கி ஆண்டாள் பாடிய பாசுரங்கள் ஏழாம் திருமொழியில் அமைந்துள்ளன. திருமாலின் வாயிதழின் சுவையை நன்கு உணர்ந்த வெண்சங்கே திருமால் பெருமையினை நீ எனக்குக் கூறுவாய் என்கிறாள் ஆண்டாள்.

"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப் பவளச் செவ்வாய் தன் தித்தித்து இருக்குமோ?
மருப்பு ஒசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல், ஆழி வெண் சங்கே"

(நாச்சியார் திருமொழி 2012 : 567)

இங்கே 'சங்கு" என்பது அ∴றிணைப் பெயர் அச்சொல் விளி ஏற்கும் போது "ஏ"காரம் பெறுகின்றது. அ∴றிணைப் பெயர்கள் விளியேற்கும் முறை குறித்துத் தொல்காப்பியர்

"புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அ∴றிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறுவாய் காலம் தோன்றின்
தெளிநிலை உடைய ஏகாரம் விரலே"

(தொல் சொல் 636)

என்கிறார். இதனைப் போன்றே விரவுப் பெயர்களிலும் விளியேற்கும் முறை நிறைய பாசுரங்களில் அமைந்துள்ளது.

பறவைகள் ஒலிக்கின்ற ஓசையும் உனக்குக் கேட்கவில்லையோ எனச் செல்லமாகக் கடிந்து கொள்கிறாள் ஆண்டாள்,

"கீசு கீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ - பேய்ப் பெண்ணே?"

(திருப்பாவை : 2012 : 480)

என்கிறாள். தன் தோழியை ஓரிடத்தில் 'புற்றரவு அல்குல் புனமயிலே" என விளிக்கின்றாள். எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?" எனக் கேட்கின்றாள்.

திருப்பாவையின் 17-ம் பாசுரம் முழுமையுமே விளித்தொடரில் அமைந்திருப்பது வியப்பிற்குரியது.

"அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்;
கொம்பணர்க்கு எல்லாம் கொழுந்தே! குலவிளக்கே !
எம்பெருமாட்டி! யசோதாய் ! ஆறிவுறாய்;
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேல் ஓர் எம்பவாய்!"

(திருப்பாவை : 2012 490)

இவ்வாறு பாசுரம் ஒன்றில் இத்தனை விளித்தொடர் அமைப்பு இதற்கு மேலும் சுவையூட்டும் ஒன்றாய் அமைந்துள்ளது.

கண்ணனை விளித்தல்

ஆண்டாள் தன் பாசுரங்கள் பலவற்றிலும் திருமாலை, கண்ணனாக நினைத்து பல்வேறு பெயர்களால் விளிக்கிறாள். மழையின் பயன் கருதி வேண்டும் பொழுது "ஆழி மழைக் கண்ணா!" என்கிறாள். நந்த கோபாலா ! மலர் மார்பா!, கலியே!, விமலா!, ஆற்றப் படைத்தான் மகனே!, பெரியாய்! மாலே! மணிவண்ணா! ஆலின் இலையாம்! கோவிந்தா! நாராயணா! நரனே! முகில் போல் வண்ணா! சேவகா! சிற்றில் சிதையேலே என்று விளிக்கின்றாள்.

நிறைவுரை

ஆண்டாள் பாசுரங்கள் இனிய, புதிய சொற்றொடர்களால் அமைந்தவை. பெரும்பாலான சொற்கள் விளித்தொடர்களாக ஆளப்பட்டுள்ளன.

உரையாடல் தன்மைக்கும், நாடகப் பாங்கிற்கும், காட்சிப் படுத்தும் சொல்லோவியத்திற்கும், விளித்தொடர்கள் நன்கு பயன்பட்டுள்ளன. இலக்கண விதிகளுக்கு உட்பட்டு ஆண்டாள் சொற்களைக் கையாளும் விதம் பாசுரங்களுக்கு சுவை கூட்டுகின்றன.

சந்த நயமிக்க இப்பாசுரங்களைக் கற்கும் தோறும் இனிமை பயப்பன. தமிழ் மொழியைப் பயில்வார்க்கு ஏற்றம் தருவன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"அன்னவயற் புதுவையாண்டான் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதிகம் – இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை, பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்"

(1986 : ப. 9)

எனும் உய்யக்கொண்டாரின் பாடல் இதனை மெய்ப்பிக்கும்.

துணையன்கள்

1. 'கோதை தமிழ்' – இரா.கு.நாகு – திருவேங்கடம் வெளியீடு (1997)
2. 'திருமழிசையாழ்வாரின் பாசுரங்கள்' - ஓர் ஆய்வு - பாரிநிலையம் (1986)
3. 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்' – மூலமும் தெளிவுரையும் – வர்த்தமானன் பதிப்பகம் (2012) – இரா.வ. கமலக்கண்ணன் (உரை)
4. 'தொல்காப்பியா சொல்லதிகாரம்' – முனைவர் தமிழண்ணல் (2003) மணிவாசகர் பதிப்பகம். (பாசுர எண்கள் : வர்த்தமானன் பதிப்பகம்
   தொல். மற்பா எண்கள் : மணிவாசகர் பதிப்பகம்)
5. 'திருப்பாவை' S. ஜெகந்நாராயணன் - அலமேலு அம்மாள் டிரஸ்ட், சென்னை.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

புறநானூற்றில் ‘மன்’ என்னும் இடைச்சொல

லோ. கவிதா

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை, சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி, திருச்சி – **621 005.**

இலக்கியம் பலவாறாக பெருகி வளரத் தொடங்கும் காலத்தில் மொழியினை ஒழுங்குபடுத்துவதற்காக முன்னோர்கள் கண்ட விதி இலக்கணமாகும். “இலக்கியம் தாய், இலக்கணம் சேய், இலக்கியம் தேமாங்கனி, இலக்கணம் தீஞ்சுவைச்சாறு, இலக்கியம் பெறுவிளக்கு, இலக்கணம் அதன் ஒளி. இலக்கியம் எள், இலக்கணம் எண்ணெய் என்று சோம.இளவரசு கூறும் கருத்து நினைவுகூரத்தக்கது. இத்தகைய உறவு பிணைப்பு முறையை நம் முன்னோர் நன்கு அறிந்து தெளிந்திருந்தனர். இதனை,

“இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே

எள்ளின்றாகில் எண்ணெயும் இன்றே

எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல

இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்”

என்று இலக்கணத்தின் பெருமையை கூறிப் போந்தனர். இவ்வகையில் சிறந்த இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பிய சொல்லதிகாரத்திலிருந்து இடையியல் எனும் பகுதியில் கூறப்பட்ட ‘மன்’ எனும் இடைச்சொல் புறநானூற்றில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியம் (சொல்லதிகாரம்)

சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்ற ஒன்பது பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. இவை முறையே திணை, பால், மரபு, வழுவாமல் சொற்களை அமைக்கும் முறை, பெயர்கள் உருபு ஏற்கும் தன்மை, அதன் மாறுபாடு, விளிவேற்றுமை, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் மற்றும் உரிச்சொல் இலக்கணம் ஆகிய செய்திகளை விரிந்த தன்மையுடன் எடுத்துக்

கூறுகின்றது. புதிய சொற்களைப் பயன்படுத்தும் முறையை தொல்காப்பியர் 'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்ற நூற்பா மூலம் கூறுகின்றார்.

இடைச்சொல் இலக்கணம்

இடைச்சொல் எனப்படுவது பெயர்ச்சொல்லோடும், வினைச்சொல்லோடும் வழக்கு பெற்று இயலும் தன்மை உடையதாகும். இதனைத் தொல்காப்பியம்,

"இடையெனப்படுவ பெயரொடும் வினையொடும்

நடைபெற்றியலுந் தமக்கியல் பிலவே"

என்று கூறுகின்றது. பெயரும், வினையும் சார்ந்து நின்று இவ்இடைச்சொல் வெளிப்படும். இத்தகைய இடைச்சொற்கள் ஒரு சொல்லின் இடையில் வருதல் அன்றி சொல்லுக்கு முன்னும், பின்னும் வரக்கூடும். இதனை,

"அவைதாம்

முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலுந்

தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்

அன்னவை யெல்லாம் உரிய வென்ப"

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

மன் என்னும் இடைச்சொல்

சொற்களுக்கு இடையில் நிற்கும் இடைச்சொல்லில் 'மன்' என்னும் இடைச்சொல்லானது, கழிவு, ஆக்கம், ஒழியிசை ஆகிய பொருண்மைகளில் கூறப்படுகின்றது. இதனை,

"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று

அம்மூன்றென்ப மன்னைச் சொல்லே"

என்ற நூற்பா மூலம் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

'மன்' என்னும் சொல்லுக்கு பொருள் கூறும் தமிழகராதி அசைச்சொல், இறந்தகால இடைநிலை, ஒழிபிசை, கழிவு, மிகுதி, அரசன், நிலைபேறு, பெருமை, சத்திரியன், கணவன், உத்திரட்டாதி, இழிவு, மணங்கு, மந்திரம்' என்று கூறுகின்றது. இதனடிப்படையிலும் மன் என்பது இலக்கணத்தில் கழிவு, ஆக்கம், ஒழியிசை என்ற மூன்று தன்மைகளையும் பெற்றுள்ளது என்து உறுதியாகின்றது.

இம்மூன்று சொற்களுக்கு தமிழகராதி பின்வரும் பொருள்களைச் சுட்டுகின்றது.

கழிவு - இழிவு, இறந்தகாலம், கழிகடை, அழிவு, மிகுதி

ஆக்கம் - உண்டு பண்ணுதல், பெருக்கம், உயர்வு, நுகர் பொருள்,செல்வம்.

ஒழியசை - ஒழிந்த சொற்களைத் தருதல்.

இத்தன்மைகளின் அடிப்படையில் மன் என்னும் இடைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புறநானூற்றில் மன் என்னும் இடைச்சொல்

சங்க இலக்கியத்துள் புறம் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்களுள் முதன்மை தன்மை பெற்ற நூல் புறநானூறு ஆகும்.

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றிக் கூறும் நூல்கள் இரண்டு. அவை பதிற்றுப்பத்தும், புறநானூறுமாகும். புறநானூறு தமிழகமெங்கும் ஆட்சி புரிந்த பெருவேந்தர், குறுநிலமன்னர், ஈகையஞ்செல்வர், சால்பு அமைந்த பெரியோர் எனப் பல்வேறு மாந்தர்களின் இயல்பினை எடுத்துரைக்கின்றது. புத்துணர்வும், புதுவாழ்வும் பெறத்துடிக்கும் தமிழ் மக்களுக்கு புறநானூறு ஒப்பற்ற அறிவுச்சுரங்கமாகத் திகழ்கின்றது. நானூறு பாடல்கள் அடங்கிய இந்நூலில் 'மன்' என்னும் இடைச்சொல். பதினேழு (17) இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவை முறையே 26, 53, 113, 141, 151, 235, 249, 261, 287, 298, 308, 310, 314, 319, 322, 336, 392 ஆகிய பாடல்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

"அட்டு ஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்

பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி

நட்டனை மன்னே, முன்னே" (புறம் 118)

என்ற கபிலரின் பாடல் பாரியின் நாட்டுவளத்தைக் கூறுகின்றது. பாரி மன்னனை நாடி வருபவர்களுக்கு மதுவும், ஊன்சோறும் தரப்படும். இத்தகைய வளம் நிறைந்த பாரியின் நாடு அனைத்து வளங்களையும் பாரி இறந்ததால் இழந்தது என்பதை எடுத்துக்கூறும் இப்பாடலில் 'மன்' என்ற இடைச்சொல்லானது கழிவுப் பொருளில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. மேலும், அதியமான் நெடுமான் அஞ்சியின் பெருமைகளை எடுத்துக்கூறும் ஔவையார்,

"சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே

பெரியகட் புறனே

யாம் பாடத் தான்முகிழ்ந்து உண்ணும் மன்னே'' (புற.235)

என்று பாடுகிறார்.

றைவாகக் கள் கிடைக்குமானால் அதை புலவர்களாகிய யாம் உண்டு பாட எஞ்சியதைத்தான் மகிழ்ந்து உண்டான் அது கழிந்துவிட்டது. போர்க்களம் எல்லாம் தானே சென்று நிற்பான் அது கழிந்துவிட்டது என இப்பாடல் கழிவு பொருளைக் கூறுகின்றது. அதியன் இறந்தபிறகு ஔவையார் பாடிய பாடல் இது.

சிறிய அளவு கள் கிடைத்தாலும் அனைவருக்கும் வழங்கக்கூடிய மன்னன் தற்போது இல்லையே என்று இரங்கிய தன்மை இங்கு காணப்படுகின்றது. மன் என்ற இடைச்சொல் இங்குக் கழிவுப் பொருளைச் சுட்டுகின்றது.

கழிவுப் பொருளில் வந்துள்ள இடைச்சொல் பாடல்கள் அனைத்தும் இறந்தகாலம், அழிவு ஆகியனவற்றை எடுத்துரைப்பனவாகவே அமைந்துள்ளன.

ஆக்கம்

ஆக்கம் என்ற சொல்லானது உண்டுபண்ணுதல், பெருக்கம், செல்வம் ஆகிய பொருள்களைத் தருவதாகும். சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை புகழ்ந்து பொருந்தில் இளங்கீரனார்

''செறுத்த செய்யுள் செய்செந்நாவின்

வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்

இன்றுளன் ஆயின் நன்றுமன் என்ற நின்

ஆடுகொள் வரிசைக்கு ஒப்ப'' (புறம் 53)

என்று பாடுகின்றார். பாடலில் கல்வியில் சிறந்த இந்நாட்டில் கபிலன் இல்லாததால் பகைவரை வெற்றி கொண்ட மன்னனின் சிறப்பை இயன்றவரை நானே பாடுவேன் என்கிறார் புலவர். கபிலரை இங்கு உயர்வு படுத்தியமையால் இது ஆக்கம் என்ற பொருளை உணர்த்தும் இடைச்சொல்லாகக் கருதப்படுகின்றது.

''நின்னினும் புல்லியேம் மன்னே ; இனியே

இன்னேம் ஆயினேம் மன்னே'' (புறம் 141)

என்ற இப்பாடலில் மன்னன் பேகனின் உயர்வினை பரணர் சுட்டிக் காட்டுகின்றார். மயிலுக்குப் போர்வை வழங்கி அருள் செய்த பேகன் வறியவர்களின் வறுமைத் துயரினையும் போக்குபவன் ஆவான். இப்பாடலில் மன்னனின் உயர்வு, நுகர்பொருள் ஆகியவை ஆக்கம் என்ற பொருளில் இடைச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒழியிசை

ஒழியிசை ஒழிந்த பொருளை அதாவது கூறாமல் விட்ட பொருளை எடுத்துரைப்பதாகும்.

"எமக்கே கலங்கல் தருமே தானே

தேறல் உண்ணும் மன்னே நன்றும்" (புறம் 298)

என்ற பாடலில் தானே முந்திச் சென்று போர்க்களத்தில் வெற்றி உடையவனாகத் திகழ்ந்த மன்னன் வீரர்களுக்கு சுவைமிக்க கள்ளை வழங்கியுள்ளான் என்பதன் மூலம் போர்களில் வெற்றி பெற்ற தன்மை உடையவனாக அதாவது தனி ஒருவனாகச் சென்று பகைவரை அழிந்த தன்மை ஒழிந்த பொருளாகக் கூறப்பட்டுள்ளது.

முடிவுரை

புறநூல்களில் வீரம் என்பது பெரு வேந்தர்களுக்கும், சிறு தலைவர்களுக்கும் பொதுமைப்பட ஒன்றாகச் சித்தரிக்கின்றது. புறநானூற்றில் உள்ள 400 பாடல்களில் பதினேழு பாடல்கள் மன் என்ற இடைச்சொல்லின் பொருளை தாங்கி வந்துள்ளன. இவற்றுள் கழிவு என்ற பொருளை உணர்த்தும் இடைச்சொல் அதிக இடங்களில் பயின்று வந்துள்ளது. ஆக்கம் மற்றும் ஒழியிசை ஆகிய பொருண்மைச் சுட்டுவதாக இச்சொல் குறைந்த பாடல்களிலேயே இடம்பெற்றுள்ளது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருக்குறள் - கீதை உணர்த்தும் அன்பு

சி. சிந்தியா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

அன்பு என்பது உயர்ந்தது, தனித்தன்மை வாய்ந்தது. அன்பு எல்லோரையும் அரவணைக்கும் அன்பு தலைவன் தலைவி இருவரையும் பிணைக்கும் கருவியாகவும் அறம்பொருள் இன்பம் என்ற மூன்றையும் அடையும் வாயிலாகவும் விளங்குகிறது.

அன்பு

அறநெறியைப் பின்பற்றி அன்பு என்னும் துணைக்கொண்டு இல்வாழ்க்கை வாழ்பவன் தலை சிறந்தவன்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அன்புடன் வாழ்வது இல்வாழ்க்கையின் பண்பு அதைப் போற்றி வாழ்வது அதன் பயன் ஆகும். அன்பினால் பெற்றோரை, உற்றோரை, மனைவி, மக்களை ஏன் உலகையே ஆட்கெள்ளலாம்.

அன்பின் வெளிப்பாடு

ஒருவர் துன்பப்படும் பொழுது வருந்துவது, கண்ணீர் விடுவது இயல்பான ஒன்று. மனைவி மக்கள், பெற்றோருக்காக கண்ணீர் விடும் போதும் வருந்தும் பொழுதும் அவர்கள் அன்புணர்ச்சியைப் பலரும் அறியச் செய்துவிடும்.

இதனை

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.[2]

என உணர்த்துகின்றார்.

அன்பின் அடிப்படை

அன்பு விளையும் இடம் விருப்பம் அன்பு இறைவனிடத்தில் செலுத்தப்படும் பொழுது இறைவன் அந்த அன்பினிலேயே வெளிப்படுகிறார். அடியவர்கள் ஆண்டவனை அடைய பின்பற்றிய மார்க்கமே அன்பு ஆகும் இதனை மாணிக்கவாசகர்

அன்பும் சிவமும் வேறல்ல அன்பே சிவம்

என்றார் மேலும்,

கூடும் அன்பினால் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்பது அடியவர்களின் அன்புள்ளத்தைப் புலப்படுத்தும் பாடலாகும்

பகவத்கீதையில் அன்பு

அன்புக்கு நிகரேது, அன்பே தெய்வம் மற்றவர்களிடம் பாசமும், பிரியமும் கொண்டு இரக்கத்தால் ஏற்படும் நெஞ்சக் குழைவே அன்பு எனப்படும்.

மனித வர்க்கத்திற்கு அன்பே பிரதானம் ஒருவருவருக்கொருவர் அன்புடன் பழகினால் அங்கு நட்பு, ஒற்றுமை தியாகம் அஹிம்சை யாவும் ஏற்படும்.

அன்புக்கு அனைத்தும் இலக்காகும் அதிகாரத்தால் முடியாதது அன்பினால் முடியும். கீதையின் 2-ம் கோட்பாடு.

வாழ்க்கையை இனிதாக்குவது அன்பு
கஷ்டங்களை எல்லாம் மீளச் செய்வது அன்பு
குடும்ப வாழ்க்கையை மேன்மைபடுத்துவது அன்பு
உலக வாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு
அழகற்றவர்கட்கு அழகூட்டுவது அன்பு
அன்பு கொழிக்குமிடம் சொர்க்கம்
அன்பு மறைந்த இடம் நரகம்.[5]

எல்லோரிடமும் எப்பொழுதும் அன்பாக இருப்போம் என்கிறது.

குறளில் அன்பு

அன்பின் வழிநிலையே இன்பம் அன்பின்றி இன்பம் அமையாது இல்லறத்தின் சிறப்பு அன்பின் முழுமையில் அடங்கியுள்ளது.

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.[6]

அன்புடையோர்க்கே இன்பம் கிட்டும்.

அன்பிலார்க்கு துன்பமே மிகும் இதனை

தொல்காப்பியர்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்தினை.[7]

அறிவைப் பயன்படுத்துவதை விட அன்பைப் பயன்படுத்தினால் வாழக்கையில் துன்பமின்றி இன்பமாக வாழலாம் என்று கூறுகின்றார்.

அன்பின் துணை

அன்பே இல்லறத்தின் அடித்தளமாகவும் சிறந்த பண்பாகவும் விளங்குகின்றது.

என்பதை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அ..ஃதே துணை.[8]

என்று குறிப்பிடுகின்றது. உலக உயிர்கள் அனைத்தின் இயக்கத்திற்கும் அன்பு அடிப்படையாய் அமைகின்றது. காலமாற்றத்திற்கும் இல்லற நெறிமுறைகளுக்கும் செயல்பாட்டு நிலையில் முரண்பாடு ஏற்பட்டால் மக்கள் மனநிலையில் அவை சிக்கல்களாக உருவெடுத்துவிடும். இதனால் தான் நன்னூலார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.[9]

என்கிறார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு[11.]

என்பதால்

அன்புடையவர் பிறர்க்கு வரும் துன்பத்தைத் தமக்கு வருந்துவதாகக் கருதுவர். அன்பில்லாதவர்கள் எல்லாவற்றையும் தம் உடைமையாகக் கருதுவர் அன்புடையவர் தன்னுடைய எலும்பைக் கூட பிறர்க்காக அளிப்பர்.

அன்பில்லாதவர்கள் பிறர்க்குப் பயன்பட மாட்டார்கள்.

தமக் கென வாழாப் பிறர்க்குரியாளர் எனப்[12]

என்று புறநானூற்று வாயிலாகவும் அன்பினை வெளிப்படுத்துகின்றது.

உயிருடையார் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய முக்கியமான ஒன்று அன்பு

Nobility of sowl is not is question of genius our glary …. its realsecret is kindness

முடிவுரை

வாழ்கின்ற ஒவ்வொரு உயிருக்கும் உள்ளீடாகப் பொலிவது அன்புதான் என்பதை திட்டவட்டமாக உணரமுடிகிறது. அன்பு என்னும் நடுப்பண்பு இல்லையேல் மற்றவை யாவும் உடல் செயலிழந்ததைபோல் பயன் இல்லாமல் விழுந்துவிட வேண்டியதாகும்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பாடற்சொல்லும் அறிவியல் பொருளும்

கா. வெண்ணிலா
முனைவர்பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலைமற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-5

உலகச் செம்மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் விளங்குகின்றது. இத்தமிழ் மொழின் சிறப்பினைப் பலப்பல புலவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இப்புலவர்கள் பொருள் பொதிந்த எண்ணற்றப்பாடல்களைப் பாடிய போதிலும் தம்மைப் புரந்த வள்ளல்களையும், தமிழ்ப்புலவர்களை விரும்பாத லோபிகளையும் தமது பாக்களில் சுட்டியுள்ளனர். இவ்விரு வகையான பொருளமைப்பினை இக்கட்டுரைக் விளக்கின்றது.

புரவலரும் புலவரும்

முன்னர்கள் புலவர்களைப் போற்றியமைக்கு சிறந்த உதாரணமாக அதியமான், ஔவையாருக்கு நெல்லிக்கனி தந்த வரலாற்றினைக் கூறுவர். இந்த வரலாற்றினை உற்று நோக்கும் போது, பிணி மூப்பு சாக்காட்டினைத் தவிர்க்கும் கனியை ஔவைக்கு அதியமான் அளித்தார் என்றால் அதனை உண்டை ஔவையார் இன்றும் வாழ வேண்டும் என்பதே கருத்து. மேலும் அதியமான் களியை ஈந்தமைக்குச் சிறப்பு செய்ய வேண்டி கதையைப் பிற்காலத்தோர் கூறியிருந்தாலும் பொருள் எண்ணத்தக்கது.

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
புல்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா

தாத னின்னகத் தடக்கிச்

சாத னீங்க வெமக்கீத் தனையே.

என்பது அப்பாடலாகும். இப்பாடலில் சாதல் நீங்க எமக்கு ஈந்தனை என்ற தொடரின் சொற் பொருள்கள் மேற்கூறியவாறு சாதலை (இறப்பை) நீக்கி வாழவைக்கும் என்ற பொருளையும், நடைமுறையில் ஒருவர் கொடுக்கும் பொருளை உயிர்வாகப் போற்றி, பரவாயில்லை நீங்கள் சாப்பிடுங்கள், நன்றாக இருங்கள் என்பது போல, ஔவையார் மன்னர் நீங்கள் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தால் சிறப்புடையது, என்றும் பொருளில் சாதல் நீங்க என்ற சொல்லின் பொருளை உலக வழக்கமாகவும் எண்ணலாம்.

இப்பாடலின் சொற்பொருளமைவினை, ஆற்றலை ஆக்கவோ அழிக்கமுடியாது, வேறு ஒரு ஆற்றலாக மாற்ற முடியும் என்ற விஞ்ஞானக் கொள்கையோடு ஒப்புநோக்கும் போது, அதியமானின் உள்ளமும், ஔவையாரின் உள்ளமும் ஒருவரை ஒருவர் வாழ வேண்டும் என்ற எண்ண அலைகள் மற்றொரு ஆற்றலாக மாறி இன்றளவும் நிலைபெற்றுள்ளது. இவ்விடத்து, அவ்வையார் பாடிய பல பாடல்கள் நமக்குக்கிடைக்காதவை, கிடைத்தும் நினைவுக்கு நில்லாதவை பல இவற்றுக்கிடையே ஔவையார் - நெல்லிக்கனி - அதியமான் என்ற மூன்றில் ஒன்றைச் பேசும் போது வரலாறு நினைவுக்கு வருமளவு பாடப் பொருளில் ஒரு ஆற்றல் மாற்றப் பொருள் உள்ளமையைக் காணமுடிகின்றது.

அதியமானினைக் குறித்துப்பதடிய இப்பாடலை உலகியல் வழக்கில் பொருள் கொள்ளாது, அறிவியல் பொருளுடன் இணைத்துக் காணுதல் சிறப்புப் பொருளைத் தருகின்றது.

புலவரும் லோபியும்

தமிழ்க்கவிதை உலகில், பாடல்களில் கவிஞர் தம் உள்ளம் உவந்தக் கருத்துகளைப் போலவே, தமிழ்ப்புலவர்களை விரும்பாதவர்களையும், விரும்பி நகைச்சுவையாக தம் பாடலில் இலைமறைக் காயென பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகின்றது.

துமிழ்ப்புலவர்களை வெறுத்த செல்வந்தரின் செயலைக் குறிப்பிட்டு, புலவனாகவே விளங்கும் இறைவனிடம் விண்ணப்பிக்கும் தன்மையை, வழங்காத கையினை நான் வள்ளல் என்றேன்

ஆரடி வீதியில் ஓர் ஏடு கொண்டோடியே

அவசர தாய்வருதியார் என்று மெள்ள எட்டிப்

பாரடி தலைமறைய நின்று கொண் டவர்நெடும்

பாதைவழி போகி றதுதான்

பரண்மேல் எனைத்தூக்கி விட்டுவிடு தாளையடை

பழிகாரி கதவுபோடு

கூர்மைமொழி கேட்டுஅதிக சீக்கிரம் வந்திடுவர்

குதிருக் குள்ளே ஒளித்துக்

கொள்ளடி எனப்புகலும் லோபியர்கள் மேல்தமிழ்

கொண்டுபோய் அலையாமலே

சீரடிது தித்துநற் பாமாலை சாற்றியே தெரிசிக்க

முத்த தருவாய்

தேசிகம் பூத்தஉமை நேசபொன்

ஆம்பலவ தேசிக சிரோரத்னமே.

என்ற பாடல் காட்டுகின்றது.

துமிழ்ப் பாடலில் காணப்படும் சொற்பொருள்கள் காலங்கடந்த பழமையை ஒளிமையாகக் காட்டுமிடத்து அறிவியல் பொருள் விளக்கமும் பொருந்திய தன்மையும், தமிழ்ப்புலவரை ஆதரிக்காத செல்வந்தனின் செயலையும் எடுத்துக்காட்டும் புலவர் உள்ளமும் வெளிப்படும் நிலையில் தமிழ்ப்பாடற்சொற்களில் விஞ்ஞானப்பொருள், இகழ்ச்சிபொருள் என்பன நுட்பமாக அமைந்தமையைக் காணமுடிகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்

எம். சுரேஸ், முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழாய்வுத்துறை,ஸ்ரீமத் ஆண்டவன் கலைமற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-5

மேற்க்கணக்கு கீழ்க்கணக்கு

பிற்காலத்தினர் தொகை நூல்களை மேல்வரிசை நூல்கள் என்றும் நூல்கள் என்றும் பிரித்தனர். புத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேல்வரிசை நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கீழ்வரிசை நூல்கள்.

குறைந்த அடிகளைக் கொண்ட பாடல்களையுடைய நூல்களுக்குக் கீழ்க்கணக்கு நூல்கள் என்று பெயர் வைத்தனர். நிறைந்த அடிகள் அமைந்த பாடல்களைக் கொண்ட நூல்களை மேற்கணக்கு நூல்கள் என்று கூறினர்.

மேற்கணக்கு நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் அவைகளின் எண்ணிக்கையும் பதினெட்டு, கீழ்க்கணக்க நூல்களும் பதினெட்டு, மேற்கணக்கு நூல்கள் எல்லாம். பெரும்பாலும் மூன்றடி முதல் ஆயிரம் அடி வரையிலும் எழுதப்படும் ஆசிரியப் பாக்களால் ஆனவை. கலிப்பா, பரிபாட்டு, வஞ்சிப்பா ஆகிய பாடல்கள் கொண்ட நூல்களும் மேற்கணக்கில் உள்ளன. கீழ்கணக்கு நூல்கள் எல்லாம் இரண்டிடடி முதல் எட்டு அடி வரையிலும் உள்ள வெண்பாக்களால் ஆனைவைளே.

பாட்டின் பெருக்கம் சுருக்கும் கருதியே கீழ்க்கணக்கு மேற்கணக்கு என்று நூல்களை பிரித்தனர். நூல்களில் உள்ள இது குறிப்பிடத் தக்கது.

நூல்கள் யாவை?

கீழ்கணக்கு நூல்கள் இன்னின்னவை என்பதைக் குறிக்கும் வெண்பா ஒன்று உண்டு

நாலடி, நான்மணி, நால் நாற்பது, ஐந்தினை, முப்
பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்,
இன்னிலைசொல் காஞ்சியுடன், ஏலாதி, என்பனவே
கைற்றிலைய ஆம்கீழ்க் கணக்கு.

இதுவே அப்பாடல் நாலடியார் நான்மணிக்கடிகை, கார் நாற்பது களவழி நாற்பது. துணை மொழி ஐம்பது ஐந்திணை ஐம்பது ஐந்திணை அறுபது ஐந்திணை எழுபவ திணை மாலை நூற்றைம்பது, முப்பால் திரிகடுகம், ஆசாரக்கோவை பழமொழி சிறு பஞ்சமூலம் இனியநிலையை எடுத்துக்கூறுகின்ற முது மொழிக்காஞ்சி ஏலாதி என்பவைகளே வழுக்க நிலையைக் முதுமொழிக்காஞ்சி ஏலாதி என்பவைகளே ஒழுக்க நிலையைக் கூறுகின்றவாகிய கீழ்க்கணக்கு நூல்களாகும்.

களவு மனத்தின் சிறப்பு

இவர்கள் களவு மணத் தம்பதிகளாய் வாழும்போது காதலன் இரவு நேரத்தில் வருவான் ஒரு குறிப்பட்ட இடத்திலேயே தலைவியைக் கண்டு அளவளாவிச் செல்லுவான். இப்படிப் பல நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. இந்தக் களவு மனத்திலிருந்து மாறக் கற்பு என்னும் மணம் புரிந்து கொள்ள வேண்டும். ஏன்பது இந்த எண்ணத்தை ஒருநாள் தலைவனிடம் தெரிவிக்கின்றாள் தோழி இந்த நிகழ்ச்சியைக் கூறும் செய்யுள் ஒன்று அச்செய்யுள் மிகவும் சிறந்த கருத்துடன் அமைந்திருக்கின்றது.

நன்மனம் கமழும் மலைச்சாரலிலே தினைப்புனங்காப்பவர்கள் திரிந்த கொண்டிருப்பார்கள். அந்த மலைப் பாதையிலே நீங்கள் இனிமேல் வரவேண்டாம் ஏனென்றால் அவர்களுக்கு இனிய மொழிகள் பேசத் தெரியாது. ஆவர்கள் கொல்லுதற்க உதவும் வில்லலைக் கையிலே பிடித்திருப்பார்கள். நெருய்குகின்றவர்களைக் குத்திக் கொல்லும் வேலும் வைத்திருப்பார்கள். விரைந்து பாயக்கூடிய கணைகளையும் வைத்திருப்பார்கள். அவர்கள் கல்லிலே (மலையிலே) வாழ்கின்றார்கள் ஆதலால் அவர்கள் நெஞ்சமும் கல்லாகத்தான் இருக்கும். ஆவர்கள் எங்களைக் சேர்ந்தவர் தாம் ஆயினும் கொடியவர்கள்

வரைகமழ் சாரல் விளைபுனம் காப்பர்

வரையிடை வாரன்மின்! ஐய – உரைகடியர்

வில்லினர் வேலர் விரைந்து செல் அம்பினர்

கல்லிடை வாழ்நர் எமர்.

இச்செய்யுள் தலைவியின் கருத்தைத் தலைவனுக்குக் குறிப்பாக எடுத்துக் காட்டுகின்றது இரவில் வந்து போவது ஆபத்து வெளிப்படையாகக கற்பு மணம் புரிந்துகொண்டு வாழ்வதே சிறந்தது. என்று குறிப்பிடுகின்றது. ஆன்றியும் தலைவன் தலைவி மீது கொண்டுள்ள அன்பையும் அறிவிக்கின்றது. குற்புள்ள மனைவிதன் காதலனுக்கு எவ்விதத் துன்பமும் உண்டாகக்கூடாது என்பதிலே எவ்வளவு கவலை கொண்டிருப்பாள் என்பதற்கும் இச்செய்யுள் ஒரு எடுத்துக்காட்டு.

பொருளீட்ட செல்லுதல்

மழைநாளில் திரும்பி வந்துவிடுவேன் என்று காதலியிடம் உறுதிமொழி உரைத்துவிட்டுப் பொருள் டேப் போயிருந்தான் காதலன் மழைக்காலம் வநதுவிட்து. அதைக் கண்டான் அவன் நான் சொல்லிய

கார்காலம் வந்துவிட்டது. குாதலி என்னைக் காணாமல் நெஞ்சங்கலங்குவாள். விரைந்து செல்ல வேண்டும் என்று எண்ணினான். உடனே தேர்பாகனிடம் கீழ் வருமாறு உரைத்தான்.

தேர்பாகனே தேர் விரைவாகப் போகட்டும். ஆவள் மழையால் செழித்திருக்கும் காட்டின் அழகைக் காண்பாள் கற்பின் சிறப்பால் தன் துக்கத்தை அடக்கிக் கொள்வாள் காதலி கன்னத்திலேகையை ஊளன்றிக் கொண்டு கவலை படிந்த முகத்துடன் என்னை எதிர்பார்த்து நிற்பாள் ஆகையால் தேரை விரைவாய் ஓட்டுக என்றான்.

நூல் நவின்ற பாக! தேர் நொவ்விதாகச் சென்றீக!

தேன் நவின்ற கானத்து எழில் நோக்கிற், - தான் நவின்ற

கற்புத்தாள் வீழ்த்து கவுண்மிசைக் கைஊன்றி

நிற்பாள், நிலை உணர்கமீ யாம்.

நூல்களைக் கற்றறிந்த பாகனே! தேரை விரைவாக சொல்லும்படி செய்க. மலர்களிலிருந்து தேன் சிந்துகின்ற காட்டின் அழகைக் கண்டு, தான் இளமை முதல் பழகிய கற்பென்னும் தாளைப் போட்டுக் கொண்டு. கன்னத்தின் மேல் கையை ஊளன்றிக் கொண்டுறிற். அவள் நிலைமையை நாம் சென்று காண்போம்.

தாம் கூறிய உறுதிமொழியைத் காப்பாற்ற வேண்டும் என்ற கவலை அக்கால மக்களுக்கு உண்டு. காதலன் எங்கு சென்றாலும் தன் காதலியை மறப்பதில்லை. இக்கருத்தை இப்பாடலிலே காண்கின்றோம்.

புழக்கவழக்கங்கள்

பண்டைகால பழக்கங்கள் சிலவழக்கங்கள் சிலவற்றையும் இந்நூலிலே காணலாம்.

கருமேகம் கண்ணனுடைய நிறத்தைக் கொண்டிருந்தது. மின்னல் முருகனுடைய வேற்படையின் ஒளையைப் போலிருந்தது. என்று கூறுகின்றது ஒரு செய்யுள்.

மல்லர்க் கடந்தான் நிறம்ம்போன்று இருண்டு எழுந்து

செல்வக் கம்பு அமர்ந்தான் வோல் மின்னி.

மல்லர்களை வென்ற கண்ணணுடைய நிறத்தைப் போலக் கருத்து எழுந்து, சிறந்த கடம் மலரை விரும்பிய முருகனுடைய வேலைப்போல மின்னி என்பதே அச் செய்யுள்

முருகனுக்கு ஆடு வெட்டி இரைத்தத்தைச் சிந்திப்பூசைபொடுவது பண்டைக்கால வழக்கம்

மநிபீர்த்து உதிரம்தூய் வேலன் தர்இ

வெறியோடு அலம் வரும் யாய்

வேலைக் கையிலேந்தி ஆடுகின்ற பூசாரியை அழைத்து ஆட்டுக்கு, ஆட்டுக்குட்டியை அறுத்து, அதன இரத்தத்தை நாற்றிசைகளிலும் சிந்தி இவ்வாறு முருகனுக்கிப் பூசைபோடுவதாகிய தொழிலில் ஈடுபட்டு வருந்துகின்றாள் என்பது தாய்

இறந்த வீரர்களுக்கு அவர்களின் நினைவாகக் கல்நடுவார்கள். இது பண்டை வழக்கம் இதனை நடுகல் - விரிநிழல் கண்படுக்கும் வெம்கானம் என்பதனால் காணலாம். வீரர்களுக்காக நடப்பட்டிருக்கும். கல்லின் விரிந்த நிழலிலே பேய்படுத்துறங்கும் கொடிய கானகம் என்பதே இதன் பொருள்

குாரமான மருந்தைப் போட்டுப் புண்ண ஆற்றும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. இதனை இந்நூலின் 24-வது பாட்டிலே பார்கலாம்.

புகழுடன் வாழ்வது மக்கள் கடமை பிறர் துன்பத்தைக் களைந்து உதவி செய்வதே நல்லறம். ஆந்த நல்லறமே புகழைத்தரும். இந்நீதியையும் இந்நூல் உணர்த்துகிறது.

மிக்க மிகுபுகழ் தாங்குபவோ? துற்சேர்ந்தார்

ஒற்கம் கடைபிடி யாதார்.

தன்னை அடைந்தவர்களின் தளர்ச்சியைக் தன்னுடையதாகம் கொண்டு அதைக் களைய முன்வராதவர் மிகுந்த புகழைப் பெற முடியுமா?

முடிவுரை :

தமிழர் தம் வாழ்வியல் பண்பாடு பழக்க வழக்கங்கள் குறித்த பொருளமைந்த பாடற் பொருட்களைச் சங்கப் பாக்களிடையே விரிவாகக் காணமுடிகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தமிழிலக்கியங்களில் சொல்லும் பொருளும்

உலகநாதன். மா

முனைவர் பட்ட ஆய்வாளர், திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி, திருவாரூர் - 610 003.

எல்லாப் பொருளும் இதன்பால் உள் இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையாச் - சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் உலகப்பொதுமறையாகப் போற்றப்படுகிறது. சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, பிரிவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நிற்கின்றார் திருவள்ளுவர். அவர் சொல்கின்ற கருத்துக்கள் மனித ஒழுக்கத்திற்கும், நுண் அறிவிற்கும் வழிகாட்டியாக திகழ்கின்றன. அந்த ஒரேயொரு காரணத்தாலே தான் குறளை அநேக மக்கள் படிப்பது மட்டுமன்றி அதன் உட்கருத்துக்களைக் கற்றறிந்த பின், புகழுரையாகப் பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சொல்லியிருக்கின்றார்கள். ஏதோ அவர் பிறந்த மண்ணில் மட்டுமல்ல அவர்களுக்கு அவ்வாறு புகழாரம் கிட்டியது. ஆனால், மேலை நாட்டினர் கூட திருக்குறளை அறிந்த நாள் முதற்கொண்டு அதற்குரிய புகழைக் கொடுக்கத் தவறியதில்லை

னுச. ஆ. வின்டர்னிட்ச்

He (Tiruvalluvar) stands above all races, castes and sects and what he teaches is a general human morality and wisdom. No wonder that the Kural has not only been much read, studied and highly praised in the land of its origin for centuries, but has also found many admirers in the West, ever since it has become known.

Dr. M. Winternitz

ஆயினும், மோசிகீரனார் என்னும் புலவர் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று அவ்விருவர் பாற் கூற்று என இன்பத்துப்பாலை மூவகைப்படுத்துகிறார்.

ஆண்பாலே ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபாலோர் ஆறாக மாண்பாய

காமத்தின் பக்கமொடு மூன்றாகக் கட்டுரைத்தார்
காமத்தின் வள்ளுவனார் நன்கு

முழு முதல் நூல்

தமிழுலகில் முதல் முழு நூலாகத் திகழ்வது தொல்காப்பியம் அடுத்ததாக வைத்து எண்ணத்தக்கது திருக்குறள். இ.ீ.து அறத்தையெ நூற்பொருளாக கொண்டெழுந்த முதல் நூலாதலின் திருக்குறளுக்கு **அறம்** என்னும் பெயர் பண்டு வழங்கலாயிற்று' என்பார் டாக்டர்.வ.சுப.மாணிக்கனார் (இலக்கிய விளக்கம்).

காழில் கனி

இதென்ன புதுச் சொல் என்று நாம் வியக்கிறோம். இக்காலத்தில் விதையில்லாக் கனியை(ளுநநனடநளள கசரவைள) விற்கிறார்கள் அல்லவா இச்சொல்லை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் தம் குறட்பாவில் **காழில் கனி** என்று அறிமுகப்படுத்தியுள்ளார்.

தாம் வீழ்வார் தம் வீழல் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் **காழில் கனி** (குறள் 1191)

தான் தலைவனை மிகவும் விரும்பியது போல் தலைவனும் தன்னை விரும்புவதை அறிந்த மகளிர் காம நுகர்ச்சியாகிய விதையிலலாப் பழத்தைப் பெற்றவர்போல் ஆவார் என்பது பொருள்.
விதையில்லாக் கனியை உண்பவர் வீரியமற்றுப் போவார் என்பது மருத்துவ நூலோர் கருத்து. வித்திலிருந்து வருவது தானே வீரியம்.

அதனால்தான் அசைவ உணவாளர்கள் பிராய்லர் கோழிக் கறியை உண்ணலாகாது, அப்படி உண்டால் அவர்களின் விந்தணுக்களின் உற்பத்தி பாதிக்கப்படும் என்னும் நோக்கிலேயே அவ்விதம் மருத்துவர்கள் கட்டுப்பாடு விதிக்கின்றனர்

ஒரே குறளில் முப்பால

முப்பால் எனப் போற்றப்படும் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று சொற்களும் ஒரே பாடலில் இடம்பெற்றுள்ள வித்தகத்தை காண்கிறோம்.

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (குறள் 754)

வள்ளுவர் ஒரு குறட்பாவில் ஒரே சொல்லை பலமுறை பயன்படுத்தி பொருள் வேறுபாடு காட்டி படிப்போரை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் (குறள் 965)

இக்குறளில் குன்று எனும் பெயர்ச்சொல் மலையையும், குன்று வினைச்சொல் தாழ்வுறு நிலையையும், குன்றுவ என்பது கீழான செயல்களையும், குன்றி எனும் சொல் குன்றிமணியையும் காட்டுகின்றன. சொல்லும் பொருளும் மிகைக்காட்டும் குறள் இது.

தோற்றவரே வென்றார்

உட்பொருளை மறைமுகமாகச் சொல்லி படிப்போர், தாமே எளிதில் உணரும் வண்ணம் ஒரு குறளைத் தந்திருக்கிறார் வள்ளுவர். தோல்வியே வெற்றிக்கு முதற்படி எனக் கூறக் கேட்டிருக்கிறோம். ஆனால் திருவள்ளுவரோ, தோல்வியே வெற்றி, தோற்றவரே வென்றவர் எனப் புதுமையான பொருள் கூறுகின்றார்.

ஊடலில் தோற்றவர் வென்றார், அது மன்னும்
கூடலில் காணப்படும் (குறள் 1327)

காமம் நுகர்தலுக்குரிய இருவருள், ஊடலின் கண் தோற்றவர் வென்றவராவார் அ.ஃது அப்பொழுது அறியப்படாததாயினும் பின்னைப் புணர்ச்சியின் கண் அவரால் அறியப்படும் என்று பரிமேலழகர் உரை செய்திருக்கிறார்.[3]

ஐந்து உவமைகள் ஐந்து உவமேயங்கள்

ஒரு குறளை ஏழு சீர்களுக்குள்ளேயே ஐந்து உவமைகளையும், ஐந்து உவமேயங்களையும் செறித்து கூறியுள்ளார் வள்ளுவர்.

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோர் அவட்கு (குறள் 1113)

இதில் முறி(தளிர்) முத்து, மணம், வேல், வேய்(மூங்கில்) ஆகியவை முறையே பெண்ணின் உடல், பல், பருவம், கண், தோள் ஆகியவற்றிற்கு உவமைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

என்னே, வள்ளுவரின் புலமையாற்றல்!

விருந்தும் மருந்தும்

நோயை உண்டாக்கக்கூடியதையும், அதைத் தீர்க்கும் மருந்தையும் ஒரே இடத்தில் பார்த்தல் வியப்பல்லவா?

இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து (குறள் 1091)

அவள் கண்களில் இருநோக்கு உள்ளதை விருந்தாகவும், மருந்தாகவும் சொற்பொருளாக விளக்குகிறார்.

முடிவுரை

உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றெனப் போற்றப்பெறும் நம் தமிழ்மொழியில் எண்ணிறந்த நூல்கள் தோன்றியுள்ளன. அறநூல்களாக அமைந்தவைப் பல, காப்பியங்களாக அமைந்தவை பல தொகைநூல்களாகவும். இலக்கண நூல்களாகவும், விரி நூல்களாகவும் விரிந்தன பல. அவற்றுள் திருக்குறள் தனித்தன்மை கொண்டு இலங்கும் நூலாகும். உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் நம் வாழ்வுக்கு உவப்பைத் தரும் வழிகாட்டி நூலான திருக்குறளை சென்றோதி ஒழுகுவோமாக.

துணை நின்ற நூல்கள்

1. மதுரைத் தமிழ்நாகனார் பாடல் 29-திருவள்ளுவமாலை
2. நீதியரசர் மோகன், திருக்குறள்-உலக இலக்கியம் அறக்கட்டளைச் சொற்பொழிவு, தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர், மார்ச் 1989.
3. காமத்துப்பால் பக்கம் 296 பரிமேலழகர் உரை வெளியீடு திருப்பனந்தாள் காசி மடம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

முல்லை நில மக்கள் வாழ்வியல்

நா.சத்யா,

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி,

தஞ்சாவூர்-7.

செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்

சிந்தனை ஒன்றுடையாள்

என்பது பாரதியின் பற்று ஆகும்.

தமிழர்தம் வாழ்வு காலத்தால் முற்பட்டது. அ.ஃது பண்பட்டு வாழ்ந்த பழம்பெருமை உடையது. எளிமையும் இனிமையும் மிக்கது. இத்தகு சிறப்பு மிக்க பழந்தமிழர் வாழ்வை அப்படியே வடித்துக் காட்டுகின்ற இலக்கியங்களாய் அமைபவை சங்க இலக்கியங்களாகும். பாட்டும் தொகையும் எனப் பிரிந்தமைந்து அகமும் புறமும் என அழகுற வகுத்தமைந்தவையே சங்க இலக்கியங்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இவ்விலக்கியங்கள் வழியாகத் தமிழரின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் அறியமுடிகிறது. இவ்விலக்கியத்தின் தலையாய சிறப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலப்பிரிவில் முல்லைநில மக்களின் வாழ்வியல் தன்மையை ஆய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

முல்லையின் தன்மை

மாயோன் மேய காடுறை உலகமும்[1] (தொல்.பொரு.951)

என்று தொல்காப்பியனார் கூறும் நிலப்பகுதியே 'முல்லை'யாகும். இது காடும் காடு சார்ந்த பகுதிகளைக் கொண்ட இந்நிலத்தின் வளமைகளும் காலப்பகுதிகளில் தோன்றும் காரும் மாலையும் தூண்டும் உணர்வுகளும், இந்நிலத்துவாழ் மக்களின் வாழ்வை முற்றவும் இயக்கி வந்தன.

நிலமும் பொழுதும் மக்களின் அகத்தினுள்ளே ஊடுருவி அவர்களைத் தம் நிலைமைகட்கு ஏற்பவே நடத்திச் சென்றது.

தொல்காப்பியத்தில் முல்லை என்ற சொல் நான்கு இடங்களில் வருகின்றன. நிலம் பற்றிப் பேசும்போது,

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே (தொல்.951)

என்றும்,

காலம் பற்றிப் பேசும் போது பெரும்பொழுது கார்காலமாகவும் சிறுபொழுது மாலைக்காலமாகவும் கூறப்படுகின்றது.

காரும் மாலையும் முல்லை (தொல்.952)

என்றும்,

முல்லை முதலாச் சொல்லிய முறையால் (தொல்.974)

என்றும், புறத்திணைப் பற்றிப் பேசும்போது,

வஞ்சி தானே முல்லையது புறனே (தொல்.1207)

என்றும், நூற்பாக்கள் வாயிலாக அறிய முடிகிறது.

முல்லை வாழ் மாந்தர்கள்

சங்க இலக்கியங்கள் முல்லை நில மக்களை கால்நடையோடு தொடர்புடைய மக்களாகச் சுட்டுகின்றன. இந்நிலத்தில் வாழும் ஆண்கள் அண்டர், இடையர், கோவலர், தொழுவர், பொதுவர் என்றும், பெண்கள் ஆய்ச்சியர், கோவித்தியர், இடைச்சியார், பொதுவியர் என்றும் அழைக்கப்பெறுவார்.

முல்லைநிலத் தலைவர் 'அண்ணல்' என்றும் (தமிழ்ப் பேரகராதியில் தொகுதி.1, ப.60) அழைக்கப்படுவார்.

'குறும்பொறை' என்பதற்குக் காடு என்பது பொருளாகும். (தமிழ்ப் பேரகராதி, தொகுதி 2, ப.1056), முல்லை நில மக்களாகிய இடையர்களின் தலைவனாகத் திகழ்பவன் குறும்பொறை நாடன் என அழைக்கப்பெறுகிறார்.

'தோன்றல்' என்ற சொல் அரசன், உயர்ச்சி, தலைமைத் தலைவன், தமையன், தோற்றம், மகன்,முல்லைத் தலைவன் முதலிய பொருள்களை (தமிழ்ப்பேரகராதி, தொகுதி 4, ப.2119) உணர்த்தும் என குறிக்கிறது.

'இடையர்' என்பவர் செல்வம், வாழ்க்கை நிலை ஆகியவற்றில் தலையாயவராய், முதல்வராய், முதலாளிகளாய் உள்ளவர்க்கும், நாள்தோறும் உழைத்து வயிறு வளர்க்கும் கடையருக்கும் இடைப்பட்டவரே இடையர்' எனக் குறிப்பிடுவார். (துரை.அரங்கசாமி, மொ.அ. 1980, ப.366)

'பொதுவர்' என்பது பொது என்ற திராவிடச் சொல் நடுநிலையைக் குறிக்கும் எனவும் உரைக்கிறார் (கனகசபை, வி. 1956, ப.57).

'மன்றாடியார்' மன்றம் என்ற சொல்லுக்கு சபை நியாயசபை என்றும் பொருள் இரு வழக்குகளுக்கு இடையே (மன்றாடி) தீர்ப்பவர் என்று பெயர் ஆகும்.

'அண்டர்' என்னும் 'அண்டுதல்' என்னும் சொல் 'நெருங்குதல்' என்னும் பொருள் ஆகும். நெருங்கி – சேர்ந்து குடியிருப்பவர் என்னும் பொருளை உணர்த்துகிறது.

'ஆவியர்' இவை 'ஆய்' என்பதன் மற்றொரு வடிவமே 'ஆவி' என்றும் 'ஆய்' முல்லை நில குடிப்பெயரைக் குறிக்கிறது.

'குறும்பர்' என்பர் முல்லைநில மக்கள் குறும்பர் என அழைக்கப் பெறுகின்றனர். இவை செம்மறி ஆடுகளுள் ஒருவகை 'குறும்பாடு' எனப்படும். இதனை மிகுதியாக உடைய ஆயர் குறும்பர் எனப் பெயர் பெறுவர்.

'பூழியர்' முல்லை நில மக்களாகிய ஆயர், பூழியர் எனவும் அழைக்கப் பெற்றனர். இவர்கள் முல்லை நிலத்தவரின் முதன்மைத் தொழிலாகிய கால்நடை மேய்த்தலையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை,

முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்

புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்

கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்

மதியற் செருப்பிற் பூழியர் கோவே **(பதிற்.21:20-24)**

என்று அடிகளால் அறியலாம்.

முல்லைநில வாழ்க்கை

கனியையும் காயையும் உண்டு இலைகளையும் தழைகளையும் ஆடையாக உடுத்திக் காட்டிலும் மலைமேட்டிலும் அலைந்து திரிந்து கொண்டிருந்த வேட்டைச் சமூகத்திலிருந்து விடுபட்டு முதிர்ந்து இணைந்து சமூகமாக வாழ மனிதன் கற்கத் தொடங்கிய முல்லைநில காலத்தில் 'அரசாங்கத்தின்' அடிப்படை உணர்வுகளும் தேவைகளும் தோன்றிப் பெருகத் தொடங்கின என்பதற்கு ஏற்ற வகையில்,

இந்நிலத்தவரின் தெய்வம் 'மாயோன்' ஆவான். வரகு, முதிரை போன்ற தானியங்களும், ஆடு மாடுகளினால் பெறும் பயன்களும் இந்நிலத்தவரின உணவிலேயும் செல்வத்திலேயும் முதன்மை வகித்தனர். 'மானும் முயலுமாகிய விலங்குகளும், கொன்றை குறுந்தும் புதலும் ஆகிய மரங்களும், கானங்கோழி என்னும் பறவையும் முல்லையும் பிடவ மலரும் இந்நிலத்தே மிகுதியானவை.

நிரைமேய்த்தலும் காத்தலும், பாற்பயன்களைக் கொண்டு தாம் இன்புற்று வாழ்வதும், பிறருக்கு அவற்றைத் தந்து அவரிடமிருந்து தமக்குத் தேவையான பிறவற்றைப் பெற்று (பண்டமாற்று முறை) மகிழ்தலும், இந்நில மக்களின் வாழ்வியலாக விளங்கின.

'பொங்கி பாய்ந்து செல்லும் காட்டாறு இந்நிலத்து நீர்வளம் அளித்து வந்தது. ஆயர், கோவலர், பொதுவர் என்று இந்நிலத்துவாழ் மக்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்வினர்களாகவே பெரிதும் விளங்கினர்.

பண்ணிலே சாதாரியும், பறையிலே ஏறுகோட்பறையும் இவர்களினால் பெரிதும் விரும்பிக் கொள்ளப்பட்டனவாகும்.

முல்லைநில கன்னியர்கள் ஏறுதழுவும் வலிமையாளனையே தம் மணவாளனாகக் கொள்ள விரும்பினார்கள்.

மகளிரே தமக்கேற்ற மணவாளனை வரிக்கும் சுயம்வர மணத்தின் ஆதிக்கத் தொடக்கத்தைப் பேணியவர்களாகவும் கன்னியர் விளங்கினார்கள். இவர்கள் மனவுறுதியும் கட்டுடலும் பெற்றுக் கவினோடு விளங்கியவரும் ஆவர்.

முல்லைநில மக்கள் காதல் உறுதியோடும் கற்புத் தகுதியும் பெற்றவர்களாக விளங்கினார்கள். இத்தகு பெண்களின் தலைமையணிலே நிகழ்ந்ததும் ஆயர்களின் மனையற வாழ்வும் எப்போதும் நிம்மதியுடையதாகவே விளங்கிற்று.

ஆகாத்தோம்பி ஆப் பயனளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை (சிலப்பதிகாரம், அ.காதை, 120-121)

என்ற அடிகளும் இங்கு கருதத்தக்கன.

முல்லை நிலத்தில் ஆடு, மாடுகள் விரைந்து பெருகின. அதனை கோவலர்கள் 'புல்லும்' 'நீரும்" செழிப்பான இடங்களுக்கு 'கோல்' கொண்டு ஓட்டிச் செல்வார்கள். அந்த 'கோலே' பின்னாளிரல் அரசனின் 'செங்கோல்' ஆயிற்று. அவன் நெறிமுறை தவறி ஆளும் காலத்தில் அதுவே கொடுங்கோல் எனப் பழிக்கப்பட்டது.

எனவே தமிழ் மக்களுடைய நாகரிக வளர்ச்சியில் இம்முல்லை நிலமும் அந்நில வாழ்க்கையும் ஒரு சிறந்த நிலையே அடைந்துள்ளதோடு மருதநில வாழ்க்கைக்கு அ.ஃது அடிப்படையாயும் அமைந்துள்ளது. வேட்டையாடி உணவு உண்டு மலைகளில் திரிந்த மக்கள், அங்குக் கிடைக்கும் உணவுப்பொருட்கள் போதாமல், மலைகளினின்றும் காடுகளில் சென்று வாழத் தொடங்கி இருக்கலாம். ஆடு, மாடு, எருமை முதலிய காட்டு விலங்குகளைப் பழக்கி, அவற்றை வளர்த்து அவை அளிக்கும் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றையும், ஆடு மாடுகளையும் விற்று, ஒவ்வோர்இடையரும் சொத்துடையவராயினர். நிரைகாவலிலே தொடங்கி 'காவல் மரபே' முடிவில் அரசராகவும் வளர்ந்து அமைதி பெற்றது.

தொகுப்புரை

எனவே முல்லைநில மக்களின் பண்பாடும், பழக்கவழக்கங்களும் உணர்த்துவது எல்லோரும் ஓர் இனமாய்க் கூடி ஆட்சிமுறை அமைத்தும் 'செல்வம் சார்ந்த நாகரிகம்' பெற்று வாழ்வதே ஆகம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பெரியாழ்வார் பாசுரங்களில் இன்தமிழ்ச் சொற்கள்

முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி மதுரை.

முன்னுரை:

எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பிய நூற்பா. ஒரு இனம் காக்கப்பட வேண்டுமானால், அவ்வின மக்கள் பேசும் மொழி காக்கப்பட வேண்டும். மொழி காக்கப்பட வேண்டுமானால், அம்மொழியிலுள்ள சொற்கள் அதற்கான பொருண்மை, அதோடு மட்டுமல்லாது அவற்றைப் பயன்பாட்டில் கொள்ளும் விதம் போன்றவை முக்கியமானவையாகும். உலக மொழிகளில் முதன்மையான மொழி, தொன்மையான மொழி என்று போற்றப்படும் 'தமிழ் மொழியின்' சொற்கள் பல இன்றைய வழக்கில் பயன்படாமலேயே உள்ளன. பண்டைய தமிழ் இலக்கியங்களிலேயும், பக்தி இலக்கியங்களிலேயும் அருந்தமிழ்ச் சொற்கள் அதிகம் காணப்படுகின்றன. இவ்வகையில் பெரியாழ்வார் பாசுரங்களில் காணப்படும் இன்தமிழ்ச் சொற்களையும் அவற்றிற்கான பொருளையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியாழ்வார் பாசுரங்கள்:

பெரியாழ்வாரின் 'திருப்பல்லாண்டு' பாசுரத்தில் 'ஏடு' என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. பூவிதழ், மலர், பனையோலை, புத்தகப்பக்கம், வாழையிலைத்தண்டு, பாலின் ஆடை, மேன்மை, முற்றம் போன்ற பல பொருள்கள் உண்டு. இங்கு 'ஏடு' என்பது 'உடல்' என்ற பொருளைக் குறிக்கின்றது.

"ஏடு நிலத்தில் விழுவதன் முன்னம் வந்து
எங்கள் குழாம் புகுந்து" (நா.தி.பி.4)

"ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்றான் என்பார்" (நா.தி.பி.14)

இங்கு 'ஆலிப்பார்' என்பது கர்வம் கொள்பவர் என்ற பொருளில் பெரியாழ்வார் பயன்படுத்துகிறார்.

பெரியாழ்வார் பாசுரங்களில் 'குட்டன்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். தற்போது அச்சொல் மலையாளத்தில் அதிகம் கையாளப்படுகின்றது. அதேபோல் 'பிடித்துக் கொள்கிறான்' என்பதை 'பிடித்துக் கொள்ளும்' என்றே பெரியாழ்வார் பயன்படுத்துகிறார். இச்சொல் பயன்பாடு மலையாளத்தில் உள்ளது.

''குட்டன்வந்து என்னைப் புறம் புல்குவான்
கோவிந்தன் என்னைப் புறம் புல்குவான்'' (நா.தி.பி.106)

'புறம் புல்குதல்' என்பது பின்னாலிருந்து வந்து அணைத்துக் கொள்ளுதல் குழந்தை தன் தாயைப் பின்னாலிருந்து கட்டிக்கொள்ளும்போது ஏற்படும் இன்பம் அளப்பெரிது. இதனைப் 'புறம்புல்குதல்' என்ற அருமையான வார்த்தையால் குறிப்பிடுகிறார் பெரியாழ்வார்.

'கழகண்டு' என்பது விஷமம், சேட்டை, குறும்பு என்ற பொருள்படும். ஆயர்பாடியில் கண்ணனின் குறும்புத்தனத்தைக் குறிப்பிடும் பெரியாழ்வார், 'கழகண்டு' என்ற சொல்லினைப் பயன்படுத்துகிறார்.

''கண்ணைப் புரட்டி விழித்துக்
கழகண்டு செய்யும் பிரான்'' (நா.தி.பி.157)

இச்சொல் இன்று தமிழில் வழக்கிழந்துவிட்டது.

'கும்மாயம்' – என்பது குழையச் சமைத்த பருப்பு என்ற பொருண்மையில் வருகின்றது. கண்ணனுக்கு உணவூட்டுவதற்காக இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

''கும்மாயத்தோடு வெண்ணெய் விழுங்கி
குடத் தயிர் சாய்த்துப் பருகி'' (நா.தி.பி.225)

அதேபோல், சற்றுநேரம், சிறிதுநேரம் என்பதற்கு 'இறைப்பொழுது'' என்ற வார்த்தையை பெரியாழ்வார் பயன்படுத்துகிறார்.

''மேலையகத்தே நெருப்பு வேண்டிச்
சென்று இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன்'' (நா.தி.பி.206)

'ஜன்னல்'- சாளரம். பலகணி என்ற பொருள்களில் இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆழ்வார் பாசுரங்களில் 'சாலக வாசல்' என்ற சொல்லினைப் பயன்படுத்துகிறார்.

''மழைகொலோ வருகின்றது என்று சொல்லி

மங்கைமார் சாலக வாசல் பற்றி'' (நா.தி.பி.254)

'பரிபவம்' – என்பது துன்பச்சொல், கடுஞ்சொல், வசைபேசுதல் என்ற பொருண்மையில் ஆழ்வார் பாசுரங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

''அஞ்சனவண்ணா! அசலகத்தார்

பரிபவம் பேசத் தரிக்ககில்லேன்'' (நா.தி.பி.259)

அதேபோல், 'தூசனம்' - பழிப்பு என்ற பொருளிலும், 'கோதுகலம்' – கொண்டாட்டம் என்ற பொருளிலும் ஆழ்வார் பாசுரங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

ஒலிக்குறிப்புச் சொல்:-

சில வார்த்தைகளின் ஒலிகளே பொருளினைத் தரவல்லது. அவ்வகையில் ஐயோ, ஓ, அச்சோ, ஆரிரோ, போன்றன ஆச்சரியம், வியப்பு என்ற பொருளில் ஒலிக்குறிப்பை ஏற்படுத்துகின்றன.

''அன்னம தானானே அச்சோ அச்சோ

அருமறை தந்தானே அச்சோ அச்சோ'' (நா.தி.பி.106)

விளிச்சொல்:

கண்ணனுக்குத் தலைவாரிவிடுவதற்காகப் பெரியாழ்வார் காக்கையை அழைக்கின்றார்.

''கண்ணனை வந்து குழல் வாராய் அக்காக்காய்

கார்முகில் வண்ணன் குழல் வாராய் அக்காக்காய்'' (நா.தி.பி.144)

''கூவாய்'' என்பது கூப்பிடு, அழைத்தல் என்ற பொருண்மையில் வருகின்றது.

''யசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்'' (நா.தி.பி.206)

வழக்குச் சொல்:

மக்கள் வழக்கத்தில் பயன்படுத்தும் வழக்குச் சொற்களும் ஆழ்வார் பாசுரங்களில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. 'வசமிழந்த' என்ற சொல்லினைப் பெரியாழ்வார் 'வசமிலவே' என்று பயன்படுத்துகிறார்.

''ஒன்றும் நில்லா வளை கழன்று துகில்

ஏந்தின முலையும் என் வசமிலலே'' (நா.தி.பி.257)

கண்ணனைப் பார்த்ததும் ஆயர்குலப் பெண்களின் வளைகள் கழன்று கொள்கின்றன. மார்புத் துணி விலகியது கூடத் தெரியாமல் கண்ணன் வசம் மனம் இழப்பதைப் பெரியாழ்வார் பாசுரங்களில் சுட்டிச்செல்கிறார்.

'போகாதே' – என்பதைப் பெரியாழ்வார் 'போதரே என்று குறிப்பிடுகிறார்.

'அற்றம்' என்பது வருத்தத்தைக் குறிக்கின்றது.

"அற்றமேல் ஒன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை" (நா.தி.பி.880)

கண்ணனை அடிபணிந்தால் உங்களுக்கு ஒரு வருத்தமும் இல்லை என்கிறார் பெரியாழ்வார்.

'அணவும்' –அணுகும் என்ற பொருளில் சுட்டப்படுகின்றது.

"கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை" (நா.தி.பி.885)

'சீறல்' – கோபம் என்ற பொருண்மையில் சுட்டப்படுகின்றது.

"எங்கள்மால் செங்கண்மால் சீறல்நீ தீவினையோம்" (நா.தி.பி.2586)

விளையாட்டுச் சொல்:

'உந்தி பறத்தல்' என்பது பழங்கால மகளிர் விளையாட்டு ஆகும். மகளிர் எம்பிக்குதித்து தலைவனின் சிறப்புகளைப் பாடுவது போன்றதாகும். இதனைப் பெரியாழ்வார்,

"சீற்றமிலாதானைப் பாடிப் பற

சீதை மணாளனைப் பாடிப் பற" (நா.தி.பி.310)

என்கிறார்.

சுட்டுச் சொல்:

'உவன்' – எதிரில் இருப்பவனைக் குறிக்கும். அவன், இவன், உவன் ஆகிய சுட்டுச் சொற்களில் 'உவன்' இன்றளவும் நாம் பயன்படுத்தாத ஒன்று. அதனைப் பெரியாழ்வார் பயன்படுத்துகிறார்.

"அவனாம் இவனாம் உவனாம் மற்று உம்பர்" (நா.தி.பி.2620)

'உவன்' என்ற சொல் பரிபாடலிலே உள்ளது. இப்போது வழக்கொழிந்த சொல். ஆனால் யாழ்ப்பாணத்தில் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

வடசொற்கள்:

பெரியாழ்வார் தம்முடைய பாசுரங்களில் வடசொற்களையெல்லாம் தமிழ்ச் சொற்களாக மாற்றிப் பயன்படுத்துகிறார். தர்மம் - தன்மம், கந்தர்வர் - காந்தப்பர், இந்திரஜாலம் - இந்திரஞாலம், ஸ்தோத்ரம் - சோத்ரம், கல்யாணம் - கண்ணாலம், சிருங்காரம் - சிலிங்காரம், ஊர்வசி – உருப்பசி, ருக்மணி – உருப்பிணி என வடசொற்களைத் தமிழ்ப்படுத்தி பெரியாழ்வார் கையாள்கிறார்.

திருமழிசையாழ்வார், 'பெற்றி' என்ற சொல்லைத் தமது பாசுரங்களில் 'மார்க்கம்','வழி','வகை', என்ற பொருளில் பயன்படுத்துகிறார்.

"வீடாக்கும் பெற்றி அறியாது மெய்வருத்திக்

கூடாக்கி நின்றுண்டு கொன்றுழல்வீர்" (நா.தி.பி.2393)

மோட்சத்தை அடைய உடல் வருத்தம் தேவையில்லை. தவம் செய்யத் தேவையில்லை. நாராயணனே மெய்ப்பொருள் என்று உணர்ந்தால் போதும். என்ற பொருள் கொண்ட பாசுரத்தில், பெற்றி – மார்க்கம் என்ற பொருளினைக் குறிக்கின்றது. இன்று இவ்வழக்கு நம்மிடை இல்லை.

"வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு

தானுலவு வெங்கதிரும் தண்மதியம்-மேனிலவு

கொண்டல் பெயரும் திசையெட்டும் சூழ்ச்சியும்

அண்டம் திருமால் அகைப்பு" (நா.தி.பி.2418)

என்பதில் திருமழிசையாழ்வார் வானம், நெருப்பு, காற்று, கடல், மலைகள், சூரியன், சந்திரன், மேகங்கள், எட்டுத் திசைகள் இவையெல்லாம் திருமாலின் 'சிரு'டி' என்கிறார். இதில் 'அகைப்பு' என்ற சொல் நாம் இழந்துவிட்ட பல தமிழ்ச்சொற்களுள் ஒன்று. இங்கு 'அகைப்பு' என்பது படைப்பு, சிருஷ்டி, எழுச்சி, மதிப்பு என்ற பொருண்மையில் அமைகின்றது.

மேலும்,'சூழ்ச்சி' என்ற சொல்லைத் தற்போது 'சதி' என்ற பொருளில் பயன்படுத்துகிறோம். ஆனால் அன்றைய நாளில் ஆழ்வார் சூழச்சி என்பது 'சூழ்ந்து' என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார்.

"வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்

உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்" (முதல். திருவந்தாதி)

என்ற பாசுரத்தில் 'ஓர்' என்பது 'நினைத்துப்பார்' என்ற பொருளினைத் தருகின்றது. ஆனால் தமிழில் 'ஓர்' என்ற சொல்லிற்கான பொருளாக எண்ணிக்கையை குறிக்கின்றோம். ஆனால் (ஓர்மை-ஞாபகம்) என்ற பொருளில் இன்றும் மலையாளத்தில் வழங்கி வருகின்றது.

"ஒத்தின் பொருள் முடிவும் இத்தனையே உத்தமன்பேர்

ஏத்தும் திறமறிமின் ஏழைகாள்-ஒத்ததனை'' (இரண்..திருவந்தாதி.)

ஏன்பதில் 'ஒத்து' என்பது வேதத்திற்கான தமிழ்ச்சொல். அது இன்று வழக்கத்திலே இல்லை. 'ஒத்து' என்ற சொல்லை வேதம் பொருளில் திருவள்ளுவரும் குறிப்பிடுகிறார்.

''மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்''. (குறள்.134)

வேதத்தின் அர்த்தமும் முடிவும் இத்தனைதான் அது உத்தமானன் திருமாலின் பெயரை ஏற்றமாகச் சொல்கின்றது. வேதத்தைப் படிக்க முடியாதவர்கள் மாதவன் பேர் சொன்னால் போதும், அதுதான் வேதத்தின் சுருக்கம்! இன்று நாம் 'வேதம்'–'மறை' என்ற சொல்லையே பயன்படுத்தி வருகின்றோம்.

நிறைவுரை:

உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழியில் எத்தனையோ அருந்தமிழ்ச் சொற்களை நாம் மறந்துவிட்டோம். உன்னத மொழியாம் தமிழ்மொழியின் மேன்மையை உலகிற்கு உணர்த்திட தூய தமிழ்ச்சொற்களும், அறிவியல் தமிழ்ச்சொற்களும், புதிய கலைச்சொற்களும் ஆக்கப்படுத்த வேண்டும். அதற்கு அடிச்சுவடாக நமது இறையடியார்கள் பாடிய பாடல்கள் உள்ளன என்பதைத் தெரிந்து தெளிய வேண்டும். மேலும் 'தென் மொழி மறை' என்று போற்றப்படும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களான 'நாலாயிரத் திவ்யப் பிரபந்தப்' பாசுரங்களில் இன்தமிழ்ச் சொற்கள் குவிந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. குறிப்பாக பெரியாழ்வார் பாசுரங்களில் அருந்தமிழ்ச் சொற்களோடு, அக்கால வழக்கில் பயன்படுத்தப்பட்ட வழக்குச் சொற்களையும் அறிய முடிகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பெரியபுராணச் சொற்கள்

பா.கமலினி

முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை ஸ்ரீமத் ஆண்டவன் கலைமற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-5

தமிழ் மொழியின் கண்ணுள்ள இலக்கிய வகைகள், பழங்கதைகளைத் திரட்டி உரிய காரணங்ளைக் கொண்டு முழுமைப்பட்ட நூலாக உள்ளவை புராணங்கள் ஆகும். இப்புராணங்களுள் வடமொழித்தழுவாது தமிழில் தோன்றிய புராணமாகத்திருத்தொண்டர் புராணம் என வழங்கும் பெரிய புராணம் விளங்குகின்றது. இப்புராணத்தின் கண் சேக்கிழார் கையாண்ட சொற்களுள் சிலவற்றின் பொருணயத்தினை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

பெரிய புராணத்திடை உள்ள நாயன்மார் வரலாறுகளுள் காணப்படும் சில சொற்களுள்

1. அதிமதுரக்கனி - பெரியபுராணம் -பா-1740
2. மருள் நீக்கியார் - பெரியபுராணம் -பா 1283
3. மாதினியார், புகழனார் - பெரியபுராணம் -பா 1281, 82
4. பெருவாழ்வு

என்பன சிந்தனைப் பொருளாகின்றன.

1. அதிமதுரக் கனி

அதிமதுரக் கனஎனும் சொல்லாட்சி பெரியபுராணத்தின் கண் காரைக்காலம்மையார் புராணத்துள் இடம்பெறுகின்றது. தனத்தன் இரண்டு மாங்கனிகளைப் பணியாளன வழி இல்லத்திற்கு அனுப்பினான். அவ்விரு கனிகளுள் ஒன்றினை அம்மையார் சிவனடியார்க்கு உணவளிக்கும் பொது, கறியமுது இல்லாமையால் மாம்பழம் ஒன்றினை இட்டார். பரமதத்தன் உணவருந்தும் பொது மாம்பழம் ஒன்றினைச் சுவைத்துப் பின் மற்றொரு கனியையும் கொண்டுவருமாறுச் சொல்ல, புனிதவதியார் இறைவனிடம் வேண்ட இறைவன் அளித்த கனியைச் சேக்கிழார் அதிமதுரக் கனி எனச் சுட்டினார். இறைவன் அளித்த கனியின் சிறப்பினை அதிமதுரம் எனப் பொருள் கொண்டாலும், அதிமதுரம் எனும் மருந்துப் பொருளினை உண்பவரின் வேட்கையைத் (தாகத்தை) தணிக்கும் குணமுடையது அதுபோல தன்தத்தன் புனிதவதியார் மீதுள்ள வேட்கையை நீக்கும் கனி என்றும்பொருளமைப்பில் சேக்கழாரின் சொல்லாட்சிப் பொருள் அறிய வருகின்றது.

மருள் நீக்கியார்

சேக்கிழார் பெரியபுராணத்தின் கண் திருநாவுக்கரசரின் பிள்ளைத்திருநாமத்தினை மருள் நீக்கியார் எனச் சுட்டுகின்றார். இதனை,

அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வரும் இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர் போற்வின்
மலருமரு ணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்

என்ற பாடலில் காணமுடிகின்றது. சூரிய ஒளி புறஇருளை நீக்குவது போல உலக மக்களின் அக இருளை நீக்குபவர் எனும் பொருள்பட மருள்-குற்றம், நீக்குபவர் என்றும் பொருளுடைத்தாகக் காணமுடிகின்றது.

மாதினியார், புகழனார்

திருநாவுக்கரசரின் பெற்றோர் பெயர் மாதினியார் புகழனார் என்பதாகும். இவர்களின் பெயரில் பொருளமைப்பானது நாவுக்கரசரைப் பெற்றமையால் உலகில் சிறந்த தாய் இவர்கள்போல் இல்லை எனும் பொருளில் மாது - இனி - யார், என்றவாறு அமைந்துள்ளது, நாவுக்கரசரைப் பெற்றதால் தந்தைப் புகழுக்கு உரியவராகின்றார் இதனை புகழால் ஆனவர் புகழனார் எனும் பொருளமைப்பில் உள்ள தன்மையையும் சேக்கிழார் எடுத்துக்காட்டும் பொருள் நுட்பத்தினைக் காணமுடிகின்றது.

பெருவாழ்வு

திருநாவுக்கரசர் சைவசமயத்திலிருந்து சமணசமயம் சார்ந்து வாழ்ந்து வருங்கால் இறைவனால் சூலை நோய் அருளப்பெற்று, அதிகாலை தமது தமக்கையான திலவதியாரைச் சந்திக்கின்ற போது திலகவதியார் திருநீறு அளிக்கின்றார். அதனைப்பெற்ற மருள் நீக்கியார் (நாவுக்கரசர்) பெருவாழ்வு வந்து என எண்ணி மகிழ்ந்து பூசிக்கொள்கின்றார். இது நாள் வரை சமணசமயத்தில் வாழ்ந்து துன்புற்று இனி இறையருள்கிட்டியது என எண்ணியதனைக் காட்டுகின்றது. நாமும் திருநீறு பெற்றுப் பூசும் போது இறையருள் கிட்டியடிதனவும் பெருவாழ்வு பெற்றதாகவும் எண்ண வேண்டும் என்ற பொருளைக் காட்டுகின்றது.

முடிவுரை

பெரிய புராணத்தின் கண் உள்ள சொற்கள் யாவும் சிந்தித்து இன்புறத்தக்க பல பொருளுடையதாக விளங்குகின்றன.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

எண்கள்

முனைவர் ப.சண்முகம்,
உதவிப் பேராசிரியர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(த திருச்சிராப்பள்ளி.5

உலகம் முழுவதும் இன்று கணிதம் முழுமையான பயன்பாட்டில் இருந்து வருகின்றது. சிறுவணிகம், குறுவணிகம், பொருளாதாரம், கல்வி, சமூகம், சமுதாய கணக்கீடு, வியாபாரப் பெருக்கம், விஞ்ஞான கண்டுபிடிப்பு, வணிக ஏற்றுமதி, இறக்குமதி, தனியார் தொழில் நிறுவனங்கள், கணிப்பொறி அளவீடு, கட்டுமானத்தொழில், பொறியியல் என்று பெருமளவில் கணிகம் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இத்தகைய கணிதமானது பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழின் பயன்பாட்டில் இருந்துள்ளது என்பதற்கு பல்வேறான இலக்கண, இலக்கியங்கள் நம்மிடையே சான்றாக அமைந்துள்ளன. கணிதப் பயன்பாட்டினை உணர்ந்திருந்த பண்டையக் கால தமிழ் மக்கள் அதன் அளவீடை சரியான முறையில் பகுத்தும், தொகுத்தும், பெருக்கியும், வகுத்தும் பல்வேறான நிலைகளில் எடுத்தாண்டு செம்மையுற ஆட்சி புரிந்துள்ளனர் என்பதை அவர்கள் இயற்றியுள்ள நூற்பாக்களின் வழியே கண்டு அறிய முடிகின்றது.

உலகப் பயன்பாட்டில் எண்ணிக்கையானது மிகவும் அவசியமான ஒன்றாக அமைகின்றது. ஒரு பொருளை கணக்கிடுவதற்கு எண்கள் முக்கிய காரணியாக அமைகின்றது. எண்களால் ஏற்படுகின்ற நன்மையினை பழந்தமிழர்கள் அறிந்து வைத்திருந்தனர் என்பதற்கு சான்றாக,

“அ, இ, உ, எ, ஒ, எனனும் அப்பால் ஐந்தும்” (தொல்.3)

“ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஔ வெனும் அப்பால் ஏழும்” (தொல்.4)

“பன்னீரெழுத்தும் உயிரென மொழிப” (தொல்.8)

“பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப” (தொல்.9)

என்ற தொல்காப்பிய நூற்பாக்களின் வாயிலாக தமிழ் எழுத்துக்களில் கொண்டிருந்த எண்ணிக்கையின் அளவினை அறிய முடிகின்றது. ஐந்து, ஏழு, பன்னிரண்டு, பதினெட்டு என்று ஏறுமுக அடிப்படையில் எண்களுடைய எண்ணிக்கையின் அளவானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் கணிதத்தினுடைய பயன்பாடு பெருமளவில் இருந்துள்ளது என்பதை இதன் வழி அறிய முற்படுகின்றது.

பெருக்கல்

எண்ணினுடைய பயன்பாட்டின் காரணமாக ஒரு எண்ணோடு மற்றொரு எண்ணை பெருக்கும் பொழுது அதனுடைய மதிப்பானது இருமடங்கு உயர்ந்து நிற்கும் என்ற கோட்பாட்டினை உலகம் அறிந்ததே.

அத்தகைய மதிப்பீட்டால் இன்றைய உலகளாவிய வர்த்தக மையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சிறப்புடைய பெருக்களின் பயன்பாட்டை அறிந்திருந்த நம் முன்னோர்களின் வைரப் பெட்டகங்களாகத் திகழ்கின்ற செந்தமிழ் இலக்கணங்களில் குறிப்பிட்துள்ளனர். இதனை,

"உயிர் ராறே! மெம்மூ வாறே:
அம்மூ வாறும் உயிரொ டுயிர்ப்ப
இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே" (பல்காயம்)

என்று பெருக்கலின் கோட்பாடுகளை பழந்தமிழர்கள் பயன்பாட்டில் கொண்டிருந்ததை இதன் வழி அறிய முடிகின்றது.

கூட்டல்

உயிர்மேல் உயிர்வந்து ஒன்றுவது என்பது முன்னோரின் கூற்றாகும். அதற்கேற்ப பொருட்களின் அளவு முறைகளை கணக்கிடுவதற்காக பழந்தமிழர்கள் கூட்டு எண்ணிக்கையைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை தொல்காப்பியர்,

"பத்தன் ஒற்றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்தது என்ப இரண்டுவரு காலை" (தொல்.நூ.435)

என்று பத்து என்னும் எண்ணின் முன் இரண்டு என்னும் எண்ணுப்பெயர் வந்து புணரும். அவ்விடத்து நிலைமொழியின் இறுதி எழுத்து உகரத்தொடும் கெடும். இடைநிற்கும் தகர ஒற்றுக் கெட அவ்விடத்தில் னகர ஒற்று இரட்டித்து நிற்கும். பத்து ñ இரண்டு ® பன்னிரண்டு என்று புணர்ந்து நிற்கும்.

பத்தொடு ஆயிரம் புணர்தல்

கூட்டு எண்ணிக்கையானது உயர்ந்து செல்லுகின்ற நேரத்தில் அதனுடைய எண்ணிக்கைகள் பத்து, இருபது, முப்பது என்று தன் நிலையை அதிகப்படுத்திக் கொண்டே செல்லும். அவ்வேளையில் நூறு, ஆயிரம் என குறள் வடிவமாய் இருந்து பேருருவமாய் தன் நிலையிலிருந்து மாற்றம் பெற்று உயர்ந்து கொண்டே வரும். அவ்வாறு எண்கள் புணரும் முறையைத் தொல்காப்பியர்,

"ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது" (தொல்.நூ.436)

பத்தொடு ஆயிரம் புணர்ந்து பத்தாயிரம் என்று இக்காலச் சூழலுக்கேற்ப வழங்கி வருவதை தொல்காப்பியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறியிருப்பது வியக்கத்தக்க ஒன்றாக அமைந்து இருப்பதை இந்நூற்பா வழி அறிய முடிகின்றது.

இது மட்டுமின்றி தொல்காப்பியர் எண்கள் புணர்வதற்குரிய விதிகளை தம் நூற்பாக்களின் வழி காட்டுவதைக் காணமுடிகின்றது.

"ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்" (தொல்.நூ.468)

(எ.கா) ஐந்து ñ ஆயிரம் ® ஐயாயிரம்

" நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்" (தொல்.நூ.467)

(எ.கா) நான்கு ñ ஆயிரம் ® நாலாயிரம்

"மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்" (தொல்.நூ.465)

(எ.கா) மூன்று ñ ஆயிரம் ® மூவ்வாயிரம்

"நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா" (தொல்.நூ.462)

(எ.கா) ஐந்து ñ நூறு ® ஐந்நூறு

"மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும்" (தொல்.நூ.461)

(எ.கா) மூன்று ñ நூறு ® மூந்நூறு

"நூறுமுன் வரினும் கூறிய இயல்பே" (தொல்.நூ.461)

(எ.கா) ஒன்று ñ நூறு ® ஒருநூறு

இரண்டு ñ நூறு ® இருநூறு

இவ்வாறு எண்கள் புணரும் இயல்பினையும் அதனுடைய பயன்பாட்டினையும் முறையறிந்து செயல்பாடுகளினால் உண்டாகின்ற விந்தையான கணிதக் கூறுகளை இதன் வழி கண்டு அறியமுற்படுகின்றது. எண்கள் தருகின்ற உயர்ந்த மதிப்பினையும் அதனால் உருவாகின்ற வளத்தையும் இதன் வழி காணமுடிகின்றது.

முடிவுரை

இக்காலப் பயன்பாட்டில் எண்களுடைய பயன்பாடானது மிகவும் அவசியமானதாகவும் உலகத்தின் இதயத்துடிப்பாகவும் இருந்து வருகின்றது. எண்களின் பயன்பாட்டிற்கு நம் முன்னோர்கள் வகுத்த கோட்பாடுகளே அடிப்படைக் காரணிகளாக அமைந்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

நாட்டுப்புறவியலில் நம்பிக்கையும் சகுனமும

பெ.சிவராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருச்சி-05.

நாட்டுப்புறவியல் என்பது அறிந்தோ, அறியாமலோ நம்பிக்கைள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். மக்களின் சமுதாயம் ஓர் ஆலமரம் என்றால் அதன் ஆணிவேர் நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் சடங்குகள் அதன் விழுதுகளாகும். ஓரினத்தின் பண்பாட்டையும், பழமையையும் அவர்தம் நம்பிக்கைகள் தோன்றின என்று திட்டவட்டமாக கூற முடியாத நிலையில் மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையும் இரண்டற கலந்துவிட்டன. மனித இனம் தோன்றிய காலம் முதற்கொண்டே நாட்டுப்புற வழக்காறுகளாகிய பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், நாட்டார் மருத்துவமுறை சடங்குகளும் தோன்றி மனித சமுதாயத்தினால் காலந்தோறும் போற்றி பாதுகாக்கப்பட்டு இன்றுவரை அதன் பழமைத் தன்மையை முற்றிலும் இழந்துவிடாமல் நிலையான இடத்தைப் பெற்று வாழ்ந்து வருவதுடன், கல்விப் புலத்தில் தனக்கென்று தனித்துறையினையும், அறிவியல் சார்ந்த மேலை நாட்டு ஆய்வுமுறைகளையும், கொண்டு நாட்டுப்புறவியல் என்ற பெயருடன் திகழும் இத்துறையின் வாயிலாக பல்வேறு நிகழ்வுகள் கொண்டிருக்கின்றன.

இச்சிறப்பு மிக்க நாட்டுப்புறவியலில் நாம் இங்கே காணப்போவது, “சொல்லும்-பொருளும்” பகுதிக்காக “நம்பிக்கை-சகுனம் இந்த இரண்டு சொற்களுக்குரிய பொருளைத்தான் இராசேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப் புறவியலின் முதல் அங்கமான “நம்பிக்கைகளே“ இங்கு நம் ஆய்விற்காக எடுக்கப்பட்ட முதல் சொல்லாகும். முதலே முடிவு என்பது போல், இச்சொல் முதலாவதாக அமைந்துள்ளது.

நம்பிக்கை சொற்பொருள் விளக்கம்:

நம்பிக்கை என்ற சொல்லிற்கு “விசுவாசம் ஆணை, நம்பியொப்புவிக்கப்பட்டது. “உண்மை” என்றும் சத்தியம். நசம், உறுதிப்பாடு போன்ற பல்வேறு பொருள்களை தருகிறது மதுரை தமிழ் பேரகராதி. தொல்காப்பியத்தில் “நம்பும் மேவும் நசையாகும்மே” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியர் நம்பு என்ற சொல்லினை “நசை (அ) விருப்பம்” என்ற பொருளில் கையாண்டுள்ளார். நம்பு என்பதற்கு

"விருப்பம், ஆவல், ஆசை, என்றும் அருச்சகம், நம்பென்னவல் என்று அகராதிகள் பொருள் தருகின்றன. நற்றிணையில் நம்பு என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளில் பயின்று வந்துள்ளது.

"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்
கடவன் போல நோக்கும்"

மற்றொரு பாடலில் நம்புதல் என்ற சொல்லாட்சியும் இடம் பெற்றுள்ளது.

"நாடல் சான்றோர் நம்புதல் பழியெனிற்
பாடில கலுழுங் கண்ணொடு சாஅய்ச்
சாதலும் இனிதே காதலந் தோழி"

மேற்கண்ட சான்றுகளில் இருந்து நம்பு என்ற சொல் தொடக்கத்தில் விருப்பம் என்ற பொருளிலும், பின்னர் நம்பிக்கை என்ற பொருளிலும் கையாளப்பட்டு வருவதை அறியாலாம். காலப் போக்கில் இச்சொல் நம்பிக்கையை மட்டும் குறிப்பதற்கு பயன்பட்டு வந்துள்ளதனை இன்றைய நடைமுறை வழக்காறுகளை கொண்டு அறியலாம்.

'FAITH' , 'BELIEF' என்ற இரண்டு ஆங்கில சொற்களுக்கும் தமிழில் நம்பிக்கை என்ற ஒரே பொருள் உள்ளதாக ஆங்கில அகராதிகள் உணர்த்துகின்றன. 'FAITH" என்ற சொல் பெரும்பாலும் சமயம் சார்ந்த நம்பிக்கைகள் மட்டும் குறிப்பதாலும், 'BELIEF' என்ற சொல் ஏனைய சமூக வாழ்வியல் நம்பிக்கைகளையும் குறிப்பிடுகின்றன. நம்பிக்கை என்ற சொல்லிற்கு அமெரிக்க கலைக் களஞ்சியம் தரும் விளக்கங்களில் "ஒரு பிரச்னையின் மூலமாகத் தெரிந்து கொள்ளும் உண்மையை விரும்பி ஏற்றுக்கொள்ளுதலே பொதுவாக நம்பிக்கை எனப்படும். ஆனால் நுட்பமாகவும், சமயரீதியாகவும் பார்க்கும்போது ஒரு மனிதனின் மனத்திண்மையும், விருப்பத்தையும் பொறுத்தே இது அமைகின்றது என்பது நம்பிக்கை என்ற சொல்லிற்கு நல்லதொரு விளக்கமாக அமைந்துள்ளது.

சகுனம் என்ற சொல்லின் பொருள்:

சகுனம் என்ற சொல்லிற்கு உரிய ஆங்கிலச் சொல் (OMEN) என்பது இவ்வாங்கிலச் சொல் மேனாட்டுகளிலும். சகுனம் பார்க்கும் வழக்கம் இருந்திருக்கிறது என்பதைக் காட்டும். சகுனம் என்ற சொல் "நிமித்தம்" , " பார்த்தல்" , விரிச்சி, கேட்டல் என்று சொல்லப்படும். நிமித்தம் என்ற சொல்லுக்கு தமிழ்ப் பேரகராதி காரணம், நிமித்தம், சகுனம், அடையாளம். பொருட்டு என்ற ஐந்து பொருள்களை சுட்டுகிறது.

நிமித்தம்- நிமித்தங்கள் நம்பிக்கையின் பாற்பட்டன. இயற்கை நிகழ்வுகளுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்பு உண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் அவை நம்பப்படுகின்றன. நிமித்தங்கள் அச்சத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம் என்பர்.

நிமித்தங்களின் ஐந்து நிலை:

நிமித்தக் கூறுகள் பெரும்பாலும் ஐந்து நிலைகளில் வெளிப்படுவதாக ஆங்கிலக் கலைக் களஞ்சியம் கூறுகிறது.அவை,

1, வானத்தில் ஏற்படும் மாற்றங்களான இடி மின்னல் மற்றும் விண்மீன்கள் வாயிலாக வெளிப்படுதல்

2, பறவை நிமித்தங்கள் -பெரும்பாலும் பறவைகள் பறக்கும் திசைகள் மற்றும் அவற்றின் ஒலிகளின் அடிப்படையில் நிச்சயித்தல் .

3, மிருகங்கள் மற்றும் வாலுள்ள ஊர்வனவற்றின் ஒசைகளிலிருந்து நன்மை தீமைகளை நிச்சயித்தல்

4, இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் நிகழ்தல் அவை பெரும்பாலும் ஊறுவிளைவிக்கக் கூடிய அறிகுறிகளாக தென்படுதல்

5, பறவைகளுக்குத் தீனிபோடும் நிலையில் அவை தீனியைப் பெறும் தன்மைகொண்டு "நன்மை தீமைகளை நிச்சயித்தல்" என ஐந்து வகையாகப் பகுத்து கூறுவர்.

விரிச்சி:

இ ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர், பிறர்கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பண்டு தொட்டே நம்மிடையே நிலவுகின்றது. இதனைப் பண்டைத் தமிழ் மக்கள் "விரிச்சி" எனச் சுட்டியுள்ளனர். விரிச்சி என்பது வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பதாகும் என்பர். மேலும் விரிச்சி என்பது நற்சொல் அல்லது வாய்ச்சொல் என்பார்கள். நல்ல சகுனங்களில் ஒன்று நாம் எதையாவது எதிர்பார்க்கும் போது சம்மந்தமில்லாதவர் யாரிடமோ பேசும் பேச்சில் நமக்கு இணக்கமான சொல் வந்தால், அதை அசிரீரி வாக்கு என்று இப்போது சொல்கிறார்கள் அதுவே விரிச்சி என்று கூறுகிறார் கி.வா.ஜகந்நாதன்.

லக்கியங்களில் விரிச்சி:

தொல்காப்பியத்தில் போரைப்பற்றிக் கூறும் புறத்திணைப் பகுதியில் "ஓர் அரசன் தன்பகை அரசனுடைய நாட்டிலே புகுந்து அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வரச்செல்லும் பொழுது "நல்வாய்ப்புள்" என்ற சகுனம் பார்த்து செல்வான் என்றும், தன் நாட்டிலிருந்து ஓட்டிச் செல்லப்பட்ட பசுக்களை மீட்க கடமை கொண்ட அரசன் போருக்குப் புறப்படும் பொழுது, வழிச்செல்வோரது "நற்சொல்" கேட்டுப் புறப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது.

முடிவுரை:

இவ்வாறு பைந்தமிழில் உள்ள எண்ணற்ற சொற்களுக்கு பொருள் காணலாம். இந்த சொல்-பொருள் ஆய்வு ஓர் பரந்துபட்ட கடலைப்போன்றது. அங்ஙனம் ஒவ்வொரு சொல்லுக்கும் நாம் உரியப் பொருள் காண விழைந்தால் அது நம்மை வியப்பின் உச்சிக்கே இழுத்து செல்லும். நாட்டார் வழக்கியல் மருத்துவத்தில் முதல் அங்கமான நம்பிக்கை என்ற சொல்லிற்கும், சகுனம் என்ற சொல்லிற்குமான பொருள் விளக்கத்தினை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தமிழில் உள்ள மரபுத் தொடர்கள், ஒரெழுத்து ஒரு மொழி, அடுக்குத் தொடர்கள், இரட்டை கிளவி என ஒவ்வொன்றாக நாம் ஆய்வு செய்து அதற்கான பொருளை எழுத முடியும். இருப்பினும் அதில் ஓர் பகுதியான நாட்டுப்புறவியலின் அங்கமான "நாட்டார் மருத்துவத்தில்" பயன்படுத்தப்படும் இவ்விரு சொற்களை மட்டும் எடுத்துக்கொண்டு அதற்கான பொருளை பற்றி விளக்கப்பட்டுள்ளது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருமுறைச் சொல்லும் பொருளும

ஆர்.பூமதி

முனைவர்பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலைமற்றும அறிவியல் கல்லூரி, திருச்சி-5

தமிழ் நூல்களுள் அமைந்துள்ள கருத்துக்களுள், சமயக் கருத்துக்களை முதன்மையாக எடுத்துக்காட்டுபவை சமய இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. சமய இலக்கியங்களுள் சைவ சமயத்தின் சிறப்புகளை எடுத்துக்காட்டும் நூல்களுள் பன்னிரு திருமுறைகள் முதன்மையானவையாகும். இந்நூல்களுள் காணப்படும் சொற்கள் சிலவற்றின் பொருளை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

பன்னிரு திருமுறைகளுள் காணப்படும் சொற்கள் பலவற்றுள் சில சொற்கள் இங்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஆவை

1. ஏடங்கை நங்கை
2. இண்டை
3. உண்ணும்முன்
4. எட்டாம் திசைக்கும் இரு திசைக்கும் என்பனவாகும்.

ஏடங்கை நங்கை

இச்சொல்லானது பத்தாம் திருமுறையான திருமந்திரத்துள் இடம்பெறுகின்றது.

ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி

வேடம் படிகம விரும்பும் வெண்தாமரை

பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்

சூடுமின் சென்னி வாய்த் தோத்திரம் சொல்லுமே

ஏன்பது திருமந்திரப் பாடலாகும். இப்பாடலுள் சுவடியை (நூல்) உள்ளங்கைலே வைத்திருக்கும் சரசுவதி எனும் பொருளில் ஏடு – சுவடி, அங்கை – உள்ளங்கை, நங்கை-சரசுவதி என்றவாறு அமைத்ததொடு பாடலில் கலைமகளின் வெண்நிறம் படிகம் போலவும் தாமரை மலரை விரும்பு உரைவதாகவும் காட்டுவது சிறப்பாக உள்ளது. இங்கு திருமகளை மலர்மங்கை என்பதற்கு இணையாக கலைமகளை ஏடங்கை நங்கை எனச் சுட்டியதாகவும் ஒப்பிட்டு சொற்பொருளை எண்ணலாம்.

இண்டை

இண்டை எனும் சொல்லாட்சி திருமுறையுள் பல இடங்களில் இடம்பெறும் மலர் இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம், (சம் - தேவாரம்,) இண்டை மாலை (பெரிய புராணம்) என்பன சான்றாகும். இண்டை என்பது மலர்களைத் தொகுத்து மாலையாக்கும் போது மாலையுள் தலைக்கு அணிவிக்கும் மாலைக்கு இண்டை என்பது பெயராகும். மாலைகள் தொடையில், பிணையல், தார், தொங்கல் என்ற வகைகளாகவும் அமைப்பர். இப்போது மாலை என்ற பொதுப்பெயரால் அனைத்தும் வழங்கப்படுகின்றது. இண்டைமாலை சில ஊர்களில் கொண்டை மாலை என மருவில் வழங்கப்படுகின்றது.

ஊண்ணும் முன்

திருநாவுக்கரசரின் ஆறாம்திருமுறையுள் உண்ணும் முன் என்ற சொல்லமைப்பு பாடலுள் காணப்படுகின்றது.

ஊண்ணும் முன் மலர்பறித்திட்டு உண்ணார் ஆகில்

என்பது தேவார அடி ஆகும்.

உண்ணும் முன் என்ற சொல்லாட்சி பாடலடியுள்ள அமையும் போது இரண்டு பொருட்களைத் தருகின்றது. 1. இறைவனது வழிபாட்டிற்கு உரிய மலரை, வண்டுகள் மலரில் அமர்ந்து தேன் உன்பதற்குமுன் கொய்து இறைவனை வழிபட வேண்டும் என்ற ஒரு பொருளும், 2. இறைவனை மலரிட்டு வழிபாடு செய்யும் மனிதன், தான் உணவு ஏதும் உண்ணாது விரதமாக இறைவனை மலரிட்டு வழிபாடு செய்திட வேண்டும் என்பதும் ஆகிய இரு பொருட்களைத் தருவதாய சிறப்புக் காணப்படுகின்றது.

திசை

இறைவன் எல்லா இடங்களிலும் இருந்து கொண்டு மக்களை, உயிர்களைக் காப்பாற்றுகின்றான். இவ்விறைவன் எல்லா இடங்கனிலும் வெளிப்பட்டு அருளுவதனை,

எட்டாம் திசைக்கும், இருதிசைக்கும் இறைவா முறை என்று

-திருவாரூர்பதிகம், அப்பர்

என்ற தேவார அடி காட்டுகின்றது. இங்கு எட்டாம் திசை நான்கு திசை, நான்கு கோணதிசை ஆகிய எட்டையும் இருதிசை என்பது மேல், கீழ் ஆகியனவற்றையும் சுட்டி ஆக பத்து திசைகளையும் சுட்டுகின்றது. இங்கு திசை என்பதுள் மேல், கீழ் என்னும் பகுதிகளை திசைகளாக் கொள்வதில்லை மேல்உலகம், கீழ் உலகம் என்பது வழக்கு ஆகையால் நாவுக்கரசர் திசைகளை எட்டாம் திசை, இருதிசை எனப் பிரித்துக் காட்டுகின்ற பொருளை அறிய முடிகின்றது.

முடிவுரை:

பன்னிரு திருமுறையுள்ளும் பல வகைான சிறப்புடைய சொற்கள் நிறைந்த பல பொருள்களை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தாடகையீச்சரம்

சு.சதீஷ்'

முனைவர்பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலைக்கல்லூரி, திருச்சி

தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்வோடு ஒன்றி, மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டுவனவாய் விளங்குகின்றன. இத்தகைய இலக்கியங்களுள காணப்படும் சொற்கள் நீண்ட புராணச் செயதியை சுருங்கச் காட்டி பழமையை மக்கள் சமுதாயம் அறிந்து தெளிவு பெற்றிட வழிசெய்கின்றன. ஆத்தகையச் சொற்களுள் தாடகையீச்சரம் எனும் சொல்லின் பொருள் விளக்கத்தினை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

தாடகையீச்சரம் எனும் சொல்லாட்சி

தாடகையீச்சரம் எனும் சொல்லாட்சியாளது திருஞானசம்பந்தரின் தேவாத்துள், சோழநாட்டின்.தலமாக விளங்கும் திருப்பனந்தாள் பதிகத்துள் அனைத்து பாடல்களிலும் காணப்படுகின்றது.

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே.

என்பது தேவாரப் பதிகத்தின் முதற் பாடலாகும்.

தாடகையும் திருப்பனந்தாளும்

தாடகை எனும் பெயருடைய பெண் அரக்கர் இனத்தவளாவாள் இவள் பிள்ளை பேறு வாய்க்கப் பெறாதவளாய் மனத்துன்பங்கொண்டு, பிரமனை நோக்கித் தவம் மெற்கொண்டாள். பிரமன் தாடகை முன் தோன்றி, பிள்ளைப்பேறு வேண்டும் நீ, தாலவனத்தில் உள்ள இறைவனை வழிபாடுசெய் என வழகாட்டினாள். தாடகையும் பிரமன் சொன்ன அறிவுரையை ஏற்றுத் தாலவனத்தில் இறைவனை மன வாக்கு காயத்தூய்மையுடன் ஒருமித்து வர்ழிபாடு செய்தாள். வுழக்கம் போல் ஒரு நாள் தாடகை இறைவனை வழிபாடு செய்யுங்கால் தாடகையின் அன்பினை, வழிபாட்டு முறையை உலகோர் அறிந்திட எண்ணங் கொண்ட இறைவன், தாடகை இறைவனை திருமேனிக்கு மலர் மாலை அணிவிக்கும் போது காற்று வீச, தாடகையின் மேலாடை நெகிழ்ந்தது, தாடகை மாலையைக் கீழே வைத்து விட்டு ஆடையைப் பிடித்தால் குற்றமாகும் என எண்ணி தனது கைகளாள் ஆடையை இடுக்கிக் கொண்டு, ஆடையை விடவும் முடியாமல், இறைவனுக்கு மாலையை அணிவிக்கவும முடியாமல் துன்புற்றாள். இறைவன் தாடகையின் வழிபாட்டின் ஒருமித்த தன்மைக்காகத் தான் குனிந்து தாடகையின் மாலையை ஏற்றான். தாடகை இறைவனிடம் தான் இடற்பாடின்றி பதினாறு

கரங்களால ஒருசேர பதினாறு உபசாரங்களுடன் வழிபட வரமும் தான் எண்ணிய வரமும் பெற்று மகிழ்ந்தாள். தாடகையின் அன்பிற்குக் குனிந்த இறைவனது உருவம் சாய்ந்தபடியே நின்றது. தாடகை வழிபாடு செய்தமையைத் திருப்பனந்தாள் தலபுராணம் தாடகை வழிபாட்டுச்சருக்கம் எனும் பகுதியில் எடுத்துக் காட்டுகின்றது.

பனந்தாளும் கலயரும்

தாடகையின் அன்பிற்குக் குனிந்த இறைவன் திருவுரு சாய்ந்த நிலையிலேயே நின்றமை கண்ட மன்னன் நாட்டின் நலன்கருதி இலிங்கத் திருமேனியை நேர்செய்ய வேண்ட யானை, குதியை முதலிய பரிசனங்களைக் கொண்டு கயிற்றால்கட்டி திருமேனியை இழுத்தான். பல்லாற்றானும் முயன்றும் இறைத்திருமேனி நேர்நிற்கவில்லை, மன்னனின் இச்செயலைத் திருக்கடவூரில் வாழும் கலயர் என்பார் கேள்வியுற்றுத் தாமும் அப்பணியில் ஈடுபட திருப்பனந்தாள் வந்தார். மன்னன் இறைத்திருமேனியை நிமிர்க்கும் நிலை கண்டு வருந்தி, அங்குள்ளோரை விலகட்செய்து, தாம் இறைவன் திருமேனியில் பூவாலான கயிரையும் தமதுக் கழுத்தில தாம்புக் கயிரையும் கொண்டு பிணைத்தார். இறைதிருமேனயை இழுத்தார். இறைவன் கலயரின் அன்பினைக் கண்டு நேர் நின்றார். கலயரின் இச்செயலைப் பெரியபுராணம், தலபுராணம் ஆகிய நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கலயரின் செயலில் இறைவன் நேர்நில்லாவிடில் உயிர் பிரியும் என்ற கருத்தமைபானது கலயரின் அன்பினை வெளிப்படுத்துகின்றது.தாடகையின அன்பிற்குக் குனிந்த இறைவன் கலயரின் அன்பிற்கு நிமிர்ந்தான்.

தாடகையீச்சரம்

திருப்பனந்தாள் எனும் தலம் பனைமரங்கள் மிகுந்த பகுதியாதலால் தாலவனம் எனப்பட்டது. திருவாகிய இறைவன் எழுந்தருளியுள்ளமையால் திரு எனும் சொல்புணர்த்து திருப்பனந்தாள் எனப்பட்டது. பூசைசெய்தமையால் தாடகையின் பெயரால் இறைவன் எழுந்தருளியுள்ள இடம் தாடகையீச்சரம் எனப்பட்டது. சோழேச்சரம், குணபவீச்சரம், கணபதிச்சரம் போன்ற சொற்பொருளோடு ஒப்புநொக்குக.

நிறைவுரை

தாடகையீச்சரம் எனும் சொல்லாட்சியினை மேலோட்டமாக தாடகை வழிபட்டத்தலம் என்று கூறும்போது பெரும்பான்மையோர் இராமாயணத்தில் இடம்பெறும் பாத்திரமான தாடகை என எண்ணுவர். இத்தலபுராணத்தில் இடம்பெறும் தாடகை வேறு. பெயர் ஒற்றுமையே தவிர, பொருள், புராணச் செய்திகள் வேறுபாடுகள் இக்கட்டுரைத் தனித்து எடுத்துக்காட்டியுள்ளது. தூடகை ஈசனை வழிபட்டமையால் தாடகையீச்சரம் என்பது ஆலயத்திற்கு ஆகுபெயராகி நின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பித்தன் - இருவகை விளக்கம்

முனைவர். சிவ. நடராஜன்,

உதவிப்பேராசிரியர், ஆய்வர் ரு ஆய்வுநெறியாளர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-5

தண்தமிழ் இலக்கண இலக்கியங்களிடையே அருளாளர்கள் புலவர்கள் முன்னோர் மொழியைப் பொன்னே போலே போற்றி தாம் அறிந்த, அனுபவித்துணர்ந்த பொருளை ஏற்புழி அறிந்திதற் கிவ்வகையாமெனத் வகையில் விளக்கியுள்ளமையை ஆற்றொழுக்காகக் காணலாம்.

வண்தமிழப் புலர்கள் நிரலில், சைவசமய நெறியைப் பின்பற்றி நிகரில்லாது வாழ்ந்தவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆவார். இவர் தமது கவிகளிடையும் காவியங்களிடையும் சைவசமயக் கருவூலமாகத் திகழும் திருமுறைகளின் சொற்பொருள் பதிவுகள் பரவலாகக் காணப்படுகின்றன. இவரின் நூல்களுள் திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை என்பதும் ஒன்றாகும். இம்மாலையில் இறைவன் திருவாய் மலர்தருளிய பித்தன் எனும் சொல்லுக்கு இருவகையாக விளக்கம் காட்டியுள்ளார்.

பித்தன் எனும் சொல்லாட்சி

பித்தன் எனும் சொல்லாட்சியானது நாலடிநானூறிலும் (பா – 52, 34) பன்னிருதிருமுறையுள் சுந்தரர் இறைவனைச் சுட்டும் முன் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரும். நாவுக்கரசரும் இறைவனைப் பரவிய பதிகத்துள் பித்தன் எனும் சொல்லாட்சியை யாண்டுள்ளனர்.

பெண் ஆண் அலியாகும் பித்தா பிறைசூடி

..சம்.தேவா. எருக்கத்தம் புலியூர்-பா- 3

பிறவாதும் இறவாதும் பெருகினானைப் பேய் பாட நடமாடும் பித்தன் தன்னை.

...அப்பர். தேவா. திருநாரையூர் தாண்டகம்- பா. 6

என்பது தேவாரப்பாடலடிகளாகும்.

பித்தன் - சுந்தரர் சுட்டும் பொருள

இறைவன், சுந்தரரை ஆட்கொள்ள தண்டொருகை கொண்டு கழல் தள்ளுநடை கொள்ள வந்து என் அடியான் இந்நாவல் நகர் ஊரான் எனக் கூறக்கேட்ட சுந்ததர், ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கடிமை ஆதல் இன்றுனைக்கேட்டோம் பித்தனோ மறையோன் எனப் பகர்ந்தார். இங்கு சுந்தரர், அறவழியை அறிந்தும் முரண்பாடகப் பேசியமையால் மனோநிலை சரியற்றவர் எனும் பொருள்படச் சுட்டியுரைத்தார். பின்னர் இறைவன் எனத்தெளிந்த பின், இறைவனின் கருணைத்தன்மையினை முன்னர் மொழிந்தச் சொல்லுடன் பிறைசூடி (பித்தா பிறைசூடி)எனப்புணர்ந்து, நீண்ட புராணச் செய்தியினை ஆவணமாகக் காட்டிப் பொருங்கருணையாளன் எனப் பொருள் விரித்துள்ளார்.

நிறைமொழிமாந்தராம் அருளாளர்களின் சொற்பொருளை மரபுநிலை திரியாது மகாவித்துவான் ஆண்டமையை முதலில்,

அளவறு பிழைகள் பொருத்தரு ணின்னை
யணியுருப் பாதியில் வைத்தான்
தளரபிழை மூன்றே பொறுப்பவடன்னைச்
சடைமுடி வைத்தன னதனாற்
பிளவியன் மதியஞ் சூடிய பெருமான்
பித்தனென் றொருபெயர் பெற்றான்
களமர் மொய் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே

என்பது மாலையில் ஏழாவது மலராகும்.

இம்மலருள், சிவபெருமான் மூன்று குற்றங்கள் மட்டுமே பொறுக்கும் அம்பிகையை (கங்கை) சடையில் கொண்டுள்ளான். இங்கு உலக வழக்குப் படி அளவில்லாத குற்றங்களைப் பொறுக்கும் கங்கையை, பராசக்திக்கு அடுத்த இடத்திலும் வைக்க வேண்டும் இதற்கு மாறாக சிவன் பாகீரதியையும், பராசக்தியையும் கொண்டுள்ளதால் பித்தன் எனப்பட்டான் என மலரும் விளக்கிய மணம் நுகர முடிகின்றது.

அடுத்து,

சடை யெனம் வனத்து வாழ்த்து வாழ்தருங் கங்கை

தனித்துறை வாள்கொலென் றெண்ணி

விடைமிசைப் பெருமானவளுயிர் வாழ்வான்

மிலைந்தனன் கொன்றையாங் கன்னப்

கடையுறா வளமை மலி திரு வானைக்

காவகி லாண்டநா யகியே

என்பது மாலையில் உள்ள முப்பத்தியாறாம் மலராகும். இம்மலருள், கங்கையானவள் சிவனின் சடாடவியல் தனித்து வாழ்வதனால், அவளின் உயிராக உடன் வாழ்கின்றான். ஆகவே பித்தன் என்று எண்ணுவது பிழையே.இங்கு இறைவன் உயிருக்கு உயிராக விளங்கும் தத்துவத் தன்மையை அறிந்தோர் பித்தன் என்று எண்ணார் என தன்முககமாக தன்முகாக மலர் மணம் காட்டுகின்றார்.

மேலும்,

ஆண்டகோ டிகளென் றுரைத்திடுஞ் சிற்றி லமைத்தமைந் தாடிடு வாய் நீ

துண்டவான் மதியஞ் சூடிய சடிலச் சுந்தர னழித்தழித் தாடும்

பிண்ட நூலென்றும் பேதை நீ யனையான் பித்த னென் றுரைப்பது மெய்யே

கண்டவா மொழியார் பயிறிரு வானைக் காவிகி லாண்ட நாயகியே.

என்பது மாலையில் உள்ள எண்பத்தோறாம் மலராகும். இம்மலரோடு தெய்வக் கவிஞரின்

சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச்

சுவர்க்கரி னிறுத்திமேருத்

தூணொன்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு

சுடர்விளக் கிட்டுமுற்ற

ஏற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கலம்

எடுத்தடுக் கிப்புதுக்கூழ்

இன்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை

இழைத்திட வழித்தழித்தோர்

முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்

முன்னின்று தொந்தமிடவும்

முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய

முதண்ட கூடமுடும்

சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை

செங்கீரை யாடியருளே.

என்ற பாடலின் கருத்தும் ஈண்டு ஒப்புநோக்க தக்கது.

இம்மலருள், பித்தன் என்ற சொல்லை சமயத்தத்துவப் பொருளை அறிந்துணர்ந்தோர் உலகியல் நிலையில் பொருள் கொண்டு எண்ணார் என மணம் வீசக் காட்டுகின்றார்.

இம்மூன்று பாடல்களுள், முதற்பாடலில் பித்தன் எனும் பெயருக்கு உலக வழக்கில் விளக்கம் காட்டினார். அடுத்து தன்னை முன்னிலைப்படுத்தி பித்தன் என்று எண்ணுதல் பிழையே, யான் பித்தன் என்று உரைப்பது மெய்யே கண்டவா மொழியார் என்று அருளியல் நிலையில் விளக்கம் காட்டியுள்ளார். மேலும் பித்தன் எனும் சொல்லாட்சிக்கு உலகியல், அருளியல் என்ற நிலைகளில் மகாவித்துவான் அவர்கள் விளக்கிய தன்மையானது, ஊரன், மையல் மானுடமாய் மயங்கும் வழியில் அரன் மறையவனாய் தடுத்தாண்டு அருள்செய்யுங்கால் பித்தனோ மறையோன் எனப்பேசிய உலகியல் தன்மையும் இறைவன் என உணர்ந்து வன்தொண்டன் மெய்த்தாயினும் இனியானை பித்தா பிறை கூடி எனப் போற்றிப் பரவிய அருளியல் தன்மையும் பெரியபுராண அமைப்பினையொட்டி அமைத்துக் காட்டியுள்ளதன் வழி மாலையிடை மலரில் மணம் அமைத்துள்ள நிரல் முறை சமய வரலாற்று மரபினைப் போற்றிய தன்மையைக் காட்டுகின்றது. பித்தன் என்னும் சொல்லாட்சி மாலையிடையுள்ள 67, 89, 94 ஆகியநிரலுள்ள மலர்களிலும் காணப்படுகின்றதாயினும் மேற்காண் மலர்களுக்குள் ஒருவகை பொருள் விளக்கவொற்றுமை கூடிநிற்பதனைக் காணமுடிகின்றது. மேலும் மகாவித்துவானின் ஆழ்ந்த கவியுள்ளத்தினைக்கான இயலாததாயினும் அறிஞர் ஓர்த்து உணர வேண்டுகின்றேன்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

வாழ்வியல் பயன்பாட்டுப் பொருட்கள்

தி. சாவித்திரி,

முனைவர்பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவானைக்கோவில், திருச்சி-5

மக்கள் தம் வாழிட அமைப்பானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காக உள்ள அமைப்பினை உடையது. இம்மக்கள் வாழ்வியலில் பல்வேறு வகையான பொருட்களின் பெயரையும் இன்று நாம் அப்பொருட்களை அடையாளம் காணலாம இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

திருவை

இன்று மக்கள் தானியங்களை மாவாக ஆக்குவதற்கு மாவு மில்லைக்குச் செல்கின்றனர். சிலகாலத்திற்குமுன் வீடுகளில் எந்திரம் என்று வட்டக் கருகல்லால் ஆன ஒருபொருளைப் பயன்படுத்தினர். இப்பொருளை

அகநானூறு

மனையோர் ஐதுணங்கு

வல்சி பெய்து முறுக்குறுத்த திரிமரம்

எனக் காட்டுகின்றது. இங்கு தானியத்தின் தன்மையை மாற்றுவதால் அல்லது திரிப்பதால் திரிமரம் என்று குறப்பிடுவதனையும் இன்றும் மக்களுள் சிலர் மாவுதிரித்தல் என்று கூறும்சொல் மாவு அரைக்கும் திருவையைக் குறிப்பதாகும்.

உரல், உலக்கை, முரம்

உணவு தானியப் பொருட்களைத் தூய்மை செய்ய அதாவது மேல் உள்ள தோல், உமி, தவிடு போன்றவற்றை நீக்க பழங்காலத்தில் தானியத்தினைக் காயவைத்து மாலையில் உரலில் இட்டு உலக்கையால் இற்றி தோலை நீக்கி, தோலும் தானியமுமாகக் கலந்து முரத்தில் இட்டுப் புடைப்பர். பின்னர் பக்குவப்படுத்தி உண்பர். இன்றும் வீடுகளில் இப்பொருட்களை ஒரே இடத்தில் வைத்திருப்பர். இப்பொருட்களை,

பாடுகவா வாழி தோழி வயக்களிற்றுக்

கோடு உலர்கையாக நற்சேம்பின் இலைசுளகா

ஆடு கழை நெல்லை அரையுரலுட் பெய்திடும்வாம்

என்ற சங்க இலக்கியப் பாடல் காட்டுகின்றது. இப்பாடலுள் அரையுரலுட் எனும் சொல்லானது சிறியவாய் உடைய உரல் என்றும் காட்டுகின்றது.

களிற்றுக் கோடு என்பது யானைத்தந்தத்தால் ஆன உலக்கை பயன் படுத்தப்பட்டது என்பதனைக் காட்டுகின்றது.

நறிசேம்பின் இலை சுளகா என்ற சொல்லானது சேம இலை என்ற தாவரத்தின் அகன்ற இலையை முரமாகப் (சுளகு-முரம்) பயன்படுத்தினார் எனவும் காட்டுகின்றது.

சேம இலை, யானைதந்தம் ஆகியவற்றின வழி உணவுப் பொருட்கள் பயன்படுத்தக்கிடைக்கும் போது சிலமூலிகைத் தன்மை உணவுப்பொருளுடன் இணைந்து உடல் நன்மை பெறுகின்றது.

உலக்கை அமைப்பு

உலக்கையால் தானியத்தினைக் குற்றும்போது அதன் முனைப்பகுதி தேயாதும் விரிசல் ஏற்படாமல் இருக்க இரும்பால் பூண் அமைப்பர். இதனை,

இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்ந்த – சிறுபாணற்றுப்படை என்ற பாடல் அடியில் காணமுடிகின்றது. இப்பாடலடியில் இரும்புமுகம் என்ற சொல் உலக்கையின் இருபுரத்திலும் உள்ள பூண் எனும் பொருளைக் குறிப்பதாக உள்ளது.

முடிவுரை:

மக்கள் வாழ்வியலில் பயன்படுத்திய பொருட்களுள் திரிமரம் - திருவை, சுளகு – முரம், இரும்பு முகம் - உலக்கைப்புண் என்ற பொருளுடைய சொற்களாகக் காண்கின்றது. இதுபோன்று சங்க இலக்கியங்களுள் இன்று மருவியுள்ள பல சொற்களின் பொருட்களைக் காணலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

கலையும் கலைஞரும

வே.கோமதி, முனைவர்பட்ட ஆய்வாளர்,

தமிழ்த்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,திருவானைககோவில், திருச்சி -5.

மனித வாழ்க்கையில், மனிதனின் அறிவு வெளிப்படுதலும் மனிதன் உள்ளத்தினை மகிழ்ச்சியாக வைத்திடவும் கலைகளும், அதனைச் சார்ந்து வரும் கலைஞர்களும் பெருந்துணைச் செய்கின்றனர். அத்தகைய கலைஞர்கள் கலையின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் பெருந்துணைப் புரிகின்றனர். அத்தகைய கலைஞர்களை இலக்கியங்கள் எங்ஙனம் படைக்கின்றனர் என்பதைக் குறிப்பிடும் சொற்களின் பொருளை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

கலைஞர்களின் பலவகை :

நம் நாட்டில் பாரம்பரியம் மிக்க பல கலைகளின் கலைஞர்கள் உள்ளன. பழங்காலத்தில் வாழ்ந்த கலைஞர்களின் தொழிற் பெயர்களை தொல்காப்பியம்,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழக்தோன்றிப்
பெற்ற பெருவளம பெறா ஆர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிர் சொன்ன பக்கமும்”

கூறுவதன் வழி காணமுடிகின்றது. இவர்கள் மக்களின் அக, புறவாழ்வில் ஈடுபட்டவர்களாய் விளங்கினர்.

பாணர்

பாணர் என்னும் சொல் பண் என்னும் சொல்லினை அடியாகப் பிறந்தது. முன் நீண்டு பாணன் என ஆகியது. பாண் என்பது பாண்குடி, பாண்சேரி, பாண்கடன் என்பன போன்ற சொற்களின் வேர்ச்சொல்லாகும். பாண் என்பது அர் என்னும் பலர்பால் ஈறு பெற்றுப் பாணர் என்றாயிற்று. பண் இசைப்போர் பாணர் எனக் தொழிலாகு பெயராகவோ அல்லது பண்பாடு பெயராகவோ உள்ள பொருள் தரும் அமைப்பினைக் கொண்டுள்ளது.

இசையும் கூற்றும் வாழ்வு முழுவதுமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் ஆவார். இவர்கள் இசைப்பாணர்கள், யாழ்ப்பாணர்கள் மண்டைப்பாணர் எனப் பலராவர் என நச்சினார்கினியர் விளக்கம் காட்டுவர். வாயால் பாடுவோர் இசைப்பாணர் எனவும் நரம்புக் கருவி இசைப்போர் யாழ்ப்பாணர் எனவும், மண்டைப்பாணர் என்போர தோல்கருவி இசைப்போர் எனவும் வகையிட்டுப் பொருள் காணமுடிகின்றது. சான்றாக,

சீறியாழ் இடவயின் தழீஇ ……. (சிறுபாணாற்றுபடை)

பெரியாழ் முறையுளிக்கழிப்பி …… (பெருபாணாற்றுப்படை)

என்ற பாடல் அடிகள் நரம்புக்கருவ இசைப்பவர்களைப் பாணர் எனச் சுட்டுவதனைக் காணமுடிகின்றது. பாணன் எனும் தொல் தொழில் அடிப்படையிலும், பல வகைகளாக விளங்குகின்றன.

கூத்தர்

கூத்து நிகழ்த்துவோர் கூத்தர் என அழைக்கப்பட்டனர். பாடல்களைப் பாடுவதோடு மட்டுமல்லாமல் தன் உடலாலும் கூத்தமைத்துப் பிறருக்குத் தம் கருத்தினை வெளிப்பாடு செய்வதால் இவர்கள் கூத்தர் என அழைக்கப்பட்டனர். ஆதாவது, இன்றும் தெருக்கூத்துகள் என்ற சொல்லாட்சி உள்ளதனைக் காணலாம். இக்கூத்தர்களை. கண்ணுளர், மன்னர், வயிரிய மாக்கள், கோடியர் எனப் பல பெயருடைய சொற்களால் அழைக்கப்படுதலை மலைபடுகடாம்(50) அகநானூறு(189) பதிற்றுப்பத்து (29.8) ஆகிய நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றன.

பொருநர்

பொருநர் என்போர் திறம்படப் பாடி நடிப்பவர் எனும் பொருளுடைதாகும். இவர்கள் தடாரி, கணை எனும் தோற் கருவிகளை இனைத்துப் பாடுபவர்கள் ஆவர். பொருநர் என்போரை ஒருவரைப் போல வேடமிட்டுப் பாடுபவர் என தமிழண்ணல் சுட்டுவார். இப்பாணர்கள் ஏர்க்களம் பாடுநர், பரணிபாடுநர், போர்க்களம் பாடுநர் என மூவகைப்படுவர். இவர்கள் விழா நடைபெறும் பேரூர்களில் தங்கியிருந்து பின் அடுத்த ஊர்களில் விழாநடை பெறும் போது செல்வர் இவர்களின் நிலையினை,

சாறுகழி நாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருநர் (பொருநறாற்றுப்படை)

என்ற பொருநறாற்றுப்படை தொடர்கள் காட்டுகின்றன.

முடிவுரை:

தமிழகத்து நிலவும் பலகலைகளுள் பழங்கலைகளாக இசைக்கலை, கூத்துக்கலை உள்ளன. இக்கலைகளை நிகழ்த்தும் மனிதர்களை அக்கலைத் தொடர்பாகவே அவர்கள் சுட்டி அழைக்கப்படும் தன்மையை கூத்தர், பாணர், பொருநர் எனும் சொற்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. இவ்வாறு இவர்கள் வளர்த்த கலைகளானது இன்றைய கலைகளின் வளர்ச்சிக்கு அடித்தளமாகவும் ஊன்றுகோலாகவும் விளங்குகிறது என்றால் அதில் சிறிதும் ஐயமில்லை எனலாம். அத்தகைய கலைகளை நாம் போற்றி பாதுகாப்போம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

அறம்

வி. ரங்கநாதன்

முனைவர்பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலைமற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி-5

சொல்

எழுத்துக்கள் தனித்து அல்லது கூட்டாகச் சேர்ந்து ஒரு பொருளைத் தருமாயின் அது சொல்லாகும். நாநலம் பேணவும், நலமோடு வாழவும் சிறந்த சொற்கள் அவசியமாகிறது. எனவே கேட்பவரின் தன்மை மற்றும் நிலை அறிந்து சொற்களைச் சொல்ல வேண்டும் ஏனெனில் ஒருமுறை உதிர்த்த சொற்கள் மீளவும் பெற முடியாதவை. எனவே தான் நம் முன்னொர்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதைக் சிறந்த செல்வமாக கருதினர் போலும் ! பின்னாறில் அல்வமாக கருதினர் போலும்! பின்னாளில் அச்செல்வத்திற்கு நாணயம் என்று பெயரிட்டனர் போலும் !

பொருள்

பொருளல்லவரை பொருளாகச் செய்யும் என்று பொருளின் மேன்மையை வள்ளுவர் உணர்த்தினார். ஒரு மனிதன் தன்வாழ்வில் பொருள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவனது சொறகளில் சிறந்த பொருள் இருப்பின், அவன் கூறும் பொருள் எதிர்காலத்திற்குப் பயன்படுமாயின் அவனது சொல்லே அவனுக்கு பொருளையும் (செல்வம்) ஈட்டித்தரும். எனவே பொருள் உள்ளவரையே பொருள் சென்று சேரும்.

சொல்லும் பொருளும்

மனித வாழ்விற்கு எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.அதே போல் இலக்கியத்திற்கு சொல்லும் பொருளுமே இரு கண்களாகும். தமிழிலக்கியங்கள் இறவாமல் வாழத் துணை புரிவது இந்தச் சொல்லமுதமும், பொருளமுதமும் தான் நல்ல சொல்லனாகிய நக்கீரனும், தான் இறப்பினும் பொருட் குற்றத்தை ஏற்காதவனாவான். தன் எழுத்தில் சிறுபிழை நேரினும் தன் தலைலை எழுத்தாணியால் குத்திக் கொள்ளும் சீத்தலைச் சாத்தனார் காத்தளித்த மொழியாயிற்றே நம்மொழி இதன் சொல்லமுதத்தை நாம் பருக வேண்டாவோ? இதோசில

இலக்கியத்தில் சொல்லாட்சி

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்

வள்ளுவன் போல் யாங்களுமே கண்டதில்லை

என்றான் பாரதி. அவன் அடிகள் அப்பெரும் புலவர்களின் சொல்லாட்சித் திறனையே காட்டுகின்றது. சொல்வன்மை எனும் அதிகாரத்தையே வைத்தார் வள்ளுவர் அதில் சொல்லைப் பற்றிக் கூறுகையில்,

பல சொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற

சில சொல்லல் தோற்றா தவர் (குறள் 649)

என்கிறார். சில சொற்களாலே தம் கருத்தை விளக்கிச் சொல்ல முடியாதவரே பல சொற்களைச் சொல்ல விரும்புவர். அதுபோல் அறம் சொல்லை வள்ளுவர் கையாரும் முறையே அவர்தம் சொற்பொருள் ஞானத்தைகக் காண உதவும் அற இலக்கியமான திருக்குறளில் அறம் எனும் சொல்லை அவர் கையாண்ட முறையும், அதன் பொருட்செறிவும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அறம் என்பது தருமம் என்று வடமொழியில் அழைக்கப்படும். அத்தகைய அறம் எனும் சொல்லை தனது நூலுள் (அறத்துப்பால், பொருட்பால்) எறத்தாழ 34 இடங்களில் பயன்படுத்தியுள்ளார். பொருள், இதனின்று அறத்தின் பங்கு இன்றயமையாதது எனப்புலனாகிறது.

ஆனால் அவர் அறம் என்று எவற்றையெல்லாம் குறிப்பிடுகிறார் என்பதை உற்று நோக்கினால் அறம் இன்றி நம் வாழ்வு நலமாக அமையாது என்பதில் உறுதி கொள்ளலாம்.

உலகம் தோன்ற முதன்மையான இறைவனை முதல் அதிகாராத்திலும் (கடவுள்வாழ்த்து) உயிர்கள் தோன்றக் காரணமான மழையின் சிறப்பினை இரண்டாம் அதிகாரத்திலும் (வான்சிறப்பு) அதனைத் தொடந்து துறவிகளைச் சிறப்பித்த வள்ளுவர் நான்காதவதாக அறத்தை வலியுறுத்துகிறார்.

அறமும்! பொருளும்! குறளும்!

அறன் வலியுறுத்தலில் உயிருக்கு ஆக்கம் தரும் என்கிறார் ஒல்லும் வகையான் எனும் குறளில் உதவிசெய்தலை அறன் என்கிறார். மனத்துக்கண் எனும் குறளில் மனதில் குற்றமின்றி இருத்தல் என்ற பொருளில் கையாளும் வள்ளுவர் பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகியவற்றிற்கு தம்வாழ்வில் இடம் கொடுக்காததே அறம் என்கிறார். நாள் பாராமல் அறம் செய்பவன் பிறப்பறுக்கும் வல்லமை பெற்றவன் என்றார். இறுதியாக செயற்பால தோரும் எனும் குறட்பாவில் செய்யவேண்டியது. அறம் எனவும் செய்யக்கூடாதது பாவம் எனவும் வலியுறுத்துகிறாக இத்தகைய அறத்தைக் கொண்டு வாழ்வதில் வருவதே உண்மை இன்பமாகும். மற்றப் பொருள்கள் தரும் இன்பம் இன்பமாகா என நிறைவுசெய்கின்றது.

இதேபோல் அறனை இல்வாழ்க்கையோடு ஒப்பிடும் இவர். பிறரை அவ்வழியில் நடக்கச் செய்வது தவசியரின் நோன்பை விடச் சிறந்தது என்கிறார்.

அன்புடைமையில் அன்பில்தவனை அறம் வருந்து என்று கூறுகையில் அது மனசாட்சியோடு ஒப்பிடப்பட்டது. ஒருவரை முகத்தால் விரும்பி நோக்கி மனதார இனிய சொல் பேசுவதை அறம் என்கிறார். ஊள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கொள்ளாமை வேண்டும் என்ற அடிகள் இங்கே குறிப்பிடத்தக்கது.

பிறனில் விழையாமை எனும் அதிகாரத்திலோ பிறன்பொருளாள் எனும் குறளில் அறவழியில் பொருளை ஈட்டுபவன் பிறர்மனை விரும்பான் என்கிறார். அ.ஃதாவது நல்வழியில் ஈட்டிய செல்வம் ஒழுக்கத்திற்கு வழிவகுக்கும் என்றார். அறத்தை நல்லநெறி என்கிறார். அறமல்லாதவற்றை செய்தாலும் ஒழுக்கம் தவறாமல் இருத்தல் வேண்டும் என்கிறார்.

அழுக்காறாமையில் அறனை புண்ணியம் எனப் பொருள்படுமாறு அறன் ஆக்கம் வேண்டாதான் என்கிறார். வெ.ஃகாமையிலும் அறத்தைக் கையாளும் இவர் புறங்கூறாமையில் பல இடங்களில் அறம் எனும் சொல்லைக் கையாள்கிறார். புறங்கூறின் எனும் குறட்பாவும் புறங்கூறுதலை விட இறந்துபோதலே சிறந்தது அது அறநூல்கள் கூறும் நற்கதியைத் தரும் என்றால், இதில் அறம் என்பது அறநூல்களைக் குறித்தது. இதே அதிகாரத்தில் அறன்நோக்கி எனும் குறளில் அறனை தன் இயல்பு எனும் பொருளில் அமைக்கிறார்.

அறவினை எனும் குறளில் கொல்லாமையே அறம் என்கிறார். தெரிந்து தெளிதலில் ஒருவர் மீது நம்பிக்கை கொள்ள அடிப்படையாக அறத்தைக் கூறுகிறார். அறம்பொருள் இன்பம் உயிர் அச்சம் கொண்டு ஒருவனிடம் நம்பிக்கை கொள்க என்கிறார். இதில் உயிர் அச்சத்திற்கும், பொருளின்பத்திற்கும் முதன்மையானதாக அறத்தைக் கூறுகிறார்.

செங்கோன்மையில் அந்தணாளர் வேதத்தை விட சிறந்தது நீதி வழுவாமை எனும் பொருளில் அறத்தைக் குறிப்பிடுவதாக அமைச்சு எனும் அதிகாரத்திலும் இதே பொருளில் கையாள்கிறார். பொருள் செயல்வகையில் பொருளால்வரும் அறத்தைவிட அறத்தால் வரும் பொருளே இன்பம் என்றார்.

இறுதியாக நன்றியில் செல்வம் எனும் அதிகாரத்தில் அறத்தைப்பாராத ஒருவர் தேடிய செல்லம்பிறரால் கவரப்படும் என்கிறார். இதில் அறம் நேர்மை எனப்பொருள்பட்டது அறம் எனும் ஒரே சொல்லை பலவகையாக கையாண்ட வள்ளுவர் சொல்லாட்சி சொற்களின் நல்லாட்சிக்கு ஓர் சிறந்த சான்றாரும்

தமிழ் இலக்கியக் கடலில் மேற்காண் சொல்லாட்சி பொற்குடத்திற்கு பொட்டிட்டதைப் போன்றது. இன்னும் நிறைய் பொற்குடங்கள் உள்ளன என்பதை மறவோம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருக்குறளில் மேலாண்மை

எஸ்.கனிமொழி, எஸ்.சிவக்குமார

உதவிப்பேராசிரியர், வணிகமேலாண்மைத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி (த),திருச்சி –5.

முன்னுரை

மொழிகள் பலவாக இருந்தாலும் மேலாண்மை கருத்துகள் உலகுக்குப் பொதுவாக உள்ளன.நவீன மேலாண்மை கருத்துக்கள் நம் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது.இன்றைய காலகட்டத்தில் வேலை தேடுவோருக்குத் தேவைலயன நெறிமுறைகளையும் தொழில் வளர்ச்சிக்கு உற்ற வழிமுறைகளையும் தமிழ் இலக்கியங்களில் காணலாம். மேலாண்மை கலவி ஒருவருக்கு நல்ல நல்ல வாய்ப்பை அளிக்கலாம்.ஆனால் வெற்றி எனபது ஒருவனது தனித்திறமை திறன் அனுபவம் நெறிமுறையும் நீதியும் தவறாமல் இருப்பது எல்லாம் சேர்ந்து பலம் கூட்டும்.நல்ல செயல்களை நல்ல நேரத்தில் பிறர் கூட்டு முயற்சியுடன் செய்ய தெரிந்திருத்தல் வேண்டும்.

தன்னலம் கருதாமல் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டு சமூக அக்கறையுடன் தன் பங்களிப்பை தர மேலாண்மைக் கல்வி வழிவகுக்கும்.வெளிப்படையான எண்ணங்கள் சொற்கள் மற்றும் செயல்கள் அவனது வெற்றிக்கு வித்தாகும். இக்கட்டுரையில் திருக்குறளில் மேலாண்மை பற்றி பார்ப்போம்.

திருக்குறளில் நிர்வாகம் மற்றும் மேலாண்மை கருத்துகள் பரவலாக ஓங்கியுள்ளன. ஓர் அரசு உருவாக்கவும் நிர்வகிக்கவும் உறுதுணை செய்கிறது. மேலாளர்கள் முடிவெடுக்கும் திறனுடன் செயல்புரிபவராக இருத்தலின் அவசியத்தை முன்னிறுத்துகிறது. மேலாண்மை என்பது செயல்களை செய்து முடிப்பதாகும். ஒரு சிறந்த மேலாளர் என்ன செய்ய வேண்டும், அதை செய்வதில் வல்லவர் யார்? அதற்கு சரியான நேரம் என்ன, என்பதை கருத்தில் வைத்திருப்பார்.

திருக்குறளில் மேலாண்மை

ஒருவர் எப்போதும் வியாபாரத்திலும் வேலையிலும் நடுவு நிலைமை தவறாது இருத்தல் வேண்டும்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் (குறள் 113)

தீமையைத் தராது நன்மையே தருவதானாலும் நடுவுநிலைத் தவறுவதால் உண்டாகும் செல்வத்தை அப்பொழுதே கைவிடவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

பொருள் வரும் வழிகளை உண்டாக்குவதிலும் பொருளைச் சேர்த்தலிலும் பாதுகாத்தலிலும் அதனை நல்வழியில் செலவிடுதலிலும் வல்லவனே அரசனாவான்.அதுபோல வணிகன் வியாபாரத்தில் பொருளீட்டும் வழிகளை உண்டாக்கவும் பொருள் சேர்க்கவும் அதனைத் திட்டமிட்டு செலவழிக்கவும் வருங்காலத் தேவைக்குச் சேமிப்பதிலும் வல்லவராக இருக்க வேண்டும்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும்“ வல்லது அரசு (குறள் 385)

நாட்டை ஆள்கினற அரசனுக்கு விரைந்து செய்தல் கல்வியுடைமை ஆண்மையுடைமை ஆகிய இம்மூன்று குணங்களும் எப்பொழுதும் நீங்காமல் இருக்க வேண்டும்.அதுபோல நிறுவனத்தை நிர்வகிக்கும் பொறுப்புள்ளவர் எந்த காரியத்தையும் தொலை நோக்குப் பார்வையுடன் விரைநது செய்து முடித்தல் வேண்டும்.நிர்வாகம் மற்றும் மேலாண்மை கற்றிருக்க வேண்டும். ஆளுமைத்திறன் உடையவராக இருத்தல் வேண்டும்.

தூங்காமை கல்வி துணிவுடைமை இமமூனறும்
நீங்காநிலன் ஆள் பவர்க்கு (குறள் 383)

இலாபத்தைக கருதி முதலையும் இழப்பதற்குக் காரணமான செயலை அறிவுடையோர் மேற்கொள்ளமாட்டார். ஆதுபோல நிர்வாகத்தில் நட்டம் வராமல் இலாபத்தைப் பெருக்கவும் முதலைக் காக்கவும் தெரிந்துகொள்ளும் அறிவைப் பெற்றவர் மேன்மையடைவர்.

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார் (குறள் 463)

ஒரு செயலைச் செய்யத் தொடங்கு முன் அதனை முடிக்கும் உபாயத்தை நனறாக எண்ணித் தொடங்குதல் வேண்டும்.தொடங்கிய பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.அதுபோல முதலாளி வணிகத்தைத் தொடங்கும் முன்பே அதன் விளைவு லாபம் பொருளீட்டும் வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏண்ணித் துணிக கருமம் துணிந்தபின
எண்ணுவம் என்பது இழுக்கு (குறள் 467)

தான் செய்யக் கருதிய போரின வலிமையையும் தன் படையின் வலிமையையும் பகைவர் வலிமையையும் இருவருக்கும் துணையாவார் வலிமையையும் ஆராய்ந்து போரைச் செய்தல் வேண்டும்.அது போல வியாபாரத்தில் தன் நிறுவனத்தின் வலிமையையும் போட்டி நிறுவனங்களின் வலிமையையும் இருவருக்கும் துணை செய்யும் இடைத்தரர்கர்களின் வலிமையையும் நன்கு ஆராய்ந்து தெளிந்திருக்க வேண்டும். சரியான நிர்வாகம் நிறுவனத்தை மேலும் உயரச் செய்யும். சரியான திட்டமிடல் பகைவரை வெல்லும்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச செயல் (குறள் 471)

நன்மை தீமைகளை ஆராயந்தறிந்து நன்மையையே செய்யும் இயல்புடையவனைச் செயலுக்கு உரியவனாக அமர்த்த வேண்டும். அதுபோல பணியமயர்த்தும் போது பணிகளை சரியாகச் செய்யும் திறமையுள்ளவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் - **குறள் 511**

பொருள் வருவாயை அதிகப்படுத்தி, அதனால் வளமையை பெருக்கி, அவற்றிற்கு நேரும் இடையூறுகளை ஆராய்ந்துப் நீக்க வல்லவனே அரசனுக்குக் குறிப்பிட்ட செயலைச் செய்தல் வேண்டும். அத்தகைய பண்புடையவனே மேலாளன் ஆவான்.

"வாரிப் பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை" **குறள் 572**

'இச்செயலை இக்காரணங்களால் இவன் முடிக்க வல்லவன்' என்று ஆராய்ந்து காரியங்களில் சிறந்தவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி செய்வது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வித்தாகும்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் **குறள் 517**

என்ற குறள் மூலம் அறியலாம்.

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடமை கோடாது உலகு

என்ற குறள் மூலம், செயலைச் செய்பவன் நேர்மையிலிருந்து மாறுபடாதிருப்பின் இவ்வுலகமும் மாறுபடாது. ஆகையால் அரசன் அச்செயல் செய்வோரை நாள்தோறும் ஆராய்தல் வேண்டும். நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர் தனக்குக் கீழ் பணிபுரிபவர்களில் நேர்மையுடன் நடந்து கொள்பவரைக் கண்டுணர வேண்டும்.

முடிவுரை

தலைவருக்கும் நிர்வகிப்பவருக்கும் வழிகாட்டியாக எச்சரிக்கும் வகையில் திருக்குறள் அமைதியாக கருத்துக்குவியலைக் கொண்டுள்ளது ஒவ்வொரு குறளிலும் அதனுள்ளே மேலான பொருளைக் கொண்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புலவரால் எக்காலத்திற்கும் பொருத்தமான ஆழமான நிறைவான கருத்துகளை அறிவுப்பூர்வமாக வெளிப்படுத்திய நேர்த்தியை என்றென்றும் இவ்வுலகம் வியந்து பாராட்டும் என்பதில் ஐயமில்லை.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

மருதத்திணையில் ஊடல் - சொற்பொருள்

கி.சியாமளா

முனைவர் பட்ட ஆய்வாளர் உருமு தனலட்சுமி கல்லூரி திருச்சிராப்பள்ளி – 620019.

முன்னுரை :

சங்க இலக்கிய நூல்களான நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு அகநானூறு கலித்தொகை ஆகிய நூல்களில் மருதத்திணையில் 'ஊடல்' என்ற சொல் ஆராயப்படவுள்ளது. இதில் 'ஊடல்' என்ற சொல் 'புலத்தல்' 'வெறுத்தல்' 'பிணக்குதல்' என்ற பொருண்மையில் சுட்டப்பட்டுள்ளது. மருதத்திணையில் ஊடல் ஊடி ஊடுவென் புலவி துனி என்ற சொற்கள் புலத்தல் வெறுத்தல் பிணக்குதல் என்ற பொருள் அடிப்படையில் 31 பாடல்களில் இடம் பெற்றுள்ளது. ஆகவே மருதத்திணையில் இவ்வூடலானது இம்மூன்று பொருண்மையில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1:1 ஊடல் - சொற்பொருள் விளக்கம் :

ஊடலில் 'புலத்தல்' என்பது

"அன்பொத்த காதலர் இருவரிடை அன்பின்
பெருக்கால் ஏற்படுவதுமான சிறிய வேறுபாடு"[1] என்பர்.

இதனை 'பொய்ச்சினம்' என்று சுட்டப்படுகின்றது.

'வெறுத்தல்' என்பது

"பெரும்பான்மையாகத் தலைவனின் தவறான
ஒழுக்கத்தினால் தலைவியின் மன வேறுபாடு"[2] என்பர்.

இதனை 'புலனெறி வழக்கம்' என்று கூறப்படுகிறது.

மூன்றாவதாக 'பிணக்குதல்' என்பது

"உள்ளத்து நிகழ்ந்தனையைக் குறிப்பு மொழியால்

மட்டுமின்றி கூற்றுமொழியில் ஊடுதல்" [3] என்பர் பேராசியர்.

இது தலைவன் தலைவியின் பிணக்கத்தை எடுத்தியம்புகிறது. இம்மூன்று பொருளையும் பின்வருமாறு ஆராயலாம்.

1.1.1 ஊடல் - புலத்தல் :

ஊடலில் 'புலத்தல்' என்பது தலைவனின் மீது தலைவி பொய்ச்சினம் கொள்வதாக அமைந்துள்ளது. இதனை இளம்பூரணர்

"புலவி அண்மைக்காலத்து
ஊடல் அதனின் மிக்கது"[4]

என்று புலவியைச் சிறிய அளவிலானது என்று கூறியுள்ளார்.

'புலத்தல்' என்பது உணவிற்குச் சுவை தரும் உப்பு போன்றது. அதை அளவு கடந்து நீட்டித்தால் உணவில் உப்பு மிகுந்து சுவை கெடுவது போல் கோபமிகுதியால் காதல் கசந்து விடும். இது அளவோடு இருப்பது நலம் பயக்கும். இதனை வ.சுப.மாணிக்கனார் **"ஆடவன் தவற்றுக்குச் சமுதாயத்தில் வாய்ப்பு உண்டு என்பதையும் அறிவாள். அறிந்து வைத்தும் ஊடற்காலத்துத் தவறுடையான் போலச் சுட்டிப் புலவி மிகுவிப்பாள்"**[5] என்கிறார்.

இத்தகைய பொய்ச்சினமான 'புலத்தல்' மருதக்கலி பாடலில் தலைவன் கூற்றாக 'யான் செய்யாத காரியங்களைச் சொல்லி இவ்விடத்தே என் மேற் சினங் கொள்வது எதனால்?' தான் தீதற்றவன் என்பதைத் தெய்வத்தின் சான்றாகத் தெளிவிக்க முயல்கிறான். ஆனால் தலைவி ஊடல் கொண்டு புலக்கிறாள்.

" செய்யாத சொல்லிச் சினவுவது ஈங்கு எவன்
ஐயத்தால் என்னைக் கதியாதி தீது இன்மை
தெய்வத்தான் - கண்டீ – தெளிக்கு"[6]

இதில் தலைவன் மெய்யாகப் பரத்தன் அல்லனாயினும் தலைவி பொய்ச்சினம் கொண்டு 'புலத்தல்' மேற்கொள்வதாக அமைந்துள்ளது.

தலைவன் சொன்ன குறி இடத்திற்குத் தலைவி பலநாளும் சென்று தலைவனைக் காணாதவளாக எங்கும் தேடி அலைகிறாள். அதனைத் தலைவனிடத்து கூறி புலக்கிறாள். தலைவன் அதற்கு மறுமொழியாக தன் வலைக்குள்ளே புதிய யானை அகப்பட்டுக் கொண்டது அதனைக் காண அவ்விடத்தே தங்கினேன் என்கிறான். தலைவி 'ஆம் நானும் கேள்விப்பட்டேன். அந்த யானைக்கு நெற்றியிலே திலகம் உண்டு. தொய்யிலிலே ஓவியம் வரைந்த மார்பு உண்டு. காதில் மகரக்குழை உண்டு. அது நீ செல்லாவிடின் நின்னை தன்மேல் ஏறவிடாது மதம் கொண்டு நிற்கும். ஆகவே நீ அதனை கைவசமாக்கி கொள்'

என்று கூறி யானையைப் பரத்தையாக உள்ளுறை கொண்டு தலைவி புலத்தல் மேற்கொள்வதாக அமைந்துள்ளது.

"அன்னை! கடுஞ்சொல் அறியாதாப் போல நீ
என்னைப் புலப்பது ஒறுக்கு வெண்மன் யான்"[7]

இவ்விடத்தில் புலத்தல் என்ற பொருண்மையில் ஊடல் சுட்டப்பட்டுள்ளது.

நற்றிணையில் பரத்தையிடம் சென்று மீண்டு வந்த தலைவனைத் தலைவி 'என் வளையை நெகிழச் செய்த உம்மை தழுவவும் செய்யேன் ஊடியிருத்தலும் செய்யேன்!' என்று தன்னை அயலாகக் கொண்டு புலந்து மனம் வருந்தி உரைத்தமை புலப்படுகிறது. இதனை

"புல்லேன் மகிழ்ந! புலத்தலும் இல்லேன்
கல்லா யானைக் கடுந்தேர்ச் செழியன்"[8]

என்ற பாடல் மூலம் புலத்தல் என்ற பொருள் சுட்டப்பட்டமை புலப்படுகிறது.

தலைவன் பரத்தமை ஒழுக்கம் பூண்டான். தலைவியோ ஊடல் கொண்டு இருக்கிறாள். தலைவன் தன் ஆற்றாமை காரணமாகத் தலைவியை நேரில் அணுகிப் பொய்ம்மொழி பல கூறுகின்றான். அதனால் தலைவி ஊடல் தீர்வாளாய் தோழியிடம் எனக்குப் புலத்தல் பொருந்துமோ? இதற்கு யான் யாது செய்வேன் என்று வினவுவதாக அமைந்துள்ளது. இதனை

"அவ் வயல் நண்ணிய வளம் கேழ் ஊரனைப்
புலத்தல் கூடுமோ – தோழி!"[9]

என்று கூறுவதன் மூலம் புலத்தல் புலப்படுகிறது.

அகநானூற்றில் தோழி தலைவியிடம் தலைவர் மேற்கொள்ளும் பரத்தமையைப் புலந்து அவரோடு ஊடல் கொள்ளும் பெண்கள் தலைவன் விலகிச் செல்ல தலைவன் பால் மேலும் மேலும் பரத்தமை ஒழுக்கத்தை மிகுவிக்கஇ தலைவன் தாங்க இயலாதவனாய் உள்ளான். ஆகவே அவனோடு வீணே ஊடுதல் தலைவிக்கு மாண்புடைச் செயலாகுமோ? ஆகையால் ஊடலை விட்டு தலைவனை ஏற்றுக் கொள்ளுமாறு தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"பரத்தமை தாங்கலோ இலென்' என வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ? - மனைகெழு மடந்தை!"[10]

இவ்வாறாகஇ ஊடல் என்ற சொல் 'புலத்தல்' என்ற பொருளில் சுட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

1:1:2 ஊடல் - வெறுத்தல் :

சங்க இலக்கியப் பாடல்களில் ஊடல் 'வெறுத்தல்' என்ற பொருண்மையில் அதிகமாகச் சுட்டப்பட்டுள்ளது. நற்றிணையில் தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்க்க விருந்தினரை வாயிலாகக் கொள்கிறான்.

" பிறை நுதல் பொறித்த சிறு நுண் பல் வியர்
அம் துகில் தலையில் துடையினள்இ நப்புலந்து
அட்டிலோளே அம் மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே "[11]

தலைவன் மேல் ஊடல் கொண்ட தலைவி முகம் திரிந்து நோக்குவள். விருந்தினர்வரின் முகம் திரிதல் பண்பன்றாதலின் இன்னகையோடு நோக்குவள். அதனால் ஊடல் தீர்வள் என்பதால் விருந்தினரை வாயில் வேண்டுகின்றான். இதில் 'நப்புலந்து' அட்டிலோளே' என்றது தலைவனை வெறுத்துச் சமையலறைக்குள் புகுந்தாள் தலைவி என்று பொருள் கொள்ளப்படுகிறது.

அகநானூற்றில் தலைவன் பரத்தமை பூண்டு ஒழுகினான். அச்செய்தியைக் கேள்வியுற்ற தலைவி தன் கணவனுடன் பரத்தையைத் தொடர்பு படுத்தி பேசியதால் பரத்தை தலைவியின் தோழிமார் கேட்குமாறு ஊரனின் மனைவி தன் கணவனைத் தம்மோடு சேர்த்து வெறுத்துப் பேசுகின்றாள். நாம் அதற்குக் காரணமான யாதொன்றும் செய்யமாட்டோம். ஆயினும் அவள் கூறும் பழியினின்றும் நீங்கப் பெற்றிலேம் என்று உரைக்கிறாள்.

"துறைகேழ் ஊரன் பெண்டு தன் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப - நாம் அது
செய்யாம் ஆயினும் உய்யாமையின்"[12]

மேலும் இதே போன்று மற்றொரு பாடலில் தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேள்வியுற்ற காமக்கிழத்தி தலைவன் தன்னொடு அல்லாது அவன் வேறொரு பரத்தையின் வீட்டிலே உள்ளான் அவ்வாறிருக்க அவன் மனைவி எம்முடன் வெறுப்பினைக் கொண்டுள்ளாள் என்று பரத்தை உரைப்பதாக அமைந்துள்ளது.

"இன்னும் பிறள்வயி னானே மனையோள்
எம்மொடு புலக்கும் என்ப"[13]

இவ்வாறாக ஊடல் 'வெறுத்தல்' என்ற பொருண்மையில் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகுந்தது.குறுந்தொகையில் பரத்தை கூறுவதாக அமைந்த இப்பாடலில் தலைவனானவன் வலியச் சென்று தங்களை நுகர்ந்தானேயன்றி தாங்கள் அவனை மனையாட்டியிடமிருந்து தலைவி கூறுவது போல் நயப்பித்துப் புறம் போகாதவாறு பிரித்திலம் என்கிறாள். உண்மை அறியாமல் தம்மீது குறை கூறி வெறுக்கிறாள் தலைவி என்று பரத்தை உரைப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

"மனையோள் மடமையின் புலக்கும்

அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனினே"[14]

இதில் புலக்கும் என்ற சொல் வெறுத்தல் என்ற பொருண்மையில் சுட்டப்பட்டுள்ளது.

1:1:3 ஊடல் - பிணக்குதல்:

ஊடல் என்ற சொல் 'பிணக்குதல்' என்ற பொருளில் சில பாடல்கள் சுட்டப்பட்டுள்ளது. குறுந்தொகையில் தலைவியைத் தோழி புலத்தல் தகாது என்றும் தலைவன் பரத்தமையை மறந்து ஏற்க வேண்டும் என்றும் வேண்டிய போது அன்பில்லாத இடத்தில் புலத்தலால் பயன் ஏதும் இல்லை என்ற கருத்தைக் கூறி தன்னுடைய அயன்மைச் சுட்டினாள்.

" நம் நலம் தொலைய மிகச் சாஅய்இ
இன் உயிர் கழியினும் உரையல்இ அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ?
புலவி அ.ஃது எவனோஇ அன்பிலங் கடையே? "[15]

இவ்விடத்தில் புலவி என்பது தலைவியின் பிணக்கமாகச் சுட்டப்பட்டுள்ளது.

அகநானூற்றில் தலைவன் வாயில் வேண்ட தோழி மறுப்பதாக அமைந்துள்ளது. இதில் தலைவன் பரத்தை சேரியினின்று திரும்பி வாயில் வேண்ட அதற்குத் தோழி நின்னை யாம் புலத்தற்கு நீ எமக்கு என்ன உறவினை? தலைவியின் ஒளி பொருந்திய வளையல் நெகிழ்ந்து வீழினும் வீழ்க. நீ கருதிய இடத்திற்குச் செல்வாயாக நின்னை தடுப்பவர் தான் யாரோ? என்று பிணக்கம் கொண்டு உரைப்பதாக அமைந்துள்ளது.

"வண்டு ஊது பனி மலர் ஆகும் ஊர!
யாரையோ? நிற் புலக்கேம்"[16]

இவ்வாறு ஊடல் என்ற சொல் 'பிணக்கம்' என்றப் பொருளில் அமைந்தப் பாடல்களைக் காண முடிகிறது.

1.2 முடிவுரை :

சங்க இலக்கிய மருதத்திணையின் உரிப் பொருளான 'ஊடல்' என்ற சொல் 'புலத்தல்' 'வெறுத்தல்' 'பிணக்குதல்' என்ற பொருளில் சுட்டப்பட்டமை காணமுடிகிறது. இத்தகைய சிறப்புப் பொருந்திய ஊடலானது தலைவன் தலைவியின் அன்பின் பெருக்கத்திற்கு வழிகோலுகிறது என்றால் மிகையாகாது.

சான்றெண் விளக்கம்

1. வான்புகழ் திருக்குறள் கருத்தரங்க ஆய்வுத்தொகுப்புஇ இந்துமதிஇ ப.708
2. மேற்படி ப.708
3. மேற்படிப.709
4. மேற்படி ப.711
5. வ.சுப.மாணிக்கனார் தமிழ்க்காதல் ப.246
6. கலித்தொகை ம.கலி. பா.91
7. மேற்படி பா.97

8. நற்றிணை பா.340
9. அகநானூறு பா.26
10. அகநானூறு பா.316
11. நற்றிணை பா.120
12. அகநானூறு பா.106
13. மேற்படி பா.186
14. குறுந்தொகை பா.164
15. மேற்படி பா.93
16. அகநானூறு பா.46

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பாரதியார் பாடல்களில் சமூகவியல்

முனைவர்.ஆ.அருண்பிரகாஷ்

உதவிப்பேராசிரியர். முதுகலை சமூகப்பணித்துறை. ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருச்சி - 5

அறிமுகம்:

"எமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்பது பாரதியாரின் கொள்கை. தன் பாட்டுத்திறத்தாலே நாட்டு மக்களிடையே விடுதலை வேட்கையை மூட்டியவர் பாரதி, அறியாமையை என்னும் தூரத்தை ஓட்டியவர் பாரதி, ஒற்றுமைக்கொடியை நாட்டியவர் பாரதி. தன்னை ஷெல்லிதாசனாக அறிவித்துக் கொண்டவர். சாதிக் கொடுமைகளைச் சாடியவர். பெண்ணியத்தையும், பெண் சுதந்திரத்தையும் பாடியவர். சமுதாயத்தைப் பற்றியே சிந்தித்த மகாகவி பாரதியார்.

நாட்டுப்பற்று:

நாமிருக்கும் நாடு நமது என்ற எண்ணத்தைத் தூண்டியவர் பாரதியார். செந்தமிழ் நாடு என்று கூறும் போதே இன்பமான சொல்லாக பாரதியாருக்குத் தெரிகிறது. இதனை,

"செந்தமிழ் நாடு எனும் போதினிலே- இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே- எங்கள்
தந்தையார் நாடென்ற பேச்சினிலே- ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" **(பாரதி-பா-20-ப.151)**

என்ற பாடலில் காணலாம். தாய்நாடு என்று எல்லோரும் நாட்டைப் போற்றும் போது "தந்தையர் நாடு" என்று தாய் நாட்டைப் புகழ்ந்து கூறியது பெருமைக்குரியதாகும்.

மொழிப்பற்று:

மொழிகளிலே தமிழ்மொழிதான் சிறந்தது என்று தன் மொழிப்பற்றை இயல்பாக வெளிப்படுத்தியவர் தேசியகவி. நம் நாட்டு மக்களுக்கு நற்சிந்தனைகள் தோன்றுவதுபோல பிறநாட்டு மக்களிடமும் தோன்றும் அச்சிந்தனைகள் அடங்கிய நூல்களை மொழிபெயர்த்து தமிழ்மொழியில் தருதல் சிறப்பானதாகும். நம்மொழி இலக்கியங்களை வெளிநாட்டவர்கள் போற்றும் போதுதான், நம்மொழியின் பெருமைகள் நமக்கு தெரியவருகின்றன. இதனை,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்

சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணங்கச் செய்தல் வேண்டும்" (பாரதி-பா-22-ப.154)

என்ற பாடலில் காணப்படுகிறது.

பெண்ணுரிமை:

ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் உரிமை வேண்டும் என்று குரல் கொடுத்தவர் பாரதியார். பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. பெண்கள் ஏடுகளைத் தொடுவது தீமை என்று கூறப்பட்ட காலத்திலிருந்து மாறி, பட்டம் பெறுவதும் சட்டங்கள் இயற்றுவதும் பெண்களின் நிலையாக மாற்றம் கொண்டது. இதனை,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் அணுக்கிங்கே பெண்
இளைப்பிள்ளை காணொன்று கும்மியடி" (பாரதி-பா-23-ப.420)

என்கிறார். பெண்களை இழிவு செய்வது கூடாது கொடுமையானது. அவ்வாறு செய்தால் அந்த மடமை செயலை எரித்துவிடுவேன். இரண்டு கண்களும் தேவை போல ஆண்களும், பெண்களும் இரண்டு கண்கள் என்கிறார். இக்கருத்தை,

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவொம்" (ப-165)

என்ற பாடலில் காணலாம். மேலும்,

"கண்கள் இரண்டில் ஒன்றினைக் குத்தி
காட்சிக் கெடுத்திடலாமோ" (பா-4-ப-238)

என்று ஆணக்கு இணையாக பெண்களையும் போற்றுகின்றார்.

சாதியைச் சாடல்:

பிறப்பினில் அனைவரும் ஒன்றே. மனிதரில் பிரிவுகளை வளர்த்துக் கொள்ளக்கூடாது என்று அறிவுரைக் கூறும் பாரதியார். பிஞ்சு மனதிலேயே உயர்ந்த எண்ணங்களை வளர்க்க விரும்பினார். ஆகையால்,

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" (பா-5-ப-242)

என்று பிள்ளைப் பருவத்திலேயே அறிவுரையைக் கூறுகிறார்.

வறுமை:

வளங்கள் நிறைந்த நம் நாட்டில் வறுமையும், வாழ்வதைக் கண்டு மனம் பொறுக்காத கவிஞர்,

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்கிறார். மீண்டும் மனதில் ஆறுதல் கொண்டு வறுமையை விரட்ட வேண்டும். நம் நாட்டில் வறுமையை இல்லாமல் ஆக்கவேண்டும் என்று விரும்பிய கவிஞர்,

"ஏழையென்றும் அடிமையென்றும்
எவறுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்று

இந்தியாவில் இல்லையே" (பா-4-ப-164)

என்ற நம்பிக்கை விதையைத் தூவுகிறார்.

தன்னம்பிக்கை:

எந்த செயலிலும் வெற்றி பெற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதை மனதில் ஏற்று நடந்தால் முழமையாக வென்று காட்டலாம். இதை,

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்" (பாரதி-பா-34-ப-64)

என்ற பாடலடியில் காணலாம். நல்ல கருத்துக்களையும் சிந்தித்து, அதை மனதில் தன்னம்பிக்கையாக வளர்ந்து, அந்த தன்னம்பிக்கையை வாழ்க்கையில் கடைபிடித்தால் எதிலும் வெற்றி பெறலாம்.

ஒற்றுமை:

மனிதர்களாக பிறந்த அனைவரும் பேதங்களை நீக்கி ஒன்றுபட்டு வாழவேண்டும். சாதியின் பெயராலே, மதத்தின் பெயராலோ வேறுபாடுகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது. பூனைகளின் நிறங்களை காட்டி அவற்றின் பண்புகளில் ஒற்றுமையைக் காண்கிறார் பாரதி. வண்ணங்களில் வேறுபடலாம் எண்ணங்களில் ஒன்றுபடுவதை போல மொழியால் வேறுபட்டாலும் மனிதப் பண்புகளால் ஒன்றுபட வேண்டும் என்பது பாரதியின் விருப்பமாகும். மனிதர்கள் மட்டும் அல்ல பிற உயிரினங்களையும் தம் இனமாக பார்த்தவர் பாரதி, இதை,

"காக்கை குரவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்று, உயிருள்ள உயிரற்றவைக்கூட தன்னோடு இணைத்து ஒற்றுமை எண்ணத்தோடு அழகுபட கூறுகிறார்.

நிறைவு:

நாட்டுப்பற்றை வேராக வைத்தும் சாதி, வறுமை என்ற களைகளை நீக்கியும் மொழிப்பற்று, பெண்ணுரிமை என்ற மரங்களை வளர்த்தும் அதில் தன்னம்பிக்கை ஒற்றுமை என்ற மலர்களைக் கண்டும் அழகு பார்த்தவர் பாரதியார். சமுதாய சிந்தனைகளை தன் மூச்சோடு கலந்தவர் மகாகவி என்று பெருமையாக உரைக்கலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

நிர்மலா சுரேஷின் தைலச் சிமிழும் தச்சன் மகனும் என்னும் புதுக்கவிதையின் சொல்லும் பொருளும்

அ.அருன் சகாய அனிட்டா

முனைவர் பட்ட ஆய்வாளர், தூயவளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

முன்னுரை

இலக்கிய வகைகள் சங்க காலம் தொட்டே இன்றளவும் காலச் சூழ்நிலைக்குத் தக்கவாறு பல்வேறு வடிவங்களுடன் படைக்கப்பட்டு வருகின்றன. அவ்வடிப்படையில் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இலக்கியமாக புதுக்கவிதை திகழ்கிறது. தமிழ் மரபுக் கவிதையிலிருந்து மலர்ச்சி பெற்ற புதுமையே புதுக்கவிதை என்னும் பெயர் பெற்றது. இலக்கண மரபுகளை மீறி கருத்துக்கும், உணர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்து பாடப்பட்டதே புதுக்கவிதையாகும். பாரதியால் தோற்றுவிக்கப்பட்ட இந்த புதிய முயற்சியைப் பலரும் கையாண்டு கவிதையைப் படைத்தனர். தமிழ் இலக்கிய உலகில் நிகழ்ந்த இந்த மறுமலர்ச்சியின் விதைகள் விரவி கிறித்தவத்தினுள் விழுந்து மலர்ந்தன.

தமிழ் கிறித்தவப் புதுக்கவிதையின் காலமானது 1980-க்கு பிறகு தொடங்கியது. விவிலியத்தில் இடம் பெற்றுள்ள கதைமாந்தர்கள், உவமைகள், புதுமைகள் அறவுரைகளைப் பாடுபொருள்களாகக் கொண்டே கவிதைகள் அமைந்துள்ளன. அவ்வகையில் கிறித்தவப் பெண்படைப்பாளர்களுள் ஒருவரான நிர்மலா சுரேஷின் ‘‘தைலச்சிமிழும் தச்சன் மகனும்’’ என்னும் புதுக்கவிதையின் சொல்லும் பொருளும் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

படைப்பாளியும் படைப்பும்:

கவிஞர் நிர்மலா சுரேஷ், தஞ்சாவூரில் பிறந்தவர். திருச்சராப்பள்ளி புனித சிலுவைக் கல்லூரியில் இளங்கலை பொருளாதாரம் பயின்றார். தனது முதுகலை பட்டத்தை திருச்சி தேசியக் கல்லூரியில் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளம் முனைவர் பட்டத்தினைப் பெற்றார். கனடா நாட்டில் இறையியலும் பயின்றார். தாம் பயின்ற இறையியலின் அடிப்படையில் இயேசுபிரானின் வரலாற்றினைப் புதுக்கவிதை நடையில் ‘‘இயேசு மாகாவியம்’’ என்றும் காப்பியமாகப் படைத்துள்ளார். அதனைத் தொடர்ந்து தைலச்சிமிழும் தச்சன் மகனும், பாலைவனப் பௌர்ணமிகள், கடிகாரக்குயிலும் கடல் குதிரையும், நிர்மலா சுரேஷின் கவிதைகள், திசையின் ஓசைகள், அந்தரத்தில் காய்ந்த மஞ்சள் பூசணி, ஹைக்கூகவிதைகள் ஆய்வு, மொழியும் அதன் வாழ்வும், மண்ணில் பதியும் பாதங்கள், தென்றலும் தலைமை ஏற்கும், எப்போதும் உதயம், அரபுக்கவிதைக்கு ஆரத்தி, சிரிக்கும்

வில்லோமரம் சென்ரியூ, எழிலரசியர் இருவர், காதோடு காதாக போன்ற நூல்களையும் ஈராக்கிய கவிதைகள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் தமிழ் கூறும் நல்லுலகினுக்குப் படைத்தளித்துள்ளார்.

தைலச் சிமிழும் தச்சன் மகனும்:

வாழ்வும் வழியும் நானே! என்று கூறிய இறைமகன் இயேசு கிறிஸ்துவின் மானுட வாழ்வின் நிகழ்வுகளாக திருவிவிலியத்தின் வழி கவிதைகளாக்கி தந்திருக்கின்றார். இந்நூலில் ஆசிரியார். இயேசுவின் பிறப்பு தொடங்கி உயிர்ப்பு வரை விவிலியத்தில் இடம் பெற்றுள்ள அ.ஃறிணை உயிர்களுக்கும் உயிர் கொடுத்து அமைந்த வரிகள் இந்நூலில் நட்சத்திரம், ஆகாயம், குகை, ஒட்டகம், மீன் என்பன போன்ற 50 தலைப்புகளுள் அமைந்துள்ளன.

இறைமகன் இயேசுவின் பிறப்பு:

இறைமகன் இயேசு இம்மண்ணுலகில் மனிதனாய் அவதரித்து பெற்றோருக்கு உகந்த நன்மகனாய் வளர்ந்து இறைத்தந்தையின் பணி வாழ்வினை நிறைவேற்றிய செய்திகளை திருவிவிலியத்தில் மத்தேயு. மாற்கு, லுக்கா, யோவான் என்ற நான்கு நற்செய்தி நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.
சூசையப்பரும் மரியாவும் தம்பெயரை பதிவு செய்வதற்காக சொந்த ஊரான பெத்லகேம் சென்றனர். அப்பொழுது மரியாவுக்கு பேறுகால வேதனை வந்ததால் தங்குவதற்கு இடம் தேடி அலைத்தனர் எங்கும் கிடைக்காத நிலையில் மாட்டுத் தொழுவமே அவர்களுக்கான இடமாக அமைந்தது. ‘‘அவர் தம் தலைமகனை பெற்றெடுத்தார் விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர்’’ லூக்கா 2:7.

இவ்வுலகினையே ஆளுகை செய்யும் இறைவன் இவ்வுலகினில் அவதரிக்க இடம் ஏதும் இல்லாமல் மாட்டுத் தொழுவத்திலும் ஓர் ஓரமே கிடைத்தது என்ற விவிலியச் செய்தியினைக் கொண்டு கவிஞர் தம் கவிதையில் மாட்டுத்தொழுவம் எவ்வளவு சிறப்புபெற்றுள்ளது என்பதை,

“தொழும் வாய்ப்பு
தொழுவத்துக்குத் தான்
கிடைத்தது முதலில்!” இறைமகன் இயேசுவை முதலில் தொழுகின்ற வாய்ப்பு தனக்கே கிடைத்தது என்று கர்வம் கொள்வதாய் அமைந்துள்ளது.

வார்த்தை பிறந்தது –

வாயில்லா ஜீவன்கள் மத்தியில்! இவ்வரிகள் வார்த்தையாகி விளங்குகின்றன இறைவன் பிறந்த இடம் வாயில்லா ஜீவன்களான கால்நடைகள் மத்தியில் என்பதனை உணர்த்துகிறது.
இவ்வுலக மக்களின் வாழ்வு நிலையை மாற்ற மனிதனாக அவதரித்த இயேசு பிரான் பிறப்பு செய்தியை இடையர்களுக்கும் அரசர்களுக்கும் மக்களுக்கும் அறிவிக்க வானதூதரோடு இணைந்துக்கொண்ட நட்சத்திரம் பேசுவது போன்று அமைந்துள்ள கவிதை வரிகளானது

“ஆகாயத் தொழுகை நான்!
தலையைக் காண வந்த வால்!” (தை.சி.தம.ப.10)

பஞ்சபூதங்களுள் ஒன்றான ஆகாயத்தின் தொழுகையான நட்சத்திரம் இயேசு என்னும் இவ்வுலகத்தின் தலை(வனை) காணவந்த வால் என்று வரிகின்ற வரிகளில் வால் நட்சத்திரம் என்று தன்னை அறிமுகப்படுத்தும் விதமாய் அமைந்துள்ளது.

"யாக்கோபின் நட்சத்திரம்
என்பார்கள் மெசியாவை!
எனவே நான்,
நட்சத்திரத்தைப் பார்க்க வந்த
நட்சத்திரம்" (தை.சி.த.ம.ப.14)

என்னும் வரிகளில் விவிலியத்தில் பழைய ஏற்பாட்டினுள் (எண் ஆகமம்24:7)" யாக்கோபிலிருந்து விண்மீன் ஒன்று எழும்பும்" என்னும் செய்திதனை தனது புதுக்கவிதையில் அழகிய சொல்லாக்கமாக படைத்துள்ளார்.

"வீட்டிற்குள் அவர்கள் போய் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள், நெடுஞ்சான் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள்" (மத்தேயு 2.11) மணிதகுலத்தை மீட்க வந்த மாபரண் இயேசுவின் பிறப்பினை கேள்வியுற்று காணவந்த அரசர்கள் காணிக்கையாக கொணர்ந்த பரிசுப்பொருட்கள் குறித்து கவிஞர்,

"பூமிக்கு
வானம் அளித்த பரிசு
இயேசு
அந்தப் பரிசுக்கே
பரிசாய் வந்தவர்கள்
நாங்கள்! (தை.சி.த.ம.ப:23)"

என்று அரசர்கள் தங்களையே அறிமுப்படுத்தும் விதமாய் அமைகிறது.

இறை இயேசுவின் பணி வாழ்வு:

யோர்தான் நதிக்கரைக்கு மக்கள் அனைவரும் திருமுழுக்கு பெறுவதற்காக யோவானிடம் வந்தனர். அவர்களோடு இயேசுவும் திருமுழுக்குப்பெறுவதற்காக வந்தார். இயேசு திருமுழுக்கு பெற்ற யோர்தான் நதி அவரால் புனிதம் அடைந்ததாகவும் இறைஇயேசுவின் வருகையால் மனித சமுதாயம் புரட்சி அடைந்ததையும் விளக்கும் விதமாய்

"அவர் வந்து தீர்த்தமாடினார்
நான் புனிதமடைந்தேன்" – (தை.சி.த.ம.ப.34)
"எத்தனையோ
போர்களையும் படைகளையும்
பார்த்திருக்கிறேன்!
ஓர் ஆற்றுப்படையை

இப்போதுதான் காண்கிறேன்!

இது,

புரட்சி ஆற்றுப்படை!" (தை.சி.த.ம.ப.36)

வுழிப்படுத்துதல் என்னும் பணிதனை ஆற்றிய மாணிட மகனுக்கு மகுடம் சேர்ப்பது போன்ற வரிகளாக அமைந்துள்ளது.

இயேசு பெத்தானியா என்னும் ஊரில் தொழுநோயாளி சீமோன் இல்லத்தில் இருந்த பொழுது கைதலேன் மரியாள் என்னும் பெண் விலையுயர்ந்த நறுமணத்தைலம் கொண்டு வந்து தலையில் ஊற்றினார் என்ற விவிலியம் செய்தியினை ஆசிரியர் தனது கவிதையில்

அதுவரை நான்

வாசமாயிருந்தேன்!

அன்று தான்

வசம் ஆனேன்! (தை.சி.த.ம.ப.8-7)

என்னும் வரிகளில் வாசனை திரவியம் என்னும் அ.ஃறிணைப் பொருள் கூட இறைவன் வசம் செல்வதாகவும் மனிதன் என்றும் உயர்திணையான நாம் எப்போது அவர் வசமாக இணைவோம என்று நம்மை பார்த்து சொல் அம்புகளை விடுப்பது போல் அமைகிறது.

இறைவாக்கிரான யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு ஒரு அடையாளம் எதுவும் கொடுக்கப்படாது யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார்" (மத்தேயு 12:39, 40) கடவுளின் கட்டளைக்கேற்ப நினிவே தேசம் போகாமல் திசை மாறிப்போன யோனா அடைந்த துன்பத்தைத் தீய தலைமுறையினரான மறைநூல் அறிஞர்கள் மற்றும் பரிசேயர்களுக்கும் இயேசு கூறும் அச்செய்தியை தொன்மமாக வடித்துள்ளார் ஆசிரியர்

"மனிதர் வயிற்றில் நானும்

என் வயிற்றில் மனிதரும் இருப்பது

விவிலியத்துக்கும் புதிதல்ல

உயிரியலுக்கும் புதிதல்ல" (தைலச்சிமிழும்.த.ம.மீன்.ப.55)

முதன்மைச் சீடரான பேதுரு கடைசி நேரத்தில் வழிமாறி இறைமகனை மறுதலித்தார். இயேசுவோடு கைகோர்த்து நடந்தாலும் உலக பயத்தின் காரணமாக சில வேளைகளில் அவரை மறுதலித்து விடும் பயங்கரமானச் செயலைக் குறிப்பாக கிறித்தவர்கள் எவரும் செய்யக் கூடாது என்ற கருத்தைச் சாட்டையாக்கி நம்மைக் கிழித்தே விடுக்கிறார்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பெரியாழ்வார் திருமொழியில் சொல்லும் பொருளும்

பேரா. உபேந்திரன் பேரா. சங்கர்

உதவிப்பேராசிரியர் கணினித்துறை ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி திருச்சி – 5

மானுட வாழ்வில் மனிதனை நல்நெறிக்கு இட்டுச் செல்வது ஆன்மீகம். அத்தகைய ஆன்மீகத்தை மனிதன் கடைப்பிடித்து வாழ்வின் முக்திக்கு வழிவகுத்துக் கொள்கிறான். வைணவ கடவுளின் சிறப்பினையும் பெருமையினையும் இப்பாருக்குள் பறை சாற்றியவர்கள் ஆழ்வார்கள். திருமாலின் கல்யாண குணங்களின் மீது ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு விளங்கியமையால் இவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப் பட்டனர். அத்தகைய ஆழ்வார்களுள் சிறப்பு பெற்றவர் பெரியாழ்வார். நாளும் இன்னிசையால் தமிழையும் பக்தியையும் பரவச் செய்த அருளாளர்களுள் பெரியாழ்வார் என்று எல்லோராலும் கொண்டாடப்படுகின்ற இவர் விஷ்ணுசித்தன் என்னும் இயற்பெயரைக் கொண்டவர். இவருடைய பெயரைப் பற்றிக் குறிப்பிடும் போது எப்போதும் விஷ்ணுவை தன் சித்தத்திலேயே கொண்டவன் என்றும் பெரியவர்கள் கூறுவார்கள். விஷ்ணு – என்றால் எங்கும் வியாபித்து இருப்பவன் என்று பொருள். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவனின் எல்லையற்ற பெயரை ஆழ்வார்கள் பல்வேறு திருவிளையாடல்களோடு தொடர்பு படுத்தி அழைத்தனர். அவ்வகையில் பெரியாழ்வர் திருமொழியில் திருப்பல்லாண்டில் உள்ள திருமாலின் திருநாமங்களை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

பெரியவர்கள் சிறியவர்களை வாழ்த்துவதே மரபு. ஆனால் இங்கு உலகை உண்டு உமிழ்ந்த பெரு வயிறுடையவனை வாழ்த்திப் பாடியதாலேயே விஷ்ணுசித்தன் பெரியாழ்வார் ஆனார். அதோடு மட்டுமல்லாமல் தான் வளர்த்த கோதையை அந்த அழகிய மணவாளனுக்கே மணம் புரிந்து கொடுத்ததாலும் மற்ற ஆழ்வார்களுக்கு இல்லாத பேறு இவருக்கு ஏற்பட்டது. அதனாலும் பெரியாழ்வார் என்று அழைக்கப்பட்டார். இவர்தம் பல்லாண்டில்,

“மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா”

என்று நீல நிறத்தவன் மணிவண்ணன் என்று அழைக்கின்றார்.

அரக்கர்கள் வாழக் கூடிய இலங்கையைப் பாழாக்க படையுடன் சென்றான் என்பதை,

“இராக்கதர் வாழ் இலங்கை

பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே”

என்று இராமனை படைபொருதான் என்று குறிப்பிடுகிறார்.

"நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணா வென்று"

என்ற வரியில் எட்டெழுத்து மந்திரமாகிய நமோ நாராயணா என்ற மந்திரத்தின் குறிப்பினைக் கூறி அதை தியானிப்பதால் ஏற்படும் இகபர சுகங்களையும் கூறுகிறார்.

"இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்கு"

என்பதில் இந்திரியங்களை (உணர்வுகளை)அடக்கி வாழக்கூடிய தன்மையை உடையவன் என்பதை உணர்த்துகிறார். மேலும் அவன் ஆயிரம் திருநாமங்களை உடையவன் என்றும் குறிப்பிடுகிறார்.

"அந்தியம் போதில் அருயுருவாகி அரியை அழித்தவை"

என்ற வரியில் தான் சாக்கூடாது என்பதற்காக மிகவும் சூதாக வரம்பெற்ற இரண்யனை வதம் செய்வதற்காக மாலை நேரத்தில்(அந்தி என்பது காலை மாலை இரண்டையும் குறிக்கும்) நரசிங்க வடிவமெடுத்து பகைவனை அழித்தார். இதில் அரியுருவாகி என்பது நரசிங்க வடிவமாகிய திருமால் அரியை அழித்தான் என்பதில் பகைவனாகிய இரணியன். 'அரி' என்ற ஒரு சொல் இருவரைக் குறிக்கின்றது.

திருமாலுடைய பஞ்சாயுதங்களிலே ஒன்று சுதர்சனசக்கரம். அது சிவந்த ஒளியையுடையது. அச்சக்கரத்தைக் கையில் கொண்டிருப்பவன். வானாசுரனின் ஆயிரம் தோள்களிலிருந்து இரத்தம் பொழியச் செய்தவன் அவனுக்கு நாங்கள் அடிமை என்பதை,

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி...

தாய் சோறிட்டு மகன் உண்பது எவ்வளவு சுவையாக இருக்குமோ அது போல திருமாலே நீ எங்களுக்கு நெய்யும், சோறும், வெற்றிலைப், பாக்கு, கழுத்து, காதில் அணிய வேண்டிய ஆபரணங்கள், உடம்பில் பூச சந்தனம் ஆகியவற்றைத் தந்து ஞானம் அளித்து சாத்விகர்களாக ஆக்கிய உனக்குப் பல்லாண்டு என்று கூறும்போது,

"பையுடைய நாகப் பகைக் கொடியானுக்கு பல்லாண்டு கூறுவனே"

என்று, நாகத்திற்கு பகையாகிய கருடக் கொடியை உடையவன் என்று குறிப்பிடுகிறார்.

திருவோன நன்னாளில் பிறந்தவன், திருவோன நாளில் மாவலியின் ஆணவம் அழித்து உலகளந்தவன் அவன் சயனித்திருப்பதோ பாம்பனை அதனால்,

"படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே"

என்று குறிப்பிடுகிறார்.

ஆயிரம் தலையுடைய ஆதிசேடன் மேல், படுத்தும் இருந்தும், நின்றால் குடையாகவும் கொண்ட திருமால் காளியன் என்னும் ஆணவப் பாம்பின் தலையில் நின்று நர்த்தனம் ஆடியவன் என்பதைக் குறிப்பிடும் போது,

"ஐந்தலை பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே"

என்கிறார். நாகம் என்ற ஒரு பாசுரத்தில் ஆதிசேடனையும் மற்றொரு பாசுரத்தில் காளியனையும் குறித்து பொதுப் பெயராகி வந்துள்ளது.

உலக இயக்கத்திற்குக் காரணமாக இருப்பினும் அவன் அந்த மாயைகளில் அகப்படாதவன். அவனைப் பாவ புண்ணியங்கள் தொடாது. அவன் பரிசுத்தமானவன், என்பதால் 'பல்வகையாலும் பவித்திரனே' என்று எல்லாவற்றாலும் அவனின் பாபமற்ற தன்மையைக் குறிப்பிடுகிறார். அவனே பரமாத்மா என்பதையும் தன்னுடைய பல்லாண்டின் இறுதிப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோநாராயணாய வென்று
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே."

கண்ணனைக் குழந்தையாக உருவகித்து இவர் பாடிய பாடல்கள் பின்னர் தோன்றிய இலக்கிய உலகில் பிள்ளைத்தமிழுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன. கண்ணனைத் தாலாட்டும் போது இவர் யசோதையாவே மாறி தாலாட்டுப் பாடுகின்றார்.

கண்ணன் ஊதுகின்ற குழலோசையை, இவர்,

"புவியுள் நான் கண்டதோர் அற்புதம்"

என கண்ணனின் குழலோசையை உலகில் யாரும் காணாத தான் மட்டும் கண்ட அற்புத நிகழ்வாகவும் யாருக்கும் கிட்டாத அரிய காட்சியாகவும் உருவகித்துக் கூறியிருப்பது பெரியாழ்வாரின் பக்திச் சிறப்பு மேலோங்கியதாக மட்டுமல்லாமல் அவர் கண்ணன்பால் கொண்டுள்ள அன்புச் சிறப்பும் வெளிப்படுவதை நாம் அறிய முடிகிறது.

மானுட வாழ்வில் இறைவனானவன் பக்தனுக்குக் காணக் கிடைக்காத காட்சியாய், ஒளிப் பிழம்பாய் தோன்றுகிறான். ஆத்தகைய இறைவனை இவர் பாற்கடலைவிட்டு தன் நெஞ்சில் வாழ்வதாகக் கூறுகிறார். தனது நெஞ்சில் இருப்பது இதயம். இதயமானது மனித உயிருக்கு முதன்மையானது. அத்தகைய இதயம் போன்று இறைவன் பக்தனின் நெஞ்சில் வாழ்கிறான் என்பதை பெரியாழ்வார்

"தனிக்கடலே! துனிச்சுடரே! தனியுலகே!என்றென்று
உனக்கிடமா யிருக்க என்னையுனக்கு உரித்தாக்கினையே"

என்று கூறுவது பெரியாழ்வாருடைய பக்திப் பெருக்கத்திற்கு இது ஒரு பதிவு என்றே கூறலாம்.

இறைவனை எந்த பெயர் கொண்டு பக்தர்கள் அழைத்தாலும் வரக்கூடியவன். அவனுக்கு என்று தனிப்பெயர் கிடையாது இருப்பினும் எல்லா திருப் பெயர்களும் அவனுக்கே உரியது என்பதை பெரியாழ்வார் காப்புச் செய்யுளான திருப்பல்லாண்டில் பல பெயர்களால் அவனைப் போற்றிப் புகழ்கிறார்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இடையியல்

பி.ரொபின்

ஆய்வியல் நிறைஞர் தமிழ்த்துறை விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி) திருச்செங்கோடு.

முன்னுரை

இடைச்சொல்லின் பொது இலக்கணம்

இடையெனப் படுப பெயரொடும் வினையொடும் நடைபெற் றியலும்˙ தமக்கியல் பிலவே.(734)

இடைசொல் என்பது சொல்லப்படுவன பெயர்ச் சொல்லோடும் வினைச்சொல்லோடும் சார்ந்து நடைபெற்று இயங்குவன் அவை தாமேஇ தனித்து இயங்கும் இயல்பில்லாதன பெயரொடும் வினையொடும்" என்றதால் அவற்றுடன் வுடி நின்று நடத்தால் பெறப்படும். எனவே அப்பெயர்ச்சொற் பொருளையும் வினைச்சொற் பொருனையும் உணர்த்தியும் சிறப்பித்தும் வேறுப்படுத்தியும் வருவல்லது, அவை தனித்து நின்று தமக்கெனப் பொருளுணர்த்தும் இயல்புடையன அல்ல என்பது தெளிவு. ஆவற்றுள் தனித்த பொருட் குறிப்புடையனவும்இ பெயர் வினைகளை அடுத்து நின்றே அங்ஙனம் பொருள் தருதல் கருதத்தக்கது.

கண்டான் (ட்இஆன்)இ கல்லை(ஐ)இ என்றிசினோரே(இசின்)இ அருங்குரைத்து(குரை)இஇவை சொல்லிற்குறுப்பாய் வந்தன.

அது கொல் தோழி !பெயரை அடுத்துச் சார்ந்து நின்றது. வருகதில் அம்மவினையைச் சார்ந்து நின்றது முன்னது. வினாப்பொருளும் பின்னது விரைவுப் பொருளும் குறிப்பால் தருகின்றன. ஆயினும் கொல் தில் எனத் தனித்துநின்று பொருள்தருவன அல்ல.

இடைச்சொல் வகை

அவைதாம்.

புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுநவும்
வினைசெயல் மருங்கில் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசை நிலைக் கிளவி ஆகி வருநவும்
இசை நிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும் என்று

அப்பண் பினவே நுவலுங் காலை. (735)

அவற்றைப் பாகுபடுத்திக் வுறுமிடத்துஇ கீழ்வரும் ஏழுவகை இயல்பினை உடையனவாய் அமையும் அவ்விடைச் சொற்களாவன சொற்கள் புணர்ந்து நடக்குமிடத்து அவற்றின் பொருள்நிலைக்கு உதவுவனவும் வினைச்சொற்கள் செயல்நிகழ்வைக் காட்டுமிடத்துக் காலங்காட்டும் உறுப்புகளாய் வருவனவும் வேற்றுமைப் பொருளைத் தருமிடத்து உருபுகளாய் வருவனவும் தமக்கெனப் பொருளின்று அசைநிலைகளாய் இடமநிரப்பி இடைவருவனவும் செய்யுளின்கண் இசைநிறைக்க வருவனவும் தத்தம் குறிப்பாற் பொருளுணர்த்துவனவும் ஒப்புமைப்படுத்தாது தனித்து நிற்பனவற்றை ஒப்புமைப்படுத்து முகத்தான் உவம உருவுகளாய் வருவனவும் எனும் அவை ஏழுமாம்.

புணர்ச்சிக்கு உறுப்பாவன (சாரியைபோல்வன) ,வினைச்சொற்கு உறுப்பாவன,

வேற்றுமை உருபுகள் ,அசைச் சொற்கள் ,செய்யுளில் வரும்'இசைநிறைகள்'

குறிப்பிற் பொருள் தருவன ,உவம உருபுகள்

இடைச்சொல் நிற்குமிடமும் திரிந்து வேறுபடும் விதமும்

அவைதாம்

முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும் தம் ஈறு திரிதலும் பிறிது அவண் நிலையலும் அன்னவை எல்லாம் உரிய என்ப(736)

அவ் இடைச்சொற்கள்தாம் மொழிக்கு இடையே வருதலன்றிஇ மொழியின் முன்னிடத்தில் வருவனவும் பின்னடத்தில் வருவளவும் என மொழியை அடுத்து வரும் முறைகள் காணப்படும் சில போது இடைச்சொற்கள் தம் ஈறு திரிந்து வரும். மற்றும் சிலசமயம் ஒன்றற்குரிய இடத்தில் பிறிது ஒன்று வந்து அங்கு பொருந்தும் அல்லது பிறிதோரிடைச் சொல்வந்து அங்குள்ளதோடு இணையும். அவை அத்தகைய இயல்புகளை யெல்லாம் அடைதற்குரியவையாம். அவை இடையேயன்றி முன்னும் பின்னும் மொழியடுத்து வருதல் ஒருநிலை. தம் ஈறுதிரிதல் பிறிது அவண் நிலையல் போல்வன பிறிதொரு நிலை. அன்னவை என இவைபோல் வன பிறவும் அளவு மாற்றைக் குறிப்பிடுகின்றன. நடப்பான்இ பெறலருங்குரைத்து என இடைநின்றதுஇ எதுமன்இ கேண்மியா. இடத்தால் சொல் லுக்குப் பின்புறம் நின்றன. உயிர் போகுக தில்ல தில் தில்ல என இரண்டும் ஆகும்.

முன்றும் எ
இணைத்து நின்றது.

தில் இடைச்சொல்

விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று

அம்முன் றென்ப தில்லைச் சொல்லே.(738)

'தில்' என்னும் இடைச்சொல் விழைவு(ஆசை)இ காலம்இசொல்லாது ஒழிந்ததைச் சொல்வது(ஒழியிசை) என அம் முன்று பொருள்களைத் தகும் என்பர். வருகிதல்- வரவேண்டும். பெறுகதில் அம்ம- பெறவேண்டுமென விரும்புகிறேன். காலம் உணர்த்துதற்குப் பொருந்திய உதாரணம் யாரும்.காட்டவில்லை. வந்தாங்கு அறிகதில்- வந்ததை அறியட்டும் என எதிர்காலம் காட்டிற்று. பரத்தை இல்லம் போன தலைவனைப் பற்றிவருவதில் அம்ம எம் சேரிசேர என்று தோழி வுறுவது வந்தால் நன்கு பாடம்

புகட்டபடும் என்ற சினக் குறிப்பை வெளிப்படுத்துவதே.

ஏ இடைச்சொல்:

தோற்றம் வினாவே பிரிநிலை எண்ணே

ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே.(742)

ஏகார இடைச்சொல் தோற்றம்இ வினாஇ பிரிநிலைஇ எண்இ ஈற்றசை என இவ் ஐந்து பொருள்களிள் இடம் பெறும். தோற்றும் -தெளிவு உறுதிஇ ஈற்றசை செய்யுளிறுதியில் அசையாய் வருவது. நன்மை செய்தல் நன்மையே விளையும் - தோற்றம் நீயே இது செய்தாய்? என முன்பு வினவினர் இவ்வகுப்பில் சிறந்த மாணவன் முருகனே-பிரிநிலை நிலனே நீரே தீரே வளியே வானே என எண்ணுதல் வேண்டும். இச்சூத்திரத்தில் ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே என இறுதியில் வந்துள்ள ஏ ஈற்றசையாகும்.

ஏ ஓ இடைச்சொற்களுக்கு சிறப்பு விதி

தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும் அளபின் எடுத்த இசைய என்ப(746)

தெளிவு உணர்த்தும் ஏகார இடைச் சொல்லும்இ சிறப்பு உணர்த்தும் ஓகார இடைச்சொல்லும் அளபெடையாக நீட்டி ஒலிக்கும் ஓசையைவுடையவே என்பர். தெளிவு- தோற்றம். அளபின் எடுத்த- அளபெடுத்த இசைய-ஓசையினையுடைய வாய்மையே எ வெல்லும். இதுவன்றே ஓ ஓவியம்.

எற்று இடைச்சொல் உணர்த்தும் பொருள்:

எற்று என் கிளவி இறந்த பொருட்பே(748)

எற்று என்னும் சொல். ஒன்று கழிந்து போய்விட்டது என உணர்த்தும் பொருளதாகும். என்றே என் அழகு! எனஇ அழகு கெட்டுப்போனதை உணர்த்துவர். இறந்து பொருட்டு-இறந்தது. கழிந்தது போய்விட்டது என்னும் பொருளையுடையது.

மன்ற என்னும் சொல் உணர்த்தும் பொருள்

மன்ற என் கிளவி தோற்றம் செய்யும்(750)

மன்ற என்னும் சொல் தெளிவுப்பொருளை உணர்த்தும் தோற்றம் -தெளிவு. உறுதி. நீ மடவை மன்ற!

தஞ்சம் என்னும் சொல் உணர்த்தும் பொருள்:

தஞ்சம் கிளவி எம்மை பொருட்டே(751)

தஞ்சம் எனும் சொல் எளிது என்னும் பொருளுடையது. எண்மை எளிமைஇ பொருட்டு பொருளுடையது. முரசு கெழுதாயத்து அரசோ தஞ்சம அரசைக் கொடுப்பது எளிது என்றவாறு.

கொல் உணர்த்தும் பொருள்:

கொல்லே ஐயம் (753)

'கொல்' என்பது ஐயம் உணர்த்தும். 'வருவர் கொல் வாழி தோழி?...இது ஐயப்பட்டு வினவுதல்

எல் உணர்த்தும் பொருள்:

எல்லே இலக்கம் (754)

எல் என்பது விளங்குதற்பொருண்மை உடையதாகும். இலங்குதல் - விளங்குதல். எல்வகை மகளிர் - ஒளிவீசும் வளையணிந்த மகளிர்.

ஆர் இடைச்சொல் அசைநிலை ஆதல்:

அசைநிலை கிளவி ஆகுவழி அறிதல் (756)

அவ் ஆர் என்பது அசைநிலைச் சொல்லாகுமிடத்தை அறிந்து கொள்க பெயரினாகிய தொகை யுமார்

அவ் ஆர் என்பது அசைநிலைச் சொல்லாகுமிடத்தை அறிந்து கொள்க பெயரினாகிய தொகை யுமார் உளவே (தொல்551) தொகையுழ் ஆர்.

ஒப்பில் போலி அசைநிலை யாதல்:

ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும் (763)

ஒப்புமை உணர்த்தாத போலும் என்னும் சொல்லும் ஆங்க என்னும் இடைச்சொல்போல உரையசையாக வரும். இங்குயாரே வருகிறார்கள் போலும். உவமிக்கவந்ததன்று இது. எனவே ஒப்பில் போலி எனப்படும்.

இடைச்சொற்கள் மேலும் பலவுள எனல்:

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்

கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே (781)

மேலே எடுத்து சொல்லப்பட்டவை தவிர்த்துஇ வேறு பிற இடைச்சொற்கள் காணப்பட்டாலும் கிளந்து சொல்லப்பட்டவற்றுக்கு இலக்கணம் வகுத்த முறைப்படி ஆராய்ந்து அறிந்து கொள்கஇ தொய்யஇ மாளஇ ஒரும் அத்தை தொறு எனவரும் இடைச்சொற்களும் அவற்றின் பொருளும் காண்க இவை போல்வனமிகப்பலவுள.

முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் இடையியல் சொற்கள் எங்கு எங்கு மிகும் என்பதை பற்றி விரிவாக கண்டோம் இவை மட்டும் அல்லாமல் இன்னும் பல நிலைகளில் அவை மிகும் என்பது தெளிவாகக் கூறப்படுகின்றன.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

நீர்நிலை – சொல்வளம்

மா.விஜயலெட்சுமி

விரிவுரையாளர், தமிழாய்வுத்துறை,ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,திருச்சி.

முன்னுரை

பரந்துகிடக்கும் உலகை மனிதன் மொழியால் தன்வயப்படுத்துகிறான். மொழி பிரிந்து கிடக்கும் மனிதர்களை இணைக்கும் சங்கிலியாய்த் திகழ்கிறது. ஒன்றைப் பிறிதொன்றோடு ஒப்புநோக்குவது மனித இயல்பு. அவ்வாறு, தான் உணர்ந்த ஒன்றை மற்றவர்க்கு உணர்த்த முற்படுகிறான். இவ்வாறுணர்த்தும் முயற்சியை எளிமைப்படுத்துவதும், அழகுபடுத்துவதும் ஆற்றல் மிக்கதாக்குவதும் சொற்கள் ஆகும். மனிதனின் இயற்கை பண்பில் தோன்றும் சொற்கள் அவனின் சிந்தனைத்தளத்தை வளப்படுத்தவும் செய்கின்றன. அப்படிப்பட்ட சொல்வளம் கொண்ட மொழியே நம் தமிழ் மொழியாகும். தமிழ் மொழியில் ஒரு சொல்லுக்குப் பல பொருளும், பல சொற்களுக்கு ஒரு பொருளும் அமைந்திருக்கின்றன. அதன்வழி நீர்நிலை என்ற பொதுப்பெயருக்குச் சில காரணங்களால ஏற்பட்ட சிறப்புப் பெயர்களை இக்கட்டுரையில் காணலாம்.

நீரின் இன்றியமையாமை

நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. (குறள் - 20)

என்பது வள்ளுவன் வாக்கு. நீரின் சிறப்பை உணர்ந்ததால் தான் அன்று வள்ளுவனே கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான் சிறப்பு அதிகாரத்தை வைத்தார்.

ஆதி காலத்தில் மனிதன் காட்டுவாசியாகவே வாழ்ந்தான். பின்பு படிப்படியாக நாகரிக வளர்ச்சி பெற்றான். அவன் வளர்ச்சிகளில் ஒன்று வானத்திலிருந்து வரும் மழை நீரை எவ்வாறு பாதுகாப்பது என்று சிந்தித்தது தான். அன்றைய தமிழன் ஆன்மீகம் முதல் அறிவியல் வரை அனைத்திலும் முன்னோடியாக இருந்திருக்கிறான். அதேபோல் நீரைச் சேமித்து வைக்கும் முறையிலும் முதன்மையாக இருந்திருக்கிறான். அதற்கு அவன் பல காரணப்பெயர்களைத் தந்துள்ளான். இனி அவற்றைக் காண்போம்.

தமிழ் இலக்கியத்தில் நீர் நிலை

தொல்காப்பியர் பொருளாதிகாரத்தில் ஒரு மறவனின் வீரத்தை ஒப்பிட

வருவிசைப் புனலைக் கற்சிலை போல

ஒருவன் தாங்கிய பெருமையானும் (புறத். நூற்பா - 7) எனவும்

நற்றிணையில் பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனிடம் தலைவி

கடுந் தேர்ச் செழியன்

படை மாண் பெருங்குள மடை நீர் விட்டென (பா.340) எனவும்

அகநானூற்றில் தலைவி கூற்றாக

பெருங்குளம் காவலன் போல (பா.252)

என்றும் இடம்பெற்றுள்ளன இவ்வாறாக தமிழ் இலக்கியங்களில் நீர்நிலைகளைப் பற்றிய சொற்கள் பல உள்ளன.

நீர் நிலைப் பெயர்களும் விளக்கமும்

ஆகழி	:	கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்.
ஆருவி	:	மலை முகட்டுத் தேக்க நீர் குத்திட்டுக் குதிப்பது.
ஆழிக்கிணறு	:	கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு
ஆறு	:	பெருகி ஓடும் நதி
இலஞ்சி	:	பல்வகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்
உறைகிணறு	:	மணற்பாங்கான இடத்தில் தோண்டி சுடுமண் வளையமிட்ட கிணறு
ஊரணி	:	மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை
ஊற்று	:	அடியிலிருந்து நீர் ஊறுவது
ஏரி	:	வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்
ஓடை	:	அடியிலிருந்து ஊற்றெடுக்கும் நீர் எப்பொழுதும் பொசிந்து வாய்க்கால்வழி ஓடும் ஒரு நீர்நிலை
கட்டுகிணறு	:	சரளை நிலத்தை வெட்டி கல்,செங்கல்லால் சுவர் கட்டிய கிணறு
கடல்	:	சமுத்திரம்
கம்வாய்	:	பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கும் பெயர் (கம் - நீர்,வாய் - இடம்)
கலிங்கு	:	ஏரி முதலிய பாசன நீர்த்தேக்கம் உடைப்பெடுக்காமல் இருப்பதற்கு,முன்னெச்சரிக்கையாகக் கற்களால் உறுதியாகக் கட்டப்பட்டுப் பலகைகளால் அடைத்துத் திறக்கக்கூடியதாய் உள்ள நீர் செல்லும் அமைப்பு
கால்	:	நீரோடும் வழி
கால்வாய்	:	ஏரி,குளம்,ஊருணிக்கு நீர் ஊட்டும் பாய்கால் வழி

குட்டம்	:	பெருங்குட்டை
குட்டை	:	சிறிய குட்டம்,மாடு முதலியன குளிப்பாட்டும் நீர்நிலை
குண்டம்	:	சிறியதா அமைந்த குளிக்கும் நீர் நிலை
குண்டு	:	குளிப்பதற்கேற்ற ஒரு சிறு குளம்
குமிழி	:	நிலத்தில் பாறையைக் குடைந்து அடி ஊற்றை மேலெழும்பி வரச்செய்த குடைகிணறு
குமிழி ஊற்று	:	அடிநிலத்து நீர் நிலமட்டத்திற்குக் கொப்புளித்து வரும் ஊற்று
குளம் 1	:	ஊர் அருகேயுள்ள மக்கள் குளிக்க பயன்படும் நீர் நிலை
குளம் 2	:	கொங்கு மண்டலத்தைச் சார்ந்த இடங்களில் ஏரிக்கு வழங்கும் பெயர்
கூவம்	:	ஓர் ஒழுங்கிலமையாத கிணறு
கூவல்	:	ஆழமற்ற கிணறுபோன்ற ஒரு பள்ளம்
கேணி	:	அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு
சிறை	:	தேக்கப்பட்ட பெரிய நீர் நிலை
சுனை	:	மலையிடத்து இயல்பாய் அமைந்த நீர் நிலை
சேங்கை	:	பாசிக்கொடி மண்டிய குளம்
தடம்	:	ஆழமாக நாற்புறமும் கட்டப்பட்ட குளம்
தளிக்குளம்	:	கோயிலின் நாற்புறமும் சூழ்ந்தமைந்த அகழி போன்ற நீர் நிலை
தாங்கல்	:	இப்பெயர் தொண்டை மண்டலத்தை ஓட்டிய பகுதியில் ஏரியைக் குறிக்கும்.
திருக்குளம்	:	கோயிலின் அருகே அமைந்த நீராடும் குளம்.
தெப்பக்குளம்	:	ஆளோடியுடன் கூடிய,தெப்பம் சுற்றிவரும் குளம்
தொடுகிணறு	:	ஆற்றின் அகத்தும்,அணித்தும் அவ்வப்பொழுது மணலைத் தோண்டி நீர் கொள்ளும் இடம்
நடைகேணி	:	இறங்கிச் செல்லும் படிக்கட்டமைந்த பெருங்கிணறு
நீராவி	:	மைய மண்டபத்துடன் கூடிய பெருங்குளம்.
பிள்ளைக்கிணறு	:	குளம்,ஏரியின் நடுவில் அமைந்த கிணறு
பொங்குகிணறு	:	ஊற்றுக்கால் கொப்புளித்துக்கொண்டேயிருக்கும் கிணறு
பொய்கை	:	தாமரை மண்டிக் கிடக்கும் இயற்கையாய் அமைந்த நீண்டதொரு நீர் நிலை
மடு	:	ஆற்றிடையுள்ள அபாயமான பள்ளம்
முடை	:	ஒரு கண்ணேயுள்ள சிறு மதகு
மதகு	:	பல கண்களையுள்ள ஏரி நீர் வெளிப்படும் பெரிய மடை
மறுகால்	:	அதிக நீர் கழிக்கப்படும் பெரிய வாய்க்கால்
வலயம்	:	வட்டமாய் அமைந்த குளம்.
வாய்க்கால்	:	ஏரி முதலிய நீர் நிலைகளிலிருந்து பயிருக்கு நீர் பாயும் சிறிய கால்
வூவி	:	ஆற்று நீர் அல்லது தன் ஊற்று நீரால் நிரம்பி மறுகால் வழிமிகை நீர் வெளிச்செல்லுமாறு அமைந்த அல்லது அமைக்கப்பட்ட நீர்நிலை.

புனற்குளம்	:	நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டு விளங்கும் குளிக்கும் நீர் நிலை
பூட்டைக்கிணறு	:	கமலை நீர் பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

முடிவுரை

உயிரின் ஆதாரமே நீர்தான். அன்று அதனைத் தமிழன் உணர்ந்தால் தான் குளம், குட்டை, மடை என்ற அமைப்புகளின் மூலம் நீரைச் சேமித்து வைத்தான். அதற்கு பொருளுடன் கூடிய பல பெயர்களையும் வைத்தான். மேலும் நீர்நிலை மூலம் மழை பொழியவும் வழிவகை செய்தான். ஆனால் காலப்போக்கில் நாம் நீர்நிலைகளையே இழந்துவிட்டோம். அதன் விளைவாக நீர்நிலை தொடர்பான சொற்களையும் இழந்துவிட்டோம்.

“தீதும் நன்றும் பிறர்தர வாரா!”

என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றுப்படி மொழி, நீர்நிலை இரண்டின் அழிவிற்கும் நாமே காரணம். நாம் இரண்டையும் சரியாக பயன்படுத்த தவறிவிட்டோம்.

நீர்நிலை அமைப்பைப் பாதுகாத்து நீரைச் சேமிப்பது நம் தலையாய கடமையாகும். அதேபோல் தமிழ் சொற்களைப் பயன்படுத்தி தமிழைப் பாதுகாப்பதும் நம் கடமையாகும். எனவே இனியாவது நம் அன்றாட வாழ்வில் தமிழ் சொற்களைப் பயன்படுத்தி மொழியைக் காப்போம்.

“நீரின்றி உலகில்லை”

“சொல்லின்றி மொழியில்லை”

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருக்குறளில் உம்மைச் சொற்களும் பொருண்மைச்செறிவும்

சு.வித்யா

முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழாய்வுத்துறை,உருமு தனலட்சுமி கல்லூரி,திருச்சி.

முன்னுரை

இலக்கியங்களை வளமுடைதாக்கவும் பலமுடைய ஆக்குவதிலும் சொற்களின் பங்கு அளப்பரியது எவ்விடத்தில் எத்தகைய சொல்லை இட்டால் அந்த சொல்லின் பொருள் செறிவு செம்மை வாய்ந்தாக இருக்கும் என்பதில் வள்ளுவரின் வாய்மொழியில் காணமுடிகிறது.வாக்கியங்களில் இடைச்சொற்களை அமைக்கும் போது அதனுடைய பொருமட்செறிவை வள்ளுவத்தின் கண் ஆராய்வோம்.

இடைச்சொல்

பெயர்ச்சொல்லிடத்தும், வினைச்சொல்லிடத்தும் அவற்றின் பின்னேயாயினும், முன்னேயாயினும் வந்து ஒன்றுபட்டு நடக்கும் தன்மையை உடையது இடைச்சொல் பலவேளை பத்து இருபது சொற்கள் சொல்லும்சேதயை ஓரே ஒரு இடைச்சொல் சொல்லிவிடும் இடைச்சொற்கள் இருமுனைக் கத்தியை போன்றவை. இடைச்சொல்லின் இயல்பை கூறும்போது

“இடையெனப் படுவ பெயரோடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே”

என்கிறார் தொல்காப்பியர்.

‘உம்” எனும் சொல்

உம்மைச் எனும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு ஐயம், முற்று, எண், தெரிநிலை, ஆக்கம், என்ற பொருளில் அமையும். இதையே,

“எதிர்மறை சறப்புஐயம் எச்சம்முற்று அளவை
தேரிநலை ஆக்கமொடு உம்மை எட்டே”

என்று நன்னூலார் உம்மையின் சிறப்பை விவரிக்கிறார்.

திருக்குறள்

‘வாழும் வள்ளுவம்’ என்று போற்றப்படுகின்ற வள்ளுவத்தை படிக்கும் தோறும் ஓர் புதுமையான கருத்துகளை வழங்கக்கூடிய கருத்து கருவூலமாகும். கிமு. இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னே வள்ளுவர் எந்த சொல்லை எப்படி சொல்ல வேண்டும் என்பதை தத்தம் படைப்புவழி அறியமுடிகிறது.

ஒழுக்கமுடைமை

நல்ல பண்புகளை பற்றி கூறும் போது நேடியாக சுட்டாமல் எதிர்மறையாக சொல்லுவதில் ஒரு தனிச்சுவை உள்ளது வள்ளுவர் ஒழுக்கத்தை மறக்கலாகாது என்பதை

"மறப்பினும் ஒத்துக் கொளல்ஆகும் பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும். (கு- 134)

என்ற குறளால் மறக்கலாகாது என்று உம்மைச் சொல் எதிர்மறை பொருளை உணர்த்துகிறது. மேலும்,

"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்வழுங்கி யற்று"

என்னும் குறட்பா சூதாட்டத்தில் வெற்றி பெற்றாலும் அதை விரும்பாதே என்று வளளுவர் 'வென்றிடினும்' வேண்டற்க என எதிர்மறை பொருளில் அறிவுறுத்துகிறார்.

சிறப்புநிலை

இது மிகுதி குறித்து வருவதாகும். உயர்வினால் சிறப்பதும் உண்டு, இழிவினால் சிறப்பதும் உண்டு இதன் காரணமாக உயர்வு சிறப்பும்மை, இழிவு சிறப்பும்மை, என வகைப்படுத்தலாம். இதை வள்ளுவர் அமிழ்தத்தை விட சிறந்தது தம் மக்கள் அளாவிய கூழ் போன்ற உணவு என்பதை

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மககள்
சிறுகை அளாவிய கூழ்"

இக்குறளில் அமிழ்தினும் என்னும் உம்மை சிறப்பினை கூறுவதால் உயர்வு சிறப்பும்மையானது. மேலும் ஒழுக்கமானது உயர்ந்த சிறப்பை கொடுக்கும் ஆனால் அது உயிரை விடச் சிறந்தது என்பதை,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

ஒன்றைவிட ஒன்று சறந்தது உம்மைச்சொல்லின் ஆற்றல் அளப்பரியதாகும்.

இழிவு சிறப்பும்மை

நற்பண்புகளை உடையவர் ஒருவர் சினம் என்னும் நெருப்பிற்கு ஆளானவர் தம்மை காப்பது அரிதானது என்பதை,

"குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

குணம் என்னும் நற்பண்பிற்கு சினம் என்னும் தீய பண்பினை கூறுவதால் இ∴து இழிவு சிறப்பும்மையாயிற்று.

ஐயபொருள்

ஐயம் என்னும் பொருளில் உம்மைச் சொல் இதுவா, அதுவா எனத் துணிந்துகூற முடியாத நிலையாகும். சான்றாக,

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியில் கலங்கிய மீன்"

இக்குறட்பாவில் மதியா இல்லை அவளின் முகமா என வேறுபாடு தெரியாமல் ஐயப்பட்டமையை 'உம்' எடுத்துகாட்டியதால் ஐயவும்மை பொருளானது.

ஏச்சநிலை

எஞ்சிய பொருளை தருவது எச்சமாகும் அது இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும் தழுவிவருவதாகும். இதையே வள்ளுவர்

"செவியின் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்

அவியினும் வாழினும் என்?"

இக்குறட்பாவில் கேள்விஞானம் இல்லாதவர்கள் இருந்தால் என்ன? இறந்நதால் என்ன? என்று எச்சநிலையை அவியினும், வாழினும் என்னும் உம்மை சொற்கள் உணர்த்துவதால் இது எச்சவும்மை ஆனது.

முற்றும்மை

வள்ளுவர் முற்றும்மையை பல குறட்பாவால் கையாண்டுள்ளதை திருக்குறளை நோக்கினால் அறியமுடிகிறது. இதை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்

ஆன்ற பெருமை தரும்"

ஏல்லாவற்றிலும் நல்லவை கேமட்க வேண்டும் அது நிறைந்த பெருமையை உண்டாக்கும் ஏனைத்தானும் அனைத்தானும் என்ற முற்றும்மை வழி உணர்த்தியுள்ளார்.

எண்ணும்மை

எண்ணும்மை என்பது எண்ணிக்கைக்குரிய பொருளில் அமைவது ஆகும் அ.ா.தாவது

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேராது இயல்வது நாடு"

நாடானது எப்படி இருக்க வேண்டுமெனில் மிக்கபசி,நீங்காத நோய் கொடிண பகை இவை மூன்றும் சேராமல் இருக்கும் நாடு சிறந்த நாடு என்பதை எண்ணிக்கை முறையில் விளக்குகிறார். மேலும் நாட்டின பாதுகாப்பை பற்றி கூறும் போது

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்

காடும் உடையது அரண்"

நீர் சூழ்ந்த அகழி, பரந்த நிலப்பரப்பு, உயர்ந்த மலை, அடர்ந்த காடு இவை நான்கும் உடையதே சிறந்த பாதுகாப்பு என்று எண்ணும்மை கொண்டு விளக்கியுள்யளார்.

தெரிநிலை பொருள்

தெரிநிலை என்னும் பொருளில் வரும் உம்மைச் சொல் வாக்கியத்தில தெளிவான பொருளை காட்டிவிடும் இதை வள்ளுவரின்,

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்

நோககம்இம் மூன்றும் உடைத்து"

இ.ஃ.து கூற்றமோ,கண்ணோ, பெண்மானின் பார்வையோ என்று ஐயப்பட்டு நிற்கும் நிலையில் மடவரல் என்ற சொல்லானது பெண்ணின் கண்கள் என்று தெளிவுபொருளை விளக்குவதால் தெரிநிலையும்மையானது.

முடிவுரை

இவ்வாறாக திருக்குறளில் 'உம்' என்னும் இடைச்சொல்லானது இலக்கணத்திறகுகேற்றவாறு ஒரு கருத்தை கூறும்போது அறிவுறுத்தியும், கட்டளை பொருளிலும், ஐயப்பொருளிலும், தெளிவுநிலையிலும், அளவைமுறைகளிலும், எச்சப் பொருளிலும உயர்வு பொருளிலும் பொருள் செறிவு வாய்ந்த சொல்லாக அமைந்துள்ளதை வள்ளுவம் வழி அறியலாகிறது.

துணைநூல்கள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை
2. நன்னூல் - சோம. இளவரசு.
3. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

ஐயவி

கே. சரவணன்

முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி.

முன்னுரை

தமிழர்களின் அறிவுக்கருவூலமாக விளங்கும் நூல்களுள் சங்க இலக்கியங்கள் தனிப்பெறும் சிறப்புக்கள் பலவற்றை உடையது. இந்நூலுள் தமிழர்தம் வாழ்வோடு இயைந்த அகம், புறம், நீதி என்ற கருத்தமைப்புடைய பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களுள் காணப்படும் வாழ்வியற் பொருளுணர்த்தும் சொற்கள் பலவாகும். இவற்றுள் ஐயவி எனும் சொல்லாட்சிகள் பொருளை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

ஐயவி

மனிதன் தன் வாழ்நாளில் தன்னைக் இயற்கை, தீயசக்திகள், முதலியவற்றிடமிருந்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பலவகையான செயல்களை மேற்கொண்டான். மனிதனின் வாழ்வியலுள் குழந்தையை தீயவற்றினால் தீங்கு நேராவண்ணம் வெண்கடுகின் எண்ணையைப் பூசும் வழக்கத்தினை,

வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈர் அணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த
…… நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூல் நங்குடிக்கு உதவி
நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து (நற்றிணை பாடல் - 40, 370)

என்ற நற்றிணைப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்நாளில் இவ்வழக்கம் நடைமுறையில் வழக்கொழிந்தாக உள்ளது.

இளங்குழந்தைகளுக்கு பேய்ப் பகை ஏற்படாதவாறு ஐயவி புகை ஊட்டும் வழக்கத்தினை,

ஐயவி அப்பிய நெய்யணி முச்சி
மயிர்புறஞ் கூற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெரு மழலை
சூதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற்டிபண்டிர் கடிப்பகை எறிந்து
தூபம் காட்டித் தூங்குதுயில் வதியவும்
ஆரவாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை
விரவிய மகளிர் ஏந்திய தூமத்துப்
புதல்வரைப் பயந்த புனிறுநீர் கயக்கம்
தீர்வினை மகளிர் குளனாடு அரவமும் (மணிமேகலை)

என்ற பாடல்கள் காட்டுகின்றன. இன்று குழந்தைகளுக்கு ஐயவி புகையூட்டுதல் என்பது மருவி குழந்தைகளை நீராட்டிய பின் சாம்பிராணி புகையினை இடுகின்ற மாறுபாட்டினைக் காணலாம்.

ஐயவி வழக்கத்தில்

ஐயவி எண்ணைப் பூச்சு, ஐயவிபுகை என்பன நடைமுறையில் மாறுபாடாக அமைந்துள்ளன. இன்று கருவுற்ற மகளிர், குழந்தைப்பெற்று அணிமையுடையோர் வெளியில் செல்லும் போது வேம்பின் இலையை, தலையில் அணிந்து கொள்ளும் வழக்கத்தினையும், குழந்தைகளுக்கு கருமைப் பொட்டிடுதலும் ஆகிய வழக்கத்தினையும் காணமுடிகின்றது.

முடிவுரை

ஐயவி என்னும் சொல்லின் பொருளானது மக்களின் வழக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தீயவற்றினை நீக்கும் அல்லது தீயவைகளிலிருந்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் செயல்பாடு என்பது அறியவருகின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

எச்சப் பொருண்மை மற்றும் குறிப்பு மொழி

முனைவர் செ.அகிலாண்டேஸ்வரி

உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,தமிழாய்வுத் துறை, சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி, திருச்சி

ஒரு இனத்தின் தொன்மையை, வரலாற்றை நாகரிக வளர்ச்சியை, பண்பாட்டுச் செம்மையை உலகிற்கு அடையாளப்படுத்தும் குறியீடாக மொழி அமைகின்றது. ஏனெனில் மொழி வெறும் கருத்து பரிமாற்றக் கருவிமட்டுமன்று அது மக்களின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத வாழ்வியல் கூறுமாகும். மொழியின் வாழ்வும் வளர்ச்சியும் அம்மொழிப் பேசும் மக்களின் உயர்வாகவே அமைகின்றது. எனவே தான் புரட்சிக்கவி பாரதிதாசன் தமிழன்னையை நோக்கி,

"நைந்தாய் நீ எனில்
நைந்தும் போகும் என் வாழ்வே
நன்னிலை உனக்கெனில்
எனக்கும் தானே"

என்று பாடுகின்றார்.

இத்தகையச் சிறப்பு வாய்ந்த மொழியின்வளம், அதன் சொல்வளத்தால் தான் நிர்ணயிக்கப்படுகின்றது. செவ்வியல் மொழியாகிய தமிழ் 'சொல்வளம்' மிகுந்த மொழியாகும். காலந்தோறும் சமூக, அறிவியல் வளர்ச்சிக்கேற்ப பல புதிய சொற்கள் தமிழில் தோன்றுகின்றன. எப்பொருளாயினும் அதை உணர்த்தும் திறம் பெற்ற சொற்கள் தமிழில் உள்ளன. எனவேதான் சுப்பிரமணிய பாரதியாரும்,

"சொல்லில் உயர்வுத் தமிழ்ச்சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா" **என்கின்றார்.**

இத்தகைய உயர்ந்த தமிழ்ச் சொல்லிற்கு இலக்கணம் வகுத்தோர் பலராவர். அவற்றுள் காலத்தால் முந்தியவர் தொல்காப்பியர்.

தமிழிலக்கணத்தை,

1. எழுத்திலக்கணம்
2. சொல்லிலக்கணம்
3. பொருளிலக்கணம்
4. யாப்பிலக்கணம்
5. அணியிலக்கணம்

என ஐந்தாகப் பிரிப்பர். இவ்வைந்திற்கும் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல், பொருள் என்ற வரிசை முறையில் அமைந்திருக்கும் அதிகாரங்கள் ஒவ்வொன்றும் முறையே ஒன்பது இயல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

தமிழ் எழுத்துக்கள் மற்றும் சொற்களுக்கு முதலிரண்டு அதிகாரங்களில் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், பொருளதிகாரத்தில் தமிழ்ச் செய்யுட்கள் அமைய வேண்டிய முறை குறித்து வரையறுக்கின்றார்.

அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய முன் ஐந்து இயல்கள் அகம் மற்றும் புறத்திணைகளுக்குரிய பாடுபொருளைச் செய்யுளில் அமைக்கும் முறை குறித்து எடுத்தோதுகின்றது ˙ மெய்ப்பாட்டியல் பாடுபொருளை உணர்ச்சியுடன் அமைக்கும் திறன் குறித்து விளக்குகின்றது ˙ உவமவியலும், செய்யுளியலும் முறையே அணி மற்றும் யாப்பிலக்கணத்தை நுவல்கின்றது. மரபியல் செய்யுளை அமைக்கும்பொழுது பின்பற்ற வேண்டிய மரபுகளைச் சுட்டுகின்றது.

தொல்காப்பியர் பொருளதிகாரம் செய்யுளியலில் குறிப்பு மொழி மற்றும் எச்சம் குறித்து வரையறையை பின்வரும் நூற்பாக்கள் மூலம் தருகின்றார்.

"எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே"

(தொல்.பொருள்.செய் 172)

அ.˙.தாவது சொல் தனக்குரிய நேர்ப்பொருளைத் தராது. புறத்ததாகிய பொருளைத் தந்தால் அது குறிப்பு மொழியாகும். இந்நூற்பாவிற்கு உரை வகுத்த பேராசிரியர் பின்வரும் சான்றின் மூலம் குறிப்பு மொழியை விளக்குகின்றார்.

" 'குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி
னடக்கிய மூக்கினராம்'

எனவரும் இதனுட்குடமே தலையாகப் பிறந்தாரெனவுங், கொம்பெழுந்த வாயினரெனவுங், கையுட்கொண்ட மூக்கினிரெனவுங் கூறியக்கால் எழுத்துஞ் சொல்லும் பொருளும் இயல்பிலவாதலுங் குறிப்பினான். அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறுங் கண்டுகொள்க"

(தொல்.பொருள்.பேரா.உரை.ப.393)

இவ்வாறு நேர்ப்பொருளைத் தராது உய்த்துணரும் வகையில் அமையும் அனைத்தும் குறிப்புமொழியாகும்.

"சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்"

(தொல்.பொருள்.செய்.198)

அ.˙.தாவது பிறிதொரு சொல்லொடும், குறிப்பொடும் முடிவு பெறுகின்ற அனைத்தும் எச்சம் எனப்படும்.

குறிப்பு மொழி மற்றும் எச்சத்திற்கான இலக்கண வரையறையை சொல்லதிகாரத்தில் கூறாது பொருளதிகாரத்தில் குறித்திருப்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும். மேலும் இவை இரண்டும் செய்யுளுக்கு அணியாக அமைந்திருப்பதால் இதனை பொருளதிகாரத்தில் கூறினார் என்று கொள்ளலாம்.

தொல்காப்பியர் குறித்த குறிப்புமொழி மற்றும் எச்சங்கள் சங்கச் செய்யுட்களில் அமைந்துள்ள திறம் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"சங்கப் பாடல்களுக்குள், கவிதைகளுக்குள் இறங்குவதற்கு முன்னர்த் தமிழிலே இன்னொரு பெரிய தலைவாசல் இருக்கிறது. அதுதான் தொல்காப்பியம். தமிழ் மரபினுள் நுழைய விரும்புபவர்கள் அதனூடாகத்தான் நுழைய முடியும். அப்படியே தற்செயலாக வேறுவழியாக வந்தாலும் கூட வெளியே வரும்பொழுதாவது தொல்காப்பியத்தின் வழியே தான் வரமுடியும். எனவே தொல்காப்பியம் என்பது நமக்குள்ள ஒரு மிகப்பெரிய சொத்து. நமக்குள்ள ஒரு மிகப்பெரிய பயில்முறை" என்ற கார்த்திகேசு சிவத்தம்பியின் கூற்று இங்கு நினைவு கூறத்தக்கது. (சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் ப.14)

ஆய்வின் எல்லை கருதி குறுந்தொகையில் உள்ள சில பாக்கள் மட்டும் இங்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இந்நூல் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட அகப்பாக்களால் ஆனதாகும். எட்டுத்தொகை நூல்களுள் உரையாசிரியர்களால் மிகுதியாக எடுத்தாளப்பட்ட நூல் இதுவாகும்.

எச்சப்பொருண்மை

குறுந்தொகையின் முதல் பாடல் திப்புத்தோளாரால் பாடப்பட்டதாகும். குறிஞ்சித் திணையில் தோழிக் கூற்றாக 'கையுறை மறுத்தல்' என்ற துறையில் அமைந்த அப்பாடல் பின்வருமாறு

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"

அ∴தாவது போர்க்களம் குருதி பாய்தலால் செந்நிறமுடைய களமாயிற்று. அசுரர்களைக் கொன்று அவர்கள் குலத்தில் ஒருவரும் இல்லையாகச் செய்த குருதியால் சிவந்த திரண்ட அம்பினையும் சிவந்த கொம்புகளைக் கொண்ட யானையையும், வீர வளையலையும் உடையவன் முருகன். அவனுடைய இம்மலை, கொத்துகளாகப் பூத்து விளங்கும் சிவந்த மலர்களைக் கொண்ட காந்தளை உடையது என்று தோழி தலைவனுக்குக் கூறுகின்றாள்.

இப்பாடலைத் தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எச்சங்களுக்குச் சான்றுகளாகத் தங்கள் உரையில் எடுத்தாண்டுள்ளனர்.

தலைவன் காந்தள் பூவைக் கையுறையாகத் தந்தவிடத்து, தோழி "காந்தள் பூ எங்களிடம் நிரம்ப இருக்கின்றது" என்று தலைவனிடம் கூறுகின்றாள். நிரம்ப இருப்பதால் வேண்டாம் என்பது பொருளாகும். எனவே நச்சினார்க்கினியர் இதனை சொல்லெச்சத்திற்கு சான்றாக்குகின்றார். ஒரு தொடரானது

முற்றுப்பெறாமல் எச்சப்பொருண்மையைத் தந்து நிற்கும்பொழுது முன்னதாகவோ, பின்னதாகவோ ஒரு சொல் வந்து அத்தொடரின் பொருளை முற்றுப்பெறச் செய்தால் சொல்லெச்சம் என்று குறிக்கப்பெறும்.

"சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்ல(து) எஞ்சுதல் இன்றே"

(தொல்.சொல்.எச்சவியல் 45)

இங்கு 'வேண்டாம்' என்ற சொல் பின்னுக்கு எஞ்சி நின்றுள்ளது.

தலைவனிடம் தோழி 'எங்களிடம் காந்தள் பூ நிரம்ப உள்ளது' ஆகையால் எங்களுக்கு இது வேண்டாம் என்று கூறிய வழி இது கூற்றெச்சம் என்கின்றார் பேராசிரியர். அ.ா.தாவது 'வேண்டாம்' என்பதை மறைமுகமாக கூறிய வழி கூற்றெச்சமாகும்.

இப்பாடலை தோழி தலைவியிடத்து கூறியதாகவும் பொருள்கொள்வர். அ.ா.தாவது தலைவியிடத்து தோழி 'யான் செங்காந்தள் பூக்கொய்து கொண்டு வருவல் ஆண்டுத் தெய்வம் உடைத்து நீ வருதல் தகாது' எனக் கூறி அவளைக் குறியிடத்து உய்த்து நீங்குவதாக இப்பாடல் அமையும். தலைவிக்கு குறியிடம் குறிப்பால் உணர்த்தினமையால் பேராசிரியர் இதனைக் குறிப்பெச்சத்திற்கு சான்றாக்குகின்றார்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

(தொல்.சொல்.பெயரியல் நூ.எண்.1)

என்கின்றது தொல்காப்பியம். தமிழ்ச் செய்யுட்களில் சொற்கள் சில நேர்ப்பொருளை மட்டும் உணர்த்தாது தன்னுடன் தொடர்புடைய பல பொருண்மைகளையும் உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறாக மறைமுகமாக பொருளை உணர்த்துதல் செய்யுளுக்கு அணி சேர்க்கும். குறிப்பாக சங்க இலக்கிய அகப் பாடல்களுக்கு இக்குறிப்பு மொழியே சிறந்த இலக்கியத் தரத்தை உருவாக்கித் தருகின்றது.

இனம் செப்பல்

தலைவன் இரவுக்குறி வந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்த குறுந்தொகைப் பாடல் ஒன்று பின்வருமாறு

"கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை – நெடுவெண் நிலவே"

(குறுந்தொகை 47)

அ.ா.தாவது நெடும்பொழுது ஒளி வழங்கும் வெண்ணிலாவே, கரிய அடிப்பகுதியையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் உதிர்ந்து காணப்படும் பாறை, பெரிய புலியின் குட்டிப் போலக் காட்சியளிக்கும் காட்டின்கண் இடையூறுகளுக்கு அஞ்சாது இரவின் கண்வரும் தலைவரது களவொழுக்கத்திற்கு, நீ நன்மை செய்யவில்லை என்று தோழி நிலவைப் பழிக்கின்றாள்.

தோழி, தலைவனுக்கு இரவுக்குறி மறுத்து வரைந்துகொள்ள வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது. இரவில் வருவதனால் நேரக்கூடிய துன்பங்களை தோழி இங்கு உரைக்கின்றாள். தலைவன் வரும் வழியில் புலி உலவுவதாகக் கூறுவதுடன், நிலவின் ஒளியில் தலைவன் வருகையை ஊரார் அறிவார் என்றும் சுட்டுகின்றாள்.

'களவிற்கு நல்லைஅல்லை நெடுவெண்ணிலவே' என்று தோழிக் கூறுவதன் மூலம் கற்புக் காலத்தில் தலைவனுடன் கூடியிருக்கும் மகளிருக்கு நிலவு நன்மைக் பயக்கும் என்கின்றாள்.

'எடுத்த மொழிஇனஞ் செப்பலும் உரித்தே'

(தொல்.சொல்.கிளவி 60)

என்பது தொல்காப்பியம்.

இனமாகிய பல பொருட்களுள் ஒன்றனைக் கூறிய வழி, அச்சொல் தனக்கினமாகிய பிற பொருளையும் குறிப்பால் உணர்த்தும் என்பது இதன் பொருளாகும்.

இங்கு களவு, கற்பு ஆகிய கைக்கோள் இரண்டினுள் 'களவிற்கு நல்லை அல்லை' என்று கூறினமையால் 'கற்பிற்கு நல்லை' என்பது பெறப்படுகின்றது. ஆதலால் தோழி அவனை வரைந்துகொள்ளுமாறு தூண்டுகிறாள்.

இப்பாடலாசிரியர் 'நெடுவெண் நிலவு' என்றத் தொடரால் சிறப்புப் பெற்று 'நெடுவெண்நிலவினார்' ஆனார்.

உள்ளுறை

சங்க இலக்கியப் புலவர்கள் இயற்கையை தங்கள் பாடல்களின் பின்புலமாக அமைத்துள்ளனர். ஒவ்வொரு பாடலிலும் அமையும் இயற்கை வருணனையில் ஏதேனும் ஒரு உள்ளுறையைப் பொதித்து வைத்தனர். உள்ளுறை உவமத்திற்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர்

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்"

(தொல்.பொருள். அகம் 51)

என்கின்றார்.

அ.ஃதாவது உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருளை இதனோடு ஒத்து முடிகென உள்ளுறுத்துக்கூறுவதே உள்ளுறை உவமையாகும். இவ்வுள்ளுறை உவமையாவது தெய்வம் ஒழிந்த ஏனைய கருப்பொருட்களை நிலமாகக் கொள்ளும்.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே"

(தொல்.பொருள்.அகம் 50)

வரைவு நீட்டித்த வழித் தலைமகள், தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்கு உரைத்ததாக அமைந்த கபிலர் பாடல் பின்வருமாறு

"கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில் ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி-தோழி! – உண்கண்
நீரொடு ஓராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே"

(குறுந்தொகை 38)

கருங்குரங்கின் குட்டிகள் பாறையில் ஈனப்பட்ட மயிலின் முட்டையை உருட்டி விளையாடும் நாட்டையுடைய தலைவனது நட்பானது, அவன் பிரிவினால் வருந்தும் நெஞ்சத்தையும், நீர் ஒழுகும் மை தீட்டப்பெற்ற கண்களையும் பெறாதவர்களுக்கு மிகவும் நன்மையுடைத்தாகும் என்று தலைவி கூறுகின்றாள்.

அடைகாக்கப்பட வேண்டிய மயிலின் முட்டையானது, தனியே பாறையில் கிடந்து குரங்குக்குட்டியால் உருட்டப்படுவதைப் போல தலைவனுடன் இருந்து இன்புற வேண்டிய தலைவி துன்புறுவதுடன் நகையாடுவதையே தொழிலாகக் கொண்ட ஊராரின் பழிச் சொல்லிற்கும் ஆளாக நேர்ந்தாள்.

இவ்வாறு மயில், குரங்கு உள்ளிட்ட கருப்பொருட்களின் செயல்களைத் தலைவன், தலைவியின் செயல்பாடுகளுக்கு ஒப்புமைக் கூறியதால் இது உள்ளுறை உவமையாயிற்று.

இறைச்சி

குறிப்பு மொழியின் மற்றொரு வகையாகச் சுட்டப்பெறுவது இறைச்சியாகும்.

"இறைச்சி தானே உரிப்புறத் ததுவே"

(தொல்.பொருள்.பொருளில் 33)

இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் பொருளாகும். இளம்பூரணர் இறைச்சியாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும், ஊருக்கும் துறைக்கும் அடையாகி வருவது என்கின்றார்.

மேலும் இறைச்சியிற் பிறக்கும் பொருளை ஆராய்ந்து தெளிந்து கொள்பவர்களே அறிந்து கொள்ளமுடியும் என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே"

(தொல்.பொருள்.பொருளியல் 34)

தொல்காப்பியத்தில் அமைந்த 'நிலத்தினும் பெரிதே.....' என்ற தேவகுலத்தார் பாடலை இளம்பூரணார் இறைச்சிக்கு சான்றாக்குகின்றார்.

"நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே – சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" ***(குறுந். 3)***

கரிய கொம்புகளில் பூத்து விளங்கும் குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு, மலைப் பகுதியில் பெரிய தேனை வண்டுகள் தொகுத்தற்கு இடனாகிய நாட்டையுடைய தலைவனொடு யான் கொண்ட நட்பு, சொல்லப் புகுங்கால் நிலத்தை விட அகலத்தால் பெரிது ; நினையப் புகுங்கால் வானத்தை விட உயர்ச்சியால் மிக்கது ; உள்புகுந்து எல்லை காணப்புகுங்கால் கடலைவிட ஆழத்தால் அளவிடற்கு அரிது என்று தலைவிக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற்பழித்த வழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.

இப்பாடலுக்கு உரைவகுத்த முனைவர் வி.நாகராசன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "வண்டுகளால் பெரிய வரையில் உச்சியில் தேனிறால் தொகுக்கப்படுவதைப் போல பால்வரை தெய்வத்தால் தலைவன் தலைவியின் நட்பானது இழைக்கப்பட்டது. வண்டு என்ற எழுவாய் இப்பாடலில் குறிப்பிடவில்லை. அதுபோல பால்வரை தெய்வமும் சுட்டப்பெறவில்லை. பூவில் உள்ள தேன், வண்டுகளால் இழைக்கப் பெறவில்லையென்றால் பயன்படுவதில்லை. அதுபோல, தனித்தனியே விளங்கிய தலைவன் தலைவியரின் வாழ்வு, பால்வரை தெய்வத்தால் கூட்டப்பெற்ற வழி இல்லறவாழ்வாய்ச் சிறப்புற்றுப் பலரும் போற்றப் பயன்படுவதாகும்" என்கின்றார். இதன்வழி நோக்கின் உரிப்பொருளுக்கு புறத்ததாய் அமைந்த இக்கருத்து இறைச்சியாகக் கொள்ளப்பெறும். உயிரினங்களின் அன்பினைச் சுட்டக்கூடிய நிகழ்வுகளும் இறைச்சியில் இடம்பெறும். தலைவி வருந்தும் பொழுது இத்தகைய நிகழ்ச்சிகளைச் சுட்டி அவளை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தல் தோழிக்குரிய இயல்பாகும்.

"அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே"
(தொல்.பொருள்.பொருளியல் 35)

குறுந்தொகையில் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடலாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

"நசை பெரிதும் உடையர் ; நல்கலும் நல்குவர் ;
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாவும் பொளிக்கும்
அன்பின தோழி!- அவர் சென்ற ஆறே" ***(குறுந்தொகை 37)***

தோழி 'கடிது வருவர்' என்று ஆற்றுவித்ததாக இப்பாடல் அமைந்துள்ளது. தோழி! தலைவர் நின்னிடத்தில் மிக்க விருப்பம் உடையவர். அவர் நின்மாட்டுத் தலையளி செய்தலும் உடையர். அவர் நின்னைப் பிரிந்து சென்ற நெறிகள், பெண் யானையின் பசியை நீக்குவதற்காகப் பெரிய கையையுடைய ஆண் யானையானது மெல்லிய கிளைகளையுடைய யா மரத்தின் பட்டையை உரித்து, அதன் நீரை

அப்பிடி பருகச் செய்யும் அன்பைப் புலப்படுத்துவதற்கு இடமாக உள்ளன என்று தோழி தலைவியிடம் கூறுகின்றாள். இவ்வாறாக தலைவன் செல்லும் வழியில் உள்ள அன்புறு காட்சிகளை விளக்கி தலைவியை ஆற்றுப்படுத்தலால் இப்பாடலும் இறைச்சியின் பாற்படும்.

தொகுப்புரை

உரைநடையில் பயன்படுத்தப்படும் சொற்கள் தத்தமக்குரிய நேர்ப்பொருளைத் தந்து நிற்கும். ஆயின் செய்யுளில் சொற்கள் பயன்படும் பொழுது நேர்ப்பொருளை மட்டும் தராது, தொடர்புடைய பிற செய்திகளையும் வாசகனுக்கு புலப்படுத்தி நிற்கும் அவ்வகையில்

- குறுந்தொகையின் முதல் பாடல் சொல்லெச்சம் கூற்றெச்சம் மற்றும் குறிப்பெச்சமாக அமைந்து பொருளை உணர்த்தி நிற்கின்றது.
- நெடுவெண்நிலவினாரின் பாடல் நிலவானது களவிற்கு நன்மை பயக்காது என்று சொல்லுவதன் வழி கற்பு வாழ்க்கையில் தலைவனோடு கூடி நிற்கும் மகளிர்க்கு நிலவு நன்மையை பயக்கும் என்பதை உணர்த்தும்.
- வரைவுநீட்டித்த தலைமகன் குறித்த தலைவியின் கூற்றாக அமைந்த பாடலில் தலைவியின் நிலை கருங்குரங்கினால் உருட்டப்பெறும் மயிலின் முட்டைக்கு இணையாகச் சுட்டப்பெறுகின்றது.
- தலைவனுடைய நட்பின் உயர்வு பேசப்படும் பாடலில் குறிஞ்சிப் பூவிலிருந்து எடுக்கப்படும் தேனானது, தலைவன் தலைவியின் அன்பிற்கு ஒப்புமையாகக் கூறப்படுகின்றது.
- தலைவன் பிரிந்து சென்ற வழியில் வாழுகின்ற உயிரினங்களில் அன்புறு காட்சியை தோழியின் மூலம் படம் பிடிப்பதன் வழி தலைவியின் துயரம் தணிக்கப்படுகின்றது.

மேற்கூறிய அனைத்து பாடல்களிலும் புலவர் அமைத்த சொற்கள் மற்றும் வருணனைகள் தங்களுடைய நேர்ப்பொருளை மட்டும் உணர்த்தாது தொடர்புடைய பிற கருத்துக்களையும் உணர்த்துகின்றது. அதன் மூலம் தலைவன் தலைவியின் அன்பானது வாசகர்களுக்கு புலப்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக பிறிதொரு சொல் அல்லது குறிப்பினால் நிறைவடையும் எச்சங்களும், எழுத்தொடும் சொல்லொடும் புணராது நின்ற குறிப்பு மொழிகளும் சங்கச் செய்யுட்களில் மிகுதியாகப் பயின்று வந்து அதற்கு அணி செய்கின்றன செவ்வியல் தன்மையையும் உண்டாக்குகின்றன. விரிந்த ஆய்வுகள் சங்க இலக்கியத்தின் சிறப்பினை உலகிற்கு எடுத்துரைக்கும்.

கட்டுரை எழுத துணைநின்ற நூல்கள் :

- குறுந்தொகை மூலமும் உரையும் - உ.வே.சா. பதிப்பு
- குறுந்தொகை மூலமும் உரையும் - ஊமர்
- தொல்காப்பியம் பொருளதிகாரம் - பேராசிரியர் உரை
- தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை
- தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை
- சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் - முனைவர் கார்த்திகேசு சிவத்தம்பி

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

மு.வ.நாவல்களில் சொல்லும் பொருளும்

செ.அடைக்கலமேரி

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல், கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

முன்னுரை

கலைகளுள் எழுத்துக் கலைக்குத் தனி ஆற்றல் உண்டு. காலம் கடந்து வாழும் பண்பு எழுத்துக் கலைக்கே மிகுதியாகும். நமது எண்ணங்களையும் கருத்துகளையும் மொழியின் வாயிலாக வெளிபடுத்துகிறோம். ஒவ்வொரு தனி மனிதனும் தன் திறனுக்கு ஏற்ற வகையில் மொழியைப் பயன்படுத்துகிறான். அவரவர் ஆளுமைத் திறனுக்கேற்பவும் மொழிப் பயன்பாடு சமூக மற்றும் மொழித் திறனுக்கேற்பவும் வேறுபடுகின்றது என்பதை மு.வ. நாவல்கள் மூலம் அறியப்படுகின்றது.

சொல்லும் பொருளும்

மொழி சொற்களால் ஆனது சொற்கள்யாவும் பொருள்களை உணர்த்தும் குறியீடுகளாம். சொல்லுவோனது உள்ளக் கிடக்கையைக் கேட்போன் சரியாக உணரவேண்டுமாயின் சொற்களின் பொருளை இருவரும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும் பண்டைக்காலத்தில் எவ்வாறு சொற்களுக்குப் பொருள் வழங்கினார்கள்? அந்த மரபு கெடாது அச்சொற்களை வழங்கி வரல் வேண்டும் அம்மரபு திரிய அச்சொற்கள் வழங்கப்பெறுமாயின் இவ்வுலகத்துச் சொற்களெல்லாம் பொருளிழந்து பிறிது பிறிதாகும் என்பது தொல்காப்பியனாரின் கருத்தாகும்.

“மரபு நிலை திரியிற் பிறிதுபிறி தாகும்”

என்பது தொல்காப்பிய நூற்பா தொன்று தொட்டு உயர்ந்தோர் அறிஞர்கள் சொற்களை வழங்கி வந்த முறையே வழக்கு என்பது காரணம் உலகத்து நிகழ்ச்சிகள்யாவும் அவர்களையே நோக்கி நிற்கின்றன.

மு.வ.வின் நடையியல் விளக்கம்

பொதுவாக நடை என்பது மனிதனின் நடக்கும் செயலைக் குறிப்பதாகும் அவனது ஒழுக்கத்தினைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சொல்லாகும். இச்சொல் கலைச்சொல்லாக இன்றைய மொழி இலக்கிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒருவர் தனது எண்ணத்தை வெளியிடும் முறையை நாம் நடை என்கிறோம். மொழியமைப்பின் அடிப்படையில் எழுத்துஇ சொல்இ தொடர்இ வாக்கியம்இ உரைக்கோவை ஆகியவை இணைந்து நடையமைப்பாக அமைகிறது.

நடை என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் தரப்பட்டுள்ளன. நடை என்பது கவிஞனின் தனித்தன்மை கவிஞர் உணர்த்தும் உத்தி இலக்கிய உச்சநயம் என்பதேயாகும் என்று கருத்துரைப்பார். மர்ரே (1972:7) புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய நடை

திட்பமும் நுட்பமும் அமைந்ததாக இருக்கும் அவருடைய உள்ளத்தில் ஆர்வம் மிகுதியானால் நடையில் ஆற்றல் மிகுதியாகும் என்பார் வரதராசனார். (1959:238)

மு.வ.வின் சிந்தனைகள்

மு.வ.வின் சமூகச் சிந்தனையைப் பற்றிக் கூறுகையில் "அவரது புதினங்களையும் சமுதாயத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கவே இயலாது. மிக மேலான அறிவு நிலையில் நிற்கும் என்றாராயினும் சமுதாயத்தை எவ்வளவு கூர்ந்த விழிகளோடு இவர் நோக்குகிறார் என்பதை இவரது புதினங்களே தெளிவாகக் காட்டும்"2 என்று கூறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தைத் தன் தெளிந்த அறிவினாலும் கூர்மையான சிந்தனையாலும் நுட்பமாகப் பார்க்கிறார். சமூகச் சிக்கல்களாகப் பெரும்பான்மையானவரால் கருதப்பெறுவது வறுமைஇ கல்வியின்மைஇ வேலையின்மைஇ சாதிப்பாகுபாடுஇ ஏற்றத்தாழ்வுஇ பெண்ணடிமை என்பன போன்றவையே ஆனால் மு.வ. இவற்றோடு மனித மனமே தனி மனித நல்வாழ்விற்கும் சீருள்ள சமூகம் அமைவதற்கும் காரணமாகிறது எனும் கருத்துள்ளவர். எனவேதான் இவருடைய புதினங்கள் அனைத்திலும் மனித மனத்திற்குத் தேவையான பல்வேறு நற்சிந்தனைகள் பொதிந்துள்ளமையைக் காணமுடிகிறது.

தனிமனித பிரச்சனைகள்

மு.வ.வின் பெரும்பாலான புதினங்கள் தனிமனிதப் பிரச்சனைகளையே பேசுகின்றன. தனி மனித ஒழுக்கமே சிறப்பிக்கப்படுகிறது. தனிமனிதன் திருந்தினால்இ குடும்பம் திருந்தும்இ குடும்பத்தோடு சமுதாயம் திருந்தும்இ சிறப்புறும்.

ஒவ்வொரு தனிமனிதனும் தான் பண்புள்ளவனாக மாறுவதையே விரும்ப வேண்டுமஇ அடுத்தவர் மாற வேண்டும் என்று எண்ணுதல் கூடாது இதை "நாம் வசப்படகூடிய கருவி மனம் ஒன்றே அதுவே அரிது என்றால் மற்றவற்றைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. காக்கையைக் பார்த்துக்கொண்டிருப்பது போல் பார்த்திருக்க வேண்டும். பருப்பும் சாதமும் தின்று இந்த காக்கை வாழக் கூடாதா என்று ஏங்கக் கூடாது காக்கையின் வாய்க்கு அகப்படாதபடி இந்த எலி வளைக்குள்ளயே இருக்கக்ககூடாத என்றும் ஏங்கக் கூடாது. இயற்கையாகவே நடைபெறும் செயல்கள் இவை இயற்கைக்கு மாறாக மனம் எண்ணுவதுதான் பெரும்பாலான கவலைக்குக் காரணம்".3

"ஆசை தீர என்று தொடங்கும் வாழ்க்கை அல்லல்படும் வாழ்க்கை" ஆசை தீர்வது ஒரு நாளுமில்லை இரத்தம் குன்றினாலும் எண்ணம் குன்றுவதில்லை நோய் வந்தபின்னும் ஆசை வளர்கின்றது. இடம் கொடுத்தால் எந்த நேரமும் வேட்கை ஏற்படுகிறது."4 என ஆசையின் தன்மையை விளக்கும் மு.வ. அதற்கு தீர்வும் காண முயல்கிறார்.

மனம் பொல்லாதது புதுமையைத் தேடுகிறது. புதுமையில் என்ன இருக்குமோ என்று ஆசை கொண்டு அலைகிறது. கிடைத்ததை விட்டுக் கிடைக்காததை நாடி அலைகிறது. அலைச்சல் தான் கண்ட பயன் அமைதியும் இல்லைஇ ஆறுதலும் இல்லை. "மனம் சீர்பட்டால் தான்இ சீர்ப்பட முடியும் மற்றவழி ஒன்றுமில்லை ஏமாற்றம் தான்"5 என்னும் மு.வ.வின் கருத்து குறிப்பிடத்தக்கதாகும்.

மு.வ.கூறும் கல்வி

சமுதாயத்தில் கல்வி நிலையங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. சிறந்த ஆசிரியரே சிறந்த மாணவரை சிறந்த சமுதாயத்தை உருவாக்க இயலும். மாடு காட்டிற்கு போனால் மேயக் கற்றுக் கொடுக்கிறார்களா?

எங்காவது வழி தவறிப்போகமால் இருக்கும் படியாகப் பாாத்துக்கொண்டால் போதும் மேய்ப்பவன் ஒவ்வொரு மாட்டின் வாயிலும் புல்லை எடுத்து வைத்துக் கொண்டிருப்பானா? படிப்பும் அப்படித்தான் ஆசிரியர் செல்லிக் கொடுத்தே எல்லாம் வருவதில்லை ஒரு பாடத்திற்கு இத்தனைப் பிரம்படி என்று பங்கிட்டுக் கொடுத்து நெட்டுருப்போடச் சொல்லி வரிவரியாகக் கற்றுக்கொடுத்து பள்ளிக்கூடம் போதாது என்று தனிப்பாடம் வீட்டில் வைத்துப்பிள்ளைகளின் மூளைகளை மட்டுப்படுத்துவது பழையக் கல்விமுறை அதனால் தான் இன்றைக்குப் படித்தவர்கள் பெரும்பாலானோர் செம்மறியாடுகளாக இருக்கிறார்கள்இ அரசியலில் கைதட்டுகிறார்கள்இ கல்லெடுத்து எறிகிறார்கள்.

மாடுகளுக்கு மேயக் கற்றுக்கொடுத்தவன் பயன் இது ஆசிரியர் வழிகாட்டி தவறிப்போகமால் காப்பாற்றுகிறார் அவ்வளவுதான். காட்டைக் கண்டதும்இ புல்வெளியைக் கண்டதும் வாலை ஆட்டிக்கொண்டு மேய மாட்டிற்கு ஆசை எழ வேண்டும். பள்ளிக் கூடத்தை கண்டதுமஇ புத்தகத்தைக் கண்டதும் மகிழ்சியோடு படிக்க மாணவருக்கு ஊக்கம் பிறக்க வேண்டும். மாணவரின் மூளை பாலாறு போன்றது. தண்ணீரை கொண்டு வந்து பாய்ச்ச வேண்டும் என்று எண்ணக் கூடாது பார்ப்பதற்கு மணல்தான் இருக்கும் தோண்டினால் நீர் சுரக்கும் அறிவு இருக்கிறது ஒளி வீசுவதற்குப் பள்ளிக் கூடமும் ஆசிரியரும் வாய்ப்புத்தர வேண்டும் இது தான் புதிய கல்விமுறை.''6

பெண்மையை உணர்ந்தவர்கள்

கள்ளமற்ற அழகு எளிய உடை இனிமையான பேச்சு கணவனின் இன்பத்திலும் துணைபோகும் துணைவி குழந்தைகளுக்கு உணவோடு உணர்வும் ஊட்டி வளர்க்கும் அன்புருவானவள் தாய்.
இவர்களில் அல்லிஇ மங்கைஇ சாவித்திரி போன்று அறிவு பூர்வமாக சிந்தித்து ஆடம்பரங்களை அகற்றியவர்கள் கணவனின் அன்பிற்காக ஆடம்பரங்களைத் தியாகம் செய்தவர்கள் கண்ணப்பரின் மனைவி போன்று கணவனைவிட சமுதாயப்பழக்கங்களில் அதிகம் பற்றுக் கெண்டோரும் அடங்குவர்.

மு.வ. காட்டும் சமுகநீதி

மு.வ.வின் கருத்துப்படி இன்றைய சமுதாயம் மிகவும் சீர்கெட்டுக் கிடக்கிறது. ஒரு நெறி ஒரு கொள்கை இல்லாதவர்கள் தான் இந்த உலகத்தில் வாழ முடிகிறது.

''சட்டமும் பண்பும் சேர்ந்து நீதிமன்றத்தைக் கைப்பற்றி ஒரு கட்சியாகக் கூட்டு அமைத்து உண்மைக்குப் பகையாக உள்ளன.''7

''காட்டில் புலியும் மானும் எப்படியோ அப்படித்தான் நல்லவர்களும் கெட்டவர்களும் வாழ முடிகிறது.''8

''பழங்காலத்தில் தோள் வலிமைக்கும்இ வாள் வீச்சிற்கும் பயந்து நடந்தது போல் இக்காலத்தில் முரட்டுப் பேச்சிற்கும்இ வஞ்சகப் செயலிற்கும் பயந்து நடக்கிறோம்.''9

உண்மை ஒளிந்து வாழ பணம் கொடுங்கோல் ஏச்சும் இந்தச் சமுதாயத்தைக் கண்டு பல புதுமொழிகள் பிறக்கின்றன.

''பெரியது கேட்கின் பணமே பெரியது''10

''இம்சையே கோழையின் கருவி''11

''மானம் இருந்தால் மகராசன் ஆக முடியாது.''12

தெளிவாக உணர்ந்து முற்போக்காக வாழ்ந்தால் அவர்களை சமுகம் வெறுக்கிறதுஇ பகைக்கிறது. மந்தையோடு ஒன்றாகக் கலந்து கண்மூடித்தனமாக வாழ்ந்தால் கவலையில்லாமல் விட்டு விடுகிறது. மதிக்கவும் மதிக்கிறது. உதவவும் உதவுகிறது.பணம் புகழ் சமயம் வஞ்சனை திருட்டு ஆகியவை தீயவர் கையில் ஆயுதமாகிவிட்டன. இந்தக் காலத்தில் வேலை வாங்க வேண்டுமென்றால் ஒன்று மாமன்இ மைத்துனன் பெரிய உத்தியோகத்திலிருந்து நமக்கு சிபாரிசு செய்ய வேண்டும். அல்லது பாட்டன் சேர்த்து வைத்ததில் ஒரு பகுதியை லஞ்சம் கொடுக்க வேண்டும்.

இப்படி நல்லவர்களையும் நல்லவராய் வாழவிடாது தடுப்பது சமுதாயம் தான் என்பது மு.வ.வின் கொள்கை.

சமுகமும் தனிமனிதக் கடமைகளும்

பழுதுபட்டுக்கிடக்கும் சமுதாயத்தல் வாழும் நல்லவர்கள் எல்லோரும் சமுதாயத்தைக் குறை கூறுவதோடல்லாமல் சமுதாயம் சீர்பட வேண்டுமென உழைக்க வேண்டும் கிணறு வெட்டும் இடத்தில் நீர் உப்பாக இருக்கிறது என்றால் கிணறு வெட்டியவரை நோவதில் பலனில்லை அழுக்குகளைச் சேர்த்து அந்த நிலத்தைக் கெடுத்தவர்களை நொந்து கொண்டு அந்த தவறுகளை நாமும் செய்யாதிருக்க வேண்டும். நம் முயற்சியில் பயனை நாமே அனுபவிக்காவிடினும் வருகின்ற தலைமுறையினர் வாழ நம் கடமையை எதிர்கால நன்மைக்காகச் செய்ய வேண்டும்.

“இன்றுள்ள சமுதாயம் மண் குடிசை போன்றது. அதில் எலிகள் வளை தோண்டாமலிருக்கவும்இ பூச்சிகள் குடிபுகாமல் இருக்கவும் வேண்டுமானால் ஒன்று குடிசையை விடுத்து வெட்ட வெளியில் திரிய வேண்டும்.”13

வசதி படைத்த வாழ்க்கையை விடுத்து இயற்கைக்குத் திரும்புவது எளிதல்ல எனவே மண் குடிசையை மாற்றிக் கல் வீடாக்குவதே சிறந்தது. என்று மு.வ. கருதுகிறார்.

புதினங்களில் பொதுவுடைமைக் கருத்துக்கள்

மு.வ. அவர்கள் மார்க்ஸ்இ பெரியோரைப் போன்று பொதுவுடைமைக் கொள்கைகளை முறைபடுத்தித் தனிநூல் எதுவும் வெளியிடவில்லை எனினும் அவருடைய எட்டு புதினங்களில் ஆங்காங்கே பொதுவுடைமைக் கருத்துக்களை தக்க கதை மாந்தர் வாயிலாக வெளியிட்டிருக்கின்றார். பொதுவுடைமைக்குக் கூட்டுறவு முறைதான் அடிப்படை என்பதை வலியுறுத்திருக்கின்றார்.

தனிமனிதன் செல்வங்கள் அனைத்தும் ஒழிக்கப்படவேண்டும் அரசு மக்களின் நலனைக்காக்க எல்லாத்துறைகளிலும் ஈடுபட வேண்டும் நாட்டில் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இருக்கக் கூடாது. நாட்டு மக்கள் எல்லோரும் சமமாக எல்லாவகையிலும் ஒரே இனத்தவர் போன்று வாழ வேண்டும். அதற்கு அரசு ஆவண செய்ய வேண்டும் போன்ற கருத்துகளையெல்லாம் ஆங்காங்கே வெளியிட்டிருக்கின்றனர்.“அல்லி”யில் ஆசிரியர் அறவழியின் வாயிலாகக் கூறுகின்றனர். “குழந்தைகளை பெற்று வளர்க்கும் பொறுப்பை இயற்கை பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. அதோடு நின்றால் தொல்லை இல்லை குழந்தைகளின் எதிர்காலத்தை பற்றிக் கவலைப்படும் நிலைமையைச் சமுதாயம் அவர்களின் தலைமேல் சுமத்தியிருக்கிறது. அரசாங்கம் தாங்க வேண்டிய பொறுப்பைப் பெண்கள் தாங்க வேண்டியிருக்கிறது.”14

மு.வ.வின் புதினங்களில் காந்தியத் தாக்கம்

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் மேம்பட்டு விளங்க வழிகாட்டியவர்கள் சிலர் இருப்பார்கள் ‘‘டாக்டர் மு.வ.வின் வாழ்க்கை ஒரு செம்மையான வாழ்க்கையாக அமைய வழிகாட்டி நின்றவர்களில் முதன்மையானவர் இருவர். ஒருவர் காந்தியடிகள் மற்றொருவர் திரு.விக. என்று கூறியுள்ளார். டாக்டர். மு.வ. திரு.வி.க.விடம் நெருங்கிப் பழகியவர். அவருடைய அன்புஇ பண்புஇ ஆழ்ந்த சிந்தனை நெறியான தூய வாழ்க்கை ஆகியவை இவரை வெகுவாக கவர்ந்து அவரிடம் பேரன்புக்கொள்ள வைத்தன. அதே போல் காந்தியடிகளின் எளிமையும் சத்தியத்தைப் பற்றிய உறுதியும் மனித குலத்திற்குத் தொண்டு செய்யும் மனப்பாங்கும் இவர் உள்ளத்தில் நிறைந்தன. இவையே அவருடைய வாழ்க்கையின் வழிகாட்டிகளாக அவருடைய படைப்புகளிலும் நிறைந்து நிற்கின்றன. என்று கூறுகிறார்’’15

பேச்சும் சிந்தனையும்

‘‘நம்முடைய வாழ்வு பெரும்பாலும் மனத்தில் உள்ளது. உணவின் அளவிலும்இ உடையின் அளவிலும் உள் வாழ்க்கை பகுதி சிறியது மனத்தின் அளவில் வாழும் வாழ்க்கையே மிகுதி. நம் அன்றாட வாழ்வில் கொலைகள்இ கொள்ளைகளஇ வெற்றிகளஇ தோல்விகள் ஒன்றுமில்லை உண்பதும் உடுப்பதும் சாதாரணக் கடமைகளாகிவிட்டன. நாள்தோறும் வேளைதோறும் நாழிகை தோறும் எண்ணுகிறோம்இ எண்ணுகிறோம்இ எண்ணுகிறோம் உண்டு மகிழ்வதைவிட எதை எதையோ எண்ணி மகிழ்வது தான் மிகுதி எண்ணி வருந்துவதுதான் மிகுதி.’’.இந்தக் காலத்து நூல்களையுமஇ நாடகங்களையும் படித்தால் வாழ்க்கையில் நிகழ்சிகளும் செயல்களும் தான் மிகுதியாக உள்ளன போல் தோன்றும். ஆனால் நடைமுறையில் பார்த்தால் அன்றாட வாழ்வில் செயல்மிகக் குறைவு பேச்சும் சிந்தனையும் பெருவாழ்வாக உள்ளன.

முடிவுரை

மு.வ.வின் புதினங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள் மனித இனத்திற்கு அறிவுரை கூறுவனவாகும் சமூகச் சீர்த்திருத்தத்தை வலியுறுத்துவனவாகவும் அமைந்துள்ளது.

மொத்தத்தில் புதினம் முழுவதும் கருவெளிப்படையாகவே அமைந்துள்ளது. சீர்கேடுகள் நீங்கி நல்ல சமூகம் அமைய மு.வ.கூறும் தீர்வுகள் எல்லாம் எந்த அளவிற்கு நடைமுறைச் சாத்தியமானவை என்பது ஒரு தனி ஆராய்சிக்குரியது என்றாலும் புதினத்தைப் படிப்பவர் உள்ளத்தில் சமூக உணர்விற்கு நிச்சயம் ஒரு தூண்டுதல் கிடைக்கிறதென்பது உண்மையே என உணரமுடிகிறது.

சான்றெண் விளக்கம்:

1	தொல்.பொரு.மரபி	நூற்.98
2	வரதராசன். மு. நெஞ்சில் ஒரு முள்இ	ப.409
3	பாலசுப்ரமணியன் சி.அறவோர் மு.வ. இ	ப.20
4	வரதராசன்.மு..அல்லிஇ	ப.328
5	மேலதுஇ	ப.328

6	வரதராசன். முஇ.மலர்விழிஇ	பக்.266 -267
7	வரதராசன். முஇ.கயமைஇ	ப.384
8	மேலதுஇ	ப.384
9	வரதராசன். மு.கயமைஇ	ப.400
10	வரதராசன். மு.மலர்விழஇி	ப.90
11	வரதராசன். முஇஅல்லிஇ	ப.186
12	வரதராசன். முஇபெற்றமனம்இ	ப.197
13	வரதராசன். முஇகயமைஇ	ப.441
14	வரதராசன். மு. அல்லிஇ	ப.289

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

அருணா ஹரியின் நாவல்களில் அன்பு

ஆ.அனிதா

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல், கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

முன்னுரை

"அன்பின் வழியது உயிர்நிலை அ.ஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

அன்போடு பொருந்தி நின்ற உடலே உயிர் நிலைபெறும் உடம்பாகும். அன்பில்லாதவர் வெறும் தோலால் மூடப்பட்ட எலும்புக்கூட்டை ஒத்தவர். என்பது வள்ளுவர் வாக்கு. இது மிகவும் சத்திய வாக்காகும். அன்பில்லாதவர் உயிரற்ற பொருளுக்கு சமமாவார். அன்பில்லாத வாழ்க்கை உப்புச்சப்பில்லாத சுவையற்ற, வெறுக்கத்தக்க வாழ்வாகும். அன்பை தமிழர்கள் போற்றியதால் தான் அக வாழ்விற்கு ஓர் அருமையான அகநானூறை படைத்தனர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும், பயனும் அது" (குறள் - 45)

என வாழ்ந்தவர்கள் நாம். இத்தகைய அன்பை மேலும் மேலும் சிறப்பாக்கும் வகையிலும், அதன் அவசியத்தை இளைய தலைமுறைகளுக்கு அறிவுறுத்தும் வகையிலும் படைப்புகள் வெளிவரவேண்டும். அருணாஹரியின் நாவல்கள் ஒவ்வொன்றிலும் அன்பே அடி நாதமாய் விளங்குகிறது. தாய்-மகன் அன்பு, அண்ணன்-தம்பிக்கு இடையே உள்ள அன்பு, மூத்த தலைமுறைக்கும் -இளைய தலைமுறைக்கும் இடையில் இழையோடும் பாசம், தலைவன்-தலைவிக்குள் நிலவும் நேசம், சமுதாயத்தில் மக்களிடையே உள்ள மனிதநேயம் இப்படி பலவிதமான அன்பு இயல்பாய் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. அவர் எழுதிய நாவல்களில் ஐந்து நாவல்கள் மட்டுமே இங்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தாய் - மகன் அன்பு

"திருமகள் தேடிவந்தாள்" புதினத்தில் தாய் மகனுக்கு சொந்தத்தில் அதாவது நாத்தனாரின் மகளை திருமணம் செய்து வைக்க விரும்புகிறாள். மகனுக்கோ வேறோரு பெண் மீது விருப்பம். தாயின்மனம் நோக எதிர்த்து பேச விரும்பாத பிள்ளை தாயின் மனதை மாற்ற, உறவில் மணம் புரிந்தால் குழந்தை ஊனமாக பிறக்கும் என்ற அறிவியல் உண்மையை (மருத்துவ) இயல்பை இன்னொரு உறவு பெண் மூலம் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்கிறான்.

விருந்துக்கு வந்த ரேவதியை அரவிந்தனின் தாய் மங்கை"வா! ரேவதி, நல்லாயிருக்கியா? குழந்தை எப்படியிருக்கிறான்.?" என விசாரிக்க,

அவள் கண்கள் கலங்குகிறாள்.

“என்னம்மா ஆச்சு”

“குழந்தைக்கு பிறவியிலேயே காது கேளா குறைபாடு இருக்கு பெரியம்மா”

“அடப்பாவமே! உனக்கு என்ன ஆறுதல் சொல்றது? ஏற்கனவே இரண்டு மூளை வளர்ச்சி இல்லாமல் பிறந்து இறந்து போச்சு. இப்ப பிறந்து இருக்கிறதும் இப்படியா? கவலைப்படாதே கடவுள் வழிகாட்டுவார். இப்பதான் மருத்துவம் நிறைய வளர்ந்திருக்கே.”

“சொந்தத்தில் கல்யாணம் பண்ணிக்கிட்டது தான் தப்பு பெரியம்மா.”

“என்னம்மா சொல்றே”

“ஆமாம் பெரியம்மா, ரொம்ப நெருங்கின சொந்தத்திலே கல்யாணம் பண்ணிக்கொண்டால் இப்படி குறைபாடு உள்ள குழந்தை பிறக்குமாம்.”

“என்னடி குண்டைத் தூக்கி போடுகிறாய்?”

என அதிர்ந்து போகும் மங்கை, அடுத்து மகனுக்கு விபத்து என கேள்விப்பட்டதும் பதறி மருத்துவமனைக்கு விரைகிறாள்.

“என்னடா தம்பி இது?” – மங்கை மகனைப் பார்த்து அழ “உன்னை ஏமாற்றியதற்கு தண்டனை அம்மா”. என மகன் கூறுகிறான்.

“அப்படி சொல்லாதேப்பா! என்றைக்கும் நீ நல்லா இருக்க வேண்டும். நான் தான் புரியாது நடந்துகிட்டேன். எல்லாம் உன் மனசு போல நடக்கும். வருத்தப்படாதே.

என்று கூறும் போதே உள்ளுக்குள் நெய்யப்பட்டிருக்கும் பாசஇழை கண்ணுக்குப் புலனாகிறது.

தலைவன், தலைவிக்குள் நிலவும் நேசம்

இல்லறத்தில் ஈடுபடும் இருவரின் அன்பும் சுயநலம் அற்றதாய் இருந்தால் தான் அது நல்லறமாக அமையும்.

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் (குறள் -60)

நன்கலம் நன்மக்கட் பேறு”

மனைவியின் நற்குண நற்செய்கைகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் (நன்மை) என்பர். நல்ல மக்களைப் பெறுதல் அம்மங்கலத்திற்கு அழகு என்றும் அறிவடையோர் கூறுவர்.

அதற்கேற்றார் போல் ‘வீணையடி நீ எனக்கு’ நாவலில் வரும் சந்தானம், மகேஸ்வரி மற்றும் அவர்தம் மகன் அர்ஜுன் இவர்களைக் கூறலாம்.

விபத்தில் முதுகுத்தண்டில் அடிப்பட்டுபடுத்த படுக்கையாய் இருபது வருஷமாய் கிடக்கும் மனைவியை உண்மையாய் நேசித்து அவள் உயிர்ப்புடன் வாழ, அவள் ஓவிய கலைத்திறமையைப் போற்றி வளர்க்கும் கணவனாய் சந்தானமும் அவர் உயித்துணையாய் மகேஸ்வரியும், தன் தந்தை சொல் மீறாத மகனும் நெஞ்சை நெகிழச் செய்கிறார்கள். மீனாவிடம் மகேஸ்வரியை அர்ஜுன் அறிமுகப்படுத்தும்போது.

“இதுதான் என் அம்மா! மகேஸ்வரி. ஆக்ஸிடென்ட்டில் முதுகு தண்டில் அடிபட்டதால் அம்மாவால் நிற்கமுடியாது, நடக்கமுடியாது.”

“என்னவோ! நேத்திக்கு விபத்து நடந்த மாதிரி வருத்தத்துடன் சொல்கிறான் பார். இருபது வருஷத்திற்கு முன்னால் நடந்தது. இவன் ஆறு வயசு பையன். இன்னிக்கும் நான் இவ்வளவு சந்தோஷாமாய், நிறைவாய் இருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் இவங்க அப்பா தான்.”

என தன் கணவனையும், மகனையும் பற்றி மிக பெருமிதத்துடன் குறிப்பிடும் இடத்தில் அக்குடும்பத்தினரின் அன்பு புலனாகிறது.

“நேசிக்கும் பெண் எப்படி சுவையாவாள்? இவள் இல்லாத வாழ்க்கையை என்னால் கற்பனை கூட செய்ய முடியாது. அப்படி இருக்கையில் இவளை ஒதுக்கி விட்டுவாழ முடியுமா? அப்போது இவளுக்கு இருந்த மனக்குழப்பத்தில் என்னை இன்னொரு கல்யாணத்திற்கு வற்புறுத்தினாள், அர்ஜுனை நன்றாக வளர்க்க தன்னால் முடியாது என்று வேறு நினைத்து விட்டாள்”

“உங்க அங்கிள் அற்புதமான மனிதரம்மா! என் இழப்பில் இருந்து உயிர்த்தெழ நம்பிக்கை கொடுத்தார் என் கலையை வைத்து என் கவலையை மறக்க வைத்தார். என் முயற்சிகளுக்கு பக்க பலமாய் நின்று என்னை புதிதாய் பிறக்க வைத்தார். நாங்கள் இருவரும் இணைந்து எங்கள் மகனை அருமையாய் வளர்த்தோம்.

என்று கூறுவது ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு குடும்பமும் பயில வேண்டிய அன்பாகும்.

பெற்றோார் சொல்லிற்காக மீனாவை அர்ஜீன் மணந்தாலும் அவன் விட்டேற்றியாக வாழவில்லை. அவளை நேசிக்கிறான் அவள் மனது முழுதாக தன்மேல் அன்பாக மலரும் வரை காத்திருக்கிறான். அவள் தந்தை ஷங்கரின் உயிரை காப்பாற்றுகிறான்.

மாமனார் - மருமகன் அன்பு

அர்ஜுனும், ஷங்கரும் பழகும் பாங்கு அனைவரையும் ரசிக்கத் தூண்டும்.

“மீனு என்னடா மூஞ்சி இப்படி அடிச்ச மாதிரி இருக்கு? இராத்திரி அப்பா ரொம்ப பூச்சாண்டி காட்டிட்டேனா?”

“அதெல்லாம் இல்லே அங்கிள். தூக்க கலக்கத்தில் டீன்னு நினைச்சு விளக்கெண்ணெயை எடுத்து குடிச்சிட்டா.”

“ஓஹோ! அப்பா போடற டி மாதிரியே இருந்திருக்குமே?”

“அத்தனை மோசமில்லையப்பா”

“இதான் என் மீனுக்குட்டி! உனக்கு எத்தனை அருமையாய் மாப்பிள்ளை தேடி கொடுத்து இருக்கிறேன். அதற்கு நீ இன்னும் தாங்கஸ் சொல்லவே இல்லை”

“ஆமாம்! சோளக்காரிக்கு ஏத்த பொம்மை.”

ஷங்கருக்கு உடல்நலம் சரியில்லாமல் போகும்போது அர்ஜுன் காட்டும் அன்பு போற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

பேசிக்கொண்டு இருக்கும் பொழுதே ஷங்கர் வலியில் துடித்தார்.

டாக்டர்களும், நர்ஸ்ம் விரைவாய் ஓடிவந்தனர்

அர்ஜீன் அவர் அருகே வர

ஷங்கர் வாந்தியெடுத்தார்

அர்ஜீன் சட்டென கைகளில் ஏந்திக் கொண்டான்.

பரபரவென அர்ஜுன் இயங்கிக் கொண்டிருந்தான்.

மீனா நெகிழ்ந்து போயிருந்தாள். தன் தந்தையிடம் அர்ஜுன் காட்டும் உண்மையான பாசம் அவள் உள்ளத்தில் சற்று அமைதியை ஏற்படுத்தி இருந்தது.

மீனாவிற்கு மட்டும் அல்ல நமக்கும் நெகிழ்ச்சி ஊட்டுகிறது.

அண்ணன் தம்பி பாசம்

திருமகள் தேடிவந்தாள் நாவலில் அண்ணன் தம்பி பாசம். ராமன், இலட்சுமணன் போன்ற அன்பு அர்விந்தன், கார்த்திக் இடையே நிலவுகிறது.

ஜீப் ஹாரன் பலமாக ஒலிக்க...

"வாடா ஐ.பி.எஸ் வீட்டுக்கு போகலையா?

யுனிபார்மோட வந்துட்ட?

"அம்மாவும், அப்பாவும் அத்தை வீட்டிற்கு போயிருக்காங்க, இன்னும் வரலை. உன்னை கூப்பிட ஜீப்ஸியை எடுத்துட்டு வந்துட்டேன்."

"ஏன்? நான் ஆட்டோவில் வரமாட்டேனா?

நீ எதற்கு சிரமப்படுகிறாய்?"

"ச்சூ! யாரந்த ட்ரீம் கேர்ள்?"

"யாருக்குத் தெரியும்?"

"தெரியாமல் தான் ஜிப்ஸி வந்தது கூட அறியாமல் ஆட்டோவை அழைத்து விசிட்டிங் கார்டு சகிதம் அனுப்பினாயாக்கும்.

"நீ சொல்வதை நம்புகிறேன்." என்றவனை முதுகில் தட்டி,

"நீ எவ்வளவு நம்புவாய் என்று எனக்குத் தெரியும் முதலில் வண்டியை எடு" என்றான்.

சின்னவன் புன்னகையோடு தன்னருகே அமர்ந்திருந்த பெரியவனை ஓரக்கண்ணால் பார்த்து மெலிதாய் விசிலடித்தான்"

"என்ன ஹம்மிங் பலமாய் இருக்கு? ஆபீஸர் மாதிரி நடந்துக்கடா"

"ஆபிஸர் தோரணை வெளியில தான். வீட்டுக்குள்ளே கிடையாது தெரியுமா?

கார்த்திக் அர்விந்தனின் ஒவ்வொரு செயலிலும் உறுதுணையாக இருக்கிறான். தன் அண்ணன் மனம் கோணாமல் நடந்து கொள்கிறான். அர்விந்தன் அடிப்பட்ட போது பதறிபோய் ஓடி வருகிறான்.

முனகியவன் அப்போது தான் கார்த்திக்கைப் பார்த்தான்

"ரொம்ப வலிக்கிறதா?"

"பெய்ன் தாங்க முடியலையடா.."

"நீங்க பேசிகிட்டு இருங்க. நான் டாக்டரை கேட்டுட்டு வரேன்.." சுமி நகர

கார்த்திக் கண்ணீரே விட்டு விட்டான்.

"ஏய்! சீ! என்னடா இது? வீட்டில் யாருக்கிட்டேயும் சொல்லலை தானே?"

"இல்லை காலையில் சொல்லிக் கொள்ளலாம் என்று வந்துவிட்டேன்"

"அங்கே எதுவும் பிரச்சனை இல்லையே"

"எதுவும் இல்லை. நீ மனசை அலட்டிக்காதே"

என்று ஆறுதலாய் பேசும்போது அவன் பாசம் வெளிப்படுகிறது.

மூத்த தலைமுறைக்கும், இளைய தலைமுறைக்கும் இடையில் இழையோடும் அன்பு

பெரியவர்களை கேலி பேசும் இளைய தலைமுறையாக இல்லாமல் பாட்டியின் அன்பால் உயரும் ஒரு பெண்ணின் கதையை! உன்னிடம் மயங்குகிறேன் நாவல் எடுத்துக் காட்டுகிறது.

"பாட்டிக்கு வயசாச்சு! இன்னும் எத்தனை நாளைக்கு பூவுலகவாசியாய் கடவுள் முடிபோட்டிருக்கார்னு தெரியலை! நீ நல்லா படிச்சு உன் காலில் சுயமாய் நிற்கணும். கல்வி தான் உன்னை காப்பாற்றும். நீ யாருக்கும் சுமையாய் இருக்கக் கூடாது. வரவர உடம்புக்கே முடியலை. உன்னை தனியாய் விட்டுப் போக மனசில்லை. உன் பாதுகாப்புக்குத் தான் என் தங்கை மகன் வீட்டிற்குச் செல்கிறோம். எந்த உறவும் வேண்டாம் என்று தான் வாழ்ந்தோம். நானும் இல்லாவிட்டால் உன் கதி...!!

மதுமதி தன் பாட்டியின் வாயைப் பொத்தினாள்

"அம்மம்மா! எதுவும் இசைகேடாக சொல்லாதீர்கள்"

"அதனால் என்ன கண்ணம்மா? நான் சொர்க்கலோகத்துக்கே போனாலும் நீ ராக்கெட் ஏறி வந்து விடமாட்டாயா?

"பின்னே? வந்து உங்களை கையுடன் இழுத்து வந்து விடுவேனாக்கும்."

"உன்னால் முடியும் கண்ணம்மா! நீ சாதிக்கப் பிறந்தவள். உன்னை நான் பொத்தி வளர்த்து விட்டேன். உலகத்தில் நீ புரிந்து கொள்ளவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. என்னதான் செல்வத்துடன் வந்தாலும் இனி நாம் இருக்கப்போவது அடுத்தவர் வீடு. நம் வீட்டு சௌகாரியம் கிடைக்காது. கொஞ்சம் அனுசரித்துப் போக வேண்டும். எதிர்பார்ப்புகள் இல்லாமல் வாழ பழகிக் கொள்ள வேண்டும். எத்தனை இடையூறுகள் வந்தாலும் உன் முன்னேற்றம், உன் வாழ்க்கை பயணம் தடைப்படக் கூடாது.

எனும் பொழுது பாட்டியின் அன்பு வெளிப்படுகிறது.

முடிவுரை

விடிவது கூட தெரியாமல் இரவு முழுவதும் விழித்து இருந்து வேலை பார்க்கும் பரப்பரப்பான உலகமாக மாறி கொண்டிருக்கும் இன்றைய சூழலில் மனித வாழ்க்கை இயந்திரமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. உறவுகளின் சிறப்புகள் குறைந்து பணமே முக்கியமாய் போய்விட்ட நிலையில் அன்பே ஆனந்தம் தரும் என வலியுறுத்தும் நிலைமை ஏற்பட்டு உள்ளது. அன்பு தான் வாழ்வை வளப்படுத்தும் சுனைநீர் என்பதை இவரது நாவல்கள் தெள்ளத் தெளிவாய் வெளிப்படுத்துகின்றன.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

இலக்கியங்களில் நீதி

ப.கணேஷ் வடிவேல்,

உதவிப்பேராசிரியர்-தமிழாய்வுத்துறை,

ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருவானைக்கோவில், திருச்சி-05.

மனிதன் இயற்கை வகுத்த முறையிலிருந்தும் பிறழாது மெய் ஒழுக்கத்தோடு தருமத்திற்கு கட்டுப்பட்டு செம்மையாக வாழும் வாழ்க்கையே நீதியாகும். இந்நீதியானது மன்னர்களுக்கே அதிகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற புறநானூற்றுப் பாடலை அடியொற்றி நாட்டையும், நாட்டிலுள்ள மக்களையும், பாதுகாத்து அவர்களை நல்வழிப்படுத்தக் கூடியவனாக அரசனே இருக்கின்றான். நாட்டை ஆளும் மன்னன் நீதிக்கு புறம்பாக தவறு செய்யும் பொழுது மக்களையும், நாட்டிலுள்ள நீர் வளம், நில வளத்தையும் ஒரு சேர பாதிக்க கூடியதாக அமைந்துள்ளது. இந்நீதியானது பல்வேறு இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நீதியால் உயர்வடையும் அரசன்:

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் நீதி, நேர்மையோடு நடந்து கொண்டால், அவர்களை மிகச் சிறந்த தலைவர்களாக மக்கள் போற்றி வழிபடுவர். இதனை

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்" **(குறள்-388)**

என்கிறார் வள்ளுவர். மக்களை அந்நிய நாட்டு படையெடுப்பிலிருந்து காப்பாற்றுவது மட்டுமின்றி வறுமை, பஞ்சம் போன்ற இயற்கை பேரழிவுகள் எவையும் அணுகாது, அவர்களை நீதி, நேர்மையோடு வழி நடத்தி செல்லக்கூடிய திறன் உடையவனே உண்மையான தலைவன் ஆவான்.

அனுபவமே நீதி வழங்குவதற்கான தகுதி:

நீதியை அனைவராலும் வழங்கி விட முடியாது. அவற்றை வழங்குவதற்கான அனுபவமும், கல்வியும் மிகவும் அவசியமாகும். அனுபவத்தின் வாயிலாக வழக்குகளை ஆராய்ந்து அவற்றிற்கு சரியானதொரு முடிவு தெரிவிக்க முடியும். அதுவே உண்மையான நீதியாக கருதப்படும். இதனை

"உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப – நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்த சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்" **(பழமொழி-21)**

என்கிறது பழமொழி. கரிகாற் சோழ பெருவளத்தானிடம் இளமை பருவத்தில் ஒரு வழக்கு ஒன்று வந்தது. அவ்வழக்கை ஆராய்ந்து தீர்ப்பு சொல்வதற்கு அவனிடம் போதிய அனுபவம் இல்லாததால் வழக்கு தொடுக்க வந்தவர்கள் ஐயுற்றனர். இதனையறிந்த சோழன் மறுநாள் நரைமுடி தரித்து முறையானதொரு தீர்ப்பை வழங்கி சிறப்பித்தான். ஆகவே இங்கு நீதியானது அனுபவத்தின் தகுதியாக நிலைபெற்று உள்ளதை உய்த்துணர முடிகிறது.

கோள்களை தாக்கும் கோல்கள்:

நாட்டை ஆளும் அரசனின் ஆட்சி முறையை பொறுத்தே அவனுடைய நாட்டில் மழை வளமும், நீர் வளமும் சிறக்கும். நாட்டில் குற்றங்களும், கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் மிகுதியாக நடக்குமானேயானால் அங்கு செங்கோல் சாய்ந்து கொடுங்கோல் ஆட்சி புரிவதாக கருதலாம். இச்செங்கோலின் பிறழ்ச்சியால் பூமிக்கு மேலே சுற்றி வருகின்ற கோள்களைக் கூட பாதிக்கக் கூடிய வகையில் நீதியானது ஆளுமை செய்கின்றது. இதனை

".....மன்னவன் மகளே!
கோனிலை திரிந்திடின், கோனிலை திரியும்
கோனிலை திரிந்திடின், மாரி வறல் கூரும் **(மணிமேகலை-7:-7-10)**
மாரி வறங் கூறின் மன்னூயிர் இல்லை"

என்று மணிமேகலையிலும்,

"கோள் நிலை திரிந்து நாழி, குறைபடப் பகல்கள் மிஞ்சி நீனிலம் மாரியின்றி விளைவ.ஃகிப் பசியும் நீடிப் பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி ஆணையிவ் வுலகு கேடாம் அரசுகோல் கோடின் என்றான். **(சீவக சிந்தாமணி-255)** என்று சீவக சிந்தாமணியும் எடுத்துரைக்கிறது.

நீதிக்கு முன் அனைவரும் சமம்:

நாட்டை அரசாட்சி புரியும் அரசனானவன் தனது ஆட்சியில் நடுநிலைமையோடு அனைவரையும் ஒரே நிலையில் வைத்து பார்க்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் உறவினர்களின் சொல்கேட்டு முறை தவறி நடப்பதும், அதிகார போதையாலும், ஸ்திரீ மீது கொண்ட மோகத்தாலும், பொருளாலும், ஊழ்வினையாலும் நீதி தவறும் பொழுது, அவ்வரசனும், நாட்டு மக்களும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இதனை

"நடுவு இகந்து ஓரீஇ நயன் இல்லான் வினைவாங்கக்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல....."(பாலைக் கலி-7:1,2)

என்ற பாடலில் தன் ஆட்சியின் கீழ் வாழும் அனைவரையும் ஒரே நிலையில் வைத்து மதிக்கவேண்டும் என்ற செங்கோல் முறையைக் கைவிட்டும், அருள் உள்ளம் இல்லாத அமைச்சன் தன் மனத்தில் பட்டதையெல்லாம் கூறுவனவற்றை கேட்டுக் கொடுமை செய்வதையே தனது தொழிலாக மேற்கொண்ட அரசனுடைய கொடுங்கோல் ஆட்சியால் நீதி தவறுவதை மிக அழகாக எடுத்துரைக்கிறார் புலவர்.
இக் கருத்தை அடியெற்றி,

"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும் (புறநானூறு-184:-5-8)
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு"

என்ற பாடலின் மூலம் அறியலாம். இங்கு நீதியானது சாதி, மதம், இனம், மொழி, கலாச்சாரம் பாகுபாடு பார்க்காது அனைத்தையும் கடந்து, அனைவருக்கும் ஒரே மாதிரியான நிலையை கொண்டு இருப்பதால் இதை தெய்வத்திற்கு இணையாக வைத்து மக்கள் போற்றியுள்ளனர்.

நீதியை மறந்து நிதியை பறிக்கும் கொடுங்கோலன்:

தனிப்பட்ட மனிதனின் சுகத்திற்காகவும், செல்வத்தின் மீது கொண்ட பேராவாவின் காரணமாக குடிமக்களை துன்புறுத்தி, அவர்களின் இரத்தத்தை வரியாக வசூலிக்கப்படும் பணத்தின் கறையானது, மன்னனின் கையிலும், செங்கோலிலும் படிந்து தூய்மை இழந்து காணப்படுவதை,

"குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொள்ளு மாண்பே – குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமெ மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல (நீதி நெறிவிளக்கம்-28)

என்ற அடியில், குடிமக்களை வருத்தி வரி வாங்கும் வேந்தனுக்குச் சான்றோர் கூறுவதாவது. பசுவின் மடியைப் துன்புறத்தி பால் கறத்தல் முறையான செயலன்று. அதுபோல் குடிமக்களை அருளொடு காத்துப் பெறவேண்டிய அளவிற்கு வரியினை பெறும் வேந்தர்க்கு வெள்ளத்திற்கு மேலும் பல பேரெண்களை உடைய பெருஞ்செல்வம் கிடைக்கும் என்கிறது நீதி நெறி.

இதே போன்று

"குடியலைத் திரந்து வெங் கோலொடு நின்ற
முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே" (நறுந்தொகை-66)

என்ற அடியில் குடிகளைத் துன்புறுத்தி வரியெனும் பெயரால் பொருளை இரந்து பெற்றுக் கொடுங்கோல் அரசு செய்யும் முடியுடைய வேந்தன் கொடிய பதராவான் என்கிறது நறுந்தொகை.

திருக்குறளிலும்

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" (குறள்-552)

என்ற குறளில் கொடுங்கோல் வேந்தன் பெறும் வரி, மக்களை அச்சுறுத்திப் பெறும் பிச்சைக்கு சமமாகும் என்று வள்ளுவார் விளம்புகிறார்.

மக்களின் குறைகளை அறிவதே நீதி:

நாட்டு மக்களுக்கான தேவைகள், குறைகள் எவையென்று ஆராய்ந்து அறிந்து அவற்றை தீர்த்து வைப்பதே அரசனின் முதற்கடமை மட்டுமல்லாது நீதியும் ஆகும். இதனை,

"ஒற்றிற் நெரியா சிறைப்புறத் தோர்து மெனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்துங் - குற்ற
மறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று" (நீதி நெறிவிளக்கம்-31)

என்ற பாடல் அடியில், மக்கள் குறைகளை ஒற்றரால் தெரிந்து கொள்வதோடு மட்டுமின்றி, மாறுவேடம் பூண்டு ஆராய்ந்தும், தன் தோள் வலிமையைத் துணையாகக் கொண்டு ஆராய்ந்து தெரிந்து கொண்ட பிறகும், மக்கள் குற்றங்கள் முழுமையும் அறிந்து கொள்ளுதல் மிகவும் அரிதாய் இருக்கிறது என்று அஞ்சி ஏங்குவதே சிறந்த மன்னனுக்கான இலக்கணத்தை பெற்றவனாக திகழ்கிறான். இதுவே செங்கோலை நிறைநிறுத்தும் முறையாகும்.

நீர் பெருக்கத்திற்கு நீதியே ஆதாரம்:

அரசன் நீதியோடு ஆட்சி புரிவானேயானால், அவன் நாட்டில் வருண தேவன் மாதம் மூன்று முறை மழை பெய்ய செய்து நீர் நிலைகளை நிரம்ப செய்வான். அதற்கு அடிப்படையாக அமைவது அரசனுடைய ஆட்சியிலுள்ள செங்கோலாகும். இதனை,

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடையது போர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி (சிலம்பு-
கருங்க யற்கண் விழிதொல்கி நடந்தவெல்லா நின் கணவன் கானல்வரி-25)
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி"

என்ற பாடலில், காவேரி பெருக்கத்திற்கு செங்கோலே அடிப்படையாக உள்ளது என்கிறார் இளங்கோவடிகள்.

மன்னனின் அழகே நீதி:

மன்னனின் அரசையும், ஆட்சியையும் பிற நாட்டு மன்னர்கள் பார்த்து புகழுவது போன்று அழகு செய்வது செங்கோலான நீதியாகும். இந்த நீதியே அவனை மக்களிடமும், பிறநாட்டு அரசனிடம் தலைமைத்துவம் நிறைந்து அழகனாக காட்சியளிக்கிறான் . இதனை,

"மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை" (ஔவையார் தனிப்பாடல் திரட்டு-29)

என்கிறார். ஔவையார். இங்கு மன்னனின் நேர்மையான அரசாட்சியே அழகான நீதியாகும் என்கிறார்.

நிறைவுரை:

நீதியானது பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிணாமங்களை பெற்று இருக்கிறது. நம்முடைய வாழ்வின் அங்கமாகக் கலந்து விட்ட நீதியை, பலர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். இதனால் நாட்டிலும், உலகத்திலும் சமநிலையின்றி பல்வேறு இயற்கை சீற்றங்களும், பேரழிவுகளும் நிகழ்வதற்கு அடிப்படை காரணமாக அமைவது நீதியாகும். இங்கு நீதியை கடைபிடித்து வாழ்பவர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுவர். அனுபவமே நீதியை உரைக்கும் தகுதியாகவும், இயற்கையை மாற்றும் சக்தி நீதி இருப்பதையும் அறியமுடிகிறது. மேலும் நீதிக்கு முன் எவ்வித வேறுபாடும் கிடையாது. நீர் பெருக்கத்திற்கும், மன்னனின் அழகுக்கும் நீதியே அடிப்படையாக உள்ளது. நீதியை கடைபிடித்து வாழாத மன்னன் பதராகவும், கொடுங்கோலனாகவும், பிச்சைகாரனகவும் வாழ்வான் என்று தமிழிலக்கிய நூல்கள் எடுத்தியம்புவதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

பாவாணர் பார்வையில் தொல்காப்பியம்

த.உமா

ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை,விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ,திருச்செங்கோடு.

முன்னுரை

மொழிக்குக் காட்டமைப்பைக் கொடுக்கும் தொல்காப்பியத்தை தொல்காப்பியர் காலம் தமிழ்மொழியை ஆய்ந்து வெறும் இலக்கணத்தை மட்டும் கூறாமல், இசையயும் உளவியில தன்மையையும் வானியலையும் கணித்ததையும் தத்துவத்தையும் பட்டாங்களையும் ஒழுக்கத்தையும் அகராதி வடிவத்தையும் பாவாணர் பார்த்திருக்கின்றார் தொல்காப்பியம் பற்றிய பாவாணரின் பன்முகப் பார்வையை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முறைநூல்

ஒவ்வொரு நாட்டிலும் முதலாவது தோற்றக்கூடிய சிறந்தநூல் மறைநூலாகும் ஆங்கிலத்தில் கிறித்துவ மறைநூலுக்கு பைபிள் என்று பெயர் இது புத்தகம் என்று பொருள்படும் வடமொழியில் வேதமே முதல்நூல் வித்(அறி) என்னும் வேர்ச்சொல்லில் இருந்து வேதம் பிறந்தது. இங்ஙனம் தமிழுலும் முதலில் எழுந்த நூல் மறைநூலாகும் அது பிற கலைகளுக்கும் பொதுவான **“மறையென மொழிதல் மறையோர் ஆறே” என்றும் தொல்காப்பியம் வழி அறியலாம்.**

“மறைமொழி கிளர்ந்த மந்திறத்தான” (செய். 158)

“மறைமொழி தானே மந்திரம் என்ப” (செய்யுள். 17)

என்பதன் வழியாகத் தமிழர்க்குத் தனிமறை இருந்ததை அறியலாம்.

“அரிபிற்கோடல் எந்தனர் மறைத்தே” (பிறப் 20)

தொல்காப்பியம் குறிப்பிடும் அந்தணர் என்னும் சொல் முனிவரைககுறித்ததென்றும் தொல்காப்பியம் இலக்கணம் கூறுவது தமிழ் எழுத்துகளுக்கே என்றும் தெளிவுபட விளக்குகின்றார்.

“நான்மறை முந்நிய அதங்கோட்டாசாற்கு”

நான் மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையே குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் காலத்தில் இருந்த ஆரிய ’வேம் ரிக் மட்டுமே அதனால் “நான்மறை” என்பது தமிழ்மறையே என்று தெளிவாக விளக்குகின்றார்.

பாடங்குநூல்

தமிழ் இலக்கணக் குறியீடுகளிலிருந்தே பண்டைத் தமிழர்க்கு பாடாங்கு நூல் தெரிந்தமை உணர்த்தப்படுகிறது. ஓர் உயிர்ப்பொருளில் உயிர், உடம்பு என இரு பொருள்கள் கலந்திருப்பினும் காண்பதற்கு உடம்பே முற்படத்தோன்றும் அதன் பின்னதே அதற்குள் உயிர் இருப்பதாக அறியப்படும்.

மெய்யின் வழியே உயிர் தோன்று நிலையே"

என்று குறிப்பிடுகின்றார் இப்பாடாங்கு அறிய தொல்காப்பியம் காலத்திலே இருந்ததைச் சான்று வழி உணரமுடிகிறது.

ஒழுக்கநுல்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"

ஒழுக்கத்தைப் பேணிக்காப்பதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர் தமிழ் மக்கள் அதனால்தான் ஒழக்கம் உயிரைவிட மேலானதாகக் கருதப்பட்ட உண்மையை குறள் விளக்கி நிற்கின்றது இவ்வொழுக்கம் தொல்காப்பிய காலத்திலும் இடம்பெற்றிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"

அறம், பொருள், இன்பம் என்பது ஒழக்க நூல் பாகுபாடாகும்.

உளநூல்

உள்ளத்து உணர்வுகளைக் கூறுவதில் வல்லவர் தொல்காப்பியர். என்பதற்கு மெய்ப்பாட்டியல் ஒன்றே போதுமானது மெய் + படு மெய் - உடம்பு படு – வெளிப்படுதல் மெய்யின் வழியாக உணர்வுகளின் வெளிப்பாடு எட்டு வகையாக வெளிப்படுகிறது.

"நகையே அழுகே இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று"

ஒவ்வொரு மெய்ப்பாடும் நான்கு நிலைகளில் வெளிப்படும் என்று 32 வகையாகக் குறிப்பிடுகின்றார்.

கணித நூல்

கண் + கிதம் = கணிதம் கண் கருது, மதி, அரி என்று பொருள்படும் அரை ஒன்று தூணி பதக்கு கலம் சாடி போன்ற அளவுப் பொருள்கள் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்படுகிறது.

"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே

ஓர் அளவு இசைக்கும் குற்றெழுத்து"

என்ற தொல்காப்பிய இலக்கணம் கணிதத்தைப் போலக் கட்டமைக்கப்பட்டுள்ளது 1 + 1 = 2 என்பதைப் போல க் + அ = க இதுவே விதியாக இருக்கின்றது.

வான்நூல்

வான்நூல் அறிஞனுக்குத் தமிழில் கணியன் என்பது பெயர். இதன் பொருள் கணியன் கணிப்பவர் கணித்தல்.இவை தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்தமை வெளிப்படுகிறது வானத்தைக் கொண்டு கணிக்கும் திறத்தைத் தொல்காப்பியம் காட்டுகிறது கார் காலம் கூதிர்காலம் இப்பெயர்கள் வானத்தோடு தொடர்படையதாகும் பெரும்பொழுது சிறுபொழுது குறிப்பிடும் போது

"காரும் மாலையும் முல்லை" **(அகத் - 6)**

“வைகறை விடியலும் மருதம்” **(அகத் 9)**

என்று குறிக்கின்றார்.

தவநூல்

ஒழுக்கத்தோடு வாழ்ந்த தலைவனும் தலைவியும் அடைய வேண்டிய இறுதிநிலை தவநிலையாகும். அறம், பொருள், இன்பம் பெற்றுத் தவநிலையை அடைதலே இல்லற வாழ்வின் பயனாகும். அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பம் பயனும் அது என்று வள்ளுவர் வாழ்க்கையின் பயனாக அன்பையும் அறனையும் குறிப்பிடுகின்றார்.

அகராதி நூல்

பிங்கல சூடாமணி நிகண்டு போன்ற செய்யுள் வடிவ அகராதிகளில் இருபது கிறித்துவர்கள் தமிழ்ச் சேவையினால் பல அகராதிகளை அள்ளிக் கொடுத்துள்ளனர். அதற்கு முன்னரே தோன்றிய தொல்காப்பியத்தில் அகராதியாகவே “உரியியல் என்னும் இயலைப் படைத்துள்ளார்.

“ஒருசொல் பல பொருட்கு உரிமை தொன்றினும்

புலசொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்”

பழுப்பு நிறம் ஆகும் (உரி – 14) பயபபே பயன் (உரி – 9) போன்று அகராதிக் கூறுகள அமைத்துள்ளார்.

முடிவுரை

மொழிக்கு ஆதாரமாக தொல்காப்பியம் என்னும் நூல் விளங்குகிறது மனித உயர்வுகளின் வெளிப்பாடுகளை அறிந்து கொள்ள உதவுகிறது. தொல்காப்பியர் காலத்திலிருந்து வானத்தை கணிக்கும் முறை இருந்துள்ளதை இதன் மூலம் அறியலாம்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

புறநானூற்றில் அறம்

செ.ஓவியம்

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

முன்னுரை

உலகத்தின் முதல்மொழியாகவும், மூத்த மொழியாகவும், உயர்தனிச் செம்மொழியாகவும், திகழ்வது தமிழ்மொழி ஆகும். இறவாப் புகழுடைய இலக்கிய இலக்கணங்களைப் பெற்றுள்ளதாலே இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. இலக்கியங்கள் என்பவை காலக்கண்ணாடியாகத் திகழ்பவை. அதிலும், குறிப்பாக சங்க இலக்கியங்கள் பண்டைத்தமிழரின் வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கின்றன. பண்டைத்தமிழர் காதலையும் வீரத்தையும் கண்களாகப் போற்றினர். எனினும் "மறத்திலும் அறம்" போற்றப்பட்டது. அவ்வகையில் புறநானூற்றில் 'அறம்' என்னும் சொல் எவ்வப் பொருண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புறநானூறு

புறப்பொருள் பற்றிய 400 பாடல்களின் தொகுப்பே புறநானூறு. தொகை நூல்களுள் புறநானூறு வரலாற்றுச் சிறப்புமிக்கது. 4 அடி முதல் 40 அடி வரையிலும், இந்நூற்பாடல்கள் செல்கின்றன. ஆசிரியப்பாவால் ஆன இந்நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயர் தெரியவில்லை. மன்னர்களின் ஆட்சி, மக்களின் வாழ்க்கைமுறை, புலவர்களின் அறிவுரை, சங்ககாலத் தமிழகத்தின் அரசியல், சமுதாய நிலை, நாகரிகம், கல்வி, கலை வளர்ச்சி முதலியவற்றை வெளிப்படுத்தும் கலைப்பெட்டகமாக புறநானூறு திகழ்கிறது.

அறம் - ஒரு விளக்கம்

'அறம்' எனும் சொல்லுக்குப் பரந்து விரிந்த பொருளும் ஆழமான பொருளும் காணப்பெறுகிறது. ஒழுக்கம், நீதி, நேர்மை, ஈகை, ஒப்புரவு, நல்வினை, கட்டுப்பாடு என்று பல்வகைப் பொருள்களைக் காணமுடிகிறது. தமிழ் இலக்கியம் அறத்தைப் பற்றித்தான் மிகுதியாகப் பேசுகிறது. அறத்தை மிகவும் வலியுறுத்துகிறது. எனினும் 'அறு' எனும் வினைச்சொல் அடியாய்ப் பிறந்ததே அறம் என்பதாகும். அறு ஃ அம் அறம் என்ற சொல்லுக்கு அறுத்துச்சொல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, வேறுபடுத்து, தூண்டு என்று பல பொருள்களை உள்ளடக்கியதாக உள்ளது. மனிதன் தனக்கென ஒரு கட்டுப்பாட்டிற்காக வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே 'அறம்'. "பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெறிவதே அறம்" என்று தண்டபாணி தேசிகர் விளக்கம் தருகிறார்.

இலக்கியம் தரும் விளக்கம்

அபிதானசிந்தாமணி, அறம் என்பது முப்பத்திரண்டு பொருள்கள் உள்ளதாகக் குறிப்பிடுகிறது. சமயம், ஞானம், புண்ணியம், நோன்பு, ஒழுக்கம், தவம் தானம் போன்ற பொருள்களையும் முன்வைக்கிறது. அகராதிகள் தரும் விளக்கங்களில் அறம் என்பது ஏழைகளுக்கு இலவசமாகக் கொடுப்பது, நோயுற்றோருக்கு இலவசமாக மருந்து ஈவது, அறச்சாலை போன்ற விளக்கங்களைத் தருகிறது. மனித வாழ்வின் கடமையும் ஒழுக்கமுமே அறம் என்ற அடிப்படையில்

"தானு நிறைவுற்றுத் தன்னவரு பின்புறுதற்
கான வொழுக்காதே அறம்"

என்று சுத்தானந்த பாரதியார் விளக்கம் தருகிறார்.

செங்கோல்

மன்னனின் சிறந்த ஆட்சிக்கு சிறப்பு செங்கோல் ஆகும். சிறந்த மன்னனுக்குரிய இலக்கணம் செங்கோல் வளையாத ஆட்சியாகும். 'எம்மரசன் செங்கோலன்' எனக் குடிமக்கள் வருந்திக் கூறும்படி நடத்தலாகாது எனத் தமிழ் மன்னர்கள் கவலைப்பட்டனர் முறை தவறி நடப்பதை வெறுத்தனர். குடிமக்களைப் பாதுகாக்கும் அரச மரபில் பிறத்தலைச் சிறப்பாகக் கருதினர். இதனை புறநானூற்றில்,

"பகைவ ருண்ணா வருமண் ணினையே
அம்பு துஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே" (20-17)

என்ற அடிகளில் அறியலாம். அம்பு தங்கும் காவலையுடைய அரசனுடனே அறம் தங்கும் செங்கோலை உடையவன் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என அவனின் ஆட்சிச் சிறப்பை குறுங்கோழியூர்கிழார் புகழ்ந்து பாடுகிறார். வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கூறும்பொழுது 'அறமே' நிலவும் செங்கோல் ஆட்சி செய்பவன். மக்களுக்கு நீதி அளிக்கும் முறையானது, வேண்டுங்காலத்தில் பெய்கின்ற மழைத்துளி போன்றது என்பதை

"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதின் பதன்எளியோர் ஈண்டு
உறை வேண்டு பொழுதில் பெயல்பெற் றோரே" (35:14)

என்ற பாடலடிகளில் புலப்படுத்துகிறார்.

கொடை

புறப்பொருள்களில் தமிழர் வீரமும் கொடையுமே முதன்மைப்படுத்தப் பெறுகின்றன. சங்ககாலத்தை 'வீரயுகம்' என்பது போலக் கொடையுகம் என்றும் கூறலாம். சங்ககால மன்னர்கள் மட்டுமன்றிக் குறுநில மன்னர்கள், வேளிர்கள், மறவர்கள், புலவர்கள் முதலிய பிறரும் கைவண்மையில் சிறந்து விளங்கினர் என்பதற்குப் புறநானூற்றில் மிகுதியான சான்றுகள் உள்ளன.

"புறஞ்சிறை மாக்கட்கு அறங்குறித்து, அகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக்" (28,11)

வேலிக்கு அப்பால் நின்று விரும்பிக் கேட்பவர்களுக்குக் கரும்பைப் பறித்து எறியும் அறமுடைய மக்களை உடையது சோழன் நலங்கிள்ளியின் நாடு. அந்நாட்டு மக்கள் கரும்பைத் தம் உழைப்பின் விளைச்சல் என்று தன்னலத்தால் தாமே கொள்ளாத உணர்வுடையவர்கள் என்று அவர்களின் கொடைத்தன்மையை புலவர் உணர்த்துகிறார்.

ஆட்சிச்சிறப்பு

சங்ககால மன்னர்கள் அரசியலைச் செம்மையாகச் செலுத்த அமைச்சர்கள், ஆலோசகர்கள் என்ற இன்னோருடன் ஒற்றர்கள், புலவர்கள், பொருநர்கள், கூத்தர், பாணர், விறலியர் முதலியோர் வழியாகவும் கண்டும் கேட்டும் உலக நடப்பை அறிந்தனர்.

வீரமிக்க சோழநாட்டின் தலைநகர் உறையூர். அந்நாட்டின் அவைக்களத்திலே அறம் நின்று நிலைபெறுவதாலே, முறைவழுவாமல் சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன் நல்லாட்சி புரிந்து வருவதாக மாறோக்கத்து நப்பசலையார் பாராட்டிய புறப்பாட்டில்,

"மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்றாகலின் அதனால்
முறைமையின் புகழு மன்றே மறமிக்கு" (39:9)

என்று மொழிவர். இக்கருத்தை ஒத்தாற்போல மற்றொரு புறப்பாட்டில்,

"அறந்துஞ்சு உறந்தைப் பொருநனை" (58-9)

என்று சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனைக் காரிக்கண்ணனார் அறம் வளரும் உறையூர்ப் பகுதிக்கு அரசன் நீ என்று பாராட்டுகிறார்.

நீதிமுறைமை

மன்னன் வலிமை வாய்ந்த நாற்படைகளை உடையவனாக இருந்தாலும், தன்னால் விரும்பப் பெற்றவர் கொடுந் தொழிலைச் செய்தால் தவறாமல் அவரைத் தண்டிக்க வேண்டும். அயலவர் எனினும் அவர்தம் உயரிய குணங்களைக் கெடுக்காமல் ஆட்சி செய்து நீடு வாழ்க என்று மதுரை மருதனிளநாகனார், பாண்டியன் நெடுமாறனுக்கு எடுத்துரைக்கின்றார்.

"நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்" (55:11-15)

வேண்டியவர் தவறு செய்தால் பொறுத்துக் கொள்ளுதல் அறநெறியன்று. வேண்டாதவர் நற்குணம் உடையவராய் நல்லது செய்யும் காலை அவர்களைத் துன்புறுத்துவது அரசனுக்கு அறமாகாது. எனவே, மன்னன் நடுநிலைமையோடு நீதி வழங்க வேண்டும் என்று புலவர் உரைக்கின்றார்.

பண்டைத்தமிழ் மன்னர், குறுநிலமன போரில் அறம்

னர், வேளிர் ஆகியோர் நிகழ்த்திய போர்களைப் புறநானூறு விரிவாகக் கூறுகிறது. போர்வினையிலும் எந்நெறியையும் மேற்கொண்டு வாகை சூடலாம் என்று பண்டைத் தமிழர் எண்ணவில்லை. வீரத்தை வெளிப்படுத்தும் போரிலும் மறவர்கள் அறநெறியினைப் பின்பற்றினர். இவ்வாறு நெறிமுறை பிறழாது போர் புரிந்த மன்னர்களை கழாத்தலையார்,

"பருந்து அருந்துற்ற தானையொடு செருமுனிந்து

அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்" (62:6-7)

என்று பாடுகிறார். படை ஒழிந்தது எனப் போரைத் தவிர்க்காமல், படை வீரர்களின் உயிர்க்கொடையை மதித்துப் போரிட்டனர்.

அறவோர் அவை

அரசர்கள் மக்களுக்கு ஏற்படும் வழக்குகள் அனைத்தையும் கேட்டு நீதி வழங்குதல் இயலாத ஒன்று. எனவே அறவோர் அவைகளும் தொழிற்பட்டு வந்தன. இவ்வகையில் அறநூல் வல்லார் குழு விளங்கிற்று. இக்குழுவினர் நடுநிலை பெற்றுச் சிறந்தனர். அவர் கூடிய இவ் அவையை புறநானூற்றில்,

"அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்" (93-7)

என்பதனாலும்,

"அறம்அறக் கண்ட நெறிமான் அவையத்து" (224:4)

"அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த"

என்பதனாலும் 'அறவோர் அவை' சிறப்புற்று இருந்தன என்பதனை அறியமுடிகிறது.

செய்நன்றி மறவாமை

செய்ந்நன்றி மறத்தல் மிகக்கொடிய பாவம் என்று ஆலந்தூர்கிழார் என்ற புலவர் மிக வன்மையாக மொழிகின்றார்.

"..... ஒருவன்

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென

அறம் பாடிற்றே ஆயிழை கணவ" (34:7)

என்பது புலவர் வாக்கு.

அறக்கடவுள்

ஆட்சிமுறைமையில் மட்டுமல்லாது இல்வாழ்விலும் அறம் சிறப்பாக போற்றப்பட்டது.

"மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்

துவ்வாள் ஆகிய என்வெய் யோளும்" (159:13)

என்பதிலிருந்து வறுமையிலும்கூட அறக்கடவுளை மறவாத திறத்தை உணரமுடிகிறது.

கூற்றுவன்

உலக உயிர்களின் வாழ்நாளை நிர்ணயிக்கும் கொடிய கூற்றுவனை,

"அறனில் கூற்றம் திறனின்று துணிய" (210:8)

என்று பெருங்குன்றூர் கிழாரும்,

"அறனில் கூற்றம் திறனின்று துணிய" (237:9)

என பெருஞ்சித்திரனாரும் அறம் என்பதே சிறிதும் இல்லாதவன் என்று சாடுகின்றனர்.

கொடை மடம்

படை மடம் படாத பெருவீரனாய பேகன், கொடை, மடம்பட்டவன், கொடை மடத்தைத் 'தேற்றா ஈகை' எனவும் கூறுவர். மறுமைப்பயன் கருதாது பிறர் வறுமை தீர்க்கும் கடமையில் இன்பம் கண்ட இவன் கொடைக் கோட்பாட்டினை,

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்

"அறவிலை வணிகன் ஆஅய்அலன்" (134:2)

என ஏணிச்சேரி முடமோசியார் உணர்த்துவார்.

முடிவுரை

இறுதியாக 'அறம்' என்ற சொல்லுக்குப் பலர் பலவிதமான பொருள்களைத் தந்தாலும் 'தர்மம்' என்றும், மனித வாழ்வுக்குத் தேவையான நற்பண்புகள், உயர்கருத்துகள் 'அறம்' என்ற சொல்லில் அடங்கியுள்ளது. திருவள்ளுவர் அறம் பற்றிக் கூறும்போது,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

என்ற குறளில் ஒரு மனிதனுக்கு மனதளவில்கூடத் தீங்கு நினையாமல் இருப்பதே அறம் என்று கூறுகின்றார். எவ்வுயிர்களுக்கும் ஊறு செய்யா நிலையே அறம் ஆகும். அறுத்தல் - நீக்குதல், தீமையானவற்றை நீக்குவதே அறமாகும். "அறமே அறிவு", "அறிவே அறம்" என்கிறார் கிரேக்க அறிஞர் சாக்ரட்டீஸ்.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

திருக்குறள் மற்றும் நாலடியாரில் ‘எல்லாம்’ எனும் சொல்

முனைவர் தே.இந்திரகுமாரி,
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-19.

உலக வரலாற்றில் காலம் மனித இனத்திற்குத் தந்த நற்கொடையே தமிழ் மொழியாகும். அம்மொழியில் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமின்றி வாழ்வின் பொருளுக்கும் இலக்கணம் தந்து தமிழரின் மரபுகளை அழியாமல் காத்துவரும் பெருமைக்குரிய நூல் தொல்காப்பியமாகும். இதில்,

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே

(தொல்.பெயரியல்.640)

எனும் நூற்பா சொல்லின் பொதுவியல்பினை சுட்டிக்காட்டுகிறது. அவ்வகையில் ‘எல்லாம்’ எனும் சொல் திருக்குறள் மற்றும் நாலடியார் பாடல்களில் உருபு ஏற்கும் நிலையில் அடையும் மாற்றங்களைக் குறித்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகிறது.

‘எல்லாம்’ எனும் சொல் அ.ஃறிணையில்

‘எல்லாம்’ எனும் மகரவீற்றுச் சொல் அ.ஃறிணையில் ‘ஐ’ எனும் வேற்றுமை உருபினை ஏற்குங்கால் அதன் ஈற்று மகரம் கெட்டு ‘வற்றுச்’ சாரியை பெறும். அதன் ஈற்றில் உம் சாரியை இணைந்து நிற்கும். எல்லாம் + ஐ ==> எல்லா + வற்று + ஐ + உம் ==> எல்லாவற்றையும் எனவரும்.

எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்று என் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதியான

(தொல்.உருபியல்.17)

உயர்திணையில்

எல்லார் + ஐ ==> எல்லா + நம்மு + ஐ + உம் ==> எல்லார் நம்மையும் எனவரும்.

உயர்திணை ஆயின் நம் இடை வருமே

(தொல்.உருபியல்.18)

இவ்வாறே,

படர்க்கையில்

எல்லாரும் + ஐ ==> எல்லார் தம்மையும

முன்னிலையில

எல்லீரும் + ஐ ==> எல்லீர் நும்மையும்

என முறையே தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் பெற்று வரும்.

பிற்காலத்தில் நன்னூலாரும் எல்லாம் எனும் சொல் 'வற்று' சாரியை ஏற்பதற்குப் பதிலாக அற்றுச் சாரியை ஏற்கும் எனும் வேறுபாட்டை மட்டும் குறிப்பிட்டு பிற திரிபுகளை ஏற்கிறார்.

எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்று ஓடு உருபின் மேல் உம் உறும் ஏ
அன்றேல் நம்இடை அடைந்து அற்று ஆகும்

(நன்னூல், எழுத்து, உருபுபுணரியல்.245)

இத்தகைய திரிபுகள் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களில் இடம்பெற்றனவா என்பது ஆய்வதற்குரியது. தொல்காப்பியர் காலத்திற்கும் பிற்பட்ட இலக்கியங்களில் எல்லாவற்றையும், எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும் எனும் சொற்கள் செய்யுளில் இடம்பெற்றுள்ளதாக உரையாசிரியர்கள் குறிப்பிடவில்லை. உலகியல் சார்ந்த உரைநடை நூல்களில் உள்ளதையே சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்ட இலக்கியங்களில் இவை இடம்பெற்றிருக்கலாம் எனலாம். எள்ளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் போன்றதே இலக்கணமாதலால் தமது காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களின் அடிப்படையில் தொல்காப்பியம் இச்சொற்கள் கூறும் திரிபுகளை இவ்வாறு விவரிக்கிறது.

ஆனால் பிற்காலத்தில் இச்சொற்கள் சாரியை இன்றியே வழங்கப்பட்டது என்பது திருக்குறள் மற்றும் நாலடியார் ஆகிய நூல்கள்வழி ஆராய்ந்து உறுதிசெய்ய முடிகிறது.

அதாவது உயர்திணையில்

எல்லா நம்மையும் ==> எல்லாரையும் ==> நம் எல்லாரையும்

எல்லா நும்மையும் ==> எல்லீரையும் ==> நும் எல்லாரையும்

என வருகிறது.

அ.ஃறிணையில்

எல்லா அவற்று ==> எல்லா வற்றையும் ==> அவற்றை எல்லாம்

என மாறுதல்களை ஏற்கிறது. இதனை இலக்கியங்களின்வழி ஆராயும்போது திருக்குறளில் முதற்குறளில் தொடங்கி சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட குறட்பாக்களில் 'எல்லாம்' எனும

சொல் இடம்பெறுதல் காணமுடிகிறது. ஆனால் இக்குறட்பாக்களில் தொல்காப்பியர் கூறும் இலக்கணங்களுக்குரிய வகையில் எடுத்துக்காட்டுகள் எங்கும் இல்லை. எல்லாக் குறட்பாக்களிலும் எல்லாம் எனும் சொல் சாரியை இன்றியே, முன்னும் பின்னும் வரும் சொற்களின் அடிப்படையில் திணை உணர்த்துகின்றன. அக்குறட்பாக்களின் வரிசை எண்கள் கீழ்வருமாறு.

1, 15, 33, 39, 44, 68, 72, 79, 81, 191, 212, 232, 238, 260, 268, 294, 296, 299, 309, 320, 321, 322, 325, 343, 361, 375, 443, 444, 457, 507, 542, 547, 582, 610, 651, 661, 673, 752, 776, 832, 851, 891, 981, 1012, 1013, 1033, 1033, 1064, 1067, 1168 ஆகியன.

உயர்திணையில்

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் (கு.72)
அறன்கடை நின்றாருள் எல்லாம் (கு.142)
எல்லாரும் எள்ளப் படும் (கு.191)
ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல (கு.1012)

இங்கு எல்லா தம்முள்ளும் எனத் தம்முச் சாரியை இடம்பெற்றிருக்க வேண்டும்.

அ.ஃறிணையில்

அகர முதல எழுத்தெல்லாம் (கு.1)
புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் (கு.77)
பேதைமை எல்லாம் தரும் (கு.507)

இங்கு எல்லாவற்றையும் என வற்றுச் சாரியை இடம்பெறல் வேண்டும். ஆனால் மேற்குறிப்பிட்ட குறட்பாக்களில் 'எல்லாம்' எனும் சொல் சாரியை இன்றி தனக்கு முன்னும் பின்னும் வரும் சொற்கள் அடிப்படையிலேயே திணையை உணர்த்துகிறது என்பது இத்தன்மை பற்றி பேரா.ந.சேஷாத்திரி அவர்கள் தமது 'எல்லாம்' எனும் கட்டுரையில் தெளிவாக விவரித்துள்ளார். இதன் அடிப்படையிலேயே பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நாலடியாரிலும் ஆராயமுடிகிறது. 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' எனும் கூற்றின்படி திருக்குறளைத் தொடர்ந்து நாலடியாரிலும் இவ்வாறு ஆராய்வது சிறப்பிற்குரிய ஒன்றாகிறது. நாலடியாரின் கீழ்க்கண்ட பாடல் எண்ணிக்கைகளில் 'எல்லாம்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது.

23, 65, 66, 80, 107, 109, 140, 144, 145, 146, 167, 188, 190, 234, 287, 317, 324, 338, 380 இவ்வாறு சுமார் இருபது பாடல்களில் 'எல்லாம்' எனும் சொல் இடம்பெற்றுள்ளது.

உயர்திணையில்

எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம் (பா.145)
இல்லாதார்க்கு யாது ஒன்றும் ஈகலார் எல்லாம்
இனியார் தோள் சேரார் (பா.338)

இங்கு எல்லா தம்முள்ளும் எனத் தம்முச் சாரியை இடம்பெற வேண்டும்.

அ.ஃறிணையில்

வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோடு இடை மிடைந்த சொல் (பா.80)
குழை கொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழை தம்கண் சென்றார்க்கு ஒருங்கு (பா.167)
முக்குற்றம் நீக்கு, முடியும் அளவு எல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும் (பா.190)

இங்கு எல்லாவற்றையும் என வற்றுச் சாரியை வர வேண்டும்.

இப்பாடல்களிலும் 'எல்லாம்' எனும் சொல் சாரியை இன்றி தனக்கு முன்னும் பின்னுமாக வரும் சொற்களின் அடிப்படையிலே 'திணையை உணர்த்துகிறது எனத் தெளிவாகிறது' இதுபோலவே பிற இலக்கியங்களையும் ஆராய்ந்து இதனை உறுதிசெய்ய இயலும்.

துணை நூல்கள்

1. தொல்காப்பியம் (www.infitt.org/projectmadurai/listofbooks)
2. நன்னூல் (www.infitt.org/projectmadurai/listofbooks)
3. இந்திய பல்கலைக்கழக ஐந்தாவது கருத்தரங்க ஆய்வுக்கோவை, சென்னை மாநிலக் கல்லூரி வெளியீடு, 1975.
4. திருக்குறள் (www.tamilvu.org)
5. நாலடியார் (www.tamilvu.org)

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தமிழ் இலக்கியங்களில் பல பொருள் ஒரு சொல்

ச.இந்திரா

ஆய்வியல் நிறைஞர்,விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,திருச்செங்கோடு.

முன்னுரை

தமிழ் மொழியில் உள்ள சொற்கள் எவ்வாறு பிறக்கின்றன என்பதற்குப் பலர் பல காரணம் கூறிய போதிலும் சில சொற்கள் பிறப்பதற்கு உருவ ஒற்றுமைகள் வழி வகுக்கின்றன என்பதற்குத் தமிழில் "**மொக்குள்**", "**அண்ணல்**" என்ற சொற்கள் எவ்வாறு அமைகின்றது என்பதனைக் காண்போம்.

மொக்குள்

"மொக்குள்" என்ற சொல் சங்க இலக்கியங்களில் பல பொருள் தரும் ஒரு சொல்லாகும். இச் சொல் முதலில் நீரில் தோன்றும் நீர்க் குமிழியைக் குறிக்க எழுந்தது எனலாம். இந்த மொக்குள் (நீர்க்குமிழி) மூன்று விதக் காரணங்களால் நீரில் பிறக்கின்றன என்று சங்ககாலப் புலவர்கள் எடுத்துக்காட்டுகின்ற உதாரணங்களின் மூலம் நமக்கு அவர்கள் சொல்லாமல் சொல்லிச் சென்றுள்ளனர்.

நீர்க்குமிழி

மழை பெய்யும்போது ஏற்படுகின்ற வெள்ள நீரில் மழைத்துளிகள் விழுவதால் நீர்க்குமிழிகள் தோன்றுகின்றன என்பதை நாம் அறிவோம். இதைத்தான் நம் தமிழ்ப் புலவர்கள் தம் பாடல்களில்,

நீருட் பட்ட மாரிப் பேருறை
மொக்கு ளன்ன - புறம் 333

மாரி மொக்குளின் மாய்ந்து - சீவக 409

படுமழை மொக்குளில்
பல்காலுந் தோன்றிக் கெடும் - நாலடி 27

என்பவைப் போன்ற வரிகள் மூலம் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.

இரண்டாவதாக, ஓடுகின்ற கால்வாய் நீர் முடுக்கான இடங்களில் குத்தித் திரும்புகின்ற போது நீர்க்குமிழிகள் உண்டாகின்றன. இதனைக் கண்டவர் அறிவர். இதனை '**மலைபடு கடாம்**' ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் மிக அழகாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

குமிழி சுழலும் குண்டுகய முடுக்கர் - மலைபடு 213

வனைகலந் திகிரியிற் குமிழி சுழலும் - மலைபடு 474

என்பனவற்றின் மூலம் நீரில் குமிழி தோன்றுகின்ற காட்சியை எடுத்துக்கூறுகின்றார்.

மூன்றாவதாக, சேறும், நீரும் கலந்த நிலத்தில் ஒருவன் நடந்து சென்றாலே அவன் பாதங்கள் அச்சேற்றில் அழுந்தும். அதுபோழ்து நீர்க்குமிழ்கள் உண்டாகும்; இது அதில் நடந்து பழகியவர்க்குப் புரியும். இதனை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் புலவர் மிக அழகாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார்.

பாறைகள் நிறைந்த பகுதி. அந்தப் பாறைகளில் சுனைகள் பறை மேளத்தின் கண் போல விளங்குகின்றன. அந்தச் சுனை நீரில் மழை பெய்யும் போது விழுகின்ற துளிகளால் நீர்க் குமிழிகள் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் நீர்க்குமிழிகள் ஓசையுடன் பிறப்பது போல அந்தத் தேர்ச் சக்கரத்தின் அழுத்தத்தால் சேற்றில் எழும் நீர்க்குமிழிகள் உள்ளன இதனை,

"பறைகண் அன்ன நிறைச் சுனை தோறுந்
துளிபடு மொக்குள் துள்ளுவன சாலத் - அகம் 324

என்ற வரிகள் மூலம் புலவர் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

மொக்கு

மொக்குள் என்ற சொல் எப்படி உண்டாகியிருக்கலாம் என்றால் மலர் மொட்டுகளையும், கிராம மக்கள் **"மொக்கு"** என்று இன்றும் அழைப்பதனால் மொட்டுபோல உருவ ஒப்புமை உடைய "குமிழி, கொப்புளம், தொப்புள், ஆகியவற்றிற்கு அமைந்திருத்தலைக் கண்டு அதனை மொக்குள் (மொட்டு) என்று பெயரிட்டிருக்கலாம். காலப் போக்கில் இச்சொல் நீர்க் குமிழியைக் குறிப்பதை விட்டு இன்று மலர் மொட்டை மட்டும் குறிப்பதைக் காண்கின்றோம்.

கொப்புளம்

பாலைநிலம். அந்நிலத்தின் வழியே பாணர் கூட்டம் ஒன்று செல்கின்றது; அவர்களில் ஒருத்தி பாடினி, அப்பாடினி பரற் கற்கள் கலந்த நிலத்தில் செல்லும்போது கூரிய கற்கள் அவளுடைய மென்மையான பாதங்களில் பட்டு வருந்துவதால் அதில் கொப்பளங்கள் தோன்றி விட்டன. அந்தக் கொப்பளங்களை மரல் என்னும் கற்றாழை பழுத்தது போல (இக்காலத்தவர் அதை மரு என்பர்) இருக்கிறது. அதைத்தான்

"மரல் பழுத்தன்ன மறுகுநீர் மொக்குள்" - பொருந 45

என்ற வரியின் மூலம் நமக்கு எடுத்துக் கூறுகின்றார்.

மொக்குள் என்ற சொல் கொப்புளத்தைக் குறிக்கும் போது "மொ" என்ற இடத்தில் "கொ" என்ற ஒலி கொடுத்துக் "கொப்புள்" என்று அதனை வழங்கினர். இதனை சீவக சிந்தாமணி ஆசிரியர் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்.

"மாரி மொக்குளின் மாய்ந்து" - சீவக 409

"மின்னு மொக்குளா மென" - சீவக 2754

என்னும் வரிகளில் நமக்கு எடுத்துக் கூறுகிறார்.

தொப்புள்

இதுவரை "மொக்குள்" 'கொப்புளாக' மாறியதைப் பற்றிக் கண்டோம். அது தொப்புளாக மாறியதற்குரிய சான்றினை இனிக் காண்போம்.

"வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்

துனை செலற் றலைவாய் ஓவிரந் தொலிக்கும்." - மலைபடு 474 -475

இவ்வரிகள் "குயவன்" வனைகின்ற மட்கலத்தின் உருளை போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்தோடும் நீரினையுடைய சேயாறு என்பதாகும். இது நீரில் தோன்றுகின்ற சுழியைக் குறிப்பதுடன் அதன் நடுவில் தோன்றிய நீர்க் குமிழியையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பொழுது தொப்புளைக் காண்போம். தொப்புளுக்குப் புலவர்கள் கையாண்ட உவமை நீர்ச்சுழியாகும்.

முடத்தாமக் கண்ணியார் தாம் இயற்றிய பொருநராற்றுப் படையில்,

"நீர் பெயற் சுழினிறைந்த கொப்பூழ்" (வரி – 37)

என்று மிகத் தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

முயலின் கண்ணிற்கு உவமை

புறநானூற்றில் ஒரு பாடல் பாடிய பெயர் தெரியாப் புலவர் ஒருவர் தாம் பாடிய மூதின் முல்லை என்னுந் துறையமைந்த 333ஆவது பாடலில் முயலைப்பற்றிக் குறிப்பிடும் போது அதன் கண்ணிற்கு நீர்க்குமிழியை உவமைப்படுத்திக் காட்டுகின்றார்.

"நீருட் பட்டமாரிப் பேருறை

மொக்கு என்ன பொகுட்டு விழிக் கண்ண

கரும்பிடர்த் தலைய பெருஞ்செவிக் குறுமுயல்"

அண்ணல்

அண்ணல் என்பது பல பொருள் ஒரு சொல்லாகும். அது தலைமை, தலைவன், இறைவன், பெருமையிற் சிறந்தோன் எனப் பல பொருள்களைத் தருகிறது.

ஆங்கில மொழியில் 'personality' என்ற சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் தனியாள், முக்கியமான ஆள் என்று கூறுவர் அறிஞர். ஆனால் அதைவிடச் சிறந்த சொல் தமிழில் உண்டு என்பதை யாரும் அறியார். அச்சொல்லே அண்ணல் என்பதாம்.

சூடாமணி நிகண்டு, "முறை செயு மண்ணல் தோன்றல் முல்லையில் தலைவனாமம்" எனக் கூறுவதால் முல்லை நிலத் தலைவனுக்கு 'அண்ணல்' என்ற பெயர் இருந்ததாக அறிகின்றோம்.

மறைமலையடிகள் அவர்கள் தாம் எழுதிய திருவாசக உரையில் 'அண்ணல் - பெருமையிற் சிறந்தோன் என பொருள் கூறுவர்.

தலைவன்

'அண்ணல் நெடுவரை' - புறம் 158

'அண்ணல் நெடுங் கோடு' - குறிஞ்சிப் 54

என்பன போன்ற வரிகள் தலைவன் என்ற பொருளில் 'அண்ணல்' வழங்குகின்றன.

அண்ணல் மரையா (காட்டுப் பசு)

'அண்ணல் மரையா' - (பதிற் 23-14) தலைமை பொருந்திய காட்டுப் பசுவிற்கு 'அண்ணல்' என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது.

அண்ணல் ஏறு (எருது)

"மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்
அண்ண னல்லேறு இரண்டுடன் மடுத்து - புறம் 288

இப்பாடலின் மூலம், இரண்டு ஏறுகள் ஒன்றுடன் ஒன்று போரிட்டபின், வென்ற ஏற்றினை 'அண்ணல் நல்லேறு' என்று கூறியுள்ளார் புலவர்.

அண்ணல் ஏறு (மான்)

"திரிமருப் பிரலை யண்ணல் நல்லேறு
அரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ" -குறுந் 338

இப்பாடலில் இரலையாகிய ஆண் மானுக்குத் தலைமைத் தன்மையால் 'அண்ணல்' எனும் பெயரினைக் காணலாம்.

"அண்ணல் இரலை" -அகம் 34

அண்ணல் ஏறு (எருமை)

"வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு
பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி -அகம் 148

இப்பாடலின்கண் வரும் 'அண்ணல் ஏறு' வலிமிக்க திண்மையும் தலைமையுமுடைய எருமைக் கடாவாகும்.

அண்ணல் யானை

"மாசில் வெண்கோட்டு அண்ணல் யானை" - அகம் 251
"ஏந்துகோட் டண்ணல் யானை" - ஐங் 466

என்று ஆண் யானைக்கும் அண்ணல் என்ற சொல் தந்து சிறப்பிக்கப்பட்டுள்ளது.

அண்ணல் கொண்மூ

"ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கடல்வயிற் குழிஇய அண்ணலங் கொண்மூ" -புறம் 05

இப்பாடலில் கார்காலத்தே கால்கொண்டு எழுகின்ற தலைநாள் கருமுகிலுக்கு அண்ணல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அண்ணல் (அரசர்)

அரசர்களில் சிறந்தவர்களைப் பற்றிக் கூறும் பொழுதும் 'அண்ணல்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.

"திருந்துவேல் அண்ணல் - மலைப 319
"அகனாட் டண்ணல் - புறம் 249

அண்ணல் (தெய்வம்)

குறிஞ்சி, முல்லைநிலத் தெய்வங்களான முருகன், திருமால் போன்ற கடவுள்களுக்கும் 'அண்ணல்' என்று பயன்படுத்தப்பட்டுள்ளமை அறிகிறோம்.

மேற்கோள்

அண்ணல் நெடுவரை

அணங்குடை..... - பரி 17

மேலும்

1.சடையப்ப வள்ளல் - 'அண்ணல்தன் சொல்லே யன்ன'.. - பால வேள்வி 1

2.இராமன் - 'வரமுனி தன்னை யண்ணல் வினவுற - பாலகாண்டம் வேள்வி 6

3.அனுமன் - 'அண்ணற் பெரியோ னடிவணங்கி' - சுந்தர – உருக்காட்டு 114

4.இலக்குமணன் - 'அண்ணல்தன் வடிக்கணை துணிப்ப வற்றறன்' - யுத்த – அதிகாயன்வதை 123

5.விசுவாமித்திரர் - 'அண்ணல் முனிவற் கதுகருத் தெனினு மாவி – பாலகாண் - தாடகைவதை 123

6.இராவணன் - 'அண்ணல் வாளரக்கன் விட்ட அம்பினால் அழிந்து - யுத்த – முதற்போர் புரி 129

7.பரதன் - 'அண்ணலே காண்டியா லலர்ந்த தாமரை' – யுத்த – மீட்சிப் 323

இது வரைக்கும் இராமன், அனுமன், இலக்குமணன், பரதன், போன்றவர்களை 'அண்ணல்' என்று கூறிய கவி, இம் மூவருக்கும் இளையவனாகிய சத்துருக்கனனை 'இளைய அண்ணல்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

'மொக்குள் - நீர்க்குமிழி' என்ற சொல்லை பிற்காலத்தவர்கள், சங்ககாலப் புலவரைப் போன்று இல்லாமல் "வாழ்க்கை நிலையாமை" என்ற கருத்தில் அனைவரும் ஒன்றாக இருந்து நீர்க்குமிழியை உதாரணமாக காட்டியுள்ளார்கள். இதே போல் 'அண்ணல்' என்ற சொல்லும் கால வேறுபாட்டால் அண்ணல், அண்ணல் காந்தி என்றும், குடும்பத்தில் உள்ள மூத்தவனுக்கு அண்ணன் என்றும் வழங்கி, இன்று இருவேறு விதமாகப் பிரிந்து நிற்பதைக் காண்கின்றோம். அண்ணாமலை என்ற சொல்லை எடுத்துக் கொள்ளின் அது மூன்றாவதாகும். இவ்வாறு காலத்திற்கு ஏற்ப சொற்கள் பொருள் கொள்ளப்படுகின்றன.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தமிழ் இலக்கியங்களில் சொல்லும் பொருளும்

மு.சின்னதுரை

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி(த) திருச்சி.

முன்னுரை

"யாமறிந்தே மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்" - பாரதியார்

தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ் மொழியின் வளர்ச்சியை பதிவு செய்ய வேண்டியது நமது தலையாய கடமையாகும். ஒரு மொழியின் அமைப்பு முறையையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக் கூறுவது அம்மொழியில் அமைந்துள்ள சொற்களாகும். அச்சொற்களும் காலத்தின் அவசியம் கருதி காலமாற்றத்திற்கேற்ப புதிய சொற்கள் உருவாகி வளர்ந்து வருவதும், அம்மொழியின் வேகத்தையும், வளத்தையும் ஏற்கும் திறனையும் காட்டி நிற்கும்.

பக்தி இலக்கியம்

"நாற்றம" என்ற நல்ல தமிழ்ச்சொல், மணம், வாசனை எனப்பொருள் தரும் சொல் - அதன் மணத்தை இழந்து, "நாத்தம" ஆகி துர்நாற்றம் என்றும் அகராதியில் இடம் பெற்றுவிட்டது. "நாற்றமாக மலரானொடு" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ஆனால் நாறுதல் என்பதற்கு மணம் வீசுதல் என்று ஓர் அகராதியிலும் பொருள் சொல்லப்பட்டிருக்கின்றது.

சலம் என்றொரு சொல் நீரைக் குறிப்பது. சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் என்ற திருஞானசம்பந்தர் தேவாரமே உள்ளது. அந்தணர் என்ற சொல்லுக்கு நேரான பொருள். மேலான உயர்ந்து ஒழுக்கம் உடையவள் என்பது பொருள்.

சங்க இலக்கியம்

"புல்லார் புரவி வில்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே" (அகநானூறு)

இப்பாடலில் "புரவி" என்னும் சொல் குதிரையைக் குறிக்கின்றது. அதெபோல் "பரி" என்ற சொல்லும் குதிரையைக் குறிக்கின்றது. மேலும் இப்பாடலில் "வலவ" என்னும் சொல் தேர்பாகனைக் குறிக்கின்றது.

"யாருமில்லைத் தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தாளன்ன சிறுபசுங் கால
ஒழுகு நீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே" -குறந்தொகை (கபிலர்)

இப்பாடலில் "கள்வன்" என்ற சொல் தலைவனைக் குறிக்கின்றது. "ஒழுகுநீர்" என்ற சொல் ஒடுகின்ற நீர் என்று பொருள். "ஆரல்" என்ற சொல் மீனைக் குறிக்கின்றது. " குருகு" என்ற சொல் நாரையைக் குறிக்கின்றது.

அற இலக்கியம்

"துப்பார்க்குத் துப்புஆய துப்புஅக்கி துப்பார்க்கு
துப்பு ஆயதூஉம் மழை"

என்னும் திருக்குறளில் உணவு என்னும் பொருள் தரும். "துப்பு" என்னும் சொல் உண்பவரையும் "துப்பார்" உணவையும்(துப்பு) உணவு ஆக்குவதையும் "துப்பு ஆக்க" உணவாகவும் மழைநீர் உதவுவதையும் (துப்பு ஆயதூஉம்)எனப் பலபொருள் குறிக்கின்றது.

"அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" - திருக்குறள்

"அற்றம்" என்னும் சொல் அழிவையும், இறுதியையும், "செறுவார்க்கும்" என்னும் சொல் பகைவரையும் "அரண்" என்னும் சொல் கோட்டையையும் குறிக்கின்றது.

நீதி இலக்கியம்

"அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்"

இப்பாடலில் "அறம்" என்னும் சொல் தர்மத்தையும் சினம் என்னும் சொல் கோபத்தையும் குறிக்கின்றது.

காப்பிய இலக்கியம்

"உன்பெருந் தேவியென்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கும் மதிலை மன்னன்
தன்பெருந் தனயை யென்னுந் தகைமைக்கும் தலைமை சான்றோர்
என்பெருந் தெய்வமைய இன்னமும் கேட்டி என்பான்"-கம்பராமாயணம்.

இப்பாடலில் "மருகி" என்னும் சொல் "மருமகள்" என்றப் பொருளையும் "தனயை" என்னும் சொல் "மகளையும்" குறிக்கின்றது.

இக்கால இலக்கியம்

" வெறுங்கை என்பது மூடத்தனம் -உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!
குரங்கல் பாறையும் நொறுங்கி விழும்- உன்
கைகளில் பூமி சுழன்று வரும்!"

இக்கவிதையில் "மூடத்தனம்" என்ற சொல் அறியாமையையும் , மூலதனம் என்ற சொல் முதலீட்டையும் குறிக்கின்றது.

ஐந்திணை

இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், கிள்ளை, சுகம், தத்தை என்ற சொல் கிளியைக் குறிக்கின்றது.

வேழம், கரி என்ற சொல் யானையைக் குறிக்கின்றது

வெய்யோன், ஞாயிறு, பகலவன், என்னும் சொல் கரியனைக் குறிக்கும்.

ஆரவம் என்னும் சொல் பாம்புகளைக் குறிக்கின்றது. தேப்பக்கட்டை என்னும் சொல் மிதவை, வண்டி அச்சுக்கட்டை, கிணற்றடிக்கட்டை, நீர்க்கால் கட்டை.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, போன்ற சொற்கள் பெண்களை குறிக்கக் கூடியவை.

ஆடவர், காளை, விடலை என்னும் சொல் ஆண்களைக் குறிக்கக் கூடிய சொற்கள் கோ- என்னும் சொல் அரசனையும், பசுவையும் குறிக்கின்றது.

தாட்டுதல்- காலம் கடத்துதல், நீக்குதல், மறுத்தல், வீழ்த்துதல்

தாதல்- ஈட்டுதல், கொடுத்தல், ஈந்தருளல், இயற்றுதல், கைப்பற்றுதல்

துஞ்சல்- உறங்குதல், சாதல், சோம்பல், மடிதல்

புறந்தருதல்- பாதுகாத்தல், உண்டாக்கல், தோற்றல்

புறமுதுகுகாட்டு- போரில் தோற்று ஓடுதல், கோழைத் தனமாக பின்வாங்குதல்

சிறத்தல்- மேன்மைப்படுதல், திறம்படல், மிகுதல், மங்கலமாதல், அன்பாதல்

சில்- அற்பம், ஆரவாரம், ஒலிக்குறிப்பு, தலைப்பணி, சிறுதுண்டு.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

தொல்காப்பியரின் 'சொல்'

முனைவர் ப.பென்னரசி

உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை,பெரியார் ஈ.வே.ரா கல்லூரி,திருச்சி.

தமிழின் முதல் நூலாகிய தொல்காப்பியம் தமிழ்ச்சமூகத்தின் அனைத்துத் தளங்களையும் உள்ளடக்கிய நூலாகும். தமிழ்மொழியின் அமைப்பான வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டையும் மையப்பொருண்மையாகக் கொண்டு ஆராய்ச்சி செய்த மிகப்பெரிய ஆய்வுநூலும் கூட. இத்தொல்காப்பியத்தின் இரண்டாம் பகுப்பான சொல்லதிகார ஆய்வுப் பொருள் 'சொல்' என்பதே. அச்சொல் தொல்காப்பியத்திலேயே பல பொருளில் கையாளப்பட்டிருப்பதும், அந்தப் பொருளைக் குறிக்க வேறுசில சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. நுண்மான் நுழைபுலம் மிக்கத் தொல்காப்பியர் தம் நூலுள் பல்வேறு கலைச்சொற்களை உருவாக்கி நிலைபேறடையச் செய்துள்ளார். அவ்வகையில் சொல்லைக் குறிக்கும் சொற்களையும் அவை உணர்த்தும் பொருட்களையும் பன்முக நோக்கில் பயன்படுத்தி பதிவுசெய்துள்ளார். அப்பதிவின் வழி, தொல்காப்பியரின் மொழியாளுமையைப் புலப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

சொல் - பொருள்

தொல்காப்பியர் சுட்டிய சொல் உருபன், அடிச்சொல், ஒட்டுநிலைச்சொல், வார்த்தை என்ற நான்குவிதப் பொருளில் தொல்காப்பியத்திலேயே காணப்படுவதாக பேராசிரியர் திண்ணப்பன் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு தொடர்மொழி, உலகப்பொருள் என்னும் இரு நிலைகளிலும் பொருள் உணர்த்துவதாக பேராசிரியர் செ.வை.சண்முகம் குறிப்பிட்டுள்ளார். இவ்விருவரின் கூற்றுக்களின் வழி தொல்காப்பியத்தை நுணுகி ஆராயும் போது மேற்சுட்டிய ஆறு நிலைகளிலும் பொருள் உணர்த்தும்படி சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமையை நன்கு உணரமுடிகின்றது. அவை,

1.உருபன் நிலை

பொருள் உணர்த்தும் மிகச்சிறிய கூறு உருபன் எனப்படும்.

ன.ஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் (கிளவி 6)

எனும் கிளவியாக்க னகர ஒற்று(ன்) ஆண்பாலை உணர்த்தும் சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது.

2.அடிச்சொல்

தருசொல் வருசொல் (கிளவி -அ 29)

என்பதில் தா,வா, என்னும் அடிச்சொல்லைக் குறிக்கின்றது.

3.ஒட்டு

அம் ஆம் எம் ஏம்..

பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே

என்ற வினையியல் விதி பின்னொட்டுக்களாக வந்து வினையை முற்றுவிக்கும் தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளைச் சுட்டுகின்றது.

4.வார்த்தை

இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களான் இயன்று பொருள் குறித்து வரும் சொற்களை வார்த்தை என்பர், தொல்காப்பியர்.

வினையியலில்,

செய்யும், செய்த என்னும் சொல்லே(வி 26)

செய்யும், செய்த என்ற இரு சொற்களைச் சுட்டியுள்ளார். இதில் செய்யும் எனும் சொல் 'உம்' ஈற்றான் நிகழ்காலத்தை உணர்த்துகிறது. செய் என்பது 'அ'கர ஈற்றான் இறந்த காலம் உணர்த்துகின்றது.

5.தொடர்மொழி

ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் விளக்குவதைத் தொடர்மொழி என்பர்.

அடை சினை முதலென முறைமூன்றும் மயங்காமை

நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல் (கிளவி 26)

எனும் கிளவியாக்க நூற்பாவில் வரும் வண்ணச் சினைச்சொல்லுக்கு உரையாசிரியர்கள் செங்கால் நாரை என்பதனை உதாரணமாகக் கொடுத்துள்ளனர். இது செம்மையான கால்களை உடைய நாரை என்னும் தொடர்மொழியே ஆகம்.

6.உலகப்பொருள்

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை

எம்முறைச் சொல்லும் (வி 44)

என்னும் வினையியல் விதிக்கு உரையாசிரியர்கள் இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் முக்காலத்திலும் உளதாகிய பொருள் என்று விளக்கம் கூறி அதற்கு உதாரணமாக மலை நிற்கும், ஞாயிறு இயங்கும்

என்பவற்றைச் சான்று தந்துள்ளனர். ஆகவே இவ்விதியில் வரும் சொல் உலகப் பொருளைச் சுட்டுவதாகவே அமைந்துள்ளது.

மேற்சுட்டிய சான்றுகளின் வழி சொல் ஆறுவிதப் பொருள்களில் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை விளங்குகின்றது.

சொல்லைக் குறிக்கும் சொற்கள்

கிளவி, சொல், மொழி என்னும் தொடக்கத்தன எல்லாம் ஒரு பொருட் கிளவி என சேனாவரையர் கிளவியாக்க விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனால் கிளவி, சொல், மொழி என்பன ஒரே பொருளைச் சுட்டுவன என்பது பெறப்படுகிறது. இந்த மூன்று சொற்களில் கிளவி என்பது வார்த்தை என்னும் பொருளில் தொல்காப்பியம் முழுமையிலும் ஆட்சி பெற்றுள்ளது. மொழி என்பது எழுத்ததிகாரத்திலும் சொல் என்பது சொல்லதிகாரத்திலும் மிகுதியாக எடுத்தாளப்பட்டுள்ளது. இருந்த போதும் சொல்லதிகாரத்தில் எழுத்து என்பதும் ஒட்டுநிலைச் சொல் (விகுதி) என்ற பொருளில் இரண்டு இடங்களில் பயன்படுத்தபட்டுள்ளமையை செ.வை. சண்முகம் சுட்டிக்காட்டியுள்ளார். ஆக சொல்லைக்குறிக்க கிளவி, மொழி, எழுத்து என்ற மூன்று சொற்களைத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளமைப் புலனாகின்றது.

கிளவி

தொல்காப்பியத்துள் கிளவி என்பது ஏழு பொருளில் கையாளப்பட்டுள்ளது.

1.எழுத்து - சகரக் கிளவி (எ.2)

2.அடிச்சொல் - ஈயென் கிளவி (எச் - 49)

3.வார்த்தை - செய்யும் செய்த என்னும் கிளவி (எ 482)

4.ஒட்டு - வினையெஞ்சு கிளவி (வி 25)

மாரைக்கிளவி (வி -10)

5.தொகைச்சொல் - பெண்மையடுத்த மகனென் கிளவி (பெ □ 9)

6.சொற்றொடர் - இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி (வி □ 49)

7.பொருள் - பால்மயக்குற்ற ஐயக்கிளவி (கி 23)

மொழி

மொழி என்பது ஐந்து பொருண்மையில் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.வார்த்தை - குற்றெழுத் தைந்தும் மொழி நிறைபிலவே (எழு- 44)

2.அடிச்சொல் - அழனே புழனே ஆயிரு மொழிமேல் (எழு 193)

3.ஒட்டு - அத்தே வற்றே ஆயிரு மொழிக்கும் (எழு 133)

4.தொகை - பண்புதொகு மொழி (எழு 482)

5.வாக்கியம் - எடுத்த மொழி இனஞ்செப்பலும் உரித்தே (கி 61)

எழுத்து

எழுத்து என்பது சொல்லைக் குறிக்கும் சொல்லாக இரண்டு நூற்பாக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆவை,

ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும்(கிளவி 10)

பலர் குறி எழுத்தின் வினையோடு வருமே (இடை 10)

முதல் நூற்பாவில் ன்,ள்,ர்,ப,மார்,து,டு,று,அ,ஆ,வ என்ற பதினோரு பால் உணர்த்தும் விகுதிகளுள் மார் எனும் பலர் பாலை உணர்த்தும் விகுதி சொல் என்னும் பொருள் தருகின்றது.

இரண்டாவது நூற்பாவில் 'ஆர்' என்னும் இடைச்சொல் விகுதிப் பொருண்மையில் பயன்படுத்தப் படுவதால் சொல் என்று பொருள் தருகின்றது.

இவ்வகைமையில் சொல்லைக் கட்டமைத்த தொல்காப்பியர் அது பொருளுணர்த்தும் தன்மையையும் தெளிவுபடுத்ததியுள்ளார். தொல்காப்பியம் என்ற இலக்கணச் சுரங்கம் தோண்டத் தோண்டத் தமிழ் மொழியின் அடிப்படை வளமையை அள்ளித் தரும் வகையில் அமைந்துள்ளது. ஒரு சொல்லின் பொருள் எவ்வாறு உணரப்படுகின்றது என்பது இலக்கண ஆய்வாளர்கள் அனைவராலும் ஆராயப்படும் ஒன்று. அதற்குத் தகவுகளைத் தொல்காப்பியத்துள் திரட்ட முனையும் போது இரு வேறுபட்ட செய்திகள் கிடைக்கின்றன. ஒன்று சொல்லை வடிவத்திலிருந்து பொருளுணர்த்தும் என்பது. இரண்டாவது பொருளிலிருந்து சொல்லின் வடிவம் வெளிப்படும் என்பது. இவ்விறு கூறுகளுக்கும் ஏராளமான சான்றுகள் தொல்காப்பியத்துள் காணப்படுகின்றன.

வடிவத்திலிருந்து பொருள்

ள.ஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்(கிளவி-6)

என்ற சூத்திரத்தில் ளகரம்(ள்) என்ற வடிவம் பெண்பாலை உணர்த்தும் என்று கூறுவதால் வடிவத்தை எடுத்துக் கொண்டு பொருள் கூறுவது தெளிவாகிறது என்கிறார் செ.வை.சண்முகம். வேற்றுமையில்

வேற்றுமை உருபுடைய ஒவ்வொரு வேற்றுமை பற்றிய சூத்திரமும் வடிவத்தைக் குறிப்பிட்டு அதன் பொருளை விளக்குவதைக் காணலாம்.

மூன்றாகுவதே

ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

வினைமுதல் கருவி அனைமுதற்ற துவே

என்ற நூற்பா ஒடு என்ற மூன்றாம் வேற்றுமையின் வடிவம் கருத்தா, கருவி என்ற இரண்டு பொருளை உணர்த்துவதை விளக்குகின்றது.

குத்தொக வருஉங் கொடையெதிர் கிளவி (வே.ம.16)

அவன் இவன் உவன்என வருஉம் பெயரும்

பாலறி வந்த உயர்திணைப் பெயரே (பெ.8)

ஈ,தா,கொடு எனக் கிளக்கும் மூன்றும்

இரவின் கிளவி (எச்-48)

வையே கூர்மை (உ 91)

மல்லல் வளனே (உரி-7)

சீர்த்தி மிகுபுகழ் (உ.16)

என்பன போன்ற சூத்திரங்கள் எல்லாம் சொல்லின் வடிவம் பொருள் உணர்த்தியமையைச் சுட்டுகின்றன. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கிளவியாக்க விளக்க உரையில் 'கிளவிகள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினமையின் பெயர் பெற்றது' என்கின்றார். தமிழ்மொழி அமைப்பில் சொல்லின் வடிவம் பொருள் உணர்த்தும் முறையே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றது. இருந்தாலும் பொருளிலிருந்து சொல்லின் வடிவம் பெறப்பட்டமையையும் தொல்காப்பியம் சுட்டியுள்ளது.

பொருளிலிருந்து வடிவம்

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (கிள-19)

என்ற விதி பொருளின் இயல்பான இயற்கைத் தன்மையை 'இற்று' என்ற வாய்பாட்டால் (தீ வெய்யது) கூறவேண்டும் என்கிறது. ஆதாவது பொருளை எப்படி வார்த்தையில் கூறுவது என்பதை விளக்குகிறது.

இனைத்துஎன அறிந்த சினைமுதற் கிளவிக்கு

வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் (கி 32)

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே

உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை

விதைசொல் அடுக்கே மூன்று வரம்பாகும்(எச் - 28)

என்ற நூற்பாக்கள் எல்லாம் பொருள் கிளவிமேல் ஆமாறு வருவதையே உணர்த்துகின்றன. எனினும் இவை சிறுபான்மையாகவே காணப்படுகின்றன.

தெளிவான ஆய்வு நோக்குடைய தொல்காப்பியர் தாம் விளக்க முற்படும் பொருளை செம்மையுறச் செய்வதற்காக பல்வேறு நுணுக்கங்களை நூல் முழுமையிலும் பயன்படுத்தியுள்ளார் அத்தகைய நுணுக்கங்களுள் ஒன்றுதான் சொல் எனும் சொல்லை விளக்க அவர் கையாண்ட உத்தி கூறும் கருத்தை வலிமையுடையதாக்க அக்கருத்தமைவுடைய மற்றவற்றையும் இணைத்துக் கூறுவது போல் இவர் 'சொல்லை' நிலை நிறுத்த சொல்லின் பலவித பொருள்களையும், அச்சொல்லை உணர்த்தும் பிற சொற்களையும் நிறுவி அது பொருளுணர்த்தும் தன்மையினையும் தெளிவுபட பதிவுசெய்துள்ளார். ஒரு பனுவலினுடைய வெற்றி ஆக்குவோனுடைய மனத்தெளிவைப் பொருத்தே அமையும். தொல்காப்பியம் இன்றுவரை நிலைத்து நிற்பதற்குத் தொல்காப்பியன் என்ற மொழி ஆய்வாளனின் தெளிவான சிந்தனையோட்டமும் கூர்நோக்கு மதியுமே காரணம் என்பதை இக்கட்டுரை இறுதி செய்கின்றது.

International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

கலித்தொகையில் உளவியல் சார்ந்த பெண்ணியம்

ந. சித்ரா

உதவிப்பேராசிரியர், முதுகலை சமூகப்பணித்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி, திருச்சி - 5

முன்னுரை

சமுதாயத்தால் அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணினம் தம் அடிப்படைத் தேவைகளுக்குக் கூட ஆணின் உத்தரவை எதிர்நோக்கி இருந்தது. ஆனால் அவற்றிலிருந்து மாறுபட்டு பெண் மனமும் உணர்வும் உள்ள உயிர் என்பதை பாரதியார் போன்ற படைப்பாளர்கள் உணர வைத்தனர். மேலைநாட்டில் பெண் அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்து சில அமைப்புகள் அடிமைப்பட்டு இருந்த பெண் இனத்தை விழிப்படையச் செய்தனர். அது மிதவாத பெண்ணியம், தீவிரவாத பெண்ணியம் என்று அமைப்புகளின் போராட்ட முறையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டது. பெண் சார்ந்த மதிப்பீடுகள் இன்று சமுக அளவில் உயரத் தொடங்கிவிட்டன. பெண்ணின் உளவியல் ரீதியான சிக்கல்களுக்குத் தீர்வு கூறும் வகையில் ஆலோசனை மையங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இத்தகு சூழலில் செம்மொழித் தகுதியை நம் மொழிக்குப் பெற்றுத் தந்த சங்க இலக்கியத்தில் பெண் சார்ந்த பதிவுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை எட்டுத்தொகையில் ஒன்றான கலித்தொகையை மட்டும் எல்லையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏறுதழுவுதல்

ஆயர்களின் குடும்பத்தில் பெண்ணை மணந்து கொள்வதற்கு முற்படுகின்ற தலைவன் ஏறுதழுவுதலை செய்த பிறகே அவளை மணந்துகொள்ள முடியும். இது அக்கால முல்லை நில மக்களின் கொள்கையாக இருந்தது. அவ்வாறு காளையை அடக்கி வெற்றி பெற்ற ஆணுக்குத் தன் வீட்டுப் பெண்ணைத் தந்தனர். அவள் சம்மதம் அங்கு பெரிய பொருட்டாகக் கருதப்படவில்லை. இப்பாடல்களில் அப்பெண் விரும்பிய தலைவனையே மணந்து கொண்டதையும் காணமுடிகிறது.

பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
காவல் மிசைக் கோல் அடைந்த கையன் அயலது
கொல் ஏறு சாட இருந்தார்க்கு எம் பல் இருங்
கூந்தல் அணை கொடுப்போம்

என்ற வரிகள் பறைசாற்றுகின்றன.

மாணிழை - சிறந்த அணிகளை அணிந்தவள்
நல்லவர் - ஏறுதழுவலைக் காணும் ஆய மகளிர்
பொதுமகளிர் - ஆய மகளிர்
இருளை - இளையவள்

என்று இவ்வாறெல்லாம் பெண்கள் அழைக்கப்பட்டனர். தலைவியின் களவொழுக்கத்தினை அறிந்த ஊர் மக்கள் அவளை இகழ்ந்து பழிச்சொல் கூறுவர். அதனைக்கண்ட தலைவி நாணமடைந்தவளாய் பழிச்சொல்லுக்கு அஞ்சி இல்லத்தை விட்டு வெளியில் வரத் தயங்குவாள் அவளுடைய தலைவன் ஏறுதழுவுதலைச் செய்து வெற்றி பெற்றவுடன் அவனுக்கே தம் மகளைக் கொடுக்க அவள் சுற்றத்தினர் இசைந்தனர். இச்செயல் மூலமாக பழிச்சொல் கூறிய ஊரினரை தலை தூக்கமுடியாதபடி இச்செயல் செய்தது என்பதை ,

கேளாய்! கோள் அரிதாக நிறுத்த கொலை ஏற்றுக்
காரி கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
ஆர்வுற்று எமர் கொடை நேர்ந்தார் அலர் எடுத்த
ஊராரை உச்சி மிதித்து

என்ற தொடர்கள் எடுத்துக் கூறுகின்றன.

தலைவி வாதிடல்

சங்க இலக்கியத்தில் தலைவியை விட தோழி மதிநுட்பம் வாய்ந்தவளாகப் படைக்கப்பட்டுள்ளாள் ஆயினும் கலித்தொகையில் தலைவியும் தன் தலைவனிடம் பேசும் போது அவளின் கடமைகளை பட்டியலிட்டு உம்முடைய நெஞ்சைக் கவர்ந்து கொண்டு யான் அடிமையாக இருக்க எவ்வாறு முடியும் என்பதை,

நின் நெஞ்சம் களமாக் கொண்டு யாம் ஆன எமக்கு எவன் எளிதாகும்
புனத்துளான் என்னைக்கும் புகா உய்த்துக் கொடுப்பதோ?
இனத்துளான் எந்தைக்குக் கலந்தொடு செல்வதோ?
தினைக் காலுள் யாய் விட்ட கன்று மேய்க்கிற்பதோ?

என்று உன் நெஞ்சம் புனத்தில் உள்ள என் தமையனுக்கு உணவைக் கொண்டு போய்க் கொடுக்குமோ? பசுக்கூட்டத்தில் உள்ள என் தந்தைக்குப் பால் கறக்கும் கலத்தை எடுத்துச் செல்லுமோ! தினை அரிந்த தாளில் தாய் மேயும்படிவிட்ட கன்றை மேய்க்குமோ? என்று வினாக்களை அடுக்குகிறாள்.

அறத்தொடு நிற்றல்

தலைவியின் களவொழுக்கத்தை அறியாத அவள் வீட்டார் அவள் உடம்பில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு இது தெய்வக் குறையாக இருக்குமோ? என்று கருதி வேலனை அழைத்து வெறியாடக் கருதுவர். அப்போது தோழி தலைவியின் களவை வெளிப்படுத்துவாள். தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும் சகோதரனுக்கும் அறிவுறுத்துவாள். இந்நிலையில் முல்லை நிலத் தலைவியிடம் தலைவன் தன் விருப்பத்தினைச் சொல்ல அவற்றை

மறுத்த தலைவி அவன் ஏமாற்றம் அடைந்து வருத்தத்துடன் சென்றதை தோழிக்குக் கூறி தோழியை தாயிடம் அறத்தொடு நிற்குமாறு வேண்டுகிறாள்.

முற்று இழை ஏர் மட நல்லாய்! நீ ஆகும்
சிற்றில் புனைகோ சிறிது? என்றான் எல்லா! நீ
பெற்றேம் யாம் என்று பிறர் செய்த இல் இருப்பாய்!

என்பதில்! மடப்பத்தை உடையவளே! நீ கட்டி விளையாடும் சிறு வீட்டை நானும் சிறிது கட்டவோ என்றான். நான் அதற்கு ஏடா! நீ மணந்து கொண்டு எமக்கு ஓர் இல்லத்தை அமைத்தலை அறியாதவன். தன் உறவினர் கட்டிய இல்லத்தில் இவள் இருக்கட்டும் என்று எண்ணுபவன் ஆதலால் நீ உறுதியாய் உலகியல் எதையும் கற்றவன் இல்லை என்றேன் என்று தலைவி கூறுவதிலிருந்து பெண்கள் கல்வியறிவு பெறாதவர்களாக இருந்தாலும் குலப்பழக்கத்தையும் உலகியல் அறிவையும் வாழும் நெறிமுறையையும் பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. அவர்கள் தன் மனதிற்குள் யாரை நினைத்தார்களோ அவர்களையே கணவனாக அடையும் உறுதி கொண்டிருந்தனர்.

"இருமணம் புரிதல் இல் இயல்பன்றே"

என்ற வரி அதனை எடுத்தியம்புகிறது. அவர்களது வாழ்க்கை அன்பும் அறனும் சார்ந்த நிலையிலேயே அமைக்கப்பட்டு இருந்தது. பொருளீட்டல் ஆடவனின் கடமையாகவும் குடும்பத்தைப் பராமரித்தல் பெண்ணின் கடமையாகவும் இருந்திருக்கிறது. தலைவன் தவறு செய்யும் போது அத்தவறை இடித்துரைக்கும் தன்மையும் வீரத்தை தாலட்டிலேயே போதிக்கும் குணமும் கொண்டவர்களாக அக்காலப் பெண்கள் வாழ்ந்திருக்கின்றனர். இயற்கை இடர்ப்பாடுகளைக் கருதி சில உரிமைகளை ஆண்களுக்கு மட்டுமே அன்றைய சமுகம் வழங்கியிருந்தது. ஆனால் பெண் அறிவு கூர்மையை அலட்சியப்படுத்தவில்லை. ஆயர்குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு பால், மோர், வெண்ணெய் விற்றல் போன்ற சிறு தொழில்களைச் செய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன என்பதை அறிய முடிகின்றது. பெண்ணடிமைத் தனம், பெண் கல்வி மறுப்பு, கருத்துச் சுதந்திரமின்மை ஆகியவை இடைக்காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். ஔவையார், நச்சசெள்ளையார், அள்ளூர் நன்முல்லையார், காக்கைப் பாடினியார் போன்ற பெண்பாற் புலவர்கள் வாழ்ந்து இருப்பதைக் கொண்டு பெண் உளவியல் ரீதியாக நல்ல சூழலில் பாதுகாப்பு பற்றிய பயமின்றி வாழ்ந்ததை அறிய முடிகின்றது.